
தமிழ்நாட்டு

வரலாற்றுக் கருத்தரங்கு



தமிழ்நாடு
வரலாற்றுக் கருத்தரங்கு

பதிப்பாசிரியர்
டாக்டர் இரா. நாகசாமி

வரலாற்றுப் பேரவை

வரலாற்றுப் பேரவை வெளியீடு 5 .
முதற் பதிப்பு மே 1979
உரிமை பதிவு

விலை ரூபாய் பதினாறு

வரலாற்றுப் பேரவை
42/2 சுப்பிரமணிய ஐயர் தெரு,
அபிராமபுரம்,
சென்னை-600 018.

மக்கள் அச்சகம் சென்னை 600 002

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600009

அணிந்துரை

தமிழகத்தின் முந்தைய நிலை, மக்கள் வாழ்க்கை நலன், நாட்டின் நலன், சமுதாய, பொருளாதார உயர்வு, அதன் சிறப்பு, கலையுணர்வு ஆகிய பலப்பல செய்திகளை கல்வெட்டுக்கள் விளக்கும்.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் வெளியிடப்படும் இந்நூல் ஓர் ஆய்வின் முடிவாகும் இவ்வகை நூல்களை உருவாக்கும் முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

அத்துறையினருக்கு என் பாராட்டுக்கள் !

செ. அரங்கநாயகம்
13-10-79

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மாவட்டந் தோறும் வரலாற்றுக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறது. இதில் தமிழக வரலாற்றுப் பேரவையும் பங்கு பெற்று வருகிறது. இக் கருக்தரங்குகளில், அவ்வப் பகுதிகளின் வரலாறும் கலையும் ஆய்வு செய்யப் பெற்று வருகின்றன. செங்கற்பட்டில் நடைபெற்ற கருத் தரங்குக் கட்டுரைகள் நூலாக ஏற்கெனவே அச்சாகியுள்ளன.

மாநில ரீதியில் இதுபோலவே ஒரு கருத்தரங்கம் 1977 டிசம்பர் 10, 11 ஆகிய நாட்களில் நடத்தப் பெற்றது. இக்கருத்தரங்கைத் தமிழகக் கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் தொடக்கி வைத்தார்கள். சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் தலைமை தாங்கினார்கள். மத்திய அரசு கல்வெட்டுப் பிரிவுத் தலைமை அதிகாரி திரு. பி. ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களும் பங்கேற்றார்கள். இக்கருத்தரங்கில் பண்டைத் தமிழகத்தில் கிராமப் புறங்களின் பங்கு என்ற பொருளை மையமாகக் கொண்டு பல கட்டுரைகள் படிக்கப்பட்டன. எளிய மக்களின் வாழ்க்கையில் பங்கு பெறும், மிகுதியான இன்றியமையாத பொருள்களைப் பற்றி யாரும் ஆய்வு செய்வதில்லை. எடுத்துக்காட்டாக உப்பு, நெருப்பு, பலகாரங்கள், நெய் முதலியவற்றை முக்கிய ஆராய்ச்சிப் பொருளாக,வரலாற்றுப் பின்னணியில் ஆராயச்சி செய்ய முடியும். அதற்குக் கல்வெட் டுக்கள் உதவுகின்றன. நாய், கோழி, கன்று, பசு, கழுதை, போன்றவைகளைப் பற்றியும் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். காய்கறிகள், பல்வகை பயிர்கள், மரங்கள் இவற்றின் வரலாற் றையும் ஆராய்தல் வேண்டும்.

இன்றைய சமூதாய வாழ்வில் நூற்றுக்கணக்கான சாதிப் பிரிவுகள் நம்மைப் பிளவுபடுத்தி நிற்கின்றன. இவற்றில் பெரும் பாலானவை இடத்தாலும், தொழிலாலும் அரசியல் செல்வாக் காலும் தோன்றியவை. இப்பொழுதுள்ள அமைப்பில் சாதிப் பாகுபாட்டை வேரோடு அழிக்கவேண்டும் என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒன்று. அதை அழிக்கவேண்டும் எனில் வேரை அறிந்து களையவேண்டும். அவ்வேரை அறிவதுதான் வரலாற்றுப் பின்னணியில் இவற்றை அறிவது. அவ்வாறு அறிய முற்படும் போது நாம் கொண்டிருக்கும் பல தவறான கருத்துக்கள் தெளிவா கின்றன. ஆதலின் ஒவ்வொரு இனத்தவரைப் பற்றியும். வரலாற்

றுக் கண்ணோடு ஆராயக் கல்வெட்டுகள் உதவுகின்றன. இடு காடுகள், காட்டேரி போன்ற செய்திகளைப் பற்றி கூட ஆராய இயலும்.

இங்கு மற்றும் ஒன்றினை நினைவில் கொள்ளல் வேண்டும். கல்வெட்டுகளை, வரலாற்றை இத்துறையில் உள்ளவர்கள்தான் ஆராய வேண்டும்--ஆராய முடியும் என்று நினைக்கக் கூடாது. ஆர்வம் உள்ள அனைவரும் முயற்சிக்கலாம். அவ்வாறு ஆங்காங்கே உருவாக்குவதுதான் வரலாற்றுப் பேரவையின் நோக்கமும் கூட. ஏற்கெனவே பல இளைஞர்கள் இப்பணியில் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளனர். இந்த நூலில் வருவாய்த்துறையைச் சேர்ந்த திரு. முகவை. எஸ். எம். கமால் நல்ல ஒரு வரலாற்றுக் கட்டுரையை ஆராய்ச்சித் திறனோடு எழுதியுள்ளார், அறிமுகமாகிறார்.

இக்கருத்தரங்குக்கு வரலாற்றுப் பேரவை செயலாளர் திருமதி சித்ரா விஜி அவர்கள் அன்போடு உதவி நல்கினார்கள். அறநிலையத்துறை ஆணையர் திரு. எம். கே. பாலசுப்ரமணியம் அவர்கள் பல வழிகளில் ஊக்கம் அளித்தார்கள். கருத்தரங்கு சிறப்புற பங்கு பெற்றவர்கட்கும் ஊக்கம் அளித்தவர்கட்கும் எமது உளங்கனிந்த நன்றி.

'கல்வெட்டில் பலகாரம்' போன்ற கட்டுரைகளைத் தாங்கி நிற்கும் இந்நூல் நல்லதொரு சுவையான விருந்து. இவ்விருந்து படைப்பதில் வரலாற்றுப் பேரவை இன்பம் பெருகிறது.

இரா. நாகசாமி

வரலாற்றுப் பேரவைத் தலைவர்

உள்ளடக்கம்

பண்டைய தமிழகத்தில் கிராமங்களின் பங்கு

டாக்டர் இரா. நாகசாமி

ஒரு நாட்டு வரலாறு என்பது அன்று ஆண்ட அரசர்களின் தலைநகர்களை மட்டுமோ, அவர்களது வெற்றி சூழ்ந்த பகுதிகளை மட்டுமோ குறித்தது அல்ல. அந்நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான கிராமங்கள் எவ்வாறு திகழ்ந்தன, அந்தக் கிராமங்கள் எப்பொழுது யாரால் நிறுவப்பட்டன? அங்கு வாழ்ந்த மக்கள் யாவர்? அம்மக்களின் அன்றாட வாழ்க்கை எவ்வாறு இருந்தது? அவர்களது வாழ்க்கையில் இடம் பெற்ற சாதாரணப் பொருள்களைப் பற்றி என்ன அறிய முடிகிறது. காலப்போக்கில் அவ்வூர்கள் வேளாண்மையாலோ, வணிகத்தாலோ கல்வியாலோ எவ்வாறு மேம்பாடு பெற்றன? அம்மேம்பாடு பெற வந்த புதிய சக்திகள் யாவை? அப்புதிய சக்திகளை அவ்வூர்ப்புற மக்கள் எவ்வாறு வழிப்படுத்தித் தமது மேம்பாட்டுக்குப் பயன் படுத்தினர்?

ஓரிரண்டு உதாரணங்களைக் காண்போம். கிரக்களூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் இவ்வூர் இருக்கிறது. இந்த ஊரைப் பற்றி நமக்கு எந்த இலக்கியமும் கிடைக்கவில்லை. இந்த ஊரைப் பற்றி எந்தக் கதையும் இல்லை. இப்படி ஓர் ஊர் இருக்கிறது என்றே தெரியாது. இந்த ஊர், ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே சிறப்பாக இருந்த ஊர், இதை அறிந்து கொள்ள ஒரே சான்று அந்த ஊரில் உள்ள கல்வெட்டுக்கள்தாம். அந்தக் கல்வெட்டுகளைக் கொண்டு அவ்வூரைப் பற்றி என்ன தெரிந்து கொள்ளமுடியும் என்று கீழே பார்ப்போம்.

கிரக்களூரில் அகத்திச்சுரம் என்று ஒரு கோயில் இருக்கிறது, அந்தக் கோயிலில் 23 கல்வெட்டுகள் இருக்கின்றன. அக்கல்வெட்டுகளிலும் சில சிதைந்து போய்விட்டன. அக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அனைத்தும் சோழர் காலத்துக் கல்வெட்டுக்களாகும். கி. பி. 10 ம் நூற்றாண்டிலிருந்து 12 ம் நூற்றாண்டு வரை உள்ள மன்னர்கள் காலக் கல்வெட்டுக்கள். இதற்கு முற்பட்ட கல்வெட்டுகளோ பிற்பட்ட கல்வெட்டுகளோ இல்லை. ஆதலின் இவ்வூர் கி. பி. 10 ம் நூற்றாண்டில் சிறப்புப்

பெற்றது. கி. பி. 12ம் நூற்றாண்டிற்குப் பிறகு சிறப்பு மங்கி விட்டது என்று அறிகிறோம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் இவ்வூரின் பெயர் சிரைக் கன்னூர் என்பது. இது ஆர்வலக்கூற்றம் என்னும் பிரிவில் இருந்தது. இவ்வூர் அந்தணர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊர். ஆதலால் பிரும்மதேயம் என்று அழைக்கப்பட்டது. இந்த ஊர் முதல் இராஜராஜ சோழனுடைய அண்ணன் ஆதித்த கரிகாலன் என்பவன் காலத்தில் சிறப்புப் பெற்றது. அப்பொழுது இராஜராஜனின் தந்தை சுந்தரசோழன் உயிரோடு இருந்தார். சிரைக்கனூரில் ஒரு பகுதியை குலதிபமங்கலம் என்று பெயரிட்டு அங்கு ஆதித்தன் பெயரால் ஒரு கோயில் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கோயிலுக்குப் பெயர் ஆதித்தீச்சுரம் என்பது. அதைத் தான் இப்பொழுது பெயர் மறுவி, ஆதித்தீச்சுரம் என்கிறார்கள், கல்வெட்டுக்கள் இந்தக் கோயிலை ''குலதீபமங்கலத்து திருக்கோயில் ஆதித்தீச்சுரம்'' என்று அழைக்கின்றன. இதிலிருந்து, ஆதித்த கரிகாலனுக்கு குலதிபன் என்று ஒரு பட்டப் பெயர் இருந்தது என்றும் அறிகிறோம்.

இங்கு ஆதித்தகரிகாலன், உத்தமசோழன், ராஜராஜன், முதல் இராஜேந்திரன், முதல் இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரன், குலோத்துங்கன் ஆகிய அரசர் காலத்தில் பல பணிகள் நடந்திருக்கின்றன. இந்த ஊரில் நங்கை வாய்க்கால் என்றும் நீதிமந்த்ர வாய்க்கால் என்றும் இரண்டு வாய்க்கால்கள் முதலில் இருந்தன. இவற்றில் இருந்துதான் ஊர் நிலங்களுக்கு நீர் பாய்ந்து விளைச்சல் இருந்தது. இராஜராஜன் காலத்தில் இராஜராஜ வாய்க்கால் என்று ஒரு புதிய வாய்க்கால் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. இதனால் இவ்வூரில் பல நிலங்கள் புதிய தாகப் பயிரிடப்பட்டிருக்கவேண்டும். அதனால் ஊர் செழுமை யடைந்து செல்வம் பெருகியிருக்கிறது. அது மட்டுமல்ல, இவ்வூரில் ஒரு வழிக்கு இராஜராஜனின் தேவியின் பெயரால் திரிபுவனமாதேவி வழி என்று பெயர் இடப்பட்டிருக்கிறது. இங்கு வாங்கும் விலைக்கு இராஜராஜ பெருவிலை என்று பெயர். இதிலிருந்து இங்கு இராஜராஜன் காலத்தில் (அதாவது கி. பி. 1000ல்) பெரும் செழுமை இருந்தது என்பது தெளிவு. (சுமார் கி. பி. 1020ல் இவ்வூரில் 'நடுவில் தெரு,' 'வடதெரு,' 'மேற்குத் தெரு' முதலிய தெருக்களும், வாணிபம் செய்யும் 'மயிலைப் பெருந்தெரு' என்பதும் (1975/75) இருந்தன. அதனால் இவ்வூரில் வாணிகமும் இருந்தது என அறியலாம். இராஜராஜன் காலத்தில் இவ்வூர் நிலங்கள் எல்லாம் முறையாக அளக்கப்பட்டு ஊர் புத்தகங்களில் எழுதப்பட்டன, அதற்கு 'உலகளந்தபடி',

''உலகளந்தேறின'' என்று கல்வெட்டுக் கூறுவதால் பயிர் நிலங்களை மிகவும் கவனத்துடன் பேணினர் என்பதும் தெளிவு. நிலங்கள் பல கண்ணுறுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கண்ணுறும் நான்கு சதுரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. கண்ணுறுகள், முதல் கண்ணுறு, இரண்டாம் கண்ணுறு, மூன்றும் கண்ணுறு என்று எண்ணிடப்பட்டிருந்தன. (1976/76).

இவ்வூரில் வைத்தியம் செய்ய ஒரு மருத்துவர் இருந்திருக்கிறார். அவர் பெயர் ''காச்யபன் அரைசர் அரசான இராஜகேசரி மங்கலப் பேரரையன்'' என்பது. அவருக்கு விட்டிருந்த நிலம் செல்லா தென்று ஊர்ச்சபை, நிலத்தை எடுத்துக் கொண்டது. இதை அரசனை இரண்டாம் இராஜேந்திர சோழனிடத்தில் தெரிவித் தார்கள். உடனே அரசன் அவ்வைத்தியனுக்கு வேறு நிலம் கொடுக்க ஆணையிட்டான். அதன்படி மாற்று நிலம் கொடுக் கப்பட்டது. (1976/76) இதிலிருந்து அரசன் ஊர்வைத்தியத்துக்கு உதவ முன்வந்தது அறியலாம்.

இவ்வூரில் கி. பி. 1100ல் நாடகமாடும் ஆசான் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நாடகப் பேரையன் என்பது.

இது போல தமிழகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான ஊர்களின் வரலாற்றை, ஊர்ப்புற பொருளாதாரத்தை அறிய வேண்டும் என்றால் அதற்கு முற்றிலும் உதவுபவை கல்வெட்டுக்களே.

மற்றும் ஒரு பொருளை எடுத்துக் கொள்வோம், பல ஊர்க் கல்வெட்டுக்களில் ''கன்று மேய் பாழ்'' என்று வரும். இது எதைக் குறிக்கிறது. முற்காலங்களில் ஒவ்வொரு ஊரிலும் கால்நடைகள் மேய்வதற்காகப் புல் நிறைந்த பூமி ஒன்று ஒதுக்கி யிருப்பார்கள். இந்த இடம் கிராமப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய இடம் வகித்தது. பயிர் நிலத்துக்கு அடுத்து ஊர்ப் பொருளாதாரத்துக்கு இன்றியமையாதவை கால்நடைகள். இவற்றிற்கு மேய்வதற்கு நிலம் இருந்தால்தான், பால் செழிக்கும். நெய் செழிக்கும். ஊன் செழிக்கும். இதன் இன்றியமையாத தன்மையை அக்காலத்தோர் உணர்ந்திருந்தனர். பாலும் நெய்யும் உணவாக விளங்கின. நெய் பிறவற்றிற்கும் பயன் பட்டது. உதாரணமாக, அக்காலத்தில் இன்று போல எலக்டிரி சிடியோ, மண்ணெண்ணெயோ இல்லை, அந்தி மயங்கிவிட்டால் அந்தகாரமான இருள் சூழும். ஊர்ப்புறங்களில் விளக்கு எரிக்கவேண்டும். விளக்கு எரிக்க, எள், ஆமணக்கு, இலுப்பை எண்ணெய்கள் பயன்படுத்தப்பட்டன. அதே போன்று நெய்யும் பயன்பட்டது. ஒவ்வொரு ஊருக்கும், நாடுகளுக்கும், தேவை யான எண்ணெயும் நெய்யும் உற்பத்தி செய்யும் தொழில்

எப்படி விளங்கியிருக்கவேண்டும்! எண்ணிப் பாருங்கள். கல்வெட்டுக்களில் எண்ணெயும், நெய்யும் இக்காரணத்தால் தான், அடிக்கடி குறிக்கப் பெறுகின்றன.

இங்கு கீழ் தரப்பட்டுள்ள ஒரு கல்வெட்டைப் பாருங்கள். இது தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், திருமெய்ச்சூர் என்ற ஊரில் மிகிராருணேச்சுரர் கோயிலில் உள்ளது. 13ம் நூற்றுண்டு இறுதியை சார்ந்தது. மாறவர்மன் குலசேகரன் என்ற பாண்டியன் ஆட்சியில் அகளங்கநாடாழ்வான் என்பவர் நெடுவாயிலுடையார் என்பவரிடம் சில விளைநிலங்களையும், மனைகளையும், படுகைகளையும் விலைக்கு வாங்கியுள்ளதைக் கூறுகிறது. இந்த ஒரு கல்வெட்டி லிருந்து நாம் எவ்வளவு செய்திகள் அறியமுடிகிறது என்று பார்ப் போம். கல்வெட்டைப் பிரித்துப் பிரித்து அச்சிட்டுள்ளோம். இதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

இக்கல்வெட்டு, யார், யாரிடம் வாங்கினுர்கள் என்று தெளிவாகக் கூறுகிறது. ஆதலால் நிலத்தை வாங்கும்போது (அக்காலத்தில்) 700 ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வாறு பத்திரம் எழுதினுர்கள் என்று அறிய ஒரு நல்ல சான்று. விளைநிலம், மனை, படுகை ஆகிய மூன்று தரப்பட்ட இடங்கள் வாங்கப்பட்டுள்ளன. இவற்றின் எல்லைகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அளவுகளும் கொடுக்கப்பட்டுள்ளன,

விளைநிலம் — 6 மா

மனை —40 குழி

படுகை — 300 குழி

இவற்றின் மொத்த விலை 134 பணம் என்று உள்ளது. இதிலிருந்து இவ்வளவு இடத்திற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னர், விலை எவ்வளவு என்று நாம் அறிய முடிகிறது. விலைக்குக் கொடுத்த பணத்தை விலைப் பொருள் என்று கல்வெட்டு கூறுகிறது.

அவ்வப்போது அரசர்கள் மாறுவார்கள். அவர்கள்வெளியிடும் காசுகள் மாறும். ஆதலால் எந்தக் காசு என்று ஐயம் எழக்கூடும் அல்லவா? ஆதலால் கல்வெட்டு அதை ''அன்றுட நற்காசு'' என்று கூறுகிறது. இன்று அதை Current Coinage accepted as legal tender என்பர். இரண்டு வகைக் காசுகள் புழக்கத்தில் இருந்திருக்கின்றன. புவனேரகவீரன் பணம் 83ம் ஆகவராமன்பணம் 51ம் கொடுத்திருக்கிருர்கள். புவனேகவிரன் என்றும் ஆகவராமன் என்றும் சுந்தரபாண்டியனுக்குப் பெயர்.

இப்பணம் கொடுத்தபோது இருவரை சாட்சியாகக் கொண்டு கொடுத்திருக்கிருர்கள். அதைக் ''சாட்சியாக' என்று கல்வெட்டு

கூறுகிறது. அகளங்கத் தட்டான் என்பவனும், திருவாய்க்குலத்து பிள்ளை என்பவனும் காட்சியாக விற்றிருக்கிறார்கள். இப்பத் திரத்தில் கையெழுத்திட்டவர்களின் பெயர்கள் இறுதியில் கொடுக் கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டில் எல்லைகளைக் குறிக்கும்போது ''விரராசேந்திர சோழப் பேராறு'' என்பதும், ''பாண்டி குலப்பதி பேராறு'' என்பதும் உள்ளன. இராஜேந்திர சோழனின் மூன்றும் மகனுக்கும் குலோத்துங்க சோழனுக்கும் ''விரராஜேந்திரன்'' என்று பெயர் இருந்தது. அப்பெயரால் இங்கு ஒரு ஆறு வெட்டப்பட்டு (பெரிய கால்வாய் போல) இருக்க வேண்டும். சோழர்கள் பாண்டியர்களை வென்றபோது ''பாண்டிகுலாசனி'' என்று பெயர் கொண்டார்கள். ஆனால் பாண்டியர்கள், தாங்கள் சோழ நாட்டை வென்ற போது பாண்டியகுலபதி என்று அழைத்துக் கொண்டார்கள். இங்குள்ள ஓர் ஆறு பாண்டியர் பெயரால் ''பாண்டிகுலபதி பேராறு'' என் றழைக்கப்பட்டுள்ளது. ஒரு வாய்க்காலுக்கு ''அம்மை அப்பன் வாய்க்கால்'' என்றே பெயர். ''விற்கின்றார் மனை'' ''கொள்கின்றான் நிலம்'' என்ற சொற்றொடர்கள் கண்டு இன்புறத்தக்கவை.

கல்வெட்டு

ஸ்வஸ்தி-ஸ்ரீகோமாறபன்மர் திருபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசெகர தெவர்க்கு யாண்டு 21 இருபத்தொன்றுவது மிதுந நாயற்று பூறுவபக்ஷத்து துவாதசியும் திங்கட்கிழமையும் பெற்ற சொதிஞள்

குலொத்துங்க சொழவளநாட்டுக் கிழ்கூற்று அம்பர் நாட்டுக் கொற்ற வாசலில்

தில்லைநாயகன் தொண்டைமான் உடையான் புவனெகவிர அகளங்க நாடாழ்வார்

உய்ய கொண்டார் வளநாட்டுக் கிழ்கூற்று அம்பர்நாட்டு எண்ணுகுடியில்

நெடுவாயிலுடையார் தெவர் கண்டப் பெருமாள் பக்கல் கொண்டுடையதான திருவெகம்ப மயக்கல் என்று பெர் கூவப்பட்ட நிலத்துக்கு

மெல்பார்க்கெல்லை உட் சிறுவாய்க்காலுக்கு கிழக்கும்

வடபார்க்கெல்லை விதானத்துக்கும் ஆற்காடு கிழார் நிலத் துக்கு[ம்*] தெற்கும்

கிழ்பாற்கெல்லை வழிவரம்புக்கு[ம்*] [பள்]ளத்துக்கும் மேற்கும்

தென்பாற் கெல்லை நாயநார் விற்றிருந்த பெருமாள் திருவிளை யாட்டத்துக்கு வடக்கும்

இன்னான் கெல்லைஉள் நடுவுபட்ட நிலம் ¼ இந்நிலம் காலும் சந்திரசெகரமயக்கலென்று பெர் கூவப் பட்ட நிலத்துக்கு

மெல்பாற்கெல்லை முதலியார் திருநாமத்துக் காணிக்கும்

ஆற்காடு கிழார் நிலத்துக்கும்
    கிழக்கும்
வடபாற்கெல்லை மணக்குன்றுக்குத் தெற்கும்
கிழ்பாற்கெல்லை ஆற்காடு கிழார் நிலத்துக்கு மெற்கும்
தென்பாற்கெல்லை முக்கால் வாய்க்காலுக்கு வடக்கும்
இந்நான் கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் 4 மா ½ இந்நிலம்
    நான்மா வரையும்
முக்காற் கண்டமென்று பெர் கூவப்பட்ட நிலத்துக்கு
மெல்பாற்கெல்லை ஆற்காடு கிழார் நிலத்துக்குக் கிழக்கும்
வடபாற்கெல்லை முக்கால்வாய்க்காலுக்குத் தெற்கும்
கிழ்பாற்கெல்லை வழிவரம்புக்கு மெற்கும்
தென்பாற்கெல்லை விரராசெந்திர சொழப்பெராற்றுக்கு
    வடக்கும்
இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் 4 மா இந்நிலம்
    நாலுமாவும்
கள்ளிச் செய்யென்று பெர் கூவப்பட்ட நிலத்துக்கு
மெல்பாற்கெல்லை வழிவரம்புக்குக் கிழக்கும்
வடபாற்கெல்லை திருமிகைச்சூருடையார் தெவதானத்துக்குத்
    தெற்கும்
கிழ்பாற்கெல்லை இந்நாயினர் தெவதானத்துக்கு மேற்கும்
தென்பாற்கெல்லை நெடுவாயலுடையார் நிலத்து[க்கு வடக்கும்
இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் 2மா, காணி இந்நிலம்
    இரண்டுமாக் காணியும்
ஆக நிலம் ¾,காணி இந்நிலம் முக்காலெ முக்காணியும்
    நத்த[த்]திற் கொண்ட விரராசெந்திரசொழப் பெராற்றுக்
குத் தெற்குப் பெருஞார்கிழவர்மனை யென்று பேர் கூவப்
பட்ட மனைக்கு
மெல்பாற்கெல்லை நாயினர் திருமிகைச்சூருடையார் தெவ
    தானத்துக்குக் கிழக்கும்
வடபாற்கெல்லையும் கிழ்பாற்கெல்லையும் தென்பாற்கெல்லையும்
    விற்கின்றார்மனைக்குத் தெற்கும் மெற்கும் வடக்கும்
இந்நான் கெல்லைக்குள் நடுவுட்பட்டமனை குழி 40 இக்குழி
நாற்பதும் ஆக
மனை குழி 40 விளை நிலம் ¾,முக்காணி இம்மனை குழி நாற்பதும்
விளை நிலம் முக்காலெ முக்காணியும் பின்னமும்
இவர் பக்கல் கொண்ட
கொற்சடையன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ
    பிவல்லவ தெவற்கு யாண்டு 25-வது இருபத்தஞ்சா
    வது விருச்சிக நாயற்று அபரபக்ஷத்து பௌர்ணமியும் புதன்
கிழமையும் பெற்ற ரொசணி நாள்

துண்டம் அத்திச்செய்யென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு
தென்பாற்கெல்லை அம்மை அப்பன் வாய்க்காலுக்கு வடக்கு
மெல்பாற்கெல்லை முதலியார் திருநாமத்துக் காணிக்குக்கிழக்கு
வடபாற்கெல்லை பாண்டிகுலப்பதிப்பெராற்றுக்குத் தெற்கும்
கிழ்பாற்கெல்லை முதலியார் திருநாமத்துக்காணிக்கு மெற்கும்
இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் ¼ காணி, இந்நிலம் காலெ காணியும்

விரராசெந்திர சொழப் பேராற்றுக்குத் தெற்கு
முள்ளிக்காலென்று பெர் கூவப்பட்ட நிலத்துக்கு கிழ்பாற் கெல்லையும் வடபாற்கெல்லையும் கொன்கிரு[ன்*] னிலத்துக்கு மெற்கும் தெற்கும்
மெல்பாற்கெல்லையும் தென்பாற்கெல்லையும் கூற்றங் குடிவாய்க் காலுக்கு கிழக்கும் வடக்கும்
இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட நிலம் ¼ இந்நிலம் க
ாலும்
முன்று நாட்டான் படுகையென்று பெர் கூவப்பட்ட நிலத் துக்குக்
கிழ்பாற்கெல்லை நெடுவாயலுடையான் திருவிடைமரு தூருடையாரும் திருப்பாம்புரமுடையார் தெவதானப் படுகைக்கும் மெற்கும்
தென்பாற்கெல்லை [விரரா*] செந்திரசொழப் பேராற்றுக்கு வடக்கும்
மெல்பாற்கெல்லை இறைவான் செரி எல்லைக்குலைக்குக் கிழக்கும்
வடபாற்கெல்லை பாண்டிகுலபதிப் பெராற்றுக்குத் தெற்கும்
இந்நான்கெல்லையுள் நடுவுட்பட்ட படுகை குழி 300 இக்குழி முன்னூறும்
ஆக விளைநிலம் அரையே காணியும்
படுகை குழி முன்னூறும்
ஆக விளை நிலம் ஒன்றே ஆறுமா மனை குழி 40 படுகை
குழி 300 இந்த விளைநிலம் ஒன்றெ ஆறுமாவு[ம்*[மனைகுழி
நாற்பதும்
படுகை குழி முன்னூரும்
விற்றுக்குடுத்துக் கொள்வதான எம்மிலிசை[ச[ந்த விலைப் பொருள் அன்றுடு நற்காசினுல் புவனெகவிரன் பணம் 83-ம் ஆகவராமன் பணம் 51-ம் ஆக பணம் 134 இப்பணம் நூற்று முப்பத்து நாலும்
அகளங்கத்தட்டானும் திருவாய்க்குலத்துப் பிள்ளையும் காட்டி யாகப்
பொருளறக் கைக்கொண்டு விலைக்குற விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தென்

உடையான் புவனெகவீர வகளங்கநாடாழ்வாற்கு
நெடுவாயலுடையான் தெவர் கண்டனென்
இப்படிக்கு இவை நெடுவாயலுடையான்
தெவர்கண்டப் பெருமாள் எழுத்து
இப்படிக்கு இவை நெடுவாயலுடையான் திருவிடைமருதூருடையான் எழுத்து
இப்படி அறிவேன் புறக்குடையாநெனன்
இப்படி அறிவென் புதுச்செரிக்குடையான் அம்பலப்பெருமாளென்
இப்படி அறிவென் திருநல்லூருடையாரென்
இப்படி அறிவென் திருமிகைச்சூருடையார் கொயிலில் காணியுடைய சிவப்பிராமணரிற் செல்லப் பிள்ளையான் தற்குறியாளமைக்கு உடையார் எழுத்து

இவ்வூரைப் பற்றியும். அக்காலத்தில் இங்கு விலைக்கு விற்கும் நிலத்தை எவ்வாறு பதிந்தார்கள் என்றும் நாம் எதிலிருந்து அறிய முடியும்? கல்வெட்டுக்கள் மூலமாகத்தான்.

கல்வெட்டுக்களைச் சரிவரப் படித்தால், அவை வெற்றிகளை மட்டுமா சொல்கின்றன! நமது ஊர்ப்புற, சமுதாய பொருளாதார ஆட்சி முறைகளை அல்லவா கூறுகின்றன! அவற்றில் எதை எப்படிப் படிக்க வேண்டும் என்று அறிந்து கொண்டால் போதும். நமது ஊர்களின் வரலாறே படம் போல் நம் கண்முன் நிற்கும். அந்த இன்பமே தனி! முயன்று பாருங்கள்.

வரலாற்றில் பறையர்

இரா. பூங்குன்றன்

தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களின் புறத்தே அமைந்துள்ள சேரிகளில் வாழ்பவர்கள் பறையர் என்றசாதியார். இவர்கள் வாழும் பகுதியைப் 'பறைச் சேரி' என்று அழைப்பது இன்றைய வழக்க மாகும். பண்டையக் கல்வெட்டுக்களிலும் பறைச்சேரிகள் பற்றி குறிப்புகள் வருகின்றன. தமிழ்நாட்டில் முன்தோன்றி மூத்த குடிகளுள் பறைக்குடியும் ஒன்று. மேனுட்டு ஆசிரியர்கள் இவர்களை வருணுசிரம தர்மத்தினுள் அடக்கவில்லை. Out caste என்று குறிப் பிட்டார்கள்.[1] புலையர்கள் என்பாரும் பறையராகவே கொள்ளப் படுகின்றனர். சித்தமே சிவனுக நின்ற சைவ அடியார்களைப் பற்றி வரலாற்றுணர்வு மிக்க காப்பியத்தைச் செய்தளித்த சேக்கிழார் பறைச்சேரியை புலையர்பாடி என்று கூறுகின்ருர். இக்காலத்து வரலாற்ருசிரியர்களும், புலையரும் பறையரும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர் என்று செப்புகின்றனர்.[2] பழந்தமிழ் இலக்கியமாகக் கருதப்படும் சங்க இலக்கியத்தில் புலையர் பற்றியும், பறையர் பற்றி யும் குறிக்கப்படுகின்றது.

சங்க காலம்

சங்க இலக்கியப் பரப்பில் புறநானூற்றில் பறையர் பற்றியும் புலையர் பற்றியும் குறிக்கப்படுகின்றது.

> துடியன் பாணன் பறையன் கடம்பன்
> இவை நான்கல்லது குடியுமிலவே

என்ற புறநானூற்று அடிகளில் நான்கு குடிகள் சிறப்பித்துப் பேசப் படுகின்றன. இவற்றில் பறைக்குடியும் ஒன்று. ஆனுல் புலையர் களைப் பற்றிச் சங்க நூல்கள் இழித்தே பேசுகின்றன. புலையர்களை ''இழிசினர்'' என்று சான்ருேர் செய்யுள்கள் குறிக்கின்ற போக்குக் காணப்படுகின்றது. புலையனும் பறையனும் இசைக் கருவியை வாசிக்கும் தொழிலைச் செய்வதாகக் கூறப்பட்டுள்ளனர். துடி, பறை போன்ற கருவிகளை வாசிப்பதில் வல்லவர்களாக இருந் துள்ளனர்.

இழி பிறப்பாளன் கருங்கை சிவப்ப
வலிதுரந்து சிலைக்கும் வன்கட்கடுந்துடி

(புறம் 170)

இவர்கள் பிணத்தைச் சுடும் தொழிலையும் செய்திருக்கின்றனர். புலையர்கள் வேட்டையாடும் தொழிலையும் செய்துள்ளனர்.[3] கிராமங்களில் நடைபெறும் விழாவில் புலையர்கள் இசைக்கருவிகளை கொண்டு வாசிக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது.

சங்கம் மருவிய காலம்

கி. பி. இரண்டாம் நூற்றுண்டினதாகக் கருதப்படும் இரட்டைக் காப்பியங்களிலும் நீதி நூல்களிலும் புலையர் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இந்நூல்களில் புலையர் என்ற சொல் பொய், களவு, இழிவு, பரத்தமை, ஊன் போன்ற பொருள்களில் ஆளப் பட்டுள்ளது. தீயநெறி என்றும் கருதப்பட்டுள்ளது. பறையன் என்ற சொல்லுக்கும் பெரும்பாலும் இந்தப் பொருள்களே கூறப்பட்டுள்ளன.

கி. பி. 5-6ம் நூற்றுண்டில் எழுச்சி பெற்ற பக்தி இயக்கம் சாதி சமய வழக்குகளைச் சாடியது. பக்தி இயக்கம் சமூகத்தை ஆட்கொண்டபோது கீழ்சாதித் தொண்டர்கள் போற்றிப் புகழப்பட்டனர். 'காதலாகிக் கண்ணீர் மல்கி கசிந்துருகி'ப் பாடிய சிவனடியார்கள் பாடலில் புலையர் பற்றிய குறிப்பு இடைப்பிரவரலாகக் குறிக்கப்படுகிறது. 'சித்தமே சிவனுகக் கொண்ட புலையர்களையும்' தாம் வணங்கும் கடவுளாக ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு அடியார்களிடத்தில் காணப்பட்டது. தாண்டக வேந்தர் என்று புகழப்பட்ட நாவுக்கரசன்,

அங்கமெல்லாம் குறைந்தழுகித் தொழுநோயராய்
ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர்
கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே

என்று பாடுகிறுர். ஆவுரித்துத் தின்றுழலும் புலையரையும் கடவுளாக ஏற்றுக் கொள்ளும் சிவநேசச் செல்வர்கள் பலர் இருந்தனர். பல்லவர் காலத்தில் பறைக்காணம் என்றஒருவரி குறிக்கப்படுகிறது. இது பறையடிப்போர் தரும் வரி என்று சிலர் கூறியுள்ளனர்.[4] பல்லவர்காலத்தில் நடப்பட்ட நடுகற்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் இறந்த வீரர்களின் பீடும் பெயரும் பொறித்து வைக்கப் பட்டுள்ளன. கி. பி. 6ம் நூற்றுண்டைச் சேர்ந்த நடுகல் ஒன்றில் ''பறைக்கட்டியார் மகன்'' என்று ஒரு பெயர் கூறப்படுகிறது.[5]

பறைக்கட்டியார் என்ற சொல்லில் 'பறை' என்பது சாதியையும் 'கட்டியார்' என்பது பெயரையும் குறிக்கும். பறையர் வகுப்பைச் சேர்ந்த கட்டியார் என்று கருதலாம். கி. பி. 7-ம் நூற்றுண்டைச் சேர்ந்த ஒரு நடுகல்லில் ''சாக்கைப் பறையனுர்'' என்ற பெயர் காணப்படுகிறது.[6] கி. பி. 8-ம் நூற்றுண்டு என்று கருதப்படும் மற்ருெரு நடுகல்லில் 'பறையன் புளியனேன்' என்ற பெயர் காணப்கிறது.[7] இதே நூற்றுண்டைச் சேர்ந்த மற்ருெரு நடுகல்லில் புலையன் என்ற பெயர்க் காணப்படுகிறது. இந்த வீரர்கள் நாடு காக்கவும் மாடு காக்கவும் வேண்டி தம் புகழ் நிறுத்தி மாய்ந்தனர்.

சோழர் காலம்

சோழர் காலத்தில் பறையர் (புலையர்) வாழ்க்கை முறையை அறிந்துகொள்ளச் செய்திகள் கிடைக்கின்றன. பறையர்களில் சிலர் பாடிகாவல் வீரர்களாகப் பணியாற்றியுள்ளனர். சிலர் போரில் மாய்ந்துள்ளனர். சோழர் காலத்திறுதிப் பகுதியில் தோன்றிய பெரிய புராணம் திருநாளைப் போவார் சரித்திரத்தைச் சுருக்கிக் கூறுகிறது. இச் சரித்திரத்தில் பறையர்கள் (புலையர்) வாழ்க்கை முறையையும் அவர் தம் குடில்களையும் உண்மை நிலைக்குப் புறம் போகாமல் சித்தரித்து இருக்கிருர். ''பைங்கொடிச் சுரை மேற் படர்ந்த பழங் கூரையுடைப் புற்குரம்பைச் சிற்றிரல்'' என்று அவர் தம் குடில்களைப் பற்றி வருணிக்கிருர். புலையப் பெண்கள் கள்ளுண்டு களித்து மகிழ்வர் என்பது ''புன் புலைச்சியர்கள் கள்ளுண்டு களி தூங்கக் கறங்க பறையுங் கவிக்கும்'' என்ற பாடலால் விளங்கும். ''நெறி குழற் புன்புலை மகளிர் நெற்குறு பாட்டொலி பரக்கும்'' என்ற பாடலால் விளங்கும், சோழர் காலத்தில் இவர்கள் மிகவும் இழிந்தவராகக் கருதப்பட்டனர் என்பது சேக்கிழார் புராணத்தால் விளங்கும். 'புன்புவி மகளிர்' என்றும், 'புன்புலைச்சியர்' என்றும், 'கடைஞர்' என்றும் கூறுவதால் இவர்கள் இழிதகைமை புலப்படும்' இவர்தம் வறுமையைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். சேக்கிழார் நந்தனுர் கூற்ருகக் கூறும் வாசகங்கள் அவர்தம் சாதியின் இழிவை புலப்படுத்தும். 'அங்கெய்த ஒன்றியனை தருதன்மை கூறுகுலத் தோடிசை வில்லை!' என்றும், 'இன்றல் தகு இழிபிறவி இது தடை' என்றும் கூறி துயரம் அடையும் காட்சிக் குறிப்பிடத்தக்கது. புலையர் இழிந்த பிறவியராய் கருதப்பட்டதாலோ என்னவோ நந்தனுர் வரலாறு கல்வெட்டுக்களிலும், சிற்பங்களிலும் மிகவும் அருகியே காணப்படுகிறது. தாராசுரத்தில் உள்ள ராஜராஜேஸ்வரத்தில் வடிக்கப்பட்டுள்ள நாயன்மார் சிற்பங்களில் நந்தனுர் சிற்பமும் காணப்படுகிறது. எரிமூட்டி அதில் மூழ்கக் கை கூப்பி நிற்பவராகக் காட்சியளிக்கிருர். இரண்டாவது சிதம்பரத்

தில் மண்வெட்டியுடன் காட்சியளிக்கும் நந்தனுர் உருவமாகும். இவை தவிர வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லே. கல்வெட்டுக்களில் இவர் பற்றிய செய்தி மிகவும் குறைவே. 'திருநாளேப் போவார் மடைவிளாகம்' என்ருெரு மடைவிளாகம் கி. பி. 12-ம் நூற்ருண்டு கல்வெட்டில் கூறப்படுகிறது. ''சேக்கிழாருக்கு முன் திருநாளேப் போவார் வரலாறு பெயரளவில் தெரியப்பட்டிருந்ததே யன்றி விரிவாக இலக்கியத்தில் இடம் பெற்றிலது'' என்று அறிஞர் கூறுவது கருதத் தக்கது.[8] சோழர் காலத்தில் பறைத்தறி என்ற ஒரு வரி வாங்கப்பட்டது. இது பெரும்பாலும் பறையர் செலுத்திய வரியாக இருக்கலாம்.[9]

சோழர் காலத்திற்குப் பின்

கி. பி. 13ம் நூற்ருண்டில் சோழர் வலியிழந்து பாண்டியர் ஆட்சி தமிழகம் முழுதும் பரவியது. பாண்டியர் ஆட்சியில் புலேயர்கள் தங்களுடைய உரிமையை நிலேநாட்ட ரத்தம் சிந்தியுள்ளனர். வீரபாண்டியன் ஆட்சியில் பறையர்களுக்கும் மேல் சாதியார்க்கும் நடந்த போராட்டம் பற்றி ஒரு கல்வெட்டு கூறுகிறது. சிவகங்கையிலிருந்து கிடைக்கும் அக்கல்வெட்டில் பாகனேரியைச் சுற்றியுள்ள இருபத்திநான்கு ஊர்களிலும் உள்ள பறையர்களுக்கும் மேல் சாதி இந்துக்களுக்கும் கடும் சண்டை நிகழ்ந்தது. பறையர்கள் தங்களுக்குக் கூலி வேண்டிப் போராடினர். காங்கேயன் என்பான் அரசாங்கத்தின் பிரதிநிதியாக வந்து இரு சாராரிடையிலும் மத்தியஸ்தம் செய்து வைத்தான். இந்த மத்தியஸ்த தீர்ப்புப்படி பறையர்களுக்கு மேல்சாதிக்காரர்கள் திருமணம் போன்ற சுப காரியங்களின்போதும், இறப்பு போன்ற துக்க நிகழ்ச்சிகளின் போதும் வெகுமதி தரவேண்டும். இந்த வெகுமதி (கூலி) அவர்கள் செய்யும் வேலேக்குத் தரப்படுவதாகும்.[10]

தென்பாண்டி மண்டலத்தில் வாழும் தேவேந்திர பள்ளர்களுக்கும் பறையர்களுக்கும் சில உரிமைகள் பற்றிய சச்சரவு ஏற்பட்டது. தேவேந்திர பள்ளர்கள் திருமலே நாயக்கரிடம் சென்று முறையிட்டார்கள். தங்கள் சாதிக்குரிய உரிமைகள், வழக்கங்கள் எல்லாம் பறையர் அனுபவிக்கின்றனர், அதைத்தடுத்து நிறுத்த வேண்டும் என்று தங்கள் முறையீட்டில் கூறுகின்றனர். தேவேந்திர பள்ளர்களுக்கு வெள்ளே யானே, வெள்ளே வட்டக்குடை, கொடி. பகல் பந்தம், பாவாடை, இரட்டைச் சிலம்பு, இரட்டை கொடுக்கு. நன்மைக்குப் பதினறு கால் பந்தலும் துன்மைக்கு இரண்டு தேரும், பஞ்சவன் விருது, பதினெட்டு மேளம் ஆகியவற்றை உரிமையாகக் கொடுக்கிருன் பாண்டியன். இந்த உரிமை

களெல்லாம் தங்களுக்கும் உண்டென்று பறையர்கள் வாதிட்டனர். ஆனுல் பழைய பட்டயம் ஒன்றைக் கொண்டு இவை அனைத்தும் பள்ளர்களுக்கே உரியவை என்று மன்னன் தீர்ப்பு கூறுகிருன். இதனுல் பறையர்கள் பள்ளர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் என்று கருதப்பட்டனர் என்பது புலப்படும். இச்செய்தி கூறும் கல்வெட்டு கி. பி. 17-ம் நூற்ருண்டைச் சேர்ந்தது. சங்கரநாயனுர் கோயிலில் உள்ளது.

கொங்கு நாட்டில் பறையர்

கொங்கு எல்லா வகையிலும் தனித்தன்மை கொண்ட பாரம் பரியத்தை உடையது. கொங்கு நாட்டுப் பறையர்களும் சில அலாதியான இயல்புகளைக் கொண்டுள்ளனர். கொங்கு நாட்டில் எல்லாச் சாதியாரிடையில், குறிப்பாக வேளாளர்களிடையில் கணவனை இழந்த பெண்கள் வெள்ளாடையை உடுத்திக் கொள்வர். இந்த வழக்கம் பறைச்சாதி பெண்களிடையிலும் உண்டு. கொங்கு நாட்டுப்பறைச்சாதி பெண்களில் கணவனையிழந்த பெண் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது. இந்த இரு வழக்கங்கள் தமிழகத்தின் பிற பாகங்களில் உள்ள பறையர்களிடையில் காணப்படாதவை. கொங்கு நாட்டுக் கிராமங்களில் உள்ள கிராம தேவதை வழி பாட்டில் பறையர்கள் முன்னுரிமை பெறுகின்றனர். சில தேவதைக் கோயில்களில் பறையர் முப்பாட்டுக்காரராக உள்ளனர். சில கோயில்களில் பூசை செய்யும் பூசாரியாகவும் இருக்கின்றனர்.

பண்டைக்காலத்தில் கொங்கு நாட்டைச் சேர்ந்த பறையர்கள் கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளனர். கி. பி. 12-ம் நூற்ருண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று கோவை மாவட்டத்துத் திருமுருகன் பூண்டியிலிருக்கிறது. இக்கல்வெட்டு கொங்குச் சோழ வம்சத்தைச் சேர்ந்த விக்கிரம சோழன் காலத்தியது. இக்கல் வெட்டில் பறையர் வகுப்பினைச் சேர்ந்த தருபாலன் என்பான் பூண்டி கோயிலுக்கு அமுதுபடி செய்ய பத்து (அச்சு) பொன் கொடுத்துளான்

கி, பி. 14-ம் நூற்ருண்டைச் சேர்ந்த நாடோடிக் கதை பாடல் ஒன்று கொங்கு நாட்டுக் கிராமங்களில் பாடப்பட்டு வருகிறது. இதனை 'அண்ணன்மார் சுவாமி கதை' என்றும் 'கள்ளழகர் அம்மானை' என்றும் வழங்குவர். இந்தக்கதை வேளாளர் களுக்கும் வேட்டுவர்களுக்கும் நடந்த போராட்டத்தை மையமாகக் கொண்டது. பல நூற்ருண்டு காலமாகச் செவிவழியாக வந்த இந்தக் கதைப் பாட்டு நூல் வடிவம் பெற்றுள்ளது. இக்கதை கூறும் வேளாள வேட்டுவ போராட்டத்தில் பறைச்சாதியைச்

2431

சேர்ந்த 'வீரச்சாம்பன்' என்பான் வேளாளர் பக்கம் நின்று போரிடுகிறான். போரில் வீரமரணம் எய்துகிறான். அவன் கொங்கு நாட்டு 'அண்ணன்மார் சுவாமி' கோயிலில் தேவதையாக வைத்து வழிபடப்படுகிறான்.

கொங்கு நாட்டில் பறையர் வலங்கைப் பிரிவில் சேர்த்து எண்ணப்படுகின்றனர்.

கி. பி. 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகரர் கல்வெட்டு ஒன்று பறையர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் பாடி காவல் பணி செய்துள்ள செய்தியைக் கூறுகிறது. இவர் அந்தப் பணிக்காக ஒரு மாநிலம் மான்யமாகப் பெற்றார். அவர் பெயர் மலைப் பெருமாள் அரசு நிலையத்தார் பறையன் என்பதாகும்.

பறையர்கள் பற்றிய செய்தி பல கிடைக்கின்றன. அதுவும் வரலாற்றிலிருந்து கிடைப்பது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய தினம் கோவை மாவட்டத்து உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சிமலையிலும், மதுரை மாவட்டத்துப் பழனி வட்டத்தில் உள்ள கோடைக்கானல் மலைத் தொடரிலும் புலையர் என்ற பழஞ்சாதியார் வாழ்கின்றனர். இவர்கள் வேளாளர்களுடைய மாடுகளை மலைகளில் மேய்த்துப் பாதுகாத்து வரும் பணியைச் செய்கின்றனர். இவர்கள் வாழும் பகுதிக்கும் பாடி என்று பெயர். இது பெரியபுராணத்தில் வரும் புலையர்பாடி என்பதுடன் ஒப்பிடத் தக்கதாய் உள்ளது. இவர்கள் சொந்த சகோதரியை மணந்து கொள்வதை ஒரு காலத்தில் தவறாகக் கருதவில்லை. இவர்களுக்கும் பறையர்களுக்கும்இடையில் உள்ள வரலாற்று ரீதியான தொடர்பு பற்றி ஆய்வு செய்தால் பல விஷயங்கள் புலப்படும்.

அடிக்குறிப்புகள்

1. Coimbatore District Manual Vol. I.
2. அடியும் முடியும்
3. புறம்—உ. வே. சா, உரை
4. Administration and social life under Pallavas.
5. செங்கம் நடுகற்கள்.
6. செங்கம் நடுகற்கள்.
7. செங்கம் நடுகற்கள் என்ற நூலில் ஒரு நடுகல்லில் பறையன் புளியன் என்று வருகின்றது. இதைப் பறையன் என்று கொள்ளலாம்.
8. அடியும் முடியும்.
9. சதாசிவப் பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு,
10. 69 of 1924

வேட்கோவர்

கே. ஸ்ரீதரன்

''கிராமங்கள் இந்தியாவின் கண் போன்று விளங்குகின்றன'' என்று கூறினுர் காந்தி அடிகள். கிராமங்கள் நகரங்களின் அடிப் படைத் தேவைகளை பூர்த்தி செய்கின்றன. ஒவ்வொரு கிராமத்தி லும் பல்வேறு தொழில் புரிபவர் இருக்கின்றனர். ஒருகிராமத்தைப் பற்றி ஆய்வு செய்யும்பொழுது அங்கு வாழ்கின்ற பல தொழில் செய்கின்ற மக்களைப் பற்றி அறியலாம். கிராமங்களில் உழவர்கள், துணி நெய்பவர்கள், எண்ணெய் ஆட்டுபவர்கள், மட்பாண்டங்கள் செய்பவர்கள் வாழ்கின்றனர். இவர்களில் மட்பாண்டங்கள் செய் யும் 'குயவர் பெருங்குடியினர்' கிராம மக்களின் வாழ்க்கையில் முக் கிய பங்கு ஏற்கின்றனர். இவர்கள் வாழ்க்கையைப் பற்றி தொல் லியல் ஆய்வு, சங்ககால நூல்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் தரும் குறிப்புகளின் வாயிலாக இக்கட்டுரையில் அறிவோம்.

குயவர்கள் வேளாளர் என்று தங்களை அழைத்துக் கொள்வர். 'வேள்' என்ருல் மண் என்று பொருள். இவர்களைப்பற்றி ஒரு கதை வழங்கி வருகிறது. ஒரு காலத்தில் பரமேஸ்வரனும் அவன் தேவியான பார்வதி தேவியும் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது பார்வதிதேவி மண்ணுல் யானை உருவத்தை செய்கிருள். இறைவன் அதைத் தொட அதிலிருந்து ஒரு மனிதன் எழுந்து வணங்கி நிற்கின்ருன். மண்ணிலிருந்து அவன் எழுந்ததால் மண் ணுன் என்று அழைக்கப் பெறுகிருன். பின்பு அவனுக்கு மட்பாண் டம் செய்யும் தொழில் அளிக்கப்படுகிறது.[1]

தொல்லியல் ஆய்வு

தொழில்களில் தொன்மை வாய்ந்தது மண்பாண்டத் தொழி லாகும். மனிதன் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி உணவு உற்பத்தி செய்யத் தொடங்கியது புதிய கற்காலம் ஆகும். இக்காலத்தில் மனிதன் மட்பாண்டங்களைச் செய்யத் தெரிந்து கொண்டான். இதற்குச் சான்ருக வட ஆற்காடு மாவட்டம் பையம்பள்ளி என்ற இடத்தில் நடைபெற்ற அகழ்வாவில் சொரசொரப்பான பழுப்பு நிறமுடைய பானை ஓடுகள், ஜாடிகள் போன்றவை கிடைத்தன.

இவைகள் கையால் செய்யப்பட்டவை. சக்கரங்களில் வைத்து வனையப்பட்டவை அல்ல.[2]

இதற்குப் பின்னர் பெருங்கற் சின்னங்களில் நிறைய அளவில் பானை ஓடுகள் கிடைக்கின்றன. கறுப்பு சிவப்பு பானை ஓடுகள், சிவப்பு நிற பானை ஓடுகள் போன்ற பானை ஓடுகள் கிடைக்கின்றன. இவை பளபளப்பாகவும் மெல்லியதாகவும் விளங்குகின்றன. மேலும் இவைகள் சக்கரங்களில் வைத்துச் செய்யப்பட்டன. இக்காலத்தில் மனிதன் மட்பாண்டங்கள் செய்யும் கலையில் மிகவும் முன்னேறி யிருப்பது தெரிகிறது.

தமிழகத்தில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் பானை ஓடுகள் கிடைக்கின்றன. மட்பாண்டத் தொழில் தொல்பொருள் இயலின் உயிர் நாடியாகக் கருதப்படுகிறது. பண்டைக்கால சாதாரண மக்களின் பண்பாட்டின் மேம்பாட்டினை மதிப்பிட்டு அளிக்கும் அளவுகோலாக அது நமக்குப் பயன்படுகிறது. மட்பாண்டங்கள் கிடைப்பதைக் கொண்டு அக்காலத்திய பொருளாதார நிலை, மனிதன் உணவு உற்பத்தி செய்யும் நிலை ஆகியவற்றை அறியலாம். ஏனெனில் அக்கால மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயன் படுத்திய பொருட்களில் அதிகமானது மட்பாண்டங்களே ஆகும்.

பாண்டிச்சேரிக்கு அருகில் அரிக்கமேடு என்ற இடத்தில் நடைபெற்ற அகழ்வாயில் 'அரிட்டைன்' என்ற ரோமானியப் பானை வகை ஓடுகள் கிடைத்தன. இது இத்தாலியில் அரிஸ்ஸோ என்ற நகரத்துக் குயவர்கள் வனைந்து தம் முத்திரைகளைப் பதித்து அனுப்புவித்தனர். இதனால் தமிழகத்திற்கும் ரோமானிய நாட்டிற்கும் வர்த்தகத் தொடர்பு இருந்ததை அறிய முடிகிறது.

சங்க காலம்

மட்பாண்டங்கள் செய்யும் குயவர்களைப் பற்றி சங்க நூல்களில் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவர்கள் 'வேட்கோவர்' 'கலம் செய்கோ', 'மண்வினை மாக்கள்', 'மண்மகன்' என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். அவர்கள் கிராம மக்களுக்கு வேண்டிய பானைகள், சட்டிகள், விளக்குகள் போன்றவற்றைச் செய்து அளித்தனர்.

மட்பாண்டங்கள் சுடும் சூளையும், மட்பாண்டங்கள் வனைகிற சக்கரமும் பின்வருமாறு கூறப்படுகிறது.

இருள் திணிந்தன்ன குரு உத்திரள் பரு உப்புகை
அகலிடு விசும்பின் ஊன்றும் சூளை
அச்சுடைச் சாகாட்டு ஆரம்

பண்டைக் காலத்தில் மண்பாண்டங்கள் பல வகையில் உப யோகப் படுத்தப்பட்டன. கிராமச் சபைகளின் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கு ஓட்டுப் பெட்டிகளாகப் பயன் பட்டதாக அகநானூறு பாடல் குறிப்பிடுகிறது.

கயிறு பிணிக்குழிசி ஓலை கொண்மார்
பொறி கண்டழிக்கும் ஆவணமாக்களின் (அகம் 77:7-8)

இறந்தவர்களை மட்பாண்டங்களில் வைத்துப் புதைக்கும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது என்பதை மணிமேகலை குறிக்கிறது.

சுடுவோர் இடுவோர் தொடுகுழி படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியிற்கவிப்போர்

சோழமன்னன் கிள்ளிவளவன் இறந்தபொழுது அவனைப் புதைக்கத் தாழியை செய்யும் குயவனைப் பார்த்து ஐயூர் முடவனுர் பின் வருமாறு கேட்பதாக ஒரு பாடல் புறநானூற்றில் வருகிறது,

கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
சேண்விளங்கு சிறப்பிற் செம்பியர் மருகள்
கொடி நுடங்கு யானை நெடுமாவளவன்
தேவருலகம் எய்தினன் ஆதலின்
அன்னேற் கவிக்குங் கண்ண கன்ருழி
வனைதல் வேட்டனையாயின் எனையதூ உம்
மண்ணு வனைதல் எல்லுமோ நீ எனக்கே

புறம்—228 11—15

இன்னெரு பாடலில், பாலை நிலத்தில் ஏற்பட்ட போரில் மாண்ட என் கணவரை அடக்கம் செய்யும் ஈமத்தாழியிலே என்னையும் சேர்த்து அடக்கம் செய்யுமாறு சற்றே அகன்ற வாயுடைய பெரிய தாழியாகச் செய்து தருவாய் எனக் கணவனை இந்த தலைவி (வேட்கோவை) வேண்டுகிருள். (புறம் —256).

இது போன்ற ஈமத்தாழிகள், மட்பாண்டங்கள் செய்யும் குயவர்களைப் பற்றிய குறிப்புகள் நற்றிணை, பதிற்றுப்பத்து, விக்கரம சோழன் உலா, கம்பராமாயணம் ஆகியவற்றில் காணலாம். குயவர் குடிமக்களில் பலர் புலவர்களாகவும் இருந்திருக்கின்றனர். வெண்ணிப் பறந்தலையில் சோழன் கரிகாலனுக்கும், பெருஞ்சேரலாதனுக்கும் நடந்த போரைப்பற்றி வெண்ணிக்குயத்தியார் என்னும் புலவர் பாடிய பாட்டில் புறநானூற்றில் (புறம்.66) இடம் பெற்றுள்ளது. நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்ட நாயனரும் குயவர் குடியைச் சேர்ந்தவர்.

குயவர்களைப் பற்றிக் கல்வெட்டுக்களில் பல செய்திகள் கூறப் படுகின்றன. கல்வெட்டுக்கள் ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.

பெயர்கள்

குயவர்கள் கல்வெட்டுக்களில் பல்வேறு பெயரிட்டு அழைக்கப் படுகின்றனர். வேள்கோ[3] கலமிடும் குசவன்[4] வேட்கோ[5] மண்ணுடையான்[6] அஞ்சுவழி குசவன்[7] பெருங்குசவன் என்று குயவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

பண்டைக் காலத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் இன்று இருப்பது போல போக்குவரத்துத் தொடர்பு இல்லை. எனவே கிரா மத்தில் இருப்பவர் தங்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள், மட்பாண்டங்கள் போன்றவற்றை வெளியே சென்று வாங்க இய லாது. ஆகவே ஒவ்வொரு கிராமத்திலும் வெவ்வேறு தொழில் செய்பவர்கள் இருந்திருக்கின்றனர். அவர்களுக்கு அக்கிராமத்தில் நிலங்களோ அல்லது பொருளோ ஊதியமாக அளிக்கப்பட்டிருக் கிறது.

குயவர்கள்-கோயில் ஊழியர்கள்

குயவர்கள் கோயில்களில் ஊழியர்களாகப் பணிபுரிந்திருக்கின் றனர். அவர்கள் கோயிலுக்கு வேண்டிய பானைகள், கலசங்கள், சட்டிகள், ஆகியவற்றைச் செய்து அளித்திருக்கின்றனர் என்று கல் வெட்டுகள் குறிப்பிடுகின்றன. செம்பியன் மாதேவியரால் திருவக் கரை கோயிலுக்கு அளிக்கப் பெற்ற நிவந்தங்களைக் குறிக்கும் பொழுது பின்வருமாறு கல்வெட்டு குறிக்கிறது.

> கலங்களும் மற்றுஞ் சால்களும்
> குடங்களும் பெருந்திருவமுதுக்கு பானைகளும்
> சட்டிகளும் திருமுனைக்கு பாலிகைகளும் இடும்குசவன்[9]

திருச்செந்தூர் வட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர், சோமநாதர் கோயி லுள்ள மாறவர்மன் விக்கிரசோழ பாண்டியனின் 25-ஆம் ஆண்டு கல்வெட்டில் கோயிலுக்கு வேண்டிய 'குசக்கலத்துக்கு நெல் அறு நாழி' நெல் உதையதிவாகரன் திருமூர்த்தி என்பவன் தானமாக அளித்தான் எனக் குறிப்பிடுகிறது.[10]

கோயிலைச் சேர்ந்துள்ள மடத்திலும் அவர்கள் பணி செய்து வந்திருக்கிறார்கள் என்பது தஞ்சைக் கோயில் கல்வெட்டினால் அறிய முடிகிறது.''[11]

திருமடைப்பள்ளிக் குசவர்க்கு உள்படுவான் ஒருவனுக்கு பங்கு ஒன்றும்
ஆளபதின்மருக்கு பேரார் பங்கு அரையுமாக
சூரசிகாமணிப் பெருந்தெருவிவ் குவர்க்கு பங்கு ஆறும்

இது போன்ற செய்தியை புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்து குடுமியாமலைக்கல்வெட்டு ஒன்று கூறுகிறது.[12]

சிகாநாதர் கோயில் மடத்து மகேசுவரர்
அமுது செய்வார்க்கு இட்டநிலம் இம்மடத்து கலமிடும்
குசவனுக்கு நிலம் காணியும்

இது போன்ற பணிகளுக்கு ஊதியமாக அவர்கள் நிலங்களை பெற்றிருக்கின்கினர் என்பதை அறியலாம்.

குயவர்களுக்கு அளிக்கப் பெற்ற நிலங்கள்

கிராமசபைகளும் குயவர்களுக்கு நிலங்களை அளித்திருக்கின்றன. அவ்வாறு அளிக்கப்பெற்ற நிலங்கள் 'குசக்காணி [13] குசப்பட்டி [14], குசவன் [15] நிலம் என்றெல்லாம் கல்வெட்டுகளில் அழைக்கப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தைச் சேர்ந்த மன்னூர் கோயிலிலுள்ள ஜடாவர் மன்சுந்தரசோழ பாண்டியனின் 4-ஆம் ஆட்சியாண்டுக்கல்வெட்டில் அவ்வூர் சபையினர் ஊர் அம்பலத்தில் கூடி அக்கோயிலில் பணிபுரியும் தோட்டக்காரக்கள், உவச்சர்கள், பானைகள், வனைவோர் மாலைதொடுப்பவர்கள் தேவரடியார் போன்றவர்கட்கு நிலங்கள் வீட்டுமனைகள் ஆகியவை அளிக்கப்படுவதைப்பற்றி எடுத்த முடிவினைப்பற்றி கூறப்படுகிறது. மேலும் இக்கல்வெட்டினுல் குயவர்களுக்கு குடியிருக்க வீட்டுமனைகள் அளிக்கப்பட்டது என்பதும் விளங்குகிறது.[16]

குசவர்கள் இவ்வாறு கோயிலுக்கு கலசங்கள் கொண்டுவந்து தருவதற்கு கூலி பெற்றிருக்கின்றனர். அது 'சத்தக்கூலி' என அழைக்கப்பட்டது. இதைக் கல்வெட்டு கூறுகிறது.[17]

முன்பு செய்த எழுபத்தேழு கலசத்துக்கு வத்தக்கூலியும்
எழுநாளைக்கும் திருப்பள்ளித் தாமத்துக்கு அக்கம் ஏழும்

மேலும் அவர்கள் 'சட்டிச்சோறு ஊதியமாகப் பெற்றதை காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் கல்வெட்டினுல் அறியலாம்.([18])

கலமிடும் குசவனுக்கும் விறகுக்கும் சட்டிச்சோறுக்கு
கறி ஐஞ்சுக்கும் சட்டிச்சோறுக்குத் தயிர்க்கும் [18]

குலால விருத்தி

புறத்தாய நாட்டுத் தென்வாசிவாரண நன்னாட்டு அகத்திசுரமான உதைய மார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலத்துப் பட்டர்களுக்கு அரசன் தனது பிறந்த நாளில் பரணி நாளில் அகரம் ஏற்படுத்தி அவர்கள் ரிக், யஜுர், சாம ஆகிய வேதங்களை பயிலுவதற்கும் அவர்களுக்கு மருத்துவ வசதிக்கும், மற்றும் மட்பாண்ட தேவைக்கும் நிலம் வழங்கியதைப்பற்றி கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அகஸ்திச்சுரம் கல்வெட்டு கூறுகிறது. இவ்வாறு மட்பாண்டம் செய்ய அளிக்கப்பட்ட நிலம் 'குலால விருத்தி' என அழைக்கப்பட்டது.[19] எனவே கோயில்களைத் தவிர சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் குயவர்கள் மட்பாண்டங்கள் செய்து தந்தனர் என்பது விளங்குகிறது.

மட்பாண்டங்களின் பெயர்கள்

கோயிலுக்கு மட்பாண்டங்கள் முக்கியமாக தேவைப்பட்டன. இவைகளைச் செய்து தருவதற்கு பொருள் மற்றும் நிலம் தானமாக வழங்கப் பட்டதாக பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. புதுக்கோட்டை மாவட்ட குளத்தூர் வட்டத்தைச் சேர்ந்த பரம்பூர் சோளிசுவரர் கோயிலுள்ள முதல் இராஜேந்திரனின் கல்வெட்டின் வாயிலாக கோயிலுக்குத் தேவையான மட்பாண்டங்களின் பெயர்களை அறிந்து கொள்ளலாம். அக்கோயிலைச் சேர்ந்த குயவன் கோயிலுக்கு திருவமுதுரிகலம், சால், குடம், கலசம் மற்றும் வேண்டிய பொருள்களை செய்து தருவதற்கு அவனுக்கு நாள் ஒன்றுக்கு மூன்று நாழி நெல் அளிக்கப்பட்டது.[20]

குயவர்களின் பெயர்கள்

கோயிலுக்கு பலர் தானங்கள் அளித்துள்ளது போலவே குயவர்களும் தானமளித்துள்ளதாக பல கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. நன்னிலம் வட்டத்தைச்சேர்ந்த திருமியச்சூர் கோயிலுக்கு விளக்குகள் எரிப்பதற்காக ஆடுகள் தானமாக அகலன் முந்நுற்றுவன் என்ற குயவன் கொடுத்ததாகஅக் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. [21]

வீதப் பெரியதேவனுன பொன்னம்பலக் கூத்தன் என்ற குயவனிடமிருந்து பணம் பெற்றுக் கொண்ட சில பிராமணர் அதற்கு வட்டியாக சந்தியாதிபம் ஏற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர் என்று கோவை மாவட்டம் பெருந்தலையூர் திருமகிழ்வனமுடையார் கோயில் கல்வெட்டு கூறுகிறது. [22]

குசக்காணம்

பண்டைக் காலத்தில் செய்யப்பெற்ற தொழில்களுக்கு வரிகள் விதிக்கப்பட்டிருந்தன என்று கல்வெட்டுகள். செப்பேடுகளால் அறிகிறோம். குயவர்கள் செய்யும் தொழிலின் மீது 'குசக்காணம்' என்ற ஒரு வரி போடப்பட்டிருந்தது என்பதை சுந்தர சோழனது அன்பிற் செப்பேடுகள், முதலாம் இராஜராஜனின் ஆனைமங்கலம் செப்பேடுகள், முதலாம்இராஜேந்திரனின் திருவாலங்காடு செப்பேடுகள் ஆகியவற்றின் வாயிலாக அறிகிறோம். மேலும் 'சக்கர காணிக்கை' 'திரிகை ஆயம்' என்ற வரிகள்[23] விதிக்கப்பட்டிருந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. இவை குயவர்களின் பானைவனையும் சக்கரங்களின்[24] மீது விதிக்கப்பட்டிருந்த வரியாகக் கருதலாம். இதனால் மட்பாண்டத் தொழில் அக்காலத்தில் பெருமளவில் நடைபெற்று வந்தது என்பதை உணரலாம்.

உரிமைகள்

சீர்காழி வட்டத்தைச் சேர்ந்த ஆச்சாள்புரம் கோயிலிலுள்ள இரண்டாம் இராஜாதிராஜன் கல்வெட்டில் அவ்வூர்ச் சபை நிறைவேற்றிய தீர்மானங்களில் விளக்குகளும், பானைகளும் செய்யும் குயவர்கள் ஒரு மேலாடை அணியலாம் என்பதும் ஒன்றாகும். அவர்கள் கிராமங்களில் முக்கிய இடத்தை வகித்து வந்திருக்கின்றனர்.[25] கோயிலில் ஊழியம் செய்து வந்திருக்கின்றனர். கோயிலுக்குத் தானம் அளிக்கும் உரிமை பெற்றிருக்கின்றனர். மேற் கூறிய ஆச்சாள்புர கல்வெட்டினால் கிராமத்தில் அவர்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை ஒருவாறு உணரலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த (குளத்தூர் வட்டம்) அகஸ்தீசுவரர் கோயில் கல்வெட்டினால் குயவர்களிடையே பல பிரிவுகள் இருந்ததாக தெரிய வருகிறது.[26] விருதராஜ பயங்கர வளநாட்டைச் சேர்ந்த குயவர் குடியில் இருக்கும் பல பிரிவினரிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. மேலும் அவர்களுக்கும் கோயில் அதிகாரிகளுக்கும் அவ்வூரில் இருந்த மற்ற தொழில் புரிவோருக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாகக் கூறுகிறது.[26]

வேட்கோவின் பெருமை

கிடாரத்தரையன், சூளாமணிவிகாரம் என்ற பெயரில் ஒரு பௌத்த விகாரத்தை நாகப்பட்டினத்தில் எடுப்பித்தான். அதற்கு ஆனைமங்கலம் என்ற ஊரை பள்ளிச்சந்தமாக முதலாம் இராஜராஜன் அளிக்க ஆணை பிறப்பித்தான். ஆனைமங்கலத்தின் எல்லைகளை அப்பகுதியில் இருந்த நாட்டார் பிடியேறி பிடாகை நடந்தி

வரையறுத்தனர். அதை அவர்கள் அரசனுக்கு கையொப்பம் இட்டு தெரிவித்தனர். க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுப் பட்டனக்கூற்றத்து 'சாத்த மங்கலம்' என்ற ஒரு ஊரின் சார்பாக அவ்வூரைச் சார்ந்த வேட்கோ ஒருவன் கையொப்பம் இட்டு தெரிவித்துள்ளான். இது வேட்கோவர் அக்காலத்தில் அரசனது ஆணையில் கையொப்பம் இடும் பெருமையைப் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகின்றது. வேட்கோவன் நேந்திரன் சாத்தனுன நானூற்றுவப் பெருங்கோ வேளான் என்று அவன் பெயர் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறவோலையில் பல ஊரைச் சேர்ந்த வேட்கோவர்கள் பலர் கையெழுத்து போட்டிருக்கிருர்கள். அவர்கள் பின்வருமாறு:

ஊர்	பெயர்	
பொருவனூர்	வேட்கோவன்	மாதேவன்
குற்ருலத்தூர்	வேட்கோவன்	தேவன் ஊரன்
உவர்குடி	வேட்கோவன்	மாளுக நாராயணன்
முஞ்சிக்குடி	வேட்கோவன்	மாநகன் கண்ணன்
திருக்கண்ணங்குடி	வேட்கோவன்	அதிராமன் இருபத்து நால்வனுகிய முன்னூற்றுவன்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைவரும் ஊர் கர்ணத்தாராக பணியாற்றியிருக்கிருர்கள். இதனுல் அக்காலத்தில் வேட்கோவர்கள் கர்ணத்தாராக பணியாற்றியிருக்கிருர்கள் என்பதும் விளங்குகிறது.

செப்புப் பட்டயச் செய்திகள்

மதுக்கரைப்பட்டயம் என்ற செப்புப்பட்டயம் குயவர்களுக்கும் 24 நாட்டு கவுண்டர்களுக்கும் நடைபெற்ற ஒரு ஒப்பந்தத்தைப் பற்றி கூறுகிறது. கொங்கு நாட்டில் புதிய வகையில் மட்பாண்டங்கள் செய்ய (நவபாண்டங்கள்) விரும்புகின்றனர். அதற்காக பாண்டிய நாட்டிலிருந்து குயவர்களை அழைத்து வருகின்றனர். அவர்கள் தங்கள் சுற்றத்தை விட்டுவிட்டு வருவதால் சில உரிமைகளை அதாவது சமஉரிமை பெறுதல், மற்றும் திருமணங்கள், தெய்வ வழிபாட்டில் உரிமை பெறுதல் ஆகியவற்றைப் பெறுகின்றனர். இப்பட்டயத்தில் அவர்களின் உரிமைகள், நவபாண்டங்கள் பற்றிய குறிப்புகள், தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. [27] மேலும் கொங்கு நாட்டுக் குயவர்களைப்பற்றி 24 நாட்டுப்பட்டயம், சென்மப்புலவன் பட்டயம், அரைய நாட்டார் பட்டயம் ஆகியவைகளில் குறிப்புகள் காணப்படுகின்றன.[28]

மேற்கண்ட செய்திகளால், குயவர்கள் பல பெயர்கள் இட்டு அழைக்கப்பட்டு வந்திருக்கின்றனர். கோயில் ஊழியர்களாக பணி

யாற்றி வந்திருக்கின்றனர். கோயிலுக்கு தானமளித்திருக்கின் றனர். அவர்களுக்கு என்ன உரிமைகள் இருந்தன என்று அறி கிறோம். இன்றும் மட்பாண்டங்கள் நம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு வகைகளில் பயன்பட்டு வருகிறது. பலர் இன்னும் மட் பாண்டங்களை உபயோகித்து வருகின்றனர். குயவர்களில் பலர் கிராம தேவதைகளின் கோயிலுக்கு முன்னால் வைக்கக்கூடிய குதிரை கள் மற்றும் பல பொருட்கள் செய்பவராக விளங்குகின்றனர். ஆகவே பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை மட்பாண்டத் தொழில் சிறப்புடன் விளங்கி வருகிறது என்பது தேற்றம்.

அடிக்குறிப்புகள்

1. Castes and Tribes of Southern India, E. Thruston.
2. Indian Archaeology 1964-65, A Review.
3. Inscriptions of Pudukkottai State, I, 67.
4. 54 of 1893.
5. S. I. I., xix, 2:8.
6. S. I. I., xix, 169.
7. T. A. S., vii, Part II, 20.
8. S. I. I. xix, 238.
9. S. I. I. xvii, 222.
10. S. I. I., xiv, 192.
11. S. I. I , ii, 66.
12. Inscriptions of Pudukkotai State, 221.
13. 4 of 1940-41.
14. S. I. I., iii.
15. Inscriptions of Pudukkottai State, Part I, 90.
16. S. I I., xiv, 132.
17. S. I. I., xvii, 496.
18. S. I. I., iv, 867.
19. Kanyakumari Ka'vettugal 1968-22.
20. Inscriptions of Pudukkottai State, 99.
21. 283 of 1950–51.
22. 370 of 1955.
23. பிற்காலச் சோழர் வரலாறு, சதாசிவ பண்டாரத்தார், ப. 524
24. South Indian Polity, Dr. T. V. Mahalingam, Glossary, p. 423.
25. பிற்காலச் சோழர் வரலாறு, சதாசிவ பண்டார்ரத்தார,
26. Inscriptions of Pudukkottai State, p. 915.
27. Madukkarai Pattayam, Kongu, 1974.
28. Thenolai, 13, 1977.

கல்வெட்டில் வண்ணார்

என். பழனிச்சாமி

சலவைத் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்ட வண்ணார் இனத்தவரைப் பற்றிய வரலாற்று, இலக்கிய, கல்வெட்டு, செப்பேட்டுச் செய்திகளைக் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. இலக்கியத்தில் வண்ணார்

சங்க இலக்கியங்களில் வண்ணார் இனத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் கலித்தொகையில்,

> வண்ணாத்தியை புலத்தி என்றல்
> வண்ணானைப் புலையன் என்றல்[1]

என வருவதன் மூலம் வண்ணார் புலையன், புலத்தி என்று அழைக்கப் பட்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது.

திருத்தொண்டர் மாக்கதையில் ''இவ்வுலகில் பிறப்பினால் ஏகாலிகுலத்துள்ளார்'' என்று செப்பப்படுகிறது.[2] இதன் மூலம் வண்ணார் குலத்திற்கு 'ஏகாலி' என்ற பெயர் புராண காலத்தில் இருந்தது என்பது தெரிய வருகிறது.

நீலகேசியில் வண்ணான் துன்னான மச்சிகம் இச்சாரம்'' என்று பல இனத்தவரைப் பற்றிக் குறிக்கின்ற பொழுது வண்ணாரினமும் குறிக்கப்படுகிறது.[3] இது போன்று இலக்கியங்களில் இவ்வினத் தைப்பற்றிய சான்றுகள் ஏராளம் உள.

2. கல்வெட்டில் வண்ணார்

அடுத்து, கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் வண்ணார் பற்றி வருகின்ற செய்திகளைக் காண்போம். வரலாற்றுப்புகழ் பெற்ற பாண்டியரின் தளவாய்புரம் செப்பேட்டில்,[4]

> ''வண்ணத்தார் வளாகத்தின் நன்குயர்
> பரம்பட்டுக்கும்''

என்ற குறிப்புக் காணப்படுகிறது. இங்கே வண்ணார் 'வண்ணத்தார்' என்று குறிக்கப்படுகின்றனர். புகழ் மிக்க இராஜராஜ சோழன் கல்வெட்டிலும்,

''வண்ணத்தார்கள் இருவருக்கும் பேராற்
பங்கு ஒன்றும்

இத்தெருவில் ஈரங்கொள்ளிகளுக்குப் பங்கு
இரண்டும்''

என்ற குறிப்பு காணப்படுகிறது.[5] இங்கு வண்ணார் 'வண்ணத்தார்' எனவும் 'ஈரங்கொள்ளி' எனவும் பயின்று வருகிறது. மேலும் கன்னியாகுமரி கல்வெட்டு ஒன்றில்,

''கீழ்லெல்கை ஈரங்கொலி உசு
அக்கும் என''

என்று குறிப்பிடப்படுகிறது.[6] எனவே ஈரங்கொலி என்றும் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். மற்றும்

''வண்ணார்க்கு பொலி யூட்டிக்குடுத்த
கழஞ்சு ஒன்று''

என்று இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் கல்வெட்டிலும்,[7]

''வெட்டிவரி திருப்பியது எரிமின்
விற்பணம் உவச்ச வரி வண்ணாவரி உள்பட''

என்று வேப்பம்பட்டிக் கல்வெட்டிலும்,

''இவ்வூர் வண்ணான்'' என்று திருவாங்கூர் தொல்பொருள் குறிப்பிலும்,[9]

''ஈரங்கொல்லிகள் செயலில் எல்லை''[10] என்று திருவிடை மருதூர் கல்வெட்டிலும் குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

மேலே குறிப்பிட்ட அனைத்துச் செய்திகளையும் ஆராய்ந்து நோக்கும் பொழுது வண்ணார் ஏகாலி, புலையன், ஈரங்கொலி என்று பண்டைத் தமிழகத்தில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. மலபார் பகுதியில் தற்பொழுதும் 'மண்ணார்' என்று அழைக்கப்படுகின்றனர். 'மண்ணுதல்' என்றால் 'கழுவுதல்' என்பது பொருள்.

3. வண்ணார் வாழ்வில் சில சிறப்பு அம்சங்கள்

(அ) பிரிவுகள்

வண்ணார்களில் பல பிரிவுகள் இருந்திருக்கின்றன. இன்றும் இருக்கின்றன. அவற்றில் சில.[11] பாண்டி வண்ணான், பெரு வண்ணான், தமிழ் வண்ணான், வடுக வண்ணான், புதர வண்ணான், துளுக்க வண்ணான் ஆகும்.[11]

(ஆ) பழக்க வழக்கங்கள்

பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்றது. மணமகனின் தங்கையே மணப்பெண்ணுக்குத் தாலி கட்டும் பழக்கம் இருந்தது. விவாகரத்து உரிமைகள் இருந்தன. மறுமண உரிமைகளும் இருந்தன சலவைத் தொழிலுக்கென்று தனிப்பட்ட குளங்களும் இருந்தன. என்ற செய்தி சல்வெட்டுக்களில் ''வண்ணதார் வளாகத்து'' என்பதன் மூலம் தெரிகிறது. தனிப்பட்ட சுடுகாட்டுப் பாதையும் இருந்தது என்பது ''வண்ணக் குடியார் பிணம் போகும் வழி'' என்பதன் மூலம் அறியலாம். பிணத்தைப் புதைக்கவும், எரிக்கவும் செய்தனர். புதைத்தபின் ஈமச்சடங்குகள் செய்தார்கள். இவ்வாறு இவர்கள் பழக்க வழக்கங்கள் இருந்தன.

(இ) வரிகள்

''வண்ணார்வரி'' என்று வேப்பம்பட்டிக் கல்வெட்டும், ''வண்ணாச்சேரி'' என்று தஞ்சைக் கல்வெட்டும் குறிக்கிறது. ''வண்ணாரப்பாட்டம்'' என்று வண்ணார்களுக்கு இருந்த வரியைப் பற்றிக் குறிப்புள்ளது. ஆகவே இதன் மூலம் வண்ணார்களும் வரி செலுத்தினார்கள் என்று அறிய முடிகிறது.

(ஈ) அரசர்கள் செய்த உதவிகள்

அரசர்கள் கோவில்கள், பள்ளிகள் போன்றவைகளுக்கு உதவி செய்தது போல வண்ணார்களுக்கும் உதவி செய்தார்கள் என்பது கல்வெட்டுச் செய்தி மூலம் தெரிகிறது.

> வண்ணத்தார்கள் இருவர்க்கு
> பேராற் பங்கு ஒன்றும்
> இத்தெருவில் ஈரங்கொல்லிகளுக்குப்
> பங்கு இரண்டும்

என்று தஞ்சைக் கல்வெட்டிலும்

> வண்ணார்க்குப் பொலியூட்டாக
> குடுத்த கழஞ்சு ஒன்று

என்று திருப்பத்தூர் கல்வெட்டிலும் வண்ணார்க்கு அரசு கொடுத்த உதவி பற்றிக் குறிப்புள்ளது.

4. பக்தி இயக்கத்தில் வண்ணார்

வண்ணார்கள் சாதாரணமாக வாழ்ந்திருந்தாலும் பக்தி மார்க்கத்திலும் சிறப்புற்று விளங்கினர் என்பதைப் புராண, சிற்பச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.[12] தாராசுரம் கோவிலில் உள்ள சிற்பம் திருக்குறிப்புத் தொண்டர்பற்றித் தெரிவிக்கின்றது. திருத்தொண்டத் தொகையிலும் இவரைப்பற்றிச் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது.[13] பக்தரின் ஆடையைச் சுத்தம் செய்து கொடுப்பதே இவரது தொண்டாக இருந்தது. இத்தொண்டை ஆண்டவன் சோதனை செய்து பின்பு அருள் புரிந்தார். கீழ்க்காணும் புராணப் பாடல் இவருடைய பக்தியையும், முக்தியையும் விரிவாக நமக்கு விளக்குகின்றது.

முன்னவரை நேர் நோக்கி முக்கண்ணர் மூவுலகும்
நன்னிலைமை யறிவித்தோம் நியுமினி நீடியநம்
மன்னுலகு பிரியாது வைகுவாயென வருளி
அந்நிலையே யெழுந்தருளி யணியேகாம் பரமணைந்தார்

தற்போதும் சில ஆலயங்களில் வண்ணார்கள் துவைத்த ஆடையை ஆண்டவனுக்கு அணிவிப்பது அவர்களின் பக்தியினை எடுத்துக் காட்டுகிறது.

குறிப்புகள்

1. கலித்தொகை.
2. திருத்தொண்டமாக்காதை.
3. நீலகேசி.
4. பாண்டியர் செப்பேடுகள் பத்து.
5. தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டு.
6. கன்னியாகுமரிக் கல்வெட்டு. தொகுதி. 1.
7. திருவிடைமருதூர் கல்வெட்டு. S. I. I. Vol. XIV.
8. S. I. I. Vol. I.
9. Travancore Archaeology Survey Vol. III.
10. 964, 630 of 1895.
11. Caste and Tribes of Southern India. Vol. VII, E. Thurston.
12. Annual Report of 1919—1920.
13. திருத்தொண்டர் மாக்கதை.

கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் வேட்டுவர் நிலை

புலவர் செ. இராசு

கொங்கும் கவுண்டர்களும்

மேலை நாட்டு நாகரிகத்தின் பற்றும், அறிவியலின் ஆக்கமும் இன்னும் முழுமையாக எட்டாதது கொங்கு நாட்டில் 'பட்டிக்காடு' எனப்படும் சிறு கிராமங்கள். அமைதியான அந்தக் கிராமங்களில் பண்டைக் கலைப் பண்பாடுகளைக் காத்து வரும் கிராமிய மக்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

பல்வேறு சாதியினராகப் பிரிந்து வாழும் அவர்களில் 'கவுண்டர்' எனப் பட்டம் பெற்ருேர் பலர். வேளாள கவுண்டர், வேட்டுவக் கவுண்டர், நரம்புக் கட்டிக் கவுண்டர், நாட்டாக் கவுண்டர், குறும்ப கவுண்டர், ஒக்கிலியக் கவுண்டர். அகமுடியக் கவுண்டர், தொண்டக் கவுண்டர், மொடவாண்டிக் கவுண்டர், படையாச்சிக் கவுண்டர், படைத்தலைக் கவுண்டர், செந்தலைக் கவுண்டர் ஆகியோர் ஆவர்.

கொங்கு நாட்டில் பெரும்பான்மையினராக வாழ்வோர் வேளாளக் கவுண்டர்களும் வேட்டுவக் கவுண்டர்களுமே! அவர்களில் வேட்டுவக் கவுண்டர்களே கொங்கு நாட்டில் முதலில் வாழ்ந்தவர்கள் என்பதும் வேளாளர்கள் வந்து குடியேறி வேட்டுவர்களை வென்று ஆதிக்கம் செலுத்தியவர்கள் என்பதும் ஆய்வாளர் அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். வேட்டுவரை வேடுவர், வேடர் எனவும் அழைப்பர்.

வேட்டுவர் தொன்மை

சுந்தர மூர்த்தி நாயனுர் கொங்குப் பகுதிபற்றிக் குறிப்பிடுவது வரலாற்று உண்மை வாய்ந்ததாகும்.

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாறலைக்குமிடம்

என்று திருமுருகன் பூண்டிப் பதிகத்திலும் 'வேட்டுவர் போற்றும் வெஞ்சமாங் கூடல்'' என்று வெஞ்சமாங்கூடல் பதிகத்திலும்

குறிப்பிடுகின்றார். 'கொங்க தேச ராசாக்கள்' என்னும் நூல் சோழ வம்சத்திலே விசயாடராயன் மகன் ஆதித்யவருமராயன், சோழ தேசத்துத் தஞ்சாவூரிலே பட்டங்கட்டிக் கொண்டுகொங்கு தேசத்து இராசா வேடர்களைச் செயம்பண்ணி ஆண்டதாகக் கூறும்.

வேளாளர் வரலாறு கூறும் 'அலகுமலைக் குறவஞ்சி' மூடுகர், செழுவர், வேட்டுவர், காவலியர், மாவலியர் ஆகியோர் கொங்கு நாட்டின் பழங்குடிகள் என்று கூறும். சோழன் பூர்வ பட்டயமும் வேட்டுவரில் காவிலுவர், மாவிலுவர், பூவிலுவர், ருண்ணுவர் ஆகியோர் கொங்கின் ஆதிக் குடிகள் என்று கூறும். வேளாளர் புராணமும்பிரமனால் படைக்கப்பட்ட ஆதிவம்சத்தினர் வேட்டுவர் என்று கூறும்.

வேட்டுவர், வேளாளர் போராட்டம் பற்றிக்கூறும் குன்றுடையான் கதை, கள்ளழகர் அம்மானை ஆகியவை வேட்டுவர் படையைக் 'கொங்கர் படை' என்றே அழைக்கும். சர்க்கரைக் கவுண்டர் வமிசாவழியும் வேட்டுவர் தலைவனைக் 'கொங்குராயன்' என்றே குறிப்பிடும். வேளாளர்கள் பத்தில் ஒன்று வேளாண்மை வரியாகச் செலுத்தவேண்டும் என்று கூறும். சோழன்பூர்வபட்டயம் வேட்டுவர் வனம் அழித்துப் பயிர் செய்தால் வரி இல்லை என்று கூறும் கருத்தும் நோக்கத் தக்கது.

வேளாளர் குடியேற்றம்

தொண்டை மண்டலம் சோழ மண்டலத்துட்பட்ட வேளாளர் பாடியில் அவ்வேளாளர் தோன்றினர் என்றும், செந்தலை, படைத்தலை, பால்சேரி நகர், தென்திசை நகர், திசைவூர் ஆகிய சோனாட்டு ஊர்களிலிருந்து கொங்கில் குடியேறினர் என்றும் சோழன் பூர்வபட்டயம் கூறும். குன்றுடையான் கதையும், கள்ள ழகர் அம்மானையும் சோழனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்த கோனாட் டில் வேளாளர்கள் வாழ்ந்தார்கள் என்றும் பின், மேனாட்டு வேட்டுவர் வாழ்ந்த பகுதிக்குக் குடியேறினர் என்றும் கூறும்.

குன்றுடையான் கதை வேளாளத் தலைவர்கள் பொன்னர், சங்கர் இருவரையும் ''கோனாட்டுக் கொற்றவனே குன்றுடையான் தன்மகனே'' என அழைக்கும். வேளாளர்கள் கோனாட்டுக் காராளர் என்றும் சோழனுக்கு மைத்துணக் கேண்மை உடையவர் என்றும் அந்நூல் கூறும்.

கோனாட்டுப் பகுதியில் ''குன்றப் பெருமாள், குன்றன் திருச்சிற்றம்பலமுடையான்'' என்ற. தலைவர்களையும் ''குன்று

ஆண்டார் கோயில், திருநலக் குன்றம்'' முதலிய ஊர்களையும் குன்று சூழ்நாடு, குன்று இருக்கை நாடு முதலிய நாடுகளையும் கல்வெட்டுக்களில் காண்கிறோம். எனவே இம்மரபிற்கேற்பவே கொங்கு வந்த கோனாட்டு வேளாளத் தலைவன் 'குன்றுடையான்' என்று பெயர் பெற்றான்.

அலகுமலைக் குறவஞ்சியும் வேளாளர் நாடு. 'கோனவள நாடு' என்றேகூறும். 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கொங்கு வேளாளப் பாளையக்காரர்கள் மெக்கென்சிக்கு எழுதி அளித்த ஆவணங்களில் தங்கள் முன்னோர் காஞ்சிபுரத்திலே வாழ்ந்தனர் என்றும், சோழநாடு வழியாகக் கொங்கில் குடியேறினர் என்றும் கூறுகின்றனர்.

தொண்டைநாடும், கோனாடும், சோழநாட்டுப் பகுதிகளாகவே விளங்கின. கொங்கு வெளாளருட் சிலர்,

காடையூர் பொருளந்தை வேளாளரில் சோழன் காடவூரான்
வாயறைக்கர் நாட்டுப் பல்லடத்து வேளாளன் சோழன் தன பாலன
கீரனூர் வெள்ளாளன் புகையரில் சோழன் புல்லையனேன்

என்று பெயர்கள் கொண்டிருந்தமை சோழநாட்டுத் தொடர்பை நினைவூட்டுகிறது.

இச்சான்றுகள் வேளாளர்கள் சோழநாட்டுக் குடியினரே என்பதை விளக்கும். இன்றும் கொங்கு வேளாளரைக் 'குடியானவர்' என்றே அழைப்பர். சோழர் நாட்டிலிருந்து கோனாடு வழியாகக் காவிரி, அமராவதி, நொய்யல், பவானி ஆகிய ஆற்றங்கரை வழியாகக் குடியேறியதால் வேளாளர் ''கன்கா குலத்தினர்'' என்று பெயர் பெற்றனர்.

அதிகார மாற்றம்

கொங்கு வேளாளரில் செங்கண்ண குலத்தினராகிய பூலூர்ப் பட்டக்காரர் பட்டயம் வேட்டுவர் காணிகளில் பாதி வேளாளருக்குக் கொடுக்கப்பட்டது என்று கூறும்.

வெள்ளோட்டுப் பட்டயம், புதுப்பாளையம். புங்கம்பாடி, கொம்மக்கோயில், ஞானிபாளையம், மயிலாடி, கனகபுரம் ஆகிய கிராமங்கள் வெள்ளை வேட்டுவன் அதிகாரத்தில் இருந்ததென்றும் முத்துக்கவுண்டன் என்ற சாத்தந்தை குல வேளாளன் அவ்வூர்களைக் காணியாகப் பெற்றான் என்றும் கூறும்.

> வெள்ளை வேட்டுவன் பெரியன கவுண்டனை வெட்டிப்போட்டு கால் நடைகளைக் கொள்ளை செய்து கொண்டு போய்விட்டார்கள் அவ்வேளையில் (பெரியண கவுண்டன் மகன்) முத்துக் கவுண்டன் வந்து தகப்பனை விசாரித்ததில் நடந்த சமாச்சாரத்தைச் சில ஜனங்கள் சொல்லக் கேள்விப்பட்டு ... சில தண்டு உதவியாக புதுப்பாளையம் வகையரு கிராமமும் கொள்ளையிட்டு மேற்படி வெள்ளை வேட்டுவனை தலை வெட்டு கிறதுக்கு ஆரம்பித்தபடியால் (வெள்ளை வேட்டுவன்) மிகவும் முத்துக் கவுண்டனை வணங்கி யெங்களை விட்டுவிடு ஜனம் பூரா உள்பட்ட மேற்படி ஆறு கிராமங்களையும் உங்களுக்கு குடுத்து விடுகிறேமென்று சொன்னபடியால் ஆத்து மணலும் ஆவிரம் பூவும் உள்ள மட்டும் காணியாட்சி பெற்றான்

என்று கூறும்.

தென்னிலை வேட்டுவப் பட்டக்காரர் வீட்டில் கிடைத்த பட்டயம் விளக்கமாகச் சில செய்திகளைக் கூறுகிறது. கொங்கில் ''உக்கியரை வெட்டி முடுக்கின படியினாலே'' வேட்டுவர் பொன் வாங்கிக்கொண்டு பல நாடுகளில் காணி உரிமையை வேளாளருக்கு கொடுத்தனராம்.

> ''வேளாள கவுண்டர்க்கு மாகாணி பூமி எல்லை கொல்லை சம்மதிச்சு கிராமத்திலே இமருமிராசு பத்திக்கொண்டது. வேளான் கையிலே பொன் வாங்கிக்கொண்டு இராசமுப்பாடு கோயில் முப்பாடு அளித்தனர். வேட்டுவர்கள் அளித்துவந்த படியே முப்பாட்டுக்காரன், பண்டாரம், சங்கிடுபறையன், காவல்காரன் ஆகியோர்க்கு பொன்னும் நெல்லும் கொடுக்க''

ஆணையிட்டனர். இப்பட்டயங்கள் உரிமை மாற்றம் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

வேட்டுவர் நிலை

குடியேறிய வேளாளர்கட்கு உரிமைகள் பலவற்றை அளித்த வேட்டுவர் கொங்கு நாட்டில் வேளாளர் போலவே தொடர்ந்து சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்தனர். வென்ற வேளாளரும் வேட்டுவரை முன் போலவே பெருவாழ்வு வாழ அனுமதித்தனர். கொங்கு நாட்டில் வேளாளர்கள் ஆதிக்கம் செலுத்தியதற்குப் பின் வேட்டுவர் நிலை என்ன என்பதைக் கல்வெட்டு, செப்பேடு, இலக்கியம் கொண்டு ஆராயமுற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேட்டுவத் தலைவர்களும் குடிகளும்

வேளாளர்களைப் போலவே வேட்டுவர்கட்கும், பட்டக்காரர்கள் உள்ளனர். திங்களூர், தென்னிலை, சித்தப்பட்டி, பிச்சம்பட்டி, நகமரத்துப்பட்டி, பிச்சம்பட்டி, இனுங்கூர் ஆகிய ஊர்களில் வேட்டுவப் பட்டக்காரர்கள் இருக்கின்றனர். வேளாளர்களுக்குக் கூட்டங்கள் இருப்பதைப் போலவே வேட்டுவர்க்குள்ளும் பல பிரிவுகள் இருக்கின்றன.

> ''அல்லாள வேட்டுவர், அந்துவ வேட்டுவர், உரிமைப்படை வேட்டுவர், ஒசர வேட்டுவர், கரடி வேட்டுவர், கரைய வேட்டுவர், கண்ணுடி வேட்டுவர், காச வேட்டுவர், காரி வேட்டுவர், காட்டு வேட்டுவர், கிழங்க வேட்டுவர், கிரை வேட்டுவர், குடுமி வேட்டுவர், குருண்டி வேட்டுவர், குறுங்காடை வேட்டுவர், சொல்லி வேட்டுவர், சாந்தப்படை வேட்டுவர், சிறுத்தலை வேட்டுவர், சுண்ட வேட்டுவர், சொர்ண வேட்டுவர், தளும்பு வேட்டுவர், நச்சுழி வேட்டுவர், நங்கவேட்டுவர், நஞ்சை வேட்டுவர், பதரை வேட்டுவர், பனைய வேட்டுவர், பாசறை வேட்டுவர், புல்லை வேட்டுவர், பூச்சந்தை வேட்டுவர், பூலுவ வேட்டுவர், பூவாணி வேட்டுவர், மணிய வேட்டுவர், மலைய வேட்டுவர் மாச்சாடி வேட்டுவர், மாந்தப்படை வேட்டுவர், முளை வேட்டுவர், முன்னை வேட்டுவர், மூல வேட்டுவர், மோகாளி வேட்டுவர், வராக வேட்டுவர், வடுக வேட்டுவர், வன்னி வேட்டுவர், வெங்கச்சி வேட்டுவர், வெலைய வேட்டுவர், வேம்ப வேட்டுவர்''

ஆகிய வேட்டுவக் குடியினர் கொங்கு நாட்டில் உள்ளனர்.

ஆண்ட பரம்பரை

கொங்கு நாட்டுக்குரிய வேட்டுவப் பெருமக்கள் பிற்காலம் வரை அதிகாரம் செலுத்தியிருக்கின்றனர். வடபரிசார நாட்டுக் கோசணம் காணியாளர் முன்னை வேட்டுவர் என்றும், சாந்தப்படை வேட்டுவர், கரைய வேட்டுவர், பூந்துறை நாட்டு அறச்சலூர்க் காணியாளர் என்றும், சிற்றூர் படலோடு குறிச்சி, அஞ்ஞாற்று மங்கலம் மழபாடி வடகரை நாட்டில் இருப்புலி, தென்னிலை ஆகிய ஊர்களில் வெங்கச்சி வேட்டுவர் காணியாளர் என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

பள்ளக்குழி, புத்தூர், முத்தப்பனூர், தும்பங்குறிச்சி, சௌதாபுரம், பிரிதி, கழனூர், இளநகரி, காளிபட்டி, பழமங்கலம், குலவிளக்கு ஆகிய ஊர்களில் காணியர்களாக வேட்டுவரை மட்டுமே நூல்கள் குறிக்கின்றன.

பன்றி நாட்டுக் குளப்பாடி, கிழ்க்கரைப் பூந்துறை, நாட்டுப் பருத்திப் பள்ளி, மேல்கரை அரைய நாட்டுத் துக்காச்சி போன்ற ஊர்களில் வேட்டுவர்களே ஊராளியாக இருந்தனர். காலிங்கராயன் கைபீதும், அணைக்கட்டின பட்டயமும் வெள்ளை வேட்டுவனே வெள் ளோட்டுப் பாளையக்காரன் என்று கூறும்.

போசள மன்னன் வீரவல்லாளன் படைத்தலைவனாக இருந்த வன், கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவராயன். அவன் அறச் சலூர்க் காணியாளன். இதனைச் சதக நூல்,

தொல்லுல கத்தினில் துட்டரை வெட்டித் துணித்ததனால்
சொல்லிய போசள வீர புசபலன் துகளிருசீர்
பல்லவ ராயன் எனப்பட்டம் ஈயப் படை செலுத்த
வல்லவன் வேட்டுவச் செய்யானும் வாழ்கொங்கு மண்டலமே

என்று கூறும். இதனை அறச்சலூர்ப் புற்றிடங் கொண்டீசர் கோயில் கல்வெட்டும் உறுதிப்படுத்தும்.

மாடுபிடிச் சண்டைகள்

கொங்கு நாட்டில் பழங்காலம் தொட்டே கால்நடை வளம் மிகுதி. வேளாளர்கள் வேளாண்மை செய்து கொண்டு கால் நடைகளைப் பெருக்கி வாழும்போது வேளாளர், வேட்டுவர் பூசல் ஏற் பட்டு வேளாளர் கால்நடைகளை வேட்டுவர் கவர்ந்திருக்கின்ற னர். வேளாளர் தம் ஆநிரைகளை மீட்டுமிருக்கின்றனர். இது நமக்கு வெட்சி, கரந்தைத் திணைகளை நினைவூட்டுகிறது.

வெள்ளோட்டில் திருமலை நாயக்கர் காலத்தில் வேளாளர் கால் நடைகளை வேட்டுவர் ஓட்டிக்கொண்டு போய் விட்டனர். வேளாளர் திருமலை நாயக்கரின் மேல் அதிகாரிகளாகிய நரசிம்ம ராஜா, சிவக்கு ராஜா ஆகியோரிடம் 'பிராது' செய்கின்றனர். இரு வரும் 'கேள்வி செய்யாமல் விட்டுவிட்டபடியால்' திருமலை நாயக் கனே தீர்த்து வைக்கிறான். வெள்ளாட்டுப் பட்டயம் இதனைக் கூறுகிறது.

மணலூர் நாட்டில் தென்னிலையில் வெங்கச்சி வேட்டுவரில் கொங்குராயன் மாந்தபுரத்திலே வெட்டிக்குத்திச் சில்லறை பண்ணி ஆடு மாடு பிடிச்சுக் கொண்டு போனபடியால் மன்றாடியார் படை யெடுத்ததாக வம்சாவளி கூறும். இது நஞ்சராயர் காலம்.

தருமபுரிப் பட்டயமும் இவ்வாறு நடைபெற்ற வழக்கு ஒன்றைக் கூறுகிறது.

> ''எங்கள் தலத்துக்கு வந்தபடியால் உங்கள் வீட்டுக்கு ரண்டு பணம் வர்த்தினை கொடுக்க வேண்டுமென்று (வேட்டுவர்கள்) கேட்டார்கள். (வேளாளர்கள்) நாங்கள் குடுக்குறதில்லை என்றார்கள். வேட்டுவர்கள் நாங்கள் விடுகிறதில்லை என்றார்கள். இவர்களுக்கும் அவர்களுக்கும் சச்சரவுபட்டு ஆடு மாட்டைக் கொள்ளையோட்டினார்கள். இவர்கள் அவர்களில் பத்து வேடரை வெட்டிக் கொள்ளையைத் திருப்பினர்.''

செகதேவராயன் வழக்குத் தீர்த்ததாகப் பட்டயம் கூறும்.

நடுகல் வழிபாடு

வேட்டுவர்கள் வீரஞ்செறிந்த மரபினர். போர் அவர்கட்கு விளையாட்டு. ''வேட்டுவர் படை வெட்ட வெட்டத் தழையும்'' என்பது கொங்கு நாட்டுப் பழமொழி. மன்றாடியார் மரபுப் பாடல் ஒன்று ''மட்டுக்கடங்காத தென்னிலையின் வேட்டுவர்கள்'' என்று கூறும். வீர மரணம் எய்திய பல வேட்டுவ வீரர்கட்கு நடுகல் எடுத்தனர்.

தலைய நல்லூரில் கிழங்க வேட்டுவன் கிழங்கனுக்கும் பிற வேட்டுவத் தலைவர்கட்கும் நடுகற்கள் உள்ளன. துக்காச்சியில் நொய்யலாற்றின் வட கரையில் பூர்வ தேசமும் கங்கையும் கடவமும் கொண்ட இராசேந்திர சோழன் காலத்து நடுகல் ஒன்றுண்டு. ஊராளி வேட்டுவன் அழகன் காளிக்காக அது எடுக்கப்பட்டது.

பழமங்காலத்தில் கரைய வேட்டுவன் சொக்கனேந்தன் நடுகல் உள்ளது. அழகிய வெண்பா வடிவில் உள்ளது கல்வெட்டு.

> ''வாய்த்த புகழ் மங்கலத்து வந்தெதிர்ந்த மாற்றலரைச்
> சாய்த்தமருள் வென்ற சயம்பெருக-சீர்த்த புகழ்
> நீக்குவனம் கற்பொறிக்கப்பட்டான் கரைய குலச்
> சொக்கலேந்த லேவுலகில் காண்.
> இக்கற்பொறி ரக்ஷிப்பான் பாதம் என் தலை மேலே''

இது கல்வெட்டாகும். இன்றும் அவைகளை வேட்டுவர் வழிபாடு செய்து வருகின்றனர். அறச்சலூர், ஊத்துக்குளி, கணியூர், சேவூர், சென்னியங்கிரிவலசு, ஈங்கூர், ஜம்பை, ஆப்பக்குடல் போன்ற இடங்களில் உள்ள நடுகற்களில் எழுத்து இல்லாவிடினும் அப்பகுதி மக்கள் 'வேடன் கல்,' 'வேட்டுவச்சாமி' என்றே அழைக்கின்றனர்.

கணவனுடன் மரணமடைந்த பெண்களுக்கும் வேட்டுவர்கள் ''வீரமாத்தி'' கோயில் எடுத்து வழிபடுகின்றனர். தென்னிலைக் கோட்டையில் வேட்டுவத் தலைவன் கொங்குராயனை அழகன்

உத்தமக் காமிண்டன் சிரமளித்து வரும்போது கொங்குராயன் பெண்டுகள் ''அவனை மறிச்சுக்கொண்டு யெங்களையும் சாக வரங் குடுத்துப் போகவென்று விரமாஸ்திகளாக வந்து சொன்னபடி யினாலே அலர் பனையும் ஒடனே சாகச் செய்விச்சான்'' என்று பட்டயம் கூறும்.

குளம் தொட்டு வளம் பெருக்குதல்

கொங்கு நாட்டு வளத்தைப் பெருக்குவதற்காக வேட்டுவர்கள் பல்வேறு பணிகளைச் செய்திருக்கின்றனர்.

வீர நஞ்சண்ண உடையார் காலத்தில் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு மோட மங்கலத்துப் பூச்சந்தை வேட்டுவரில் பெரிய பெருமாள் முத்தாண்டான் வடபரிசார நாட்டில் நவியரயான கப்பலன் கிடாரன் என்ற ஊரில் குளம் ஒன்றைத் தன் உபயமாக வெட்டினான்.

ஏழுகரை நாட்டில் பெரிய விலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியன் 'அக்கைசாலை கங்கை' என்ற பெயரில் குளம் ஒன்றை அமைத்தான்.

காவிரி கொங்கு நாட்டு வழியாகப் பாய்ந்து செல்கிறது. ஆனால் காவிரியைக் கொங்கு நாட்டுக்கு முதலில் பயன்படுமாறு செய்தவன் வடகரை ஆற்றூரில் வாழ்ந்த அல்லாள வேட்டுவரில் இம்முடித் திருமலை இளையான் என்பவனே. பரமத்தி அருகே அவன் காவிரி யிலிருந்து வெட்டிய கால்வாய் இன்றும் பெரிதும் பயன்படுகிறது. இதனைக் கொங்கு மண்டல சதகம்,

> வடமுக நின்று வருகா விரியின் வளத்தையென்றும்
> திடமுறு கொங்கிலும் பாசன மாகச் செலப்பிரித்த
> அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கம் அமைந்துவளர்
> வடகரை யாற்றூர் திகழ்வது வுங்கொங்கு மண்டலமே!

என்று பாடுகிறது, திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையும்

> மூவருக்கும் அகத்தியமா முனிவருக்கும் அரசிருந்த முன்னை யோர்க்கும்
> தேவருக்கும் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித் திறை கொண்டாயே!
> பாவிருக்கு முரமாயன் கடலடைத்தான் அவன் வேடம் புனைந்தவாறே
> யாவருக்கும் இளையானே அல்லாள திருமலைமா ஈகையோனே

என்று புகழ்கிறது.

சைவம் வளர்த்த சால்பு

வேட்டுவர்கள் தங்களைக் கண்ணப்ப நாயனூர் மரபினர் என்று கூறிக் கொள்கின்றனர். சிவப் பணிகளில் சிறந்து விளங்கினர். வெஞ்சமாங்கூடல் கொங்கேழு சிவாலயத்தில் ஒன்று. அங்கு வேட்டுவர் வணங்கியதாகச் சுந்தரர் கூறுவார்.

வீரவல்லாளன் காலத்தில் அறச்சலூர்ச் சிவன் கோயிலுக்குத் திருநிலைகாலும் படியும் செய்வித்துப் பெருந்துறை வடிவேல் ஐயனைக் கொண்டு குடமுழுக்காட்டிப் பூசை நடைபெற்று வரவும் ஏற்பாடு செய்தவன் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவராயன். ஈங்கூர் வேட்டுவரில் போத்தன் செய்யானுன குலோத்துங்கப் பல்ல வரையன் ஐயனுரைப் பிரதிட்டை செய்தான்.

பாரியூர்ச் சிவாலயத்திற்கு வீர ராசேந்திரன் காலத்தில் பனைய வேட்டுவரில் பொன்னப்பனையன் திருநிலைகால் செய்வித்தான். அவன் காலத்திலேயே பருத்திப்பள்ளியில் நங்கவேட்டுவரில் அதிய மான் நடுவில் நங்கன் சுற்றளியைப் புதுக்கினுன்.

வீரபாண்டியன் காலத்தில் வெங்கம்பூர்ச் சிவன் கோயிலுக்குப் புல்லை வேட்டுவரில் வலங்கை வாழவந்தானுன கந்தரபாண்டிய வீர சர்காதன் வெங்கம்பூரைத் தானமாக அளித்தான். கொடிவேரி முன்னை ஆளுடையார்க்குச் சந்தியா தீபத்தைச் சிறுத்தலை வேட்டு வரில் இருங்கோளன் மகன் தம்முன் வைத்தான்.

கி. பி. 1649இல் வடகரையாற்றூர் அல்லாள வேட்டுவன், திருமலை இளையான் திருச்செங்கோட்டில் தென்கோபுரத் திருப்பணி யும் செய்து, வாவி மண்டபம், நந்தவனம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவை உண்டாக்கினுன். மோளக்கவுண்டம்பாளையம் காட்டு வேட்டுவர், சத்தியப்படி என்னும் 60ஆம் படி மண்டபம் எடுத்தனர். பூசை நடந்துவர ஏற்பாடுகளும் செய்தனர்.

வெங்கச்சி வேட்டுவர் சங்ககிரி வட்டத்தில் மருதூர் காளி யம்மன் கோயிலைக் கட்டினர். இன்று அக்கோயில் மதுர காளியம் மனுக வழங்கி வருவதைப் பொறியாளர் கொடுமுடி சண்முகம் கண்டுபிடித்துள்ளார்.

'திங்களூர் நொண்டி நாடகம்' என்பது கொங்கு நாட்டுப் பிரபந்தம். அதன் ஆசிரியர் அவிநாசிப் புலவர். அவர் தம் நூலில் திங்களூர் வேட்டுவப் பட்டக்காரர் பற்றிக் குறிப்பிடுகின்றூர்.

பாருலகில் ஆசுகவி நொண்டி-தன்னைப்
படித்து நடிக்கத்யாகம் கொடுத்தாரைச் சொல்லுகிறேன்
மாரையன் மடப்பதியில் சென்று-அப்பிச்சி
மாரையனைப் போற்றியேவித் த ரமாகப் படித்தேன்.

கொற்றவன் குருகுல வசிரன்—நல்ல
கோகனகம் போலே உற்று வாகைமாலை மார்பன்
பக்தியுள்ள சிவபூசை வேடன்—நல்ல
பார்த்திபர்கள் மெய்க்கச்சிவ ராத்தி உண்டு பண்ணினேன்

தின்றுருசி யானகரி தன்னை—சிவனே
திண்ணப்பா எனக்கொடுத்த கண்ணப்பவங் கிஷத்தான்
அன்றுலகில் புகழ்பெற்ற தூயன்—என்னை
ஆண்டமுத்து ராயனவன் வேண்டியபொன் கொடுத்தான்

என்பன நொண்டிச் சிந்துப் பகுதியாகும்.

வேற்றுமைக்குள் ஒற்றுமை

கொங்கு நாட்டில் நன்மை, தீமைச் சடங்குகளுக்கு இன்றியமையாமல் வேண்டப்படுகின்ற வண்ணார், நாவிதர்களைக்கூட வேட்டுவர்களுக்கும், வேளாளர்களுக்கும் தனித்தனியாகப் பிரித்து வைத்திருக்கின்ற நிலையில் கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் வேட்டுவர்களும் வேளாளர்களும் ஒன்றுபட்டிருந்த பல நிகழ்ச்சிகள் உண்டு.

தும்பங்குறிச்சி, பட்டாலி, தோக்கவாடி, பருத்திப்பள்ளி போன்ற பல ஊர்களின் காணியாளராக வேட்டுவர், வேளாளர் இருவரும் குறிக்கப்படுகின்றனர். வேளாளரில் கண்ணன் கூட்டத்தாருக்குரிய மிகப் பெரிய காணி தெய்வமாகிய கொளாநல்லி பொன்குழலியம்மன் கோயிலில் இன்றும் வேட்டுவருக்கே முதல் உரிமை அளிக்கப்படுகிறது. காகம் கிராமத்திலும் முதல் உரிமையை வேளாளர் கோயிலில் வேட்டுவர் பெறுகின்றனர். முப்பாடு என்று அந்த உரிமையை அழைக்கின்றனர். அங்கு வேளாளர் பெறுவது பிற்பாடு என வழங்கப் பெறுகிறது.

சகவீர நஞ்சராய உடையார் காலத்தில் அந்தியூரில் பொன்னுங் கட்டியார் வேங்கடநாதர் என்பவர் இறந்துவிடுகிறார் (கல்வெட்டு: யோகம் ஆனார்) அவருக்குச் சமாதி அமைக்க ஊர்ப் பொதுமக்களுடன் பாசறை வேட்டுவரில் குறும்பன் என்பவனும் உதவி செய்தான்.

அச்சுதராயர் காலத்தில் ஊஞ்சலூர் ஊர் உரிமையை ஏழு கரையாகப் பிரித்தனர். நச்சுழி வேட்டுவர் சிறுவ்வர், குறுங்காடை வேட்டுவரில் கின்னன் ஆகியோருடன் வேளாளர் தனஞ் செயரில்

தாயாண்டார் என்பவரும் உடன் உரிமையாளராகக் குறிக்கப் பெறுகிறர். அங்கு வேட்டுவரும் வேளாளரும் சேர்ந்தே மானியம் விட்டனர்; கோயில் திருப்பணி செய்தனர் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

பூந்துறை நாட்டுச் சபையில் பெரும்பாலும் வேளாளர்களே உறுப்பினராக இருந்தனர். குல விளக்கின் பிரதிநிதியாகப் பாண்டிய வேட்டுவரில் வீரன் புலிக்குத்தி தேவன் என்பவன் இருந்தான். அறச்சலூரிலிருந்து பல சமயம் பூந்துறை நாட்டுச் சபையில் முனையடுவார் போன்ற வேட்டுவப் பெருமக்கள் இருந்தனர். வட பரிசார நாட்டுச் சபையில் ''வேளான் நாட்டாரும் பூலுவ நாட்டாரும்'' இருந்ததாகச் சான்றுகள் கூறுகின்றன. ஒற்றுமையாகப் பல நற்காரியங்களைச் செய்திருக்கின்றனர்.

குன்றுடையான் மக்கள் பொன்னர், சங்கர் இருவருமே வீரமலைச் சார்பிலிருந்து வேட்டுவர்களை எதிர்த்துப் போர் தொடங்கிய வேளாளர் குலத்தலைவர்கள். அநேகமாக எல்லா வேளாளர் கூட்டத்தினரும் அண்ணன்மார் என்ற பெயரில் அவர்களை வணங்குகின்றனர். அது முன்னோர் வழிபாடு, கம்பளத்து நாயக்கர், உப்பிலியர், பண்டாரம், நாடார் ஆகியோர் பூசை செய்கின்றனர்.

ஆனல் பருத்திப்பள்ளி, மருங்கல்பட்டி,முறங்கம், கத்திமங்கலம், எழுமாத்தூர் போன்ற ஊர்களில் வேளாளத் தலைவர்களாகிய அண்ணன்மார் கோயிலுக்கு வேட்டுவர்களே இன்றும் பூசை செய்கின்றனர். வெள்ளோட்டில் உள்ள அண்ணன்மார் கோயிலுக்குப் பல ஊர்களிலிருந்தும் வேட்டுவர் வருகின்றனர். திருப்பணி செய்கின்றனர். இரவு நேரத்தில் மட்டும் தங்குவதில்லை.

அப்பிச்சிமார் கோயில் வேட்டுவத் தலைவர்களுக்காகவே ஏற்பட்ட கோயில். அங்குள்ள அப்பிச்சிமார், மாரய்யன், நல்லாயுத மாரன், ஈட்டிமாரன், கத்திமாரன் ஆகிய வேட்டுவத் தலைவர்களை வேளாளர்கள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

இராசாக் கோயில் என்ற மூத்தோர் வழிபாட்டுக் கோயில் வேட்டுவர், வேளாளர் இருவருக்குமுண்டு. வேளாளர் இராசாக் கோயிலில் மேலாக வேளாளத் தலைவர்களையும், கீழ்நிலையில் அல்லது வெளியே வேட்டுவத் தலைவர்களையும்வைத்து வழிபடுகின்றனர். வேட்டுவர் இராசாக் கோயிலில் தங்கள் தலைவர்களை மேல் நிலையிலும் வேளாளத் தலைவர்களைக் கீழ் நிலையிலும் வைத்து வழிபடுகின்றனர். இரு சாராரும் எல்லோரையுமே வணங்கி வருகின்றனர். மசிரியாத்தாள் எனப்படும் துலுக்க நாச்சியாரையும்

வீரமலைச் சாம்பன் எனப்படும் பறையர் தலைவனையும் இருவரும் வணங்கி வருகின்றனர்.

அந்துவன், கீரை, காடை, மணியன், பனையன், பாண்டியன், பூச்சந்தை, வெலையன், காரி, மூலன் முதலிய பெயர்களில் வேட்டுவர் வேளாளர் இரு சாராருக்கும் குடிப்பிரிவுகள் இருக்கின்றன. இவை வியப்புக்குரிய ஒற்றுமைச் செய்திகள் ஆகும்.

வேட்டுவர்கள் அண்ணன்மார் கதையைக் காதிலேயே கேட்கக் கூடாது என்பர். ஊரில் அண்ணன்மார் கதை நடந்தால் வேட்டுவர்கள் காது கேட்காத தூரத்துக்குப் போய்விடுவார்களாம். வேட்டுவர் வேளாளர் பிரிந்து இரு பக்கத்திலும் பல இனத்தாரைச் சேர்த்துக்கொண்டு போராடியது நேற்றைய பழங்கதை. இன்று கொங்கு நாட்டின் ஒளிமயமான எதிர்கால வாழ்வுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் இரு பெரும் சமுதாயத்தினரும் இணைந்தே பணிபுரிந்துவருகின்றனர். அவ்வொற்றுமை ஓங்குக!

குறிப்புகள்

சுந்தரர் தேவாரம்.
கள்ளழகர் அம்மானை.
புதுக்கோட்டை கல்வெட்டுக்கள்.
அலகுமலைக் குறவஞ்சி—பழனிசாமிப்புலவர் பதிப்பு.
கொங்குதேச ராசாக்கள்—கோவைகிழார் பதிப்பு.
சோழன் பூர்வ பட்டயம்—கோவை கிழார் பதிப்பு.
கொங்கு மண்டல சதகம்—கார்மேகக் கவிஞர்.
கொங்கு நாடு—தி. அ. முத்துசாமி கோனார்.
திங்களூர் நொண்டி—அவிநாசிப் புலவர்.
திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை.
கொங்கு வேளாளர்—எஸ். ஏ. ஆர். சின்னசாமிக் கவுண்டர்.
கொங்கு வேளாளர் வரலாறு—டி. கே. சக்தி தேவி.
குன்றுடையான் கதை—சக்திக்கனல் பதிப்பு.
கொங்கு—திங்களிதழ்.
தேனோலை

பட்டயங்கள் :

— தருமபுரிப் பட்டயம்.
— வேட்டுவர்ப் பூர்வ பட்டயம்.
— ஊசிப் பாளையம் செப்பேடு.
— வெள்ளோட்டுப் பட்டயம்.
— காலிங்கராயன் கைபீது.
— அணை கட்டின பட்டயம்.
— சர்க்கரைக் கவுண்டர் வமிசாவளி.
— புதூர்ப்பட்டயக்காரர் பட்டயம்,

கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள்.

உவச்சர்

சௌந்திர பாண்டியன்

பிடாரி, மாரியம்மன், காளியம்மன் போன்ற கிராம தேவதைகளின் கோயில்களில் பூஜை செய்யும் வகுப்பினர் உவச்சர்கள் எனப்பட்டனர். இவர்களுள் பெரும்பான்மையினர் சைவர்களே. ஒரு சிலரே வைணவ சமயத்தினர். இவர்களுள் சிலர் கோயிலினுள் இருக்கும்போது புரிநூல் அணிந்திருப்பதும் உண்டு. உடுக்கையும் சிலம்பும் இவர்களின் சிறப்பான அம்சங்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் சில உவச்சர்கள் தேவதாசிகளுக்கு நடனம் கற்றுத் தரும் நட்டுவர்களாகவும் விளங்குகின்றனர்.[1]

கிராம தேவதைகளைத் தம் உடுக்கை ஒலியின் மூலமும் அவர்களைப் பாடி ஏத்தும் பாட்டுகள் மூலமும் வழிபடுவதால் அவர்கள் 'ஓசை' என்ற சொல்லடியாகப் பிறந்த உவச்சர் என்ற பெயர் பெற்றனர். ஓச்சன் என்ற பெயர் உவச்சன் என்ற சொல்லில் இருந்து வந்ததே.[2] இச்சொல் பழைய கல்வெட்டுக்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது. அறிஞர் வின்ஸ்லோவின் கருத்துப்படி கோயிலில் பணிபுரியும் மேளம் வாசிக்கும் ஒரு குலத்தினர்இவர்கள். முகமதியர்களின் ஒரு பிரிவான 'ஜோனகர்' என்ற இனத்தவரும், இச்சொல்லால் இரு கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றனர். வின்ஸ்லோ தமது அகராதியில் (Comprehensive Tamil and English Dictionary) இவ்விரு கருத்துக்களையுமே கொடுத்துள்ளார்.[3]

பணிப் பாங்கு

உவச்சு என்றாலே அடித்தல் என்று பொருள். எனவே உவச்சர் பழங்காலந் தொட்டே, மத்தளம் அடிக்கும் பணி செய்து கொண்டிருந்திருக்கின்றனர். இவர்களுடைய பணி 1. கோயிலில் மத்தளம் வாசித்தல்; 2. தளிச்சேரிப் பெண்டுகளுக்கு நடனம் கற்றுத்தரல்; 3. கிணற்றிலிருந்து வழிபாட்டுக்கு நீரெடுத்தல் 4. தேவையான போது சல்லியநாயன் என்ற பெயர் கொண்ட மருத்துவராகப் பணி செய்தல். 5. வழிபாட்டுப் பணி செய்தல்.

குறிப்பிடத்தக்க சில உவச்சர்கள்

பழைய கல்வெட்டுக்களில் சில உவச்சர்களின் பெயர்களைக் காண்கிறோம். 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, ஒரு பழைய வட்டெழுத்துக் கல்வெட்டு 'ஸ்ரீ வள்ளுவன் பூவனவன்' என்று குறிப்பிடுகிறது.[4] இவன் தினந்தோறும் ஆறு பேரை நியமனம் செய்து கோயிற்பணி செய்த செய்தி குறிப்பிடப்படுகிறது. இக் கல்வெட்டின் மூலம், ஒரு உவச்சனுக்கு அறுவரை நியமனம் செய்யும் அளவுக்கு கோயில் நிர்வாகத்தினர் உரிமை அளித்திருந் தமை தெரிகிறது. கோயிற் பணிகளைத் தவிர வேறுசில உரிமை களும் இவர்களுக்குத் தரப்பட்டிருந்ததையும் சில கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

முதல் இராஜராஜனின் 29—ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று[5] (கி. பி. 1014) 'உவைச்சுக்கு உள்படும் நித்த விநோத வள நாட்டு நல்லூர் நாட்டு நல்லூராகிய பஞ்சவன் மஹாதேவி சதுர் வேதி மங்கலத்து ஐயன் பொய்யிலிக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்குப் கோயிற் பங்கு அரையாகப் பங்கு ஐஞ்சரையும்' என்று கூறுகிறது. இங்கு 'ஐயன் பொய்யிலி' என்ற உவச்சன் கோயிலில் தனக்கு உரிய பங்கு பெற்றது தெரிகிறது.

இன்னும், தாமோதிரன் செட்டி, சாத்தன் அம்பலம், சத்தி கிரண கோலான், உதைய மார்த்தாண்டன், அரையனரையன் ஆகிய உவச்சர்களின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் 'சகடை' என்னும் இசைக் கருவியைக் கொட்டியதாகக் குறிக் கப்படுகிறது.[6] சான்றாக.

'மேற்படி சகடை கொட்டிகளில் மோதிரன் செட்டிக்குத் தன்னேற்றம் ஆள் பதினெழுவர்க்கும் கோயிற்பங்கு அரையாகப் பங்கு அஞ்சரையும்' என்றும், ஸ்ரீபலி கொட்டிய செய்தியை, மூலவர்க்கு ஸ்ரீபலி கொட்டு முவச்சன் அரையனரையனுக்கும் மக்களுக்கும் வைத்த ஜீவிதம் ஆண்டுவரை மரபிற் கழஞ்சும் மூன்றொக்கு நிலமும் மனையுந் தோட்டமும்' என்றும் குறிப்பிடு கிறது.

ஊதியம்

பெரும்பாலும், எல்லோரையும் போல ஊதியம் நிலமாகவும், மனையாகவும், உணவாகவும், நெல்லாகவும், பொருளாகவும் இவர்களுக்கும் அளிக்கப்பட்டது.

உவச்சக்காணி:- கோயிலில் உவச்சப் பணி புரிவோருக்கு அளிக்கப்படும் நிலங்கள் இறையிலி செய்யப்பட்டிருந்தன. இவை

'உவச்சக்காணி' 'உவச்சவிருந்தி' எனப்பட்டன. மன்னார் கோயில் கல்வெட்டு ஒன்று[7] அங்குள்ள இராஜேந்திர சோழ விண்ணகர் ஆழ்வார் கோயிலுக்கு உவச்சப் பணி புரிவோருக்கு வீட்டுமனை அளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. நாள்தோறும் கொடுக்கப் படும் பொருட்களுள் உவச்சனுக்கு இரு நாழி நெல் கொடுக்குமாறு குறிக்கப்பட்டிருப்பதையும் நாகர்கோயில் கல்வெட்டு ஒன்று காட்டு கிறது.[8] மூன்றும் நந்தி வர்மனின் (8-ஆம் நூற்றாண்டு) திருவள்ளூர்க் கல்வெட்டு[9] ஸ்ரீபலி கொட்டுவானுக்கு 500 காடி நெல் அளிக்கப் பட்ட செய்தியைத் தருகிறது.

உவச்சவரி

தம் வருவாயினின்று, இவர்கள் வரி செலுத்தவும் வேண்டி யிருந்தது. அது 'உவச்சவரி' எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகிறது. கி. பி. 1258-இல் ஒன்றும், (சகம் 1180), கி. பி. 1406 (சகம். 1328)-இல் ஒன்றும் ஆகிய இரு கல்வெட்டுகளும் உவச்ச வரியினைச் சுட்டுகின்றன.[10]

நெடும்புறை

காசாக்குடிச் செப்பேட்டில் 'நெடும்புறை' என்றொரு சொல் வருகின்றது, அதனை திரு ஹுல்ஷ் அவர்கள், பொருள் விளங்காமை காரணமாக அப்படியே விட்டிருக்கிறார். ஆனால் திரு. கே. வி. எஸ் ஐயர் அவர்கள், இதனை மத்தளம் வாசிப்போருக்கான வரி என்று விவரிக்கிறார்.[11] இது சரியாக இருக்குமானால், இது உவச்சர்களின் பணிக்குரிய வரியென்று (Professional Tax) கூறலாம்.

கத்தலூரில் உள்ள ஒரு கல்வெட்டு, எண்ணெய் வணிகர்களின் சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளில் மத்தளம் வாசிக்கக் கூடாது என்று குறிக்கிறது.இங்கும் உவச்சர்கள் மத்தளம் கொட்டுவதையே குறிப்பிடுவதாகக் கொள்ளல் வேண்டும்.[12]

வீரபாண்டியனின் (13-ஆம் நூற்றாண்டு) ஒரு கல்வெட்டு:

'சோழர் தலைகொண்ட வீரபாண்டியன் இத்தளி உவச்சன் ஸ்ரீவள்ளுவன் பூவணவன் நியதம் 6 ஆளிட்டு உவச்சப்பணி செய்க'[13] என்று குறிப்பிடுகிறது.

இதிலிருந்து, ஆளை நியமனம் செய்து பணிசெய்யும் நிலையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது என்பது தெரிகிறது, இதே போல மற்றொரு 9-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றிலும் திரு. ஸ்டுவர்டு அவர்கள் இச்செய்தி இருப்பதாகத் தம் நூலில் குறிப்பிடுகிறார்.[14]

உவச்சர் தம் கருவிகள்

சிதம்பரம், தாராசுரம், தஞ்சை ஆகிய ஊர்களில், பல உருவங்கள் இசை முழக்கும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளன. அவைகளில், பறை, சேண்டி, சேகண்டிகை, குழமுடா, சிலம்பு இவைகளைப் பெரும்பாலும் காணலாம்.

முதல் ராஜராஜனின் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று[15] (கி. பி. 990) திருக்கோயிலூரில் உள்ளது. அது சோமாஸ்கந்தர் திருமுன்னர் திருத்துறைப்பூண்டியைச் சார்ந்த மக்கள், புரட்டாசி மாத முழுநிலா நாளில் முழவினை வாசிப்பர் என்று குறிப்பிடுகிறது. இம் முழவினைப் பற்றி இலக்கியங்களும் பெரிதும் பேசுகின்றன. திருத்துறைப்பூண்டியில் உள்ள முழவு ஒன்றில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

'ஸ்வஸ்திஸ்ரீ இக்குடவிழா சமைப்பித்திட்டார் சீகாருடையார் மல்லாண்டாரான சோழகோனுர்' என்பது அத்தொடர். இதில் குடவிழா என்றிருப்பது ஒருவேளை எழுத்துப்பிழையாகவும் இருக்கலாம். கி.பி. 12, 13-ஆம் நூற்றுண்டில் இக்குடாமுழாவினை மல்லாண்டார் எனப்படும் சோழகோனுர் என்பவர், இக் கோயிலுக்குச் செய்தளித்திருத்தல் வேண்டும் என்று தெரிகிறது.

மற்ருெரு இடத்தில், கோயில் ஆள்வார்க்கு ஸ்ரீபலி கொட்டும் உவச்சர்கள்[16] என்று உள்ளது. காவேரிப்புறம் என்ற ஊரில் கிடைத்த மற்ருெரு[17] கல்வெட்டு துவளை வளஞ்சியர் எனும் இனத்தவர்கள், சாத்தன் கருவூரர்ன கன்னரதேவ மாயிலட்டியால் எடுக்கப்பட்ட நாட்டீசுரம் கோயிலில் ஸ்ரீபலி கொட்டும், அரையனரையன் என்னும் உவச்சனுக்கும், அவன் வம்சத்தார்க்கும் ஒரு நன்செய் நிலமும், மனையும் தோட்டமும் ஆண்டுக்கு நாற்கழஞ்சுப் பொன்னும் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

உவச்சர் பற்றித் திரு ஸ்டுவர்டு அவர்கள் குறிப்புக்கள்

வடக்கு மாவட்டங்களில் ஒச்சர்கள் மரயன், பாண்டு, கந்தப்பன், பல்லவ நாயன். புலவன் என்ற ஐந்து பிரிவுகளாக உள்ளனர். திருவனந்தபுரத்துக் கோயில் அருச்சகர்கள், பொதுவாக மரயன் என்று அழைப்படுகின்றனர். அவர்களுக்கு அரசு மரியாதையாக உவச்சர் என்ற அடையும் கொடுக்கப்படுகிறது.[18] இவர்கள், உமை அருச்சகர், தேவர், பரசைவர், முதலியார். வல்லபநாயர், புசலி, புலவர், கம்பர் என்ற 'பெயர்களும் பெற்றிருந்தனர். இறுதியில் உள்ள புலவர், கம்பர் என்ற பெயர்கள் தமிழ்ப்

புலவர் கம்பர் வழி வந்திருக்கவேண்டும். தமிழ்க்கவி கம்பர், ஒச்சர் குலத்துப் பிறந்தவராகக் கருத்துளது. சில மாவட்டங்களில் கல்லிய நாயர் என்ற பெயரும் இவர்க்குண்டு. திருவனந்தபுரத்து அரசியொருத்தி நோயின் காரணமாக வருந்திய போது ஓர் உவச்சர் அதைக் குணமடையச் செய்ய, அவ்வரசர், சல்லியநாயன் என்ற அடையினை அளித்தார். சல்லியம் எனில், அறுவை சிகிச்சை என்பது பொருள்.

சில பழக்க வழக்கங்கள்

மதுரை நெல்லை போன்ற தெற்கு மாவட்டங்களில் ஒச்சர்கள் பொதுவாக அத்தை மகளை மணத்தலும் மரபாக உள்ளது. மண விழாவில், பிராமணர் பங்கு பெற்றனர். மணவிழா சவச் சடங்கு களில் வன்னியரைப் பெரிதும் ஒத்துள்ளனர். இறந்தவர்கள் எரிக்கப் பட்டனர். இங்கும் பிராமணருக்குப் பங்குண்டு. சிறுபான் மையினராகிய இவ்வினத்தவருக்குப் பெரியதனக்காரர் என்ன தலைவர் உண்டு. மலையாள நாட்டில் பரவர் என்ற பட்டப் பெயரும் உண்டு.

சுசீந்திரம் கோயிலில்[19]

சுசீந்திரம் கோயிலில் வழிபாடு நிகழும் நேரம் முழுவதும் இவர் கட்கு இன்றியமையாத பணியுண்டு. நாயனம் வாசிப்பவரும். பறை கொட்டுவோரும் அந்த நேரத்தில் சிறப்பிடம் பெறுவர். மூன்று மாரர்கள் பறையினை வழிபாட்டின் போது கொட்டுவது சிறப்பான ஒன்று.

முற்காலத்தில் தமிழகத்தில் உள்ள பரசவர்களே, இதற்கு அனுமதிக்கப்பட்டனர். காலப்போக்கில், மலையாள நாட்டு மாரரும் இப்பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

உற்சவத்தில் இறுதிப்படியாக விளங்கும் மௌனபலி என்னும் நிகழ்ச்சியில் முதலில் ஏற்றியகொடி இறக்கப்படும். இந்நிகழ்ச்சியின் போது எந்த இறையுருவமும் இடம் பெறாது. இசைக்கருவிகள் ஊர்வலத்தில் இருக்காது. நால்வர் மட்டும் பங்குபெறும் நிகழ்ச் சியிது. பலி கொடுக்கும் நிகழ்ச்சியில் பலர், அவி போன்றவைகளை இருவர் எடுத்துவர, ஒரு பரசவர் மட்டும், மிக நீண்ட இடை வெளியில் சேகண்டி கொண்டு மெல்லிய ஒலியினை உடன் எழுப்பிக் கொண்டு வருவது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி.

முடிவுரை

இன்றும் சிறப்பாகக் கோயிற் பணிபுரியும் இவர்கள் அம்மன் கோயில்களில் பூசாரிகளாக விளங்குகின்றனர், உவச்சர் என்ற

பெயரும், அவர்தம் நிர்ணயிக்கப்பட்ட தொழிலும் சோழர்காலத்திலிருந்துதான் முறையாக நம்மால் அறிய முடிகிறது.

குறிப்புகள்

1 Thurston, Castes and Tribes of South Indian
2 Hultzsch, South Indian Inscriptions—1890 Part I 82, 108.
3 Comprehensive Tamil and English Dictionary (Winslow)
4 Vatteluthu Inscription—Staert
5 SII. ii, 66
6 Ibid
7 SII xiv, 132
8 கன்யாகுமரிக் கல்வெட்டுகள், பகுதி 3. 282 68, 285 65.
9 SII, iii
10 ARE 1890, 82 108.
11 Anciant Deccan p. 244.
12 கல்வெட்டு 1975, p. 30.
13 SII, xiv, 84.
14 Castes and Tribes of South India
15 கல்வெட்டு 1975.
16 SII, vii, 156
17 SII, zix, 4
18 Travancore Census 1901
19 K. K. Pillai, Sucindram Temple

கணப்பெருமக்கள்

பெ. அர்த்தநாரீசுவரன்

முன்னுரை

முற்காலத்தில் ஊர்களையும் கிராமங்களையும் நிர்வகிக்கப் பல உறுப்பினர்கள் அடங்கிய 'ஆளுங்கணம்' என்ற ஒரு குழு இருந்தது. இக்குழு சில சமயங்களில் குறுகிய அளவில் 'கணம்' என்றும் நெடிய அளவில் 'மியாளுங்கணம்' என்றும் அழைக்கப்பட்டது.[1] இக்குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தார்கள், எவ்வாறு நியமிக்கப்பட்டார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.[2] சில கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ள 'ஊர்ஆள்வார்கள்' என்பது 'ஆளுங்கணம்' என்று குறிக்கப்படுவதின் மாற்று வடிவமேயாகும்.[3] கிராம நிர்வாகங்களைக் கவனிக்க இதுபோன்று சில சபைகளும் இருந்தன.

கணம்

'கணம்' என்பதற்குத் தமிழ் அகராதி கூட்டம், திரண்டோர் என்று விளக்கம் கூறுகின்றது.[4] நாலடியார் 'கணங்கொண்டு சுற்றத்தார்' என்று கூறுகின்றது.[5] கலைக்களஞ்சியத்தில் 'கணம்' என்பதற்குப் 'பதினெட்டுக் கூட்டத்தினரைக் குறிக்கும்' என்று கூறப்பட்டுள்ளது.[6] தொல்காப்பியம் பொருளதிகார உரையில் பேராசிரியர் 'பேயும் பூதமும் பாம்பும் ஈருகிய பதினென் கணம்' என்று பதினென் கணத்திற்கு விளக்கம் கூறியுள்ளார். எல்லா நூல்களிலும் 'கணம்' என்பது 'கூட்டம்' என்ற பொருளிலேயே வருவது குறிப்பிடத்தக்கது.

சர். மோனியர் வில்லியம்ஸ் தன்னுடைய அகராதியில் 'கணம்' என்பதற்குக் 'கூட்டம்' என்றே பொருள் கூறியுள்ளார்.[3] புளும் ஃபில்டு 'கண' என்பதற்கு 'மீ மா விதர்சன்' என்றும் 'கணம்' என்பதற்குத் 'தேவாநாம் ரிபர சுகஸ்தா' என்றும் 'அஸ்டெ ாஷி' ஈஷாம் மா காடஷி' என்றும் பொருள் கூறியுள்ளார்.[9]

மனு 'கண' என்பது மக்கள் அல்லது ஒருத்தொருக் கொருத்தர் உதவி செய்து கொள்கிற கூட்டத்தைக் குறிக்கும் என்று கூறுகின்றார். ரைஸ் டேவிட் என்பவரும் 'கண, என்பதற்குப்

பொதுக்காரியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் என்றே பொருள் கூறுகின்றார். ஜெயஸ்வால் மதத்தோடு தொடர்புடைய சில கணங்கள் பற்றிக் கூறியுள்ளார்.[10] ஸ்ரீ கிருஷ்ண கணத்தார், வீரகணத்தர், காளிகணத்தார் முதலியவை தமிழில் மதத்தோடு தொடர்புடைய கணங்கள் என்று நீலகண்டசாஸ்திரி அவர்கள் கூறியுள்ளார்.[11]

ஆளுங்கணம்—ஆளுங்கணத்தார்

பல்லவர் காலக் கல்வெட்டுகளில் 'கண' என்பது பல உறுப்பினர்கள் அடங்கிய நிர்வாகக் குழுவாகவே குறிக்கப்பட்டுள்ளது. 'ஆளுங்கணம்' என்பது கிராம நிர்வாகங்களைக் கவனிப்பவர்களைக் குறிக்கும்.

நந்திவர்மப் பல்லவனுடைய 23ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு திருவிப்புரம்பேடு ஆளுங்கணத்தைச் சேர்ந்த முள்ளுக் கிழார் என்பவர் குழைப்பத்தூரைச் சேர்ந்த அக்னிசர்மா என்ற ஆளுங்கண உறுப்பினரிடம் ஒரு நிலத்தை வாங்கித் திருவிப் புரம்பேடு சிவன் கோயிலுக்குக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.[17] தந்திவர்மன்,[13] நிருபதுங்கவர்மன்,[14] விசயகம்பவர்மன்,[15] ஆகியோர்களுடைய கல்வெட்டுகள் ஆளுங்கணத்தார் பற்றிக் குறிப்பிடுகின்றன.

உத்தரமேரூர்க் கல்வெட்டு கிராம நிர்வாகச் சபை பற்றியும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியும், உறுப்பினர் களுக்கு வேண்டிய தகுதி பற்றியும் கூறுகின்றது.[16] உத்தர மேரூர் நிர்வாகச் சபையிலிருந்த அனைவரும் பிராமணர்கள். பிராமணர் களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட ஊர்களிலுள்ள சபைகளில் பிராமணர்கள் மட்டும் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். மற்ற ஊர்களில் இருந்த உறுப்பினர்களைப் பற்றித் தெரியவில்லை.

மானூர்,[17] அரக்கோணம் வட்டம் களத்தூர்[81] போன்ற இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் ஆளுங்கணத்தார் பற்றிக் குறிப்பிடுகின்றன.

ஆலம்பாக்கத்தில் கிடைத்த பரகேசரிவர்மன் கல்வெட் டொன்று தந்திவர்மன்மங்கலம் ஊர்ச்சபையைச் சேர்ந்த ஒரு ஆளுங்கண உறுப்பினர் அமரேசுவரப் பெருமாள் கோயிலுக்கு விளக்குவைக்க 16 கழஞ்சு பொன் கொடுத்ததைக் குறிக்கின்றது.[19] இதே ஊர்ச்சபையைச் சேர்ந்த சோமாசி என்பவர் திருமேற்றளிப் பெருமாள் கோயிலுக்கு விளக்கு வைக்க 3 மா நிலம் கொடுத்ததை ஆலம்பாக்கம் வரதராசப் பெருமாள் கோயிலிலுள்ள கல்வெட்டுக்

கூறுகின்றது.[20] ஆளுங்கண உறுப்பினர்கள் கொடுத்த கொடைகள் பற்றிப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

அமிர்த கணம்

அமிர்த கணத்தார் பற்றி முற்காலப் பல்லவர்கள் கல்வெட்டிலோ சோழர்கள் கல்வெட்டிலோ நமக்குக் குறிப்புகள் கிடைக்கவில்லை. இவர்கள் ஆளுங்கணத்தாருக்கு உதவியாக இருந்திருப்பார்கள் என்று பல அறிஞர்கள் கருதுகின்றார்கள். அபராஜித வர்மனுடைய திருவொற்றியூர் கல்வெட்டில் மட்டும் அமிர்த கணத்தார் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவ்வூரில் கிடைத்த அபராஜிதனுடைய நாலாவது, ஏழாவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் கோயிலுக்காக ஆதம்பாக்கம் சபையிடம் கொடுக்கப்பட்ட தங்கத்தை அமிர்தகணத்தார் பெற்றுக் கொண்டதைக் குறிப்பிடுகின்றன.[21]

கணப்பெருமக்கள்

கணப்பெருமக்கள் என்பவர்கள் ஊர்க்காரிய நிர்வாகிகள் என்று தமிழ் அகராதி விளக்கம் கூறுகின்றது.[22] ஆனல் கணப்பெருமக்கள் ஊர்க்காரியங்களில் ஈடுபட்டதற்கு நமக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை.இவர்கள் கோயில் நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்குப் பல கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன.

செய்யாறு வட்டம் பிரமதேசத்தில் கிடைத்த இராசராச தேவனுடைய 27ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு பொந்தை ஆள்வார் கோயிலில் விளக்கு வைக்கக் கொடுக்கப்பட்டக் கொடையைக் கணப்பெருமக்கள் கவனித்து வந்ததைக் கூறுகின்றது.[23] இதே ஊரில் கிடைத்த ராஷ்டிர கூட மன்னன் கன்னர தேவனுடைய 17 ஆவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு பொந்தைப் பெருமானடிகள் கோயிலில் விளக்கு வைக்கக் கணப்பெருமக்களிடம் கொடுக்கப்பட்டப் பொன் கொடையைக் குறிக்கின்றது.[24]

திருச்செங்கோட்டில் கிடைத்த பரகேசரிவர்மன், இராசகேசரி வர்மன் கல்வெட்டுகளும் மற்ற சோழ அரசர்களுடைய கல்வெட்டுகளும் கோயில் விழாக்களில் ஈடுபட்டிருந்த கணப் பெருமக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. திருக்செங்கோடு கல்வெட்டுகள் திருவோணக் கணப் பெருமக்கள், திருவாதிரைக் கணப்பெருமக்கள், துவாதிசி கணப்பெருமக்கள், திருவேகாதசி கணப்பெருமக்கள் போன்ற பிரிவினர்களைக் குறிப்பிடுகின்றன. இது போன்ற பிரிவுகள் வேறு எந்த ஊர்க் கல்வெட்டிலும் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது,

திருவோணக் கணப்பெருமக்கள்

திருச்செங்கோட்டில் கிடைத்த பரகேசரிவர்மனுடைய ஆறுவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஈரோட்டிலிருக்கும் மணிகண்டி ஓடைய மந்தாளுக்காக அரட்டனக்கன் மகன் திருச்செங்கோட்டுத் திரு வோணக் கணப் பெருமக்களிடம் 20 சுழஞ்சுப் பொன் கொடுத்து திங்கள்தொறும் திருவோண நாளில் 20 பிராமணர்களுக்கு சந்திராதித்தவரை உணவு ஊட்டப் பணித்ததைக் கூறுகின்றது.[25]

திருவாதிரைக் கணப்பெருமக்கள்

பரகேசரிபன்மருடைய 26 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு காடன்பூதி மாணிக்கன் தன் மகள் முண்டங்கோனுக்காகத் திருச் செங்கோட்டுத் திருவாதிரைக் கணப்பெருமக்களிடம் 5கழஞ்சு பொன் கொடுத்து அதன் பலிசையில் 5பிராமணர்களுக்குத் திரு வாதிரை நாளில் உணவு ஊட்டப் பணித்தான் என்ற செய்தியைக் கூறுகின்றது.[26]

இராசகேசரிவர்மனுடைய 14ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இளங்கோனடிகள் தேவியார் முரிகாமக்கனார், ஏகவீரதிவாகர தேவருக்காகக் காசெட்டாங்கல்லால் 20 கழஞ்சுப் பொன்னைத்திருச் செங்கோட்டுத் திருவாதிரைக் கணப்பெருமக்களிடம் கொடுத்து அதன் பலிசையில் சந்திராதித்தவரை 20 பிராமணர்களுக்குத் திருவாதிரை நாளில் உணவு ஊட்டப் பணித்ததைக் கூறுகின்றது.[27]

துவாதசி கணப் பெருமக்கள்

பராகேசரிபன்மருடைய 27 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, புகழியூரைச் சேர்ந்த ஒருவனுடைய மணவாட்டி(மனைவி) குகாரி சுந்தரி பிராமணர்களுக்குத் திங்கள் தோறும் துவாதிசி நாளில் உணவு ஊட்டத் திருச்செங்கோட்டுத் துவாதசிக் கணப்பெரு மக்க ளிடம் கொடுத்தக் கொடையைக் குறிக்கின்றது.[28]

திருவேகாதசி கணப்பெருமக்கள்

இராசகேசரிவர்மனுடைய 13வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு இளங்கோனடிகள் தேவியார் காமக்கனார், காசெட்டாங்கல்லால் 20 கழஞ்சு பொன் திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு நாட்டுப்பெரு மக்களிடம் கொடுத்து அதன் பலிசையில் திங்கள்தோறும் திருவேகாதசி நாளில் 20 பிராமணர்களுக்கு உணவு ஊட்டப் பணித்தாள். இதனைத் திருவேகாதசி கணப் பெருமக்கள் கவனித்து வந்தனர்.[29]

முடிவுரை

மேற்காட்டிய சான்றுகளால் கணப்பெருமக்கள் கோயில் நிர்வாகத்தில் தனியிடம் பெற்றிருந்தனர் என்பதை அறிகின்றோம். கிராம நிர்வாகத்தில் எத்தகைய பங்கு வகித்தனர் என்பது பற்றி அறிய முடியவில்லை. அது பற்றி ஆய்வு செய்தல் வேண்டற்பாலதாகும்.

குறிப்புகள்

1 3 and 58 of 1898
2 K. A N. Sastri, The cholas, p. 494.
3 40 of 1155.
4 தமிழ் அகராதி, தொகுதி II பகுதி i.
5 நாலடியார், 25.
6 கலைக்களஞ்சியம், தொகுதி 3.
7 பேராசிரியர், தொல். பொருள், 256 உரை.
8 Sir. Monier Monier Willans, A Sanskrit English Dictionary.
9 Bloom Field, Vedic concordance.
'me ma vi trsan'
'devanam rbharah suhastah'
'astosy esam ma cot hase'
10 Dr. C. Minakshi, Administratron and Social life under the Pallavas, p. 150.
11 K. A. N. Sastri, Studies in Chola History; p. 102.
12 Ep. Ind, xi, p. 225.
13 ,,
14 SII, xii, 107
15 ,,
16 3 and 58 of 1898.
17 Ep. Ind, xxii.
18 155 and 159 of 1916.
19 SII, xix, 127
20 Ibid 281
21 SII, xii, 88 and 91.
22 தமிழ் அகராதி, II தொகுதி, பகுதி I.
23 204 of 1915

24 207 of 1915.
25 SII, xix, 219.
26 SII, xix, 426.
27 SII, xiii, 244.
22 SII, xix, 427
29 SII, xiii, 232.

கம்மாளர்

அ. அப்துல் மஜீத்

மரம், கல், உலோகம் போன்றவைகளைக் கொண்டு பணி செய்யும் பிரிவினர் கம்மாளர் எனப் பொதுவாகப் பெயர் பெறுவர். அவர்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்க வகையில், தாம் பயன் படுத்தும் பொருள் அடிப்படையில், தச்சர், சிற்பி, காரியக்காரர், கொல்லர், தட்டார் என்று பிரிக்கப்படுவர். அனைவருக்கும் பொதுப்பெயராக—இனப்பெயராக 'கம்மாளர்' என்ற சொல் பயன்படுகிறது. இவர்களைப் பற்றிய குறிப்புகளை, இலக்கியம், கல்வெட்டு, அவர்களே சமைத்தளித்த நினைவுச் சின்னங்கள் ஆகியவை நமக்கு வாரி வழங்குகின்றன.

இலக்கியத்தில்: ஒரே நாளில் எட்டுத் தேர்களைச் செய்துமுடிக்கும் திறன் கொண்ட தச்சனை 'வைகல் எண்டேர் செய்யும் தச்சன்'[1] என்று புறநானூறு கூறுகிறது. இரும்புப் பணி செய்யும் கொல்லனைக் 'கருங்கைக் கொல்லன்'[2] என்று கூறும். கொல்லனின் ஆயுதமான துருத்தி அகநானூற்று உவமையில் இடம் பெறும். 'கொல்லன்,விசைத்து வாங்கு துருத்தியின் வெய்யஉயிரா'[3]சிலம்பின் வழி, கஞ்சகாரரும் (வெண்கலம் கொண்டு பணி செய்வோர்) செம்பு செய்குநரும், மரங்கொல் தச்சரும்,கொல்லரும் (இரும்பு கொண்டு பணிசெய்வோர்) பொன்செய் கொல்லரும்காவிரிப்பூம் பட்டணத்து மருவூர்ப்பாக்கத்தில் இருந்ததை அறிகிறோம்[4] சிலப்பதிகாரக் கதையே பொன்செய் கொல்லனால் விரிவு பெறுகிறது. சமுதாயத்தில் அவனது இடத்தினை இக்காவியம் உணர்த்துகிறது.

கல்வெட்டில்: கல்வெட்டில் இவர்கட்கு, கண்மாளர்[5] பாஞ்சாலத்தார்,[6] அஞ்சுபாஞ்சாலத்தார்,[7] இரதிகாரர்,[8] ஸ்தபதி[9] தட்டான்,[10] பெருந்தட்டான்,[11] தச்சன்,[12] பெருந்தச்சன்,[13] கொல்லன்,[14] பெருங்கொல்லன்[15] ஆகிய பெயர்கள் வழங்கப் படுகின்றன.

சிற்பங்களில்: பெருங் கோயில்களும் கோபுரங்களும் கட்டிய தச்சர்களின் பணி மிகவும் போற்றப்பட்டது. கோயில்களில் அவர் தம் உருவச்சிலைகளும் இடம்பெற்றன. அத்தகைய புகழ் கொண்டவற்றுள் சிதம்பரமும் ஒன்று' 16-ஆம் நூற்றுண்டில் வடக்குக் கோபுரத்தைத் திருப்பணி செய்வதில் பெரும்பங்கு பெற்ற நான்கு

சிற்பிகளின் உருவச்சிலைகள் சிதம்பரம் ஆடவல்லான் கோயிலின் வடக்குக் கோபுரத்தில் இடம்பெற்றுள்ளன. இது அவர்களது சிற்பத்திறனை மக்கள் போற்றியதைத் தெளிவாகக் காட்டுகிறது.[16]

தோற்றம்: இவர்களின் தோற்றம் பற்றிப் பல்வேறு கதைகள் உள்ளன. இவர்களது ஒரு பெயரான 'பாஞ்சாலர்' என்பது இவர்கள் பாஞ்சால தேசத்தவர் என்று கூற ஏதுவாயுள்ளது. பாஞ்சால நாட்டினின்று கிரேக்க, உரோம நாடுகளுக்குக் கலைஞர்கள் சென்றுள்ளனர். இந்திய இலக்கியங்கள் யவனர் என்று இவர்களைக் குறிக்கும், அவர்கள் பெரும் கட்டடங்கள் எழுப்புவதிலும், எழில்மிகு சிற்பங்களைப் படைப்பதிலும் பெருந்திறன் பெற்றிருந்தனர். தமிழகத்திலும் நிறைந்த அளவில் யவனர்கள் பணியேற்றிருந்தனர். யவனர்களோடு தொடர்பு கொண்டிருந்ததால், கண்மாளர்களின் படைப்புக்களும் பெரும் ஏற்றம் பெற்றன. எனவே 'பாஞ்சாலர்' என்ற பெயர் வரலாற்றுப் பின்னணியில் வளர்ந்ததே என்பது உறுதி. தமிழ் அகராதியிலும், யவனர் என்ற சொல், தச்சர் என்ற பொருள் குறித்தே நிற்கிறது என்பது நினைவுகூறத் தக்க ஒன்று.

சங்கீர்ண ஜாதியார்

கண்மாளர், சங்கீர்ண ஜாதியார் என்ற பெயரும் பெற்றுள்ளனர். இரு வேறுபட்ட ஜாதியினரின் மணவாழ்வில் மலர்ந்த மலர்கள், பல்வேறுபட்ட கலைகளுக்கு என்று ஒதுக்கப் பெற்றனர். அம்மக்களே கண்மாளர் என்ற பெயரும் பெற்றிருந்தனர். இவர்களும் இருபிறப்பாளர்களே. உயிர்ஜாதி மகனுக்கும் 'தாழ்சாதி மகளுக்கும் பிறந்த மக்கள், 'அனுலோமர்' என்றும் உயர்சாதி மகளுக்கும், தாழ்சாதி மகனுக்கும் பிறந்த மக்கள் 'பிரதிலோமர்: என்றும் அழைக்கப்பட்டனர். இது வடவர் கூறிய கருத்து. இத்தகைய கருத்தினைத் தொல்காப்பியமும் ஏற்றுக் கொள்கிறது.[17]

பிரிவும், கல்வியுரிமையும்

தச்சர்கள் பற்றிய ஒரு விரிவான செய்தியை 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு காட்டுகிறது. பாண்டிய குலாந்தகச் சதுர்வேதி மங்கலத்து மஹா சபையினர் கூடி ஒரு திர்மானம் செய்தனர். தச்சர்களின் பிரிவும், கல்வியுரிமையும், கலைத் தொழிலும் பற்றிய குறிப்பினை அது தருகிறது. இதில் தச்சர்கள் இரதிகாரர் என்று குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் அனுலோமர் பிரதிலோமர் என்று இரு பிரிவாகப் பிரிக்கப்படுவர். பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர உயர்சாதி ஆடவனுக்கும், கீழ்குல

மாதுக்கும் பிறந்தவர், அநுலோமர் என்றும், உயர்குல பெண்ணுக்கும், கீழ்குல ஆணுக்கும் பிறந்தவர் பிரதிலோமர் என்னும் முடிவு செய்யப்பட்டனர். அநுலோமரும், இரதிகாரரும் இருவேறுபட்ட ஜாதியினருக்குப் பிறந்த மக்கள். இரதிகாரரைச் சில நூல்கள் உயர் சாதி என்றும், சில நூல்கள் கீழ் சாதி என்றும், குறிப்பிடுகின்றன. பல நூல்கள், இவர்களை ஆசாரியர் என்றும் கூறி, அவர்கள் குதிரைகள், தேர்கள் பற்றிய கல்வியினையும், வாஸ்து நூலினையும், கோயிலின் நீராட்டு, தச்சுத் தொழில் போன்ற அனைத்துக் கலைகளையும் கற்க உரிமையுடையவர்கள் என்றும் குறிப்பிடுகிறது.

தச்சர் மெய்க்கீர்த்தி

கி. பி 1264 இல் எழுதப்பட்ட கல்லெழுத்துக்கள் மூலம், இவர்களுக்குத் தனிப்புகழ்மாலை (மெய்க்கீர்த்தி) இருந்தது தெரிய வருகிறது. இது ஆலங்குடியெனும் ஊரில் உள்ளது. இதில் அவர்களது தோற்றம், சமுதாய உரிமைகள் போன்றவற்றோடு, அவர்கள் அவ்வூரில் உள்ள ஆபத்சகாயேஸ்வரர் கோயிலுக்கு அளித்த கொடையையும் காணலாம். இவர்களது ஊர் உத்திரபதி என்பதும் இவர்கள் கொடி 'மகரக்கொடி' என்பதும் மேலும் நாம் பெறும் உண்மைகள். இறுதியாக இவர்களது அறுவகைத் தொழிலும், ஸ்தபதி, சூத்ரக்ராஹி, வர்த்தகி, தச்சர் என்னும் நால்வகை இரதிகாரரின் பிரிவுகளும் கூறப்பட்டுள்ளது.

நாட்டுப் பணி

தஞ்சைப் பெருங்கோயிலும், திருவையாற்று லோகமாதேவீச்சுரமும், உத்திர மேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோயிலும், முறையே ராஜராஜப் பெருந்தச்சனும், கலியுகரம்பைப் பெருந்தச்சனும், பரமேஸ்வரனும் ஆகிய பெருந்தச்சர்களின் கவின்மிகு படைப்புக்கள். நம் பண்பாட்டின் உயர்நிலைகளாக விளங்கும் இவை கட்டிட, சிற்ப அமைப்பின் எழிற் கோலங்களைக் காட்டி நிற்கும். அதே நேரத்தில் நம் பண்டைக் கலைஞனின் பெருந் தொண்டையும் புலப்படுத்தும். இப்பெரும் கலைத்திறம் மன்னர்களாலும் பெரிதும் போற்றப்பட்டன. தஞ்சைப் பெருங்கோயிலை ஆக்கிய, வீரசோழ குஞ்சரமல்லனை ராஜராஜப் பெருந்தச்சனுக்கு இராஜராஜன் நிலங்களை வழங்கினான். தன் பெயராலேயே பட்டப் பெயர் அளித்துக் கௌரவித்தான். அவனது பட்டத்தரசி தந்தி சக்தி விடங்கி, சக்கடி சமுதியனை செம்பியன் மகாதேவிப் பெருந் தச்சனுக்கு தட்டாரக்காணியாக நிலங்களை அளித்தார், கண்டராதித்தரின் தேவியார், செம்பியன் மாதேவியார் தமிழகத்தில் கற்றளிகள் எழுவதற்கு தனிப்பெரும் தூண்டுகோலாக இருந்தும், தானே பெருங்கோயில்கள் பல கட்டியும், கணக்கற்ற அறக்

கொடைகள் பல செய்தும் பெரும் புகழ் கொண்ட அம்மாதேவியின் பெயரினைப் பட்டப் பெயராகப் பெற்று தம் குலத்திற்குத் தனிப் பெருமை சேர்த்தான், இச்சக்கடி சமுதியன்.

தச்சர் தந்த கொடைகள்

விழாக்களில் பெரும்பங்கு பெற்றிருந்தவர்கள் இவர்கள். தம் கொடைகளால் கோயில்களில் எண்ணற்ற விளக்கேற்றிய பெருமையும் பெற்றனர். இவர்தம் இறையன்புக்கு ஒளிகூட்டும் செய்திகளைப் பார்க்கலாம்.

ஜடாவர்மன் ஸ்ரீவீரபாண்டியனின் காலத்து (கி.பி. 13ஆம் நூற்றுண்டு) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள உறையூரில் உள்ள அகஸ்தீசுவரர் கோயிலில் உள்ள அக்கசாலைக்கூத்தரின் திருவிழாவினைச் சிறப்பிக்க, விருதராஜ பயங்கர வளநாட்டு நால்வகை இரதிகாரர்கள் கொடையளித்த குறிப்புள்ளது.[18]

மாறவர்மன் குலசேகரபாண்டியனின் காலத்தில் (கி.பி. 1268-1308) நெல்லை மாவட்டத்துக் கல்லிடைக்குறிச்சியில் உள்ள நாலாயிர ஈசுவரமுடையார் கோயிலில் உள்ள தேவி கோட்டத்திற்குக் கொடையளித்தனர்.[19]

பாண்டிய ராஜசிம்மனின் ஆட்சியில் (கி. பி. 10. ஆம் நூற்றுண்டு) திருச்சுரியலில் உள்ள சுந்தர பாண்டிய ஈசுவரமுடையார் கோயிலில் விளக்கெரிக்க, ஒரு தச்சர் 25 ஆடுகளை அளித்துள்ளார்.[20]

சுந்தர பாண்டியன் காலத்து (கி. பி. 1243) சேலத்திலுள்ள சுந்தர ராஜப் பெருமாள் கோயிலில் ஒரு போதிகையினை அவ்வூரைச் சேர்ந்த அண்ணமலைத் தட்டான் செய்தளித்துள்ளான்.[21]

குலோத்துங்க சோழனின் காலத்தில் (கி. பி. 13 ஆம் நூற்றுண்டு) திருப்பிடவூர் நாட்டு பிரம்மதேயத் தேவதானமான திருப்பிடவூர் விநாயகர் கோயிலில் விளக்கெரிக்க, கங்கைகொண்ட சோழபுரத்து பொன் செய் கொல்லன் ஒருவன் பசுக்களைக் கொடையாகத் தந்துள்ளான்.[22]

இன்னும், முதற் பராந்தகன் காலத்தில் (கி. பி. 907-955) திருமழவாடி மகாதேவருக்கு விளக்கிட 45 ஆடுகளை வீரநாராயணப் பெருங்கொல்லன் கொடுத்ததும்,[23] மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1178-1216) திருவெண்காடுடையாருக்கு விளக்கிட, வள்ளைப் பன்றியூர் சனநாயகர் கோயிலைச் சேர்ந்த

பெருந்தச்சன் மூன்றுமாநிலம் அளித்தது [24] போன்ற எண்ணற்ற கொடைகள் கல்வெட்டுக்கள் மூலம் காணக் கிடைக்கின்றன.

கண்மாளருக்கான வரிகள்

இவர்தம் கலைத்தொழிலுக்கும் வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. அரசுக்கு இவர்கள் தரும் வரியும், வருமானத்தில் பெரும் இடம் வகித்தது, இவர்கள் தந்த வரிகள், கோயிற்றிருப்பணிகளுக்கும், விளக்கிடவும், வழிபாடு நிகழ்த்தவும், மன்னர்தம் பிறந்த நாள் நிகழ்ச்சிகளைக் கோயிலில் கொண்டாடவும் பயன்படுத்தப்பட்டன. இவர்களுக்கு விதிக்கப்பட்ட வரி, தட்டிறை[25] தட்டோலை[26] தட்டாரப்பாட்டம்.[27] என்ற பெயர்களில் வழங்கப்பட்டன.

உரிமைகள்

கருர்.[28], மொடக்கூர்,[29] பேருர். [30]ஆகிய மூன்று ஊர்களிலும் திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவை யாவும் இவர்களது உரிமைகள் பற்றிப் பேசுவன. அவர்களுடைய மணவிழாச் சடங்குகளிலும்· இறுதிச் சடங்குகளிலும், இரட்டைச் சங்கு ஊதவும், பறை கொட்டவும் உரிமை அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் சந்தனம் பூசிக்கொள்ளவும் விடுகளுக்கு சுண்ணும்பு பூசிக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். கம்மாளர்களுக்கு மட்டும் இன்றி, தறிசெய் வணிகர்களும், கோயில் பணிமக்களும் கூட இவ்வுரிமைகளைப் பெற்றிருந்தனர்.

இற்றைய நிலை

கம்மாளர் சமுதாய நிலை பற்றிய குறிப்புக்கள் சேகரிக்கும் பணி இக்கட்டுரையாசிரியரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களுள் திருச்சியில் வசிக்கும் ஒரு பிரிவான தட்டார் பற்றிய குறிப்புக்களை இங்கு காணலாம்.

இவர்கள் தேவ தச்சனுன விஸ்வசர்மாவின் வழிவந்தவர்களாகக் கூறிக்கொள்ளுகிறுர்கள். விஸ்வகர்மாவுக்கு, மனு, மயன், சில்பன், த்விஷ்தரன், தெய்வகன் என்று ஐந்து மக்கள். இவ்வைந்து மக்களும், ஐவ்வகைத் தொழிலைத் தொடங்கியவர்கள் ஆவர். இரும்புப் பணி செய்வோர் மனுவின் வழியினராகவும், மரப்பணி செய்வோர் மயனின் வழியினராகவும் கல் தச்சுப் பணி செய்வோர் த்விஷ்தரரின் வழியினராகவும், பொன்செய்கொல்லர் விஸ்வக்ஞன் அல்லது தெய்வகனின் வழிவந்தோராகவும் கூறிக்கொள்கின்றனர்,

சில வழக்கங்கள், பிராம்மணர்களை ஒத்துள்ளது. ஆடவர்கள் மீசை வைத்துக்கொள்வதில்லை. குடுமி வைத்துக்கொள்ளுகின்றனர்.

முற்காலத்தில் பால்யவிவாகம் வழக்கில் இருந்தது. இன்றும் நெல்லை மாவட்டத்தில் இம்முறை மணம் நிகழ்கிறது. மண மகனுக்கு ரொக்கம் அளிக்க வேண்டிய கொடுமை இங்கு இல்லை. புரிநூல் அணிந்து காது குத்தும் நிகழ்ச்சியும் முடிந்த பின்னரே திருமணம். திருமணத்தில் பெண்கள், அணியும் அணி 'பொட்டுத்தாலி' என்று வழங்கப்படுகிறது.

பெரும்பாலும் இறந்தவர்களை அமர்ந்த நிலையில் புதைக் கின்றனர். எரிக்கும் வழக்கமும் சிலரிடையே உண்டு. இறந்தவரின் உடலை, முதலில் எண்ணெய் தேய்த்து. சீயக்காயிட்டு குளிப்பாட்டு கின்றனர். புதைத்த ஐந்தாம் நாள், களிமண்ணால் 5 லிங்கங்கள் செய்யப்பட்டு, நான்கு புதைத்த இடத்தின் நான்கு மூலைகளிலும் ஒன்று நடுவிலும் நடப்படுகின்றன.

காமாக்ஷி அம்மனே சிறப்பாக வணங்கப்படுகிறது. மகளுக்கு அப்பெயர் பெரிதும் இடப்படுகிறது. ஜாதிச் சண்டைகள் அவளது கோயில் முன்னரே தீர்க்கப் படுகின்றன. 'விஸ்வகர்ம வாத்தியார்' என்றொருவர் உண்டு. அவரே திருமணம், இறப்பு, காது குத்துதல். குழந்தைகள் பெயரிடல் ஆகிய நிகழ்ச்சிகளையும் நடத்தி வைக்கிறார்.

திருச்சியில் 'விஸ்வகர்ம சம்மேளனம்' என்ற அமைப்பு செயல் படுகிறது. அவ்வினத்தாரின் சமுதாய முன்னேற்றத்திற்குரிய உதவிகளையும், அறிவுரையினையும் அது அளித்து வருகிறது.[31]

உரிமைக்குத் தடைகள்

சமுதாயத்தில் பெரும் பங்கு வகிக்கும் இவர்களுக்குச் சாதாரணமான சில உரிமைகள் அப்போது தரப்படுவதாக முன் குறிப்பிட்ட சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. இச்சாதாரண உரிமைகள் கூட ஏன் முன்னர் மறுக்கப்பட்டன என்ற வினா எழுவது இயல்பு. அக்கல்வெட்டுக்கள் கம்மாளரை மட்டும் இன்றிச் சில பிற இனத்தவரையும் சேர்த்தே குறிக்கிறது. இத்தகைய அடிப்படை உரிமைகளிலேயே தடைகள் இருந்தது என்பது உண்மை. நிலப் பிரபுத்துவ நிலைமையும், அடிமைத்தனமும் அக்காலத்தில் வேரூன்றி இருந்ததே இதற்கும் காரணமாக இருந்திருத்தல் வேண்டும்.

முடிவு

ஆக, பண்டைத் தமிழகம், விவசாயம், கைத்தொழில், போக்கு வரத்து, போன்ற எல்லாத்தேவைகளுக்கும், கம்மாளரையே நம்பி

பிருந்தது. மனிதனின் உணவு உற்பத்திக்கும், உடைக்கும், உறைவிடத்திற்கும், தேவையான கருவிகள் அனைத்தும் இவர்களாலேயே செய்தளிக்கப்பட்டன. அவர்கள் ஆக்கிய கோயில்களும், அதில் பொறித்த கல்வெட்டுக்களும்தான், இன்று நமது கலை, அரசியல் வரலாற்றினை அழியாது காட்டி நிற்கின்றன. நம் பண்டை நாகரிகத்தை அறியச் செல்லும் வழிகளே அவர்கள் பணிகள் தான். முடிவாக அவர்கள் இன்றேல் கிராமத்திலும் நகரத்திலும் எவ்வித இயக்கமும் இல்லை.

குறிப்புகள்

1 புறம் 87
2 புறம் 180.12
3 புறம் 224:2-4
4 சிலப்பு 1:5, 28.31
5 98 of 1907
6 A Topographical list of the inscriptions of the Madras presidency by V. Rangacharya Vol III. Cg. 692
7 Ibid Cg. 371
8 Chronological list of inscriptions of Pudukottai State, 362
9 ARE 1962-63.
10 52 of 1888
11 216 of 1894
12 1118 of 1888
13 118 of 18·6
14 68 of 1894
15 96 A of 1895.
16 டாக்டர் இரா. நாகசாமி, யாவரும் கேளிர்
17 புறத்திணை 75, நச்சினார்க்கினியர்:
18 Chronological list of inscriptions of Pudukkottai State, 362
19 98 of 190
20 425 of 1914
21 58 of 1888
22 48 of 1908
23 96 of 1895

24 118 of 1896

25 50 of 1890

26 14 of 1891

27 25 of 1890

28 66 of 1890

29 151 of 1905

30 562 of 1893

31 பொன்மலைப்பட்டியில் திரு சாமிநாதபட்டர் அவர்களிடமிருந்து விவரம் திரட்டப்பட்டது.

செங்கழுநீர் மலர்

சி. நளாயினி

முன்னுரை

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்தும் அவனது வழிபாட்டிற் குரியனவாகச் சென்றடைவதில்லை. வழிபாட்டிற்குரியனவாகப் படைக்கப்பட்டவைகளில் செங்கழுநீர்மலர் சிறப்பிடம் பெறுகிறது. இச்செய்தியினைக் கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், செப்பேடுகள் முதலியவை யாங்ஙனம் செப்புகின்றன என்பதனைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

செங்கழுநீர்

இம்மலர்நீர்வளம் மிக்க இடங்களில் வளரும் என்றும், கொடி வகையைச் சார்ந்தது என்றும் செம்மை நிறத்தை உடையது என்றும் இனிய மணத்தை உடையது என்றும் கலைக்களஞ்சியம் காட்டுகிறது. 'சிவனுக்குகந்த செங்கழுநீர்' எனத் தேவாரம் பாடுகிறது. இச் செங்கழுநீரின் மற்றைய பெயர்களாகச் 'செவ்வாம்பல்,' 'செங்குவளை,' 'செவ்வல்லி' என்று தமிழ் அகராதி கூறுகிறது.[1] ஆங்கிலத்தில் 'Purple Indian water Lily' அல்லது 'Red water Lily' என்றும் அழைப்பர். தாவரநூல் வல்லுநர்கள் 'Nymphia odarata' என்று வழங்குவர். கல்வெட்டு, செப்பேடு, இலக்கியங்களில் செங்கழுநீர், செங்குவளை, செவ்வாம்பல் என்ற பெயர்களில் காணப்படுகிறது. ஆயின் செங்கழுநீர் என்ற பெயர் மட்டும் அதிகம் காணப்படுகிறது.

> தெறு சொல்லாத தமிழ்த்தென் செங்குவளை நாறு
> மல்லாகத்து நாராயணன் பண்டை நான்மறையும்[2]

எனச் சுந்தரபாண்டியன் கல்வெட்டில் செங்குவளை என்ற பெயர் காணப்படுகிறது.

''செங்கழுநீர் நடப்பெறுவதாகவும்''[3] என நந்திவர்மன் கல்வெட்டில் 'செங்கழுநீர்' என்ற பெயர் வருகிறது. அதிகமாகச் செங்கழுநீர் என்று உள்ள கல்வெட்டு, செப்பேடு கிடைக்கிறது. மலர் பூஜைக்குகந்ததென்றும், வேர் மருந்துக்கு உரியது என்றும் டாக்டர் மீனாட்சி கூறுகிறார்.[4] செங்கழுநீர் கிழங்கு ''மகாம்ருத்

வீகாதிக்குளிகை'' தயாரிக்கப் பயன்படுகிறது என்று மருத்துவர்கள் கூறுவர்.[5]

செங்கழுநீர் வான்பயிரா?

செங்கழுநீர், தெங்கு, கமுகு, பலா போன்ற இன்னும் சில பயிர்கள் தவிர ஏனைய புன்செய் பயிர்களாகக் கருதப்பட்டன.

''செங்கழுநீர் கொழுந்து வாழை, இஞ்சி.........இவை உள்ளிட்ட வான்பயிர், புன்பயிர் உள்ளிட்டன'' என மதுரை, திருச்சோழபுரம் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வாழை, பலா, கரும்பு, நெல் போன்ற பயிர்களுக்கு நீர்வளம் வேண்டும். அஃதேபோன்று செங்கழுநீர்ப் பூவுக்கும் நீர்வளம் வேண்டும். மருதநிலத்தைப் பின்னனியாகக் கொண்டமையாலும் நீர்வளம் வேண்டுவதாலும், இதனைப் பயிர் என்றும் வான்பயிர் அல்லது நன்செய் பயிர் என்றும் கல்வெட்டுக்களில் வெட்டியிருக்கின்றனர்.

மலர் வளர்ந்த நிலைகள்

நந்தவனங்கள், பொய்கைகள், ஓடைகள், மடுக்கள், மடைகளிலெல்லாம் செங்கழுநீர்மலர் மலிந்திருக்க வேண்டும்.

''மடையெலாம் கழுநீர் மலர்ந்து''—தேவாரம்

''கமழ் கழுநீர் கவர் கழனி''—தேவாரம்.

''கண்மலர் கழுநீர்'' – திருக்கோவையார்.

''கழுநீர் மாலைக் கடவுள் போற்றி''—திருக்கோவையார்.

''உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து''—திருப்பாவை.

''செங்கழுநீர் பயில் பூங்கோதைப் பிணையலில்''—
சிலப்பதிகாரம்

'கழுநீர் பொலிந்த கண் அகன் பொய்கை'—மதுரைக்காஞ்சி

''கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை''—குறிஞ்சிப்பாட்டு

என்று இலக்கியங்களில் பேசப்படுகின்றன.

கல்வெட்டுகளும், செப்பேடுகளும், நந்தவனங்கள், பூந்தோட்டங்கள், பூக்கொல்லைகள், பூச்சோலைகள் இருந்ததாகவும் அங்கு இம்மலர் பயிர் செய்யப்பட்டதாகவும் கூறுகின்றன. நந்தவனங்கள் அரசனுலோ, அரசியாலோ, குடிமக்களாலோ அமைக்கப்பட்ட செய்தி கண்டராதித்தன் நந்தவனம்,[7] செம்பியன் மாதேவி திருநந்தவனம்[8] விக்ரமகேசரி திருநந்தவனம்[9] ஐயன்

கொண்ட சோழச் சருப்பேதியன் என்றும் அனந்தநாராயணன் என்னும் திருநாமத்தால் திருநந்தவனமாக நீரட்டிக் கொடுத்த திருநந்தவனம்[10] நிச்சயவாசகன் திருநந்தவனம்[11] என்று பெயர்கள் பொறிக்கப்பட்டதைக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது.

பூந்தோட்டம் அமைத்த செய்தியும் அறியப் பெறுகிறோம். நெல்லையப்பர் கோயில் கல்வெட்டொன்று,

> வீட்டில் வடபாகம் நாமிருக்கிற இடத்துக்குத்தான்
> பூந்தோட்டம் ஆக்குகைக்குச் செய்துவருகிற பூந்
> தோட்டம்[12]

எனப் பூந்தோட்டம் அமைத்த செய்தியைத் தருகிறது.

பூக்கொல்லை, பூஞ்சோலை என்ற பெயர்களை நந்தவனத்துக்கு வைத்திருக்கின்றனர். திருக்கருகாவூர் கோயில் கல்வெட்டு நிலத்துக்கு எல்லை சொல்லும்போது ''பூஞ்சோலை வாய்க்காலுக்கு வடக்கு'' என்று கூறுகிறது. திருமங்களத்தரையன் பூசத்திரு நாளுக்கு விட்ட நிலத்தின் எல்லை சொல்லும்போது ''பூக்கொல்லை புஞ்சை''[13] என்றே குறிக்கின்றான். மேலும் 'திருச்சோலைத்தெரு,' 'மதுரன் தோட்டத்தெரு' என்று தெருக்களின் பெயர்களையும் வைத்திருந்தனர் என்றும் அறியலாம்.

மேலே கூறியவை தவிர, செங்கழுநீர்ப் படுகை, ஓடை, மடுக்கள் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

> புனற் செறுவின் செங்கழுநீர் மலர்
> படுகர் வைகுந்த வளநாடன்[14]

என்று தளவாய்புரச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. !செங்கழுநீர் நட்ட குளத்தில், என இராஜராஜனின் தஞ்சைக் கல்வெட்டுக் கூறுகிறது. வேள்விக்குடிச் செப்பேடு செங்கழுநீர் மடுகளும்[15] என மடுக்கள் இருந்ததாகக் குறிக்கிறது. இம் மலர் நடுவதற்கு ஓடைகல்லுவித்ததாக ''செங்கழுநீர் ஓடையும் கல்லுவித்து'' எனக் கரிகால் சோழன் கல்வெட்டுப் பகர்கிறது. காஞ்சியில் பல செங்கழு நீர்[16] ஓடைகள் இருந்ததாக டாக்டர் மீனாட்சி கூறுகிறார்[17].

இந்நீர் நிலைகளில் செங்கழுநீர்க் கிழங்குகளை நட்டு மலரைப் பயிர் செய்தனர். முதல் பராந்தகனின் அதிகாரி சோழ வரையன் என்பான் அய்யப்பாடி என்ற ஊரைத் திருத்தும்போது ''செங்கழு நீர் மாவும்...... உள்ளிட்ட பயன்தரு மரங்கள் நடவும் இடவும்

பட்டது''[18] இதே செய்தியைத் திருவிடைமருதூர் கோயில் கல்வெட்டும், திருப்பைஞ்ஞீலி நீலிவனேஸ்வரர் கோயில் கல்வெட்டும் தெரிவிக்கின்றன.[19] முதல் இராஜராஜனின் திருவாலங்காட்டுச் செப்பேடும், லெய்டன் செப்பேடும்.

''கரும்பும் செங்கழுநீரும் உள்ளிட்டுத் தாம்
வேண்டும் பயிர் செய்து கொண்டும்''[20]

என்று கூறுகின்றன. இவ்வாறு நடப்பட்ட மலர்களைப் பயிர் செய்யவும், பறிக்கவும், மாலை தொடுக்கவும், இறைவனுக்குச் சாத்தவும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

மலரும் மக்கள் பணியும்:

இப்பணியாளர்களில் நந்தவனத்தைப் பராமரிக்கக் கோயில் காரியம் செய்கின்ற பெருமக்களில் ஒருவராகிய நந்தவனக்குடிகள்[21] இருந்தனர். 'நந்தவனம் இறைக்கும் அருந்தவத்தோர்' என இராசராசன் கல்வெட்டு அழைக்கிறது. இது போன்றே பூந் தோட்டங்களில் வேலை செய்தோரும் இருந்தனர். 'பூந்தோட்டம் அமைத்துப் பூஜைக்கு மலர் பறித்துக் கொடுத்ததாக, நெல்லை யப்பர் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.[22] நந்தவனம் இறைப்பார் முதலாக உடனுள் கடையாகப் பணியாட்கள் இருந்தனர். இக் கோயில் தானத்தோம் பூசிக்குத் தம்பியார் தலையாகக் கழுநீர் போகமிடுவான் கடையாக [23] என திருவண்ணாமலைக் கல்வெட்டுக் கூறுகிறது. திருப்பள்ளித்தாமம் பறித்தெடுத்துப் பணியாற்று வார்[24] திருப்பள்ளித்தாமம் ஆக்கப்பறித்து ஒடுக்குவார [25] பூ இடுவான்.[26] எனக் கல்வெட்டும், செப்பேடும் கூறுகின்றன. 'மாணிகள்' இப்பணியில் அமர்த்தப்பட்டதாக நங்கவரம் கல்வெட்டு கூறுகிறது. இவர்கள் பூப்பறித்து திருப்பூமண்டபத்தே சேர்த்தனர். அதனை மாலையாகத் தொடுக்க ஆட்கள் இருந்தனர். இப்பணியில் தேவரடியாள் பெண்களும் இருந்ததை மன்னார்குடிக் கல்வெட்டு தெரிவிக்கிறது.[27]

திருநந்தவனம் செய்வாருக்கும் திருப்பள்ளித்தாமம்
பறிப்பாருக்கும் என்று இறையாநரையூர் கல்வெட்டும்,
திருநந்தவனந் திருத்துவார்க்கும்
திருப்பள்ளித்தாமந் தொடுப்பானுக்கும்

என்று முதல் இராசேந்திரனின் கல்வெட்டும் பணியாளர்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றது.

நிவந்தங்கள்

இப்பணிகள் செய்கின்ற பணியாளர்களுக்கும், இத்திருப்பணி களுக்கும் கோயிலின் பெயராலும், நந்தவனங்களின் பெயராலும்

நிலங்கள் நிவந்தமாக விட்டிருக்கின்றனர். நந்தவனங்களின் பெயரால் விட்ட நிலங்கள் திருநந்தவனப்புறம் என்றும், செங்கழுநீர் மலர் பெயரால் விட்ட நிவந்தங்கள் திருச்செங்கழுநீர்ப்புறம் என்றும் கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றன. திருநந்தவனத்துக்கு நிவந்தமாக நிலம், மாடை, நெல், காசு இவை கொடுத்ததாக இறையாநரையூர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இதே போன்று செங்கழுநீருக்கு "திருவண்ணுமலை உடைய நாயனர்க்கு நாள் ஒன்றுக்கு திருச்செங்கழுநீர் திருப்பள்ளித்தாமஞ் சாத்தியிடக் கடவதாகவும இதுக்கு திருச்செங்கழுநீர் செய்கிற குவளைக் கிழவனுக்கு ஜீவிதத்துக்கு திக்காணைப் பெருமாநல்லூர் ரிரு......ஒடுக்கின காசு, இக்காசு இரண்டாயிரமும் கைக்கொண்டு இக்குழி ஐந்நூறும் இவ்வுமையாழ்வார்க்கு திருச்செங்கழுநீர்ப் புறமாகக் குடுத்தோம"[28] என்ற கல்வெட்டால காசும், நிலமும் கொடுத்ததாக அறகிறேம்.

பேரூர் கோஸ்திஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றால் செங்கழுநீர் ஓடை வெட்டவும், திருப்பள்ளித்தாமம் ஆக்குவானுக்கும், தாமம் சாத்துவதற்கும் நிலம் கொடுத்ததாகத் தெரிய வருகிறது.

> "ஆஞ்டையார் திருவாந்பட்டி உடையார்க்கு
> செங்கழுநீர் சாத்தியருள செங்கழுநீர் ஓடையுங்
> கல்லுவித்து செங்கழுநீர்த் திருப்பள்ளித்தாமம்
> ஆக்குவானுக்கு நிமந்தப்புறமாக விட்ட நிலமாவது
> செங்கழுநீர்ப் புறமாக விட்டநிலம்...செங்கழுநீர்
> திருப்பள்ளித்தாமம் சாத்துவதாகவும்"[29]

என்பது கல்வெட்டு.

மாறவர்மன் விக்ரமபாண்டியனின் உடையார் பாளையம் கல்வெட்டு நிலம் தேவதானமாகக் கொடுத்து அதனில் பயிர் செய்தும், அதனல் வரும் காசு, வரி இவைகள் கோவில் திருப்பணிக்குச் சேர வேண்டும் என்ற செய்தியைத் தருகிறது.

"நிலம் தேவதானமாகக் கொடுத்து அதில் கார், கமுகுசெங்கழுநீரும் உள்ளிட்டு வேண்டும் பயிர் செய்து இவை யித்தால் வருங் கடமை, குடிமை, காசு...உள்ளிட்ட வரிகளும் தேவைகளும் உபாதிகளும் தவிர்ந்து இன்றுள் முதலடங்க யிறையிலியாகவும் தந்தொம்..."[30] என்று கூறுகிறது. இவை தவிர கோயில் திருவிழா நாட்களில் இறைவனை எழுந்தருளப் பண்ணும்போது செங்கழுநீர் மற்றும் அமுதுபடி, சாத்துபடிகளுக்காக நிலம் தானமாக வழங்கி இருக்கின்ற செய்தியும் கிடைக்கிறது. பாண்டிய எரியூர் நாட்டுக் கருவுகுல வல்லத்து குலசேகரமுடைய நாயினர் கோயில்

சண்டேஸ்வரதேவர் முதல் ஆடித்திருநாள் எளுந்தருளுவிக்க "திருக்கொட்டுத் திருநாள் முதல் நாச்சியார் வரையாக அமுதுபடி சாத்துபடி திருச்செங்கழுநீர்த் திருப்பள்ளித்தாமம், திருவிளக் கெண்ணையாக......ஊரிலே நெந்து ஊரார்கள் எழுந்தருளிவிக்க"[31] அவ்வூரார் பரிசு கொடுத்திருக்கின்றனர். உபையத் திருப்பவனி யின்போது இறைவன் ஸ்நானமண்டபத்து எழுந்தருளிய பத்தாந் திருநாளில் அமுதுபடி சாத்துபடி, திருச்சாந்து, செங்கழுநீர் திருப் பள்ளித்தாமம் இவற்றுக்கு வேண்டிய பொருள்களை எலவாளுகுர் மக்கள் கொடுத்ததாக மாறவர்மன் வீரபாண்டியனின் 7-வது ஆண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[32] மேலே கண்ட சான்று களால் செங்கழுநீர் திருப்பள்ளித்தாமத்துக்கும் மற்றைய பணி செய்வாருக்கும் நிவந்தங்கள் வழங்கிய செய்தி பெறப்படுகிறது.

வரிகள்

விளைவிக்கின்ற மலர்களுக்கு மாவடை, மரவிறை என்று வரிகள் விதிக்கப்பட்டன. செங்கழுநிருக்கு செங்கொடிக் காணம், குவளைக் காணம் என்றும் வரிகள் விதிக்கப்பட்டன. நந்தவனத்தில் பணி புரிந்தோருக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.[33] செங்கழுநீர் நடு வதற்கு உரிமை பெற வேண்டும். பிரம்மதேயமும் தேவதான்ச் சிற்றூர்களும் வரி இல்லாமல் நடுவதற்கு உரிமை பெற்றிருந்தன.[34] இவ்வரிகளை ஊர் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

ஊர், நாடுகளின் பெயர்க்காரணம்

செங்கழுநீர்ப்பட்டு என்ற பண்டைய பெயர் மருவி இன்றைய செங்கல்பட்டாக அமைந்திருக்கிறது. அவ்வூர்க் கோவில் கல்வெட் டில் செங்கழுநீர்ப்பட்டு என்றிருக்கிறது. செங்கழுநீர்ப்பூக்கள் மிகுந் திருந்த காரணத்தால் இப்பெயர் அமைந்திருக்கலாம். ஊர் மட்டு மின்றி நாட்டின் பெயரும் அதுவேயாகி அந்நாட்டவருக்கும் "செங் கழுநாட்டார்" என்றே வழங்கி வந்திருக்கின்றனர். "செங்கழு நாட்டு குன்றத்தூருடை", "செங்கழுநாட்டு ஜம்மாக்கெல்லை" "மாய நாட்டாரும், செங்கழு நாட்டாரும்"[35] என்று பூவின் பெயரிட்டு மக்களையும், நாட்டையும், ஊரையும் அழைத்தனர்.

சமயமும், செங்கழுநீர் மலரும்

செங்கழுநீர் சிவனுக்கு உகந்த மலர் என தேவாரமும் 'கழுநீர் மாலை எழிலுடைத்தாக எழில் பெற அணிந்தும்,' 'கழுநீர்மாலைக் கடவுள் போற்றி' எனத் திருவாசகமும் பகர்ந்ததை நினைவிலிருத்தி சைவர்கள் செங்கழுநீர் தங்கள் இறையான மகேஸ்வரனுக்கே உரித்து என்று வாதிட்டதாகவும், வைணவர்கள் சைவர்களிடையே வாக்குவாதம் தொடர, திருக்கோட்டையூர் கால காலதேவர்

கோயிலில் உள்ள குலோத்துங்க சோழ திருவேட்டுக்கோட்டை என்ற மன்றத்தில் அவ்வூர் பொதுச்சபையினர் முன் வழக்கு கொண்டு வரப்பட்டது. என்றும் இறுதியில் தீர்ப்பின்படி சைவர் களிடமிருந்து அவர்கள் செய்த வீண்வாக்கு வாதத்தால் தேவதான மாகக் கொடுக்கப்பட்ட நிலம் பறிமுதல் செய்யப்பட்டது என்றும் கல்வெட்டுக் கூறுகிறது. இம்மலர் சைவ, வைணவர்களுக்கும் உரியது என்று அக்காலத்து மக்கள் கருதினர். இன்று கோவில்களில் உள்ள பெண் தெய்வங்கள் மலர் ஏந்தி இருப்பதைக் காணலாம்.

விநாயகரும், செங்கழுநீரும்

சென்னையில் தங்கசாலைத்தெருவில் உள்ள விநாயகருக்கு செங்கழுநீர் விநாயகர் என்றும், அக்கோயில் செங்கழுநீர் விநாயகர் கோயில் என்றும் அக்கோவில் கல்வெட்டில் காணப்படுகிறது.[36] தாரமங்கலம் என்ற ஊரிலும் செங்கழுநீர் விநாயகர் இருப்பதாகக் கல்வெட்டுக் கூறுகிறது. சண்டேஸ்வர தேவர்க்குப் பொன்னால் செங்கழுநீர் மாலை செய்து சாத்தியதாகப் பஞ்ச நதீஸ்வரர் கோயில் கல்வெட்டு கூறுகிறது.[37]

> குவளையும் கழுநீரும் அறிவின் அடையாளங்கள் அருளாளர் மாலைகள்[83]

எனத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கூறுகிறார். பண்டைத் தமிழகத்து மக்கள் அறிவை மலருக்கு ஒப்பிட்டு அதனை ஆண்ட வனின் பாதங்களில் சமர்ப்பித்து அருளாகிய இன்பத்தைப் பெற் றிருக்கின்றனர். இறைவன் என்றும் அருள் வடிவுடையவன் எனக் கொண்டு கழுநீர் மாலைகள் சூட்டி மகிழ்ந்திருக்கின்றனர். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அறிவும், அருளும் இணைந்த ஆண்டவன் சந்நிதியில் நிற்கும்போது அறிவை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து அருளை வேண்டி இருந்திருக்கின்றனர். இவ்வாறே விநாயகரை ஆதிபரம் பொருளாக மூலப்பொருளாக நினைத்து செங் கழுநீராம் அறிவை அவனிடத்து விட்டு அருளை யாசித்திருக் கின்றனர். அகிலமெல்லாம் ஆளுகின்ற அன்னை பராசக்தியினிடம் அறிவு அடக்கம் என்பதுபோல் அவள் மலர்க்கரம் இம்மலரைத் தாங்கி இருக்கிறது. இதன் அடிப்படையில் செங்கழுநீர்மலரை இறைவனது வழிபாட்டிற்குரிய பொருளாக அக்கால மூதறி வாளர்கள் பயன்படுத்தி இருக்கின்றனர்.

இறைவனது வழிபாட்டிற்காகப் பொன்னால் செய்த செங்கழு நீர்ப்பூவும், செங்கழுநீர் மாலையும் சண்டேஸ்வர தேவர்க்கு சாத்தி வழிபட்டதாக உத்தரகைலாசம் கோவில் கல்வெட்டு

கூறுகிறது. இங்ஙனம் செங்கழுநீர் மலரைச் சமயத்தோடு தொடர்பு படுத்தி இருந்தனர் பண்டைத் தமிழர்.

குறிப்புகள்

1. Tamil Lexicon — 'CHE' Line.
2. S I. I., IV சுந்தர பாண்டியன் கல்வெட்டு.
3. S. I. I, II P. 54
4. Administration and Social Life under the Pallavas. Dr. C. Minakshi' p 153.
5. The Journal of the Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library—A. Vadivelan.
6. திருச்சோழபுரம் கல்வெட்டு.
7. S. I I., III, 151, 151A
8. Ibid.
9. S. I. I, VIII, 56.
10. S I. I., VIII, 16.
11. S. I. I. V III 87.
12. S. I. I. V, 435.
13. கோயிற் சாசனங்கள் — இராஜகேசரிவர்மன் — திருக்கருகாவூர் (விறைக் கூற்றம்).
14. தளவாய்புரச் செப்பேடு—பாண்டியன் டராந்தக வீரநாராயணன்.
15. வேள்விக்குடிச் செப்பேடு—நெடுஞ்சடையன் பராந்தகன்.
16. கோஸ்தீஸ்வரர் கோயில் (போரூர்) (கோயம்புத்தூர்)—கரிகால்சோழன்.
17. பல்லவர் வரலாறு, டாக்டர் இராசமாணிக்கனார்.
18. S I. I, XIX, 344.
11. திருப்பைஞ்ஞீலி—முசிறி தாலுகா.
20. பெரியலெய்டன் செப்பேடு திருவாலங்காட்டுச்செப்பேடு முதல் இராசராசன் S. I. I., III.
21. S. I. I., XIV, 132.
22. S. I. I., V,. நெல்லையப்பர் கோயில்—சுந்தரபாண்டியன்.
23. S. I. I., II. திருவண்ணாமலைக் கல்வெட்டு
24. S. I. I, IV 512
25. S. I. I. IV 425.
26. பார்த்திவேந்திர செப்பேடு கோக்கருநந்தடக்கன்—மே நூ. வரி 16,

27. S. I. I., XIV 132,

28. திருவண்ணாமலை கல்வெட்டு எண். 93.

29. S. I. I. V 240.

30. உடையார்பாளையம்—ஆதனூர்—எடையாறு சிவன் கோயில்— I மாறவர்மன விகரமபாண்டியன.

31. எரியூர்நாடு கருவுகுலவல்லம்—குலசேகரம் உடையார் காடனூர் கோயில்—பாண்டியன் குலசேகரதேவன்.

32. எலவானூர்—மாறவர்மன் வீரபாண்டியன், வரலாற்றுப் படிவங்கள், குப்புசாமி, பக். 164—165.

33. S. I. I., III

34. பல்லவர் வரலாறு—டாக்டர் இராசமாணிக்கனார்.

35. ஆய்குல மன்னனின் கோகருந்தடக்கள்—பார்த்திவ சேகரபுரச் செப்பேடு.

36. சென்னை நகரக் கல்வெட்டுகள்—இரா. நாகசாமி.

37. S. I. I., X திருவையாறு.

38. கானல்வரி, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், ப. 53.

தென்னை வளம்

வெ. இராதாகிருஷ்ணன்

முன்னுரை

வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளை அள்ளித் தருகின்ற தென்னை மரம் 'கற்பகத் தரு' என்றே அழைக்கப்படுகிறது.[1] பல்லாண்டுகளாக தட்ப வெட்ப நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியின் சின்னமாக அது விளங்கி வருகிறது. இலக்கியங்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள் ஆகிய ஆதாரங்களின் துணை கொண்டு தென்னை பயிரிடுதலின் தொன்மையை அறிய முடிகிறது.

தோற்றம்

தென்னிந்தியாவில் மிகுதியாகக் காணப்பெறும் தென்னந் தோப்புகள், முதன் முதலில் மலேயா தீவுகளில் பயிரிடப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. நில இயல் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவும் தன்னகத்தே நிலை பெற்றுள்ள தென்னை சாகுபடி பற்றி, அதன் தொன்மையைக் குறிக்க, பல்வேறு புராணக் கதைகளும் மரபு வழிச் செய்திகளும் எடுத்துரைக்கின்றன. புராணங்களில் தென்னை பற்றி இடம் பெறும் குறிப்புகள்,பாரத நாட்டில் தென்னை சாகுபடியின் தொன்மையை எடுத்தியம்புகின்றன. கடலுக்கடியிலுள்ள நாகலோகத்தினின்று ஓர் அரசனால் இந்தியாவிற்கு தென்னை மரம் கொணரப் பட்டதாகவும், பின்னர் இலங்கைக்கு எடுத்துச் செல்லப் பட்டதாகவும் ஒரு வழக்காறு உள்ளது. வேறு சில மரபுகள் தென்னை இலங்கையிலிருந்து இந்தியாவிற்குக் கொணரப் பட்டதாகக் கூறுகின்றன.

பயிரிடப்படும் இடங்கள்

தென்னை பயிரிடப்படும் நாடுகளில் குறிப்பிடத்தக்கவை, கிழக்கிந்தியத் தீவுகளில் உள்ள மலேயாவும் மேற்கு மத்திய பசிபிக் கடல் தீவுகளும் இலங்கையும் இந்தியாவின் கடலோரப் பகுதிகளுமாகும். இந்தியாவின் மலபார் கடலோரப் பகுதிகளில் சிறப்பாக நடைபெறும் தென்னை வளர்க்கும் தொழிலும் அதையொட்டிய சிறு தொழில்களும் அவற்றால் பயனடையும் கிராம வாழ்க்கையும் தென்னையின் தொன்மையைப் பறை சாற்றுகின்றன.

பல்வேறு பெயர்கள்

கல்வெட்டுக்களில் தென்னை பயிரிடப் படும் இடங்கள் பல் வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'தெங்கு நந்தவனம்,'[2] 'தெங்குத் தோட்டம்,'[3] 'தெங்குக் கொடி தொட்ட நிலம்,'[4] 'தெங்கஞ் செரு,'[5] 'தெங்கிட்ட நந்த வனம்,'[6] 'தெங்கு நாடு'[7] முதலியன.

இலக்கியங்களில்

பண்டைய தமிழ்க் கவிஞர்களின் சொல் நயத்திற்குத் தென்னை யும் அதைச் சார்ந்த உவமையும் மிகுந்த உறுதுணையாக அமைந்தன என்று சொல்லவும் வேண்டுமோ? நாட்டின் இயற்கை வளத்தைப் பற்றிய வர்ணனை தென்னையைக் குறிப்பிடாமல் முழுமையாகாது. சங்க இலக்கியங்களில் வரும் தென்னை மரம் பற்றிய பல குறிப்புகளி லிருந்து அக்காலந்தொட்டே தென்னைப் பயிரிடுதலின் தேர்ந்த நிலையை அறியலாம்.

> தெங்கிளநீருதிர்த்தும்
> வளமிகு நன்னாடு[8]

தேங்காயை, 'தாழை,' 'தென்,' 'நாள் கேரம்,' 'இளங்கழி,' போன்ற வேறு பெயர்களால் சூடாமணி நிகண்டு அழைக்கிறது. தென்னை மரத்தினின்று வலை போன்ற அமைப்பில் கிடைக்கும் வடிகட்டும் பொருளுக்குப் பன்னாடை என்று பெயர். பண்டை நாட்களில் அதற்கு, 'நெய்யரி,' 'நாரி,' போன்ற வேறு பெயர் களும் வழக்கில் இருந்தன.

> தாழை தென்னாளி கேரமிலி லாங்கலிதாந் தெங்கின் பேர்
> சூழு நெய்யரி பன்னாடை சொல்லிய நாரியும் பேர்[9]

அக்காலத்தில் கள் வடிகட்டுவதற்குப் பன்னாடை பயன்பட்டது.

> நாரரி நறவி னுண்மகிழ் தூங்குந்து
> போதறியேன் பதிப்பழகவிம்.........[10]

யாப்பருங்கல விருத்தி தேங்காயைத் 'தெங்கங்காய்' என்று குறிக்கிறது,

> தெங்கங்காய் போலத் திரண்டுரண்ட
> பைங்கூந்தல்[11]

தேவாரத்தில் தென்னை மரம் பின் வருமாறு அழைக்கப்படுகிறது.

> தெங்கங்களும் நெடும் பெண்ணையும்
> பழம்வீழ் மணற் படப்பை[12]

செப்பேடுகளில்

புதிய ஊர்கள் அமைக்கப்படும் போதெல்லாம் மக்கள் தென்னை போன்ற பயன் தரு மரங்களை நட்டதாகச் செப்பேடுகள் கூறுகின்றன.[13] பொது இடங்களில் கள் இறக்குவதற்காகத் தனி மனிதர்களால் தென்னை, பனை மரங்கள் நடப்பட்டன. கள் இறக்குவோர் 'ஈழவர்'[14] என்று அழைக்கப் பட்டனர். பிரம்ம தேய ஊர்களும் பள்ளிச் சந்தங்களும் அமைக்கப்பட்ட போது தென்னையைத் தவிர, மரு, தமனகம், இருவாட்சி, செண்பகம், செங்கழுநீர், மா, பலா, கமுகு முதலிய ஏனைய பயன் தரு மரங்களும் நடப்பட்டன.[15]

கல்வெட்டுகளில்

தொல்லையில்லா வாழ்க்கை நன்கு அமைவதன் பொருட்டு [நிதிப் பற்ருக்குறை அல்லது வேறு] விவசாயிகள் தென்னை போன்ற பயன்தரும் மரங்களை நட்டுச் சாகுபடி செய்தனர்.

> தெங்கும் பலாவும் தேமாஞ்சோலையும் வாழையும்
> கமுகும், வளர் கொடி முல்லையும் பூவையும் கிள்ளையும்
> பொலிவோடும் கெழுமி வாட்டம் இன்றி கூட்டம்
> பெருக[16]

'வாட்டம் இன்றி' என்னும் சொற்றொடர் 'எவ்வித கவலையும் இன்றி' என்ற பொருளில் வந்தது. ஆதலின் அக்காலத்தில் ஒருவருடைய வறுமையைப் போக்க அவர் சில தென்னை மரங்களைப் பயிர் செய்து பராமரித்தால் போதுமானது என்று கருதப்பட்டு வந்தது.

ஆலயங்களில் நாள் வழிபாடுகளும் ஏனைய சிறப்பு வழிபாடுகளும் நடை பெறுவதற்கு ஆலய நிலங்களில் தென்னை வளர்க்கப் பட்டது. தென்னந்தோப்புகள் ஆலயத்திற்குக் கொடையாக அளிக்கப் பட்டன. தில்லையில் இருமருங்கும் தென்னை பல செறிந்த வீதியொன்று 'விக்கிரம சோழன் தெங்குத் திருவீதி'[17] என்றே அழைக்கப்பட்டது. திருவண்ணாமலைக் கல்வெட்டொன்று மங்கையர்க்கரசி என்னும் மங்கை நல்லாள் நாற்பத்தெண்ணாயிரம் தென்னை மரங்கள் கொண்ட ஒரு தோப்பையே கொடையளித்தது பற்றி பகருகின்றது.[18] திருவாவடுதுறை மஹாதேவர்க்கு எழுநூறு தென்னை மரங்களடங்கிய ஒரு நந்தவனம் சொந்தமாக்கப் பட்டது.[19] சங்கையனெற்றி என்பார் ஆயிரம் தென்னை மரங்களடங்கிய தோப்பையே அவ்விறைவனுக்குக் காணிக்கையாக்கினார்.[20] இறைவனுக்கு இளநீரால் திருமஞ்சனம் ஆட்டுவிப்பதற்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதற்கு சான்றுகள் உள்ளன. மேலும் இறைவனுக்கு இளநீர் அமுது படைப்பதற்கு ஆறு கருங்

காசுக்கு இளநீர்கள் வாங்கப்பட்டு ஆலயத்திற்கு அளிக்கப்பட்டதாக அறிகிறோம்.[21]

சில சந்தர்ப்பங்களில் ஆலயங்களுக்குக் கொடையளிக்கப்பட்ட நிலங்களில் முழுதும் தென்னையே பயிரிடப்பட்டு விளைச்சல் முழுவதும் ஆலய உபயோகத்திற்காகவே அளிக்கப்பட்டுள்ளது. தென்னந்தோப்புகளைப் பராமரிக்கும் உரிமையைச் சிலகுடும்பங்கள் பெற்றன.[22] தென்னை நந்தவனம் அல்லது தென்னந்தோப்பைக் காக்கும் பொறுப்பேற்றவர் 'வேலிக்காவல்' என்று அழைக்கப்பட்டார்.

தற்காலத்தைப் போன்றே பண்டைய நாட்களிலும்தேங்காய் மிகவும் தேவைப்பட்ட பொருள்களில் ஒன்றாக விளங்கியது. சமய சமையல் பணிகளுக்கு அது பெரிதும் பயன்பட்டது. தென்னந்தோப்பின் உரிமையாளர்கள் தேங்காய் விளைச்சலில் நல்ல வருவாய் ஈட்டினர். அநேகமாக பெரும்பாலான தேவதான, பிரம்மதேய ஊர்களில் தென்னை மிகுதியாகப் பயிரிடப்பட்டது.

பிரமதேசத்து தோப்பிலே நூற்றைம்பது
தெங்கம்பிள்ளை வைய்க்கையாலும்......[23]

என்று கல்வெட்டு கூறும்

பயிர்கள் 'வான்பயிர்', 'புன்பயிர்' என்று பிரிக்கப்பட்டன. ஏரி, குளம், வாய்க்கால் இவற்றின் நீர்ப்பாசனத்தில் உட்பட்ட நிலங்களில் விளையும் பயிர்கள் 'வான்பயிர்' என்று பெயர் பெற்றன. தென்னையும் வான்பயிர் வகையைச் சார்ந்தது.

கமுகு தெங்கு வாழை கொழுந்து
மஞ்சள் இஞ்சி கருணை கரும்பு
செங்கழுநீர் உட்பட வான்பயிர்[24]

தஞ்சை மாவட்டம் திருக்கண்ணபுரம் அருள்மிகு சௌரிராஜ பெருமாள் ஆலயத்திலுள்ள மூன்றும் இராஜேந்திர சோழனின் பதினெட்டாம் ஆண்டுக் கல்வெட்டு தென்னை பயிரிடுதலைப் பற்றி விளக்குகிறது. ஆலயத்தை அடுத்துள்ள வீதியில் வீடுகள் கட்டுவதற்காக நிலம் ஒதுக்கப்பட்டது. ஏழு கோல் நீளம் மூன்றுகோல் அகலம் கொண்ட நிலப்பரப்பில் வீடுகள் கட்டப்பட்டன. வீடுகள் கட்டி முடிந்ததும், அவற்றைச் சுற்றியுள்ள வெற்று நிலப்பரப்பில் தென்னை பயிரிட ஆணையிடப்பட்டது. இத் தென்னைமரங்கள் ஸ்ரீபண்டாரம் எனப்படும் ஆலயக்கருவூலத்தின் சொத்தாகும். இளங்கன்றுகளுக்கு ஆறு ஆண்டுகள் நீர் ஊற்றி வளர்த்தல் வேண்டும். இவ்வாறுண்டுகளில் கன்றுகள் மரங்களாகும் நிலையை அடைந்தன. இம்மரங்களைப் பராமரிப்பவர்கள் ஆலய ஸ்ரீபண்டாரத்தில் ஒரு கோல் நிலத்திற்கு மூன்று உழக்கு விதம் தேங்காய் எண்ணெய்

அளித்திட வேண்டும். இக்கல்வெட்டினின்று தென்னையைக் கன்று நிலையிலிருந்து பராமரித்து ஆலய ஸ்ரீபண்டாரத்திடம் தேங்காய் எண்ணெய் அளிக்கும் பணி வரை உள்ள பொறுப்பை ஆலய நிலத்தில் வீடுகட்டி வசிக்கும் மக்களே ஏற்றுக்கொண்டனர் என்பது தெளிவாகிறது.

பிரம்மதேய—தேவதான ஊர்கள்

தென்னந்தோப்பு வளர்ப்பதற்கு பிரம்மதேய—தேவதான ஊர்கள் அரசு ஆணை பெற்றிடல் வேண்டும்.

காவு தெங்கிடப் பெறுவதாகவும்[25]

பிரம்மதேயம் மற்றும் தேவதானம் அல்லாத ஏனைய ஊர்களில் தென்னை பயிரிடப்படுவதில்லை என்பது இதனால் புலனாகின்றது. மேலும் ஆலயங்களுக்கும் அந்தணர்களுக்கும் அளிக்கப்பட்ட தேவதான—பிரம்மதேய ஊர்களைத் தவிர்த்து மற்ற ஊர்கள் தங்கள் விளைநிலங்களின் விளைச்சலில் ஒரு பகுதியை அரசுக்குச் செலுத்த வேண்டும். தேவதான—பிரம்மதேய ஊர் தென்னை மரங்களில் கள் இறக்குவோர் ஏறக்கூடாது என்ற தடையும் வழக்கில் இருந்ததாகச் செப்பேடுகள் கூறுகின்றன.

ஈழவர் ஏறப் பெறாதாராக......[26]

கள் இறக்குவதை எதிர்த்தும் கள்ளுண்ணாமையை ஆதரித்தும் மக்களை நல்வழிப்படுத்த வேண்டி முன்னோடியாகத் திகழ்ந்த தேவதான—பிரம்மதேய நிலங்கள் வரிவிலக்குப் பெற்றன.

கள் இறக்குவோர் மீது விதிக்கப்பட்ட வரிகள்

கள் இறக்குவதற்கென்றே தென்னை பயிரிடப்படுவது அக்காலத்திலும் வழக்கமாக இருந்தது. கள் இறக்குவோர் மீது, அவர்கள் அத்தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்கும் பொருட்டு 'ஈழம் பூட்சி' என்னும் வரி விதிக்கப்பட்டது.

பழைய மரங்களின் அடிமரத்தில் கால் பகுதியின் விலை அரசுக்குச் சேரவேண்டியது. காசாக்குடிச் செப்பேடுகள், பாக்கு, தென்னை மரங்களினின்று பெறப்பட்ட வரியைக்குறிக்கின்றன. 'சாற்றுவரி', பனம்பாகு' ஆகிய வரிகள் கள் இறக்குவதினால் விதிக்கப்பட்ட, தீர்வையாகத் தெரிய வருகின்றது. இம்மரங்களின் சொந்தக்காரர்கள் தாங்கள் செய்யும், கள்ளிறக்கும் பணிக்குத் தீர்வையாக இவ்வரியைச் செலுத்தினர் என்றும் தெரிய வருகிறது. ஈழம் பூச்சி வரியினின்று சாற்றுவரியும், பனம்பாகும் சற்றே மாறுபட்டவை.

பஞ்சம், வறட்சிக் காலங்களில் தேங்காய் பயிரிடுவோரின் பங்கு சற்று அதிக அளவில் நிலை நிறுத்தப்பட்டது. விஜயநகரமன்னர் வீரப்பிரதாப அச்சுததேவராயரின் கல்வெட்டு ஆலயப் பண்டாரத்தார், முகவர்க்கும் தென்னை பயிரிடும் குடித்தனக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. தென்னை பயிரிடுவோர் வறட்சியைக் காரணங்காட்டிப் புதிய தென்னங்கன்றுகள் நடுவதின் அவசியத்தை வலியுறுத்தினர். ஆலய அதிகாரிகளும் அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டு அவ்வாறு நடப்பட்டு பராமரிக்கப்பட்ட புதிய தென்னங் கன்றுகளின் விளைச்சலினின்றும் அதிகப்படியான பங்கு பெறுதற்கு அனுமதியளித்தனர்.

பண்டைய தமிழக மக்களின், சமூக, பொருளாதார, சமயவாழ்வில் தென்னையின் பங்கு குறைத்து மதிப்பிட முடியாத அளவுக்குச் சிறப்புற்று விளங்கியது என்பது பல்லாற்றானும் தெரிய வருகிறது.

குறிப்புகள்

1 Coceanut cultivation, C. M. John. p 1-2.
2 SII, xix, 25
3 236 of 1921/22
4 யாவரும்கேளிர், டாக்டர் இரா. நாகசாமி. ப. 146-147
5 62 of 1900
6 103 of 1900
7 சிலம்பு. 8-1 உரை
8 புறம் 29
9 சூடாமணி நிகண்டு, பகுதி 4, மரங்களின் பெயர்கள்
10 புறம் 400. 11. 14-15
11 யாப்பு 95, 372
12 தேவாரம் 849, 8
13 வேலூர் பாளையச் செப்பேடுகள் SII, iii
14 திருவாலங்காட்டுச் செப்பேடுகள் SII, iii
15 Ibid
16 யாவரும்கேளிர், டாக்டர் இரா. நாகசாமி, பக்கம் 107
17 SII, viii, 151
18 Ibid
19 SII, xix, 26
20 SII, xix, 26

21 242 of 1972
22 SII, v, 251
23 SII viii, 551
24 SII, vii, 21
25 SII ,ii. 36.
26 தண்டந்தோட்டம் செப்பேடுகள்
யாவரும்கேளிர், டாக்டர் இரா. நாகசாமி, பக்கம் 143
27 ராயகோட்டை செப்பேடுகள்

கொடி வேலி

மா. சந்திரமூர்த்தி

கொடிவேலி மிகச் சிறந்த மருந்துச் செடியாகும். கொடிவேலியில் மூன்றுவகை உண்டு. அவை வெண்கொடிவேலி, கருங்கொடிவேலி, செங்கொடிவேலி என்பன. இவற்றில் வெண்கொடிவேலியை Plumbago Zeylania என்று தாவரவியல் நூல்கள் குறிக்கின்றன. இதனுடைய வேர் அதிகமாக ''சித்தமருத்துவத்'' திற்குப் பயன்படுகிறது. இதனைப் பதார்த்த குணவிளக்கம் என்னும் நூல் 'கொடிவேலி' எனக்கூறும். அடுத்த வகையான செங்கொடிவேலியைத் தாவரநூல்கள் 'பிளும்பாகோ ரோஸியா', (Plumbago Rosea) எனக் குறிக்கிறது. இது நஞ்சு நிறைந்த கொடியாகும். சிவப்புப் பூக்களைக் கொண்ட இனம் செங்கோட்வேரி எனப் பட்டது. பொதுவாகக் கொடிவேலியும் சித்திரமூலமும் ஒன்றே ஆகும். செங்கொடிவேலி சிவப்பு சித்திரமூலம் என அழைக்கப் பட்டது.

இலக்கியம்

சங்க இலக்கியங்களில் செங்கொடுவேரியைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. பத்துப்பாட்டுகளின் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு செங்கொடுவேரியைக் குறிக்கிறது. இந்நூல் குறிக்கும் பல்வேறு மலர்களில் செங்கொடுவேரிப் பூவும் குறிக்கப்படுகிறது.[1]

> ஒண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சம்
> தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
> செங்கொடுவேரி தேமா மணிச்சிகை
>
> (குறிஞ்சிபாட்டு 65. 64)

எனவே சங்க காலத்தில் இச் செங்கொடுவேரியை அறிந்திருந் தனர். இச் செடியைப் பற்றிச் சிலம்பும் குறித்துச் சொல்கிறது. இச் செடி சோழ மண்டலத்தில் உற்பத்தியானதாக அறிகிறோம்.

பெருங்கதையும் செங்கொடுவேரியும்

பல்லவர் காலத்தில் (கி பி 600—850) தோன்றிய இலக் கியங்களில் பல மருத்துவக் குறிப்புகளைக் காணலாம். இக் காலத்தில் சமணர்கள் இயற்றிய காப்பியங்களில் 'பெருங்கதை'

யும் ஒன்று. பெருங்கதை என்பது கவிஞர் பெருமாளுகிய கொங்கு வேளிர் என்பாரால் இயற்றப்பட்ட ஒரு தொடர் நிலைச் செய்யுள் ஆகும்.[3] எனவே இந்நூலுக்கும் 'கொங்குவேளிர் மாக்கதை, என்று பெயர் வழங்குகிறது. ஆசிரியர் விசயமங்கலத்தினர் வேளாளர் மரபிலே வந்த சிற்றரசர்.[4] இந்நூல் சொற்சுவை, பொருட்சுவைகளிற் சிறந்தது. தெள்ளிய இனிய நன்னடை வாய்ந்தது. மருத்துவத்தைப் பற்றியும் இந்நூலில் அறியலாம்.

இந்நூலில் இலாவாண காண்டம் பகுதியில் மருத்துவச் செடிகளைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம். அனிச்சம், வேங்கை, வேய், நறைக் கொடி, நந்தியாவட்டம், திகிரி, பயின், தில்லை, முல்லை, வெட்சி, நாரத்தை, சூராளம், சேபாலகை (நீர் நொச்சி) செங்கொடுவேரி ஆகிய மரங்கள், செடிகள் குறிக்கப்படுகின்றன.

மேற்குறித்தவற்றில் செங்கொடுவேரி என்பது குறிக்கப்பட்டுள்ளதால், இது கி.பி. 7. ஆம் நூற்ருண்டில் தமிழகத்தில் இருந்தது என்பதை அறிகிரேும்.

சேபாலி கையுஞ் செங்கொடு வேரியும்

(பெருங். 2. 12. 25.)

இலக்கிய நூல்கள் செங்கொடுவேரியைக் குறிக்கின்றன. இதன் மருத்துவப் பயனைப் பற்றிக் குறிக்கவில்லை. ஆனல் இந்தச் செடியை அறிந்திருந்தனர் என்பது தெளிவு. இச்செடி எந்தப் பகுதியில் விளைந்தது என்பதையும், சங்ககாலம் தொட்டு தமிழகத்தில் இருந்து வந்துள்ளது என்பதையும் உணரலாம். தமிழ் சொல் தொகுதியில் இச் செடி கொடுவேரி, கொடுவேலி, செங்கொடுவேலி எனக் குறிககப்பட்டுள்ளது.[5] இதுவே சித்திரமூலம் எனவும் தெளிவு படுத்துகிறது. இதனைச் சித்திரகா (citraka) எனவும் குறிப்பர்.[6] வடமொழி நூல்கள் இதற்கு நெருப்புக்கு உள்ள பெயரைக் குறிக்கின்றன. அதாவது சித்ரகா, வாணி, பதின் என்பர்.[7] ரணத்திற்கும் சுட்டால் உண்டாகும் புண்ணுக்கும் இது தக்க மருந்துச் செடி என வடமொழி நூல்கள் குறிக்கின்றன.[8] பதார்த்த குண விளக்கம் என்னும் இந்நூல் இச்செடியைக்'கொடுவெலி' என்றே குறிக்கிறது. இதன் பயனையும் இந்நூல் விரித்துரைக்கிறது.[9]

வரலாறு

இச் செங்கொடுவேரி என்னும் மருந்துச் செடியைப் பற்றிப் பல்லவர் காலச் செப்புப் பட்டயங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.[10] இந்த மருந்துச்செடியைப் பட்டயங்கள் 'செங்கொடி' என்றே குறிக்கின்றன. வடஆற்காடு மாவட்டத்தில் புல்லூர் கிராமத்தில் கிடைத்த பட்டயத்திலும், தஞ்சை மாவட்டத்தில்

காரைக்கால் என்னும் ஊருக்கருகில் காசாக்குடி என்னும் கிராமத்தில் கிடைத்த பட்டயத்திலும் இச்செங்கொடியைப் பற்றிய செய்தி காண்கிறோம். எனவே வடஆற்காடு, தஞ்சை மாவட்டப்பகுதியில் இவை பயிரிடப்பட்டிருக்கும் என்பதை உணர முடிகிறது. பல்லவர் ஆட்சியில் உள்ள சாசனங்கள் இச்செடியைக் குறித்த காரணத்தாலும், அக்காலத்தில் ஏற்பட்ட மருத்துவ வளர்ச்சியை அறியமுடிகிறது. இச்செங்கொடியைப் பயிரிட அரசு உரிமை பெற வேண்டும். இதற்குச் செலுத்தப்பட்ட வரி 'செங்கொடிக் காணம்' எனப்பட்டது. எனவே பல்லவர் காலத்தில் இத்தகைய மருந்துச்செடியைக் கொண்டு சல்லியைக் கிரியைக் செய்யும் வல்லமை படைத்தோர் இருந்திருப்பர் எனக் கருதலாம்.[11] நந்திவர்மனின் புல்லூர் செப்பேடுகள் செங்கொடியைப் பற்றிக்கூறும் வரிகளைக் காண்போம்.

> பிராமணிச்சக் காணமும், கண்ணிட்டுக்காணமும்,
> கால் கொட்டுக் காணமும், செங்கொடிக் காணமும்
>
> (வரி 117, புல்லூர் செப்பேடு)

நந்திவர்ம பல்லவ மன்னனின் காசாக்குடி செப்பேடுகள் இச்செடியைப் பற்றிக் கூறும் வரிகளை நோக்குவோம்.

> செங்கொடிக்காணமும், கல்லாலக் காணமும்,
> கண்ணிட்டுக் காணமும்[12]

''காணம்'' என்ற சொல் வரியைக் குறிக்கும். 'செங்கொடிக் காணம்' என்பது செங்கொடி பயிரிடச் செலுத்த வேண்டிய வரியாகும். இவ்வாறு பல்வேறு மூலிகைகளைப் பயிரிட அரசு உரிமை பெறவேண்டி இருந்தது.

எனவே 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியமான குறிஞ்சிப் பாட்டில் 'செங்கொடுவேரி' குறிக்கப்படுவதாலும், பல்லவர் காலக் காப்பியமான பெருங்கதை இச்செடியைக் குறிப்பதாலும், பல்லவர் காலச் செப்பேடுகள் குறிப்பதாலும் இச்செடியின் தொன்மை வரலாற்றினை நன்கு உணரலாம்.

மருத்துவம்

இந்தக் கொடிவேலியின் வேர் பல்வேறு நோய்களுக்குப் பயன்படுகிறது.

இது சிரங்கு, சொறி, புண், உதரக்கட்டு, வாதரோகம், மூலரோகம், குத்தல், மகோதரம், வித்திரிதி, இரணம், சுட்டால் உண்டாகும் புண் ஆகியவற்றைப் போக்கும் சிறந்த சஞ்சீவியாகப் பயன்படுகிறது.

செய்யும் முறை : கொடிவேலியின் வேர்ப்பட்டையை அரைத்து அரைப்பாக்கு அளவு எடுத்து, அதனை பசுவின் பாலிலோ அல்லது வெள்ளாட்டின் பாலிலோ கலக்கி இரண்டு வாரம் கொடுத்து வந்தால் சூலைக்கட்டு, சூலைபிடிப்பு, வெடிசூலை, உடலின் பகுதியை கரடுமுரடாக்குஞ்சூலை, உள்மூலம், கிரந்தி, பழைய சுரம் ஆகிய வற்றைக் குணப்படுத்தும் என மருத்துவ நூல்கள் குறிக்கின்றன.

பெண்களுக்கு வீட்டு விலக்கம் சரியாகக் காணுத சமயத்தில் கொடிவேலி சிறந்த சஞ்சீவியாகப் பயன்படுகிறது. கொடிவேலி யின் வேர்ப்பட்டையை அரைத்து அரை சுண்டைக்காய் அளவு எடுத் துக் கொள்ள வேண்டும். இதனைக் கோழிமுட்டையில் உள்ள வெள்ளைக்கருவுடன் பெண்களுக்குக்கலக்கிக் கொடுக்க மாதவிலக்கம் சரியாகக் காணும். இம்மருந்தைத் தினம் காலை மாலை 3 நாட் களுக்குக் கொடுத்துவரச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

மூலரோகத்தை நீக்கும் முக்கிய மருந்துகளில் ஒன்ருக இது விளங்குகிறது. ஒருபடி பசுவின்பாலில் ஒருபலம் சித்திரமூலத்தின் பச்சைப்பட்டையைத் தட்டிப்போட்டு சிவக்கக் காய்ச்ச வேண்டும். பிறகு வடிகட்டி உரைமோர் குத்தி மறுநாள் அதனைக் கடைந்து வெண்ணெய் எடுக்க வேண்டும். இதனை உணவில் இட்டுச் சாப்பிட லாம். அதில் எடுத்த மோரையும் குடிக்கலாம். இப்படி மூன்று நாட்கள் சாப்பிட்டுவர மூலமுளை அற்றுவிடும் என்று மருத்துவநூல் குறிக்கிறது.

கொடிவேலி வேர், பசுநெய், நல்லெண்ணெய், வெள்ளை வெங்காயம் ஆகியவற்றை வகைக்குப் போதிய அளவு எடுத்துக் கொண்டு காய்ச்சி வடித்த நெய் 'சித்திரமூல நெய்' என அழைக்கப் படுகிறது. இதனை உபயோகப்படுத்த வெள்ளை, கைகால் பிடிப்பு, உட்கொதிப்பு, சூதகபந்தம் ஆகியவற்றைக் குணப்படுத்தும். இவ்வாறு கொடிவேலியின் வேரையும் மற்ற மருந்துப்பொருள்களை யும் சேர்த்துத் தயாரிக்கப்படுவது'கொடிவேலி சூரணம்' எனக்கூறப் படும். இது கிராணி, மூலவாயு, உதிரவாயு நீக்கும் மருந்தாக விளங்குகிறது. இக்கொடிவேலியின் சிறப்பை,

> கட்டி விரணங்கிரந்தி கால்க ளரையாப்புக்
> கட்டி சூலை வீக்கங் காழ்மூல – முட்டிரத்தக்
> கட்டி நீரேற்றங் கனத்த பெருவயிறு
> மட்டுங் கொடுவேலியாம்

என்று மருத்துவநூல் கூறும். இந்தக் கொடிவேலியின் வேரை மிகவும் ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண்டும். சிலர் தவருன வழியில் இதனைப் பயன்படுத்தியதாகவும் அறிகிருேம். எடுத்துக்

காட்டாகக் கிராமத்தில் உள்ள மருத்துவச்சிகள் இதனை அரைத்து சிலையில் தடவி திரிபோல் திரட்டிக் கருப்பையை முட்டும்படியாக வைத்து புண்ணாக்கி கருப்பை சிதைத்தல் உண்டு. இது பெண்களின் உடல்நலத்தைப் பாதிப்பதோடல்லாமல், அரசு தண்டனைக்கும் ஆளாக வழி செய்கிறது என மருத்துவர் கி. கண்ணுசாமிபிள்ளை அவர்கள் குறித்துள்ளார்கள்.

இத்தகைய சிறந்த மூலிகையைப்பற்றிச் சங்க இலக்கியமும் சிலம்பும் குறிக்கின்றன. பல்லவர் காலத்தில் சிறந்து விளங்கியதை கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகின்றன. இலக்கியமும் கல்வெட்டும் காட்டும் செய்திகளால் இதன் தொன்மையை அறியலாம்.

குறிப்புகள்

1 Administration and social life under Pallavas, Dr. C. Minakshi, p. 151
2 The plant names in Kurinchi pattu; P. L. Samy, Journal of Tamil studies, Sep. 72, p. 79.
3 பெருங்கதை, மூலமும் குறிப்புரையும், டாக்டர் உ. வே. சா. முகவுரை, xxv.
4 தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர் சி. பாலசுப்ரமணியன், ப 123
5 Tamil lexicon, p. 1141
6 Asiatic Researches, iv, p. 255
7 Roxburgh,s Flora Indica, p. 155.
8 Pranarskshamrasindhu, p. 29
9 பதார்த்த குண விளக்கம், சி. கண்ணுசாமி பிள்ளை, பக். 279-80
10 பல்லவர் செப்பேடு முப்பது
11 தமிழகம் கண்ட மருந்துக்கலை, மா. சந்திரமூர்த்தி
12 காசாக்குடி செப்பேடுகள், 123

உப்பு

நடன. காசிநாதன்

உப்பு உணவுப் பொருட்களில் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. அவ்வளவு இன்றியமையாப் பொருளான உப்பு எக்காலம் முதல் தயாரிக்கப்பட்டது, உப்பு தயாரிப்பில் அரசின் பங்கு என்ன? போன்றவற்றை ஆராய்வது அவசியமாகிறது.

உப்பின் பயனை மனிதன் என்று உணர ஆரம்பித்தானோ அன்று முதல் உப்பு பயன்படுத்தப் பட்டுவந்துள்ளது.

இந்தியாவில் கி.மு. மூன்றும் நூற்றூண்டில் உப்பு தயாரிக்கும் தொழில் அரசின் ஏகபோகத் தொழிலாக இருந்து வந்திருக்கிறது. தனிப்பட்டவர் யாராயினும் உப்பு தயாரிக்க விரும்பினுல் அவர்கள் அரசிடமிருந்து அனுமதி பெற்றே தயாரிக்க வேண்டியவராக இருந் தனர். கௌடில்யர் தமது அர்த்தசாஸ்திரத்தில் இது பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகிருர். அதாவது தனிப்பட்டோர் யாரேனும் அரசின் அனுமதியின்றி உப்பு தயாரித்தாலோ அல்லது உப்பில் கலப் படம் செய்தாலோ அவர்கள் கடும் தண்டனைக்கு உரியவர்கள் என்று குறிப்பிடுகிருர்.[1]

மதுரைக்கு அருகிலுள்ள அழகர் மலையில் காணப்படும் தமிழி கல்வெட்டில் ''உப்பு வாணிகன் வியகன் கணதிகன்'' குறிக்கப் படுகிருன். இவன் மதுரையில் இருந்த வணிகனுக இருக்கலாம். இவன் தானே உப்பை உற்பத்தி செய்தவனுக இருக்க இயலாது. இவன் உப்பைப் பிறரிடமிருந்தோ அல்லது அரசிடமிருந்தோ வாங்கி வியாபாரம் செய்தவனுக இருக்கக் கூடும். இக்கல்வெட்டு கி.மு. இரண்டு, முதல் நூற்றூண்டைச் சார்ந்தது.[2]

கி.பி. முதல், இரண்டாம் நூற்றூண்டில் ஆட்சி புரிந்த சாத வாகனர்கள் உப்புத் தயாரிக்கும் தொழிலைத் தேச உடமையாக்கி வைத்திருந்தனர்.[3]

சாதவாகனர்களின் சமகாலமான சங்ககாலத்தில் தமிழ்நாட் டில் உப்பைத் தனிப்பட்ட ஒரு சமூகத்தினரே தயாரித்திருக்கின் றனர். அவர்களுக்கு உமணர் என்று பெயர். அவர்கள் நெய்தல் நிலப்பகுதியில் கடலோரத்தில் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களது

வாழ்க்கையைச் சங்க இலக்கியங்கள் விரிவாக எடுத்தியம்புகின்றன. அவர்கள் யாருக்கும் கட்டுப்பட்டவர்களாகத் தெரியவில்லை. அவர்களது தொழிலும் எந்தவித வரன்முறைக்கும் உட்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் உப்பை அதிக அளவில் உற்பத்தி செய்ததாகத் தோன்றுகிறது.

உமணர்கள் தங்களது உப்பை வண்டிகளில் ஏற்றிச் சென்று விற்றுவந்திருக்கின்றனர். அவ்வாறு வண்டிகளில் ஏற்றிச் செல்கையில் வண்டிக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டுவிட்டால், அதைச் சீர் செய்து தொடர்ந்து செல்வதில்லை. சேதம் ஏற்பட்ட இடத்திலேயே வண்டியையும், உப்பையும் விட்டு விட்டுத்தங்கள் வீட்டுக்குத் திரும்பி விடுவார்களாம்.[4] அந்த அளவுக்கு உப்பு மிக மலிந்ததாக இருந்திருக்கிறது. ஆனாலும் உப்பின் விலை நெல்லின் விலைக்கு ஒப்பவே வழங்கியிருக்கிறது.

கி.பி. 3 ஆம் நூற்றுண்டு முதல் தமிழகத்தில் ஆட்சி புரிந்த பல்லவர்கள் காலத்தில் உப்புத் தயாரிக்கும் தொழில் சாதவாகனர்கள் காலத்தைப் போன்று அரசின் ஏகபோகத் தொழிலாக மாறி விட்டது. காரணம் உப்பின் உற்பத்தி குறைந்ததாக இருக்கலாம்.

பல்லவர்களின் பிராகிருதச் செப்பேடுகளில் பரிஹாரங்களில் ஒன்றுகக் குறிக்கப் பெறும் 'அலொனகுலச்சோபம்,' 'உப்புக் கோச் செய்கை' என்னும் தமிழ்ச் சொல்லுக்குச் சரியானதாகக் கருதப் படுகிறது. 'உப்புக் கோச்செய்கை' என்பது உப்பு தயாரித்தலில் அரசனுக்குச் செலுத்தப்பட வேண்டிய 'வரி' என்று திரு. கிருஷ்ண சாஸ்திரி கருதினுர். டாக்டர் மீனுக்ஷி அவர்கள் உப்பு தயாரித்தல் அரசுத் தொழில் என்று பொருள் கொண்டு அரசு மட்டுமே உப்புத் தயாரிக்கும் உரிமையைப் பல்லவர் காலத்தில் பெற்றிருந்தது என்று கருதியுள்ளார்.[5]

சோழர், பாண்டியர் காலங்களில் உப்பு தயாரித்தல் அனைவர்க்கும் பொதுவாக ஆக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. கடலோரமுள்ள பல ஊர்களில் உப்பு தயாரிக்கப்பட்டதாகக் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது. ஜடாவர்மன் திரிபுவனச் சக்ரவர்த்தி சுந்தர பாண்டியன் காலத்தில் (கி.பி. 1268) அதும்பூர் என்னும் ஜனனுதபேரளம், செல்லூர் என்னும் அபய சோழப் பேரளம், இடையன் குழி என்னும் இராஜேந்திர சோழப் பேரளம், கூடலூர் என்னும் ராஜநாராயணப் பேரளம், திருநல்லூர் என்னும் கிடாரம் கொண்ட சோழப் பேரளம், வெண்ணுரிகன் சுழி என்னும் ஏழிசை மோகன் பேரளம், குரைக்காடு என்னும் ஆளப்பிறந்தான் பேரளம் ஆகியவற்றிலிருந்து உப்பு விற்கையில் ஒரு உறை உப்புக்கு ஒரு உழக்கு உப்பு என்னும் விகிதத்தில் சேகரித்துத் திருவதிகை திரு

விரட்டானேஸ்வரர் கோயில் திருவமுதுபடிக்கும், கோயில் சிர மைப்புக்கும் நிவந்தமாக அளிக்கப் பட்டிருக்கின்றன.[6]

அதே மன்னன் காலத்திய (கி.பி. 1269), மற்ருெரு கல்வெட்டு மாறம்பாடி என்னும் கங்கை கொண்ட சோழ பேரளம், குறுக்கை வளநாட்டிலுள்ள வேசாலிப்பாடி நகரத்தைச் சார்ந்த ராஜராஜப் பேரளம் ஆகியவைகளைச் சேர்ந்த மக்கள் திருவீரட்டானேஸ் வரருக்கு உப்பை நிவந்தமாக அளித்ததைத் தெரிவிக்கிறது.[7]

சில தனிப்பட்டோரும் உப்பை கொடையாகக் கோயில்களுக்கு அளித்திருக்கின்றனர். சோழ மன்னன் முதலாம் குலோத்துங் கனின் காலத்தில் (கி.பி. 1112) ராஜராஜ சோழ மண்டலத்தின் ஒரு கூறுகிய புலிவல நாட்டைச் சார்ந்த ஒரட்டம்பேடு என்னும் மதுராந்தகப் பேரளத்தில் வாழ்ந்த இருவர் முதலாம் குலோத்துங் கச் சோழன் காலத்தில் திருக்காளத்தி மஹாதேவருக்கு அமுது படிக்கும், நொந்தா விளக்கு எரிப்பதற்கும் உப்பைக் கொடை யாக வழங்கியுள்ளனர்.[8]

வேறு பல கோயில்களுக்கும் உப்பு கொடையாக அளிக்கப் பட்டது மற்ருெரு கல்வெட்டால் புலனுகிறது.

வேலூரளத்தில் உப்பு பிடியாலுள்ளது இறுகிஸ்வர முடைய மஹாதேவர்க்கும், வடமுட்டை காலளம் வேலூரளத்துக்குத் தெற்குமுட்டைகாலுக்கு வடக்கு நடுவுள்ள அளங்களிலுப்புப்பிடியா லுள்ளது புற்றிடங் கொண்டருளுகின்ற மஹாதேவற்கு இரு கூறும் தேவர் பள்ளியறை நாச்சியாற்கு ஒரு கூறும் கொள்வதாக வும், தென் முட்டை காலளத்தில் வடக்கடைய பத்திலுப்புப் பிடி யாலுள்ள அருமொழீஸ்வரமுடைய மஹாதேவற்கும், இடபாடி யிறை ஓடைச் சிறு வதிக்கு வடக்கி லளமுட்படத் தெற்குத் தாங்கு வானள முட்பட்ட பத்தளத்தில் உப்புப் பிடியாலுள்ளது குலோத் துங்கச் சோளீஸ்வரமுடையாற்கும்.''[9] என்று ஒவ்வொரு பகுதியி லுள்ள அளங்களிலிருந்து வரும் பிடிஉப்பு ஒவ்வொரு கோயிலுக்கு என்று வரையறை செய்து கொடையளிக்கப்பட்டிருக்கிறது.

சோழமன்னன் முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் (கி .பி. 1048) கன்னியாகுமரியிலிருந்த ஸ்ரீவல்லவப் பெருஞ்சாலையென்னும் ராஜராஜப் பெருஞ்சாலையில் உப்புப் பற்ருக்குறை ஏற்பட்டிருக் கிறது. உடன் அதிகாரிகள் அரசனுடைய கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அரசன் அதுபற்றி விசாரித்து உப்பு உற்பத்திசெய்வோர் ஒவ்வொருவரும் ஒரு கலம் உப்புக்கு ஒரு நாழி வீதம் அச்சாலைக்கு வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிருன்.[10]

மேற்கூறப்பட்டவை அனைத்தும் சோழர், பாண்டியர் காலங்களில் உப்பு ஓரளவுக்கு மலிவாகிவிட்டது என்பதைக் காட்டுகின்றன. இருப்பினும் மிகவும் இன்றியமையா உணவுப் பொருளான நெல்லின் விலையைவிடச் சிறிது அதிகமாகவே உப்பின் விலை இருந்திருக்கிறது. ஆறு நாழி நெல்லுக்கு ஐந்து நாழி உப்பு வழங்கப்பட்டிருக்கிறது.[11] ஆனால் வரி விதிப்பில் உப்புக்கும் நெல்லுக்கும் சம அளவு வரியே விதிக்கப்பட்டிருக்கிறது.

பிரான்மலையில் உள்ள ஒரு கல்வெட்டு அக்காலத்தில்,பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருந்த வரி விகிதத்தைத் தெளிவாகக் கூறுகிறது.[12]

உப்பு	தலைச்சுமை ஒன்றுக்கு	காசு	½
	பாக்கம்	,,	,,	½
	பொதி	,,	,,	1
	வண்டி	,,	,,	10
நெல்	பாக்கம்	,,	,,	½
	பொதி	,,	,,	½
	வண்டி	,,	,,	10
அரிசி	பாக்கம்	,,	,,	1
	பொதி	,,	,,	2
	வண்டி	,,	,,	20

என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு உப்புக்கும் நெல்லுக்கும் ஒரே அளவு வரி விதிக்கப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

உப்பு வணிகம் செய்வோர் சிறந்த நிலையில் இருந்திருக்கின்றனர். திருமழவாடி வியாபாரிகள் ஒரு நாளைக்கு 6 நாழி உப்பை அவ்வூர் இறைவரான திருமழபாடியுடைய நாயனுருக்கு அளப்பதாக ஒப்பந்தம் செய்திருக்கின்றனர்.[13] அவ்வாறெனில் அவர்கள் ஓரளவுக்கு வளமான வாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள் என்று கொள்ளலாம்.

உப்பு வாணிகத்திலிடுபட்டவர்கள் அரசுக்கு வரி செலுத்தியிருக்கின்றனர். அவர்கள் மீது விதிக்கப்பட்ட வரிக்கு உப்பாயம்,[14] உப்புக்காசு, உப்புக்கோச் செய்கை[15] என்று பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

உப்புத் தயாரிக்கும் இடம் பேரளம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. சோழர் காலத்தில் சோழ மண்டலத்தில் 'உம்பளநாடு'[16] என்று ஒரு நாடு இருந்திருக்கிறது. அது தற்காலத்திய திருத்

துறைப்பூண்டிப் பகுதியை உள்ளடக்கியதாகும். இன்றும் இப் பகுதியில் உப்புத் தயாரிக்கும் தொழில் முக்கியத் தொழிலாக நடைபெற்று வருகிறது. ஆகவே 'உம்பளநாடு' என்று குறிக்கப்படுவது 'உப்பளநாடு' என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம்.

குறிப்புகள்

1 Dr. C. Minakshi, Administration and Social Life under the Pallavas, pp. 38-39.

2 Corpus of the Tamil Brahmi Inscriptions, I. Mahadevan.

3 Early History of the Andhra Country by Dr. K. Gopalachari.

4 Puram 307, 8-10.

5 Administration and Social life under The Pallavas, p. 89.

6 405 of 1921

7 404 of 1921

8 152 of 1922.

9 SII, viii, 31

10 Kanyakumari Inscriptions, 1968/121

11 SII, xix, 327

12 Yavarum kelir, Dr. R. Nagaswamy, pp. 193-194

14 SII ii, 22.

15 Ibid 99.

16 SII, xix, 120

கல்வெட்டில் பலகாரங்கள்

ரங்கம்மாள்
ஜெயந்தி

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலாரடியார் தினம் அதுதிசெய்வித்தல்

என்று கடவுளுக்குப் படைக்கும் பலவகை நிவந்தத்தில் அமுது முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பதைக்காட்ட ஏராள மான இலக்கிய எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

கோவில்களில் கடவுளுக்கு அமுது செய்வித்தல் நம் மக்க ளிடையே தொன்று தொட்டு நிலவி வரும் பழக்கமாகும். இராஜ ராஜ சோழன் காலம் முதல் விஜயநகர மன்னர் காலம் வரை கிடைக்கும் பலவகையான கல்வெட்டுக்களில் பலவகையான புத்தம் புதுப் பலகாரங்களின் பெயர்களும், அளவுகளும், எண் ணிக்கைகளும் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

திருப்பணியாரம் செய்வது பற்றிக் கிடைக்கும் முதல் கல்வெட்டு திரிபுவனச் சக்ரவர்த்திகள் குலோத்துங்க சோழன் (1070—1110) காலத்தது. அவன் கல்வெட்டு கூறும் பணியாரம்,

''திருப்பணியாரத்துக்கு தெங்காய், கருப்புக்கட்டி''[1]

என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டிலிருந்து சோழர் காலத்திலே பணியாரம் தயாரிக்க இன்றைய கருப்பட்டி என்ற கருப்புக் கட்டியைத் துணைப்பொருளாகப் பயன்படுத்தினர் என்பதை அறிவோம்.

பாரக்கிரம பாண்டியன் காலத்தில் பணியாரம் கடவுளுக்குப் படைக்கப்பட்டது. இதில் சில பொருட்கள் சிறிது வேறுபட் டிருப்பதைக் காணலாம்.

பணியாரம் செய்ய தேங்காய்,கதலிப்பழம் ,சிரகம் ,மிளகு.
சுக்கு, சர்க்கரை, ஆரஞ்சுபழம், கரும்பு,[2]

என்று கல்வெட்டுக் கூறுகிறது. அதிலிருந்து பணியாரம் செய்யப் பழங்களும் பயன்படுத்தப்பட்டதை அறிகிறோம்.

வீரபாண்டியன் கல்வெட்டில் பணியாரம் செய்வது பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

> ஸ்ரீ வீரபாண்டிய தேவரின் இரண்டாவதின் எதிர் பதின் ஒன்ருவது
>
> திருப்பணியாரம் செய்ய பன்னிரண்டுக்கு அமுதுபடி, நாழியும், பலம் ஏழு தேங்காய் அமுது ஒன்றும், நெய்யமுது ஒன்றும்,[3]

விஜயநகர அச்சுத தேவராயன் காலத்திய திருப்பதிக் கல்வெட்டு,

> திருப்பணியாரத்துக்கு அவல்அமுது இரண்டு மரக்கால், பயறு 2 மரக்கால், கரும்பு யிளநீர், தெங்காய், வாழைப் வாழைப்பழம் உள.
>
> திருப்பணியாரத்தட்டு இளநீர் தெங்காய் கரும்பு, பழம் பலாப்பழம்,

என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு காலத்துக்குக்காலம் செய்முறை சேர்க்கைப் பொருட்கள் வேறுபடுவது இங்கு கவனிக்க வேண்டிய தொன்ருகும்.

அதிரசம் முக்கியமான இனிப்பு. இன்னும் திருப்பதி போன்ற கோயில்களில் அதிரசம் கடவுளின் முக்கிய நிவந்தமாகப் படைக்கப் படுவதை நாம் காண்கிரும். அதிரசம் செய்யப்படும் முறை பல நூறு வருடங்களுக்கு முன்பே கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. அதிரசம் இன்னும் அதே முறையில் செய்யப்படுவது நாம் ஈண்டு வியப்புடன் நோக்கத்தக்கது.

அதிரசம் பற்றிய தமிழக கல்வெட்டுக்கள் மிகுதியாகக் கிடைக்க வில்லை. திருப்பதி கோயில் கல்வெட்டுக்களிலேயே அதிரசம் என்ற பெயர் அதிகமாகக் காணப்படுகிறது. அதிரசம் செய்ய இறையிலி நிலம் பணம் ஆகியவை அளிக்கப்பட்டமை

> அதிரசம் உளக்கு [6]

என்பதால் புலப்படுகிறது. கிருஷ்ண தேவராயன் கல்வெட்டு அதிரசம் செய்யத் தேவையான உணவுப் பொருட்கள் பற்றிக் கூறும். அதிரசம் செய்ய உபயோகித்த அரிசி அதிரசப்படி எனப்பட்டது. இதிலிருந்து அதிரசம் செய்யத் தனிவகை அரிசி ஒன்று உபயோகித்தது தெரிகிறது.

> அதிரசப்படி—1 மரக்கால் (அரிசி)
> வெண்ணெய் (நெய்)—2 நாழி
> சர்க்கரை —100 பலம்
> மிளகு —1 ஆழாக்கு[7]

மேற்கூறியதை வைத்து ஒரு அதிரசம் செய்தனர். இதே போல் 34 அதிரசம் செய்ய,

> அதிரசப்படி 34க்கு 1 வட்டி, 14 மரக்கால் அரிசி, 68 நாழி நெய், 3400 பலம் சர்க்கரை, 4 நாழி, 1 உழக்கு மிளகும் [8]

பயன்படுத்தப்பட்டது. இன்றும் அதிரசம் இம்முறையில் செய்யப் படுகின்றன.

தோசை அக்கால மக்களின் சிறந்ததொரு உணவாகக் கொள் ளப்பட்டது. இதற்கு ஏராளமான கல்வெட்டுகள் காணப்படு கின்றன. விசய நகர மன்னர்களைத் தோசைப் பிரியர்கள் என்றே அழைக்கத் தோன்றும் வண்ணமாக ஏராளமான தோசை பற்றிய கல்வெட்டுகள் அவர்கள் காலத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளன. இன்றும் பல கோவில்களில் காலை பூஜைக்குத் தோசை நிவந்த மாகப் படைக்கப்படுவதைக் காணலாம்.

> தோசைக்கு அரிசி, உளுந்து, எண்ணை [9]
>
> கோவிந்தராஜனும் ஆச்சிமாரும் சூடிக்கொடுத்தனுச்சி யாரும் திருமஞ்சனம் கொண்டருளி
> தோசைப்படி க-க்கு விடும் அமுது படி உழுந்து (முன்னுழி ஆழாக்கு)
>
> பயிற்றமுதி சர்க்கரை நெய், உரி [10]
> தோசைப்படி க-க்கு விடும் உளுந்து
> கொதி பயிறு சர்க்கரை பலம்
> மிளகு நெய் [11]
>
> திருக்கல்யாணத்துக்கு தோசைப்படி
> உளுந்து நெய் ஸ்ரீ ராம நவமி
> நாள் தோசைப்படி கக்கு படி க
> மரக்கால் உழுந்து நெய் [12]

மேற்குறித்த கல்வெட்டுக்களில் தோசை செய்யப்படும் முறையும், கொடுக்கப்பட்ட அளவுக்குக் கிடைக்கும் தோசைகளின் எண்ணிக்கையும் நமக்கு நன்கு புலனாகிறது. அக்காலக் கல்வெட்டுக்களே தோசை செய்யும் முறையை நமக்குக் கற்றுத் தந்தன என்று கூறின் அது மிகையாகாது.

இன்றைய நமது உலகப் புகழ்பெற்ற இட்லி இன்றிலிருந்து 500 வருடங்களுக்கு முன்பே இருந்திருக்கிறது என்பதை விஜய நகர கிருஷ்ணதேவராயன் கல்வெட்டு குறிக் கிறது.

இட்லி ஒன்றுக்கு அமுது படி 2 மரக்கால்
உழுந்து 1 மரக்கால் நெய்யமுது உரி,
சர்க்கரையமுது (பலம் (10)[13]

இங்கு இரண்டு மரக்கால் அரிசி, 1 மரக்கால் உளுந்து, நெய் ஒரு உரி, சர்க்கரை பத்து பலம் உபயோகித்து ஒரே ஒரு இட்லி செய்தனர் என்றால் அது எவ்வளவு பெரிய இட்லியாக இருக்கும் என்பதைச் செய்து பாருங்கள்.

பராந்தக சோழன் காலத்தில் பிட்டு என்பது குறிக்கப் படுகிறது. திருமுடிச் சோழப் பல்லவரையன் என்பான் திரைமூர் சபையினர் மற்றும் திருவிடைமருதூர் நகரத்தார் ஆகியவரிட மிருந்து 14 வேலி நிலத்தை வாங்கிக் கோயில் நிர்வாகத்திற்குரிய பல செலவுகளுக்கும், இறைவனுக்குப் பிட்டமுது நிவேதிப்பதற்கும் அந்நிலத்தை வழங்கியதாக முதலாம் பாரந்தக சோழனின் 10ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் கூறும்.[14]

வீரகண்ட கோபாலன் என்பான் இறைவனுக்குப் பிட்டு படைப் பதற்கு நிலம் தானமாக வழங்கினான் என்று ஏகாம்பரநாதர் கோவில் கல்வெட்டுக் கூறும்.[15] இந்தப் பிட்டு நமது இன்றைய 'குழாப்பிட்டே' தவிர வேறல்ல.

கும்மாயம் அல்லது பயற்றுப் பொங்கல் மிக முக்கிய உணவாகத் திகழ்ந்தமை கல்வெட்டுகளிலிருந்து நன்கு விளங்கு கிறது. கும்மாயத்தைப் பற்றிய குறிப்பு முதன் முதலில் அம்பா சமுத்திரம் கல்வெட்டில் காணப்படுகிறது. அதில் கும்மாயம் செய்யத் தேவையான பொருட்கள் பற்றிக் கூறப்படுகின்றன.

செந்நெல் தீட்டல் அரிசி	—	4 நாழி
பயிற்றுப் பருப்பு	—	1 உரி
பசுவின் நெய்	—	1 உழக்கு
தயிர்	—	1 உரி.
வாழைப்பழம்	—	4
சர்க்கரை	—	1 பலம்

இக்கல்வெட்டு வரகுணபாண்டியன் காலத்தது (10நூற்றாண்டு) கும்மாயம் பயிற்றுப் போனகம் என்று அழைக்கப்பட்டதைத் திருப்பைங்கிளிக் கல்வெட்டு விளக்கும்.[16] இதே பலகாரத்தில் பயிற்றுப் பருப்பின் அளவே சர்க்கரையும் சேர்க்கப்பட்டால் அது சர்க்கரைப் பொங்கல் அல்லது அக்காரவடிசில் எனப்பட்டது. அது அக்காலக் கல்வெட்டுக்களில் பல முறை காணப்படுகிறது.

சோழப் பெருங்காவிதி என்பான் திருச்சாந்துறை இறைவனுக்கு அக்காரவடிசில் படைக்க 145 கழஞ்சு பொன் தானமாக அளித்தான். இப்பொன்னிலிருந்து பெறப்பட்ட வட்டியிலிருந்து அக்காரவடிசில் இறைவனுக்கு அளிக்கப்பட்டது. அவ்வட்டியிலிருந்து வாங்கப்பட்ட பொருட்கள் குத்தல் அரிசி, பருப்பு, பால், சர்க்கரை, வாழைப்பழம், விறகு, நெல், அடைக்காய் அமுது, உப்பு[17].

இதிலிருந்து அக்காரவடிசில் செய்ய மேற்குறித்த பொருட்கள் உபயோகித்தமை புலனாகிறது.

ராஜராஜசோழன் திருவாமுத்தூர் கடவுளுக்கு அக்காரவடிசில் படைக்க நெல் தானமாக அளித்ததைக் கூறும்[18]

நித்தம் நானாழி அரிசியும், பருப்பிருநாழியும், பால் நானாழியும் வாழைப்பழம் பத்தும் சர்க்கரை நெய் உழக்கும்[19]

இக்கல்வெட்டு அக்காரவடிசில் செய்யத்தேவையான பொருட்களையும் அளவுகளையும் விளக்கும். இன்றும் கோவில்களில் அக்காரவடிசில் முக்கிய உணவாகப் பறிமாறப்படுவதை நாம் காண்கிறோம். அதிலிருந்து 1000 வருடங்களுக்கு முன்பே சர்க்கரைப் பொங்கல் செய்யப்பட்டதைக்காணுங்கள். அக்கார வடிசில் இன்னும் கல்வெட்டில் காணப்படும் முறையிலேயே செய்யப்படுவதை நாம் காண்கிறோம்.

இட்லி தின்று பெருத்த உடம்பைக் குறைக்க பூரியும் உணவாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இது கடவுளுக்குப் படைத்த அரிசிப் பூரியாம். கோனேரிராஜபுரத்தில் இராஜேந்திரன் கல்வெட்டு (11ஆம் நூற்றாண்டு),

> "சிறுகாலை ஸந்தியில் திருவமிர்து அரிசி நானாழியும், உச்சியம்போது ஸந்தியில் அரிசி நானாழியும், இராவை ஸந்தியில் அரிசி இருநாழியும், ஆக குத்தல் பூரி பதி நாழியும் (10 நாழி) ஆக மூன்றுவேளைக்கும் நெய்யமுது 1 படியும்[20]

என்று குறிப்பிடுகிறது.

இது பரகேசரி வர்மன் காலக் கல்வெட்டு (கி.பி. 10ஆம் நூற்றாண்டு) பல நூறு ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது.

இங்ஙனம் கல்வெட்டுகளின் மூலம் பலவகையான உணவுப் பொருட்களின் பெயரையும் அது செய்யப்படும் முறையையும் காணலாம். சமையற்கலைப் புத்தகங்கள் அக்காலத்தில் இல்லாத குறையைக் கல்வெடுக்கள் தீர்த்து வைக்கின்றன.

குறிப்புகள்

1 139A of 1894
2 Kanyakumari Inscriptions, Part ii
3 196 of 1895
4 Thirupathi Devasthana Inscriptions, Vol. iv, No. 2 Line 12
5 Idid. No. 39 Line 7
6 தென்னிந்தியக் கோயில் சாசனம் 760, கி. பி. 1452
7 Krishnadevaraya Inscriptions, Vol iii, Line 5
8 Krishna Devaraya Inscriptions, Vol iii, Line 9
9 சென்னை மாநகர் கல்வெட்டுகள் 1967—818
10 Inscriptions of Achutya Raya No. 28
11 Ibid, No. 9
12 Ibid Vol. iv No. 2 line 10
13 Krishradevaraya Inscription, Vol. iii line, 11
14 திருவிடை மருதூர் கல்வெட்டு, பராந்தக சோழன் 907 முதல் 953 வரை
15 277 of 1955—56
16 அம்பா சமுத்திரம் கல்வெட்டு, வரகுண பாண்டியன்
17 191 of 1931
18 திருவாமுத்தூர் கல்வெட்டு
19 உடையார்குடி, காட்டுமன்னுர் கோவில் கல்வெட்டு
20 SII, xix, p. 348

கல்வெட்டில் நெய்

பொன். முருகையன்

பண்டைய கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் நெய்பற்றிய குறிப்புக்கள் மிக்க உள. நெய் விளக்கெரிப்பதற்கும், திருவமுதிற்கும், உணவிற்கும், மருத்துவத்திற்கும், ஊண் சமைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் திருவிழாக்களுக்கும் நெய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தானம் செய்த வழிகள்

1 ஆடுகளைக் கொடுத்து அதிலிருந்து நெய்யைப் பெற்றுள்ளனர்.

2 ஆக்களைக் கொடுத்து நெய் பெற்றுள்ளனர்.

3 எருமைகளைக் கொடுத்தும் நெய் வாங்கியுள்ளனர்.

4 காசுகள் கொடுத்து அதன் வட்டியில் நெய்யை வாங்கச் செய்துள்ளனர்.

5 காசைக் கொடுத்து காசுக்கு இத்தனை ஆடுகள் என்றும் அதற்கு இவ்வளவு நெய் அளக்க வேண்டும் என்றும் செய்துள்ளனர்.

6 பசுக்களுக்கு இத்தனை ஆடு என்றும் கொண்டு நெய் அளந்துள்ளனர்.

தானம் செய்தவர்கள்

1 மன்னர்கள்
2 அரசியர்
3 படைத் தலைவர்
4 அமைச்சர்கள்
5 பொது மக்கள்
6 கோயில் பணிப் பெண்கள்
7 பிரம்ம தேயத்தார்கள்
8 வணிகரும் செட்டியாரும்

9 அயல் நாட்டார்

10 வியாபாரிகள்.

தானம் செய்யும் முறை

நிவந்தம் செய்பவர் ஆடுகள், ஆக்கள், எருமைகள் இவைகளை இடையர்களிடம் ஒப்படைத்து அவர்கள் நாள் தவருது நெய் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

மற்றும் சிலர் அரச பண்டாரத்தே காசுகள் செலுத்தி அதிலிருந்து வரும் வட்டியிலிருந்து நெய்யை வழங்க ஏற்பன செய்துள்ளனர்.

தானம் செய்பவர்கள் ஊர்ச் சபையாரிடம் தங்களுடைய நிவந்தங்களை அளிப்பர். நிவந்தம் முட்டாமல் நடைபெற அதற்கு இணையாக மற்றொருவனையும் வைத்துக் கொடுப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

சான்றுகள்

''தஞ்சாவூர்ப் புறம்படி உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து இருக்கும் இடையன் விளக்கன் உடையார் ஸ்ரீராஜராஜீச்சுவரம் உடையார் பண்டாரத்துக் குடுத்த காசு ஆறினல் காசு ஒன்றினுக்கு ஆடு நாலாக ஆடு இருபத்து நாலும் ஆக ஆடு தொண்ணூற்ருறினல் திருவிளக்கு ஒன்றினுக்கு இடையன் அணுக்குடி திருமலையும் ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு.'' என்று தஞ்சை பெருஉடையார் கோயில் கல்வெட்டால் அறியலாம்.

> ஸ்வஸ்திஸ்ரீ
> உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்குடுத்த கால் மாட்டிலுங்
> குடுத்தார் குடுத்த கால்மாட்டிலுங்
> காசும் அக்கமுங் குடுத்து முதலான கால்மாட்டிலுங்
> திருவிளக்குக்கு அடுத்தபடி கல்லில் வெட்டின.''

என்பதால் தானங்கள் அளித்தவுடன் அச்செய்திகளைக் கல்லிலும் செப்பேட்டிலும் பொறித்து வைத்துள்ளனர் என அறியலாம். ஊர்ச் சபையாரும் தானங்களைப் பெற்றுக் கொண்டு செவ்வனே நடத்தி வந்துள்ளனர்.

நாஞ்சி நாட்டுத் திருச்சுசிந்திரத்து மாதேவர்க்குத் தென்னுட்டுத் தலைக்குளத்தைச் சேர்ந்த அரையன் அரவிந்தன் ஒரு நொந்தா

விளக்கு அளித்து அது எரிப்பதற்கு நாளொன்றுக்கு உழக்கு நெய் அளக்க 50 ஆடுகளை ஊர்சபையார்க்கு அளிக்கப் பெற்றுக் கொண்டதாக கன்னியாகுமரிக் கல்வெட்டு ஒன்றால் அறியலாம்.

''.........நொ
ந்தாவிளக்கு ஒன்றினுக்கு வைச்ச
சாவா மூவாப்பேர் ஆடு ஐம்பது இவை
ஐம்பதும் பரடை ஸபையார்க்கு''—என்பதால் அறியலாம்

நெய் அளவுகள்

1 ஆழாக்கு
2 உழக்கு
3 உழக்கரை
4 ஒன்றரை உழக்கு
5 நாழிநெய்
6 நாழிக்கீழ் ஆளாக்கு
7 பத்தின்கீழ் ஆளாக்கு
8 உழக்கு ஆளாக்கு
9 சூலம் [Sulam]
10 பதம்
11 ஆடவல்லான்

இவ்வாறு பல அளவுமுறைகளில் நெய்யளக்கப்பட்டுள்ளன. இதைக் கொண்டு அக்கால அளவு முறைகளையும் அறிய வாய்ப்பாக உள.

மன்னர் தானம்

ஸ்ரீராஜராஜ தேவர்தன் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டில் உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருவிளக்குக்குக் காசு கொடுத்துள்ளார். மேலும் திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடு 96, ஆகவும் பசு 48 ஆகவும் எருமை 16ஆகவும் கொடுத்து அவ்வவ்வினத்திற்குக் கன்றும் கிடாயும் குட்டியும் இடையர்களுக்கு வழங்கி, பெற்ற இவ்விடையர்கள் சந்திர சூரியன் உள்ளவரை உடையார் பண்டாரத்தே நெய் அளக்க வேண்டும் என்று தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போல...... என்ற மெய்க்கீர்த்தியுடன் கல்வெட்டுத் தொடங்கி,

உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் திருவிளக்குக்கு
உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த கால்மாட்டிலுங்

குடுத்தார் குடுத்த கால்மாட்டிலுங்
காசுகுடுத்து முதலான கால்மாட்டிலும்
திருவிளக்குக்கு நெய் அளக்கக் கடவர்களாக இடையர்வழி
திருவிளக்கு ஒன்றினுக்கு
ஆடுதொண்ணூற்ருருகவும்
பசு நாற்பத்தெட்டாகவும்
எருமை பதினுருகவும்
இவையிற்றுக்கு பசுவின் கன்றும் எருதும் பசுசார்த்திக் குடுத்தன பசுவாகவும்
ஆட்டுக்குட்டியுங் கிடாயும் ஆடுசார்த்திக் குடுத்தன ஆடாகவும்
எருமைக் கன்றுங் கிடாவும் எருமை சார்த்திக் குடுத்தன எருமையாகவும்
மாடடுத்து மாடுகொண்ட இடையரும்
இவர்கள் உறவு முறையாய் அடைகுடிகளானுரும்
இவர்கள் அடைகுடிகளுந்
திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடவல்லாநால் நிசதம் நெய் உழக்கு,

அரசி

நம்பிராட்டியார் உலக மாதேவியார் இராஜேந்திர ஸிம்ஹ வளநாட்டுப் பொய்கை நாட்டு கண்டராத்தித்திய சதுர்வேதி மங்கலத்து இருக்கும் இடையன் கூத்தன் குன்றனுக்கு விளக்குத் தந்த காசில் 96 ஆடுகள் வழங்கி நிசதம் உழக்கு நெய் அளக்கச் செய்துள்ளார் என்பதைத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல் வெட்டால் அறியலாம்.

...........திருவிளக்குக்கு தந்தகாசில் குடுத்த காசு முப்பத்தி ரண்டினுல் ஆடு தொண்ணூற்றறினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு ....ஆடவல்லானுல் நிசதம் அளக்கக் கடவநெய் உழக்கு.

என்று குறிப்பிடக் காணலாம்.

படைத்தலைவர்

பொருளாதார முன்னணியில் உள்ளவரும் அரசியல் முன்னணி யினரும், வணிகர்கள் போன்றவர்களுமே பெரும்பாலும் தானம் செய்துள்ளனர். கரிகால சோழ வைதும்பராயன், கேரளசிங்கப் பல்லவரையன், சாத்தஞ்சிங்கம், மதுராந்தகப் பேரரையன், இரா ஜேந்திர சோழ தேவர்பெருந்தரம் சோமாஜி அமோஹவரு என் பவர் நெய்தானம் செய்ததைக் கன்னியா குமரிக்கல்வெட்டுக்களால்

அறியலாம். மேலும் பஞ்சதன் விழுப்பரையன், தாமோதரன் பரஞ்சோதி, வேலன் கண்டராதித்தன், மீனவன் மூவேந்த வேளான் போன்றவர்களும் நெய்தானம் செய்துள்ளனர்.

கோட்டாறுன மும்மடிச் சோழ நல்லூரிலிருக்கும் சங்கரப்பாடியான் கழறி வெண்ணியான மதுராந்தகப் பேரரையன் என்பவர் சுசிந்திரத்துத்தென் திருவேங்கடத் தாழ்வார்க்கு ஒன்றரை நந்தா விளக்கு எரிப்பதற்கு தினம் உழக்கு நெய் வழங்க முப்பது பசுக்கள் கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

மற்றும் உஜ்ஜிவனுதர் கோயிலுக்கு வேலான் கண்டராதித்தனும், மீனவன் மூவேந்த வேளானும் 90 ஆடுகள் கொடை வழங்கியுள்ளனர்.

மேலும் வேளான் சோழ கேரளனுன கரிகால சோழ வைதும்பராயன் சுசீந்திரத்து மஹாதேவர்க்குத் திருநந்தா விளக்கொன்றுக்கு 50 ஆடுகள் கொடையாக அளித்துள்ளார்.

மந்திரி

மலைநாட்டுக் கணியர் பள்ளியைச் சேர்ந்த இயக்கன் சல்லன் எனப்படும் தென்னவன் உத்திரமந்திரி சுசிந்திரத்து எம்பெருமானுக்குத் திருநொந்தா விளக்கு எரிப்பதற்கு நூறு ஆடுகள் கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

பொதுமக்கள்

திருவழுதி வளநாட்டுத் திருக்கோவலூரைச் சேர்ந்த சாத்தஞ் சிங்கம் என்பான் சுசிந்திரமுடையார்க்கு நொந்தா விளக்கிற்காக 50 ஆடுகள் அளித்ததைக் குறிக்கிறது.

இராஜராஜப் பாண்டிநாட்டு உத்தம சோழ வளநாட்டுப்புறத்தாய நாட்டுக் கழிக்குடி ராஜராஜீச்வர முடையார்க்குக் குமரிக் கன்யாபகவதி கோயில் தேவதானத்தைச் சார்ந்த வீரநிலை வெள்ளாளன் அப்பி அச்சனைச் சார்த்தி அவனது தாய் வெட்டிசெந்தில் என்பாள் திரு நுந்தாவிளக்குக்கு சாவா மூவாப் பேராடு இருபத்தைந்து கொடுத்ததைக் குறிப்பிடுகின்றது.

இராசேந்திர சோழர்க்குத் திருவமுது சமைக்கும் பாலையூர் திட்டை சோழகுலவல்லி என்பாள் இராஜராஜீச்சுவரமுடையார்க்கு திருநுந்தாவிளக்கிற்கு 50 ஆடுகளைக்கொடுத்து அதிலிருந்து நெய் அளக்க ஏற்பாடுகள் செய்துள்ளார்.

கோயிற்பணிப் பெண்கள் (தேவரடியார்கள்)

முதல் இராசேந்திரனின் 28ம் ஆட்சியாண்டில் இராஜராஜீச்சுவரமுடையார்க்கு ''தேவரடியாள் கண்டன் சோலை'' என்பாள் திருநொந்தா விளக்கு ஒன்றுக்கு இருபது ஆடுகள் கொடையாக அளிக்க அதை ''புதன் கணபதி'' என்பான் பெற்றுக் கொண்டு நித்தம் ஆழாக்கு நெய் அளக்க ஒப்புக்கொண்டான். அவன் அதில் தவறின் ஈடாக ''வியாழன் சடையன்'' நின்றதையும் குறிக்கிறது.

''குமரீ ராஜ ராஜ ஈஸ்வரமுடையார்க்கு
இத்தேவரடியாள் கண்டன்
கண்டன் சோலை வைத்த திரு நுந்தா விளக்கு ஒன்று
இதனுக்கு வைத்த சாவா மூவாப்
பேராடு இருபத்தஞ்சு கொண்டு
நித்தம் ஆழாக்கு நெய்
சந்திராதித்தவல் முட்டாமல் அடுவ
தாகக் கொண்டான் புதன்
கணபதி இவனுக்கு பு
ணை வியாழன் சடைய
ன்.''

பிரம்ம தேயத்தார்கள்

மஹிமாகர வளநாட்டுத் தேவதானப் பிரமதேயம் சோளாந்தக மங்கலத்தைச் சேர்ந்த பெருமருதூர்க் காப்பியன் சோழாந்தகப் பிரம்மாராயன் என்பவர் சுசீந்திரத்துப் பரமேசுவரர்க்கும், பரம ஸ்வாமிகளுக்கும் இரண்டு திருநந்தா விளக்குகளை அளித்து அதற்கு நெய் அளக்கச் செய்ததையும் குறிக்கிறது.

''......திருவிளக்கு இரண்டினுக்கு இ
......நிசதிப்படி நாராச நாழி...
ரிய் நெய் முட்டாமலட்டுவதாக கொ
...துங்கொண்டு உவச்சின வ்ருத்தி [ளா]
... நித்தம் இப்பரிசு அட்டுவதா
... டைச்சவையோம் இவ்விளக் [கெரி]
வ்வூர் பரடை ஸபையார்.''

வணிகரும் செட்டியாரும்

தென்திரு வேங்கட நிலை பரம சுவாமிகளுக்கு மாணிக்கஞ் செட்டி நந்தாவிளக்கெரிக்க அச்சு இருபத்தைந்தும், பசுக்கள் இருபத்தைந்தும் கொடையாகத் தந்துள்ளான் என்பதைக் குறிப்பிடுகிறது.

"ருமாணிக்கஞ்செட்டி வைச்ச திருநுந்தா விளக்கு ஒன்று
இதுக்குவைச்ச இருபத்தைஞ்சு...இவ்வூர்...நிசதம்
அட்டக் கடவேனக நெய் உழக்கு இவனுக்கு
புணை இவ்வூர் கூத்நாடு"

மற்றும் சுசீந்திரத்து மகாதேவர்க்குப் புறத்தாய நாட்டு இழக்கந் துறையைச் சார்ந்த அறுவை வணிகன் கண்ணிபெழஞ்சி என்பவர் 50 ஆடுகள் கொடுத்து நுந்தா விளக்கிற்கு உழக்குநெய் அளக்கச் செய்துள்ளார்.

குமரி இராஜராஜீச்வரம் உடையார்க்கு வைகைக்கரை தன்ம செட்டி மணற்காடன் என்பவர் திருநுந்தாவிளக்கு ஒன்று எரிப்ப தற்கு 50 ஆடுகள் கொடையாக அளித்துத் தினம் கீழ் உழக்கினல் நித்தம் உழக்கு நெய் அளக்கச் செய்துள்ளார்.

அயல் நாட்டார்

ஈழ நாட்டு மழவரையன் சென்னி கண்டன் என்பவன் சுசீந்தி ரத்து மகா தேவர்க்கு ஒரு திருநொந்தா விளக்கு எரிப்பதற்கு நாள் தோறும் உழக்கு நெய் அளிக்க ஐம்பது ஆடுகளை மூலபரடைச் சபையார் வசம் ஒப்படைத்ததைக் குறிக்கிறது.

"ஹாதேவர்க்கு ஈழநாட்டு மழவ
ரையன் சென்னி கண்டன் நிசதம்உழ
க்கு நெய் சந்திராதித்தவல் இர
வும் பகலும் முட்டாமல் எரிவதாகவ
ச்ச திருநொந்தா விளக்கு ஒன்று இதுக்கு
வைச்ச சாவா மூவாப் பேராடு அஞ்ம்பது
இவை மூலபரடை சபையார்வசம் காட்டி
க் குடுத்தன."

வியாபாரி

கள்ளக்குடி நாட்டைச் சேர்ந்த கரவந்தபுரத்து வியாபாரி ஒருகை அரங்கன் என்பான் எழுபத்தைந்து ஆடுகள் கொடுத்து நாள் ஒன்றுக்கு ஒன்றரை ஆழாக்கு நெய்யளக்கச் செய்துள்ளார்.

...ளக்

"குடிநாட்டுக் கரவந்த புரத்து வியாபாரி ஒரு
கை அரங்கன் வைத்த திருநொந்தா விளக்குஒ
ன்று நிறைபலத்து முப்பது இது நிசதம்
உழக்கரைநெய் முட்டாமல் பகலும் இரவும்
சந்திராதித்தவரை எரிவதாக (விட்ட) சாவாமூ
வாப் பேராடு எழுபத்தஞ்சு..."

திருவமுதிற்கு நெய்

கன்யாபகவதி கோயிலுக்கு மஹாநவமியன்று தயிரமுது நெய்யமுது ஆகியவைகள் படைப்பதற்கு தானம் செய்துள் ளனர். இஃது கி.பி. 11-12 ம் நூற்றுண்டைச் சார்ந்தது.

......''நாழி நெய்யமுதும் அஞ்ஞாழித்தயிரமுதும்''

என்று கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

சுசீந்திரமுடைய மகாதேவர்க்கு திருவமுதுக்கு நெய், அரிசி ஆகியவை கொடுத்ததைக் குறிக்கிறது.

திருவேங்கடநிலே ஆழ்வார்க்கு திருவமுது அரி(சி) நாஞழியும் ஆக திரமிரண்டுக்கும் அரி(சி) நாஞழியும் ஆக அரி(சி) பன்னிருநாழி யும் ஆக அரி(சி) பன்னிருநாழியும் கறியமுது நெய்யமுது தயிரமு துக்கும் நித்த நிமித்தஞ் செல்வதாக விட்ட நிலமாவது.''

உணவிற்கும் நெய்

''...கேடும் வகைக்கு மார்கழிமாதத்தில் திருநாளுக்கு நம் நம்பி பிறந்த நாள் நயிஞர் நாலாந்திரு நாட் செலவுக்கும் பிராமணர் ஊட்டுக்கும் ஆக இவ்வகைப்படி நடந்த போதும் வகைக்கு விட்டுத் தந்த சிவிந்திரம் வேட்கைக் குளத்தின் கீழ் முதற் தரத்தில் நிலம் இருபதுமாவும் இவ்வகையில் அமுதுபடி இருபதுஞழி வகைக்குப்பல வெஞ்சனமாக நாள் ஒன்றுக்கு ''நெய்யமுது'' உழக்கு ஆழாக்கும் தேங்காய் ஒன்றும் கதலிப் பழம் பத்தும்......''

எனக் கல்வெட்டுக் குறிப்பிட்டுத் தொடரும்.

நெய்க்குழம்பு—என்று லெக்சிகனில் குறிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக்களுக்கு நெய்தானம்

தேவகுளத்தில் எழுந்தருளியிருக்கும் நயிஞர்தெய்வ விஞயாகப் பிள்ளையார்க்குச் சித்திரைமாதம் முதல் பங்குனி மாதம் முடிய திருப்பள்ளிப் பூசைக்கும், விநாயகசதுர்த்திக்கும், திருக்கார்த் திகைப் பூசைக்குமாக நெய் வழங்கியுள்ளனர்.

''நெல் வீசுசை உள்பட வகைக்கு உதகபூறுபதற்ம தானமாக எழுதிவிட்டவகையாவது.''

மற்றுமொரு கல்வெட்டு

''கேடும் வகைக்கு மார்கழி மாதத்தில் திருநாளுக்கு நம் நம்பிபிறந்தநாள் நயிஞர் நாலாந் திருநாட் செலவுக்கும் பிராமணர்

ஊட்டுக்கும் ......'' நாள் ஒன்றுக்கு உழக்கு நெய் அளக்கச் செய் துள்ளனர்.

மருத்துவத்தில் நெய்

இதற்குச் சான்று பலகாண முயன்றும் கிடைத்தில. இலக்கியச் சான்றுடன் இயம்புவல்:

சிவக சிந்தாமணியில் 818 வது வரியில் இக்குறிப்புக் காணப் படுகிறது.

''நெய்க்கிழிவைக்கப்பட்டார் நெய் பத்தற்கிடத்தப்பட்டார்'' இதற்கு உரையாசிரியர் போரினுல் உண்டான புண் ஆறுவதற்கு நெய்யில் தோய்த்த துணியில் வைக்கப் படுதலும், நெய்யைக் கொண்ட சாலிற் கிடத்தப்படுதலும் இயல்பு என்று குறிப்பிடு கின்ருர்.

ஐங்குறு நூற்றில்—மருதம் பாடலில், மகம்பயந்த மகளிர் அவ்வாலாமை நீங்க நெய்யாடுதல் குறிப்பிடப்படுகிறது.

''குவளை மேய்ந்த குறுந்தாள் எருமை
குடநிறை தீம்பால் படுஉமூர
புதல்வனை யீன்றி வள்நெய்யாடினளே.''

இப்பாடலை தொல்காப்பியப் பொருளதிகார 156ம் சூத்திரத்திற்கு மேற்கோள் காட்டியுள்ளார்.

நெய் பற்றிய குறிப்புகள்

நெய்யணி—பிள்ளைப்பேற்றின் பின் முதன் முழுக்கு
நெய்யன்னம்—நெய்ச்சோறு
நெய்யாடுதல்—நெய்பூசுதல்
நெய்யறை—நெய்யாலிட்ட நறும்புகை
நெய்—எண்ணெய், தேன், உதிரம், நிணம், சிநேகம் சித்திரை மாதத்தில் வரும் 14வது நட்சத்திரம்
நெய்க்கிழி—நெய்யில் தோய்க்கப்பட்ட துணி
நெய்உலை—உணவு சமைத்தற்கு நெய் காய்கின்ற உலை
நெய்ம்மிதி—நெய்யால் மிதித்துத் திரட்டப்பட்ட கவளம்
நெய்ம்மிதி கவளம்—நெய் கலந்து மிதித்துத் திரட்டப்பட்ட உணவு
நெய்கடைபால்—நெய்யைக் கடைந்து வாங்கின பால்
இழுது—நெய்,
''இருங்கட் குழிசி கவிழ்ந்திழுகு மறப்பச்''—புறம்

இலக்கியத்தில் நெய்

நெய்யின் சிறப்புக்கள் இலக்கியங்களில்தான் மிகுதியும் பல வகையில் பயிலக் காணலாம். விளக்கு, மனிதன், வேள்வி இவற்றிற்கு மட்டும் அல்லாது குதிரை யானை இவைகளுக்கு உணவுடன் கலந்து கொடுத்துள்ளனர்.

''நீர்நாண நெய் வழங்கியும்''—புறம்-166

''புடைநடு கள்ளினுட் பலியூட்டி
நன்னீராட்டி நெய்ந்நறைக் கொளீஇய''—புறம்-329

''நெய்ம்மிதி யருந்திய கொய்சுவலெருத்திற்
றண்ணடை மன்னர் தாருடைப் புரவி''—புறம் 299

''நறுநெய்ய சோறென் கோ''—புறம் 396

''நெய்யுலை சொரிந்த மையூனோசை''—புறம் 261

''நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்''—புறம் 15

''நறுநெய் யுருக்கி நாட்சோறீயா''—புறம் 379

''நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங்''—பெரும்பாண்-394

''கையேந்தையக னிறைய நெய்சொரிந்து''—நெடுநல்வாடை

சோனகர் பண்ணின தொழில் மாட்சிமைப்பட்ட பாவை தன் கையிலே ஏந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளி நிறையும்படி நெய் வார்க்கப்பட்டு என உ. வே. சா அவர்கள் உரையிட்டுள்ளனர்.

''பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு''—மலைகடாம்-168

''நெய்கனிந்து வறையார்ப்பக்
குரூஉக்குய்ப்புகை மழைமங்குலிற்''—மதுரைக்காஞ்சி-756-57

''பைந்நிணமொழுகிய நெய்ம்மலி யடிசில்''—குறிஞ்சிப்பாட்டு—204

''நெய்யோ டையவி யப்பியை துரைத்துக்
குடந்தம்பட்டுக் கொழுமலர்சிதறி'' —திருமுருகாற்றுப்படை-228

''நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளிஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட''-முல்லைப்பாட்டு-48-49

''நெய்குடை தயிரினுரையொடும்''—பரிபாடல்-16

''நெய்க்கண் ணிருஅல்''— கலித்-42

''நெய்ம்மிதி முனைஇய கொழுஞ் சோற்றூர்கை...வாமான்'' அகம் 4.0

''மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப'' சிலப்-4-56

''நெய்பொதி நெஞ்சின் மன்னன்'' –சீவக-3049

''நெய் விலைக்கட்டிப் பசும்பொன் கொள்ளாள்''—பெரும் பாண்-164

''எருமை நல்லான் கருநாகு பெறூஉம்குடி

மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி''—பெரும்பாண்-165

பாலெருமையையும், நல்ல பசுவையும், கரிய எருமை நாகினை யும் நெய்க்கு ஒப்பாகச் சொல்லி வாங்குங்குடி.

முடிப்பு

காட்டுள் எழுவகைப்பட்ட பசுவானும் நாட்டுள் எழுவகைப் பட்ட பசுவானும் முட்டாது நீர் நாளும் பரிசு நெய்யை வழங்கி யும் எண்ணிறப் பல வேள்விகளை வேட்டும் மண் பொருமல் புகழைப் பரப்பியும் அவ்வாறு பெறுதற்கரிய விளக்கமுற்ற வேள்வி முடிபாகிய பெரிய காலத்து விருந்தினரைப் பொருந்திய நினது திருந்திய மேம்பட்ட நிலையை எந்நாளும் காண்போமாக—என்று புறநானூற்றுரை முடிவு கொண்டு கல்வெட்டில் நெய் தானம் மிகவுங்காட்டி மெய்யான சான்றுங்கூட்டி ஐபயவே இன் கருத்தை இனிதாய்க் கட்டுரையில் கண்டோம்.

துணை நூல்கள்

தானம் செய்தவர்கள்

1	தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்				
2	,,	,,	,,	,,	
3	கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் தொகுதி				2, 1968—168
4	,,	,,	,,		2, 1968—180
5	,,	,,	,,		2, 1968—210
6	,,	,,	,,		1, 1968—115
7	,,	,,	,,		2, 1968—211
8	,,	,,	,,		2, 1968—170A
9	,,	,,	,,		2, 1968—205
10	,,	,,	,,		2, 1968—119

தானம் செய்த வழிகள்

1	தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்				
2	,,	,,	,,	,,	
3	,,	,,	,,	,,	
4	,,	,,	,,	,,	
5	,,	,,	,,	,,	
6	திருவமுதுக்கு—கன்னியாகுமரிக் கல்வெட்டுகள், தொகுதி				1, 1968—53
7		,,	,,	,,	2, 1968—146
8	உணவிற்கு நெய்	,,	,,	,,	2, 1968—153
9	திருவிழாக்களுக்கு நெய்	,,	,,	,,	2, 1968—273

10 மருத்துவத்தில் நெய், சீவக சிந்தாமணி, 818, தொல், பொருள், நச்சி, மேற்கோள், 156

11 நெய் பற்றிய குறிப்புகள்—லெக்சிகன், பக். 2341.

கல்வெட்டில் நெருப்பு

சொ. சந்திரவாணன்

ஆதிமனிதன் தனது ஆறுவது அறிவைப் பயன்பத்தித் தெரிந்த காலம் முதல் நெருப்பானது இன்று வரை பரவி வந்து கொண்டிருக்கிறது. தொட்டால் சுடுகின்ற நெருப்பைப் பட்டும் படாமலும் எட்ட நின்றும் கிட்டச்சென்றும் அடக்கி அதனைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்ட மனிதன் அந்நெருப்பை எவ்வெவ் வழியில் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான் என்பதின் நோக்கமாய் இக்கட்டுரை வந்துதிக்கின்றது.

தெய்வமாக நெருப்பு

அன்றும் இன்றும் நெருப்பினைத் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். அக்னி, அக்னிதேவன் என்ற பெயர்களில் அஷ்டதிக்கு பாலர்களில் தென்கிழக்குத் திசை நாயகனுய்க் கொண்டு வழிபட்டனர். பிறவாயாக்கைப் பெரியோனையே ஜோதி வடிவில் கண்டு வழிபட்டனர். லிங்கோத்பவமூர்த்தி வரலாறு அடிமுடி காணு அண்ணலாய் ஜோதிவடிவாய் அமையக்காணலாம். திருமயம் லிங்கோத்பவமூர்த்தி ஜோதி வடிவமானது.

பஞ்ச பூதங்களின் தொகுப்பு இவ்வுலகம். அதில் தீக்குத் தலமாய் அமைவது திருவண்ணுமலையாகும். சமயக் குரவர்கள் பெரியவர்கள் அனைவரும் 'ஒளியாகவும்'· 'அருட்பெருஞ்ஜோதியாகவும் கண்டு வழிபட்டனர் எனலாம்.[1]

பொன்னுர் மேனியனின் ஆனந்த நடனத்தின்போது கையில் அனல் ஏந்தியது உலக அழிவின் தத்துவத்தை விளக்கிக் காட்ட அமைந்ததாய்க்கூறலாம். அழற்கற்றைச் செங்கதிர் கொண்ட கதிரவனையும் வணங்கி வந்தனர். பைரவர், காளி முதலான தெய்வங்களின் மகுடங்கள் ஜுவாலா மகுடம் என்ற பெயரில் வழங்கக் காணலாம். திருவாசி என்ற பிரபை அக்னிச் சுவாலையோடு காணப்படுவதுண்டு. சிவன் திரிபுரங்களை எரித்ததும் காமனை எரித்ததும் புராணத்தே காட்டப் படுகின்றன. மாயவரத்திற்கு அண்மையிலுள்ள கொருக்கை வீரட்டானம் காமனைத் தகனம் செய்த இடம் என்பர். இன்றும் அங்கே சாம்பல் மேடுகள் காணப் படுகின்றன. அதை விபூதி மேடு என்று அழைத்து வருகின்றனர்.[2]

காமன் எரிந்ததை ஆய்குல மன்னன் செப்பேட்டில் திருப்பறப்புச் சாசனத்தின் வடமொழிப் பகுதியில்,

திரிபுரங்களுக்குத் தீங்கு விளைவித்த
எந்தப் பரம சிவனது மூன்றாவது கண்ணிலிருந்து
உண்டான அக்னியால் ஒரு கண நேரத்தில்
மன்மதன் உருவற்ற நிலையை அடைந்தானே
அவ்விறைவன் உங்களது அழுக்காற்றை
நீக்கட்டும் [3]

என்று வருகின்றது. செவந்தி புராணத்தில் உறையூர் சமண முனிவர்களின் சாபத்தால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.[4] தளவாய்புரம் செப்பேட்டில் அத்ரி முனிவன் தவத்தினால் அவன் கண்ணிருள் பருகும் பெருஞ்ஜோதி இந்துகிரணன் வெளிப்பட்டான் என வருகிறது.[5] இவ்வாறு நெருப்பைத் தெய்வமாக வணங்கி வந்தனர், வருகின்றனர்.

பூஜையில் நெருப்பு

தெய்வத்தைப் பூஜை செய்து வழிபட்டனர். பூஜை இரண்டு வகையின. நித்திய பூஜை (அல்) நாள் வழிபாடும், சிறப்பு வழி பாடான விழா முதலியனவுமே ஆகும். இவற்றிக்குப் பயன்பட்ட தீப தூப ஆராதனைகள் பல. அவற்றுக்குப் பயன்பட்ட கற்பூரம் விறகு (அகில், சந்தனம்) போன்றவற்றைக் கோயிலுக்குக் கொடுத்த செய்திகள் கல்வெட்டுகளில் காணலாம்.

கற்பூரம்

கோயில் தீப ஆராதனை வழிபாட்டிற்குக்

''கற்பூரத்திற்கு நிசதம் இருதூணி நெல்.''[6]

கொடுத்ததைக் கோனேரிராஜபுரம் கல்வெட்டு (செம்பியன் மாதேவியினுடையது) கூறுகிறது.

அக்னி கார்யம்

''கோ பரகேஸரி பன்மற்கு யாண்டு 14-வது
திருநெடுங்களத்து மஹாதேவர்க்கு நிசதம்
மூன்று சந்தியும் அக்னிகார்யத்துக்கு
நிவந்தம் செய்த பரிசு நெல்லு பன்னிரு
கலம், நெய் அரைப்படியும் மேலெரியு
மற்றும் அக்னிகார்யத்துக்கு
வேண்டுவது செய்விப்போமாக......''[7]

என்று திருநெடுங்கலம் கோயில் கி.பி.10 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. இது போல மற்றொரு கல்வெட்டும் ஒரு செய்தி தருகின்றது.

> ''ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டியன் தலைகொண்ட
> கோபர கேஸரி பன்மற்கு யாண்டு நாலாவது''

என்று தொடங்கும் கல்வெட்டில்

> ''வெள்ளாளன் சிகூருடையான் புலியன் மகன்
> சேனை தனக்கும் மர்மர்த்தமாக இவ்வூர்
> பிரம்மஸ்தானத்தே ஆறு மாஸம்
> தண்ணீரட்டுவதாகவும் ஆறுமாஸம்
> அக்னிஸ்டை இடுவதாகவும்......''[8]

சம்மதித்த செய்தி தரப்படுகின்றது.

செப்பேட்டில்

முதலாம் பரமேஸ்வர வர்மனின் 7ஆம் நூற்றாண்டின் கூரம் செப்பேட்டில் அவ்வூர் நிலத்தை 25 பங்குகளாக்கி இருபது பங்குகள் இருபது சதுர்வேதி அந்தணர்களுக்கும், கூரத்தளிக்குத் தேவ, நவகருமஞ் செய்விக்க மூன்று பங்கும், கூரத்து மண்டபத்தே தண்ணீர்க்கும், திக்கும் ஒரு பங்கும், பாரதம் வாசிக்க ஒரு பங்கும் தரப்பட்டனவாம்.[9]

வடமொழிப்பகுதி

இச்செப்பேட்டின் வடமொழிப் பகுதியிலும் இதன் செய்தி காட்டப்படுகிறது.

> பிநாக பாணெ: பூஜ்யாஸ்நபந
> குஸுமம் கந்த-தூப-தீப-ஹிவிருப
> ஹாரபலி சங்க படா ஹாதி ப்ரவர்த்த நார்த்தம்
> அத்ரைவ உத்காக்நி பாரத
> மாக்யாந நிமிர்த்தாதந்த்

என்று வரக்காணலாம்.

ஊர்தானம்

மூன்றும் நந்திவர்மனின் 10 ஆம் நூற்றாண்டு வேலூர் பாளையம் செப்பேட்டில் சர்வன் என்ற சிவபெருமானுக்குப் பூஜை திருவமுதுக்குப் பணிகள் செய்வதற்குத் திருக்காட்டுப்பள்ளி என்ற கிராமத்தைத் தானம் செய்த செய்தி கூறப்படுகின்றது.

தஸ்மை தேவாய ஸர்வ்வய
பூஜாஸத்ராதி கர்மணெ
ஸொதா க்ராமந்திருக்காட்டுப் பள்ளி
நாமாநமீஸ்வர:

சொக்கப்பனை

கி.பி. 17-ம் நூற்றுண்டைச் சார்ந்த கன்னியாகுமரிக் கல்வெட்டில் சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோயில் ஸ்ரீகார்யம் செய்பவர்கள் சுசிந்திரமுடைய நயினுர்க்குக் கார்த்திகை மாதத் திருவிழாவும் சொக்கப்பனை கொளுத்தக் கொடையும் தரப்பட்டது என்று கல்வெட்டு கூறும்.

திருக்காத்தியலுக்குச் சிறப்பஞ் சொற்கப்பனைத்
திருநாளும் நடக்கும் வகைக்குக்கொடை......[12]

என்று சொல்கிறது.

யாகத்தீ

அக்னிஸ்டோமம் என்று யாக குண்டத்திற்குப் பெயர் சொல்லுவர். யாகம், ஹோமம்,வேள்வி என்ற பெயர்களும் சொல்லப்படும். கல்வெட்டுகளில் சதுர்வேதிகளுக்கும், அவர்கள் செய்யும் யாகத்திற்கும் தானம் தந்தனர் அரசர்கள் என்ற செய்திகள் உள்ளன.

வேள்விக்குடி

வேள்வி செய்த ஊர் அப்பெயராலேயே வழங்கி வந்ததை வேள்விக்குடிச் செப்பேட்டால் அறியலாம்.

வேள்விச் சாலை முன்பு நின்று வேள்விக்குடி
யென்றப் பதியைச் சிரோடு திருவளரச் செய்தார்
வேந்தனப் பொழுதே நீரோடட்டிக் கொடுத்தான்[13]

என்று வருதல் காணலாம். பல வேள்விகள், யாகங்கள், செய்த மன்னன் ''பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி,' என்றழைக்கப் பட்டான். அத்தோடன்றிக் கொல்யானை பல ஓட்டியவன் என்றும் அவனைக் கூறுகின்றனர்.

முத்தீ

ஆகவனியம், காருகபத்யம், தக்காக்னியம் என்ற முத்தீக் கொண்டு வேள்வி செய்யும் அந்தணரின் பெயரை அடைமொழி யோடு கூறுவர். தளவாய்புரம் செப்பேட்டில்,

ஒன்று மொழிந்து இரண்டோம்பி
ஒரு முத்தீயுள்பட்டு
நன்று நான்மறை பேணி ஐவேள்வி நலம் படுத்து
அறுதொழில்கள் மேம்பட்ட மறையோர்[14]

என்று கூறக்காணலாம்.

இலக்கியத்தில்

யாகத்திற்கு 'யானை தந்த விறகிற்கடுந்தெறற் செந்தீ வேட்டனர்' என்று இலக்கியம் கூறும். யாகத்திலிருந்து எழுகின்ற நறும் புகையானது நெற்குவியல்களைச் சூழ்ந்தது. அக்காட்சி மலையை மேகம் சூழ்ந்தது போலிருந்தது என்று சிலம்பில் வரல் காணலாம்[15]

சமையலில் நெருப்பு

மனிதனின் முதல் தேவை உணவு. அவ்வுணவு செய்யப் பயன்படுவது நெருப்பு. அந்நெருப்புக்காக விறகு முதலியன கொடுக்கப்பட்டது என்பது கல்வெட்டில் குறிக்கப்படுகின்றது. கோயில் தேவைக்கு உணவு செய்ய முதலானவற்றிக்கு விறகாகவும், விறகுக்குக் காசாகவும் நெல்லாகவும் தானம் தரப்பட்டன. விறகின் பெயர் 'எரிகரும்பு' எரிதுரும்பு' என்றும் கல்வெட்டில் குறிக்கக் காணலாம்.

விறகுக்கு நெல்

பராந்தகதேவர் 10ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில்

ஒரு நிலத்தின் உண்ணிலமொழிபின்றி
அந்நிலத்தில் வருவன பத்துப் பிராம்ணர்க்கும்
அடுவானுக்கும் விறகிடுவானுக்கும், [16]

நெய்க்கும் இன்ன பிற வற்றிற்கும் கொடுக்கப்பட்டனவாம். மன்னனே மட்டுமின்றி மாதேவியர்களும் (அரசிகளும்) தானம் தந்திருக்கின்றனர். செம்பியன் மாதேவியார் வெண்ணுட்டுத் திருநல்லத்து மகாதேவர் கோயிலுக்குப் பிராமணர் 25 பேர்களுக்குத் தானம்-நிவந்தம் தரும்போது

''.......கறி, விறகு, தயிர்.........''

முதலியவற்றிற்கு

''நெல்லு குறுணி யிரு நாழியாக ஓராண்டு......''[17]

கொடுக்கப்பட்டனவாம். மற்றொரு கல்வெட்டில்,

''திருவமுதிட விறகுக்கு நெல்லு இருநாழி......''[18]

தரப்பட்டனவாம்,

உத்தம சோழனது 10 ஆம் நூற்றூண்டுச் செப்பேட்டிலும் கல் வெட்டிலும் விறகுக்கு நெல் கொடுத்த செய்தி வருகின்றது.

> ''விறகுக்கு நெல் முன்னுழியும்......''[19]
> ''விறகுக்கு நெல்லு குறுணி.........''[20]

என்று தரப்பட்ட செய்தி காணப்படுகிறது.

வீரபாண்டியன் தலை கொண்ட கோ பரகேஸரி பன்மனை ஆதித்த கரிகாலனது 9 ஆம் நூற்றூண்டுக் கல்வெட்டில்,

> ''நெருப்படைக்காக திரிபுவன மாதேவியார்
> வெளத்து வச்ச சாவாமூவாப் பேராடு...''[21]

எனக் குறிப்பிடக் காணலாம்.

இராஜேந்திரனது சிதம்பரத்து நட்ராஜர் கோயில், 11 ஆம் நூற்றூண்டுக் கல்வெட்டில்,

> ''குறுணி ஐஞ்ஞாழியும் விறகுக் கட்டு
> ஒன்றுக்கு நெல்லு முக்குறுணி......''[22]

தரப்பட்ட செய்தி வருகிறது

எரிதுரும்பு, எரிகரும்பு

விறகு என்ற பெயர் மட்டுமல்லாது எரிதுரும்பு, எரிகரும்பு என்ற பெயரிலும் கல்வெட்டில் குறிக்கக் காணலாம். செம்பீ நாட்டுத் தத்தைப் பட்டினத்து அரங்கன் பெருமாள் என்பவர் கரிய மாணிக்க விண்ணவர் எம்பெருமானுக்கு (கொல்லம் 685 கி. பி. 1509) நிவந்தமாய்க் கொடுத்த கொடையில் திருவிசாகம் நடத்தும்போது ஆண்டு ஒன்றுக்குச் செலவு செய்யும் வகையில், 'எரிகரும்புக்குக் காசு....க' என்றும் சி ஜெயந்திக்குச் செலவு செய் கையில் 'எரிகரும்புக்காகக் காசு ஒன்று'[23] எனச்செலவு செய் தார்களாம்.

கருப்புக்கோட்டையில் உள்ள கல்வெட்டில் ஸ்ரீகயிலாய முடைய நாயனுர் விழா, பூஜை நடத்த செலவு செய்த வகையில், எரிதுரும்புக்கு[24] செலவிட்டனராம்.

திருவிதாங்கூர் வீர உதய மார்த்தாண்டவன்மர் கல்வெட்டில்,

> நாள் ஒன்றிக்கு அமுது படி தூணி
> அறுநாழிக்கு இரண்டு அஞ்சுட்பட்ட வகைக்கும்
> எரிகரும்பு கறியமுது உட்பட்ட...[25]

வகைக்கும் பள்ளிச் சந்தம் விடப்பட்ட நிலம் என்று பேசப்படுகின்றது.

மருத்துவத்தில்

சமையலுக்கே மட்டுமின்றிச் சோழர் காலத்தில் மருத்துவச் சாலைக்கு மருந்துச் செடி கொணர்வாருக்கும் புடம் போட விறகு கொண்டு வருவார்க்கும் கூலி தரப்பட்டன என்பது திருமுக்கூடல் மருத்துவ மனையின் கூலி விவரத்தில் காட்டப்படுகின்றது.[26]

நடுகல்லில் நெருப்பு

நடுகற்கள் மூன்று வகையினர்க்கு நடப்படும்.

1 போரில் இறந்த வீரனுக்கு நடுகல்.
2 வடக்கிருந்து உயிர் நீக்கியோருக்கு நடுகல்.
3 உடன் கட்டை ஏறி உயிர் நீத்த பத்தினிப் பெண்டிற்கு நடுகல்

பகை மன்னன் நாட்டைத் தீயிட்டுக் கொளுத்துகின்ற பொழுது அச் செயலைத் தடுக்கையில் உயிர் நீத்த வீரனுக்கு நடுகல் நடப்பட்ட செய்திகளும் உண்டு.

சென்னி வாய்க்கால்

தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனின் 10ஆம் நூற்றுண்டு காலத்திய சென்னி வாய்க்கால் வீரக்கல்லில்,

மாவலிய நியஸ்தான மாள்வான் செவணர்
குண்டு கொண்டு வந்து மடமுஞ் சுட்டுக்
காத்த சிகுரவரையும் மெறிந்து இவர் சிஷ்யர்
ஒரு பிராமணன் சத்தி முற்றத் தேவன்
துண்டு பட்டான்[27]

என்று வரக் காணலாம்.

சிந்தியல்பாடி

தருமபுரி மாவட்ட சிந்தியல்பாடி செல்லியம்மன் கோயில் நடுகல்லில்,

சுப தொங்க தேவனுடைய காலத்தில்
புறமலை நாட்டுச் சிந்தகப்பாடியைச்
சேர்ந்த காமுண்டன் அளப்ப மாறன்
கண்ணையன் எதிரிகளால் ஊரழிக்கப்பட்ட
பொழுது இறந்து பட்டான்[28]

என்று வருகின்றது. இவ்வூர் நெருப்பால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்கின்றனர்.

மாசதிக்கல்

வீரன் இறந்ததற்கு மட்டுமின்றிக் கணவனோடு உடன் கட்டை ஏறித் தீப்பாய்ந்த பெண்டிற்கும் நடுகல் நடப்பட்டது. பத்தினிப் பெண்டிற்குப் 'பொய்கையும் தீயும் ஒன்றாக' இருந்தனவாம். அவ்வாறு பத்தினிப் பெண்டிற்கு எடுத்த நடுகல் 'மாசதிக்கல்' எனப்பட்டது.

ஆவி ஒக்க விடுத்தாள்

> தரைமகள்தன் கொழுநன்தன் உடலந் தன்னைத்
> தாங்காமல் தன்னுடலால் தாங்கி விண்ணாட்டு
> அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
> ஆவி ஒக்க விடுவாளைக் காண்மின் காண்மின்[29]

என்று இலக்கியத்துள் வருதலைக் காட்டலாம். இவ்வாறு ஒருசேர உயிர் நீத்தவளேயன்றித் தீப்பாய்ந்து உயிர் நீத்த செய்திகளையும் காணலாம்.

திருக்கோயிலூர்

10ஆம் நூற்றாண்டின் திருக்கோயிலூர்ப் பாடல் கல்வெட்டு இராஜராஜனின் தாயைக் குறிப்பிடும்போது 'புலியைப் பயந்த பொன்மான்' என்று கூறுகின்றது. இப்புண்ணியத்தாய் இராஜ ராஜனின் தந்தை சுந்தர சோழன் இறந்தபொழுது அவனுடன் தீப்பாய்ந்தாளாம். 'கொழுந்து விட்டெரியும் தனது கணவனின் ஈமத் தீயின் மத்தியிலும் அவனது திருப்புயத்தில் முயங்கிய 'உத்தமி எனப் புகழ்கின்றது. கல்வெட்டுள்,

> இந்திர சமானன் இராஜ சர்வஞ்ஞன் என்னும்
> புலியைப் பயந்த பொன்மான்
> கலியைக் கரந்து கரவாக் காரிகை
> சுரந்த முலை மகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
> தலைமகன் பிரியாத் தையல்[30]

என்று வருதல் காணலாம்.

அறையணி நல்லூர்

திருக்கோவலூர்க்கு அண்மையிலுள்ள அறையணி நல்லூரில் 13-ஆம் நூற்றாண்டில் வேளக்காரப் படையில் உள்ள தேவப் பெருமாள் என்ற பெண் கணவனுடன் இறந்தாள். தீப்பாயுமுன் அவள்,

> என் மணாளன் இறக்கும்போது அவனோடு நானும்
> இறந்து போவேன். அவ்வாறு இறவாது உயிரோடு
> இருப்பேனாயின் என்னைக் காண்பவர்கள் நெருப்பிலிட்டுக்
> கொல்வார்களாக......[31]

என்று எழுதி வைத்தாளாம்.

சேஞ்ஞலூர்

திருநெல்வேலிக்குக் கிழக்கில் 15 கல் தொலைவில் உள்ள செய் துங்க நல்லூர் எனும் சேஞ்ஞலூர் சிவன் கோயிலில் மாறன் ஸ்ரீ வல்ல பாண்டியன் காலத்தில் (பதினொன்பதாம் நூற்றாண்டு) கணவனை இழந்த பதிவிரதைகள் அக்னிப்பிரவேசம் செய்வது வழக்கம். இதனைச் சாசனமொன்று,

> முரப்ப நாட்டு ராஜராய நல்லூர்
> அம்பலக் கூத்தன் அனவரதானை
> தென்னவன் முரப்ப நாட்டுக் கிழவனேன்
> இந்நாட்டு சேஞ்ஞலூரான திருவரங்கத்துச்
> சதுர்வேதி மங்கலத்துத் திருப்பலீஸ்வர
> முடைய மகாதேவர்க்கு நான் தர்மதானம்
> பண்ணிக் கொடுத்த நிலமாவது......
> என் மகள் பரிசண்டி திப்பாய்கிறபோது
> இறையிலி தேவதானமாக நீர்வார்த்துக்
> கொடுத்த நிலம்.........[32]

என்று கூறுகின்றது!

கூத்தாண்டார்பள்ளி

தருமபுரி மாவட்டம் கூத்தாண்டார்பள்ளி, இரண்டாம் இராஜேந்திரனின் (11-நூற்) நடுகல்லில் 'தீப்பாஞ்சாள்' ஒருத்திக் காக நடுகல் எடுக்கப்பட்ட செய்தியைக் காணலாம்.[33]

நகர் சூழ் நெருப்பு

'அடுதீயல்லது சுடுதீயறியாத நாடுகளும்'[34] இருந்தன. பகை ஏற்பட்ட பொழுது பகைமன்னர்களால் ஊர் எரித்து அழிக்கப் பட்டது. மன்னன் யாகத் தீ வளர்த்து நன்மை செய்தது போல பகவன்மீது சினம் கொண்டழித்து நகரை எரியூட்டினான். இதனைத் தொல்காப்பியம் 'எரிபரந் தெடுத்தல்'[35] என்று கூறுகின்றது. சிலப்பதிகாரத்துள் மதுரை நகர் அழிவிற்குப் புண்டைய சாபமே காரணம் என்று கூறப்படுகின்றது.

ஆடித்திங்கள் பேரிருட் பக்கத்து
அழல் சேர் குட்டத்து அட்ட மிஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரியுண்ண[36]

என்று கட்டுரை காதையுள்ளும், காய்கதிர்ச் செல்வன் கூற்ருய்

............மாரதாய்
ஒள்ளெரியுண்ணு மிவ்வூர்...[37]

என்பதும் காணலாம். இவ்வாறு இலக்கியத்தில் பல வரக் காண லாம். இனி கல்வெட்டின்படி சில சான்றுகள் காணலாம்.

ஆலங்குடி

பாபநாசம் தாலுகா ஆலங்குடியில் (கி. பி. 13-ஆம் நூற்ருண் டின்) முதற் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றில்,

தெலிங்க வீமன் விலங்கல் மிசையேறவும்
கலிங்க பூமியைக் கனெயெரி பருகவும்[38]

என்று வருதல் காணலாம்.

சிதம்பரம்

தென்ஞர்க்காடு மாவட்டம் சிதம்பரம் நடராசர் கோயில் குலோத்துங்கனின் (13-ஆம் நூற்ருண்டின்) கல்வெட்டு ஒன்றில் கோட்டாற்றை (நாகர்கோயில்) அழித்த செய்தியைக் கூறும் வடமொழிப் பகுதி காணப்படுகின்றது. அதன் மொழி பெயர்ப்பு,

கம்பீரத்தில் சிங்கத்தையும், பராக்கிரமத்தில்
இந்திரனேயும் நிகர்க்கும் ஸ்ரீ குலோத்துங்க சோழன்
எண்ணற்ற அம்புகளே எய்யும் சேனேயால் பாண்டியர்
ஐவரை வென்றும் பாண்டவ புத்திரஞன அர்ச்சுனன்
காண்டவ வனத்தை எரித்தது போலக் கோட்டாற்றுக்
கோட்டையைத் துரும்பென எரித்தும் செறிந்த
கேரளப் படையை நசுக்கியும் மூவுலகத்தையும்
வென்றதற்கு அறிகுறியாகக் கடற்கரையில் ஜயஸ்தம்பம்
நிறுவிஞன்[39]

என்ற பொருளில் வரக் காணலாம்.

பழம்பாடல்கள்

சோழர்களின் வீரம் சொல்லும் பழம்பாடல்களில் நகர் எரித்தது வருதல் காணலாம்.

வடதிசை வேங்கை மண்டலங் கடந்து தாங்கலர்
கலிங்க மேழும் கனலெரி பரப்ப[10]

என்றும், விக்கிரம சோழன் புகழ் சொல்லுகையில்,

கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்[41]

என்றும், காலிங்கராயன் திருவதிகையில் செய்த திருப்பணி பற்றிய பாடலில்,

பூசல் விளவித்த வேணாடும் வெற்பனைத்துஞ் செந்தீ
விளைவித்தான் தொண்டையர்மன்[42]

என்றும், முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் புகழ் கூறுகையில்,

விரகண்ட கோபாலனென்னும் வேந்தனது நாடு
நகரங்களாகிய காடுகளைக் கடையுகக்
கனல்போல் பொங்கி எரித்துக் கரியாக்கினான்[43]

என்றும் வருதல் காணலாம்.

மெய்க்கீர்த்தியுள்

முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் மெய்க்கீர்த்தியுள்,

வெஞ்சின இவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக்
காவியும் நிலமும் நின்று கவினிழப்ப...[44]

என்று இவன் புகழ் கூறுகின்றது.

செப்பேட்டில்

சின்னமனூர் பெரிய செப்பேட்டில் பராந்தக சடையனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்த மகன் இராஜசிம்மன் என்பவன் போர் வெற்றிகள் பல கொண்டவன். அவன் பொன்னிக் கரை மேலிருந்த கொங்கு நாட்டு வஞ்சி நகரத்தை வென்று தீயிட்டான் என்பதனை,

புனற் பொன்னி வடகரையிற் பொழில் புடைசூழ்
மதில் வஞ்சிக் கனற்பட விழித் தெதிர்த்தான்[45]

என்று கூறுகின்றது.

உவமையில்

மன்னர்களின் வீரத்திற்கு உவமை பல கூறுவர். அவற்றுள் எரியை உவமிப்பதும் ஒன்று எனலாம். தளவாய்புரம் செப்பேட்டில்

மாறவர்மனுடைய தம்பி எதிரிகளாகிய விறகுக்கு நெருப்பு போன்ற ஸ்ரீவீரநாராயணன் என்ற் பொருள் தரும் 16—ம் சுலோகம் வருகின்றது.

தஸ்யானுஜோ வந்றி: அரீந்தனளும்
ஸ்ரீ வீர நாராயண நாமதேய:

என்று கூறுகின்றது.

பாகூர்ச் செப்பேடு

நிருபதுங்கனுடைய ஒன்பதாம் நூற்ருண்டின் பாகூர்ச் செப்பேட்டுள்,

எவனுடைய அருளால் முன்னுளிலே
பாண்டியனுல் சேனை ஜெயிக்கப்பட்டதோ
அந்த அரசனுகிய நெருப்பு அரிசில் ஆற்றின்
மறுகரையில் எதிரிகளின் கூட்டத்தை எரித்தது[47]

என்ற பொருள் தரும் சுலோகம் வருகின்றது.

ஈமச்சடங்குகளில் நெருப்பு

இறந்து பட்ட அரசர்கள், வீரர்கள், வேளிர்கள் உடல்களைத் தீயிலிட்டு எரித்தனர். அரசனே ஆயினும் ஆண்டியே ஆயினும் முடிவில் பிடி சாம்பலாய்ப் போவதுதான் இயற்கை. அவ்வாறு இறந்தவர்களுக்கு ஈமச் சடங்குகள் நிகழ்த்துவது வழக்கம். அது ஈமவொள்ளழல், ஈமவிறகு, ஈமப்படுக்கை எனப் பலவாறு கூறப் படும். இவற்றிக்கு நடுகற்களும் உண்டு.

அதியமான் இறந்த பின்னர் அவனைத் தீயிலிட்டனர் என்பதை,

எறிபுனக் குறவன் குறையலன்ன
கரி புற விறகின் ஈமவொள்ளழலில் [48]

வைத்தனர் என்று ஔவை மூதாட்டி கூறுகிருள்.

புறப்பொருள் வெண்பாமாலையுள்ளும் இறந்த வீரர்களை எரித்து விடுவது குறிக்கப்படுகின்றது. அதற்கும் நடுகற்கள் நடப்பட்டன என்று பாண்பாட்டுத்துறையுள் காட்டப்படும்.

குடுமியான்மலைக் கல்வெட்டு ஒன்றில்,

ஊரிலே சாவு செத்தால் கட்டையுமிட்டு
முக்கா (ட்)டு மிட்டுத் தீ

ச் சட்டியும் கொண்டு சுளுந்துங்
கொளுத்தப் போய் சவங்காத்து
நின்று சுட்டு நடக்கையில் ......[49]

என்று வருதல் காணலாம். இதில் ஈமத்திற்காகக் கட்டையடுக்குதல், சுளுந்து (திப்பந்தம்) பிடித்தல், தீச்சட்டியும் கொண்டு சவம் சுட்ட செய்தி காட்டப்படுகின்றன.

தொல்பொருள் ஆய்வில்

வடகருநாடகத்தில் பல இடங்களில் காணப்படுகின்ற சாம்பல் மேடுகளை ஆய்வு செய்த ஆல்சின் முதலான ஆய்வாளர்கள் பண்டை மக்கள் ஆடுமாடுகளை வளர்த்து வந்தபோது ஏற்பட்ட சாணச் சாம்பலே இஃது என்று கூறுவர். [50]

போலுவாம்பட்டி

கோவை மாவட்டம் போலுவாம்பட்டியில் காணப்பட்ட சாம்பல் மேட்டிலிருந்து சுடுமண் பொம்மைகளும், செம்பினால் செய்யப்பட்ட எருது பொம்மையும் கிடைத்திருக்கிறது. இப்பகுதி முன்னர் எரியால் அழிந்திருக்கலாம் என்று கூறுவர்.[51]

பிற செய்திகள் (சத்தியஞ்செய்தல்)

மேற் கண்டவைகளேயன்றிக் கோயில் பண்டாரத்தே அல்லது பிறவகையிலே பொருள்களைத் திருடியவர்களின் வழக்குகளை விசாரித்து உண்மை அறியப் பல வழிகளைக் கடைப் பிடித்தனர். காய்ச்சிய, இரும்பைத் தழுவச் செய்தல், காய்ச்சிய நெய்யில் கையிடச் செய்தல் என்பன அவைகளில் சில.

குடுமியான்மலை

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை சிகாநாதர் கோயிலில் திரிபுவனச்சக்ரவர்த்தி ஸ்ரீவீரபாண்டிய தேவனின் (14ம் நூற்றாண்டு) கல்வெட்டுளது. இதில் கோயில் பண்டாரத்தே திருடியவர்களை விசாரிக்கப் பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தழுவச் சொன்னார்களாம்.[52] இதேபோன்று புதுக்கோட்டை மறவன் ஏந்தல் ராங்கியம் வீரபாண்டியனது கல்வெட்டும் கூறுகிறது.[53]

தற்போது கிராமங்களில் நெருப்பு

முன் சொன்ன செய்திகள் பலவும் இன்றும் சில கிராமங்களில் நடைபெற்று வரக் காணலாம். நெருப்பைத் தெய்வமாக வழிபடுகின்றனர். கொள்ளிவாய்ப் பிசாசு வழிபாடு காணப்படுகிறது. கோயில் வழிபாட்டிற்குத் தேவையான எண்ணெய் முதலியன

தந்தும், சொக்கப்பனைக் கொளுத்தியும் வருகின்றனர். ஊரில் வரியிட்டுச் சேர்த்த பணத்தைக் கொண்டு சிறு சிறு விழாக்கள் செய்வர். வேண்டுதலுக்காகத் தீச்சட்டி ஏந்துதல், தீ மிதித்தல் போன்றனவும் காணப்படுகின்றன. நடுகற்களுக்கும், துர் தேவதைகளுக்கும் நெருப்புக்காகப் பொருளிட்டு வழிபடுகின்றனர். நெருப்பைச் சாட்சி வைத்துத் திருமணம், சத்தியம் செய்தல், தீயிலிட்டுக் கொளுத்துதல் போன்றன இன்றும் நாம் காணக் கூடியதே.

பழமொழிகளில்

இன்றும் கிராமங்களில் பேச்சு வழக்கில் பல பழமொழிகள் இருந்து வருகின்றன. அவற்றில் சில.

நெருப்பின்றிப் புகையாது
பஞ்சும் நெருப்பும்
மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அலைந்தாற் போல
மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தியது போல
குரங்கு கையில் கொள்ளிக் கட்டையைக் கொடுத்தது போல

முடிவுரை

பெருஞ்சிறப்புக்கு உரிமையான இன்னரும் தமிழகத்தே கடவுளைப்போல் ஆக்கல், காத்தல், அழித்தலெனும் முத்தொழிலைத் தன்னகத்தே கொண்ட நெருப்பு எந்த அளவிற்கு நம் இதயத்தில் சுடர்விட்டதென்பதை இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் வாயிலாகக் கண்டோம்.

குறிப்புகள்

1 தேவாரம், திருவருட்பா
2 திருமுறை 7 வரி 71-72
3 பாண்டியர் செப்பேடுகள், பக். 23
4 சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள், கி. நாச்சிமுத்து, பக். 23
5 பாண்டியர் செப்பேடுகள்
6 SII, iii, 151A.
7 SII, iii. 140
8 SII, iii, 14
9 பல்லவர் செப்பேடுகள், கூரம், பரமேஸ்வரவர்மன் I, ஆறும் ஏடு பின்புறம்

10 பல்லவர் செப்பேடுகள், கூரம், ஐந்தாம் ஏடு முன்புறம்

11 பல்லவர் செப்பேடுகள், வேலூர் பாளையம், நந்தி iii, வடமொழிச் சுலோகம் 25

12 கன்னியாகுமரிக் கல்வெட்டுகள், தொகுதி ii, 235 1968

13 பாண்டியர் செப்பேடு, வேள்விக்குடி, தமிழ்ப்பகுதி

14 பாண்டியர் செப்பேடு, தளவாய்புரம்

15 புறம், 251

16 SII, v. 693

17 SII, iii, 151

18 SII, iii, 151 A

19 SII, iii, 128

20 SII, iii, (உத்தம சோழன்)

21 SII, v, 539

22 SII, iv, 223

23 கன்னியாகுமரிக் கல்வெட்டுகள், முதல் தொகுதி, 1968—29

24 கன்னியாகுமரிக் கல்வெட்டுகள், முதல் தொகுதி, 1968—34

25 கன்னியாகுமரிக் கல்வெட்டுகள், மூன்றும் தொகுதி, 1968—284

26 ஆய்வுக் கோத்து, க. ப. அறவாணன், ப. 110

27 தென்னிந்தியக் கோயில் சாசனம், பாகம் 3 பகுதி 1, பக். c xxi

28 தருமபுரிக் கல்வெட்டு, 44

29 கலிங்கத்துப்பரணி, 483

30 கல்வெட்டு, 1975, திருக்கோயிலூர்ப் பாட்டு, டாக்டர். இரா. நாகசாமி

31 பாண்டிய ராஜவம்சம், அரிகரமையர்.

32 பாண்டிய ராஜவம்சம், அரிகரமையர்

33 தருமபுரி மாவட்டம், கூத்தாண்டார் பள்ளி நடுகல்

34 புறநானூறு

35 தொல்காப்பியம், வஞ்சித்திணை

36 சிலம்பு, கட்டுரைக் காதை

37 சிலம்பு, ஊர்சூழ்வரி

38 SII, v, 458

39 SITI, iii p. 1301

40 சோழர் பற்றிய பழம் பாடல்

41 Ibid

42 Ibid

43 பாண்டியர் ராஜவம்சம், அரிகரமையர், பக். 46

44 முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி
45 பாண்டியர் செப்பேடு, சின்னமனூர் பெரிய செப்பேடு
46 பாண்டியர் செப்பேடு, தளவாய்புரம், சுலோகம் 16
47 பல்லவர் செப்பேடுகள், பாகூர், ப. 274
48 புறநானூறு, 231
49 குடுமியான்மலைக் கல்வெட்டு, ஐ.பி.எஸ்.என். 906
50 தமிழ்நாட்டு வரலாறு : தொல் பழங்காலம், அரசு வெளியீடு, 1975, ப. 194
51 IndianExpress 25-3-77, Hindu The, 16-8-77,
52 Stone Inscriptions in Pudukkottai, ARE No. 601
53 Stone Inscriptions in Pudukkottai, ARE No. 876

நடுநல் நண்ட கீழ்ச்சேரிக் கோழி

தாமரைக் கண்ணன்

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் அச்சிறுபாக் கத்தை அடுத்த, தென்கிழக்கில் சுமார் ஐந்து மீட்டர் தூரத்தில் இந்தளூர் என்னும் சிற்றூர் உள்ளது.

பஸ் வசதிகூட இல்லாத அந்த ஊரில், மிகப் பெரிய புதைய லாக தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டில் வழங்கிய வட்டெழுத் துகள்' சுமார் 120 செ.மீ. 60 செ.மீ. அளவுள்ள கல்லில் காணப் பட்டது. அந்தக்கல்லில், ஓர் அழகிய சேவல் செதுக்கப்பட்டிருந்தது.

அதில் உள்ள வட்டெழுத்துகள், செங்கற்பட்டு மாவட்டத்தில் இதுவரை வேறு எங்கும் காணப்படாதவை.[1]

இதற்கு முன்னர், செங்கற்பட்டு நகரத்தில் அத்தகைய எழுத்துகள் உள்ள கல் ஏதோ ஒரு தெருவில் இருந்ததாகவும், அது சென்னை மியூசியத்தில் வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இலக்கியங்களிலும் அகழ்வாய்விலும், சிற்பங்களிலும் நாம் கோழியைப் பற்றிப் பலவாறு அறிந்திருக்கிறோம்.

பாண்டிய நாட்டில் கி. பி. 8ஆம் நூற்றாண்டில் முருக பிரானுக்கும் தேவசேனைக்கும் எடுக்கப்பட்ட குடைவரைக் கோயில் இன்று 'லாடன் கோயில்' என்ற பெயரில் மதுரைக்கு அருகே ஆனைமலையில் உள்ளது. இக்குடைவரைக் கருவறையின் வாயில் பக்கவாட்டில் சேவலும் மயிலும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. எட்டாம் நூற்றாண்டில் முருகபிரானின் கொடியான சேவல் எத்தகைய முறையில் சிற்பங்களில் அமைக்கப் பட்டது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருமலை எனும் ஊரில் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட சிவபெருமான் கோயிலின் பக்கச் சுவரில் முருகபிரானின் எழில் வாய்ந்த உருவத்தையும் அதன் கீழ் சேவலும் மயிலும் பொறிக்கப்பட்டுள்ளதையும் காண்கிறோம்.

இவை, திருமுருகாற்றுப்படையில் முருகபிரானுக்குச் சேவல் கொடி உரியது என்று கூறுவதை உறுதிப்படுத்தும் வகையில்

பாண்டியர் காலச் சிற்பிகளால் 8-ஆம் நூற்றுண்டில் எடுக்கப்பட்ட கலைச் சின்னங்களாக விளங்குகின்றன.

திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் நூறு ஆண்டு களுக்கு முன்பு நடந்து முடிந்த அகழ்வாய்வில் அழகிய கோழியின் உலோக உருவம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது 2500 ஆண்டுகட்கு முற்பட்டது என்று இதனை ஆய்வு செய்த அறிஞர் ரீ (Rea) கூறுகிருர்.

ஆயினும் கி. பி. ஏழாவது நூற்றுண்டில் கோழிக்காக ஒரு நடுகல் எடுத்திருக்கும் செய்தி நமக்குப் புதியதும் புதுமையானது மான செய்தியாகும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் முதன் முதலாகக் கண்டு பிடிக்கப் பட்டதால் மட்டும் அல்ல.., தமிழகத்திலேயே (ஏன், உலகத்திலேயே கூட) இது வரை ஒரு பறவைக்காக ஒரு நடுகல் எடுத்திருப்பதாகக் கிடைத்திருக்கும் முதலாவது கண்டு பிடிப்பும் இதுவே ஆகும்.

ஆகையால், இந்த நடுகல்லின் சிறப்பும் முக்கியத்துவமும் மேலும் வலுப்பெறுகின்றன.

அதிலும், ஒரு பறவைக்கான நடுகல்லில் சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துகளும் கிடைத் துள்ளன என்று அறியும் போது நமது பூரிப்பு இரண்டு மடங்காகப் பெருகுகின்றது.

அந்தப் பறவை (கோழி) நடுகல்லின் பின்புறம் சுமார் 200, 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஒன்றும் காணப் படுகிறது. அது தேய்ந்து போயிருப்பதுடன் பிற்காலத்தியதாக வும் இருக்கிறது.

இந்தஊரில், தற்போது புதிதாகக் கட்டப் பெற்றுள்ள செங்கழுநீர் விநாயகர் கோயிலுக்கு எதிரில் மூன்று தெருக்கள் சந்திக்கும் இடத்தில் நட்டு வைக்கப் பட்டுள்ள இந்த நடுகல்லின் அருகில், ஆண்டு தோறும் புதிதாக ஒரு குடில் அமைத்து, 'போலாரம்மன்' என்னும் மண்பாவை செய்து வைத்து பொங்கல் வைத்துப் பூசையிட்டுப் படையல் போட்டு, நாள் முழுதும் விழாக் கொண்டாடி, அந்த ஒரு நாள் மாலையே மண்பாவையை(போலா ரம்மனை) ஊர் தூரத்தே உள்ள குளத்திற்கு எடுத்துச் சென்று நீரில் கரைத்து விடுவார்களாம்,

இதைப் 'போலாரம்மன் திருவிழா' என்று ஊரார் கூறுகின்றனர்.

'போலாரம்மா..... போலாரெட்டியார், போலாரம்மா குளம்' என்று சிலர் தங்கள் பெயர்களை வைத்துக் கொள்வதுடன், போலாரம்மனைக் குல தெய்வமாகவும் வழிபடுவதால், இந்த நடுகல்லுக்கும் அந்த விழாவுக்கும் தொடர்பு இருக்காது என்றும் எண்ண வேண்டியிருக்கிறது.

பறவைக்காக எடுக்கப் பட்டுள்ள அந்த நடுகல்லில் அழகிய சேவல் ஒன்று வீரம் பொலியும் தோற்றத்துடன் நிற்கிறது. மெலிந்த அழுத்தமான உடலும், நிமிர்ந்த கொண்டையும், அழகிய அடர்த்தியான வாலும் அதன் தோற்றப் பொலிவை நன்கு வெளிப்படுத்துகின்றன. வலிமையான நீண்ட கால்களைச் சேர்த்து ஊன்றிக் கொண்டு அது நிற்பதையும், இறக்கையை உடலோடு ஒட்டிக் கொண்டு கழுத்தை நிமிர்த்தியுள்ள வேகத்தையும், கொண்டையை உயர்த்திச் சிலிர்த்துக் கொண்டு அது கூர்மையாகப் பார்ப்பதையும் உற்று நோக்கினால் (போர்க் களத்தில் பகைவனை வீழ்த்திவிட்டுப் பெருமிதக் கோலத்தோடு நிற்கும் ஒரு வீரனைப் போல்) அது வெற்றிப் பெருமிதத்துடன் நிற்பது நன்றாகப் புலனாகிறது. பகைக் கோழியை அது வெற்றி கொண்டு, அதன் வயிற்றைக் கீறி அதன் இறகுகளைத் தன் அலகினால் கொத்துக் கொத்தாக இழுத்துத் தலையை ஆட்டுகிறது போலும்! (பகைக் கோழியின்) சிறு சிறு பூ இறகுகள் பொல பொல வென்று, இந்த வீரக் கோழியின் அலகிலிருந்து உதிர்வதை சிற்பி அழகுபட நடுகல்லில் செதுக்கியுள்ளான்.

எத்தனை தடவை பார்த்தாலும் நம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் இந்த நடுகல் அமைந்துள்ளது.

அதில் 'கீழ்ச்சேரிக் கோழி பொடு கொத்த' என்ற (ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட) தமிழ் எழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளன.

பொதுவாக, போரில் பகைவர் பலரை வென்று உடல் முழுதும் விழுப்புண்பட்டு வீர மரணம் எய்திய போர் வீரனுடைய பீடும் பெருமையும் விளங்கும் வண்ணம் அவனுக்கு நடுகல் எடுப்பது தமிழர் பண்பாடு.[2]

சமீபத்தில் ஜப்பான் நாட்டில், நன்றி விசுவாசம் நிறைந்த ஒரு நாய்க்குச் சிலை அமைத்ததைப் படித்திருக்கிறோம்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு வடார்க்காடு மாவட்டத்தில் ஒரு போர் வீரனுடன் ஒரு நாயும் நடுகல்லில் செதுக்கப் பட்டுள்ளது.

எனினும் தமிழர்கள் ஒரு பறவைக்கு நடுகல் எடுத்திருப்பதை இதிலிருந்துதான் நாம் அறிகிறோம்.

நடுகல்லில் இவ்வளவு வீரத்துடனும் கோபத்துடனும் காணப் படும் இந்தச் சேவல், தன்னுடன் போரிட்ட பகைக் கோழியைக் கொத்தி அதன் இறகுகளைப் பிடுங்கி அலைக்கழித்தது என்பதைச் சிற்பம் நன்கு உணர்த்துகிறது.

பின்னர், வீரப் போரிட்டு விழுப்புண்பட்ட இந்தச் சேவல் இறந்து விட்டிருக்கலாம்.

அதனால், இதன் வீரத்தை நேருக்கு நேர் கண்ட வீரப் பெருங் குடி மக்கள் இதற்கு நினைவுச் சின்னமாக இந்த நடுகல்லை எடுத்து, இதன் வீரத்தை வியந்து வழிபட்டிருக்க வேண்டும்.

அடுத்து...

கீழ(ழு?)ச் சேரிக் கோழி பொடு கொத்த, என்னும் தொடர், 'கீழச்சேரிக் கோழி (பகைக் கோழி) பொட்டலாகப் போகுமாறு அதாவது, மயிர்களெல்லாம் சிதைந்து விழுந்து சின்ன பின்னமாகப் போகுமாறு கொத்தி வீரப் போர் புரிந்தது, என்ற விரிவான செய்தியை நமக்குத் தருகிறது.

பொதுவாக, தலைமுடி எல்லாம் உதிர்ந்து போனால் 'தலை பொட்டலாகப் போயிற்று' 'தலையில் பொடுகு வந்து விட்டது' என்றும், விளையாத பாழ் நிலத்தைப் 'பொட்டலாகக் கிடக்கிறது' என்றும் நாம் வழக்கில் சொல்வதை எண்ணிப் பார்த்தால், 'பொடு கொத்த' என்னும் தொடர், 'பொட்டலாகப் போகும்படி கொத்தியது' என்னும் விளக்கத்தை நமக்கு அளிப்பதை நாம் அறியலாம்.

'பொடு கொத்த' என்னும் சொற்கள் 'பொட்டுகளை (தானியங்களை)க் கொத்த' என்ற பொருளைக் கொள்வதற்கும் ஏது வாகிறது.

ஆயினும் ஒரு கோழி தானியங்களைக் கொத்தித் தின்பதைக் காட்ட ஒரு நடுகல்லை எடுக்க வேண்டிய தேவையில்லை. அது சாதாரணச் செய்தி ஆகிவிடும்.

தவிர...

இந்தக் கோழி கீழ்ச்சேரிக் கோழி என்று குறிக்கப் பெறுகின்றது.

இந்த நடுகல் இருக்கும் 'இந்தளூர்' என்னும் கிராமத்திற்கு அருகில் கீழ்ச்சேரி என்னும் ஊர் எதுவும் இல்லை; அப்படி ஓர் ஊர் இருந்து அழிந்து போனதற்கான தடையங்களும் இல்லை.

இந்தளூருக்கு வட கிழக்கில் சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் செய்யூருக்கு அருகில் ஓர் ஊர் கிழச்சேரி எனும் பெயரில் இருக்கிறது.

அந்த ஊரில் இருந்து வந்த கோழி, இந்தளூரில் போரிட்டு வெற்றி பெற்றதால் அது 'கீழ்ச்சேரிக் கோழி' என்று அழைக்கப் பெற்றிருக்கும் என்றோ, இந்த நடுகல் கிழச்சேரியிலிருந்து ஆட்சி மாற்றங்களாலோ, வேறு ஏதாவது காரணங்களாலோ இந்த ஊருக்குக் கொண்டு வரப் பட்டிருக்கலாம் என்றோ எண்ணுவதற்கு இடமில்லை; அது பொருந்தவும் பொருந்தாது.

ஏனெனில் சங்க காலத்திலேயே 'கீழ்ச்சேரிக் கோழி' என்னும் சொல் இலக்கண நூலில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது.

விங்கு கடல் உடுத்த வியன்கண் ஞாலத்துத் தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென, வானோர் ஏத்தும் வாய் மொழிப் பல்புகழ் ஆனாப்பெருமை பெற்ற அகத்தியன் என்னும் அருந்தவ முனிவனுடைய அருந்தமிழ் மாணாக்கர் பன்னிருவருள், பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர் நல்லிசை நிறுத்த தொல்காப்பியன் எழுதி நமக்கு அளித்த, 'ஒல்காப் புகழ் உடையத் தொல் காப்பியம்' எனும் சீரிய இலக்கண நூலுக்கு உரை எழுதிய சேனாவரையர் என்னும் பெரியார் வடநூல் கடலையும் தென்னூல் கடலையும் நிலை கண்டு ஆராய்ந்தவர்.

அத்தகைய சேனாவரையரே, 'எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே' எனும் சூத்திரத்திற்கு எடுத்துக் காட்டு எழுதும்போது, 'மேற்சேரிக் கோழி அலைத்து எனக் கீழ்ச்சேரிக் கோழி அலைப் புண்டது' என்று எழுதியுள்ளார்.[3]

மேலும், 'கீழ்ச்சேரிக் கோழி அலைப் புண்டல் அன்றி,மேற்சேரிக் கோழி அலைத்தல் அமையாமையானும்' என்று விளக்கம் தருகிறார்.

அதாவது, மேற்சேரிக் கோழி துன்பப் படுத்தியதால் (அலைத்ததால்—அலைக்கழித்ததால்) கீழ்ச்சேரிக் கோழி துன்பப்பட்டது (அலைப்புண்டது) என்கிறார்.

நன்னூலுக்கு உரை எழுதிய சங்கரநமச்சிவாயர் 'அடை மொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்'-எனும் சூத்திரத்திற்கு

உரை எழுதும் போது '......மேலைச்சேரிச் சேவல் அலைத்ததென்ற துணையானே கிழைச் சேரிச் சேவல் அலைப்புண்டதென இனத்தைத் தருதலேயன்றி அச்சேவலுடையார்க்கு வெற்றியாயிற் றென்னும் இனமல்ல தனையும் தந்தது.....' என்று மேலைச்சேரி, கிழைச்சேரிக் கோழிகளை மேற்கோளாகத் தருகிறார்.[4]

தொல்காப்பியம் சேனாவரையர் உரையில் 'மேற்சேரிக் கோழி ... கிழ்ச்சேரிக் கோழி' என்று குறிக்கப் பெற்றவை, நன்னூல் உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் (பிற்)காலத்தில் 'மேலைச்சேரிச் சேவல்... கிழைச்சேரிச் சேவல்' என்று குறிப்பிடப் படுவது குறிக்கத் தக்கதாகும்.

'புள்ளினுள் மயிலாண், எழால்... சேவல்... போத்து...ஏற்றை எனப்படும்' என்கிறது தொல்காப்பிய உரை.

சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே [5]

இச் சூத்திரத்தின்படி, மயிலல்லாத புள்ளின்கண் ஆண் பெயர் சேவலென்று கூறப்படுகிறது.

ஆயினும், நடுகல்லில் 'கிழ்ச்சேரிச் சேவல்' என்று எழுதாமல், 'கிழ்ச் சேரிக் கோழி' என்று ஏன் குறித்தனர்?

போருக்கு ஆட்டுக்கடா, ஆண்யானை, ஆண்பூழ், ஆண் சிவல் முதலிய பயன்பட்டது போல் கோழியில் சேவலே பயன்படுத்தப் பட்டது.

பறவைகளில் ஆண் பறவைகளைப் பிரித்துக் கூறாமல், புறப் பொருள் வெண்பாமாலை பொதுப் படையாகப் பூழ் வென்றி,சிவல் வென்றி கூறுவது போல் 'கோழி வென்றி' என்றே கூறுகிறது.

எனவே இங்கே 'சேவல்' என்பது 'கோழி' என்றே எழுதப் பட்டது.

அது மட்டும் அல்ல...

'கிழ்ச்சேரிச் சேவல் என்று குறிக்கப்பட்டிருந்தால்' 'மயில் அல்லாத வேறு ஆண் பறவைகள் எல்லாமே சேவல்' என்னும் தொல்காப்பிய உரையின்படி வேறு பறவைகளையும் இது குறிப்ப தாகிவிடும். 'சேவற் கோழியின், சிற்பத்தைப் பார்த்து வேண்டு மானால் இது ஆண்கோழியைக் குறிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இத்தகைய குழப்பங்களுக்கு இடம் தராமல், இந்தக் கல்வெட்டில் 'கீழ்ச்சேரிக் கோழி' என்று நம் பெரியோர்கள் பொறித்திருப்பதை நினைக்கும்போது நெஞ்சத்தில் இன்பச் சிலிர்ப்பு ஏற்படுகிறது.

சோழர்களின் தலைநகரமாகக் கோழியூர் (உறையூர்) இருந்தது என்பதை 'கோழிப் புனலுடன் பேரே வரும்'[6] என்பது போன்ற பல இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன.

கோழி வென்றி,[7] தகர் (செம்மறிக்கடா) வென்றி, யானை வென்றி, பூழ் (காளுங் கோழி, காடை) வென்றி, சிவல் (கவுதாரி, காடைவகை) வென்றி, கிளிவென்றி, பூவை வென்றி என்று 19 வென்றிகளைப் புறப்பொருள் வெண்பாமாலை விளக்குகிறது. அவற்றுள், கோழி வென்றியைப் பற்றிக் கூறும் பாடல்:

பாய்ந்தும் எரிந்தும் படிந்தும் பலகாலுங்
காய்ந்தும்வாய்க் கொண்டும் கடுஞ்சேவல் ஆய்ந்து
நி (தி)றங்கண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டும் தான்வருமே போர்க்கு.[8]

(எழப்பாய்ந்தும் காலின் முள்ளையிட்டு இடித்தும், தாழ்ந்தும், பல காலும் கோவித்தும், கூவியும், கடிய சேவற்கோழி, ஆராய்ந்து கோழிகளின் நிறம் (திறம்) அறிந்து கோழி நூல் வல்லவர் சொல்லுக்குச் சொல் ஒப்பாகவிட்ட கோழியைப் புறங்கண்டும் தான் பின்பும் போர்க்கு வாரா நின்றது.)

இந்தப் போர்க் கோழிகள் புறங்கண்டும் போர்க்கு மீண்டும் வரும்.

சொல்லுக்குச் சொல் வெல்லும், ஆமைக்கு ஆமை வெல்லும் தெங்குக்குத் தெங்கு வெல்லும் எனக் கோழிகளின் நிறம் (திறம்) அறிந்து விடுதல் என்பர். சொல், ஆமை, தெங்கு என்பன சண்டைக் கோழிகளின் வகை என்பர், பழைய உரையாசிரியர்.[9] கோழியின் இனம், தன்மை, நோய், உணவு, விறுடைமை, வளர்ப்பு முறை முதலியவற்றை நன்கு உணர்ந்த கோழி நூல் வல்லவர், 'வித்தகர்' என்றும் புறப்பொருள் வெண்பா மாலை போற்றிக் கூறுகிறது.

பறவைப் போர்களில், பூழ்ப்போரைப் பற்றிக் கலித்தொகை (மருதக்கலி 95) சுவையாகக் கூறுகிறது.[10]

பறவைப் போரை மக்கள் மட்டும் அல்ல—மன்னர்களும் பார்த்து மகிழ்ந்திருக்கின்றனர்.

முதற் குலோத்துங்கன் தான் செய்வதற்குரிய போர் ஏதும் இல்லையென்றால், வீரர்களுடைய மற்போரையும், புலவர்களுடைய சொற்போரையும், மதயானைகளின் போரையும் பார்த்துப் பொழுது போக்குவதைப் போலவே, கோழிகளின் போரையும் கண்டு களிப்பானும். இதனை...

'வருசெறு ஒன்று இன்மையினல், மற்போரும்,
சொற்புலவோர் வாதப் போரும்,
இருசிறை வாரணப் போரும், இகல் மதவா—
ரணப் போரும் இனைய கண்டே...'

என்று பாடுகிறது கலிங்கத்துப் பரணி.[11]

கோழியின் பெயரைக் குக்குடம், சேவல், வாரணம், கோழி என்று சேந்தன் திவாகரமும், குக்குடம், குருகு, வாரணம், ஆண்டலைப்புள், காலாயுதம், கோழி என்று பிங்கல நிகண்டும் குருகு, காலாயுதம், குக்குடம், ஆண்டலைப்புள், வாரணம், கோழி என்று சூடாமணி நிகண்டும் சரணு யுதம், குக்குடம், வாரணம், சேவல், கோழி, என்று கயாதரநிகண்டும் பல்வேறு வகைகளில் கூறுகின்றன.

கோழியில், கானங்கோழி, கம்பங் கோழி (கம்புள்) என்று பல பிரிவுகள் இருந்திருக்கின்றன என்பதை மேற்காணும் நான்கு நிகண்டுகள் வாயிலாக நாம் அறிகிறோம்.

அதில், மற்ற யானை...தகர் (ஆட்டுக்கடா) முதலியவற்றுக்கு ஊர்ப் பெயர்களைச் சேர்த்துக் குறிக்காமல் கோழிக்கு மட்டும் 'கீழ்ச் சேரிக்கோழி, மேற்சேரிக் கோழி' என்று ஏன் ஊர்ப் பெயர் இட்டுக் கூறினார்கள் என்பது ஆராயத் தக்கதாகும்

ஒரு வேளை......சில குறிப்பிட்ட இடங்கள், குறிப்பிட்ட பொருள்களுக்குப் பெயர் பெற்றிருப்பதைப் போல (பண்ணுருட்டி பலா, சேலம் மாம்பழம், புங்கனூர் பசு, மைசூர் பூரணிகாளை) கீழ்ச்சேரி, மேற்சேரி எனும் ஊர்களில் (இடங்களில்) இருந்தவர்கள் கோழிகளுக்குப் போர்ப் பயிற்சிகள் கொடுத்துச் சண்டைச் சேவல்களை உருவாக்குவதில் தேர்ந்தவர்களாக இருந்திருப்பார்கள்; அங்கிருந்த கோழிகளும் போர் புரிவதில் வல்லமையுடைய தனிச் சாதிக் கோழிகளாக இருந்திருக்கலாம்.

அல்லது, தமிழகத்தின் மற்ற பகுதியினரைவிட கீழ்ச்சேரி,மேற்சேரிக்காரர்கள் இந்த 'கோழிச் சண்டை' விடுவதில் ஆர்வம் உடையவர்களாக இருந்திருக்கலாம்.

சேவல்களின் கால்களில் வலிமை வாய்ந்த கூரிய இரும்பு ஆணிகளைப் போன்ற முட்கள் (நகங்கள்) இருக்கும். சண்டை போடுவதற்காக வளர்த்துப் பயிற்சி தருபவர்கள் அந்தக் கூரிய நகங்களை மெல்லிய கத்தியால் சீவி மேலும் கூர்மைப் படுத்துவார்கள். அத்துடன், அதன் காலில் கூர்மையாகத் தீட்டப்பட்ட மெல்லிய நீண்ட கத்திகளையும் கட்டி சண்டைக்கு விடுவார்கள்.

சண்டைப் பயிற்சி பெற்ற சேவல்கள் இரண்டையும், இரண்டு தரப்பினரும் மோத விடுவார்கள்.

இரண்டு சேவல்களும் பதுங்கிப் பதுங்கி நடைபயின்று திடீரென்று ஒன்றின்மீது ஒன்று பாய்ந்து, இறக்கைகளால் எதிரியின் முகத்தில் அறைந்து தாக்கும்; அதே சமயத்தில் மூக்கால் எதிரியின் கொண்டையைப் பற்றியும், கால்களில் உள்ள சிறு கத்தியாலும் கூரிய நகத்தாலும் எதிரியின் வயிற்றிலும், கழுத்திலும் இரைப்பையிலும் தாக்கிக் கிழித்துப் போராடும், இதனால் சில கோழிகளின் இறக்கைகளும் தலையும்கூட அறுந்து போய்த்தொங்கும். வயிறு கிழிந்து போய்ச் சாயும்;தலை தனியாகத் துண்டிக்கப்பட்டுத் துடிக்கும். கீழே விழுந்த பிறகும் கூட வெற்றி பெற்ற கோழி அதை மூர்க்கத்தனமாகத் தாக்கும். அதை வளர்த்தவர்கள் போய் அதைப் பிடித்துக் கொள்வார்கள்.

சில நேரங்களில் தோற்ற கோழி இறந்து போவதைப் போல வெற்றி பெற்ற கோழியும் விழுப்புண்களால் இறந்து போவதும் உண்டு.

போரில் வீர மரணம் அடைந்த ஒரு சேவலுக்குத்தான் இந்த நடுகல் அமைக்கப்பட்டிருக்கிறது.

கல்வெட்டில் 'கிழுச்சேரிக் கோழி' என்று தெளிவாக எழுதப் பட்டுள்ளது.

அது 'கீழ்ச்சேரிக் கோழி' என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏனெனில் 'கிழுச்சேரி' என்று அந்நாளில் வழக்கில் இருந்திருக் கலாம்; அல்லது, கல்வெட்டுகளில் சாதாரணமாகக் காணப்படும் எழுத்துப்பிழை இதிலும் ஏற்பட்டிருக்கலாம்.

கீழ்ச்சேரி, மேற்சேரி என்ற இடங்கள் இருந்தனவோ இல்லையோ, தொல்காப்பியத்தின் உரையாசிரியர் சேனாவரையர் தாம் எடுத்துக் காட்டுக்காக 'கீழ்ச்சேரி...மேற்சேரி' என்று குறித் தாரோ? தெரியவில்லை.

நமக்குக் கிடைத்துள்ள இலக்கண நூல்களுள் மிகப் பழமையான நூல் தொல்காப்பியம்.

உரையாசிரியர் சேனாவரையர் தம் காலத்தில் 'கீழ்ச்சேரிக் கோழி' என்று குறிப்பிட்டிருந்தாலும், அவருக்குப் பல நூற்றாண்டு களுக்கும் முன்பாகவே தொல்காப்பியர், அவருக்கும் முன்னோடி யாகிய அகத்தியர் காலத்திலிருந்தே அச்சொற்கள் இருந்து, அது செவிவழிச் செய்தியாக வந்திருக்கலாம்.

எது எப்படி ஆயினும், பண்டைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்குச் சிறந்த இலக்கியமாக இந்தப் 'பறவை நடுகல்' விளங்குகிறது என்பதை நாம் கருத்து வேறு கொள்ளாமல் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

குறிப்புகள்

1 இந்நடுகல்லைப் பார்வையிட்டு அதிலுள்ள கல்வெட்டைச் செங்கற்பட்டு மாவட்டப் பதிவு அலுவலர் படித்துத் தந்தார்.

2 தொல்காப்பியம், கரந்தைத்திணை

3 தொல்காப்பியம், சொல். கிளவியாக்கம், 60

4 நன்னூல், பொதுவியல், சூத் 402

5 தொல். பொருள், மரபியல், 593

6 யாப்பருங்கலக்காரிகை, உறுப்பியல், 9, மேற்கோள் பாடல்

7 புறப்பொருள் வெண்பா மாலை, ஒழிபியல்

8 புறப்பொருள் வெண்பா மாலை, ஒழிபு, 348

9 புறப்பொருள் வெண்பா மாலை, புலியூர்க்கேசிகன் பதிப்பு

10 கலித்தொகை, மருதம், 95

11 கலிங்கத்துப் பரணி, அவதாரம், 10-277.

கல்வெட்டில் மீன்

தங்க. ஜெயராமன்

உலகில் நிலப்பரப்பை விட நீர்ப்பரப்பு அதிகம் என்பது வெள்ளிடை மலையான கருத்து. நீரில் வாழும் உயிரினங்களில் மீனும் ஒன்ருகும். மீனைப்பற்றிக் கல்வெட்டிலும், செப்பேட்டிலும், இலக்கியத்திலும், இலச்சினையிலும், காசுகளிலும், கொடிகளிலும், பழமொழிகளிலும் பல பொருள்களிலும் பகர்வதைப் பற்றி இங்கு காண்போம்.

சிந்து சமவெளி நாகரிகச் சின்னங்களில் மீன்

சிந்து சமவெளி நாகரிகச் சின்னங்களில் பல விலங்குகளின் உருவங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படுகின்ற சின்னங்களில் மீன் உருவமும் காணப்படுகிறது.

அஹமத் ஹர்சன்தானி என்ற அறிஞர் சிந்துசமவெளி நாகரிகத்தினை இந்தோ-சுமேரியனுடன் ஒப்பிடுகிருர். அவர் ஐந்து வகை (விண்) மீன்களை எடுத்துக்கொண்டு விளக்கம் தருகிருர்.

இலக்கியத்தில் மீன்

உப்பாக உள்ள தண்ணீரிலும் நல்ல தண்ணீரிலும் பல வகையான மீன்கள் காணப்படுகின்றன.

மீன் வகைகள்

நல்ல நீரில் வாழும் மீன்களில் பலவகைகள் காணப்படுகின்றன. கயல், கெண்டை, சேல், வாளை, மலங்குமீன், அகாட்டு மீன், முதலை, சுரு போன்ற மீன் வகைகளைப் பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுவதனைக் காணலாம்.

> கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ் மேய்ந்த
> கயவாய் எருமை
>
> சிறுபாணாற்றுப்படை 41

> கழனி மாசுத்து விளைந்துகு தீம்பழம்
> பழனவாளை கதூஉம் ஊரன்
>
> குறுந்தொகை. 8

வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்

அகம். 6

கயனெடுங் கண்ணி காதற் கேள்வ
வயலுழைப் படர்குவம் எனினே—யாங்குப்
பூ நாறிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர் நாய் கௌவிய நெடும்பறவாளை
மலங்குமிளிர் செறுவின் விளங்கப் பாயிறி

சிலம்பு. நாடுகாண் காதை. 76

கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்

அகம். 170

முதலையும் சுறவும் மீனுதலின்

தொல்காப்பியம்-பொருளதிகாரம்—
நச்சினார்க்கினியர் உரை. பக். 59

வலைமீன் உணங்கல் பொருட்டாக

சிலம்பு. கானல்வரி

வல்லெருமை வெருவு மீன்கள் விராலுகள்
புனர்பதி இதனிற்

பாண்டியர் செப்பேடுகள் பத்து
தளவாய்புரச் சாசனம்

கடல் நீரில் வாழும் மீன்வகைகள் பல உண்டு. தேவதை மீன், பஞ்சவர்ண மீன், பச்சைநிற மீன், பறக்கும் மீன், ஊதுமீன், முள்ளம்பன்றிமீன், உல்லான், இறால்மீன், திருக்கைமீன், இரம்பமீன், சுறுமீன், குழாய்மீன்கள், ஊசிமீன், வேட்டைமீன் போன்று கடலில் சுமார் இருபதினாயிரம் மீன் வகைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே கடலினை மீன் களஞ்சியம் எனலாம்.

நெய்தல் நிலம்

தமிழர்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்தனர். 5 வகை நிலங்களில் நெய்தல் நிலமும் ஒன்று. நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். அங்கு வசிப்போர் பரதவர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர் ஆவர். அவர்களின் உணவு மீனும், மீன் இணங்களும் ஆகும். அவர்களின் தொழில் மீன் பிடித்தல், தோணி கட்டுதல் வலைபின்னுதல். மீன்களைத் தின்ன வரும் பறவைகளை விரட்டல், மீன் விற்றல் முதிலியன,

தூய வெண்டுறைப் பரதவர்
தொடுப்பன வலைகள்
—திருத்தொண்டர் மாக்கதை
திருக்குறிப்புத் தொண்டர் புராணம்

மீன்பிடிப்போரை பரதவர் என்றும், அவர்களுடைய தொழிலை வலை பின்னுதல் என்றும் அறியலாம்.

''மீனெறி பரதவர்''-நற்றிணை. 101

''நுண்வலைப் பரதவர்—குறுந்தொகை 184

''வலை வாழ்நகர் சேரி வலையுணங்கு முன்றின்
மலர்க்கையேந்தி
விலைமீன் உணங்கற் பொருட்டாக
வேண்டுருவங் கொண்டு வேறோர்''
சிலம்பு, கானல்வரி. 11

''கடல்புக்கு உயிர்கொன்று வாழ்வர் நின்ஐயர்''
சிலம்பு, கானல்வரி

இவ்வாறு இலக்கியங்களில் மீன் பிடிப்பவர்களைப் பரதவர் என்றும் அவர்களின் தொழில் வலைபின்னுதல், மீன் விற்றல் என்றும் செப்பப்படுகின்றது.

தர்ஸ்டன் தமது நூலில் அவர்களைக் கடற்கரையோரத்தில் வசித்தார்கள் என்றும் வருணனை வழிபட்டனர் என்றும் கூறுகிறார்.

ஸ்ரீஹார்னல் என்பவர் இவர்கள்தான் மீன்பிடிக்கும் உரிமையில் முழுமை பெற்றிருந்தனர், இவர்கள் போர்த்துகிசியர்களுக்கு முன் வந்தவர் என்றும், முகமதியர்கள் கடலோரத்தில் குடியேறுவதின் ஆதிக்கப் போட்டியைத் தொடர்ந்து சந்தித்தனர் என்றும் முத்துக் குளிக்கும் தொழிலில் சிறந்து விளங்கினர் என்றும் கூறுகிறார்.[1]

மீன் பிடிப்போர் வசிக்கும் இடம் பட்டினப்பாக்கம் எனப் பட்டது.

பட்டினச்சேரி என்றும், பட்டினவர்ச்சேரி என்றும் அவர்கள் வசிக்கும் இடம் அழைக்கப்படுகிறது.[2]

புலவு மீன் உணக்கு ஓசையும் புட்கள் ஒப்பீசையும்
விலைபகர்ந்திடும் அமைலையும், மீன்கொள் கம்பலையும்

வலை யெறிந்திடும் அரவமும் வாங்கும் அரவமும்
அலை யெறிந்திடு பரவையாய் அடைப்பன மாதோ
—திருவிளையாடல் புராணம்

மீன் பிடிப்போர் வசிக்கும் இடத்தின் சூழ்நிலையைத் தெளிவாக நன்கு விளக்குகிறார் ஆசிரியர்.

உவமையில் மீன்

பெண்களின் கண்களைக் கயலுக்கு உவமைப்படுத்தும் தன்மையை இலக்கியங்களில் காணலாம். வடிவம், நிற, ஒளி, துள்ளி பிறழ்கின்ற தன்மைகளில் ஆரணங்கின் கண்களும், கயலுக்கு ஒத்துள்ளமையால் அவர்களின் கண்களை 'சேல்கண்', 'கயற்கண்' என்கின்றனர்.

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்த முகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில் வாழ்நர் சீறூர்க்கே
அங்கண் ஏர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே

சிலம்பு, கானல் வரி

பெண்களின் கண்கள் கயல்கள் போன்று இருப்பதாக வருகிறது.

அங்கயற்கண்ணி

மதுரையில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு அங்கயற்கண்ணி என்று பெயர். உமாதேவியின் கண் கயல் போன்று இருப்பதால் 'கயற்கண்ணி' என்றும் மீனாட்சி என்றும் அழைக்கப்படுகிறது.

விண்மீன்

மீன் என்ற சொல்லுக்கு மின்னுதல் என்ற பொருளும் உண்டு. எனவே மீன் என்ற சொல் ஆகாயத்தில் பூத்து விளங்கும் நட்சத்திரத்தினையும் குறிக்கும்.

பான்மையில் திரியாது பாற்கதிர் பரப்பி
மீனர சாண்ட வெள்ளி விளக்கத்து
சிலம்பு-புகார்க்காண்டம்

சந்திரனை மீன் அரசன் என்று குறிக்கிறது.

வான்றோய் வன்ன புரிசை விசும்பின்
மீன் பூத்தன்ன வுருவ ஞாயிற் — புறநானூறு-21

உக்கிரப் பெருவழுதியை ஐயூர் மூலங்கிழார் சிறப்பித்துக் கூறும் போது "உயர்ச்சியான வானைப் பொருந்துவது போன்ற மதிலும், அவ்வானத்து மீன் பூத்தாற் போன்ற வடிவையும் உடைய பூட்டினையும் உடையவன் என்கிறார்.

கல்வெட்டில் மீன்

பாண்டியர்கள் மீனைத் தங்களுடைய இலச்சினையாகக் கொண்டிருந்தனர். அவர்களுடைய கொடி, செப்பேட்டு முத்திரை ஆகியவைகளில் கயல் இலச்சினையை நாம் காணலாம். எனவே பாண்டியர்களை 'கயலாளி' என்றும் 'மீனவர்' என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுவதனைக் காணலாம்.

பாண்டிய மன்னன் ஜடாவர்மன் ஸ்ரீ வல்லபனுடைய (14-ஆம் நூற்றாண்டு) கல்வெட்டு

........பார் முழுதும் கயலாணை பரந்து
செங்கோலுடர் வளர[3]

இவனுடைய கல்வெட்டு ஒன்று இவனைக் 'கயலாளி' என்றும் கயல் இலச்சினை உடையவன் என்றும் கூறுகிறது.

ஸ்ரீ ஸ்ரீ திருமட
ந்தையுஞ் செயமடந்தையும் திருப்புயங்களி
லனி திருப்ப (இரு) நில மும் பெ(ரு)மை
(பெரும) (எய்வ) எண்டிசையுங் கொடை நி
முற்ற மன்னவரெல்லாம் வந்திறைஞ்ச
மரபில் வந்த மணிமுடி
(சூடி) தென்குமரி வடகங்கையும் (திரை)க்கடலெ எ
ல்லையாக பார் முழுதுங் கயலாணை பரந்து
உடன் வழா மன்னி[4]

இந்த அரசனுடைய மற்றொரு கல்வெட்டு இவனை 'கயலாளி' என்று குறிப்பிடுகிறது.

வருமணிமுடி சூடித் தென்குமரியும்
வடகெங்கையுந் திரைக்கடலெ
எல்லையாகப் பார் முழுதுங் கயலானை
பரந்து செங்கோலுடன் வளர......

மற்றொரு கல்வெட்டு

.... சின(ப்)
புலி ஒதுங்க.......விர்கயல்
விளையாட பார்மிசை......ன்னு[5]

என்று ஸ்ரீ வல்லப பாண்டியன் கயல் இலச்சினை பெற்றிருந்தமை யைக் குறிப்பிடுகிறது.

சடையவர்மன் ஸ்ரீ வல்லபதேவர் கயல் இலச்சினை பெற்றிருந்தமையை ''...... முதுங் கயலாணை'' என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[6]

மன்னர்கள் தானம் வழங்கும்பொழுது ஏரிகளில் மீன் பிடிக்கும் உரிமையையும் கொடுத்திருந்தனர். இதனை விளக்கும் கல்வெட்டு ஒன்று,

ஸ்ரீ மாவலிவாண கோ(வ)ங்கை மீ
(பு)ந்த ஞான்று புலையமன்னர்
புறமலை நாடான அவர் அடி
யான் இநோட்பைப் பெருவணய
ன் மகன் (ம)கன் பட்டான் தாழன் அவ(ர்)
க்கு (நே)த் தோர் பட்டித் திர ஏரி
க்கீழ் ஆறு செறுவு பேர் ஏரிக்கீ
ழ் க (ரு) மீன் வி
ற்று மணட்டி
இது அரம
ழித்தான்
பாதகன்[7]

திருவண்ணாமலையில் கிரிபிரகாரத்தில் விக்கிரம பாண்டியனின் 13-ஆம்நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் இரு கயல் உருவங்கள் காணப்படுகின்றன.

மேலும் திருவானைக்காவல், திருவதிகை கோயிலிலும் ஸ்ரீரங்கம் கருவறையிலும் மீன் சின்னம் பொறிக்கப்பட்டதனைக் காணலாம்.

தில்லைக் கோபுரத்தில் மீன் உருவங்கள்

ஆடல் வல்லானின் ஆலயமான தில்லை தெற்குக் கோபுரத்தினைக் கட்டியவன் சொங்ககசியன் என்ற இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனாவான். இதில் இரு கயல் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதனை நோக்கும்பொழுது, கோப்பெருஞ்சிங்கன் இதனைக் கட்டிய போது பாண்டியருக்கு அடங்கிய குறுநில மன்னன் ஆனான் என்பதை அறியலாம்.[8]

இதுபோல் மேற்கு ராஜகோபுரத்தினைக் கட்டியவன் மூன்றும் குலோத்துங்கன். இதனைத் திருப்பணி செய்த பாண்டியன் முதல் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் அங்கு தன்னுடைய சின்னமாகிய கயலினைப் பொறித்துள்ளமைக் காணலாம்.

மீன் வரி

பாண்டிய மன்னன் ஜடாவர்மனின் (13-ஆம் நூற்றாண்டு) கல்வெட்டு ஒன்று நாட்டில் வழக்கில் இருந்த ஒருவகை வரியைக் குறிக்கும்போது மீன்பிடிப்போருக்கு இருந்த வரியை 'மீன்பாட்டம், என்று குறிக்கிறது.

குமர (க்கச்ச)ாணமும், தறிஇறை
தாட்டார்ப் பாட்ட(ம்) இஉள்ளிட்ட
(இ)றை பாட்ட, மின்பாட்டமும்
பாடி காவல்க்கூலி (யி)முள்ளிட்[9]

''மீன் ஆயம்'' என்ற வரி எல்லா அரசர்களும் இட்ட வரிகளுள் ஒன்றாகக் காணப்படுகிறது. சோழர்கள் இட்ட வரிகளில் மீன் வரியும் ஒன்றாகும்.[10]

திருமால் மச்சாவதாரம்

பல்லவர்களின் கலைச்சிறப்பினை உலகிற்கு எடுத்துக்காட்டி நிற்கும் மாமல்லையில் உள்ள ஆதிவராஹ மண்டபத்தில் திருமாலின் பத்துஅவதாரங்களையும் குறிக்கும் கல்வெட்டு உள்ளது.

கருவறையை அடுத்துக் காணும் அரியரன் சிற்பத்தின் மேல் பல்லவக் கிரந்த எழுத்தில்,

மத்சய கூர்ம வராஹஸ்ச
நாரசிம்மஸ்ச வாமணஹ
ராமோ ராமஸ்ச புத்த
கல்கீ தசாஸ்மிருதா:[11]

என்று வடமொழிச் செய்யுள் ஒன்று உள்ளது. இதில் திருமாலின் பத்து அவதாரங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்றே பெரியாழ்வார் தம்முடைய திருவாய் மொழியில்,

தேவுடை மீனமாய் ஆமையாய்
ஏனமாய் அரியாய்க் குறளாய்
மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க்
கல்கியாய் முடிப்பான் கோயில்

என்று திருமாலின் பத்து அவதாரங்களையும் குறிப்பிடுகின்றார்.

செப்பேட்டில் மீன்

பாண்டியர்களுடைய இலச்சினையான கயலினை அவர்களுடைய செப்பேடுகளில் காணலாம். பராந்தக வீர நாராயணனின் தளவாய்புரச் செப்பேடு கூறுமிடத்து,

> கயலிணை வடவரைப் பொறித்தும்

என வீர நாராயணன் தன்னுடைய சின்னமாகிய கயலினை இமய மலையில் பொறித்தவர் என்கிறது.

> மீனவன் வீரநாரணற் ந

இப்பாண்டிய அரசன் மீன் இலச்சினையுடையவன் ஆதலால் இவனை மீனவன் என்று அழைத்தனர்.

> வல்லொருமை வெருவு மீன்கள்
> விராலுகள் புனர்பதி இதனிற்

கோச்சடையன் தானமாக "வலிய எருமைகளும் பயப்படக்கூடிய மீன்களும் விரால் மீன்களும் துள்ளப்பெற்ற நீர்வளம் பொருந்திய இப்பூமியில் மீன் பிடிக்கும் உரிமையைப் பாதியையும்" கொடுத்த தாகத் தளவாய்புரம் செப்பேடு கூறுகிறது.

> தென்னவர்தந் திறலானை சிலை ஒடு
> புலி கயலிணை மன் பொன்னிமையச்
> சிமையத்து விறற்கருவி இற்

பாண்டியனுடைய வலிய ஆனையாகிய சிலை, புலி, இரு மீன்கள் இவைகளைப் பொன்மயமான இமயத்தின் உச்சியில் சிறந்த கருவி கொண்டு செதுக்கிய தொழில் செய்து வந்தவர்களுக்குப் பின்னோன் ஆவான்.

> சிலையும் புலியுங் கயலுஞ்சென்று[12]

சிலை, புலி, கயல் இவைகள் பொறிக்கப்பட்ட கொடிகளை நெடு வரையில் செதுக்குவித்தான் கோச்சடையன்.

இலச்சினையில் மீன்

கல்வெட்டுக்களிலும், ஓலைச் சுவடிகளிலும் காணப்படாத அரசனது முத்திரை செப்பேடுகளில் காணமுடிகிறது.[13]

மன்னனுடைய கொடியில் விளங்கும் சின்னமே அவனுடைய இலச்சினையாகக் கருதினர்.

சோழர்களுடைய சில செப்பேடுகளில் வில், கயல், புலி மூன்றும் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இராஜராஜனுடைய செப் பேட்டு முத்திரையிலும் கயல்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இராஜேந்திரனுடைய திருவாலங்காட்டுச் செப்பேட்டில் பாண் டியர்களுடைய சின்னமான இரு கயல்கள் பொறிக்கப்பட்டுள் ளமையைக் காணலாம்.

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை யினருக்கு வேளஞ்சேரி என்ற ஊரிலிருந்து பராந்தக சோனிழன் செப்பேடு ஒன்று கிடைத்துள்ளது. இந்த வேளஞ்சேரிச் செப்பேட்டிலும் பாண்டியர்களுடைய இலச்சினையான கயல்சின்னம் காணப்படுகிறது.

சேரரையும், பாண்டியர்களையும் வென்றதைக் குறிக்கவே அவர்களது சின்னங்களைத் தங்கள் சின்னங்களோடு சோழர்கள் சேர்த்துப் பொறித்துள்ளனர். இதனை உறுதிப்படுத்தும் வகையில் சோழரின் ஒரு சில செப்பேடுகளில் புலியும் மீனும் மட்டும் உள்ளன. இதிலிருந்து சோழன் பாண்டியனை மட்டும் வெற்றி கொண்டான் என்று கொள்ளலாம். உதாரணமாக முதலாம் இராஜேந்திர சோழனுடைய கரந்தைச் செப்பேட்டில் வில் பொறி இல்லை.[14]

செங்குட்டுவன் கல் கொண்டு வருவதற்காக வடதிசைப் புறப் படுவதை வடநாட்டு மன்னருக்குத் தெரிவிப்பதற்காக ஓலை எழுதப் பட்டது. இதில் இம்மூன்றும் பொறிக்கப்பட்ட இலச்சினை இடப் பட்டது.

வடதிசை மருங்கின மன்னர்க்கெல்லாம்
தென்றமிழ் நன்னாட்டுச் செருவிற்
கயற்புலி மண்தலை ஏற்க வரைக

—சிலம்பு

பாண்டிக்கோவை நெடுமாறனை "சிலைமிசை வைத்த புலியுங் கயலும் சென்று ஒங்கு செம்பொன்மிசை வைத்த பிரான்" என்று குறிப்பதிலிருந்து இவனும் இம்மூன்று சின்னங்களையும் கொண்டிருந் தான் என்று அறியலாம்.

பாண்டியர்களுடைய செப்பேட்டில் மீன் சின்னம் பொறிக்கப் பட்டுக் காணப்படுகின்றது. பாண்டியர்களுடைய செப்பேடு பத்தி லும் மீன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு செப்பேட்டு முத்திரையிலும் இரு கயல்களும் இடையில் செண்டு ஒன்றும் காணப்படுகின்றன.

கொடியில் மீன்

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களும் வெவ்வேறு இலச்சினைக் கொடிகளைக் கொண்டிருந்தனர்.

தமிழ்வேந்தர் மூவரும் இமயத்தில் தத்தம் கொடியைப் பொறித்தனர் என்ற உண்மையை,

> கயல் எழுதிய இமய நெற்றியில்
> அயல் எழுதிய புலியும் வில்லும்
>
> —சிலம்பு. 17-182

என்று கூறுகிறது சிலம்பு.

சேரர்கள் வில் பொறித்த கொடியையும், சோழர்கள் புலி இலச்சினை உடைய கொடியையும் உடையவர்களாகத் திகழ்ந்தனர்' இவர்களைப் போல பாண்டிய மன்னர்கள் மீன் இலச்சினை உடைய கொடிகளைக் கொண்டிருந்தனர்.

அரிகேசரி பராங்குச மாறவர்மன் மீன் இலச்சினை உடைய கொடியைக் கொண்டிருந்தான்.[15]

மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய மெய்க்கீர்த்தி, (13-ஆம் நூற்றுண்டு)

> கன்னிசூழ் நாட்டிற் கயலாணை கைவளர

என்று இயம்புவதிலிருந்து மாறவர்மன் சுந்தரபாண்டியன் மீன் இலச்சினை உடைய கொடியைப் பெற்றிருந்தான் என்று தெரிய வருகிறது.

முதற் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தி (11-ஆம் நூற்றுண்டு) அவனுடைய புகழைப் பற்றிக் குறிப்பிடும்போது

> ......மீ நவர் (நிலை) கெட வி (ல்ல)வர்
> குலைதர.........[16]

என்று பாண்டியர்களை மீன் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகளை உடையவர்கள் என்று குறிப்பிடுகிறது.

காசுகளில் மீன்

தென்னிந்தியாவில் கிடைக்கப் பெற்றுள்ள காசுகளில் மன்னர்கள் அவர்களுடைய இலச்சினையைப் பொறித்துள்ளமையைக் காணலாம்.[17]

இராஜராஜனின் ஒரு காசில் மட்டும் ஈழ மனித உருவமும் புலியும், விளக்குகளும், குடையும் முன்பக்கமாகவும், பின்பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் புலியுன் உருவமும், கயல், வில் ஆகிய உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

அடுத்துக் கண்டராதித்யசோழனின் மகன் உத்தமசோழன் காலத்தியப் (10ஆம் நூற்றுண்டு) பொற்காசுகள் சில கிடைத்துள்ளன. இதில் பின்புறம் புலி ஒன்று உட்சார்ந்த நிலையிலும் மீன் ஒன்று பக்கத்திலும் இருக்கிறது. புலி சோழர்களுடைய சின்னம். மீன் பாண்டியர்களை வென்றதின் அடையாளமாகப் பொறிக்கப்பட்டிருக்கலாம். இவ்வரசன் காலத்திய மற்றொரு காசில் வில்லும், கயலும், புலியும் பொறிக்கப்பட்டு உள்ளன.

இராஜேந்திர சோழனின் (11 ஆம் நூற்றுண்டு) காசுகளில் இரண்டு பக்கமும் உட்கார்ந்திருக்கும் புலி, இரு கயல்கள், வில் ஆகிய அனைத்துக்கும் இரு பக்கங்களிலும் இரு விளக்குகள் ஆகியன பொறிக்கப்பட்டுள்ளன.[18]

பாண்டியர் காலத்துக் காசுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. பல வகையான காசுகள் நமக்குக் கிடைத்துள்ளன. பெரும்பாலும் எல்லாக் காசுகளிலும் மீன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. என்று சி. எச். புட்டல்ப்ஃ பாண்டியர் காசுகளைப் பற்றி எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பழமொழியில் மீன்

1. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா?
2. சொட்டைவாளைக் குட்டித்துள்ளி விழுகிறது
3. சுடு கெண்டைக்காக ஏரியை உடைக்கலாமா!
4. சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடித்தானும்
5. கொண்டை பட்டாலும் பட்டது; கிடாரம் பட்டாலும் பட்டது.
6. கொண்டை போட்டு வராலை இழுக்கிறது
7. கொழுத்த மீனைத் தின்பவன் குருவிக்கறிக்கு அசிங்கப் படுவானு?
8. கடல் மீனுக்கு நீந்தவா கற்றுக் கொடுக்க வேண்டும்?
9. கடல் மீனுக்கு நுளையன் இட்டது சட்டம்
10. அயிரை விட்டு வராலை இழுத்தல்
11. கரையிலே எடுத்தெறிந்த மீனைப் போல
12. குலாகும் மீன்கள் ஒன்றையொன்று மோந்து கொள்ளும்

13. தூண்டிலைப் போட்டு வராலை இழுத்தல்
14. நீர் இல்லையானல் மீன் இல்லை
15. நீருள்ள மட்டும் மீன் குஞ்சுகள் துள்ளும்
16. பாலருக்கு அழுகை பலம். மீனுக்குத் தண்ணீர்ப் பலம்
17. புலால் விற்ற காசு மணக்குமா? மீன்விற்ற காசு நாறுமா?
18. பொடிமீன் எல்லாம் பெருமீனுக்கு இரை
19. மீன் குழம்போ! தேன் குழம்போ!
20. மீன் பிடிக்கிறவனுக்கு தூண்டில் மேல் கண்
21. மீனை மீன் விழுங்கினுற் போல
22. இருக்கறியோ! புருக்கறியோ!
23. கட்டு மரத்தைச் சென்னக்குனி அரிக்கிறது போல
24. கொக்கின் வாய்ப்பட்ட மீன் போல
25. உள்ளதை விற்று உல்லத்தை வாங்கு
26. மீன் துடிக்கிறது என்று கொக்கு பரிதாபப்படுகிறதாம்.
27. பாம்புக்குத் தலையைக் காட்டி மீனுக்கு வாலைக் காட்டித் திரிகிருன்
28. Fish and Guests small at three days old.

மகர குண்டலம்

சிவபெருமானுடைய காது அணிகலன்களில் ஒன்ருக மகர குண்டலம் காணப்படுகிறது. பத்தர குண்டலம் இடது புறமாகவும் மகர குண்டலம் வலது புறமாகவும் காணப்படுகிறது. சிவனுக்கு இருக்கும் மகர குண்டலம் போல் தேவியருக்கும் மகர குண்டலம் காணப்படுகிறது. இந்த மகர குண்டலம் மீன் போன்ற அமைப்பினை உடையது.

மகர யாழ்

பழங்கால இசைக் கருவிகளில் சிறந்து விளங்கிப் பின் மறைந்து ஒழிந்தது. இலக்கியங்களில் பல யாழ் பெயர்கள் சொல்லப்படுகின்றன. பேரியாழ், சிறியாழ், சகோடயாழ் போன்று மீன் வடிவில் செய்யப்பட்டிருந்த யாழ் ஒன்றும் இருந்தது. அதனை மகரயாழ் என்பர்.

மீன் ராசி

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம் விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்ற பன்னிரண்டு

ராசிகளில் மீனராசி மீன் உருவத்துடன் உள்ளதாகும். மீன ராசி பங்குனி மாதமாகும்.

மன்மதன் கொடி மீன்கொடி

அரசர் கட்கு இருப்பதுபோலவே தெய்வங்கட்கும் தனித் தனிக் கொடிகள் உள்ளன. சிவபெருமானுக்கு விடைக்கொடியும், திருமாலுக்கு கருடக்கொடியும் இருப்பது போன்று திருமாலின் புதல்வன் மன்மதனுக்கு உரிய கொடி மீன்கொடி.

மச்ச சம்ஹாரம்

தசாவதாரம் எடுத்த திருமால் மச்சாவதாரத்தில் சோமுகா சுரனைக் கொன்றபின் வெற்றிச் செருக்கோடு திரியலானார். கர்வத்தை அடக்க சிவபெருமான் தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி வந்தார். கொக்கு முகத்தோடு வந்து மச்ச உருவில் இருந்த திருமாலை வாயில் கௌவினார். திருமாலின் செருக்கும் ஒழிந்தது. அது முதல் இப்பொழுது மச்ச சம்ஹார மூர்த்தியாக விளங்குகிறார் சிவபெருமான்.

மச்ச புராணம்

திருமாலின் மச்சாவதாரப் பெருமைகளை விளக்கி, வடமலைப் பிள்ளை என்பவர் ஐயாயிரம் செய்யுட்களடங்கிய மச்சபுராணத் தைத் தமிழில் பாடி அரங்கேற்றினார்.

மச்ச முனிவர்

கிளியுருக்கொண்டிருந்த முனிவர் சுகர் ஆவார். மீன் உருக் கொண்டிருந்த முனிவர் மச்சமுனியாவார். போகர் என்ற சித்தரின் மாணவராகிய இவரும் ஒரு சித்தரே. திராவகம், வைத்தியம் முதலிய நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன.

மச்சதேசம்

பழைய காலத்துச் சூரிய தேசங்களில் மச்சதேசமும் ஒன்று. பாஞ்சால ராஜ்யத்தில் குரு நாட்டிற்குத் தெற்கும் யமுனைக்கும் மேற்கும் இருந்த நாடே மச்ச தேசமாகும்.

மச்ச யந்திரம்

அரச கன்னியை மணப்பதற்கு நடைபெறும் போட்டிகளில் ஒன்று மச்ச யந்திரம் வைத்து நடத்தப்படும் போட்டியாகும். உயர மான கால் ஒன்றை நட்டு அதன் உச்சியில் பொன்மீன் ஒன்றை வைப்பர். அதன் கீழ் சக்கரம் ஒன்றைச் சுழலச் செய்வர். சக்கரம் சுழல் கையில் எவனொருவன் வில்லில் அம்பைப் பூட்டி ஒரே பாணத்

தால் பொன்மீனை அறுத்துத் தள்ளுகிறானோ அவனே அந்த அரச கன்னியை அடைவதற்கு உரியவன்.

அவ்வாறே அர்ச்சுனன் மச்சயந்திரத்தை அறுத்துப் போட்டியில் வென்று திரௌபதியை அடைந்தான்.

மீன்களை விண்ணிலிருந்தும், மண்ணிலிருந்தும், தண்ணீரிலிருந்தும் கொண்டு வந்துள்ள இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் எண்ணிக்கையில் தன்னிகரற்றன. அத்தகு மீன்களை மொத்தமாகச் சேர்த்துத் தருவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியே இக்கட்டுரையின் முழு உருவம்.

குறிப்புகள்

1 Dr. C. Minakshi, Administration and social life under the Pallavas
2 E. Thurston, Castes and Tribes of South India
3 SII, xiv, 234
4 Ibid. 237
5 331 of 1916
6 கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், Part I, 12, 1968
7 தருமபுரிக் கல்வெட்டுக்கள், Part I, 166, 1974
8 SII, xii, 119
9 SII, xiv, 194
10 ஏ. பால சுந்தரம், சோழன் ராஜராஜன்
11 இரா. நாகசாமி, மாமல்லை, ப. 83
12 பாண்டியர் செப்பேடுகள் பத்து, வேள்விக்குடிச் செப்பேடு, வரி 68
13 நடன. காசிநாதன், செப்பேடுகள், கல்வெட்டியல், ப 129
14 இரா. நாகசாமி, யாவரும் கேளிர்
5 Ibid
16 35 of 1888
17 Divan Bahadur, T. M. Rangacharia, T. Desikachariar, Dravidian Coins
18 நடன காசிநாதன், தென்னிந்தியக் காசுகள்

வேட்டை

பொன். இராகவன்

ஆதிகால மனிதர் வாழ்க்கையுடன் ஆரம்பமான வேட்டை, நாளடைவில் வாழ்க்கையில் முன்னேறாத ஒரு சமுதாயத்தின ருடைய தொழிலாக மாறியது. இச்சமுதாயத்தினர் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், நடுகற்கள் ஆகிய வற்றில் காணக் கிடக்கின்றன.

இலக்கியங்களில் வேட்டை

வேட்டுவர்களின் வேட்டைமுறை, வாழ்க்கை ஆகியவற்றைச் சங்க இலக்கியங்கள் திறம்பட விளக்கிக் கூறுகின்றன. வேடர்கள் வேட்டை நாய், யானை போன்ற மிருகங்களை பழக்கி வைத்திருந் தனர். பெரும்பாலும் எல்லா வேட்டைக்கும் நாயைப் பயன்படுத் தினர். வேட்டைக்குச் செல்லும் முன் இவர்கள் பயிற்சி பெற்றிருந் தனர்.[1] இதனை

காட்டகத் துறையும் கடுவினை வாழ்க்கை
வேட்டுவர் பயின்ற விடமற்றிந் நிலம்[2]

என்று பெருங்கதை கூறுகிறது.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் முதல் முதலாவதாக வேட் டைக்குச் செல்வதை ''கன்னிவேட்டை'' என்று பெரிய புராணம் கூறுகிறது.[3]

காடு கலைத்து வேட்டையாடுதல்

சங்க கால வேட்டுவர்களிடத்தில் காடு கலைத்து வேட்டை யாடும் பழக்கம் இருந்தது. இதனை

கானவர் பொருந்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயிலெழுப்பி[4]

என்றும்,

வெட்சி கானத்து வேட்டுவராட்டக்
கட்சி காணுக் கடமா நல்லேறு
கடாமணி இளர, சிதறு பொன்மிளிர,
கடிய கதழு நெடுவறை படைப்பை[5]

என்றும்,

கானவர் கரிபுனமாக்கிய வகன்கண் கொல்லை[6]

என்றும் புறம் கூறுகின்றது. இதிலிருந்து காட்டில் இரவில் பெருந்தீயை வளர்த்து விலங்குகளை ஓட்டினர் என்பதும், பகல் வேட்டை மட்டுமல்லாது இரவிலும் வேட்டையாடும் பழக்கம் இவர்களிடத்தில் இருந்தது என்பதனையும் புறம் நமக்குப் புலப்படுத்துகிறது. இரவென்றும் பகலென்றும் பாராது கண் துஞ்சாது கருமமே கண்ணுகக் கொண்டவர்கள் இவ்வேடர்கள். இதனை,

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சார்
கடுமா பார்க்கும் கல்லா ஒருவர்[7]

என்றும் புறநானூறு புலப்படுத்துகிறது.

வேட்டை முறை

இவர்கள் பன்றி, மான், முயல், புலி, யானை, உடும்பு போன்ற மிருகங்களையும் மயில், புள் போன்ற பறவைகளையும் வேட்டையாடினர்.

மான் வேட்டை

இவர்களின் முக்கிய வேட்டை மான் வேட்டை. இவர்கள் பல முறைகளில் மான் வேட்டையாடி இருக்கின்றனர். இதனை,

கொலைநவில் வேட்டுவர் கொடுமரமஞ்சி
வலையிடைப்பட்ட மான்[8]

கான வேட்டுவன் கடுங்கணை துரப்ப
மான் மாறி விழுந்தது[9]

என்று மணிமேகலையும்,

மான் கணம் தொலைச்சிய கடுவிடை வேட்டை நாய்[10]

என்று புறநானூறும், வெவ்வேறு விதங்களில் மான் வேட்டையாடிய முறையைக் கூறுகின்றன.

முயல் வேட்டை

குவிந்த இடத்தை உடைய வேலியிடத்தே ஒன்ரேடு ஒன்று பிணைத்த வலையினை மாட்டி வைத்து, குறு முயல்களை ஓரிடத்தும் போக்கில்லாதபடி செய்து வேட்டை நாய்களுடன் சென்று பசிய தூறுகளை அடித்து ஓட்டி வலையில் மாட்ட வைத்து வேட்டையாடியதாக பெரும்பாணுற்றுப்படை கூறுகிறது.[11]

உடும்பை எறிந்து வேட்டையாடினர். மயில்களை வலைவீசிப் பிடித்தனர்.

தேர்ச்சி மிக்க வேட்டுவர்

வேட்டையில் தேர்ச்சி பெற்ற வேட்டுவர் பலர் அக்காலத்தில் இருந்தனர். மிருக வேட்டை, புள் வேட்டை ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்ற பலர் இருந்ததாகத் தத்துவராயன் பிரபந்தங்கள் கூறுகின்றன.[12]

வல்வில் ஓரியின் வேட்டைத் திறத்தைப் பற்றிக்கூறும் பொழுது மலையிலிருந்து அவன் எய்த அம்பானது, யானையை வீழ்த்தி, புலியைக் கொன்று, கலைமானைக் கொன்று, பன்றியை வீழ்த்தி, புதரினுள் மறைந்திருந்த உடும்பைக் கொன்று நின்றது என்று புறம் கூறுகிறது.[13]

வேட்டுவர் வாழ்க்கை

வேட்டுவர்கள் காடகத்துறையும் கடுவினை வாழ்க்கையை உடையவர்கள் என்று பெருங்கதை கூறுகிறது. வேட்டுவசாதியினர் பகைப்புலத்துக்குக் காவலாக இருந்தனர், தனியாட்சி நடத்தினர் என்று பத்துப்பாட்டு கூறுகிறது.[14]

இவர்களுக்கென்று தனித் தலைவன் இருந்ததை, ''நாட்டுப்புற மாக்களும், வேட்டுவதலைவனும்''[15] என்று பெருங்கதை கூறுகிறது. இவர்கள் வீரத்துக்குப் பெயர் பெற்றவர்கள் (அவர்களின் வீரம் பின்னால் விளக்கமாகப் பேசப்படுகிறது.) இவர்களின் வாய் புலவு நாற்றமடித்துக் கொண்டிருக்கும் என்பதனை,

> புள்ளூண் தின்ற புலவுநாறு களவாய்
> வெள்வாய் வேட்டுவர்[16]

என்று புறமும்,

> கானவர் கூற கூட்டுண்ணும்[17]

என்று பெரும்பாணாற்றுப்படையும் கூறுகின்றது.

கல்வெட்டில் வேட்டை

வேட்டுவர்கள் கல்வெட்டில், வேட்டைக்காரன், வேட்டுவர், வேட்டுவதியரையர், நாடாழ்வான், ஊராள் வேட்டுவர், ஊராளி போன்ற பல சொற்களில் குறிக்கப்படுகின்றனர். இவை அனைத்தும் வேட்டுவர்கள், ஊர்க்கதிபதியாக இருந்திருக்கிறார்கள் என்பதனைக் காட்டுகின்றது.

வேடர்கள் கொடை

இதர சமுதாயத்தினரைப் போன்று வேடர்களும் தேவதானங்களுக்குக் கொடையளிக்கும் பழக்கம் பதினொன்றாம் நூற்றாண்டி

லிருந்து இருந்தது என்பதனைக் கல்வெட்டுகள் நமக்குப் புலப்படுத்து கின்றன. முதலாம் குலோத்துங்கனின் 12 ஆம் நூற்றாண்டின் கல்வெட்டு ஒன்று வேடர்கள் கொடையைப் பற்றிக் கூறுகிறது. வேட்டைக்காரன் இருங்கொவப்பாடி நாடாழ்வார் சந்தியா விளக்கெரிக்க 113 ஆடுகளும் தயிரமுதுக்கு ஒரு பசுவும், 50 பலம் எடையுள்ள வெண்கலதளிகையும் அச்சரபாக்கம் திருதொண்டீஸ் வரம் உடைய தேவற்கு கொடையளித்துள்ளான். இக்கோயிலுக்கு இவன் பேரனான சேந்த மங்கல நாடாழ்வான் 22 பலம் எடையுள்ள வெண்கலம் தானமளித்துள்ளான். இதனை,

> பருதூர் நாட்டு சேந்தமங்கலத்து வெட்டைக்காறன் மாணியான கலக்கியான்,
>
> கரிகால சோழ இருங்கொவப்பாடி நாடாழ்வான்வைத்த சந்யா விளக்கு ஒன்றுக்கு வைத்த வாடு
>
> தயிரமிர்துக்கு விட்டபசு ஒன்று. வெண்கல தளிகை ஒன்றி நால் ளிறை ருயப
>
> லம் இவைய் பந்மா கேஸ்வர ரட்சை இவற் பேரற் சேந்தமங்கலநாடாழ்வாற் இத்தளிகைக்கு இட்டவெண் கலம் [16]

கல்வெட்டு இவ்வாறு கூறுகிறது.

வேடர்களுக்குத் தண்டனை

குறி தவறி எய்த வேடர்களுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டன. அப்பாவத்திற்காக அவர்கள் கோயில்களுக்குத் தானமளிக்கக் கட்டாயப் படுத்தப்பட்டனர் என்ற செய்தியைச் சில கல் வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இரண்டாம் குலோத்துங்கனின் காலத்து கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் சூற்றி என்பவனின் மகனான கொங்கர் முத்தரையன் என்பான் மிருகவேட்டைக்குப் போனான். அவன் மிருகத்தை எய்த அம்பானது குறிதவறி புலியன் என்பவனின் மீது பாய ஊர் மக்கள் திரண்டு ·ிமுத்தரையனுக்குத் தண்டனையாக பதினாறு பசு திருவொத் தூர் வடபுரிஸ்வரர் கோயிலுக்குத் தானமளிக்கச் செய்தனர். இது பற்றிய கல்வெட்டு வருமாறு,

> விருக வெட்டை பொநடத்தில் சூற்றி மகன் கொங்கற் செல்வ முத்தரையன் எசடத்தில்
> விருகத்தை தப்பி. புலியனை பட,பட்டவாறே பன்னாட் டார் திரண்டு திருவெத்தூ

ர் உடையாற்கு செல்வ முத்தரையனே இடுவிச்சு பகையற விடுவிச்ச பசுபதிநூறு[19]

மூன்றும் இராஜராஜனின் கல்வெட்டு (13 ஆம் நூற்றுண்டு.) ஒன்று பெரியலூரைச் சேர்ந்த 'சோழ முத்தரையன்' என்பவனின் மகனான 'சியமுத்தரையனும்' மகனான 'பந்தலும்' வேட்டைக்குச் சென்ற பொழுது, சியமுத்தரையன் எய்த அம்பு குறி தவறி பந்தல் மீது பாய்ந்த குற்றத்துக்காக சியமுத்தரையனே கோயிலுக்கு தானமளிக்கச் செய்யப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது.[20]

திருக்கோயிலூரில் உள்ள மூன்றும் இராஜராஜனின் (13 ஆம் நூற்றுண்டு) கல்வெட்டு ஒன்று வேடன் ஒருவன் காட்டுப் பன்றியைத் துரத்திச் சென்று, அதைக் குறிவைத்த அம்பானது குறி தவறி ஒருவர் மீது பாய்ந்த குற்றத்துக்காகக் கோயிலில் விளக்கெரிக்க முப்பத்திரண்டு பசுக்கள் தானமளித்ததைக் குறிக்கிறது.[21]

திருவேட்டை விழா

திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்கோயிலூர் வைத்த மானீதி பெருமாள் கோயிலில் உள்ள குலசேகர பாண்டியனின் கல்வெட்டு (கி. பி. 14 ஆம் நூற்றுண்டு) சுவாமி வேட்டைக்குச் செல்வது பற்றியும், சுவாமி வேட்டையாடும் இடத்துக்கு வேட்டைத் தோப்பு என்றும் குறிப்பிடுகின்றது.[22]

இரண்டாம் இராஜாதிராஜனின் (12. ஆம் நூற்றுண்டு) பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டில் ''திருவேட்டை திருவிழா'' நடந்த செய்தி கூறப்பட்டுள்ளது.[23]

கானகத்துறையும் கடுவினை வாழ்க்கையையுடைய வேட்டு வர்கள், இதர சமுதாயங்களுடன் ஒன்றி வாழ்ந்தனர். தெய்வ பக்தி மிக்கவர் கோயில்களுக்குத் தானம் கொடுக்கும் பழக்கம் இவர்களிடத்தும் இருந்தது என்பன போன்றவற்றைக் கல்வெட்டுச் செய்திகள் புலப்படுத்துகின்றன.

கல்வெட்டுகளில் குறிக்கப்படும் வேட்டுவர்களின் பெயர்கள்

இதர சமுதாயத்தைப் போன்றே இவர்களும் பெயர்கள் வைத்துக் கொண்டனர். குற்றி, கொங்கற் செல்வ முத்தரையன், புலியின், சோழமுத்தரையன், சியமுத்தரையன், சேந்த முத்தரையன், பந்தல், கிழங்கன், பெரிய கிழங்கன் போன்ற பெயர்கள் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன,

நடுகல் வீரர்கள் வேட்டுவர்களே

முல்லை நிலத்துக்குரிய கானவர்களே வேடர்கள். இவர்களுடைய தொழில் வேட்டையாடல். கொடிய விலங்குகளுடன் போராடக் கூடியவர்கள். தங்கள் உயிரைப் பற்றிச் சற்றும் கவலைப்படாதவர்கள். இவர்கள் மிருக வேட்டை வீரர்களாக மட்டுமல்லாது படை வீரர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதற்குச் சங்க இலக்கியங்களும் நடுகற்களும் சான்றுகள் பகர்கின்றன.

நடுகற்கள் அச்சமிக்க கானப்பகுதிகளில் அதிகம் காணப்பட்டன.[24] ஊரின் புறத்தே காய்ந்த களர் நிலங்களில்தான் நடுகற்கள் அதிகம் நடப்பட்டன என்ற கருத்தைத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குனர் டாக்டர் இரா. நாகசாமி அவர்களும் வலியுறுத்துகின்றார். மறவர்கள் (வேடர்கள்) நடுகற்களில் அம்பு திட்டினர்.[25] கானகத்தில் நடுகல்லை யானை உடைத்தது[26], என்று இலக்கியங்கள் நடுகல் இருந்த இடம் பற்றிப் பேசுகின்றன.

இந்த நடுகற்களில் பெரும்பாலானவை 'புலிகுத்திப்பட்டான், பன்றிகுத்திபட்டான், களிறெறிந்துபட்டான்' என்று கூறுகின்றன. பெரும்பாலான நடுகற்களில் வீரர்கள் மிருகங்களோடு சண்டை போடும் காட்சி காட்டப்பட்டுள்ளது. மிருகங்களைப் பற்றித் தெரிந்தவர்கள்தான் மிருகங்களோடு சண்டை போட முடியும். அவ்வாறாயின் அவர்கள் பயிற்சி பெற்ற வேடர்களாகத்தான் இருக்கமுடியும்.

வேடர்கள் வேட்டை நாயைப் பழக்கி வைத்திருந்தனர் என்று சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. அதே வேட்டை நாய்கள் நடுகற்களிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தர்மபுரி மாவட்டத்தில் வெங்கடாபுரம் என்னும் ஊரில் உள்ள ஒரு நடுகல்லில், ஒரு வீரன் இரு கைகளிலும் ஒரு ஈட்டியைப் பிடித்துக் காட்டுப்பன்றி ஒன்றைக் குத்துவதாகக் காட்டப்பட்டுள்ளான். அவன் அருகில் ஒரு வேட்டை நாயும், மற்றொரு வேட்டை நாய் பன்றியைக் கடிப்பது போன்றும் காட்டப்பட்டுள்ளன. அதில் கல்வெட்டு சிதைந்துள்ளது.

எடத்தனூர் நடுகல், 'கருந்தேவகத்தி எருமைப் பண்ணையைக் காத்து இறக்க' அவனுடைய வேட்டை நாயானது இருகள்ளனைக் கடித்து காத்திருந்தது[27] என்று கூறுகின்றது. இன்னும் எத்தனையோ அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

வேடர்கள் மிருக வேட்டைக்குச் செல்லும் பொழுது அம்பு வில்லுடன் சென்றனர் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.

நடுகற்களிலும் அம்பு வில்லுடன் வீரர்கள் காணப்படுகின்றனர். வில் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள் வேடர்கள்.

தொறுமீட்டுச் செல்வதற்கும் பூசலிடுவதற்கும் பொருத்தமான இடம் கானகப் பகுதியே. அவ்வாறுயின் கானவர்களே அதில் பங்கு கொண்டிருக்க வேண்டும். அதற்கு நடுகல் சான்று பகர்கின்றது.

> மறுக்கோட்டு வேட்டுவர் தாழை ஊர் தொறுகொண்ட
> ஞான்று தாழை ஊருடைய வண்ணக்கடையனுர்
> தொறுமீட்டுப்பட்டார்[28]

பழமங்கலம் கல்வெட்டில் காணும் சொக்கனேந்தல் வேட்டுவர்களில் கரையகுல வேட்டுவன் ஆவான். இன்றும் வேடர்களில் அப்பிரிவினர் உண்டு என்கின்றுர் திரு. இராசு அவர்கள்.

சிவகிரி நடுகல்லில் ''தலைய நல்லூரில் கிழங்க வேட்டுவரில் கிழங்கன் பெரிய கிழங்கன் என்பவன் குறிக்கப்படுகிருன்.[29]. பரகேசரி என்று தொடங்கும் இரு கல்வெட்டுக்களில் 'வேட்டுவதிரையர்' என்று குறிக்கப்படுகிறது. இவர் தென்னுர்க்காடு மாவட்டம் கிழுர் என்னும் இடத்தில் நிருபதொங்கவர்மனின் இருகல்வெட்டுகளிலும் (9 ஆம் நூற்றுண்டு) குறிக்கப்படுகின்றுர் [30]

எயினர் அதாவது வேடர்களே பெரும்பாலும் மறவர்களாக இருந்ததால் அவர்களுக்கே கல் நடப்பட்டன. நடுகல் போர்த் தெய்வமாக வழிபடப்பட்டது. முல்லை நில மக்கள் (வேடர்கள்) நடுகல் வழிபாடு செய்வதன்றி வேறு எந்த வழிபாடும் செய்வதறியார் என்று புறம் கூறுகிறது.[31] இவர் வணங்கும் தெய்வத்துக்கும் 'வேடியப்பன், மொச வேடியப்பன், வேடிய சாத்தன்' என்று இவர்கள் பெயர் வைத்திருப்பதும் பொருத்தமேயாகும்.

மலை நாட்டுக்குரிய மறவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரமான ஆநிரைகளைக் கள்வர் கவர்கையில் உயிரைக் கொடுத்து மீட்டனர். பொருளாதார வாழ்வு செழிக்க இன்றியமையாத தேவையான ஆநிரைகளை மீட்டுத் தந்தவர்களைத் தம் உயிர்த் தெய்வங்களாக மக்கள் போற்றினர்.

வேட்டுவர்கள் தனி அரசு நடத்தி இருந்தனர் என்று பார்த்தோம். இந்த வேடர்களுக்கு 'நாடாழ்வான்' என்ற சிறப்புப் பெயர் இருந்ததாக மூன்ரும் குலோத்துங்கனின் அச்சரப்பாக்கம் கல்வெட்டுக் கூறுகிறது.[31] கொடுமுடி, அந்தியூர், வேபத்தேரி போன்ற இடங்களில் நடுகற்கள் வேட்டுவரை ''ஊராள் வேட்டுவர் ஊராளி'' என்ற தொடர்களால் குறிப்பிடுகின்றன.[33]

இன்றும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் நெடுநிலக் கற்களை 'வேடன் கல்' என்று பாகூர், பிரபுநகர், குடுமியான்மலை போன்ற இடங்களில் மக்கள் கூறுகின்றனர்.[34]

இவை யாவும் நடுகல் வீரர்கள் வேட்டுவர்களே என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.

பள்ளியில் வைக்கும் காட்சி

வேட்டையின் ஒரு அங்கமான பள்ளியில் வைக்கும் காட்சி திருவட்டாறு (குமரி மாவட்டம்) ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் ஆவணி மாதம் திருஓணநாளன்று மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது. ஸ்ரீபரிபுரையில் தென்மேற்கு மூலையில் தரையில் புதிய துணி விரிக்கப்பட்டிருக்கும். ஸ்ரீபலி நடக்கும் இந்த நேரத்தில் இரண்டு ஆசாரிமார்கள் இரண்டு வில் கொண்டு வருவார்கள். ஒன்றில் திருஆயம்பாடிகிருஷ்ணர் உருவமும் மற்றொன்றில் ஆதிகேசவப் பெருமானின் திரு உருவமும் தீட்டப்பட்டிருக்கும். அழகுபடுத்திய வில்லை இந்த ஆசாரிமார்கள் சுவாமிக்கு முன்னால் அந்த விரிக்கப்பட்டிருக்கும் துணியில் வைத்து, பின் மூன்று தடவை சுவாமியிடம் எடுத்துக் காட்டுவார்கள். வில்லைக் கீழே வைத்து விட்டு அவர்கள் திரும்பிப் பார்க்காமல் செல்ல வேண்டும். பின் பிராமண தாசன்மார்கள் வில்லை எடுத்து மஞ்சள் நூல் கட்ட, அதை நம்பியின் ஆளான தேசி வாங்கி, சுவாமியின் முன்பு பிடித்துக் கொண்டு ஒரு தடவை சுவாமியைச் சுற்றி வருவார். பின் இந்த வில் கருவறையில் வைக்கப்படுகிறது. ஆண்டத் திருவிழாவின்போது இந்த வில் சுவாமி வேட்டைக்குச் செல்லும் பொழுது எடுத்துச் செல்லப்படுகிறது. இது அக்கோயில் ஓவியத்திலும் இடம் பெற்றுள்ளது.

சுவாமி வேட்டை

ஆவணி மாதம் திருஓண நாளன்று வைக்கப்படும் பள்ளிவில் ஆண்டத் திருவிழாவின்போது ஒன்பதாம் திருவிழாவன்று இரவு பத்துமணிக்குச் சுவாமியைத் திருவேட்டைக்கு எடுத்துச்செல்லும் பொழுது எடுத்துச் செல்லப்படுகிறது. அன்று திருவிதாங்கூர் மகாராஜாவின் பிரதிநிதி ஒருவர் அரண்மனையிலிருந்து உடைவாள் ஒன்று கொண்டு வருவார் (முன்பு மகாராஜாவே நேரில் வருவார்). அந்த உடைவாளுக்கும் அன்று பூசை உண்டு. சுவாமிக்குக் காவலாகப் பத்து தாசமார்களும் செல்வர். மகாராஜாவின் பிரதிநிதி கறுத்த ஆடை உடுத்து வரவேண்டும். வேட்டை பக்கத்தில் உள்ள தளியல் மகாதேவர் கோயிலின் முன் நடக்கும்

வேட்டைக்குப் போகும்பொழுது மேளதாளங்களோ, ஆரவாரங்களோ கிடையாது.

வேட்டையாடப்பட்ட இடம் மரக்கிளைகள் நட்டு, காடு போலாக்கப்பட்டிருக்கும். அந்த இடத்தில் ஒரு இளனியை வைப்பர். கொண்டு வரப்பட்ட அம்பையும், வில்லையும் வாங்கி அந்த மகாராஜாவின் பிரதிநிதி அந்த இளனியின் மீது மூன்று தடவை எய்வார். பின் இளனியை உடைத்து சுவாமிக்கு நைவேத்தியம் செய்து, ஆனந்தமாக, மேளதாளத்துடனும், ஆராவாரத்துடனும் சுவாமியை எடுத்துவருவர். இவ்வாறு சுவாமி வேட்டை நடைபெறுகிறது.

இன்னும் சில கோயில்களில் திருவிழாக்காலங்களில் வேட்டை என்ற பெயரில் உற்சவ மூர்த்தியை எடுத்துச் சென்று கோயிலை வலம் வருவதுண்டு.

ஓவியத்தில் சாஸ்தா வேட்டை

பத்மனுபபுரம் அரண்மனை, திருவட்டாறு போன்ற இடங்களில் சாஸ்தா வேட்டைக்குச் செல்லும் காட்சி ஓவியமாக இடம் பெற்றுள்ளது. சாஸ்தா வேட்டைக்குப் போகும் போது பலர் கோமாளி வேடம் போட்டு ஆடுகின்றனர். பக்தர்கள் வணங்கி நிற்கின்றனர். சாஸ்தா குதிரையின் மீதமர்ந்து இடக் கையால் கடிஞானைப் பிடித்து வலது கையால் ஈட்டி எறியும் காட்சியும், முன்னிரு கால்களையும் துக்கி ஓடும் குதிரையின் வேகமும் சாஸ்தாவின் ஆவேசமும், கண்ணைக்கவரும் வண்ண ஓவியமாக இடம் பெற்றுள்ளது. வேட்டையாடப்பட்ட பொருட்களை வலைக்கூடையில் தூக்கி வரும் காட்சியும் காட்டப்பட்டுள்ளது.

மன்னர் வேட்டை

பண்டைக் காலங்களில் மன்னர்கள் வேட்டைக்குச் செல்லும் மரபு இருந்தது பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் காணப் படுகின்றன. வல்வில் ஓரியின் வேட்டைத் திறம் புறநானூற்றில் சிறக்கப் பேசப்படுகிறது. விஜயநகர மன்னர்களுக்குக் 'கஜவேட்டை கண்டருளிய தேவர்' எனச் சிறப்புப் பெயர் இருந்ததாகக் கல்வெட்டுக் கூறுகிறது.

ஏலவெள்ளு கம்பளத்து நாயக்கர்கள்

தமிழகத்தில் இன்றும் சிலர் வேட்டையைத் தங்கள் குலத் தொழிலாகக் கொண்டுள்ளனர். கருவூரிலிருந்து சுமார் 30 கி. மீ. தொலைவில் உள்ள நாயக்கனூர் என்னும் சிறு கிராமத்தில் சுமார் 30 குடிகள் வேட்டையைத் தங்கள் குலத்தொழிலாகக்

கொண்டுள்ளனர். இவர்கள் தங்களை ஏலவெள்ளு கம்பளத்து நாயக்கர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இவர்கள்.

இவர்களுக்கென்றொரு தலைவன் உண்டு. அவனை 'ஊர் பெத்த' என்றழைக்கின்றனர். ஊரில் நடக்கும் முக்கியக் காரியங்களான கலியாணம், மத்தியஸ்தம் போன்ற அனைத்தும் அவர் தலைமையில் நடைபெறுகிறது. ஊர் மக்கள் தலைவனுக்குக் கீழ்ப்படிகின்றனர்.

வேட்டையும் வேட்டை விலங்குகளும்

இவர்கள் நரி, முயல், உடும்பு, கீரி, அணில், பெருச்சாளி, வெள்ளெலி, முள்ளெலி, காட்டுப்பூனை, மலைப்பன்றி, மல்லுமுள்ளம் பன்றி, புனுகுப்பூனை, காட்டுச் செம்மறிஆடு, மரநாய் போன்ற விலங்குகளை வேட்டையாடுகின்றனர்.

ஈட்டி, அம்பு, வில் ஆகிய கருவிகளுடன் பெரும்பாலும் கூட்டமாக வேட்டைக்கு அதிகாலையில் சென்று, இரவு 9,10 மணிக்கு வீடுவந்து சேர்கின்றனர். வேட்டையில் அகப்பட்டவற்றை தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்கின்றனர்.

இவர்கள் வேட்டைக்குச் செல்லும்போது, துடும்பு, தப்பு, கொம்பு போன்ற இசைக் கருவிகளை முழக்கிக்கொண்டு ஆரவாரத்துடன் செல்கின்றனர். வேட்டை முடிந்தவுடன் வெற்றியின் அடையாளமாகப் பறை கொட்டுகின்றனர். இது தவிர வருடத்துக்கு இருமுறை அவர்கள் சிறப்பாக வேட்டையாடுகின்றனர்.

ஆடி வேட்டை

ஆடி வேட்டை ஆடி மாதம் 18 ஆம் நாள் நடைபெறுகிறது. அவ்வேட்டைக்கு அவர்களின் குலதெய்வமான ஜக்கம்மாவுக்குப் பொங்கல் வைப்பர். இத்துடன் ஆடல் பாடல் நடைபெறுவதுண்டு. வேட்டைக்குச் செல்வோரை ஆரத்தி எடுத்து வழியனுப்புவர்.

மாசி வேட்டை

இவ்வேட்டை மிக முக்கியமான வேட்டை. இதைச் 'சாமி வேட்டை' என்றும், 'தேவாதி வேட்டை' என்றும் கூறுவர். மாசி மாதம் சிவராத்திரி அன்று நடு இரவு 12 மணிக்கு பெருமாள் சுவாமிக்குத் தேங்காய், மொச்சை, பயிறு, மாவு போன்றவற்றைப் படைத்து, ஊர்த் தலைவன் பூசை செய்வார். சிறுவர்கள், பெண்கள் அனைவரும் பூசையில் பங்கு கொள்வர். பாட்டுப் பாடி, கோமாளி வேடம் போட்டு ஆடவும் செய்வர்.

பங்கீடு

வேட்டையில் அகப்பட்ட விலங்குகளை எடுத்து வந்து மொத்தமாக ஊர்த் தலைவன் வீட்டில் வைத்தே பங்கிடுவர். ஊர்த் தலைவர், காலுகுத்தி (முயலின் காலைக் குத்தியவன்), தூக்கி வருபவன், பறையடிப்பவன் ஆகிய இவர்களுக்கு மட்டும் இரண்டு பங்கும், அரைஞாண் கட்டியவன் முதல், தண்டெடுத்து தலைவாசல் வந்து விட்டவன் வரை ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒவ்வொரு ஆண் மகனுக்கும் ஒரு பங்கும் உண்டு. பெண்களுக்குப் பங்கு இல்லை.

சாதாரண நாட்களில் அவரவர் வசதிக்கேற்ப தனித்தனியே செல்வது உண்டு.

நவிரமலைக் காடுகள்

நவிரமலையின் அடிவாரத்தில் பல சிறு காடுகள் உள்ளன. இப்பகுதிகளில் வேடர், வேட்டுவர், வேட்டுவ வெள்ளாளர் போன்ற பல பிரிவினர் வாழ்கின்றனர். இவர்கள் வேடர் வழி வந்தவர்கள். இவர்கள் கன்னடப் பகுதியிலிருந்து வந்து குடியேறியவர்கள். தங்களை போயர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். இவர்கள் கடமை, முயல் காட்டுப்பன்றி போன்றவற்றை வேட்டையாடுகின்றனர்.

போயர்கள் வேட்டை முறை

இவர்களின் வேட்டை முறை வேடிக்கையானது. இரவு நேரங்களில் காட்டுப் பன்றியை வேட்டையாட ஒரு தந்திரத்தைக் கையாளுகின்றனர், முழுத்தேங்காயைக் குடைந்து துளையிட்டு அதனுள் வெடி உப்பு முதலான மருந்துகளையிட்டு அடைத்து விடுகின்றனர். இத்தேங்காய் மீது சாமைசாதத்தினை வைத்து உருண்டையாக்கி விடுகின்றனர். இரவு நேரங்களில் தினைக் கொல்லைக்கு வரும் காட்டுப்பன்றிகள், உணவு என்றெண்ணி அதனை கடிக்கும்பொழுது மருந்து வெடித்தவுடன் வாயில் ரத்தத்துடன் பெரும் சத்தத்துடன் வெளியே ஓடும்பொழுது அப்பகுதியில் வீசப்பட்டுள்ள வலையில் மாட்டிக்கொள்கின்றன. சத்தத்தைக் கேட்ட போயர்கள், தடியுடன் வந்து வலையில் உள்ள பன்றியை அடித்துக்கொல்வர்.

பின் அப்பன்றியின் நான்கு கால்களையும் கட்டி மரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டு, நெருப்பிட்டு பொசுக்குகின்றனர். பின் முடிகள் பொசுங்கிய பன்றியைக் கீழே இறக்கி, அதன் மீது மஞ்சள் சாந்துகளைத் தடவி, மீண்டும் பொசுக்குகின்றனர். இறக்கி, அப்பன்றியை வெட்டி, வீட்டுக்கொரு கூறுகப் பங்கு போட்டுக் கொள்கின்றனர். இதுவே அவர்களின் சிறந்த மாமிச உணவு.

இவ்வாறு பண்டைக் காலங்களில் சிறப்பு வாய்ந்த வேட்டை இன்றும் சில சிறு சமுதாயத்தாரிடையில் சிறப்புற்றிருக்கிறது.

குறிப்புகள்

1 புறம் 33, 243
2 பெருங்கதை, ப. 284, வரி, 265-66
3 பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனுர் புராணம்
4 புறம் 247
5 புறம் 202
6 புறம் 159
7 புறம் 189
8 மணிமேகலை, ப. 145, வரி, 31, 32
9 மணிமேகலை, ப. 262, வரி, 113, 114
10 புறம் 205
11 பெரும்பாணுற்றுப்படை, ப. 222
12 தததுவராயன் பிரபந்தங்கள், (கரிமடல்)
13 புறம் 324
14 முல்லைப்பாட்டு, வரி, 26-28
15 பெருங்கதை, ப, 172, வரி, 53-57
16 புறம் 3?4
17 பெரும்பாணுற்றுப்படை, வரி, 116-117
18 359 of 1902
19 SII, vii, No 85
20 SII, vii, 105
21 138 of 1906
22 719 of 1962-63
23 11 of 1925
24 அகம் 131
25 அகம் 297
26 அகம் 365
27 கல்வெட்டு ஓர் அறிமுகம்
28 செங்கம் நடுகற்கள், 4
29 நடுகற்கள் (கருத்தரங்கு)
30 நடுகற்கள் (கருத்தரங்கு)
31 புறம் 335
32 359 of 1902
33 நடுகற்கள் (கருத்தரங்கு)

திருட்டு

ஆ. முருகராஜ்

கல்வெட்டுக்கள், அவ்வப்பொழுது நடந்த திருட்டுக்களையும் அதற்குக் கிடைத்த தண்டனைகளையும் குறிக்கின்றன.

கோயிற் சொத்துக்களைத் திருடியவர்கள்

கி.பி. 1225இல் மூன்றும் இராசராசன் ஆட்சியில், தஞ்சை மாவட்டத்திலுள்ள திருநாகேஸ்வரத்திலுள்ள இரு கல்வெட்டுக்கள் திருட்டைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

சகோதரர்கள் இருவரும், மற்றொருவரும் கோயிற் சொத்துக்களை எடுத்தும், கடவுளின் துணிகளைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ள எடுத்தும், கோயிற் செங்கற்களைத் தங்கள் உபயோகத்திற்கு எடுத்தும் கொண்டனர். கோயில் அதிகாரிகள் உயர் அதிகாரிகளிடம் புகார் செய்தனர். அப்போது அரசனே ஜெயங்கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்தில் தங்கிக் குற்றத்தை விசாரித்தான். குற்றவாளிகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, விற்றுக் கிடைத்த 40,000 காசுகள் கோயில் சொத்துக்களுடன் சேர்க்கப்பட்டன.[1]

> திருநலக் குன்றமுடைய நாயனார் சிபண்டாரம் திருவாபரண முல பண்டாரத்தை இக்கொயிற் சிவபிராமணர் களவிலெ எடுத்துக் கொள்ள[2]

என்று குடுமியான்மலைக் கல்வெட்டுக் கூறுகிறது.

திருட்டில் சம்பந்தப்பட்டவர்கள் கோயில் சொத்துக்களைத் திருடினார்களா என்பதை அறிய, பழுக்கக் காய்ச்சிய இரும்பை எடுக்கச் செய்தனர். குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். ஊர்ச் சபை குற்றவாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து கோயிலுக்குக் கொடுத்து விட்டது.[3] 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீவீரபாண்டிய தேவர் காலத்தில் இது நடந்ததாகும்.

குடுமியான்மலையில் சிகாநாதசாமி கோவிலில் உள்ள மற்றொரு கல்வெட்டும் திருட்டைப் பற்றிக் குறிக்கிறது.

கோயில் நகைகளைத் திருடியதற்காக ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டு, அவனது கைகளில் ஒன்றும் வெட்டப்படுகிறது. அவனுடைய நிலங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. பிறகு அவன் கிராமத்தை விட்டே சென்று விடுகிறான் என்பதை கி. பி. 1615 ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது.[4]

செங்கற்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றத்திலுள்ள சிதைந்த கல்வெட்டும் திருட்டைப் பற்றிக் குறிக்கிறது.

தெய்வப் பதுமையை ஒருவன் திருடியதாகவும், பிறகு அவன் அகப்படவே அவனது சொந்தச் சொத்தில் 750 பணம் எடுத்து மீண்டும் பிரதிஷ்டை செய்வதற்குச் செலவு செய்யப் பட்டதாக வும் இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[5]

ஆநிரைகளைத் திருடுதல்

குடுமியான்மலை மேலைக் கோயிலான குடவரைக் கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்று கோயிலில் உள்ள பசுக்கள் திருட்டுப் போவ தால், அக்கோயில் அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்பதைக் குறிக்கிறது. இது சோழ மன்னன் பரகேசரி வர்மன் காலத்தியக் கல்வெட்டு.

> ஸ்வஸ்தி ஸ்ரீ கொப்பரகெசரி பன்மர்க்கு
> யாண்டு 6 ஆவது திருநலக்குன்றத்து
> திரு மூலட்டானத்து பெருமானடிகளுக்கு குடுத்தா[ர்]
> குடுத்த பசு கள்ளி கொள்ள காக்க மாட்டாது
> விற்று கொண்ட பொன் விள[க்]குக்கு வைத்த
> பொன்

கோயில் அதிகாரிகளால் தானமாகக் கிடைத்த பசுக்களைத் திருடர்களிடமிருந்து பாதுகாக்க முடியாமல், அப்பசுக்களை விற்று அதனால் கிடைத்த பொன்னைக் கோயில் விளக்குக்குக் கொடை யாகத் தந்தனர்.[6] இதிலிருந்து கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த பசுக்களையும் கள்வர்கள் திருடியது தெரிய வருகிறது.

போரின் போது ஆநிரைகளைக் கொள்வது போல, கள்ளர்களும் அவ்வப்போது ஆநிரைகளைத் திருடிச் செல்வது குறிஞ்சி நாட்டு வழக்கம் என இளம்பூரணர் குறித்துள்ளார். அதற்கு எடுத்துக் காட்டாக ஒரு நடுகல் உள்ளது.

> மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மர்க்கு யாண்டு இருபத்தி மூன்றாவது பல்குன்றக் கோட்டத்து மேல் வேணாடு தாழையூர் இயைம்பர் தன் எருமைத் தொறு கள்ளர் கொள்ள போகாமை பட்டார் தந்தையும் மகனும்.[7]

இங்கு மலையைச் சார்ந்த நிலத்தில் வாழும் மக்கள் ஆநிரையைக் களவில் கொள்ளுதல் வழக்கம் என்ற குறிப்பு நோக்கத்தக்கது.

பெண்ணைக் கடத்துதல்

இது கம்பவர்மனின் தாவேளூர் நடுகல்.

ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ கோவிசைய கம்பபருமற்கு யாண்
டெட்டாவது வயிரமேக வாணகோவரையராளத்
தகடூர் நாட்டுப் பாகாற்றூர்க் கதவமாதேவன் மகன்
காளம[ன்]
மீய்கொன்றை நாட்டு மேல் வேளூர் இருந்து வாழா
நின்ற காலத்து
முருங்கைச்சேரி நத்தத...ன்ற மையனூர் மகளைக்
கள்ளர் பிடிக். த்தூரந். கொண்டெய்[ய]
அவளை விடுவித்துத் தான் பட்டான் காளமன்[8]

முருங்கைச்சேரி என்னும் ஊரிலிருந்த ஒரு பெண்ணைக் கள்வர் கடத்திச் சென்றனர். மேல் வேளூரில் வாழ்ந்த காளமன் என்பவன் அக்கள்ளர்களைத் துரத்திச் சென்று அப்பெண்ணை மீட்டான். அப்போரில் அவன் தன் இன்னுயிரை இழந்தான்.[9]

இந்த நடுகல் மூலம் பெண்களைக் கடத்திச் செல்லும் வழக்கம் முன்பே இருந்தது என்பதை அறியலாம்.

திருடர்கள் பொருள்களைத் திருடிச் செல்வதைத் தடுக்க நாயைக் காவலுக்கு வைத்திருந்தனர் என்பதைச் செங்கம் நடுகல் மூலம் நாம் அறியலாம். இது பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் 34வது ஆட்சி ஆண்டு நடுகல் (கி.பி. 635) ஆகும்.

கோவிசைய
மயிந்திர பருமற்கு
முப்பத்து நான்காவது வாணகோ
அரைசரு மருமக்கள் பொற்றெக்கை
ஆர் இளமகன் கருந்தேவகத்தி தன்
னெருமைப்
புறத்தே வா
டி பட்டா
ன் கல்.

[கோவிவ]
ன்னென்னு
ந் நாய் இ
ரு கள்ள
னைக் கடித்
துக் காத்திரு
ந்த வாறு

பாண அரசருடைய மருமக்கள் பொற்றெரக்கையாரின் இள மகன் கருந்தேவக்கத்தி தன்னுடைய எருமைப் புறத்தே வீரமரணம் அடைந்ததைக் குறிக்கிறது. வலப் பக்கத்தில் கோவிவன் என்னும் நாய் இரு கள்ளனைக் கடித்துக் காத்து நின்றதைக் குறிக்கிறது.[10]

ஓலைப் பெட்டிகள் திருட்டு

நாஞ்சி நாட்டில் நாயக்கருடைய படை வந்து அறிவு ஏற்படுத் தியதில் ஓலைப்பெட்டிகளும் சிட்டிக்குறிகளும் திருட்டுப் போயின அவை யார் ஒருவர் கையில் காணப்பெறினும் கண்ட இடத்திலேயே அவரைத் தண்டிக்க வேண்டும் என்று கல்வெட்டுக் குறிக்கிறது.[11]

தகுதியற்றவர்கள்

உத்தர மேரூர்க் கல்வெட்டு, ''பர திரவ்யம் அபகரித்தான்''[12] என்று கூறுகிறது. இதிலிருந்து திருடர்கள் ஊர்ச்சபையில் கலந்து கொள்ளத் தகுதியற்றவர்கள் எனத் தெரிய வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானைக் கோயிலுள்ள, விநாயகர் கோயிலருகில் அமைந்துள்ள ஆல மரத்தடியில் உள்ள கல்லில் கீழ்க்கண்டவாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜாக்கள் தம்பிரான் என்பாருக்குத் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தும் பொருட்டு அவருடன் மீசர கண்ட பெருமாள் வேளக்காரர் என்பார் ராஜாக்கள் தம்பிரானின் ஆளுகைக்கு உட் பட்ட நிலத்தில் கொலை, கொள்ளை, திருட்டு முதலியன நடவாமல் பாதுகாப்பதற்குக் காவல் படை நியமிப்பதாக ஒரு உடன்படிக்கை செய்து கொண்டதாகவும், அதன்படி நியமித்தபொழுது காவல் படை சரிவர நடைபெறுமையால் ராஜாக்கள் தம்பிரான் எல்லைக்கு அருகாமை இடமான காட்டூர்கோட்டை என்ற இடத்தில் அடிக்கடி கொள்ளைகள் நிகழ்ந்தன என்றும் குறிப்பிடப்படுகிறது.[13] இது கி.பி.1849 ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகும்.

சோழர் காலத்தில் அரச குடும்பத்தவர் திருடினால், அரசனே விசாரித்துத் தண்டிப்பான். மற்றவரை வர்ச்சபையார் தண்டிப்பர். அரசியல் அதிகாரிகளாயின், அமைச்சர் தண்டிப்பர்.[14]

இலக்கியச் சான்றுகள்

''வெட்சிதானே குறிஞ்சியது புறனே''

இளம்பூரணர், ''வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயது எவ்வாறெனில் நிரைகோடல், குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின் கண் நிகழ்தலாலும் அந்நிலத்தின் மக்களாயின் பிறநாட்டு ஆன்நிரையைக் களவிற் கோடல் ஒருபுடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும் அதற்கு அது புறனாயிற்று என்க'' என்று குறித்துள்ளார்.[15]

பகைவன் நாட்டின்மீது படையெடுக்க நினைக்கும் அரசன், தன் வீரர்களை அனுப்பி பகையரசனின் நாட்டிலுள்ள பசுக்களைக் கவர்ந்து வரச்சொல்லி அதனால் ஏற்படும் கலகத்தினால் போரிடுவான். அரசன் வீரர்களை அனுப்பாமல், மற்றவர்களும் பகைவர்களின் ஆநிரைகளைக் கவர்ந்து செல்வர்.

எனவே இங்கு திருட்டு இருவகையாகும். ஒன்று, அரசனே திருட்டுக்கு ஆதரவாக இருந்து செயல்படுதல். மற்றொன்று, மற்றவர்கள் செய்வது.

திருமங்கையாழ்வார்

கள்வனேனானேன் படிறு செய்திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலுந்
தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்[16]

திருமங்கையாழ்வார் கள்வர் குலத்திலே தோன்றியவர். அவர் ஒருநாள், இளைஞர் ஒருவர் தம் மனைவியுடன் பரிவாரஞ் சூழ வரக் கண்டு தம் கூட்டத்துடன் அவர்கள் மேல் விழுந்து அவர்களிடமிருந்து பொருட்களையெல்லாம் கவர்ந்து மூட்டையாகக் கட்டி எடுத்துச் செல்ல முயன்றபோது மூட்டையைத் தூக்க இயலாமல் 'மந்திரம் பண்ணினை போலும்' என்று அவ்விளைஞரைக் கேட்க, அவரும் அவரின் செவியில் திருமந்திரத்தை உபதேசித்தார்.[17]

திருமங்கையாழ்வார் திருந்தி, புறச் சமயத்தினர் பள்ளிகளினின்றும் கொள்ளையிட்ட பொருட்களைக் கொண்டு திருவரங்கப் பெருநகரின் சுற்றுமதில் எடுப்பதில் செலவிட்டார்.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்

எனத் திருவள்ளுவரும் பிறருடைய பொருள்களைத் திருட வேண்டும் என்ற எண்ணம் மனத்தில் தோன்றுவதே தீமையானது என்று குறிக்கிறார்.

களப்பிரரைக் கள்வர் என்றும், களவர் என்றும் தமிழ் இலக்கியங்கள் சொல்வதாகத் திரு. கே.கே. பிள்ளை கூறுகிறார்.[18]

''கள்வர் கோமான் புள்ளி'' எனக் களப்பிரரைக் கள்வர் என்று அகநானூறும் குறிப்பிடுகிறது.[19]

பாலை நிலத்தில் வாழும் மக்களின் குலத்தொழிலே திருட்டுத் தான் என்று அகநானூறு கூறுகிறது.[20]

''அற்றம் பார்த்து அல்கும் –கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருள் இலர் ஆயினும், வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து, உயிர்வௌவலின்
புள்ளும் வழங்கப் புலம்புகொள் ஆர் இடை''

என்று கலித்தொகையும் பாலைநிலத்து மக்களைப் பற்றிக் கூறுகின்றது.[21]

இதுவரை கல்வெட்டுக்களிலும், நடுகற்களிலும் இலக்கியங்களிலும் திருட்டுக்களைப் பற்றிப் பார்த்தோம்.

வேள்விக் குடிச் செப்பேட்டின் சமஸ்கிருதப் பகுதி,

''நாம் கொடுத்த பொருட்களையும் பிறர் கொடுத்த பொருட்களையும் திருடுவது நரகத்தைவிடக் கொடுமையானது''

என்று கூறுவது நோக்கத்தக்கதாகும்.

குறிப்புகள்

1 70 and 71 of 1931-32
2 Pudukkottai state Inscriptions, Kudimianmalai
3 Chronological List of Inscriptions of Pudukkottai s at 601
4 Ibid 867
5 185 of 1894
6 315 of 1904

7 கல்வெட்டியல், ப. 154

8 கல்வெட்டு ஓர் அறிமுகம், 18

9 கல்வெட்டு ஓர் அறிமுகம், ப. 46

10 செங்கம் நடுகற்கள், 59—1971

11 கன்னியா குமரிக் கல்வெட்டுக்கள்—முதல் பகுதி, 26—1968

12 ARE 1940—05, pp. 139-42.

13 240 of 1949-50.

14 தமிழக வரலாறு, அ. மு. பரமசிவானந்தம்.

15 தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம், ப. 74

16 பெரிய திருமொழி 1, 1, 5.

17 தெய்வத் தமிழ், ப. 428

18 தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும, கே. கே. பிள்ளை, ப. 180.

19 அகநானூறு 61

20 அகநானூறு 109

21 கலித்தொகை 4

இடுகாடுகள்

இரா. நடராசன்

இடுகாடுகள் பற்றி வரலாற்று, இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகளைத் தொகுத்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் கற்காலம் முதல் வாழ்ந்த மனிதன் இறந்த பின் உடலை எப்படிக் கிடத்தினன் என்பதற்குச்சரியான சான்றுகள் நமக்குக் கிடைத்தில. அடிப்படைத் தேவைகளுக்கு அங்குமிங்கும் அலைந்து திரிந்த மனிதன் இறந்துபட்ட மனிதனைப்பற்றிய சிந்தனை இல்லாமல் அப்படியே கிடத்திவிட்டுச் சென்றான் என்பதே பல அறிஞர்கள் உய்த்துணர்ந்த முடிவு.

அவனுக்குப் பின்னர் தோன்றிய மனிதன் நாகரிகத்தில் ஒரு படியைக் கடந்து இறந்துபட்ட மனிதனை ஒரு ஒதுக்குப் புறமான இடத்தில் புதைக்க முற்பட்டான். அவ்விடத்தில் அடையாளச் சின்னங்கள், நினைவுச் சின்னங்கள் முதலியவற்றை நிலைநிறுத்தினன், இவ்வாறு சவம் வைக்கப்பட்ட இடம் இடுகாடு எனப்பட்டது. நாளடைவில் இதே இடுகாடு, சுடுகாடு, முதுகாடு, பெருங்காடு, புறங்காடு[1] என்ற பற்பல பெயர்களைக் காரண காரியங்களோடு பெற்றது.

பெருங் கற்காலம்

பெருங்கற்கால மனிதன் இந்த ஈமச் சடங்குகளில் பற்பல முறைகளைப் பின்பற்றினன். அவை இன்றும் தமிழகத்தின் பல பாகங்களில் வாழும் சான்றுகளாக நின்று அன்றைய மனிதனின் நாகரீகப் போக்கைப் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றன. கற்கிடை, கற்குவை, கல்பதுக்கை, தொப்பிக்கல், குடைக்கல், நடுகல், ஈமத்தாழி, ஈமப்பேழை[2] என்பன அன்றைய மனிதன் இறந்தவர்களைப் புதைப்பதற்குப் பின்பற்றிய நெறிமுறைகளை எடுத்தியம்பும் சான்றுகள்.

தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தகு ஈமச் சின்னங்கள் பலவற்றைக் காண்பது எளிது. இவை பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட ஒதுக்குப்புறமான மேட்டுப் பாங்கான இடங்களிலேயே அமைக்கப்பட்டன என்பதை நாம் காண்கிறோம். செங்கற்பட்டு மாவட்டம். சாத்தனூர், அமிர்தமங்கலம் பகுதி

களில் மேட்டுப் பாங்கான இடங்களில் பெருங்கற் சின்னங்கள் இன்றும் இருப்பதைக் காண்கிறோம்.[3] கற்கிடைகள் கொண்ட மிகப் பெரிய இடுகாடுகள் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. இத்தகைய இடுகாடுகள் ஏரிகளின் அருகிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஈமச் சின்னங்கள் பெரும்பாலும் மலைச் சரிவுகளிலும் குன்றுகளின் சரிவுகளிலும் காணப்படுகின்றன. அதைக் கொண்டு பார்க்கும் போது ஈமச் சின்னங்களை எழுப்பிய மக்கள் ஏரிப் பாசனத்தைக் கையாண்டனர், இறந்தவர்களை மலைச் சரிவுகளில் புதைத்தனர் என்று அறிகிறோம். சில ஈமச் சின்னங்களைத் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் அகழ்ந்து பார்த்துள்ளனர். இதில் இருந்து இவர்களைப் பற்றிய வேறு சில செய்திகளும் அறிய முடிகின்றன. மட்கலங்களும். இரும்பு ஆயுதங்களும். மணிகள் முதலியவைகளும் ஈமக் குழிகளுக்குள் வைக்கப்பட்டுள்ளன. இந்த மட்கலங்கள் சக்கரத்தில் சுழற்றி வனையப்பட்டவை. கருப்பும் சிவப்புமான இரண்டு வண்ணங்கள் உடையவை. கலயங்களின் உட்புறமும் வெளிப்புற விளிம்பும் கருப்பு வண்ண முடையன.[4] இவையெல்லாம் ஒருகுறிப்பிட்ட இடத்தை அதற்கென்று மக்கள் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தினர் என்பதைக் காட்டி நிற்கின்றன.

இலக்கியத்தில் இடுகாடு

இடுகாடுகள் பற்றிய பல செய்திகளைச் சங்க இலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலும் நம்மால் அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில்,

> செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்
> அம்புபட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை
>
> (புறம் 6)

என்றும்,

> வியன் மலரகன் பொழில் ஈமத்தாழி
> அகலிதாக வனைமோ
>
> (புறம் 256)

என்றும்,

> களரி பரந்து கள்ளிபோகிப்
> பகலுங் கூடவுங் கூகையொடுபிறழ்தல்
> ஈம விளக்கிற்பே எய் மகளிரொ
> டஞ்சு வந்தன்றியும் பிஞ்சுபடு முதுகாடு
>
> (புறம் 356)

என்றும்,

எறிபுனக் குறவன் குறையலன்ன
கறிபுற விறகினிம வொள்ளழல்
குறுகினும் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினு நீள்க பசுங்கதிர்த்
திங்களன்ன வெண் குடை

(புறம் 321)

என்றும் பல சான்றுகளை அறிகிறோம். இதில் இருந்து சவத்தைப் புதைக்கும் பழக்கமும், எரிக்கும் பழக்கமும் சங்க காலத்திலேயே இருந்தது என்பதும், சவத்தைப் புதைக்கும் இடத்தை இடுகாடு என்றும் எரிக்கும் இடத்தைச் சுடுகாடு என்றும் பிரித்துப் பெயரிட்டனர் என்பதும் பெறப்படும். இதற்கடுத்து வந்த நாலடியாரில்,

குடி கொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை

(நாலடி 96)

என்றும் இடம் பெறக் காண்கிறோம். இதே காலத்தைச் சேர்ந்த மணிமேகலையில்,

சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்

என்று வரும் அடிகளைக் கொண்டு அன்றைய நாளில் செய்யப் பட்ட பல்வேறு வகையான ஈமக்கடன் முறைகளை அறிந்து கொள்கிறோம். இதற்குப் பிற்பட்ட விக்கிரம சோழன் உலாவில்,

மாறழிந்தோடி மறலி ஒழிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியும்

என்னும் அடிகள் இடம்பெறக் காண்கிறோம்.

இடுகாட்டில் இடையறாது எழுந்த பறை ஒலியும் பேய்களின் கூக்குரலோடு கூடிய கொடூர ஆட்டமும் தேவர்களின் செவிகளைத் தாக்கிச் செவிடாக்கின என்பர் தக்கயாகப் பரணி பாடிய ஒட்டக் கூத்தர்.

பிணப் பறைக்குரலு வந்து வந்துசில
பேய் துணங்கையிடு தொறு மிடுங்
கணப் பறைக்குரல் படப்படச் சிறிது
செவிபடு மமரர் கன்னமே (53)

இவ்வரிகள் கொண்டு இடுகாட்டின் நிலைமையை நாம் அறியலாம்.

சுடுகாட்டின் அமைப்பும் தன்மையும் முழுமையான படமாக நம் கண்முன் காட்டும் பான்மையும் மணிமேகலை சக்கரவாளக் கோட்ட முறைந்த காதையில் கூறப்பட்டு இருத்தல் பலரும் அறிந்ததே.

ஈமப் புறங்கா டங்கித னயல
தூரா நற்றே ரோவியப் படுத்துத்
தேவர் புகுதரூஉஞ் செழுங் கொடி வாயிலு
நெல்லுங் கரும்பு நீருஞ் சோலையு
நல்வழி யெழுதிய நலங்கிளர் வாயிலும்
வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்
துள்ளுரு வெழுதா வெள்ளிடை வாயிலு
மடித்த செவ்வாய்க் கடுத்த நோக்கிற்
றொடுத்த பாசத்துப் பிடித்த சூலத்து
நெடுநிலை மண்ணீடு நின்ற வாயிலு
நாற்பெரு வாயிலும் பாற்பட்டோங்கிய
காப்புடை யிஞ்சிக் கடிவழங் காரிடை
யுலையா வுள்ளமோ டுயிர்க்கடனிறுத்தோர்
தலைதூங்கு நெடுமரந் தாழ்ந்து புறஞ்சுற்றிப்
பீடிகையோங்கிய பெரும்பலி முன்றிற்
காடமர் செல்வி கழிபெருங் கோட்டமு
மருந்தவர்க் காயினு மரசர்க் காயினு
மொருங்குடன் மாய்ந்த பெண் டிர்க்காயினு
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
யிறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
சுடுமண்ணோங்கிய நெடுநிலைக் கோட்டமு
மருந்திறற் கடவுட் டிருந்துபலிக் காந்தமு
நிறைக்கற் றெற்றியு மிறைக்களச் சந்தியுந்
தண்டு மட்டையும் பிடித்துக் காவல
ருண்டு கண்படுக்கு முறையுட் குடிகையுந்
தூமக் கொடியுஞ் சுடர்த்தோ ரணங்களு
மீமப் பந்தரு மியாங்கணும் பரந்து

காவிரிப்பூம்பட்டினம் தோன்றிய காலத்தே உடன் தோன்றிய தான நன்காடு இச்சோலையின் பக்கத்தேயுள்ளது. அது நான்கு புறமும் வாயில்களையுடைய மதிலாற் சூழப்பட்டது. காளி கோட்டத்தையும், அருந்தவர், அரசர், கணவனிறக்க உடனே இறந்த மடவார் ஆகிய இவர்களுள் இன்னாரின்னார் இன்ன விடத்திலே புதைக்கப் பட்டாரென்பதற்கு அறிகுறியாக அவரவர்கள் வருணம்,

ஆச்சிரமம் முதலியவற்றுக்கும் அவரவர்கள் தகுதிக்கும் ஏற்பச் சிறியனவும் பெரியனவுமாகக் கட்டப்பட்டுள்ள பற்பல கோட்டங்களையும் மயான தெய்வங்களுக்குப் பலியிடுவதற்கு உரிய தூண்களையும் கற்களை நிறுத்திச் செய்யப்பட்டுள்ள திண்ணைகளையும் காவற்காரர் உண்பதற்கும் உறங்குவதற்கும் அமைந்துள்ள குடிசைகளையும், தோரணங்களையும் பந்தல்களையுமுடையது. பிணங்களைச் சுடுதற்கும் போடுதற்கும் குழியிற் புதைத்தற்கும் உள்ளே வைத்து வாயிலை அடைத்தற்கும், தாழியாற் கவித்தற்குமாக இரவும் பகலும் வருபவர்களுடைய ஓசையும் அப்படி வந்து செல்பவர்களுடைய ஓசையும் சாப்பறைகளின் ஓசையும் இறந்த துறவிகளைத் தொழுவோர் ஓசையும், மற்றையோர் பொருட்டு அழுவோர் ஓசையும், நரியின் கூக்குரல் ஓசையும், செத்தோரை அழைக்கும் பேராந்தைகளின் ஓசையும், சோட்டானுடைய குரலும் ஆண்டலைப் பறவைகளின் குரலும் அம்மயானத்தில் மிகுதியாக உண்டு. தான்றி, ஒடுவை, உழிஞ்சில், கான்றை, சூரை, கள்ளி முதலிய பற்பல மரவிசேடங்களும் அங்கே அடர்ந்து உள்ளன. பேய்கள் நெருங்கி உள்ள வாகை மரம் நிற்கும் மன்றங்களையும், நிணத்தோடு இறைச்சிகளைத் தின்று மகிழ்ந்து பறவைகள் தங்கியுள்ள விளாமரம் நிற்கும் மன்றங்களையும் காபாலிக சமயத்தோர் வாழும் வன்னிமரம் நிற்கும் மன்றங்களையும் விரதத்தாலிளைத்த உடம்பையுடைய சிலர் உடைந்த தலைகளை மாலையாகக் கட்டும் இலந்தைமரம் நிற்கும் மன்றங்களையும் பிணங்களைத் தின்போர் களித்துவாழும் வெளியான இடங்களையுடைய மன்றங்களையும் அம்மயானம் உடையது. நெருப்பிருந்த பாண்டங்களும் மண்டைகளும் பாடைகளும் அறுத்தெறிந்த மாலைகளும் உடைந்த குடங்களும் நெற்களும் பொறிகளும் சிறுபலியாக இடப்பட்ட அரிசிகளும் எங்கும் பரவப் பெற்றது. இவ்வாறு இடுகாட்டின் பல்வேறு நிலைபற்றியும் கூறப்படுகிறது.

அரிச்சந்திரபுராணம் மயான காண்டத்தில் இடுகாட்டின் அமைப்பைக் கூறும்போது,

பிணங்கள் சுடும் கடும்புலைய ரரவத்தாலும்
பினந்துதலை வெடித்திடு பேரமலையாலு
நிணங்கருகிச் சுறுநாறு முடையினாலு
நெடுங்கனலின் கொழுந்தெழுந்த நிவப்பினாலுங்
கணங்கள் மிகக் களித்தாடுந் துழனியாலுங்
கனற்பொரியின் மலிவாலும் புகையினாலுஞ்
சுணங்குபல பிணங்குபெருங் குரைப்பினாலுந்
தொகையறிந் துணர்ந்து கொடுஞ்சுடலை சார்ந்தார்

(பாடல் 35)

இதில் பிணங்களைச் சுடுகிற கடுமையான பறையர்களுடைய ஒலியி ஞலும், அந்தப் பிணத்தின் தலைகள் வெடிக்கிற பெரியதான ஒலியி ஞலும், பிணங்களின் கொழுப்புகள் கருகிச்சுறுசுறு வென்று நாறுகிற புலால் நாற்றத்தாலும் நீண்ட நெருப்பின் கொழுந்து கிளறுகிற உயர்ச்சியினுலும் பூதமுதலான கூட்டங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கூத்தாடுகிற ஒலியினுலும், நெருப்புப் பொறிகளின் மிகுதியினுலும், புகையினுலும், பலநாய்கள் ஒன்றுடன் ஒன்று விரோதித்துக் கொள் ளுகிற பெரிய ஒலியினுலும் சந்திரவதி சுடுகாடென்று நிதானித்து அக்கொடிய சுடுகாட்டை நெருங்கினுள் என்று இடுகாட்டு நிலையை விளக்கிக் கூறுகிருள். இது போன்ற எண்ணற்ற இலக்கியச் சான்று கள் விரவிக் கிடக்கின்றன.

மேற்கண்ட இலக்கியச் சான்றுகள் மூலம் காலங் காலமாய் மக் கள் பின்பற்றி வந்த ஈமக்கடன் முறை ள் அதற்கென அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட இடுகாடுகள் எந்த அளவிற்கு நிலை பெற்றிருந்தன என்பதை அறிகிருேம்.

கல்வெட்டில் இடுகாடுகள்

இடுகாட்டுக்கெனத் தனிஇடம் ஒதுக்கி அதை இலவசமாக்கி, வரிகள் நீக்கி இடுகாட்டைப் பிணம் அடைவதற்குரிய தனிவழிகள் அமைத்து மக்களால் பாதுகாக்கப்பட்ட செய்திகள் பல கல்வெட் டுக்களிலும் அறியக் கிடக்கின்றன.

இடுகாட்டுப் பிரிவுகள்

வாழும்போது மனிதனை வதைத்த ஜாதியம் அவன் மாண்ட பின்பும் அவனை ஒதுக்கியே வைத்தது. குறிப்பிட்ட ஜாதியார்க் கென்று தனித்தனியே இடுகாடுகள் வைத்துக் கொள்ளப்பட்டன. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் பலவற்றில் வெள்ளான் சுடுகாடு, பறைச்சுடுகாடு, கம்மான் சுடுகாடு என இடம் பெறக் காண்கிருேம்.[5] இன்னும் ஒரு கல்வெட்டு வண்ணக் குடியார் பிணம் போகும் பெருவழி என்று வண்ணுர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உரிய சுடுகாட்டு வழியைக் குறிப்பிடுகிறது.[6] மேற்கண்ட கல்வெட்டுச் சான்றுகள் வெள்ளாளர், பறையர், கம்மான், வண்ணுர் போன்ற பல்வேறு இனத்தவர்க்கும் தனித் தனியே இடுகாடுகள் அமைந்திருந்ததைக் கூறும் சான்றுகளாய் விளங்குகின்றன.

இடுகாடுகளுக்கு வரி நீக்கம்

இடுகாட்டு நிலத்திற்கென்று அரசர்களால் நிலம் ஒதுக்கிடு செய்யப்பட்டு அதற்கு என்று வரி நீக்கி இறையிலியாகக் கொடுத்த

செய்திகள் பலகல்வெட்டுகள் மூலம் தெரிய வருகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள 10ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு

இவ்வூர் ஈழச்சேரியும் பறைச் சேரியும்
வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும்
கற்கிடையும் ஆக இறையிலி நீங்கு நிலன்

எனக் கூறுகின்றது.[7]

பெரிய லெய்டன் செப்பேடு, திருவானைக்கா கல்வெட்டு போன்ற பல கல்வெட்டுகள் இச்செய்தியைத் தாங்கி நிற்கின்றன. நில விற்பனை, நிலக் கொடை போன்றவற்றில் கொடுக்கப்படும் நிலத்திற்கு எல்லை கூறும் பொழுது சுடுகாட்டு வேலி என்பதும் ஒரு எல்லையாகக் கருதப்பட்டு வந்துள்ளது.

இடுகாட்டு வழிகள்

இடுகாட்டை அடைவதற்கு என்று தனித்தனியே வழிகள் அமைக்கப்பட்டன. இடுகாட்டைப் போலவே அதற்குரிய வழிகளும் வரி நீக்கம் பெற்றன. ஒவ்வொரு இனத்தார்க்கும் தனித்தனியே இடுகாடுகள் இருந்தது போல அதற்குரிய வழிகளும் தனித்தனியே அமைந்திருந்தன. கல்வெட்டுகள் வெள்ளான் சுடுகாட்டுக்குப் போகும் வழி[8] வண்ணக்குடியார் பிணம் போகும் பெருவழி[9] என்று கூறுகின்றன.

கம்மான்சேரி குடியிருக்கையும் பிடாரி
கோயிலுந் திருமுற்றமும் வெள்ளான் சுடுகாடு
காட்டுக்குப் போம் வழியும்

என்று வரும் செய்திகள் இவ்வுண்மையைக் கூறுகின்றன. மற்றும் பொதுவாக இடுகாட்டிற்குச் செல்லும் வழி பிணம் போகிப் பெரு வழி என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.[10]

இடுகாட்டுப் பணியாட்கள்

இடுகாட்டில் பணியாற்றுவதற்கென்று தாழ்த்தப்பட்ட சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் அமர்த்தப்பட்டார்கள். இவர்கள் வெட்டியான் என்றும் அழைக்கப்பட்டனர். வெட்டியார் கள் பெரும்பாலும் பறையர் என்ற இனத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் ஈமச் சடங்கின்போது பறை கொட்டும் வேலை செய்தனர். பிணத்தைச் சுடும் போது அதற்குரிய தொழில் நுணுக்கத்தைக் கற்றிருந்தனர்.[11] இதற்கென அவர்கள் ஊதியம் பெற்றனர். ஆனல் மன்னராட்சிக் காலத்தில் இப்படி ஒரு பிரிவினர் இவ்வேலைக்குப் பயன்படுத்தப் பட்டமைக்கும் அதற்கென

மானியமோ, ஊதியமோ கொடுக்கப்பட்டமைக்கும் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்தில.

ஆனால் சிலநேரங்களில் இவர்களைத் தவிரவேறுசில இனத்தார் இவ்வேலைகளில் ஈடுபட்டனர் என்பதற்கும், அதன் கராணமாக அவ்வின மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டனர் என்பதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள்ள 17 ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டு ஒன்று இச்சுவைமிகு செய்தியினைக் கூறுகிறது. இவ்வூரில் முத்தரையர் இனத்தைச் சேர்ந்த சிலர் சவங்காத்தல், தீச்சட்டி எடுத்தல், பிணம் எடுத்தல் முதலிய காரியங்களில் ஈடுபட்டு இருந்தனர். ஊர்ச் சபையார் கூடி அவர்களை இக்காரியங்களில் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டனர்.[12] இதே ஊரில் உள்ள இதே நூற்றுண்டைச் சேர்ந்த இன்னொரு கல்வெட்டு முத்தரையர் இனத்தைச் சேர்ந்த சிலர் சுடுகாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அதே இனத்தைச் சேர்ந்த மற்றவர்கள் அவர்களைத் தங்கள் இனத்திலிருந்து நீக்கம் செய்தனர் என்று கூறுகிறது.[13]

> சுபமஸ்து மன்மத ஸ்ரீ ஆனிமாதம் நாயனர் குடுமியார் நாயினுர் ஸ்ரீ பண்டாரக்காரியத்துக்குக் கடவார் விசலூர் கோனாட்டு முத்திரையன் செலிந்திவன முத்திரையன் உள்பட்டார்க்கு கல்வெட்டிக் குடுத்தபடி இவர்கள் பட்டடை காத்தும் பிணத்தின் முன் நடந்த படியினுலே இவர்களை பிறவூர் வல்லயர் சாதி நீக்கி தீணம் பண்ணிய படியினுலே இவர்கள் குடிபோயிருக்கையில் மல்லப்பனுயக்கர் பல்லவராயர் பண்டாரத்தாரமாக பட்டடை காவலும் முக்காடு இடவும் வேண்டாம் என்று கட்டளையிட்டபடியினுலே இந்தப்படி சந்திராதித்தவரையும் நடத்தக் கடவோமாகவும்

என்று கல்வெட்டுத் தொடர்கிறது.

மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் புல்வயல் என்ற ஊரில் உள்ள ஒரு கல்வெட்டு வலையர் என்ற ஓர் இனத்தைச் சார்ந்த மக்கள் இடுகாட்டு வேலையைச் செய்வதற்கு என்று பயன் படுத்தப் பட்டு வந்தனர் என்பதைத் தெரிவிக்கிறது.[14] இதில் இருந்து இடத்திற்குத் தக்கபடி மக்கள் இடுகாட்டு வேலைக்குப் பயன் படுத்தப் பட்டு வந்தனர் என்பதை அறியமுடிகிறது.

எனவே மேற்கண்ட கல்வெட்டுச் சான்றுகளால் சுடுகாட்டுப் பணிகளுக் கென்று ஒரு குறிப்பட்ட இனத்தார் பயன்படுத்தப் பட்டார்கள் என்பதும் தெரியவருகிறது. இடுகாட்டைப் பாதுகாப்

பதற்கு என்று காவல் அமைப்பு முறை இருந்தது என்பதும் அரிச்சந்திரபுராணம் மூலம் தெரியவருகிறது. அவர்கள் அனுமதியின்றி எக்காரியமும் இடுகாட்டில் செய்யமுடியாது என்பதும் தெரிய வருகிறது.[15]

மக்கள் வாழ்வின் இறுதிப் புகலிடம் இடுகாடு. அரசனும் ஆண்டியும் ஒரே தட்டில் மதிக்கப்படும் சமரசம் உலாவுமிடம் இடுகாடு. இது காலங் காலமாய் வழங்கி வந்தமை இலக்கிய, வரலாற்று, கல்வெட்டு ஆதாரங்களோடு ஆய்வது மேலும் பல உண்மைகளை வெளிக்கொண்டுவர உதவும்.

குறிப்புகள்

1 Ancient Ind'a, Vol II, p. 19
2 இரா. நாகசாமி, ஈமச்சின்னங்கள்
3 Guru Raja Rao, The Megalithic Age in South India, p, 115.
4 இரா. நாகசாமி, ஈமச்சின்னங்கள்
5 தஞ்சைப் பருவுடையார் கோயில் கல்வெட்டுகள் 4
6 149 of 1895
7 தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் 5
8 SII, V 5
9 149 of 1895
10 திருத்துறைப் பூண்டிக் கல்வெட்டுகள் 84—1976
11 E. Thurston, Castes and Tribes of South I9dia
12 புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் 908
13 ,, 926
14 ,, 847

காட்டேரி

சே. ஞானப்பிரகாசு

காட்டேரி என்று கூறக்கேட்ட மறுகணமே, மயிர்க் கூச்செறிந்து மனக்கலவரம் அடைவோம் நாம். ஏனென்றால் காட்டேரி என்றவுடன் காணக்கூடாத, கொடிய ஒரு சக்தியை, ஆவியைத்தான் யூகிக்கிறோம் நாம். லெக்சிகன் அகராதியும் நம் யூகத்தை உறுதிப்படுத்தும் வண்ணம் காட்டேரி என்றால் தீய ஆவி (Evil Spirit) என்றுதான் பொருள் தருகிறது. தீயசக்தி அல்லது தீய ஆவி என்றாலேயே பேய், பிசாசு, பூதம் முதலிய இனங்களாகத்தான் இருக்க முடியும்.

காட்டேரி என்ற சொல்லைப் பிரித்தோமென்றால் காட்டு + ஏரி என்று வரும். கா(ட்)டு என்றால் பயங்கரங்களின்—கொடிய விலங்குகளின் உறைவிடம் என்று பொருள்படும்.[1] ஏரி என்றால் கொழுத்துள்ள பிடர் என்று பொருள்படும்.[2] பிடர் என்றால் கருத்த, நெருங்கிய, படர்ந்த, அடர்ந்த, நீண்ட, அச்சந்தரக்கூடிய, கருத்துள்ள, நஞ்சுள்ள என்று பல பொருள்களைக் கொள்ளலாம்.[3] (பிடர் என்ற சொல்லிலிருந்துதான் பிடகாரி (விஷவைத்தியன்), பிடாரி பிடாரன் (பாம்பு பிடிப்போன்) என்ற சொற்கள் வந்திருக்க வேண்டும்.) எனவே காட்டேரி என்றாலேயே அச்சம் எழக்கூடிய பொருள்களையே காணமுடிகிறது.

காட்டேரியைப் பற்றிய அச்சமும், அச்ச எண்ணமும் சங்ககாலந்தொட்டு இன்றுவரை நிலவி வருகிறது. காட்டேரிக்கெனச் சில இடங்களில் கோர உருவங்களும், இடங்களும் மனிதர்களால் உருவகிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு வைக்கப்பட்டு இருக்கின்றன.

கடவுளின் பணியாள்தான் காட்டேரி

அறுவகைக் கடவுள்கள் வழிபாடுகளில் சக்தி மதம் (சாக்தம் பற்றி இங்குக் குறிப்பிட வேண்டியதாயிருக்கிறது. சக்தி இறைவி சௌமிய வடிவிலும், சம்ஹார வடிவிலும் சித்தரிக்கப்படுகிறாள். சௌமிய வடிவத்துக்கு நேர்மாறான சம்ஹார வடிவமென்பது ஆயுதந்தாங்கி, கண்ட மாத்திரத்தில் சிலிர்க்கும் வண்ணம் விகாரமாய் எண்ணப்படுகிறாள். சம்ஹார வடிவந்தாங்கும் போதுதான் குவலயத்திலுள்ள கொடுமைகளைக் கொல்கிறாள்.[4] அப்படிக் கொல்லும்போது தானாக அல்லது தனது ஏவலர்களான காளி, உ

மாரி, பிடாரி, துர்க்கை, மாயா, அங்காளம்மன், செல்லியம்மன் பேச்சாயி,[5] இராக்காச்சி, கருப்ப(ண)ன், வேடியப்பன்,[6] பேய் பிசாசு, பூதம், முனி முதலானவர்கள் மூலமாகவும் தண்டிப்பது போல் தண்டித்து, பின்பு காப்பதுவும்—அருள் பாலிப்பதுவும் நிகழ்த்துகின்ருள். அதனுல்தான் மக்கள் மாதம் மும்மாரிபொழியா விட்டால் மாரியன்னையை நாடுவதும், அம்மை போன்ற நோய் வந்தால் அம்மனைத் தேடுவதும் கண்கூடு. இங்ஙனமாகச் சக்தியின் ஏவலர்களான மாரி, அம்மன், கருப்பன் முதலானேர் நல்லவர்களாக, காப்பதில் வல்லவர்சளாகக் கருதப்பட்டு அவர்களுக்கு வழிபாடுகள், கோயில்கள் முதலியன சமைப்பது உண்டு. பேய், பிசாசு பூதம், முனி முதலானேர்கள் கொடியவர்களாக—தீங்கு செய்பவர்களாகக் கருதப்பட்டு அவர்களை வெறுத்து ஒதுக்குவதும் உண்டு. ஆனுல் இவர்களும் சக்தியின் ஏவலர்கள்—தீயவர்கள் அல்லர் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் சான்றுகள் பகர்கின்றன.

இறைவியின் ஏவலாள் காட்டேரி

கலிங்கத்துப் பரணியில்

எவ்வணங்கும் அடிவணங்கும்
இப்பெருமை படைத்துடைய
அவ்வணங்கை அகலாத
அலகை............[7]

என்று வரல் காண்க.

காவல் புரிகின்ற பூதங்களாக—அந்தணப் பூதம், அரச பூதம்' வேளாண் பூதம் என ஒவ்வொரு துறைகளுக்கும் காவல் புரிகின்ற பூதங்களாக, சிலப்பதிகாரத்தில்,

......கொற்ற நங்கை முன்
நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயர[8]

என்று வருவதை அறியலாம்.

தக்கயாகப் பரணியில் சக்தி இறைவி சரஸ்வதி அனுக்கிரகித்ததைக் கேட்டிருந்த பேய், தன்னையும் அனுக்கிரகிப்பாள் என்ற நம்பிக்கையில் இறைவியை வேண்டுகின்ற பொருள்பட,

என்றிறைவி நாமகட்குத் திருவுள்ளஞ்
செய்யக் கேட்டிருந்த பேயில்
ஒன்றிறையுங் கூசாதே யுறுபசிநோய்
விண்ணப்பஞ் செய்ய லுற்றே[9]

என்று கூறப்படுகிறது.

ஆழ்வார்களில் மிகவும் குறிப்பிடத் தக்கவர்களாகக் கருதப்படு வோர் பேயாழ்வார், பூதத்தாழ்வார் என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பேயாழ்வாரைக் கண்டவர்கள் "...இப்பெரி யார் பேயனுயொழிந்தே னெம்பிரானுக்கே' என்றபடி திருமகள் நாதன் திருவடிக் கமலங்களில் அமைந்த தம் அன்பின் மிகுதியினுல், பித்தர்பேயர் எனத் தம்மை மறந்திருக்கின்றனர்"[10] என்று இயம்பு கின்றுர்கள்.

ஊர்ப் பெயர்களில் காட்டேரி

வடாற்காடு மாவட்டம் வந்தவாசி வட்டத்தில் காட்டேரி என்ற கிராமமும், செங்கற்பட்டு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட் டத்தில் காட்டேரிப்பட்டு என்ற கிராமமும் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் காடனேரி என்ற கிராமமும் இருக்கின்றன.[11]

பேய் பூதங்களுக்கென ஊர் எல்லேப்புறம், ஒளி விழா(த) இடங்கள், காடுகள் என்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டமைக்கு எடுத்துக் காட்டாகத் திருமுருகாற்றுப் படையில் "சூரர மகளிர் ஆடும் சோலே" என்றும் மணிமேகலேயில் "கடிவழங்கு ஆரிடை" என்றும் வரல் காண்க.

புலவர்களின் பாடல்களில் காட்டேரி

"அஞ்சுவரு பேய்மகள்" என்று முருகாற்றுப்படை நக்கீரரும்,

"பறைகண் செறு பல்கணப் பேய்" என்று சம்பந்தரும்,

"பறைக்காட்டும் குழிவிழுகண் பல்பேய்" என்று அப்பரும்,

"குழிகட் படுவாயன பேய்" என்றும்

"பறைக்கண் நெடும் பேய்க் கணம்" என்றும் சுந்தரரும்,

"பறைபோல் விழிகட் பேய்" என்றும்

"அழல்வாய்...பேய், பகுவாய் பேய்கள்" என்றும் காரைக் காலம்மையாரும்,

"பறைக்கண் பேய் மகள்" என்று இளங்கோவும்,

"பேய்க் கண் அன்ன பிளிறு கடி முரசம்" என்று பட்டினத் தாரும் பல்வேறு உருவங்களே நம்முன் நிறுத்துகின்றனர்.

"சாதி இரண்டொழிய வேறில்லே" என்ற ஒளவையாரின் கூற்றுப்படி, ஆண்பேய், பெண் பேய் என்றும், ஆண்பூதம், பெண் பூதம் என்றும் பிரிவுகள் உள்ளமைக்குச் சான்ருகச் சிறுபாணுற்றுப் படையில்,

கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்

என்று வரல் காண்க.

தவம் மறைந்தொழுகும் தன்மையிலாளர் முதலிய அறுவகையினரைப் பாசத்தால் கட்டிப் புடைத்துண்ணும் பூதத்தை மணிமேகலை தருகிறது.[12]

இகந்த பூதம் அல்லது தீமையைக் கடந்த பூதம் ஒன்று, பார்ப்பனி ஒருத்திக்கு உதவுவதாக மணிமேகலை மொழிகிறது.[13]

''விந்த மலையைப் பாதுகாக்கும் விந்தாகடிகை என்ற தீய சக்தியானவள், யாரேனும் அம்மலை மேல் போனால் மிக்க கோபத்தை உடையவளாய்ச் சாயையினால் அவர்களை இழுத்துத் தன் வயிற்றிலிடுவாள்'' என்று மணிமேகலையும்,[14] ''பிரம தேவரிடம் வரம்பெற்ற ஸிஹ்மிகை என்னும் அரக்கி இலங்கைக்குச் சென்ற அனுமானை நிழலால் இழுத்துத் தடைப்படுத்தியதாக வால்மீகி இராமாயணமும் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

சமர் செய்ய வந்த அசுரர்களை மயக்குவதற்குத் திருமகளானவள் கொல்லிப்பாவை (மோகினிப் பிசாசு) உருவெடுத்து வந்ததாக மணிமேகலை செப்புகிறது.[15]

பெரும்பாலும் பாவிகளை மட்டுமே பற்றுகின்ற இந்தத்தீய ஆவிகளைப் போக்குவதற்கு இறைவனை நாம் நாடவேண்டும். இந்தக் கருத்தை மையமாகக் கொண்ட சில அடிகள் அருணரின் கந்த சஷ்டிக் கவசத்தில்,

பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அரியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிக் காட்டேரி இத்துன்பச் சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
........அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட[16]ப்

என்று வரல் காண்க.

கல்வெட்டுக்களில், செப்பேடுகளில், ஓலைச்சுவடிகளில் காட்டேரி

பல்லவ அரசி லோகமாதேவியாருக்குப் பிசாசு பிடித்ததாகவும், அதை ஆஜிவிக மதத்தைச் சேர்ந்த கௌதமன் என்பான் தீர்த்து வைத்ததாகவும் அறியமுடிகிறது. இந்தச் செய்தியை இராஜசிம்மன் கல்வெட்டில் (7-ஆம் நூற்றாண்டு),

> மாதேவியாரை பிரம்ம ராட்சம் பற்ற...
> கௌதமநெந் சமணன் மாதேவியை மாதைரய
> பட்டிநத்து அறங்களெல்லா மிறங்கல் மீட்டு...[17]

என்று கூறப்படுகின்றது.

திருஷ்டி விஷம் அல்லது திட்டிவிடம் என்பது ஒரு விஷநாகமாகும். இந்நாகம் நோக்கும் மாத்திரத்தில் நஞ்சு வெளிப்பட்டு மற்றவைகளைக் கொல்லக் கூடியது. இதற்கு எடுத்துக்காட்டாக மணிமேகலையில், உதய குமரன் முந்திய பிறவியல் இராகுலனாக இருக்கும் போது திருஷ்டி விஷ நாகத்தால் இறப்புற்றான் என்று காணலாம். திருஷ்டி விஷ நாகமும் பேய், பிசாசு, முனி முதலான காட்டேரி இனத்தோடு சேர்ந்தவையாகும்.[18] திருஷ்டி விஷ நாக நடனம் என்ற ஒரு வகையான நடனத்தை மூன்றும் நந்திவர்மன் ஆடியதாக வேலூர் பாளையம் செப்பேடு கூறுகிறது.[19]

> தத்தோ அஜாயதா நந்திவர்மா
> அனுக்ரகத் யேன பினுக பானே:
> ப்ரனுத்தித: த்ருஷ்டி விஷ: பாணிந்ர:

புதுக்கோட்டைக் கல்வெட்டு, சொக்க நாரா(யனர்) என்ற விசயாலயத் தேவர், தமக்குப் பிடித்த செவ்வாய் தோஷத்தைப் போக்குவதற்குத் தானம் செய்தமையைக் குறிப்பிடுகிறது.[20] புதுக்கோட்டைக் கல்வெட்டு வல்ல நாட்டுப் பாலைக் குடியிலுள்ள வேளாள குடிகளைப் பிடித்துள்ள கிரக தோஷங்கள் போவதற்கு, திருவரங்குளத்து அரங்குள நாதருக்கு வழிபாடும், பணியும் நடத்துதற்குப் பணிக்கப் பட்டதைக் குறிப்பிடுகிறது.[21] கிரக தோஷம் என்றாலேயே பிடை அல்லது தீய சக்தி என்றுதான் பொருள்படும்.

வேலூர் கல்வெட்டு ஒன்றில் காட்டேரி என்ற பெயரைப் பொது மக்கள் தரித்திருந்தமைக்குச் சான்றாக.

"கோபுர வாசல் குமார சுவாமியார் லக்ஷிக்க, காட்டேரி சந்திரப் பிள்ளை அதியாரி சதா சேர்வை"[22] என்று வரல் காண்க.

கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டு வரை தீய ஆவிகளைத் தெய்வங்களாக வணங்கியதுண்டு. அத்தகைய தெய்வங்களில் குறிப்பிடத் தக்கவள் ஜேஸ்டை தேவியாவாள். பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன் காலத்தில் (9ஆம் நூற்றாண்டு) திருப்பரங்குன்றம் கல்வெட்டில் சாத்தன் கணபதியின் மனைவி நக்கன் கொற்றி, துர்க்கைக்கும் ஜேஸ்டைக்கும் கோவில்கள் எழுப்பித்தமையைக் குறிப்பிடுகிறது.[23]

காஞ்சி கைலாசநாதர் கோயில் வடபுரத்து முன் மண்டபச் சுவரில் ஜேஸ்டைக்கு ஒரு சிற்பம் செதுக்கப்பட்டு உள்ளது.[24]

மூன்றாவது குலோத்துங்க சோழன் காலத்தில் (13ஆம் நூற்றாண்டு) வடஆற்காடு மாவட்டம், தாமரைப் பாக்கம் என்ற ஊரில்,

> ....பிருதிகங்களேன் எங்களெய்யர் கூத்தாடும் தேவரான பிருதிகங்கர் உடன் உடன்பள்ளி கொண்ட பாடும் பெண்டிருக்கும் மனக்கேதம் தீர்த்தர்க்கும் சந்தர்மமாக...

என்ற செய்தியுள்ள கல்வெட்டானது பிருதிகங்கன் என்ற கூத்தாடி இறந்த போது, அவனோடு சில பாடகிகளையும் உயிரோடு புதைத்து விட்டமையால் ஆவிகள் தமக்குத் துன்பம் விளைவிக்காமல் இருப்பதற்காக (மனக்கேதம் நேராமல் இருப்பதற்காக) கூத்தாடியின் மகன் அறம் (சந்தர்மம்) செய்தமையைக் குறிப்பிடுகிறது.[25]

ஒரு பிராமணன் கோயிலில் வழிபாடு சரிவர நடக்காததை ஒழுங்கு படுத்துவதற்காகக் கோயிலின் கோபுரத்திலிருந்து கீழே விழுந்து உயிர்த்தியாகம் செய்து கொண்டதாயும், பின்பு இறந்தவனுக்குப் பிரம்ம மேத சமஸ்காரத்தில் இறுதிக் கடன்களை நடத்திக் கோயிலார் அவனைப் பெருமைப்படுத்தியதாகவும் அறிகிறோம்.[26]

இறந்தவர்க்குப் படையல் செய்து கௌரவிக்கும் போது, அதனை அவர்கள் ஆவி ரூபத்தில் வந்து, ஏற்று, சாந்தி அடைகிறார்கள் என்பது தொன்றுதொட்டு இன்று வரை தொடர்கின்ற ஒரு ஐதிகமாகும்.

பேய்க் கூட்டங்கள் பகிர்ந்து உண்ணும் பழக்கமுடையன போலும். காலிங்கராயன் திருவதிகையில் இதற்கு ஆதாரமாக,

வானத் தருவின் வளஞ்சிறந்த நந்தவனம்
ஞானத் தொளிதிகை நாயகர்க்குத் தானமைத்தான்
மாறுபடுத் தாருடலம் வன்பேய் பகிர்ந்துண்ணக்
கூறுபடுத்தான் கலிங்கர் கோ

என்று வரல் காண்க.

அச்சத்தின் அடிப்படையில் அரும்பான வழிபாடு, பக்குவ நிலைக்கு வரும்போது, தியசக்தி-நல்லசக்தி என்று பகுத்து, வழிபாடு நடத்தி வந்துள்ளோம். அவைகளில் காட்டேரியை நம்மவர்கள் எவ்வாறெல்லாம் கற்பனை செய்திருக்கிறார்கள் என்பதனைக் கண்டோம்.

குறிப்புகள்

1 Tamil Lexicon
2 நக்கீரர் கழகம்—28ஆம் ஆண்டு விழா அறிக்கை, ஏரும் கலப்பையும், ந. சஞ்சீவி—ப. 53
3 Tamil Lexicon
4 சக்தி வழிபாடு, இரா. சீனிவாசன், ப. 359
5 திருவெள்ளறை, வெ. வேதாசலம்
6 நடுகல்—உள்ளும் புறமும், மா. சத்தியமூர்த்தி, பக் 31-32 (நடுகல் கருத்தரங்கு)
7 கலிங்கத்துப்பரணி 134
8 சிலப்பதிகாரம் அழற்படுகாதை 107-112
9 தக்கயாகபரணி, பேய்முறைப்பாடு,222
10 ஆழ்வார்கள் வரலாறு I, புலவர் கா. ரா. கோவிந்தராசமுதலியார், ப. 15
11 List of Villages, pp. 32, 98, 441
12 மணிமேகலை, சிறைசெய்த காதை
13 Ibid
14 மணிமேகலை, உதய குமரனை வாளாலெறிந்த காதை 118-20
15 மணிமேகலை, மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை
16 ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாத வேதபாடசாலையின் வெளியீட்டு நூல், நவம்பர் 1970 ப. 56
17 கல்வெட்டு 1975
18 கல்வெட்டு 1974
19 வேலூர் பாளையம் செப்பேடு
20 புதுக்கோட்டைக் கல்வெட்டு 461

21 புதுக்கோட்டைக் கல்வெட்டு 731

22 SII, III, velur Inscription

23 S I. I, III, 91-93

24 Kailasanatha Tample, Dr. R. Nagaswamy, p. 26

25 கல்வெட்டு, 74 இது என்ன இரட்டைப் புதையல்

26 SITI_783

வெள்ளமும் பஞ்சமும்

ஆர். வசந்தகல்யாணி

தமிழ்நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், வெள்ளம் பற்றிய செய்திகளை இலக்கியங்களும், கல்வெட்டுக்களும், பிற நாட்டார் குறிப்புகளும் கூறுகின்றன.

மழை இன்மையால் ஏற்பட்ட பஞ்சம்

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை காஞ்சி மாநகரில் ஏற்பட்ட பஞ்சம் பற்றிக் கூறுகிறது.

> தேவர் கோமான் காவன் மாநகர்
> மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய
> பொன்னகர் வறிதாப் புல்லென் றாயது
> கண்டுவன் கசிந்த ஒண்தொடி நங்கை
>
> (கச்சிமாநகர்புக்க காதை வரி. 166-69)

காஞ்சி நகர மக்களின் பசிப்பிணி போக்க வந்தாள். இவள் காலத்து அரசனாக இளங்கிள்ளி கூறப்படுகிறான்.

போரினால் ஏற்பட்ட பஞ்சம்

சில்வேய்ன்லெவி வஜ்ரபோதி என்பாரின் வாழ்வில் ஏற்பட்ட தொரு நிகழ்ச்சியினை விவரிக்கும் போது பஞ்சத்தைப் பற்றிக் கூறு கிறார். அவருடைய கூற்றுப்படி, மத்திய இந்தியாவை ஆண்ட க்ஷத்ரிய அரசனின் மகன் ஈசானவர்மன். அவனே வஜ்ரபோதி என் றழைக்கப்பட்டான். இந்த அரசன் யார் என்பது சரியாகப் புலனாக வில்லை. வஜ்ரபோதி கி. பி. 661இல் பிறந்தார். சுமார் 26 ஆண்டு கள் நாலந்தாவில் கல்வி பயின்றார். பிறகு இவர் புனித யாத்திரை களை மேற்கொண்டு தென்னிந்தியா வந்தார். அப்போது காஞ்சியில் கொடிய வற்கடம் தோன்றிப் பஞ்சத்தை ஏற்படுத்தியது. இந்தக் கொடுமையைத் தீர்க்க வஜ்ரபோதி பல பிரார்த்தனைகள் செய்து பஞ்சத்தைப் போக்கினார்.[1] இந்தப் பஞ்சம் 7ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டதாக நம்புகின்றனர். முதல் மகேந்திரவர்மன், முதல் நரசிம்மவர்மன் ஆகியோர் இரண்டாம் புலிகேசியுடன் தொடர்ந்து போர் நிகழ்த்தினர். அதுபோல் முதலாம் பரமேஸ்வர வர்மன், விக்ரமாதித்தனுக்கு எதிராகப் போர் புரிந்தான். இறுதி

வெற்றி பல்லவருக்கே என்றாலும் பொருளாதாரநிலை பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்க வேண்டும். மழை இன்மையும் சேர்ந்து வறட்சி, பஞ்ச நிலையை ஏற்படுத்தியது. இவை அனைத்தும் தண்டியின் அவந்தி சுந்தரி கதையில் விளக்கப்படுகிறது. இராஜசிம்மனின் சமகாலத்தவரான தண்டி பல்லவ சாளுக்கியப் போரைக் குறிப்பிடுகிறார். ''சோழ பாண்டிய நாடுகள் பகைவன் கொடுமையால் வெந்துயர் உற்றன. மங்கையர் சிரழிக்கப்பட்டனர். வேள்விகள் குன்றின. களஞ்சியங்கள் காலியாயின. மதிப்புக் கெட்டது. தோட்டங்களும், மரங்களும் அழிக்கப்பட்டன. பல்லவ நாட்டில் தண்டியின் உற்றார் உறவினர் மாண்டொழிந்தனர். தண்டி உணவின்றி நாடு முழுவதும் சுற்றி அலைந்தார். பல்லவப் பேரரசு தத்தளித்தது. காஞ்சிமாநகரம் கைவிடப்பட்டது. அவைப் புலவரும கற்றாரும் நாடு முழுதும் அலைந்து திரிந்தனர்,[2] என்கிறார் தண்டி. சமயக் குரவர்களும் இந்த நிகழ்ச்சியினைக் காட்டிப் போயிருக்கிறார்கள். அப்பர், சம்பந்தர் பாடல்களில் பஞ்சம் பற்றிய குறிப்பு வருகிறது.

> சிரின் விளங்கு திருத்தொண்டிரிருந்து சிவமான் சென்றதற்பின்
> மாரிசுருங்கி வளம் பொன்னி நதியும் பருவமாறுதலும்
> நீரினியன்ற வுணவருகி நிலவும் பல மன்னுயிர் களெல்லாம்
> பாரின் மலிந்த விலம்பாட்டிற் படர்கூர் வறுமை படர்ந்ததால்
> வையமெங்கும் வற்கடமாய்ச் செல்லவகோர் வருத்தமுற
> ......நாள்தோறும் காசு படிவைத்தருள நானிலத்தில்
> எண்ணிலடியா ருடனமுது செய்தங் கிருந்தார்.[3]

என்று காட்டப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் அப்பர் இறைவன் மேல் பாடல்கள் பாடித் தினமொரு காசு பெற்று அடியார்களை உய்வித்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது. ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணத்திலும் ''சில நாளில் வற்காலம் முற்றிலுமச் சுற்றத்தார் உணவின்றி இறப்பதனில்'' அவர்கள் கோயில் நெல்லை எடுத்து உண்ணத் தொடங்கினர் என்று கூறப்படுகிறது.[4]

பல்லவர் காலத்தில் பஞ்சம் ஏற்பட்டதா?

சமயக்குரவர்கள், முதல் நரசிம்மன் – முதல் பரமேஸ்வரனின் காலத்தைச் சார்ந்தவர்கள். எனவே தண்டி, அப்பர் போன்றோரின் கூற்றுப்படி வற்கடம் ஏற்பட்டது தெளிவாகிறது. ஆனல் கணக்கற்ற கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் இது பற்றிச் சிறு குறிப்புக் கூடத் தரவில்லை. செப்பேடுகள் அவர்களுடைய செழிப்பான வரலாற்றை மட்டும்தான் கூறிச் செல்கிறது. இதனல் சமகாலப்

புலவரான தண்டியின் கூற்றிலோ, அப்பர், சம்பந்தர் பாடலிலோ உண்மை இல்லை என்று கூறிவிடவும் இயலாது. கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் கூறுததால் பஞ்சம் ஏற்படவில்லை என்று ஒதுக்கிவிடவும் முடியாது. அதுபோலத் தமிழகம் முழுவதும் பல்லவர் ஆட்சியில் பஞ்சம் ஏற்பட்டது என்று ஏற்கவும் இயலாது. தொடர்ந்து நடந்தபோர்களின் விளைவுகளால் சில பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

இந்த நிலையில் அரசனும் பொதுமக்களும் செய்த பெரும் பணிகள் யாவை? ஆங்காங்கே ஏரிகளையும் குளங்களையும் ஏற்படுத்தி நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினர். அவர்தம் காலத்தில் பல சிறந்த ஏரிகளும், குளங்களும் வெட்டப்பட்டன என்பதற்குச் செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் சான்று தருகின்றன. மேலும் இந்தப் பஞ்ச காலத்துத் துன்பங்களைப் போக்கவே பஞ்சவார வாரியம் ஏற்படுத்தப்பட்டது என்கிறார் நீலகண்ட சாஸ்திரி. ஒவ்வொரு சிற்றூரிலும் அறுவடையானவுடன் பஞ்ச ஒழிப்பிற்கென்று ஒரு பகுதி நெல் ஒதுக்கி வைக்கப்பட்டது. அதனைச் சேர்த்தல், மேற்பார்வையிடல், காத்தல், பஞ்சகாலத்தில் குடிகளுக்குத் தந்துதவல் முதலிய வேலைகளைச் செய்து வந்தவர் கூட்டமே பஞ்சவார வாரியம் எனப்பட்டது. இது பற்றிய செய்தி மூன்றும் நந்திவர்மனின் திருக்காட்டுப்பள்ளிப் 'பஞ்சவாரம் ஆயிரக்காடி நெல்''[5] என்னும் தொடரில் காணப்படுகிறது. பல்லவர் காலத்தில் பஞ்சம் ஏற்பட்டது என்னும் கருத்துப் பல அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும் ஒரு சிறிதேனும் உண்மை இருக்க வேண்டும். ஊர்களில் சிற்சில இடங்களில் பஞ்சம் ஏற்பட்டிருக்கக் கூடும். ஒரு சில காலத்தில் அவை பெருமுயற்சியால் உடனடியாக அரசினல் போக்கப்பட்டிருக்கக் கூடும்.

சோழர் ஆட்சியில் வெள்ளமும் பஞ்சமும்

அடுத்து வரும் சோழர் ஆட்சிக் காலத்திலும் பஞ்சம் ஏற்பட்டுள்ளதைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பிற்காலச் சோழர் காலத்திலும் பஞ்சம் ஏற்பட்டது. இங்கு ஒன்று நோக்க வேண்டும். மழை நேரந்தவறிப் பெய்வதாலோ பெய்யாமற் போவதாலோ பஞ்சம் ஏற்பட்டு மக்கள் உணவு இன்றி வாடுகிறார்கள். இதுவே மழை அதிகமாகும் போது பெருவெள்ளம் ஏற்பட்டுப் மக்கள் உணவு இன்றி வாடுகிறார்கள். பெருவெள்ளம் ஏற்பட்டு பயிர்களுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டு உணவு கிடைக்காமலும், நிலத்தைத் திருத்த முடியாமலும் வாடுகிறார்கள். அதிலும் ஆறு, ஏரி ஓரங்களிலுள்ள கிராமப்புறங்களும் நிலங்களும் வெள்ளத்

தால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இது நகர்ப்புறம் வரை சென்று பஞ்சமாக உருவெடுக்கிறது.

பெருமழையால் ஏரிகள் உடைதல்

முதல் இராஜராஜனின் கங்கைகொண்டான் கல்வெட்டு ஏரி உடைந்ததால் ஏற்பட்ட நிலையைக் கூறுகிறது. ''ஏரி உடைந்து காடு கோளாய்க் கிடந்தமையில் இவ்வேரி .. கொண்டு வகை செய்கின்ற நெற்குப்பை உடையான் ஆன அரையன் அம்பலக்கூத்தன் ஸ்ரீ கார்யமாய்க் குளத்தையும் பெருக்கக் கரையட்டு விச்சுக் காடும் வெட்டுவிச்சு மடைகளும் எடுப்பிச்சுப் பரமேஸ்வரப்பேரேரி''என்று பெயருமிட்டதை இக்கல்வெட்டு குறிக்கிறது.[6] அது போலவே அதிராஜேந்திரன் காலக் கல்வெட்டு புதுப்பாடியில் பாலாற்றின் கரையில் உள்ள நிலங்கள் வெள்ளப் பெருக்கினால் மணலிட்டு விவசாயத்திற்குத் தகுதியில்லாமல் மாறிவிடுவதைக் காட்டுகிறது.[7]. காஞ்சிபுரம் வைகுண்டப்பெருமாள் கோயிலில் உள்ள முதற் குலோத்துங்கனின் கல்வெட்டு ஏரி உடைந்து காடு கோளாய்ப் பாழ் கிடந்தமையில் இவ்வூர் விளை நிலமும் புஞ்சை நிலமும் விற்றுக் கொடுக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.[8]

மழையால் மக்கள் பாதிப்பு

இவ்வாறு பெருமழை பெய்யும்போது ஏற்படும் சேதங்களால் வரி கொடுக்க முடியாமல் மக்கள் தங்கள் நிலங்களை விற்கும் நிலைக்கு வருவதும் உண்டு. திருவாட்டாரில் உள்ள விக்ரம சோழன் கல் வெட்டு பெருமழையின் காரணமாகக் கிராமமும், பயிர் நிலங்களும் பெரிதும் அழிக்கப்பட்டதால் மக்கள் வரி செலுத்தமுடியாமல் 2000 கழி நிலத்தை 25 காசிற்கு விற்றார்கள் என்ற செய்தியைத் தெரிவிக் கிறது.[9] சோமங்கலத்தில் உள்ள மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத்தூர் நாட்டுச் சோமங்கலமான பஞ்சநதி வாண சதுர்வேதி மங்கலத்து ஏரி இத் தேவர்க்கு பன்னிரண்டு பெரு வர்ஷம் பெய்து ஒரு நாளே ஏழிடத் தில் பெருமடையாக உடைந்து... இது திருச்சுரக்கண்ணப்பந்த திருவேகம்பமுடையான் காமன்கண்டவானவன் இம்மடை ஏழும் அடைப்பித்துப் பதின்மூன்றாவதும் ஏரி நிறைந்து இரண்டிடத்தில் உடைந்தனவும் அடைப்பித்த செய்தியைக் கூறுகிறது.[10]

விக்ரம சோழன் காலத்தில் திருவாட்டாரில் மழையால் வெள்ளம் ஏற்பட்டதை முன்னர் கண்டோம். அவன் ஆட்சிக் காலத்திலேயே கொடிய வறட்சி ஏற்பட்டதையும் காண்கிறோம். பற்றாக்குறையும், வறட்சியும் மக்களைப் பாதித்ததற்குச் சிற்சில கல் வெட்டுக்கள் சான்றுகளாகக் கிடைக்கின்றன.

பஞ்சநிலை

விக்ரம சோழனின் 13-ம்ஆட்சியாண்டில் தென் ஆற்காடு மலைப் புறங்களிலுள்ள மக்கள் தங்கள் நிலங்களை சபையாருக்கு விற்று விட்டு அரகண்டநல்லூர் கிராமத்தை விடுத்து வேற்றிடம் செல்கின் றனர். வறுமைக் கொடுமை தாங்காது தங்களையே விற்கும் நிலை யினையும் காண்கிறோம். சாவிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள இவ்வாறு செய்தார்கள். கி. பி. 1201ல் நிகழ்ந்த பஞ்சத்தால் வேளாளன் ஒருவனும் அவன் பெண்மக்கள் இருவரும் கோயிலைச் சார்ந்த மடத்திற்கு 110காசுக்கு விலைப்பட்டு அடிமை ஆனார்கள் என்பதைத் திருப்பாம்பரம் கல்வெட்டு கூறுகிறது.[11] சிலர் கோயில் பண்டாரத்திலிருந்து கடன் வாங்கி உயிர் வாழ்ந்தனர். ஆலங்குடி மக்கள் கோயில் பண்டாரத்திலிருந்து 1011 கழஞ்சு நிறையுள்ள பொன்நகைகளும் 464 பலம் நிறை உள்ள வெள்ளிப் பொருட்களும் கடனாகப்பெற்று உயிர் வாழ்ந்தார்கள்.

கோயிலின் தொண்டு

பஞ்ச காலத்திலும் வெள்ளக் காலத்திலும் கோயில்கள் மக்களுக் குப் பலவழிகளிலும் உதவின. அவர்களுக்கு நெல்லும் பணமும் கொடுத்தும், தங்க இடம் அளித்தும் பாதுகாத்தது. கோயில் பண்டாரத்திலிருந்து பணம் அளிக்கப்பட்டதைச் சிதம்பரம் வட்டம் எறும்பூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. வறட்காலத்தின் போது தானியத் தட்டுப்பாடு வந்தது. அதனால் ஊர்ச்சபை கோயில் பண்டாரத்தி லிருந்து ஒவ்வொரு காசிற்கும் இருதூணி மூன்று குறுணி நெல் வீதம் 60 காசு பெற்றது என்று கூறுகிறது!

பிற்காலச் சோழர் ஆட்சியில் பல பஞ்சங்கள் உண்டாயின. அவற்றுள் மூன்றும் குலோத்துங்களின் ஆட்சியில் உண்டானது கொடிது. ஒரு காசுக்குக் கால்படி அரிசி விற்றது. இப்பஞ்சக் கொடுமையை நீக்கச் செல்வர் பலர் குளம் எடுத்தல், ஆற்றுக்குக் கரையிடுதல் முதலிய பணிகளில் மக்களை ஈடுபடுத்திக் காசு கொடுத்து உதவினர்.

இன்னும் சில சோழர்காலக் கல்வெட்டுக்களில் பஞ்ச காலத் தின் போது ஏற்படுத்தப்பட்ட ஏரிகளைப் பற்றிய குறிப்பும் வரு கிறது. பஞ்சந்தாங்கி ஏரி,[15] பஞ்சந்தாங்கிச் செறு,[16] பஞ்சந்தாங்கி இட்டல்,[17] என்ற சொற்களும் பல கல்வெட்டுக்களில் காணப்படு கின்றன.

பாண்டியர் காலத்தில் பெருமழை

இவர்கள் காலக் கல்வெட்டு மழையினால் ஏற்பட்ட சேதம் பற்றிக் கூறுகின்றது. மழையினால் விளைநிலங்கள் காடாய்ப்

போகின்றது. இதனல் சில இடங்களில் வறுமை ஏற்பட்டு விடுகின்றது. 'ஜடாவர்மன் ஸ்ரீ வல்லபதேவனின் 12வது ஆட்சியாண்டில் பெருமழை பெய்து விஜய நாராயணச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீமநோமய ஏரியில் மேலை மடைக்கு மேற்கு முறிந்து இக்குளத்துக்கு நீர் பாய்கிற கால் முப்பத்திரண்டிடத்தில் உடைச்ச காலும் குளமும் அடைக்கப் பெருதிருந்த நாளில் காலும் குளமும் அடைப்பிச்சார் வேணுடு வாழ்கிற இரவிகோதை பன்மர்.' 32 இடங்களில் உடைப்பு ஏற்பட்டதெனில் அதனல் அழிந்த கிராமங்களும் நிலங்களும் எத்தனையோ?[18]

ஜடாவர்மன் திரிபுவனச்சக்ரவர்த்தி சுந்தரபாண்டியன் காலத்தில் சந்திரமெளளீஸ்வரப் பேராறு வெள்ளத்தால் நீர் நிரம்பி வழிந்து கோயில் தெருக்களையும் அழித்தது. பிராதராயன் என்பான் அதனைச் சரிபார்த்து அருகிருந்த கிராமங்களைக் காப்பாற்றினன்[19] என்று திருக்குவளைக் கல்வெட்டு கூறுகிறது. இவ்வாறு வெள்ளத்தால் நிலங்கள் பாழ்பட்டுப் போகும் போது அதனை மீண்டும் சீர்படுத்தும் திறமில்லாமல் விற்றுவிடும் நிலையும் காண்கிறேம், ஜடாவர்மன் வீரபாண்டியன் திரு ஆலவாய்க் கல்வெட்டு ''எங்களூர் கீழ் பிடாகை மாத்தூர் நெடுங்காலம் காடு பற்றுப் பருமாக காடாய் வரம்பழிந்து கிடக்க .... காடுவெட்டிப் பயிர் செய்ய எங்களால் செயல்படாமல் எங்களோபாதியும் இவற்கு விற்று விலை பிரமாணம் பண்ணிக் குடுத்தோம்'' என்று கூறுகிறது.[20]

இயற்கையின் சீற்றத்திற்கு எந்த அரசுமே தப்பவில்லை என்பதற்கேற்ப அடுத்து வரும் விஜயநகர மன்னர் தம் ஆட்சியிலும் பஞ்சங்களும், வெள்ளங்களும் ஏற்பட்டன. திருக்களர்க் கல்வெட்டு வீட்டு மனையொன்று தானமாக அளித்ததைக் கூறும்போது திருநாட்டுப் பெருமாள் என்பவன் வறட்சிக் காலத்தில் கோயிலுக்கு நானூறு பணம் கொடுத்தான் என்று தெரிவிக்கிறது. சக ஆண்டு 1375ல் ஏற்பட்ட பஞ்சத்தைப் பற்றிப் புதுக்கோட்டைக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. நள, பிரமாதூத, பிரசாபதி வருடங்களில் பஞ்சத்தால் மிகவும் துன்பப்பட்ட மல்லாயி என்பானும் அவன் மக்களும் அழகப் பெருமாள் விண்ணவர் பெருமாள் கோயிலில் வேலைக்கு அமர்த்தப்படுகிறுர்கள். நிலமும் வீடும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுப் பஞ்சம் போக்கப்படுகிறது.[21] மற்றெரு கல்வெட்டு (சக 1387) மேலூர் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுடை பாடிக்காவல் உரிமையை நரசிங்கமங்கலத்து மக்களுக்கு 500 சக்கரம் பணத்திற்கு விற்று விடுகிறுர்கள். காரணம் மழை பெய்யாது வறட்சி ஏற்பட்டு மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டதே.[22]

பஞ்சமும் வறட்சியும் ஏற்பட இருபெருங்காரணங்கள் கூற லாம். 1. போர் 2. மழை இன்மை. மகேந்திரபல்லவன், நரசிம்மன் காலத்தில் ஏற்பட்ட வாதாபி போரினல் வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டது. சோழர் காலத்திலும் இராஜராஜன், இராஜேந்திரன் குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் பல போர்கள் தொடர்ந்து நடைபெற்றன. இதனல் பிற்காலச் சோழர் காலத்தில் நிதிநிலைமை யும்,பொருளாதார நிலைமையும் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதனல் கி.பி. 11-ம் நூற்ருண்டுக்குப் பிறகு சோழர் ஆட்சியில் பல இடங் களில் பஞ்சம் ஏற்பட்டது. அதே போல் பாண்டியர் ஆட்சியும், விஜயநகர ஆட்சியும் உள்நாட்டுப் போர்களினுலும், படையெடுப்பி னுலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதனல் அவர் தம் ஆட்சியில் அவ்வப்போது ஆங்காங்கே பஞ்சம் ஏற்படத்தான் செய்தன. பெரும்பான்மையும், இந்தப் பஞ்சத்திற்குக் காரணம் போரும் மழையின்மையுமே. அடுத்து அதிக மழையினல் ஏற்படும் வெள்ளங் களும் பஞ்சத்திற்குச் சாதகமாக அமைகிறது. இவ்வாறுதான் நாயக்கமன்னர்கள் முகமதியப் படையெடுப்பினல் சொல்லொணுத் துயரடைந்தார்கள் என்பதை மேனுட்டார் குறிப்புக்களாலும் வரலாற்று நூல்களாலும் அறிகின்ருேம். மதுரை நாயக்கர் வரலாற் றில் பெரும் பஞ்ச நிலைமை ஏற்பட்டது. அதிலும் 1659-ல் ஆண்ட இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கன் காலத்தில் முஸ்லீம் படை யெடுப்பால் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பஞ்சத்தால் மதுரையிலும் சத்யமங்கலத்திலும் தஞ்சம் புகுந்தார்கள். பஞ்சத் தால் முஸ்லீம் படைவிரர்கள் பலர் மடிந்தனர். அவர்களுடைய குதிரைகள் பல இறந்தன. முஸ்லீம் வீரர்கள் இறந்தவர்களேயும் செத்த குதிரைகளேயும் புதைக்காது விட்டதால் கக்கல்கழிச்சலாகிய கொள்ளே நோய் நாட்டில் மிகுதியாகப் பரவியது.[23]

ஏசு கழகத் தொண்டர் மிக உருக்கமாக இந்தப் பஞ்சத்தைப் பற்றி விவரிக்கிருர். ''டச்சுக்காரர்களுக்கு மிகுந்த வெட்கத்தைக் கொடுக்கக்கூடிய செயல். வாடிக்கிடந்த தமிழ்மக்களுக்கு உட லுரம் உண்டாகும் வரை உணவு கொடுத்துக் கடலோரப் பகுதி களுக்கு அழைத்துச் சென்று அவர்களேக் கப்பலில் ஏற்றிச் சென்று ஐரோப்பிய நாடுகளில் அடிமைகளாக விற்ருர்கள்.[24]

முத்து வீரப்ப நாயக்கரும் சொக்கநாத நாயக்கரும் மதுரைப் பெருநாட்டுமக்களேப் படையெடுப்புக்களிலிருந்து பாதுகாத்தாலும் சுமார் நான்கு ஆண்டுகள் எல்லேயற்ற தொல்லே உண்டாயின. தென்னகத்து நெற்களஞ்சியங்களான தஞ்சையிலும் திருச்சியிலுமே இப்பஞ்சம் மிகுதியாக இருந்தது. மக்கள் உண்ண உணவின்றி வாடிச் செத்தனர். இந்நிலேயில் தான் டச்சுக்காரர்கள் நம்மக்களே அடிமைகளாக விற்க முற்பட்டனர்.

அரசனின் சீரிய தொண்டு

இவ்வாறு துன்புறும் நிலை கண்ட சொக்கநாதர் பஞ்ச நிவாரணப்பணி புரிந்தார். பசியால் வாடியவர்களுக்குச் சோற்றை வாரி வழங்குமாறு கட்டளையிட்டார். இதை அவர் பஞ்சம் மிகுந்த திருச்சியில் ஏற்பாடு செய்தார். உணவளிப்பது செம்மையாக நடைபெற்றதைக் கண்காணிக்க நேரே சென்றூர் என்று அறிகிறோம்.[25]

இதனையடுத்து 1876-78ஆம் ஆண்டுகளில் மாபெரும் பஞ்சம் ஒன்று தோன்றி மக்களின் உயிரைக் குடித்தது. இதனைத் தாது ஈஸ்வர ஆண்டுக் கருப்பு என்றுக் குறிப்பிடுவார்கள். இதனுல் வட ஆற்காடு மாவட்டத்தில் தான் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்று கூறுவர். காட்டுக் கிரைகளையும், களிமண் உருண்டைகளை யும் தின்று உயிர் துறந்தார்கள் என்று அம்மாவட்டச் செய்தி கூறு கிறது. அரசினர் பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்தார்கள். பல செல்வந்தர்கள் மக்களுக்கு நாள்தோறும் ஆயிரக் கணக்கில் உண வளித்து வந்தார்கள். பஞ்ச நிவாரணப் பணிகளுள் ஒன்ருகப் பக்கிங்காம் கால்வாயில் ஒரு பகுதி கட்டப்பட்டது.[26]

மேற்கண்ட சிற்சில உதாரணங்களால் தமிழகத்தின் கிராமப் புறங்கள் இயற்கையின் சீற்றங்களினுல் பாதிக்கப்பட்டன என்பதை உணர்கிறோம். கிராமங்கள் சில செல்வத்துடனும் செழிப்புடனும் இருந்த நிலையைப் பல கல்வெட்டுக்களால் அறிவது போல், அங்கு ஏற்பட்ட இயற்கைக் கோளாறுகளான பஞ்சம், வெள்ளம் காரண மாக கிராமமக்கள் எவ்வாறு துன்புற்றனர் என்பதையும் அதற்காக அரசு செய்த சிறப்பான பணிகளையும் பஞ்சத்தாலும் வெள்ளத் தாலும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சீர்கேடுகள் எவ்வாறு களையப்பட்டன என்பதையும் இக்கட்டுரையில் கண்டோம்.

குறிப்புகள்

1 Dr. C. Minakshi, Administration and social life under the Pallavas.

2 பல்லவர் வரலாறு, மா. இராசமாணிக்கனுர்

3 திருநாவுக்கரசர் தேவாரம்

4 பெரிய புராணம், கோட்புலிநாயனுர் புராணம்.

5 மா. இராசமாணிக்கனுர், பல்லவர் வரலாறு.

6 SII, iv, 724

7 408 of 1905.

8 SII, iv, 133
9 87 of 1900
10 SII, vii, 393
11 86 of 1911
12 50 of 1899
13 397 of 1918
14 மா. இராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு
15 DII, Vol iv, 160, 163, 645
16 Ibid
17 Ibid
18 SII, xiv, 231
19 265 of 1950—51
20 SII, xiv, 370
21 IPS, 793
22 IPS, 801
23 அ. கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு
24 Bertnand, Jesuitletters & Inscriptions, pp. 24—25
25 R. Sathiyanatha Iyer, History of Nayaks of Madurai.
26 கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்.

திருமங்கலங்குறிச்சி

சி. எம். கணபதி

தளவாய்புரம் செப்பேடு பாண்டியர் செப்பேடுகளில் ஒன்று. பராந்தக வீர நாராயணனால் வழங்கப்பட்டது. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சார்ந்தது. களப்பிரர் வரலாற்றை உறுதிப் படுத்தியது. திருநெல்வேலி மாவட்டத்தில், தளவாய்புரம் என்னும் கிராமத்தின் அருகே கண்டு பிடிக்கப்பட்டது. பத்தாம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னர்களைப் பற்றி எடுத்தியம்புகிற செப்பேடு. இச்செப்பேட்டில், திருமங்கலம், சோமாசிக் குறிச்சி என்னும் இரு ஊர்களை இணைத்து ஒரே ஊராக்கி அந்தணர்க்குத் தானமாகக் கொடுத்த செய்தி பேசப்படுகிறது. மேற்கூறிய இந்த இரு ஊர்களின் சேர்க்கை, இன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் திருமங்கலங்குறிச்சி என்னும் கிராமமே என்று சான்றுகளுடன் நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமெனலாம்.

திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில் கழுகுமலை-கயத்தாறு சாலையில், கழுகுமலை யிலிருந்து தெற்கு நோக்கி ஆறு கல் தொலைவில் திருமங்கலங்குறிச்சி என்னும் கிராமம் இருக்கிறது. ஊரின் வடபுறமும் கீழ்புறமும் வயல்கள் சூழ்ந்த இப்பகுதி தென்படுகிறது. ஊரின் தென்புறம் காசி விசுவநாதர்- விசாலாட்சி கோயிலொன்றும், அருகில் விநாயகர் கோயிலொன்றும் இருக்கிறது. இக் கோயிலின் தென்புறம் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் பனைகள் அடர்ந்து காட்சி யளிக்கிறது. கோயிலின் மேற்புறம் பாழடைந்த தெப்பக்குளம் ஒன்று தூர்ந்து காணப்படுகிறது. இதனையடுத்து, மேற்புறம் பரந்த உயரமான மண் மேடொன்று காட்சியளிக்கிறது.

இம் மேட்டினில் தொன்மையான கட்டிடங்கள் இருந்து அழிந்து போனதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. செங்கற்களும், சுவர்க்கால்களும், பழமையான கல்தொட்டி யொன்றும் இன்றும் காணும்படி இருக்கின்றன. மேட்டின் வடமுனையில் தம்பிராட்டி என்ற அம்மன் கோயில் வழிபாட்டில் இருந்து வருகிறது. மேட்டின் நடுப் பகுதியில், தொன்மையான கோயிலொன்று இருந்து அழிந்து போன அடையாளங்கள் தென்படுகின்றன.

இன்று, அக்கோயில் இருந்த இடத்தில் அழகிய கற்சிலை யொன்று காட்சி அளிக்கிறது. இதுபோன்று எத்தனையோ சிலைகளும், சிற்பவேலைப்பாடமைந்த கல்தூண்களும் பூமிக்குள் புதைந்து கிடப்பதாக ஊரார் கூறுகின்றனர். மேலும், இவ்விடத்தில் பார்ப்பனச்சேரியொன்று இருந்ததாகவும், அங்கே அந்தணர்கள் சீரோடும் சிறப்போடும் வளமிக்க வாழ்வு வாழ்ந்து வந்ததாகவும் அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

ஊரின் வடபால் ஒரு கல் தொலைவில் கோனூர் கோட்டை என்ற கிராமமும், கீழ்பால் ஒரு கல் தொலைவில் வெள்ளாளன் கோட்டை, கள்ளக்குறிச்சி என்ற கிராமங்களும், தென்கிழக்கில். இலந்தைக்குளம் என்ற ஊரும், மேல்திசையில் ஒரு கல் தொலைவில் ஓலகுளம், கருப்பனூத்து என்ற ஊர்களும் இருக்கின்றன.

ஊரின் மேற்புறம், பெரிய ஏரியொன்று காட்சியளிக்கிறது, இந்த ஏரியில் இரு மதகுக் கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இக் கல்வெட்டுகள் இந்த ஊரினைப்பற்றியும், இந்த ஏரியைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. சுருங்கச் சொல்லின், இவ்வூர் ஒரு பழமையான வரலாற்றுப் புகழ்வாய்ந்த ஊர் என்பதற் கும் அந்தணர்கள் வாழ்ந்த இடம் என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன.

தளவாய்புரச் செப்பேடு

திருமங்கலம், சோமாசிக்குறிச்சி என்னும் இரு ஊர்கள் அந்தணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்டுச் செப்பேடுகளும் அளிக்கப்பட்டன. சிறிது காலத்தில் இவ்விரு ஊர்களின் செப்பேடு களும், உள்நாட்டுக் கலவரம் காரணமாகக் காணுமற் போயின. மேலும், இவ்வூர்களில் ஒன்ருன சோமாசிக் குறிச்சியைக் கடல் திருக்கைக்கிழவன்[1] என்னும் அந்தணரல்லாத ஒருவன் ஆக்கிரமித்து வளமான பகுதியைப் பிரித்தெடுத்து, எல்லை வகுத்து, மதுரதர நல்லூர்[2] என்று பெயரும் இட்டு வேளாண்குடிகட்குக் குடிநிலனுக வழங்கி விட்டான். மேலே கூறியவை யனைத்தும் இவ்விரு ஊர் களைப் பற்றிய பண்டைய வரலாற்றுச் செய்திகளாகும்.

இச்செய்திகள் அனைத்தையும் நன்கறிந்தவனுன நாராயணங் கேசவன்[3] என்பான், பாண்டியன் பராந்தக வீரநாராயணனிடம் இவ்வூரின் இப்பண்டைய வரலாற்றினையும், இவ்விரு ஊர்களும் அந்தணர்க்கேயுரிய பிரமதேயம் என்பதையும், இரு ஊர்களும் எல்லைகலந்து கிடக்கின்ற செய்தியையும் பக்குவமாக எடுத்துக் கூறினுன். முதற்கண், மதுரதரநல்லூரை சோமாசிக்குறிச்சியுடன் சேர்ப்பித்துப் பின்னர், திருமங்கலம், சோமாசிக்குறிச்சி இரு

ஊர்களையும் ஒன்று சேர்த்து ஒரே ஊராக்கி எல்லை வகுத்துச் செப்பேடு செய்து கொடுத்தருள வேண்டுமாய் விண்ணப்பஞ் செய்தான்.

அரசனும் இவ்வேண்டுகோளை ஏற்று திருமங்கலம், சோமாசிக் குறிச்சி இரு ஊர்களையும் ஒன்று சேர்த்து ஒரே ஊராகச் செய்து[3] எல்லை குறித்துச் செப்பேடும் வழங்கியருளினான். சுத்த புத்தகத் திலும் எழுதச் செய்தான். இவையே, இந்த இரு ஊர்கள் பற்றிய செப்பேட்டுச் செய்தியெனலாம். ஆனால் இவ்விரு ஊர்களையும் ஒன்றுசேர்த்து ஒரே ஊராக்கிய புதிய ஊருக்கு என்ன பெயர் வழங்கப்பட்டது என்பது செப்பேட்டின் இரு பகுதியிலும் (வட மொழி, தமிழ்) கூறப்படவில்லை.

இரு ஊர்களான, திருமங்கலமும் சோமாசிக் குறிச்சியும் இணைக்கப்பட்டு ஒரே ஊராகிய காரணத்தால் திருமங்கலங் குறிச்சியாக மாறி இருக்கலாம் எனலாம். அது பற்றிய ஆய்வினை அடுத்துக் காண்போம்.

பிற கல்வெட்டுகள்

> ஆசிநாடு அதனில் படும் பிரமதேயம் கன்னிடக்கைத் தேசமலி திருமங்கலம் இது பண்டு பெருநல்லூர்ப்படுவது,[4]

என்று தளவாய்புரம் செப்பேடு திருமங்கலம் பற்றிக் குறிப்பிடு கிறது. இதுமட்டுமன்றி வேறு இரு கல்வெட்டுக்களில் சில குறிப்பு கள் காணப்படுகின்றன.

> ஆசிநாட்டு வென்றி முடிசூடிய சுந்தரபாண்டியச் சதுர் வேதி மங்கலம்[5]

என்று திருமங்கலங்குறிச்சி மதகுக் கல்வெட்டொன்றும்,

> ஆசிநாட்டுப் பிரமதேயம் பெருநல்லூரான சுந்தர பாண்டியச் சதுர்வேதி மங்கலம்[6]

என்று குமரிமாவட்டம், பறக்கை என்னும் ஊரைச் சேர்ந்த கல்வெட்டொன்றும் குறிப்பிடுகிறது.

செப்பேட்டில் திருமங்கலம், சோமாசிக்குறிச்சி

பண்டைய பாண்டி நாட்டிலுள்ள வள நாடுகளுள் ஆசிநாடு,[7] களக்குடி நாடு,[8] நேச்சுரநாடு[9] என்னும் மூன்று வளநாடுகள் பற்றிய குறிப்புகள் தளவாய்புரம் செப்பேட்டிலே காணப்படுகின்றன. பராந்தக வீரநாராயணன் களக்குடி நாட்டுக் கரவந்தபுரத்தில்[10]

தங்கி இச்செப்பேட்டை வழங்கினன். திருமங்கலம், சோமாசிக் குறிச்சி என்னும் இரு கிராமங்களும் ஆசிநாட்டைச் சேர்ந்த ஊர்களாகும். செப்பேட்டின் மூலம் தானம் வழங்கப்பட்ட ஊரின் வடக்கு மேற்கு எல்லைகளாகக் குறிக்கப்படுவன நேச்சுர நாடாகும். ஆகவே, களக்குடிநாடு, ஆசிநாடு, நேச்சுரநாடு ஆகிய மூன்று வளநாடுகளும் ஒன்றுக்கொன்று அருகருகே இருந்து வந்துள்ளன என்பது தெரிகிறது. மேலும், தானம் வழங்கிய ஊருக்கு எல்லை குறிக்கின்ற போது ஆசிநாட்டு நாட்டாரும், நேச்சுர நாட்டு நாட்டாரும் உடனுகி நின்று எல்லை காட்டினர் என்ற செய்தியும் செப்பேட்டில் கூறப்படுகிறது.

களக்குடி நாடென்பது திருநெல்வேலி வட்டத்தில் உள்ள உக்கிரன்கோட்டை (கல்வெட்டில் கரவந்தபுரம்) என்ற வரலாற்றுப் புகழ் பெற்ற ஊரும் அதைச் சார்ந்த பகுதிகளும் ஆகும். நேச்சுர நாடு என்பது, இதே மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில் உள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற, பாண்டியனின் கலைக் கருவூலங்களைத் தன்னகத்தே கொண்ட கழுகுமலை என்னும் ஊரும் அதைச் சார்ந்த பகுதிகளும் ஆகும். நேச்சுரம் என்பது கல்வெட்டிலும் செப்பேட்டிலும் கழுகுமலையைக் குறிக்கின்ற பெயராகும். ஆசிநாடென்பது, மேலே கூறிய இரு வளநாடு கட்கும் இடைப்பட்ட, நேச்சுர நாட்டின் தென்பால் அமைந்த பகுதி எனலாம்.

திருமங்கலம், ஆசிநாட்டைச் சேர்ந்த ஊர். பண்டு மண் மேடிட்டு பருமரக் காடாகக் கிடந்தது. முன்னுளில் இவ்வூர் அருகிலுள்ள பெருநல்லூரைச்[11] சேர்ந்த ஊராக இருந்தது. பாண்டியன் கடுங்கோனுல் பன்னிருவர் அந்தணர்க்குத் தானம் வழங்கப் பட்ட பிரமதேயம் "கன்னிடக்கைத் தேசமலி திருமங்கலம்[12] என்றும் "அக்ரமாகிய கருவமைந்த கனக மாளிகைத் திருமங்கல நகர்"[13] என்றும் "தருமங்களில் ஒன்று பயில் திருமங்கலத்துச் சபையார்"[14] என்றும் இவ்வூரின் தொன்மைச் சிறப்பினைச் செப் பேடு எடுத்தியம்புகிறது.

சோமாசிக்குறிச்சியும் ஆசிநாட்டைச் சேர்ந்த ஊரேயாகும். பண்டு மண்மேடிட்டுக் கிடந்த இடமேயாகும். "கழுதூரில் சித்தி செய்த கடிகூடல் நகர் காவலன்"[15] என்னும் பாண்டிய மன்னனுல் காடக சோமயாஜி[16] என்ற அந்தணப்பண்டிதனுக்குத் தானம் வழங்கப்பட்ட பிரமதேயமாகும். "சோமாசிக் குறிச்சி என்னும் காமர் வண்பதி"[17] என்றும், தொல்லைவண் சோமசி குறிச்சி மல்லன்மா மறையோர்க்கும்"[18] என்றும், "ஏதமில்

சோமாசிக்குறிச்சி''[16] என்றும் இவ்வூரின் தொன்மைச் சிறப்புக்கள் செப்பேட்டில் பேசப்படுகின்றன.

செப்பேட்டில் எல்லைகளும் இன்றைய ஊர்களும்

பராந்தக வீரநாராயணனால் தானம் கொடுக்கப்பட்ட ஊரின் எல்லைகளாகச் செப்பேட்டில் சில ஊர்களின் பெயர்கள் குறிக்கப் படுகின்றன. அவ்வூர்களில் சில இன்றும் அதே பெயரில் இன்றையத் திருமங்கலக்குறிச்சி என்னும் இவ்வூரின் அருகாமையில் செப்பேட்டில் கூறிய திசைகளிலேயே இருந்து வருகின்றன. அவை பற்றிக் கீழே காண்போம்.

செப்பேட்டில் தானம் கொடுக்கப்பட்ட ஊரின் எல்லைகளாக திருவிருப்பூர், பெருநல்லூர், கள்ளிக்குறிச்சி,நேச்சுரநாடு, ஒலைக்குளம் போன்ற ஊர்களின் பெயர்களும், வெள்ளாறு, வண்ணத்தார், வளாகம் (வண்ணுந்துறை), கள்ளி முரம்பு, நிலப் பறை, விளைகழனி, சுனை, ஊருடையான்குழி, கற்றூளை, படுகால், தமாணிக்குளத்துக் கரைப்பெருப்பு, காடனேரிவழி, எறிச்சல் வழி போன்ற இடங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.[20]

இவற்றுள் கள்ளிக் குறிச்சி, ஓலைக்குளம் என்னும் இரு ஊர்களும் இன்றும் இதே பெயரில் இருந்து வருகின்றன. நேச்சுர நாடாகிய கழுகுமலை இத் திருமங்கலங்குறிச்சியின் வடபால் இருப்பதுவும் அறிந்த ஒன்றாகும், மற்றைய ஊர்களையும் ஆராய்ந்து பார்ப்பின் கண்டு கொள்ள இடமுண்டு.

கள்ளிக் குறிச்சி

செப்பேட்டில் தானம் கொடுக்கப்பட்ட ஊரின் கீழெல்லை கூறுகின்றபோது, 'நலமிகு கள்ளிக்குறிச்சி மேலைக் கள்ளி முரம் புக்கும்',[21] என்ற குறிப்பு வருகிறது. இங்கே குறிப்பிடப் படுகின்ற கள்ளிக் குறிச்சி, இன்றையத் திருமங்கலங்குறிச்சியின் கீழ்பால் ஒரு கல் தொலைவில் வெள்ளாளன் கோட்டை என்ற ஊருக்கு வடபால் கள்ளக்குறிச்சி என்ற பெயரோடு இருந்து வருகிறது. எனவே இவ்வூரே செப்பேட்டில் கூறப்படுகின்ற கள்ளிக்குறிச்சி என்பது வெள்ளிடைமலை.

ஓலைக்குளம்

செப்பேட்டில் தானம் வழங்கிய ஊரின் மேலெல்லை கூறுகின்ற போது ''எழிலமை நேச்சுற நாட்டு ஒலைக்குளத்து எல்லைக்கும் கிழக்கு''[22] என்ற குறிப்புக் காணப்படுகிறது. இங்கே குறிப்பிடப் படுகின்ற ஓலைக்குளம் இன்றைய திருமங்கலங்குறிச்சியின் மேல்புறம்

ஒருகல் தொலைவில் ஓலக்குளம் என்ற பெயரில் இருந்து வருகிறது. எனவே இவ்வூரே செப்பேட்டில் கூறப்படுகின்ற ஓலைக்குளம் என்பது தெளிவு. மேலும் இவ்வூர் நேச்சுர நாடான இன்றைய கழுகுமலைப் பகுதியைச் சேர்ந்த ஊர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேச்சுர நாடு

செப்பேட்டில் தானம் கொடுக்கப்பட்ட ஊரின் வடஎல்லை கூறுகின்ற போது "வளமிக்க மருதவேலி இள நேச்சுறத்து எல்லைக்கும் தெற்கு"[23] என்ற குறிப்பு வருகிறது. இங்கே குறிக்கப் படுகின்ற இள நேச்சுரம் இன்றையத் திருமங்கலங் குறிச்சியின் வடபால் ஆறுகல் தொலைவில் உள்ள கழுகுமலை என்பதும், இக் கழுகுமலையைச் சார்ந்த பகுதியின் தென்னெல்லையே, இத்திருமங் கலங்குறிச்சியின் வட எல்லை என்பதும் அறியத்தக்கதாகும்.

திருவிருப்பூர்

செப்பேட்டில், தானம் வழங்கிய ஊரின் கீழெல்லை கூறுகின்ற போது,

> "புனல் புவனி புத்தேள் மாருதம் கனல் இருசுடர் யஜமானன் ஆகிய திறல் அஷ்டமூர்த்தி அமரர்க்குடம் அறிவரி யோன் வேக வெள்விடையூர்தி விஷமலோசனன் மகிழ்ந் துறையும் வாழியவான் திருவிருப்பூர் மூழி நின்று தென்கிழக்கு நோக்கிப் போயின வெள்ளாற்றுக்கும்"[24]

என்ற குறிப்புக் காணப்படுகிறது. இங்கே குறிப்பிடப்படுகின்ற திருவிருப்பூர் இன்றையக் கழுகுமலை என்றும் வெள்ளாறு இன்றைய உப்போடை என்னும் காட்டாருக இருக்காலம் என்றும் கருத இடமுண்டு. எவ்வாறெனில், வெள்ளாறு என்னும் ஆறு சிவன் உறைகின்ற திருவிருப்பூரைச் சேர்ந்த நீர்நிலை (மூழி)யிலிருந்து தென் கிழக்கு நோக்கிப் போகின்றது என்ற பொருள்படச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. இந்த வெள்ளாறு தானம் கொடுக் கப்பட்ட ஊரின் கிழெல்லையாகக் குறிக்கப்பட்டுள்ளது. இன்றைய கழுகுமலை என்னும் ஊரில் வட முனையிலிருந்து உப்போடை என்ற பெயரில் காட்டாறு ஒன்று தென்கிழக்கு நோக்கிப் போகின்றது.

இந்த ஆறு இன்றையத் திருமங்கலங்குறிச்சியின் கீழ்பால் சுமார் இரண்டு கல் தொலைவில் வெள்ளாளன்கோட்டை என்ற ஊருக்கும் கிழக்கே தென் வடலாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதனைக் கயத்தாறு என்றும், கோதண்டராமநதி என்றும் மக்கள் அழைக்கின்றனர். கயத்தாறு என்ற பெயரில் வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஊரொன்றும் இவ்வாற்றின் கரையிலே இருக்கிறது.

மேலும் இன்றையக் கழுகுமலையில் பாண்டியர்களின் இரு குடைவரைக் கோயில்கள் உள்ளன. அவைகளில் ஒன்று சிவனுக்காக எடுப்பிக்கப்பட்டது என்பது வரலாற்றறிஞர்களின் துணிபு.

எனவே செப்பேட்டில் கூறப்படுகின்ற திருவிருப்பூர் இன்றையக் கழுகுமலையாகவோ, அதனைச் சிறப்பித்துக் கூறவந்த பெயராகவோ அல்லது கழுகுமலைக்கு வடபால் அருகில் உள்ள வேறு ஏதாவது ஒரு ஊரின் பெயராகவோ இருக்கலாம் என்றும், செப்பேட்டில் கூறப்படுகின்ற வெள்ளாறு இன்றைய உப்போடையாக இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு. ஏனெனில், அருகில் சிவன் கோயில் கொண்டுள்ள முக்கியத் தலம் வேறெதுவும் தென்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பெருநல்லூர்

செப்பேட்டில், தானம் கொடுக்கப்பட்ட ஊரின் கீழெல்லை கூறுகின்றபோது பெருநல்லூர்சிறைக்கும் என்றும், திருமங்கலத்தின் பண்டைய வரலாற்றைக் கூறுகின்றபோது, ''திருமங்கலம் இது பண்டு பெருநல்லூர் படுவது'' என்றும் குறிக்கப்படுகிறது. எனவே, இப்பெருநல்லூர் பண்டைய திருமங்கலத்தின் கீழ்பால் இருந்தது என்பது திண்ணம். இன்றையத் திருமங்கலங்குறிச்சியின் கீழ்பால் வரலாற்றுப் புகழ்வாய்ந்த வெள்ளாளன்கோட்டை என்ற கிராமம் இருந்து வருகிறது. எனவே செப்பேட்டில் கூறப்படுகின்ற பெருநல்லூர், இவ்வெள்ளாளன் கோட்டையாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஏனெனில் எவ்வாறு பண்டையத் திருமங்கலம் பெருநல்லூரைச் சேர்ந்த ஊராக இருந்ததோ, அதேபோல் இன்றையத் திருமங்கலங்குறிச்சி, இந்த வெள்ளாளன்கோட்டை என்னும் ஊரின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது.

எனவே, மேற்கூறிய அனைத்துச் செய்திகளையும் நோக்குகின்றபோது, பாண்டிய நாட்டில் பல திருமங்கலங்கள் இருந்தபோதிலும், செப்பேட்டில் கூறப்படுகின்ற திருமங்கலம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருமங்கலங்குறிச்சி என்னும் கிராமமே என்பதில் ஐயமில்லை.

திருமங்கலமும் சோமாசிக்குறிச்சியும் ஒருங்கிணைக்கப்பட்டுஒரே ஊராகச் செப்பேடு செய்தபோது என்னபெயர் கொடுக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அவ்விரு ஊர்களின் சேர்க்கையே திருமங்கலங்குறிச்சி என்று அழைக்கப்பட்டது, இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது என்று கொள்வது தவறாக இருக்க முடியாது.

இதுகாறும் பார்த்த செய்திகளால், திருமங்கலங்குறிச்சி என்னும் இன்றைய சிறு கிராமமே தளவாய்புரச்செப்பேட்டில் கூறப்பட்ட திருமங்கலம், சோமாசிக்குறிச்சி என்னும் ஊர்கள் என்பது திண்ணம். இதுபோன்ற ஆய்வுகள் இன்னும் தொடர்ந்தால் பண்டைய சாசனங்களில் இடம் பெற்றுள்ள இன்றைய கிராமங் களின் தொன்மைச் சிறப்பினையும் வரலாற்றினையும் அறிய முடியும் என்பது உறுதி.

குறிப்புகள்

1 தளவாய்புரம் செப்பேடு வரி 141-142
2 ,, 142-143
3 ,, 153
4 ,, 128-129
5 A. R. E. 1965-66
6 கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் பாகம் 3, 1968-287
7 தளவாய்புரச் செப்பேடுவரி 128
8 ,, 127-128
9 ,, 173
10 ,, சுலோகம் 21
11 ,, வரி 129
12 ,, 129
13 ,, 147-148
14 ,, 199-200
15 ,, 136-137
16 ,, 136
17 ,,
18 ,, 200
19 ,, 140—141
20 ,, 174-196
21 ,, 179-180
22 ,, 194-195
23 ,, 195-196
24 ,, 174-177

தமிழர் நாகரிகத்தில் இரும்பின் பங்கு

புலவர் சு. வேலுச்சாமி

உலகின் பண்டைய நாகரிகங்களுள் சுமேரிய, மெசபடோமிய நாகரிகங்களுடன் வைத்துப் போற்றப்படுவது தென்னிந்தியாவில் வாழ்ந்த தமிழர் நாகரிகம் என்பதை வரலாற்றாசிரியர்கள் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளனர். சுமேரிய, மெசபடோமிய மக்கள் முதன் முதலில் பயன்படுத்திய உலோகம் கரும்பொன்னும் இரும்பேயாகும். தமிழன் எப்போது இரும்பினைக் கண்டான்? எவ்வாறெல்லாம் இரும்பைப் பயன்படுத்தினான்? இவற்றை ஆராய்ந்தால் பண்டைத் தமிழரது நாகரிக வாழ்வு நமக்குத் தெரிய வரும்.

இரும்பின் தொன்மை

''மனிதனது புராதனஆயுதங்கள் உகிர்களும், பல்லும், வெறுங்கையும், கல்லும், மரத்திலிருந்து முறித்த கம்புந்தான். பிறகு நெருப்பும், சுவாலையும் தெரிய வந்தன. பின்னர் இரும்பு-வெண்கலங்களின் வலு உணரப்பட்டது'' என்கிறான் கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த லுக்ரீசியர் என்ற லத்தீன் கவிஞன்.[1] இக் கவிஞனது கூற்றிலிருந்து தோன்றிய நாகரிக மக்கள் இரும்போடு வெண்கலத்தையும் பயன்படுத்தி யிருக்கலாம். ''வெண்கலம் கலப்பு உலோகம். ஒரு பங்கு வெள்ளியும், ஒன்பது பங்கு செம்பும் கொண்டது என்கின்றனர் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்.[2]

தென்னிந்தியத் தொல்பழங்கால வரலாற்றில் பெருங்கற்காலம் ஒரு தனியிடத்தைப் பெறுகிறது. இக்கால மக்கள் இரும்பை அதிகமாகப் பயன்படுத்திய காரணத்தினால் இக்காலம் இரும்புக்காலம் எனவும் பெயர் பெறுகிறது.[3] பெருங்கற்காலம் புதிய கற்காலத்தையடுத்து உலோக காலத்திற்கு முற்பட்டதான இடைக்காலம் ஆகும். புதிய கற்காலத்தை ஆராய்ந்த புரூஸ்ஃபுட் முதலானோரின் ஆய்வுரைகளை நோக்குமிடத்து புதுக்கற்காலத்து இறுதிக் காலத்திலேயே இரும்புக்காலம் தொடங்கிவிட்டதென்றே கூறவேண்டும்.[4] ''வேத காலப் பண்பாடு கற்காலக் குறிப்புடையதன்று. அது உலோக காலத்திற்கே உரியது'' என்கின்றார் பி. டி, சீனிவாச அய்யங்கார்.[5] ''தெக்கணம், மைசூர் முதலான பகுதிகளில் பழங்களங்கள் பலவற்றில் கிடைத்த சான்றுகள் புதுக்கற்காலத்தில் நேர்

வாரிகளாகவே இரும்புக் கருவிகளைக் கையாண்டவரைக் கொள்வது மிகப் பொருத்தமானது'' என்கிறார் புரூஸ்புட்.[6] இரும்புக்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் தமிழகத்து பாண்டவர் தாழிகள், சதுரப்புதை குழிகள் இவற்றிலிருந்து கிடைத்துள்ளன. ''இப்புதை குழிகளில் எலும்புகள் மட்டும் எந்த உருவமும் தெரியாமல் கிடைத்தன. இந்த எலும்புகளோடு மட்கலங்கள், அணிமணிகள், இரும்பினால் செய்யப்பட்ட படைக்கலங்கள் ஆகியவை இக்குழிகளில் இடப்பட்டன'' என்று எழுதுகின்றார் டாக்டர். இரா. நாகசாமி.[7] இரும்புக்கால மக்கள் வாழ்ந்த பகுதி பெரும்பாலும் தென்னிந்தியப் பகுதியே.[8] இரும்பு இந்திய, தென்னிந்தியப்பகுதிகளுக்கு வந்தது பெருங்கற்காலம் ஆகும். இரும்பு அகிலமெங்கும் பயன்படுத்தப்பட்ட உலோகம். ஆதிச்சநல்லூர் முதல் நாகபுரி வரை பல இடங்களில் புதைகுழிகளில் கிடைத்த ஒரே மாதிரியான இரும்புக் கருவிகள், இரும்பு, உலோக வேலை செய்பவர்கள் தொடர்ந்து அப்பகுதி முழுவதும் இருந்தார்கள் என்பதற்குச் சான்று பகர்கின்றன.[9]

> கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
> முன்தோன்றி மூத்த குடி

என்று புறப்பொருள் வெண்பா மாலை கூறுகின்றது. எனவே, பண்டைக் காலந்தொட்டு தமிழனது வாழ்வில் இரும்பு இரண்டறக் கலந்திருக்கிறது.

தமிழன் இரும்பிற்கு அடுத்துத் தங்கத்தைப் பயன்படுத்தினான். அதன் பிறகே வெண்கலமும், செம்பும் தமிழனால் பயன்படுத்தப்பட்டன. ''பவானியாற்றின் மணலில் தாமிரம் கலந்திருந்ததாகவும் அதனை உருக்குவதன் மூலம் கிடைத்த தாமிரத்தை மேலைச் சிதம்பரத்தில் (பேரூரில்) செப்புத் திருமேனி செய்வதற்குப் பயன்படுத்த அனுப்பியதாகச் சோழன் பூர்வபட்டயம் கூறுகின்றது.[10] தாமிரம் அதன்பின் பயன்படுத்தப்பட்டது.

> ஓர் செம்பில் ஒரு மூன்று 'நாகம்' உடில்
> பாரறியப் பித்தளையாம் பார்

என்று கணக்கதிகாரம் என்ற சமண சமய நூல் கூறுவது காண்க. இரும்பையும் வெள்ளியையும் கலந்துருக்கிய புது உலோகம் இருந்தது. ''இரும்பும் வெள்ளியும் இசைந்துருக் குறிஇ'' என்ற பெருங்கதைக் குறிப்பால் அறியலாம்.

இரும்பைக் கண்ட இயல்பு

தீயைத் தன் வாழ்விற்குப் பயன்படுத்தத் தொடங்கிய மனிதன் தான் உண்ணும் உணவினைப் பக்குவப்படுத்தவும், விலங்குகளிலிருந்து

தன்னைக் காத்துக் கொள்ளவும் நெருப்பை மூட்டியிருக்கின்றான். அத்தீயின் குழம்பு தோன்றியது. அக்குழம்பு ஆறிய பிறகு அதைப் பெயர்த்தெடுத்துத் தனக்கு வேண்டிய கருவிகளாகக் கூர்ப்படுத்தியிருக்கிறான். கல்லைவிடக் கெட்டியானதும் கூர்ப்படுத்துவதற்கு எளிதானதுமான இந்தப் பொருளே இரும்பாம். எனவே மனிதர் அதிலும் தென்னிந்திய மக்கள் கற்கருவிகளுக்குப் பின் இரும்புக் கருவிகளையே பயன்படுத்தினர் என்பது போதரும்.

இரும்பை எடுத்த விதம்

பண்டைத் தமிழகத்தே கல்லினாலும், மண்ணினாலும் ஆன சிற்றுலைகளில் இரும்புக் கனியங்களின் பொடியைக் (இரும்பு கலந்த மண்ணை) கட்டைக் கரியுடன் சேர்த்து உருக்கி இரும்புக் கட்டிகளை உற்பத்தி செய்திருக்கின்றார்கள். தமிழ் இலக்கியங்களில் பலவிடங்களில் இரும்பைக் காய்ச்சும் ஊதுலைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

> ''மெல்தோல் மிமிஉலை கொல்லன் முறிகொடிறு அன்ன''
> —பெரும்பாண்—206
>
> ''ஒண்ணிறச் செந்தியுண்ணிறைத் தடங்கிய ஊதலை போல''
> —பெருங்கதை—பாங்கர்க் குரைத்தது

இவ்வாறு ஊதுலைகளில் இரும்பைக்காய்ச்சி எடுத்த நிலை கி. பி. 1880-இல்கூட நடந்துள்ளது. அதுவும் தமிழகத்துக் கிராமப்புறங்களில் இத்தொழில் நடந்து வந்துள்ளதை நேரில் பார்த்து, தான் கண்டதைத் தன் நாட்குறிப்பில் அப்படியே எழுதியுள்ளான் புக்கானன் என்ற ஆங்கிலேயன்.

''1800 நவம்பர் 5: கொஞ்ச தூரம் சென்று சென்னிமலையை அடைந்தேன். இங்கு கொட்டம்பள்ளி என்ற சிற்றூரில் இரும்பு உருக்குவதைக் கண்டேன். சக்கிலியர் என்ற தாழ்ந்த சாதியினர் இதை செய்கிறார்கள். தொழில் முறை மிக வருந்தத்தக்கதாக உள்ளது. உலை திறந்த வெளியில் இருக்கிறது. அதனால் மழைக் காலத்தில் உருக்க முடியாது. ஆட்டுத்தோல் துருத்தி வைத்துள்ளனர். அதில் காற்று மிகவும் கொஞ்சமாக வருகின்றது. உருக்கும் ஆள் ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டு தன் காலுக்கடியில் ஒரு துருத்தியை வைத்துக்கொண்டு வலது கையால் துருத்தியைப் பிடித்துக் காற்றடிக்கிறான். உலையில் முன்பக்கம் உருக்கிய இரும்பு எடுக்கப்படுகிறது. முதலில் கரி போடுகிறார்கள். எரியும்போது கைநிறைய இரும்புத் தாதுவுள்ள மணலைப் போடுகின்றார்கள். மீண்டும் மணல் போடுகின்றார்கள். இவ்வாறு வைகறையிலிருந்து மாலை வரை வேலை செய்கின்றார்கள். மணலிலுள்ள இரும்பு உருகிக் கட்டியாகி பள்ளங்களிலும் இந்த

மணல் கிடைக்கின்றனவாம். காங்கயம் மாவட்டத்தில் வீர சோழபுரத்திலிருந்து இது கிடைக்கின்றதாம். இது நொய்யலுக்கு அக்கரையிலுள்ளது.

சென்னிமலையில் இரும்பு உருக்கும் சாணூர் வகுப்பினர் அதைத் கனமான கோடாலியால் இரண்டாக வெட்டிக் கொல்லனிடம் கொடுத்துவிடுவார்களாம். கொல்லர் காய்ச்சி இரும்புச் சட்டங்க ளாகச் செய்கின்றனர். உருக்கிய இரும்பில் முப்பதில் ஒரு பாகத்தை அரசுக்கு வரியாகச் செலுத்துகின்றனர் என்பது புக்கானனின் நாட்குறிப்பு.[11] கோவை மாவட்டத்தில் சத்திய மங்கலம், மூலனூர் ஆகிய ஊர்களிலும் இரும்பு காய்ச்சும் தொழில் நடைபெற்றதாகப் புக்கானன் கூறுகின்றான்.

இதுபோன்று இரும்பு காய்ச்சும் தொழில் தமிழகத்துப் பல இடங்களில் நடைபெற்றுள்ளது. சேலம் மாவட்டத்தில் மட்டும் சுமார் முப்பத்து நான்கு இடங்களில் உருக்குப்பட்டறைகள் இருந்ததாக தாமஸ் ஆலண்டு என்பவர் குறிப்பிடுகிறார்.[12] எனவே, சங்க காலத்திற்கு முற்பட்ட கால முதல் இரும்பு உருக்கும் தொழில் தமிழகத்தே பரவலாக நடைபெற்ற வந்துள்ளது.

எஃகு தயாரித்தல்

கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முன்னரே சேலத்து எஃகினால் செய்த உளி, சுத்திகளைப் பயன்படுத்தி எகிப்தியர் கல்லறைக் கோயில்களைக் கட்டினர் என்று எஃகு ஆய்வாளர் சே. எம். கீத், சர். சே. சே. வில்கின்சன் ஆகியோர் குறிக்கின்றனர்.[13] சுமார் 1 அங்குல அளவுள்ள சதுரமான இரும்புக்கட்டிகளைச் சிறுசிறு துண்டங் களாக்கிக்கரித்தூளைப் பக்கங்களில் நிரப்பிச் சிறுகளிமண்பாத்திரத் தில் வைத்து அதன் வாயைக் களிமண்ணால் அடைத்துக் கரியடுப்பு களில் (ஊதுலைகளில்) வெண்சூடாகும் வரை காய்ச்சிச் சிலமணி நேரங்களுக்குப் பிறகுஅப்பாத்திரங்களை எடுத்து ஆறவைத்து உறுதி யும் கடினமுமான எஃகைத் தாயரித்தனர். இது ஆயுதங்கள் முதலிய கருவிகள் செய்யப் பயன்பட்டது.[14] எஃகு என்ற சொல் வேல் முதலிய கருவிகள் என்ற பொருளில் தமிழிலக்கியங்களில் பல இடங் களில் வந்துள்ளது.

''எஃகுடையிரும்பின் உள்ளமைத்து'' (பதிற்றுப்பத்து 74-13) என்ற பகுதியில் தோல் வேலை செய்வதற்குரிய இரும்புக் கருவிகள் கூறப்படுகின்றன. ''ஒளிறிலைய எஃகு ஏந்தி'' (புறநானூறு 25) என்ற பாடல் வரியால் இலைவடியாய வேல் என்ற பொருளில் எஃகு என்ற சொல் வந்துள்ளது. ''எடுத்தெளி எஃகம் பாய்தலின்

புக்கூர்ந்து (முல்லைப்பாட்டு 48) வரியால் எஃகு என்பது வாளைக் குறிக்கின்றது.

எஃகைக் காய்ச்சித் தண்ணீரில் அமிழ்த்துக் கடினமாக்கும் முறையைத் தமிழர் கண்டிருந்தனர். "இரும்பறக் கழுவி எஃகின் இருளற வடிக்கப்பட்ட அரும்பெறற் சுரிகை" (சீவக சிந்தாமணி 698) என்ற பாட்டினடியால் எஃகினை மறுபடியும் காய்ச்சித் துரிசு போக்கித் தூய்மையாக்கிய செய்தி தெரிய வருகின்றது.

இரும்புண் நீரினும் மீட்டற்கரிதென —புறம்-21

இரும்புண்ட நீர் மீள்கினும் என்றுழையிற்
கரும்புண்ட சொல் மீள்கிலள் காணுதியால்
—கம்ப-சடாயு-104

என்னும் இலக்கியத் தொடர்களும் இதற்குச் சான்று பகர்கின்றன.

உலகத்தில் மற்ற நாடுகளில் எஃகு இன்னதென்பது அறியாத காலத்திலேயே கொங்கு நாட்டில் எஃகினால் ஆயுதங்கள் செய்திருக்கின்றார்கள்[15] என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இரும்பு வணிகம்

தமிழர் சிற்றூர்களில் உலைக்கூடங்களில் தயாரித்த இரும்புக் கட்டிகளைச் சந்தைகளிலும், வணிகரிடத்தும் விற்றனர். தமிழகத்துக்கு வெளியேயுள்ள நாட்டினர் தமிழகத்து இரும்பையும் எஃகையும் விரும்பி வாங்கினர். 1837இல் இராயல் ஏசியாடிக் சொசைடியில் வாசிக்கப்பட்ட கட்டுரையில் "ஹீத்" என்பவர் தென்னிந்தியாவில் செய்யப்பட்ட எஃகே எகிப்து தேசத்திற்கும் ஐரோப்பாவிற்கும் அனுப்பப்பட்டது என்று காட்டினார்.[16] கி. மு. 327இல் கிரேக்க மன்னர் அலெக்சாந்தர் இந்தியாமீது படையெடுத்து வந்தபோது புருசோத்தமன் சேலம் பகுதியில் வெட்டி யெடுக்கப்பட்ட 38 பவுண்ட் எஃகையே கொடையாக அளித்தான் என்று வரலாறு கூறும்.[17]

தமிழகத்துத் தயாரிக்கப்பட்ட இரும்புக் கட்டிகள் செங்கல் வடிவிலும் கூம்பு வடிவிலும் உருக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பயன்பட்டன.[18] இங்கிருந்து பெற்ற எஃகினால் உலகப் பிரசித்தி பெற்ற "டாமாசின்" என்ற கத்திகள் ஐரோப்பாவில் செய்யப்பட்டன.[19]

உள்நாட்டில் சந்தைகளுக்கு இரும்புக் கட்டிகள் கொண்டு வந்து விற்கப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர்

வட்டம், பிரான்மலை மங்கை நாதர் திருக்கோயிலில் உள்ள சுந்தரபாண்டியன் கல்வெட்டில் ''இரும்பு, வண்டி ஒன்றுக்கு காசு உரம், இரும்பு பொதி ஒன்றுக்கு காசு 2ம், பாக்கத்துக்குக் காசு 1·ம்'' [20] என்று வருகின்ற தொடர்களால் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டிலேயே சந்தைகளில் கொண்டு வந்து விற்குமளவு உள்நாட்டில் இரும்பு வணிகம் நிகழ்ந்திருக்கின்றது என்பது தெரிய வருகின்றது.

தமிழர் இரும்பைப் பயன்படுத்திய பாங்கு

இரும்பைக் கண்டுபிடித்த நம் முன்னேர் தாம் செய்த தொழில்கள் அனைத்திற்கும் அதனைப் பயன்படுத்தினர். வேட்டையாடுதல் பயிரிடுதல் அவர்கள் கொண்ட முதல் தொழில்களாகும். வேட்டையாடுதற்சேற்ற கூரிய கருவிகளாகிய வேல், அம்பு, ஈட்டி முதலியன செய்து கொண்டனர். இரும்பை உலையிலிட்டுக் காய்ச்சி கருவி செய்தலை 'வடித்தல்' என்ற சொல்லால் வழங்கினர். வடித்தல் என்றுல் வடிவு கொடுத்தல் என்பதாம்.

''வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே''
புறம் 312

''எஃகின் இருளறவடிக்கப்பட்ட அரும்பெறற் சுரிகை''
சிவக-698

சுரிகை என்றுல் வாள் என்பது பொருள்.

இலக்கியங்கள் மட்டுமின்றி அகழ்வாய்வுகளில் பெருங்கற் காலத்து ஈமச் சின்னங்களில் பல இடங்களில் முள் கொண்ட அம்பு முனைகள், ஈட்டிகள், வேல்கள், பட்டாக்கத்திகள், வாள்கள், குறுவாள்கள் ஆகிய ஆயுதங்கள் கிடைத்துள்ளன. வேல்களில் திரிசூலத்தைப் போலவும், சூலத்தைப் போலவும் உருக் கொண்டவை குறிப்பிடத்தக்கவை.[21] பண்டைத் தமிழர் தம் தொழிலுக்குப் பயன்படுத்திய வேல் முதலிய கருவிகளையே தெய்வமாகக் கருதி வழிபட்டனர் என்பது மயிலை சினி வேங்கடசாமி அவர்களின் கருத்து. முருகன் வழிபாட்டில் வேலை வழிபடுதல் மரபாக இருப்பதை அறிவோம்.

உழவுத் தொழிலுக்குத் தமிழன் இரும்புக் கருவிகளைப் பயன்படுத்தினுன். கலப்பைகளில் கொழுக்கம்பிதனைச் சொருகி உழத் தொடங்கினுன்.

பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
உடும்புமுகம் முழுகொழு மூழ்க ஊன்றி
(பெரும்பாண் 199-200.)

இரும்புக் கருவிகளைக் கொண்டு வண்டிக்கு வேண்டியன செய்துள்ளான்.

''கூருளி பொருத வடுவாழ் நோன்குறடு''- சிறுபாண்.253. வளைந்த அரிவாள் கொண்டு நெல்லரிந்த காட்சியைப் பொருநராற்றுப்படை ''கூனிக குயத்தின் வாய் நெல்லரிந்து'' என்று கூறுகிறது. குயம்-அரிவாள். தாங்கள் வளர்த்த விலங்குகளின் மயிரைக் கத்தரிக்கக் கத்தரிகையைப் பயன்படுத்தியுள்ளனர். ''மயிர்குறைக்கருவி மாண்கடையன்றி'' என்பது பொருநராற்றுப் படை.

ஏராளமான வேளாண்மைக் கருவிகள் இரும்பினால் செய்யப் பட்டன. மண்வெட்டிகள், கொத்துகள், பட்டையான கோடாரிகள், கடப்பாறைகள், அரிவாள்கள், இரும்புக்கொத்தளங்கள் ஆகியன குறிப்பிடத் தக்கவை.[22] இரும்புக் கொத்தளங்கள் கொண்டு கிணறுகள் தோண்டியிருக்கின்றனர். ''பொன் செய்கனிச்சி திண் பிணியுடைத்து'' என்பது பதிற்றுப்பத்து 22 ஆம் பாடல். இரும்பைத் தகடாக்கிப் பல வேலைகள் செய்துள்ளனர். ''இரும்பு வடித்தன்ன மடியா மென்தோல்'' என்ற பெரும்பாணாற்றுப் படையடியால் தோல் போல் மெல்லியதாக இரும்புத் தகடுகளைச் செய்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

வீட்டில் வைக்கும் விளக்குகளை இரும்பினால் செய்துகொண்ட மாட்சியை ''இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ'' என்று நெடுநல் வாடை (43) கூறுகிறது. மயிர்களைய எஃகினால் கூரிய கத்திகளைச் செய்து கொண்ட சிர்மையை ''எஃகு அமை இருப்பின் நீரளந்தூட்டிய நிறையமை வாளிலினை'' என்ற பெருங்கதை யடியால் உணரலாம்.

சேரர் காலத்து இரும்புக் காசுகள் சிறிது நீண்ட சதுரவடிவில் ஒரு பக்கம் யானை உருவமும், மறுபக்கம் பனம்பூ வேலைப்பாடும் அமைந்ததாகக் கிடைத்துள்ளன. கிடைத்த காசுகளுள் சேரர் காலத்துக் காசுகளே இரும்புக் காசுகள்.[23]

ஏழு நூறு ஆண்டுகளுக்கு முன் பவானியாற்றின் குறுக்கே கட்டப்பட்ட காளிங்கராயன் அணையில் கற்களில் துளையிட்டு இரும்பு முளைகளைச் சொருகி ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி இணைத்துள்ளனர்.[24]

தமிழர் இரும்பிற் செய்த போர்க்கருவிகளுக்கு அளவில்லை. மதுரைமாநகர் மதிலிடத்தே இருந்த இயந்திரக் கருவிகள் பல

இரும்பினுற் செய்யப் பட்டவை என்பதைச் சிலப்பதிகாரத்தால் உணரலாம். கி. பி. 17ஆம் நூற்றுண்டில் கம்மத்தான் காச்சாகிபு, மார்ச்சண்டு என்ற டச்சுக்காரன் உதவியோடு பிரங்கி செய்ததாக அறிகிருேம்.[25]

கட்டுரை துணிபு

இக்கட்டுரையில் இதுவரை ஆய்ந்தவற்றிலிருந்து தென்னிந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு இரும்பு மக்களால் பயன்படுத்தப்பட்ட பாங்கினையும், சுமேரிய, மெஸபடோமிய மக்களுக்குச் செம்பும், வெண்கலமும் எங்ஙனம் பயன் பட்டதோ அவ்வண்ணமே தமிழர் வாழ்வில் இரும்பு பயன்பட்டது என்பதனையும், இரும்பின் பயனை அறிந்து உலகிற்கு இரும்பை அறிமுகப் படுத்தியவன் தமிழன் என்பதனையும், அவர் வாழ்வில் இரும்பு எவ்வாறெல்லாம் பயன்பட்டது என்பதனையும் அறிகிருேம். தமிழர் நாகரிக வாழ்வினை அறியும் சின்னமாக இரும்பு இருக்கிறது.

குறிப்புகள்

1 டாக்டர் ஏ. ஐயப்பன், ஆதி மனிதன், முன்னுரை.
2 இர்விங்-அன்னுகோல்டுமேன், ஆதி மனிதன், தமிழ்நாட்டு வரலாறு, ப. 109
3 டாகடர் இரா. நாகசாமி, தமிழ்நாட்டு வரலாறு—தொல்பழங்காலம், ப. 200
4 சங்க காலத்துக்கு முன், . ம. ரா. போ. குருசாமி, ப. 85
5 The Stone Age in India, p 48
6 சங்க காலத்துக்கு முன், ப. 86
7 தமிழ்நாட்டு வரலாறு-தொல்பழங்காலம், ப. 203
8 கே. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் நூலின் வரைபடம்.
9 Allchin F. R., Birth of Indian civilization, Burial complex of south India.
10 கோவை மாவட்ட வரலாற்றுக்கருத்தரங்கு, கொடுமுடி க. சண்முகம் கட்டுரை
11 கொங்கு 1974 பிப்ரவரி இதழ்.
12 Thomas Holland, Iron ore and industries of Salem Dt.
13 புலவர் குழந்தை, கொங்கு நாட்டு வரலாறு, ப. 100
14 கலைக்களஞ்சியம், இரண்டாம் தொகுதி, ப. 86
15 சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், கொங்குநாட்டு வரலாறு. ப. 126
16 கலைகளஞ்சியம், தொகுதி 2, ப. 86
17 அ. இராசேந்திரன், சேலம் மாவட்டத்தின் கோயில்கள், ப. 13

18 கலைக்களஞ்சியம், தொகுதி 2, ப. 86

19 Salem District Gazeteer, Part III, p. 27

20 SII, viii, 437

21 டாக்டர் இரா. நாகசாமி, தமிழ்நாட்டு வரலாறு தொல்பழங்காலம்—பெருங்கற் காலம், பக். 220—221.

22 Ibid.

23 Coins of South India, Walter Elliot

24 ஈரோடு. புலவர் செ. இராசு, காளிங்கராயன்.

25 கான்சாகிப் சண்டை, ப. 56.

இலுப்பை

ச. செங்கல்வராயன்

இலுப்பை கிராமங்களில் பரவலாகக் காணப்படுகின்ற ஒரு புன்செய்ப் பயிராகும். இத்தாவரம், இருப்பை, குலிகம், மதுகம் என்னும் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. இதைத் தாவர நூல்கள் 'Bastia Longi Folia என்று கூறும்.

கி. மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட சங்க நூல்களான அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் இலுப்பையின் பல்வேறு குணங்கள் பற்றியும், தன்மைகள் பற்றியும் சிறப்பான குறிப்புக்கள் காணப்படுகின்றன.

தமிழகத்தின் ஆலயங்களில் உள்ள கல்வெட்டுக்களில் இலுப்பை மரம் குறித்தும், இலுப்பை எண்ணெய் குறித்தும், இலுப்பை நெய் குறித்தும், இலுப்பை மரங்கள் எல்லைகளாக அமைந்தமை குறித்தும், இலுப்பைக்கும் மருத்துவத்திற்கும் உள்ள தொடர்பு குறித்தும், இலுப்பை மரங்கள் நிறைந்துள்ள இடங்கள் குறித்தும் அரிய குறிப்புக்கள் காணக் கிடைக்கின்றன.

இந்தியாவில் தோன்றிய ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி மருத்துவம் ஆகிய பல்வேறு மருந்துவப் பிரிவுகளில் இலுப்பையும், அதனைச் சார்ந்த பொருட்களும் மூலப் பொருட்களாகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன.

இலுப்பையின் பயன்கள்

இலுப்பை தமிழக மக்களின் வாழ்விலும், சமய வழிபாட்டிலும் அரிய தொண்டு புரிகின்றது. இதிலிருந்து கிடைக்கும் நெய், எண்ணெய், பால், பூ, பட்டை, வேர் ஆகியவை பல்வேறு மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகின்றன. மருத்துவக்குணம் கருதி இதன் எண்ணெயைச் சமையலுக்கும் முற்காலத்தில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இலுப்பை எண்ணெயால் எரிக்கப்படும் விளக்கின் சுடர் ஒளி மிகுந்தும், அதே சமயத்தில் குளிர்ச்சியுடனும் இருக்கும். எனவே

தான் கோயில்களில் நொந்தா விளக்கு, சந்திவிளக்கு, நிலைவிளக்கு, அன்னவிளக்கு, பாவை விளக்கு போன்றவற்றை ஏற்றி வைக்க இலுப்பை எண்ணெயையும், நெய்யையும் பயன்படுத்தி யிருக்கிறார் கள். வீடுகளிலும் விளக்கெரிக்க இலுப்பை எண்ணெயைப் பயன் படுத்தினர்கள். ஆனல் காலம் செல்லச்செல்ல மண்ணெண்ணெயும், மின்சாரமும் பயன்பாட்டுக்கு வரவர இலுப்பெண்ணெயின் பயன் குறைந்துவிட்டது.

மேலும் பண்டைய மக்கள் சர்க்கரைக்குப் பதிலாக இலுப்பைப் பூவை உலரவைத்துப் பயன்படுத்தி வந்தார்கள், அதனை யொட்டியே, ''ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை என்ற பழமொழி வழங்கலாயிற்று.

இதன் மருத்துவக் குணங்கள் எண்ணிலடங்காதன. இலுப்பை எண்ணெய் உடல் வீக்கத்தைக் குறைக்கும். இலுப்பைப்பூக் கசாய மும், மரப்பட்டைக் கசாயமும் இதன் வேரின் கசாயமும் பல்வேறு நோய்களைத் தீர்க்கவல்லன. இலுப்பைப் பிண்ணுக்கு கரப்பான் போன்ற நோய்களைத் தீர்க்கவல்லது. மாடுகளுக்கு வரும் கழுத்து வீக்க நோய்களைத் தீர்க்கப் பயன்படுகிறது. இலுப்பைப் பிண்ணுக் கில் சபானின் என்ற விஷப்பொருள் இருப்பதால் கால்நடைத் தீவனமாக இது பயன்படுத்தப் படுவதில்லை.

மேற்கண்ட பயன்களைத் தவிர, இலுப்பை எண்ணெயும், நெய் யும் சோப்பிற்குப் பதிலாகவும், மெழுகு செய்யவும் பயன்படு கின்றன. இதன் பூவிலிருந்து சில பகுதிகளில் சாராயம் காய்ச்சு கிறுர்கள். மரச்சாமான்கள், குறிப்பாக தேர் செய்ய இலுப்பை மரம் பயன்படுகிறது.

கல்வெட்டுக்களில் இலுப்பை

ஆலயங்களில் நந்தவனங்கள் அமைக்கும்போது அதில் இடம் பெற்ற மரங்களில் இலுப்பையும் ஒன்று. எனவே ஆலயத்திற்குப் பயன்படும் மரங்களில் இதுவும் ஒன்ருக விளங்கியது. இதைப் பற்றிக் கல்வெட்டுக்களில் மிகுதியாகக் குறிப்புக்களைக் காண்கிறோம்.

இது காட்டுப் பகுதிகளில் அடர்ந்து வளர்ந்தது என்பதைக் காளையார் கோயில் கல்வெட்டுக் காட்டுகிறது. இக் கல்வெட்டில் இலுப்பை மரம் 'வனமரம்' என்றே குறிப்பிடப்படுகின்றது.

இலுப்பைப்பூ இனிக்கும் தன்மையுடையது என்பது மற்ருெரு கல்வெட்டில் 'தேனிலுப்பை' என்று குறிக்கப்படுவதால் அறிய வருகிறது. இலுப்பை மரம் பெரும்பாலும் ஏரி, குளம், வாய்க்கால்

போன்ற கரையோரங்களிலேயே வளருகின்றது. தொழுப்பேடுக் கல்வெட்டொன்று குளக்கரையிலிருந்த இலுப்பைத் தோப்பை ஒருவர் கோயிலுக்குத் தானமாக கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் கோயிலில் நுந்தா விளக்கு, சந்தி விளக்கு போன்றவை யெரிக்க இலுப்பை மரங்கள் நிறைந்த தோப்புகள் கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்டதை அறிவிக்கின்றன.

இது ஒரு 'பணப்பயிர்' போலப் பயிர் செய்யப்பட்டது என்பதை வடாற்காடு மாவட்டத்திலுள்ள மேல்பாடிக் கல்வெட்டொன்று 'இலுப்பை கழனிக்கு நீர் பாய்ந்த வாக்கால்' எனக் குறிப்பதிலிருந்து அறியலாம்.

பாண்டியன் சடாவர்மனின் காளையார்கோயில் கல்வெட்டொன்று இலுப்பையைப் பயிர் செய்வோர் மூன்றில் ஒரு பங்கு வரி செலுத்த வேண்டும் என்று குறிப்பதிலிருந்து இது ஒரு பணப்பயிர் தான் என்பது உறுதிப்படுகிறது. அதிகமான அளவில் இலுப்பைத் தோப்பை உடைமையாகக் கொண்டவர்கள் இலுப்பை மரக்கிழான் என்று குறிக்கப்படுகின்றனர்.

மேலும் வரிவிதிப்புக்குட்பட்ட இந்த இலுப்பைக் காணிகள் வரி நீக்கம் செய்யப்பட்டு வாசுதேவ நாராயணன் என்பவருக்குத் தானமாக அளிக்கப்பட்டதையும், அதிலிருந்து கிடைக்கும் மருத்துவக் குணம் நிறைந்த இலுப்பை எண்ணெயை அவர் கோயிலுக்கு அளித்ததையும் அதே ஊர்க் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதிலிருந்து கோயில்களில் மருத்துவம் பார்க்கப்பட்டது என்பதையும் அதற்கு இலுப்பை எண்ணெய் பயன்பட்டது என்பதையும் இலுப்பை எண்ணெய்க்காக மன்னர்கள் இலுப்பைத் தோப்புக்களை வரி நீக்கி மருத்துவர்களுக்குத் தானமாக அளித்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

ராமநாதபுரம்மாவட்டத்தில் பெரும்பாலும் நிலத்திற்கு எல்லை வகுக்கும்போது எல்லைக்கல்லிற்குப் பதிலாக இலுப்பை மரங்களையே பயன்படுத்தினர்கள் எனபதையும் கல்வெட்டுகள் நமக்கு அறிவிக்கின்றன.

ஊரும் பேரும்

தமிழ்நாட்டில் பனை, புன்னை, மருதம், கடம்பு, நாவல் ஆகிய மரங்களின் அடியாகப் பிறந்த ஊர்ப்பெயர்கள் முறையே பனையூர், புன்னைநல்லூர், மருதூர், கடம்பூர், நாவலூர் என வழங்கப்படுகின்

றன. இவற்றைப் போலவே இலுப்பை மரத்தை அடியாகக் கொண்டு பிறந்த ஊர் இலுப்பைக்குடி என வழங்கப்படுகிறது. தற்போது இவ்வூர் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது.

இதைப் போலவே ஒரு குளத்திற்கு இலுப்பைக்குளம் என்றும், ஒரு கிணற்றுக்கு இலுப்பைக் கேணி என்றும் ராமநாதபுரத்தில் பெயர் வழங்கப்படுகிறது.

ஊர், குளம், கிணறு மட்டுமின்றி இருப்பைக்கிழான் என்ற ஒரு பெயரும் கல்வெட்டில் காணப்படுகின்றது. ராமநாதபுரத்தில் பல்வேறு பாசன வாய்க்கால்களையும், ஏரிகளையும் வெட்டியவரும், தமிழிற்கு அருந்தொண்டாற்றியவனுமாகிய ஒருவர் இருப்பைக்குடி கிழவன் என்று அழைக்கப்பட்டதையும் அறிகிறோம்.

இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களில் இலுப்பைப்பூ, பழம், இலுப்பை மரம் முதலியவை பரவலாகப் பேசப்படுகின்றன.

இருப்பை என்னும் ஊரைப்பற்றியும், அது வேளுன் என்பவனுக்குச் சொந்தம் என்பதையும் ஓரம்போகியார் ஐங்குறுநாற்றில் குறிப்பிடுகிறார். அவ்வாறே பரணர் நற்றிணையில் இரு இடங்களில் இருப்பை என்னும் ஊரைப்பற்றிக் குறிப்பிடுகிறார். நற்றிணையில் இலுப்பைப்பூ இறால்மீனின் தலைக்கு ஒப்பிடப்படுகிறது.

அகநானூற்றில் ஓர் அழகுக்கோலம் தீட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலுப்பைப் பூக்கள் செம்மண் நிலத்தில் விழுந்து கிடக்கும் காட்சி, குருதி வெள்ளத்தில் கொழுப்பு மிதப்பதாக இருக்கிறது என அந்த ஓவியம் சித்திரிக்கிறது.

மேலும் கரடிக் கூட்டம் இலுப்பைப் பூவை விரும்பி உண்ணும் என்னும் செய்தியையும், அவை இலுப்பையை வெறுத்துப் புற்றீசலை நாடிச்செல்லும் செய்தியையும் அதே அகநானூறு கூறுகிறது. நற்றிணைப்பாடல் ஒன்று வௌவால்கள் இலுப்பையை வெறுத்து வேம்பின் பழத்தை விரும்பி உண்ணும் என்று கூறுகிறது.

இவ்விலுப்பை இலக்கியங்கள் முழுவதிலும் பாலைநில வர்ணனைகளிலேயே இடம் பெறுகின்றன. கல்வெட்டுகளிலும் மிகுதியாக இராமநாதபுரம் மாவட்டத்திலேயே குறிப்புகள் காணப்படுவதால் இது பாலை நிலப்பயிரே என்றும், அங்கிருந்தே பிற இடங்களுக்குப் பரவியது என்றும் கொள்ளலாம்.

இவ்விலுப்பை, நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் முதலியவற்றிலும் பேசப்படுகின்றது. தமிழ்நாட்டு விடுகதைகளில் ஒன்று கீழ்க்கண்டவாறு வினாத் தொடுக்கிறது.

சஞ்சல சலசல
சலநீர் விழவிழ
விழுந்தால் வெளுக்கும்
வெய்யில் பட்டால் சிவக்கும்
வருத்தால் மணக்கும்
வாயில் போட்டால் தித்திக்கும்
அது என்ன?

இலுப்பைப்பூ.

நிறுத்தலளவைகளும் முகத்தலளவைகளும்

ச. ஹரிஹரன்

எந்த ஒரு நாட்டின் பொருளாதாரமும் முற்றிலும் நிறுத்தலளவை, முகத்தலளவை எனப்படும் இரண்டு முக்கிய அடிப்படை அளவுகளின் ஸ்திரத் தன்மையைப்பொறுத்தே உள்ளது. இந்த இரண்டு அளவுகளும் பெயராலும் அளவாலும் நாட்டுக்கு நாடு, ஆட்சிக்கு ஆட்சி மாறுபடுகின்றன. நிறுத்தலளவை முகத்தலளவைகளில் கையாளப்பட்டுள்ள முறைகள் வித்தியாச மாகவும், பலவேறு வகைப்பட்டவைகளாகவும் உள்ளன. இந்த ஒரு ஆய்வு தன்னுள் முற்றுப் பெருத ஒரு ஆய்வு அல்லது முயற்சி யாகும். பல்லவர்கள் மற்றும் சோழர்கள் காலத்தில் நடை முறையில் இருந்து வந்த நிறுத்தல், முகத்தலளவைகள் அறிஞர் களின் கவனத்தை ஈர்க்கக் கூடியனவாக உள்ளன. வரலாற்றுக் காலங்களில் உபயோகப்பட்ட அளவைகள் கண்டெடுக்கப்பட்ட பின்னர் அவைகளின் உருவம், அளவில் வேற்றுமை இருப்பினும் அவைகளுக்குள் ஒற்றுமையும் நிறையக் காண முடிகிறது.

விவசாயத்திற்கு நிலங்களை அளக்கப் பயன்படுத்தப்பட்ட நீள அளவைகளும் ஆலயங்கள், அரண்மனைகள் உருவாக்கப் பயன்பட்ட நீள அளவைகளும், நெல், தானியங்கள் மற்றும் எண்ணெய் ஆகிய வற்றை அளக்கப் பயன்பட்ட கன பரிமாண அளவைகளும், பாத்திரங்கள் மற்றும் தங்கம். வெள்ளி ஆபரணங்களின் எடையைக் கண்டறிய உதவிய எடைகளும் முக்கியப் பங்கு பெறு கின்றன.

பல்லவர் காலம்

கலப்பை, நிவர்த்தனம், பட்டிகா, படாகம் எனப்பட்ட நான்கு விதமான நில அளவைகள் பல்லவர் ஆட்சிக் காலத்தில் நடை முறையில் இருந்து வந்துள்ளன.[1]

கலப்பை

உழவர்கள் தங்கள் நிலத்தை உழுவதற்கு, ஒரு குறிப்பிட்ட சில நேரத்திற்கு (அ) காலத்திற்கு, இரண்டு எருதுகள் ஒன்று சேர்த்து இழுக்கச் செய்ய கலப்பை பயன்படுத்தப்பட்டது.[2]

நிவர்த்தனம்

நிவர்த்தனம் என்பது ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட இடத்தி லிருந்து புறப்பட்டு, குறிப்பிட்ட நேரத்திற்குள் தான் புறப்பட்ட இடத்தை அடையும் நேரத்தில் அவன் எவ்வளவு தூர நிலத்தைக் கடந்தானோ அதன் அளவே இதுவாகும். இந்த நிவர்த்தனம் அளவை கங்கை நாட்டில் சில குறிப்பிடப்படாத இடங்களில் கூட இருந்து வந்துள்ளது.

இந்த நிவர்த்தன அளவானது பின்னர் 200 ச. முழ (1 முழம்=18'') நிலத்திற்குச் சமமானதாக வரையறுக்கப்பட் டுள்ளது.

பட்டிகா

ஆப்பு ஒன்றில் கயிற்றின் மூலமாகக் கட்டப்பட்டுள்ள ஆடா னது மேயும் நிலத்தின் அளவே பட்டிகா எனப்பட்டது.

படாகம்

பயிர் செய்யத் தக்க நிலையில் உள்ள நிலத்தின் பகுதி படாகம் என்றழைக்கப்பட்டது.

> பரமேசுவர வதியின் கீழ்க் கூறின் தெற்கு
> ஏரிக்காக வைத்த ஐந்து படாகமும்[3]

கம்பவர்மனின் கல்வெட்டுக்களிலிருந்து படாகம் என்பது 240 குழிகள் நிலத்திற்குச் சமமானதெனத் தெரிய வருகின்றது.[4] படாகம் நிலத்தைப் பெற்றோர், தங்கள் பெயருக்கு முன்னால் படாகத்தைச் சேர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.

> (உ.ம்.) பாடகம் மதுரபூமி சடங்கவி சமயாஜி
> பாடகம் சுவாமிதேவி சடங்கவி[5]

பிற்காலக் கல்வெட்டுகளிலும், தாமிரத் தகடுகளிலும் 'வேலி' 'குழி' எனப்படும் சொற்கள் நடைமுறைப் பேச்சு வாக்கில் இடம் பெற்றிருந்ததை அறிகிறோம். பல்வேறுபட்ட நாடுகளிலும் ஆட்சி களிலும், ஒரு குழி நிலமானது அளவில் 144 ச. அடி முதல் 576 ச. அடி வரை வேறுபட்டிருந்ததைக் காண்கிறோம்.[6] நிர்பதுங்கர் காலத்தில் ஒரு குழி என்பது 81 ச. அடி எனப்பட்டது.[7]

நிலங்களை அளப்பதற்குப் பலவகையான கோல்களும், கம்புகளும் பயன்படுத்தப்பட்டனவென்பதற்கு நளுசன் கோல்,[8]

பன்னிருசன் கோல் [9] படினன்சன் கோல் ஆகியவை சான்று பகரும். கங்கை நாட்டில் நீள் அளவுகள், வரிசைக்கோல், கங்கை கோல், பெருந்த கோல், மருகுந்தி கோல், சச்சவை கோல் என்றழைக்கப்பட்டன.[10]

கன பரிமாணங்களை அளக்கப் பல்வேறுபட்ட நாழிகள் உபயோகப்படுத்தப்பட்டன. அவை கருநாழி, நால்வா நாழி, மாராய நாழி, பிளையாநாழி, நாரா நாழி என்பனவாகும். திருவொற்றியூரில் அரிசி கரு நாழியால் [11] அளக்கப்பட்டது. நால்வா நாழி டெல்லம் நந்தி[12] கல்வெட்டிலும், செங்கற்பட்டு மாவட்டதில் நிர்பதுங்கர் கல்வெட்டில் மாராய நாளியும் குறிப்பிடப்பட்டுள்ளன.[13] தஞ்சை மாவட்டத்தில் [14] அதேஅரசனின் காலத்திய கல்வெட்டில், பிளைய நாழி இடம் பெற்றுள்ளது. உரி என்பது மற்றொரு கனபரிமாண அளவையாகும். உரி பிருதிவி மாணிக்கம் என்பது நிர்பதுங்கர் அரசியாரின் பெயரால் அழைக்கப்பட்டது. விடேல் விடுகு உழக்கு என்பது மற்றொரு அளவையாகும். 'பிடி' எனப்படும் சிறிய அளவையானது எண்ணெய், நெய், பால் ஆகியவற்றை அளக்கப் பயன்படுத்தப்பட்டது. நெல் மற்றும் தானியங்களை அளக்க சோடு, நாழி, மரக்கால், பதக்கு, குருணி, கடி, கலம் என்பன போன்ற பல வகைப்பட்ட கன பரிமாண அளவைகள் பயன்படுத்தப்பட்டன. திருவையாற்றில்,[15] தெள்ளாற்று நந்தி காலத்தில், ஒரு ஆழாக்கு மார்த்தாண்டம் என்னும் பெயரில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

பொதுவாக கழஞ்சு, மஞ்சாடி என்ற எடைகள் ஆபரணங்களை எடை போடவும் முன்னது முழுமையாகத் தங்கத்தை எடை போடவும் பயன்பட்டன. மஞ்சாடி என்பது 1/20 கழஞ்சுக்குச் சமமாகும். அது தங்கக் கழஞ்சுவில் ஏற்படும் (அ) கிடைக்கும் வட்டியைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது.

சோழர் காலம்

எடைகளை ஒரே அளவுள்ளவைகளாக அமைத்தும், தங்க நாணயங்களின் தரம் ஒன்றாக இருக்கும்படி செய்தும் அங்கு பல வகைப்பட்ட அளவுகளும், கலவைகளும் (உலோகங்களில்) நிலவியே வந்துள்ளன. இதனால் நிறுத்தலளவை, முகத்தலளவைகளில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள ஸ்திரத் தன்மை அழிந்து கொண்டு வந்துள்ள தெனக் குறிக்காது. குமார வயலூரிலுள்ள ஆதித்யன் காலத்திய கல்வெட்டொன்று விடேல் விடுகு கல்லின்[16] உபயோகத்தைக் கூறுகின்றது. தஞ்சாவூரிலுள்ள இராஜராஜனின் கல்வெட்டுக்கள் ஆடவல்லன், தட்சிணமேரு விடங்கை எனப்படும்

இரு வேறு அளவைகளைப் பற்றிக் கூறுவதுடன், முன்னது தங்கத்தை எடை பார்க்கவும், பின்னது நகைகளை எடை பார்க்கவும் பயன்படுத்தப்பட்டதாகக் கூறுகின்றன. தஞ்சாவூருக்கு வெளியே திருவாரூரில்[17] இராஜராஜன் காசை எடை போட உபயோகப் படுத்தப்பட்ட கல்லையும், திருமாலவாடியில் வையகத்தார் கோலையும், திருச்செந்துறையில்[19] விடேல் விடுகு கல்லையும், தடிமன்றிலில்[20] பனுவூரையும்[21] கெம்போ நாகரசுமினையையும், ஸ்ரீ காந்த்ர சதுர்வேதிமங்கலம்[22] என்னும் கிராமத்தில் பயன் படுத்தப்பட்ட கல்லையும் நாம் சாதாரணமாகக் காணலாம். எடை போடும் முறையானது கழஞ்சு என்பது 20 மஞ்சாடிகளாகப் பிரிக்கப்படும் முறையைப் பின் பற்றிய போதிலும், ஒரு மஞ்சாடி இரண்டு குருணிக்குச் சமமாக இருப்பினும், பல்வேறுன இந்த அடிப்படை எடைகளின் அலகு வெகு எளிதில் கண்டுபிடிக்க முடியாதனவாக உள்ளன.

வெவ்வேறு இடங்களில் வெவ்வேறுன அலகுகள் நிலம், திரவம், தானியம் ஆகியவற்றை அளக்க உபயோகத்திலிருந்து வந்துள்ளன. வாடிகாவின் தாமிரத்தகடுகளில் உள்ள சமஸ்கிருதப் பகுதி தமிழில் நில அளவானது நிலம் (அ) வேலி எனப்பட்டதாகக் கூறுகின்றது. அது 1 2,1 4,1 8,1 20,1 80,1 320 எனும் பாகமாகவும், அடிப்படை, நடுத்தர, மூன்றுந்தர (அ)முடிவான வரிசைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.[23] அப்படி உபயோகிக்கப்பட்ட கம்பின் (கோல்) நீளமானது. 12 சாண் கோல்,[24] [1சாண் =9'') 14 சாண் கோல்,[25] 16 சாண் கோல்,[26] 20 சாண் கோல்[27] ஆகிய பலவகையான அளவுகளிலிருந்து கம்பின் நீளம் வரையறுக்கப் பட்டது. கடைகைகலத்துக் கோல்,[28] ஸ்ரீ பாதகோல்,[29] மளிகைகோல்,[30] திருவையாற்றில் உலகளந்த கோல் பயன்படுத்தப்பட்டது.[31] ஆகையால் குழியின் அளவானது, அளக்க உதவும் கோலின் நீளம், குழிகளின் எண்ணிக்கைப்படி உள்ள மா அல்லது சேர் எனப்படும் அளவையினின்று மாறுபட்டது. தென் ஆற்காடு மாவட்டம் குணுவிலுள்ள ராஜேந்திரன் 1 இன் 6வது வருடத்திய கல்வெட்டு 1மா நிலமானது 16 சாண் கோலினுல்[32] அளக்கப்படும் 256 குழிக்குச் சமமானதெனக் கூறுகிறது. தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறையில் 1 மா என்பது மளிகைக் கோலால்[33] அளக்கப்படும் 100 குழிக்குச் சமமானதாகக் கருதப்பட்டது. இது போன்றே 1மா என்பது 16 சாண் கோலினுல் அளக்கப்படும் 200 குழி நிலத்திற்குச் சமமானதெனத் திருவட்டூர் ராஜேந்திரன் 1 இன் 18 வது வருட ஏடுகள் கூறுகின்றன.[34]

இப்படிப்பட்ட பல்வேறுன அளவைகள் வெவ்வேறுன இடங்களில் உபயோகப்படுத்தப்பட்ட திரவ மற்றும் தானிய

அளவைகளையும், நடைமுறையில் இருந்த பலவகைப்பட்ட நாழிகளையும் மரக்கால்களையும் குறிக்கின்றன. தஞ்சையின் இராஜராஜன்[35] காலத்திய கல்வெட்டு ஒரு மரக்கால் ஆடவல்லான் என்பது இராஜகேசரிக்குச் சமமானதெனத் தெரிவிக்கின்றது. (ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லான் எனும் மரக்காலால்). அதே அளவையானது ராஜேந்திரன், ராஜாதிராஜன் ஆட்சிக் காலங்களில் அருள்மொழித் தேவன் என்றழைக்கப்பட்டது. திருவாமாத்தூரின் ராஜராஜன் 1 இன் 26 வது வருடத்திய கல்வெட்டு ஒன்று ராஜகேசரி, விதிவிடங்கன் ஆகிய அளவ்வைகளுக்குள் உள்ள வித்தியாசங்களைத் தெரிவிக்கின்றது. ராஜகேசரிக்கு[36] பதிலாக விதிவிடங்கன் மூலம் அளந்ததால் கூடுதலான (அதிகமான) நெல் விடப்பட்டதெனவும் அது கூறுகின்றது. ராஜகேசரியுடன் வீதிவிடங்கனை ஒப்பிடுவோமேயானால் பின்னது முன்னதைவிடச் சிறிய அளவை என்பது தெரிகின்றது. செங்கற்பட்டு மாவட்டத்தில்[37] கோமளம், கச்சிப்பேடு நின்றான் என்னும் அளவைகள் இருந்து வந்துள்ளன. பராந்தகன் 1 ஆட்சிக் காலத்தில் நாமக்கல் தாலுகா அரப்பலிஸ்வரர் கோயிலில் நெல் திருவெள்ளரிக்கனம்[38] எனும் அளவையால் அளக்கப்பட்டது. இராஜேந்திரசோழன் 1 இன் 8வது ஆண்டு தஸ்தாவேஜு நெல் அளக்க இலக்குவன் மரக்கால் பயன்படுத்தப்பட்டதைக் குறிப்பிடுகின்றது.[39]

பின்வரும் அட்டவணை, திருவையாறு உலோமகாதேவீஸ்வரம் கல்வெட்டில் நீள, பரிமாண அளவுகளைப்பற்றிக் கூறப்பட்டுள்ளதாகும்.[40]

நீள அளவுகள்

100	குழி	=	1 மா
2000	குழி	=	1 வேலி
20	மா	=	1 வேலி (அ) 1 நிலம்

கன பரிமாண அளவுகள்

8	நாழி	=	1 குருணி
4	குருணி	=	1 தூணி
3	தூணி	=	1 கலம்

குறிப்புகள்

1 பல்லவர் வரலாறு, மா. இராசமாணிக்கனார், ப. 240

2 Ibid

3 80 of 1898

4 5 of 1898, 11 of 1898
5 தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், கே. கே. பிள்ளை, ப. 239
6 பல்லவர் வரலாறு, மா. இராசமாணிக்கனார், ப. 240.
7 Ibid p. 241
8 7 of 1898
9 33 of 1900
10 Vide Ganges of Talakkad, p. 144
11 162 of 1912
12 283 of 1901
13 404 of 1905
14 22 of 1930
15 திருவையாறு, ச. இராசகோபாலன், ப. 118
16 141 of 1936
17 680 of 1919
18 1 of 1920
19 316 of 1903
20 353 of 1918
21 491 of 1911
22 100 of 1892
23 Colas, K. A. N. Sastri, p. 621
24 104 of 1923
25 229 of 1910
26 261 of 1902
27 413 of 1922
28 160 of 1921
29 287 of 1900
30 99 of 1914
31 திருவையாறு, ச. இராசகோபாலன், ப. 118
32 261 of 1902
33 102 of 1925
34 18 of 1924
35 401 of 1921
36 21 of 1922
37 ARE 1911 Para 21
38 SII, i, 40
39 SII, v, 263
40 156 of 1918

தமிழகத்தில் அடிமைகள்

நா. மார்க்சிய காந்தி

மக்கள் சமுதாய வளர்ச்சியில் ஆண்டான், அடிமை என்று தனியாகக் குறிப்பிடப்பட்ட காலம் ஒன்று இருந்தது என்பது வரலாற்றறிஞர் முடிவு. மெசபடோமிய, கிரேக்க, ரோம நாகரிகத்தில் அடிமைப் பாகுபாடு உச்ச நிலையில் இருந்தது என்பது அனைவருமறிந்த உண்மை. தமிழகத்தில் அத்தகைய நிலையொன்று இருந்ததா? தனியாக அப்படிப்பட்ட ஒரு நிலை இல்லாவிட்டாலும், சிற்சில மாறுபாட்டு அம்சங்களுடன் அடிமைகள் இருந்தனர் என்பது உண்மை. அந்தக் கருத்தைச் சற்று விரிவாக ஆய்கிறது இக்கட்டுரை.

கல்வெட்டுச் சான்றுகளின் காலம்

முதன்முதலாக அடிமைகள் பற்றியக் குறிப்பைத் தரும் கல்வெட்டு கி.பி. 948 ஆம் ஆண்டைச் சார்ந்தது. இது தன் அடிமைப் பெண்கள் மூவரைத் திருக்கற்றளிப் பரமேஸ்வரர் கோயிலுக்கு நந்திவர்ம மங்கலத்து மத்தியஸ்தன் கொடுத்ததைக் குறிப்பது.[1] கிடைத்துள்ள கல்வெட்டுக்களுள், செஞ்சிநாயக்கர் சூரப்ப நாயக்கர் கி.பி. 1568இல் காஞ்சி காமாட்சி கோயிலுக்கு நந்தவனஞ் செய்வோரை அடிமைகளாகக் கொடுத்தது காலத்தால் பிந்தியது.[2] இடைப்பட்ட காலத்தில் அடிமைகள் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக உள்ளன. இக்குறிப்புக்கள் இரண்டாம் இராஜாதிராஜனில் தொடங்கி மூன்றும் இராஜராஜன் வரை (11, 12 ஆம் நூற்றுண்டுகள்) மிக அதிக அளவில் கிடைக்கின்றன. எனவே இதனைத் தமிழகத்தைப் பொறுத்தவரை அடிமைகள் நிறைந்த காலம் எனலாம். இக்காலத்தில் தஞ்சை மாவட்டம் திருக்கொருக்கை வீரட்டானத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்-பெண் அடிமைகளின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.[3]

அடிமைகள் யார்யார்?

அடிமைகளில் ஆண்களும் பெண்களும் உண்டு. வேளான் மகன் ஒருவன் அடிமையாக இருந்திருக்கிறுன்.[4] கல்தச்சன் ஒருவன் அடிமையாக வாங்கப் பட்டிருக்கிறுன்.[5] அந்தணரும் அடிமையாகத் தம்மை விற்றுக் கொண்டிருக்கின்றனர்.[6] தேவரடியார்களை அடிமையாக விற்றிருக்கின்றனர்.[7] இடைக்குடி மக்கள் காலம் கால

மாக அடிமையாக இருந்தனர்.[8] தொழிலாளர்கள், நெல் குத்தும் பெண்கள்,[9] நிலத்தைத் திருத்திப் பண்படுத்தும் நந்தவனக் குடிகள்,[10] பறை கொட்டும் உவச்சர்[11] ஆகியோர் அடிமைகளாக இருந்திருக்கின்றனர்.

அடிமைகளின் உரிமையாளர்கள்

பொதுவாகக் கோயில்களுக்கும், மடங்களுக்கும் அடிமைகள் விற்கப்பட்டிருப்பதால், கோயிலுக்குச் சொந்தமாக நிலங்களிருந் தது போலச் சொந்தமான அடிமைகளும் இருந்திருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. இவை தவிர, நாங்கூர் அந்தணன் தன் னுடைய அடிமைகள் பெண்கள் உட்பட எழுவரை ஒரு முறையும், 15 பேரை மற்றொரு முறையும் விற்றதனால் அவனுக்கு உரிமை இருந்தது பெறப்படுகிறது.[12] அரசியல் அதிகாரிகளும் அடிமைகளை வைத்துக் கொண்டிருந்தமையைத் திருவேம்பமுடையான் செந் தாமரைக் கண்ணன் ஆன வைராதராயன்,[13] சோழகுலவல்லி நல்லூர் புல்லாவி வேளான், மனத்துக்கினியான் ஆன கனக ராயன்,[14] சில பெயர் கூறப்படாத அரசியல் அதிகாரிகள்[15] தான மாகவோ விற்றோ அளித்திருப்பதன் மூலம் அறிகிறோம்.

குறுநில மன்னர்கள் போல பெரும் உரிமை பெற்ற மன்னனின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானவர்களும் அடிமைகளை வைத்திருந்தனர். எதிரிலி சோழ கங்கநாடாழ்வான்,[16] நெடு வாசலுடையான் மருதராஜ்யங் கொண்டான்,[17] தேவர் ஆரியச் சக்கரவர்த்திகள்[18] ஆகியோர் தம் அடிமைகளை விற்றிருக்கின் றனர். எனவே அடிமை வைத்துக் கொள்ளும் உரிமை அவர்க்குண்டு என்பது வெளிப்படை. இவர்கள் தவிர நந்திவர்ம மங்கலத்து மத்யஸ்தன் ஒருவனும்,[19] காரைக் காரோணத்துக் கணக்கன் ஒருவனும்[20] முறையே கொடையாகவும், விற்றும் அடிமைகளைக் கொடுத்திருப்பதால் அத்தகைய அதிகாரிகளுக்கும் அடிமைகளைக் கொண்டிருக்கும். உரிமை இருந்தது துணியப்படுகிறது. மன்னனே அடிமைகளைக் கொண்டிருந்ததற்கும் சான்றுகள் உள்ளன.[21]

அடிமைகள் செய்த பணிகள்

திருப்பதியம் பாடவும் கோவில் திருவலகிடல் போன்ற பணி கள் செய்யவும் திருமுன்னர் நடனம் ஆடவும் தேவரடியார் பெண் கள் அடிமைகளாக விற்கப்பட்டனர்.[22] கோயிலில் பறை கொட் டும் பணியை அடிமை உவச்சன் செய்திருக்கிறான்.[23] இடைக்குடி மக்கள் அடிமையாகக் கோயிலுக்கு வழங்கப்பட்டிருந்தனர்.[24] கோயில் கால்நடைகளைக் கண்காணிக்கும் பணியினை அவர்கள் ஏற்க வேண்டும் போலும்! நெற்குற்றுவதற்குப் பெண் அடிமைகளை

ஈடுபடுத்தியுள்ளனர்.[25] இந்தப் பணிக்கெனவே அடிமைகளாக ஆக்கப்பட்டவர்கள் அவர்கள். வேளாண்மை செய்யவும்[26] நிலம் திருத்தி நந்தவனம் செய்யவும்[27] கோயிலுக்குத் தேவையான தச்சு வேலைகள் செய்யவும்[28] வெள்ளாள, தச்ச அடிமைகள் இருந்திருக்கின்றனர்.

எக்காரணம் பற்றி அடிமையாயினர்?

கி.பி. 1201இல் பஞ்சம் தோன்றியது. வாழ வழியின்றித் தன்னையும், தன் மக்கள் இருவரையும் 110 காசுகளுக்கு வெள்ளாளன் ஒருவன் விற்றுக் கொண்டான்.[29]

பல இடங்களில் கோயிலுக்கோ மடத்துக்கோ கொடையாகவும், விற்பனையாகவும் அடிமைகள் மாற்றப் பட்டிருக்கின்றனர். இவர்கள் எல்லாம் முதலில் யார் கொடையளித்தார்களோ, அவர்களிடம் அடிமையாக வழிவழியாகக்கூட இருந்திருக்கின்றனர். ஏனெனில் எதிரிலி சோழ கங்க நாடாழ்வான் என்பான், தன் அடிமைகளில் பெண்கள் ஐவர், ஆண்கள் ஐவரை அவர்கள் வழிவழி அடிமையாக விற்றான் (1000 காசுக்கு) என்ற செய்தி காட்டப்படுகிறது.[30] அவர்கள் வறுமையால்தானே அப்படி ஆகியிருக்க முடியும்? தம்மையே இறைத் தொண்டுக்காகத் தேவரடியார்கள் அர்ப்பணித்துக் கொள்ளும்போது அவர்கள் அடிமைகளாகக் குறிக்கப்படுவதில்லை. அதே தேவரடியார் பெண்கள் நால்வர் 700 காசுக்கு விற்கப்படும் போது என்னஎன்று கூறுவது?[31] எனவே வறுமையால் அடிமையாகப் பணி செய்வதைத் தொழிலாக்கி வாழ்க்கை நடத்தினர் என்பதை மறுக்க இயலாது.

பிற பொருள்கள் போல அடிமையும் தானமாகச் சில இடங்களில் அமைகிறது.[32]

அடிமை செய்யும் முறை

அடிமைகளும் சிலரின் சொத்தாகவே இருந்தனர். எனவே அதனைத் தானமாகவோ அல்லது விற்றோ கொடுக்கும்போது பிற ஆவணங்கள் போலப் பதிவு செய்தல் தேவை. இவ்வாறு அடிமைகளை விற்பதைக் குறிக்கும் ஆவணங்கள் 'ஆள்விலைப் பிரமாண இசைவுத்தீட்டு' என்று குறிக்கப்படுகின்றன.[33] ஓலையில் எழுதும்போது 'இவ்வோலையே பிடிபாடாகக் கொண்டு' என்று குறிக்கப்படுகிறது.[34] தவிர அதனைக் கல்லில் வெட்டித் தரும்போது, 'சந்திராதித்தவரை நெற்குறுவதாகக்கொண்டு சிலாலேகை செய்து கொடுத்தோம்' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.[35] இத்தகைய அடிமை ஆவணங்களை மனு தர்ம சாஸ்திரம், 'தாச பத்ரம்' என்று குறிக்கின்றது.[36]

ஆவணங்கள் இவ்வாறாக, அடிமைகளுக்குச் சில முத்திரைகள் இடுதலும் உண்டு. அவர்களுக்கென இலச்சினை இடும் முறை வழக்கிலிருந்திருக்கின்றது. இடைக்குடி மக்கள் அடிமைகளாக்கப் பட்டதைக்குறிக்கும்போது 'திருவிலச்சினையும் இட்டுச் சந்திராதித்த வரை இவ்விடையரை நாம் கொள்ள' என்று குறிக்கப்படுகிறது.[37] மற்றொரு இடத்தில் அரண்மனை வேளத்திற்கு உரிய அடிமைப் பெண்கள் கோயிலுக்குத் தவறுதலாக முத்திரையிடப்பட்டு அளிக்கப்பட்டு விட்டனர். பின்னர் அதனை மாற்றி உரிய முத்திரை இடப்பட்டதாகக் குறிப்பு உள்ளது.[38] எனவே அடிமைகளுக்கு முத்திரை இடும் முறை இருந்தது வெளிப்படை.

இதுபோல, அடிமையாவதில் சில வகைகள் உள்ளன. தன்னைத் தானே விற்றுக்கொள்ளல் ஒன்று. இரண்டாவது தன்னையும், தன் மனைவி மக்களையும் சேர்த்து விற்றுக்கொள்ளல்; மூன்றாவது இனி வரும் சந்ததிகளையும் சேர்த்து அடிமையாக்குவதாக எழுதிக் கொடுத்து விடுவது.

தம்முடைய அடிமைகளைப் பிறருக்கோ—அதாவது தனிப்பட்ட ஒருவருக்கோ—கோயிலுக்கோ, மடத்திற்கோ விற்றுவிடுதல், தாம் வேறொருவரிடம் விலக்கு வாங்கி மீண்டும் விற்றுவிடுதல், அல்லது தானமளித்தல் என்று பலவகைகளில் அடிமைகளின் பரிமாற்றம் நடைபெற்றிருக்கின்றது.

கால வரையறை

கல்வெட்டுச் சான்றுகளைப் பொறுத்தவரை, குறிப்பிட்டகாலத் திற்கு அடிமையாக இருந்துப் பின்னர் விடுதலை பெற்றான் என்ற குறிப்பு எங்கும் கிடைக்கவில்லை. பெரும்பாலும் 'சந்திராதித்தர் உள்ளவரை' என்றுதான் எழுதிக் கொடுத்திருக்கின்றனர். அவர்கள் இருந்து கொண்டேதான் இருப்பார்கள். மனிதனின் ஆயுள் வரை அடிமையாக இருந்து மடிவதுதான் இங்கு வழியாகும். 'பரம்பரை பரம்பரையாக', 'வழியடிமை', 'யானும் எம் வம்சத்தாரும்' என்று கூறும் அடிமை உறுதிமொழிகளையே கல்வெட்டினின்றும் நாம் பெறுகிறோம். எனவே விடுதலை பெற்றமைக்குச் சான்றுகள் கிடைக்கும்வரை நிலையான அடிமை களாகவே இருந்தனர் என்ற கருத்தை ஏற்கவேண்டியநிலையில் இருக்கிறோம்.

ஆனால் 'கூலிச்சேவகன்', கூலிப்படை' போன்றவை குறிக்கும் அடியார்கள் அல்லது வீரர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பெறும் கூலிக்கு ஏற்பப் பணிமுடித்துவிட்டு வேறிடத்திற்குச் செல்ல

லாம். ஆனல் அடிமை அதனின்றும் மாறு பட்டது. இதனை bonded labour என்று கூறலாம். இத்தகைய குறிப்புக்கள் இங்கு ஆராயப்படவில்லை.

அடிமைகளின் மதிப்பு

அடிமைகளைப் பற்றிக் குறிக்கும் சில கல்வெட்டுக்களில் மட்டுமே அவர்களின் விலை குறிக்கப்படுகிறது. கி. பி. 1210இல் ஒரு வெள்ளாளனும், அவன் மனைவியும் 110 காசுக்கு மடத்துக்கு விற்கப்பட்டுள்ளனர்.[39] 6 பேர் 13 காசுக்கும், 2 பெண்களும் 5 ஆண்களும் 30 காசுக்கும் 15 பேர் 30 காசுக்கும் விற்கப்பட்டிருக்கின்றனர். கி.பி. 1219இல் 5 பெண்களும், 5 ஆண்களும் அவர்கள் வழி வழி அடிமையினரும் 1000 காசுக்கு அடிமைகளாகியிருக்கின்றனர். கி. பி. 1175 இல் தேவரடியார் 4 பேர் 700 காசுக்கு விலையாகியுள்ளனர்.

இவற்றில் எதுவும் தனி ஒருவர் விலையைக் குறிப்பதாக இல்லை. ஓரிடத்தில் ஒருவரின் விலை 1.666 காசாகிறது. இத்தகைய மாறுபாடுகள் எந்த அடிப்படையில் அமைந்தன என்றறிய இயலவில்லை. ஆனல் 4 தேவரடியார்களுக்கு 700 காசுகள் என்று கூறும்போது, இத்தகைய கலைவல்லாருக்கு விலைமதிப்பு அதிகமோ என்றெண்ணத் தோன்றுகிறது. எனவே அடிமைகளது விலை பற்றி முடிவாகக் கூற இயலாத நிலையே உள்ளது.

போர் அடிமைகள்

போரில் வெற்றியடைந்த மன்னர் அந்நாட்டுப் பொன்னையும், பொருளையும் கவர்ந்து வருவது போல அந்நாட்டுப் படைகளையும், மக்களையும் கவர்ந்து வருதல் மரபு. ப்யூனிக் போர்களில் முதற் போரின் முடிவில் 25,000 அடிமைகளும், இரண்டாம் போரின் முடிவில் 150 ஆயிரம் அடிமைகளும், மூன்றும் போரின் முடிவில் கார்த்தேஜ் நகர மக்கள் அனைவரும் அடிமைகளாக விற்கப்பட்டனர் என்பது கிரேக்க வரலாறு காட்டும் உண்மை. இங்குள்ள மன்னர்கள் என்ன செய்தனர்?

சடையவர்மன் சோழபாண்டியன் கல்வெட்டு,

> ஆகவமல்லனை அஞ்சுவித்து விக்கலனையும் சிங்கணனையும் உடைபுறங்கண்டு மற்றவர் மஹாதேவியரோடும் வஷுவாகனங் கைக்கொண்டு

என்றும், விக்கிரமசோழன் கல்வெட்டு,

> ஆகவமல்லனை அஞ்சுவித்தருளி அவன் ஆனையும் குதிரையும் பெண்டிர் பண்டாரமும் கொண்டு

என்றும், இராஜேந்திரன் கல்வெட்டு,

> இராஜபரிச் சின்னமும் தப்பில் சத்தி அனுத்தப்பி என்றிவர்
> தேவியர் குழாமும் பாவையரிட்டமும் கொண்டு

என்றும் கூறுவதைக் காணலாம்.

இவ்வாறு கொணர்ந்தவர்களையெல்லாம் என்ன செய்தனர்? அடிமைகளாக்கினரா? என்ன செய்தனர் என்பது எங்கும் கூறப்படவில்லை. ஆனால் மாற்றரசரின் மாபத்தினியர் எல்லாம் தமிழ் மன்னர் தம் தேவியரைப் போற்றி அவர்களிடம் பணிப்பெண்களாக இருக்கும் நிலையிலேயே இருந்தனர் என்பது சோனாடு கொண்ட சுந்தரபாண்டியன் போன்றோர் மெய்க்கீர்த்தி மூலம் தெரிகிறது.

> கடலென முழங்கும் களிகள்ளியானை வடபுலவேந்தர்
> மணிப்புயம் பிரியா இலங்குழை அரிவையர்
> தொழுது நின்றேத்த உலகமுழுதுடையாளொடும்
> வீற்றிருந்தருளி

எனவே அரியணையின் அருகில் நின்று பரவும் பணிமகளாக மாற்றரசர் மகளிர் இருந்திருக்கின்றனர் என்ற அளவில் உண்மை.

மனுவும் அடிமைகளும்

மனு தர்ம சாஸ்திரங்கள், தமிழக மன்னர்களால், எல்லாக் காலங்களிலும் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டதால் அதன் வழி நின்றும் தமிழக அடிமைகளைக் காண வேண்டியது அவசியமாகின்றது.

மனு தொழிலாளர்களை நான்கு வகையாகப் பிரிக்கிறார். அவருள் இறுதியாக வருவது 'தாச' என்பதாகும். அதற்கு 'சமுதாயத்தில் சில இழிவானதாகக் கருதப்படும் பணிகளைச் செய்யும் அடிமை' என்பது விளக்கம். இத்தகைய அடிமைகள் 15 வகைகளாக 15 அடிப்படைக் காரணங்களில் நிற்கின்றனர். அவையாவன:

1 தாசியின் மக்கள், 2 விலைக்கு வாங்கப்பட்டோர், 3 கொடையாகப் பெறப்பட்டவர், 4 பெற்றோரால் விற்கப்பட்டோர், 5 வெள்ளத்தின்போது பாதுகாக்கப்பட்டோர், 6 பிரமாணத்தின் மூலம் அடிமையானோர், 7 கடன் காரணமாக அடிமைப்பட்டோர், 8 போரில் பிடிபட்டோர், 9 சூதில் வெல்லப்பட்டோர், 10 தாமே வலிய வந்து அடிமையானோர், 11 வறுமையால் அடிமையானோர், 12 குறிப்பிட்ட கால அடிமைகள், 13 இறை அடிமை, 14 அடிமைப் பெண்ணைத் திருமணம் செய்து அதன்வழி அடிமையானோர், 15 தன்னைத்தானே விற்றுக்கொண்டவர்.

இவ்வழிகளில் எல்லாம் அடிமைகள் வரலாம் என்பது நியதி. மேலே நாம் கண்ட அடிமைகள் அனைவரும் இவற்றில் ஏதாவ தொன்றில் அடங்கிவிடுவர் என்பது உறுதி.

இலக்கியமும் அடிமைகளும்

தமிழகத்தில் அடிமைகள் இருந்தனர் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகளும் உள்ளன. அவற்றுள் சோழர் காலத்தைச் சார்ந்த மிகப் பொருத்தமான சான்று திருத்தொண்டர் புராணம். அதன்வழி சில உண்மைகளைத் தெரிந்து கொள்கிறோம்.

ஆசில் அந்தணர் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் இம்மாநிலத்தில் இல்லை.

தானும் தன் வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கோலை எழுதி நேர்தல் வழக்கம்.

அத்தகைய அடிமை, தன் எஜமானனின் அனுமதியின்றித் திருமணம் போன்றவை செய்தல் கூடாது.

இவையெல்லாம் அடிமைகளின் தன்மைகளாயிருந்தன.

பாரதத்தில் சூது காரணமாகப் பாண்டவரும் திரௌபதியும் அடிமையாயினர். இதுபோல அடிமைக்கு இலக்கியச் சான்றுகள் உள.

அடிமை—ஓர் ஒப்புநோக்கு

கிரேக்க, உரோம நாடுகளில் அடிமை என்பது ஒரு இனப்பாகுபாடாகவே இருந்தது. விவசாயத்தில் பார்லியையும் பிற பொருட்களையும் உற்பத்தி செய்வதுபோல, விற்பதற்காகவே அடிமைகளையும் உற்பத்தி செய்தனர். அவர்களின் உற்பத்தித் திறனுக்கு ஏற்ப, அல்லது அவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப விலை வைத்துச் சந்தைகளில் விலைகூறி விற்றனர். அதேபோலப் பெரும் போர்களின்போது தாம் பிடித்த வெளியிலுள்ள மக்களை அப்படியே அடிமைகளாக்கி விற்றனர். அங்கு அடிமை இனத்தில் பெரும் மருத்துவர்களும் உண்டு; கலை வல்லுநர்கள் உண்டு; எளிய பணி மக்களும் உண்டு. அவர்கள் திறமைக்கு ஏற்பப் பெரும் பொருள் கொடுத்து வாங்கவும், விற்கவும் பட்டனர்.

ஓர் அடிமையின் மேலுள்ள அனைத்து உரிமைகளும் அவனது உரிமையாளனுக்கே உண்டு. தேவையான அளவு வேலை வாங்கவும், கொடுமையான முறையில் நடத்தவும் அவனுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் அதே நேரத்தில், எந்த வழியில் அடிமை

ஆனுலே-அதாவது கடன் காரணமாக ஆகியிருப்பின்—அத் தொகையைச் செலுத்தியபின் அவனுக்கு ஒரு பொதுக் குடிமகனுக் குரிய அனைத்து உரிமைகளும் உண்டு. உற்பத்தி பெருகப்பெருக அங்கு அடிமைகளும் பெருகினர். பின்னர் விடுதலை பெறவே [illegible]யலாத நிலை அங்கு ஏற்பட்டு விட்டது.

இறுதியாக 19 ஆம் நூற்றாண்டு வரை—ஏன் சென்ற ஆண்டு வரை கூடக் கொத்தடிமை முறை இருந்தது. கி. பி. 1834-இல் திருவாங்கூரில் ஓர் அடிமைச்சந்தை இருந்ததை ஜெசூட் பாதிரியார் எழுதியுள்ளார். கன்னட நாட்டில் 1819 இல் 82000 அடிமைகளும், மலபாரில் 1,00,000 பேரும் அடிமைகளாக இருந்தனர் என்கிறார். சட்டப்படி 1829 இல் இவ்வடிமைச் சட்டம் அகற்றப்பட்டுவிடினும் சென்ற ஆண்டுகூட கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டனர் என்ற செய்தி எதைக் காட்டுகிறது? அம்முறை அன்றுவரையும் நடை முறையில் இருந்ததையே உறுதிப்படுத்துகிறது.

குறிப்புகள்

1 149 of A 36-37
2 334 of 54-55
3 223 of 1917
4 86 of 1911
5 409 of 1925
6 216 of 1925
7 80 of 1913
8 SII, viii, 396
9 SII, iv, 558
10 334 of 54-55
11 230 of 1927-28
12 216 of 1925
13 SII, iv, 558
14 SII, viii, 315;
15 90 of 1926, 230 of 1927-27
16 499 of 1904
17 365 of 1949-50
18 SII, viii, 396
19 149 of 1936-37

20 296 of 1911
21 94 of 1926, 334 of 1954-55
22 365 of 49-50, 80 of 1913
23 230 of 1927-28
24 SII, viii, 396
25 SII, iv, 558
26 86 of 1911
27 334 of 1954-55
28 409 of 1925
29 86 of 1911
30 499 of 1904
31 80 of 1913
32 223 of 1917
33 296 of 1911
34 SII, viii, 396
35 SII, iv, 558
36 டாக்டர் இரா. நாகசாமி
37 SII, viii, 396
38 தென்னிந்தியக் கோயில் சாசனங்கள்
39 86 of 1911

கல்வெட்டில் திருவிழாக்கள்

எஸ். நிர்மலா தேவி

மக்களின் வாழ்வில் இன்பமும் மலர்ச்சியும் ஊட்டுவது விழா. (விழ், விரும்பு). மக்கள் விரும்பிக் கொண்டாடிக் களிக்கும் நிகழ்ச்சி யாதலின் விழா எனப்பட்டது. பண்டை நாள் தொட்டுத் தமிழர் வாழ்வில் இடம் பெற்ற விழாக்கள் பல. பன்னிரண்டு திங்களும் விழாக்கள் கொண்டாடப்பட்டன. கல்வெட்டுச் சான்றுகளையும் இலக்கியச் சான்றுகளையும் பார்க்கும்போது எல்லா நாட்களிலும் விழாக் கொண்டாடினர் போலும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஒரு நாட்டின் சிறப்பினையும் வளத்தினையும் கூறுமிடத்து இவ்வூர் விழாக் கோலம் பூண்டுள்ளது என்று இலக்கியப் புலவர்கள் உரைப் பதைக் காண்கிறோம்.

விழாக்களின் வகைகள்

ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் விழாக்கள் உள்ளன. இவை தவிர ஒவ்வொரு திங்களும் நடக்கும் விழாக்களும், திங்களுக்கு இரண்டு மூன்று முறை நிகழும் விழாக்களும், தினந்தோறும் நிகழும் வழிபாடுகளும் என்று பலவகை விழாக்கள் உள்ளன.

சித்திரைத் திங்களில் நடைபெற்ற விழாக்கள்

சித்திரை மாதம் தமிழ் ஆண்டின் முதல் திங்கள். இதனை மேஷ மாதம் என்றும் கூறுவர்.

சித்திரை விஷு, ஆனி மூலம் முதலிய விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வந்தன. இடையில் சில காரணங்களால் இவை நிறுத்தப்பட்டன. இராஜஇராஜ சோழன் தனது 18 ஆம் ஆட்சி ஆண்டில் 1200 காசுகள் கொடுத்து மீண்டும் இவ்விழாக்களைத் தொடர்ந்து கொண்டாட வகை செய்தான். குந்தவைச் சதுர் வேதி மங்கலம், அரிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலம் முதலிய இடங் களில் இவ்விழாக்கள் தொடர்ந்து கொண்டாடப்பட்டன.

> *சித்திரை விஷுத் திருநாளும் திரு ஆனிமூலத்*
> *திருநாளும் எழுந்தருளுகிற இடத்து*[1]

குளத்தூர் வட்டத்தைச் சேர்ந்த திருவெங்காவாசல் என்ற ஊரில் உள்ள இறைவனுக்குச் சித்திரைத் திங்கள் நடைபெறும்

விழா ஒன்றில் சாந்திக் கூத்து நிகழ்த்துவதற்கு ஏழுநாட்டு நங்கை என்ற பெண்ணுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டது என்பதனை விக்கிரம சோழனின் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[2]

'சித்திரைத் திங்கள் அத்தம் பெற்ற ஆதி வாரத்து' என்று அவனுடைய மெய்க்கீர்த்தியும் சித்திரை விழாவின் சிறப்பைப் பேசுகிறது. இரண்டாம் குலோத்துங்க சோழன் மெய்க்கீர்த்தியும்,

> சித்திரை விழா அமைத்து இறைவி திருக்கோபுரம்
> செம்பொன் வேய்ந்து

என்று கூறுகிறது. கச்சிப்பேட்டு, 'நின்றருளிய தேவர்' கோயில் கல்வெட்டு மூலம் இச்சித்திரைத் திருநாள் ஏழு நாட்கள் நடைபெற்றது என்று அறிகிறோம்.

> 'இத்தேவர் சித்திரைத் திருவிழாவுக்கு நிவந்தம் செய்தபடி
> திருநாள் ஏழு நாளைக்கும் எண்ணைக்கும்...பொன்

என்று இவ்விழாவுக்கு ஆகும் செலவுக்குப் பொன் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

> சித்திரை வயந்தன் திருநாள் நடக்கும் படிக்கும்

என்பது கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவகுளத்தில் மதுசூதனப் பெருமான் கோயிலில் உள்ள கல்வெட்டின் தொடர்.

சித்திரை முழுமதியோடு இணைந்து நிற்கும் சித்திரைத் திங்களில் மக்கள் ஆற்றங்கரைகளிலும் கடற்கரைகளிலும் கூடி நீராடிப் பொங்கலிட்டு விழாக் கொண்டாடினர் என்பதைச் சிலம்பும் மேகலையும் விளக்குகின்றன. மழைத் தெய்வமான இந்திரனுக்காக இவ்விழா எடுக்கப்பட்டது. இளங்கோவடிகள் இந்திர விழவூரெடுத்த காதை என்ற பகுதியில் இந்திர விழாவைப்பற்றி விளக்கமாகக் கூறிச் சென்றுள்ளார்.

வைகாசி விழா

திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு வழங்கியருளிய மாறவர்மன் சுந்தர பாண்டியன் (13 ஆம் நூற்றாண்டு) காலத்தில் வைகாசி மாதத்தில் பத்து நாட்கள் விழா நடைபெற்றது என்பதை நார்த்தா மலையில் உள்ள விசயாலய சோழீச்வரம் கோயிலில் உள்ள கல்வெட்டால் அறிகிறோம்.[3]

திருவள்ளூர் வீரராகவப் பெருமான் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டின் மூலம் வைணவக் கோயிலிலும் வைகாசி மாதத்தில் விழா நடைபெற்றது என்பதனை உணரமுடிகிறது. வீரராகவப்

பெருமாள் கோயில் வைணவர்களின் முக்கியமான திவ்விய க்ஷேத்தி ரங்களில் ஒன்று.[4]

வைகாசி விசாகம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இவ் விழாவுக்கு நிலம் கொடையளிக்கப் பட்டதை ஒரு கல்வெட்டு 'வைகாசி விசாகத்துக்கும்' என்று குறிப்பிடுகிறது.[5]

வைகாசி விசாகம், அன்பின் திரு உருவமான புத்தர் பிறந்த புனித நாள். மணிமேகலையின் கையில் பசிப்பிணி போக்கும் அமுத சுரபி கிடைத்த நாளும் இந்நாளே. இவ்விழாவையே வேனில் விழா என்ற பெயரில் கூழ் ஊற்றும் விழாவாக இன்றும் கொண்டாடு கின்றனர்.

ஆனி

கிரக்களூர் என்ற ஊரில் உள்ள அகஸ்திஸ்வரர் கோயிலில் ஆனி மூலத் திருவிழாவின் பொழுது குறுணி நான்கு நாழி எண்ணெய் அட்டுவதற்கு குலநிப மங்கலத்துச் சபையார் அவ்வூரில் உள்ள வரி விதிக்கப்படும் எல்லா நிலங்களில் இருந்தும் கிடைக்கும் வரி, ஊர் வாயிலில் வசூலிக்கப்படும் குடிமை, அந்தராயம் முதலிய வரிகளை ஆனி மூலத் திருவிழாவின் செலவுகளுக்குப் பயன் படுத்திக் கொண்டது.

> நிலமெல்லாம் கொண்டு வாசலிற் போந்த குடிமையு மற்று மெப்பேறப்பட்ட அந்தராயமும் சபையொம் சந்திரா தித்ய வலிறுத்து ஆட்டை வட்டம் ஆனி மூலந் திருவிழாவுக்கு ஊரதிகாரம் அட்டுவிதான எண்ணை குறுணி நானுழி

என்று கல்வெட்டின் தொடர்கள் செல்கின்றன.[6] ஆனி மூலம் ஆனித் திருமஞ்சனம் முதலிய நாட்களில் சிறப்பாக வழிபாடு நடை பெற்றது.

ஆடி

கிரனூரில் உள்ள விர இராஜேந்திரனின் எட்டாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு ஆடிப்பூரம் நோன்பைப் பற்றிக் குறிப்பிடு கின்றது.

> ஸ்வஸ்திஸ்ரீ கொராஜ கெசரி பன்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள் ஸ்ரீ விரராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு எட் டாவது பொங்கலூர்க்கா நாட்டு கிரனூரான கொழுமங்கை கொண்ட சோழ நல்லூர் வெள்ளாளந் கிழமணியரில் நிலந் புளிய நெந் இந்நாயநார் திருவாசி சுரம் உடையார் திருப்

பள்ளியறை நாச்சியார்க்குத் திரு ஆடிப் பூரம் நோன்பு நோற்று ஊரில் எழுந்தருள[7]

திருவாடித் திருநாளுக்கும் புரட்டாசித் திருநாளுக்கும் வேண்டும் நிமந்தங்கள்

இன்றும் ஆடிப்பெருக்கு, பதினெட்டாம் பெருக்கு முதலிய பெயர்களில் காவிரியாற்றங்கரையில் விழாக் கொண்டாடப் படுகிறது.

ஆவணி

இராஜகேசரி புரத்தில் பாண்டிய குலாசனி வளநாட்டில் உள்ள கோதண்ட ராமேஸ்வரமுடைய நாயனுருக்கு சாத்தமங்கலத்தில் 7 வேலி நிலம் ஆவணி அவிட்டம் விழாவுக்காகவும், அந்நாளில் நடைபெறும் தீர்த்த விழாவிற்காகவும் கொடையாக அளிக்கப் பட்டது.[8]

கன்னியாகுமரி மாவட்டத்தில் மதுசூதனப் பெருமாள் கோயி லில் சியந்தி அட்டமித் திருநாளுக்கு கிருஷ்ணன் திருமேனி வார்ப் பதற்குச் சாவித்திரி அம்மையார் 100 பணம் அளித்ததையும், சித் திரைமாதம் மகம் தொடங்கி சித்திரை வரை 3 நாட்கள் சித்திரை விழாவுக்குப் பணம் 400 கொடுத்ததையும் கல்வெட்டின் மூலம் அறியலாம்.

ஆவணி மீசியந்தி அட்டமித் திருநாளுக்கு
கிட்டிணனும் வார்பித்து

கண்ணனின் பிறந்த நட்சத்திரமாகிய அஷ்டமியில் விளக்கு எரிக்க திருவெள்ளறையில் உள்ள கிருஷ்ணன் கோயிலுக்கு ஆவணித் திங்களுக்குக் கொடை அளிக்கப்பட்டது.[9]

கருமபுரம் விநாயகப் பிள்ளையார்க்கு அதே ஊரைச் சேர்ந்த கம்மாளரில் சிவஞானம் ஆமணச்சி என்ற பெண் தன் பிறந்த நாளான ஆவணித் திருநாள் அவிட்டத்தில் பிள்ளையார்க்கு அபிஷே கம் செய்யவும் கார்த்திகைத் திருநாளில் வழிபாடு செய்யவும் நிலம் கொடையாக வழங்கினாள்.

புரட்டாசி

நாகப்பட்டினம் வட்டத்தில் திருவாமூர் நாட்டில் தியாகராஜ சுவாமி கோயிலில் உள்ள இராஜ இராஜ சோழன் காலத்துக் கல்வெட்டின் மூலம் சிற்றமூர் உடையான் அரையன் கம்பிக் காதன் என்பவன் புரட்டாசி, சித்திரை ஆகிய திங்களில் நிகழும் திருக்காப்பு

விழாவுக்குக் கொடை அளித்துள்ளான் என்பதை அறியலாம்.[10] இந்தத் திருக்காப்பு விழாவை இன்றும் கோயில்களில் 'வளையல் திருநாள்' என்ற பெயரில் கொண்டாடுகின்றனர். கன்னுதற் கடவுள் வளையல் வியாபாரியாக வந்து வளையல் விற்றதைத் திருவிளையாடற் புராணம் கூறும்.

புரட்டாசித் திங்களில் 9 நாட்கள் நவராத்திரி விழாவாகக் கொண்டாடப் படுகிறது. இதனைக் கலைமகள் விழா என்று கூறுவர். நாயக்கர் காலத்தில் இவ்விழா சிறப்படைந்தது. தொழிலே கண் கண்ட தெய்வம், கல்வியே அழியாச் செல்வம் என்பதனை இவ்விழா வலியுறுத்தும்.

ஐப்பசி

திருச்சிராப்பள்ளியில் கீழப்பழுவூரில் வடமூலேஸ்வரர் கோயிலில், ஐப்பசித் திங்களில் அஸ்வனி நக்ஷத்திரத்தில் சாக்கைக் கூத்தின் 3 பகுதிகளை (அங்கங்களை) நடிப்பதற்குத் திருவாலந்துறை நல்லூர் கோயில் நிர்வாகிகள் 1½ கழஞ்சு பொன், 3 கலம் நெல் 2 ஜதை உடைகள் முதலியவற்றைக் கூத்து நிகழ்த்தும் பெண்ணுக்கு அளித்தனர்.

> ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர கேசரி பன்மற்கு யாண்டு 4-வது குன்றக் கூற்றத்து பிரமதேயம் சிறு பழுவூர் திருவாலந்துறைத் தேவதான நிலம் திருவாலந்துறை நல்லூரிலெய் அம்பிகை அஸ்வதி திருவிழாவுக்கு சாக்கைக்கு மூன்றங்கம் ஆட நிவந்தம் செய்த பொன் கழஞ்சறை நெல்லு முக்கலம் கொற்று...[11]

திருக்கோயிலூரில் சித்தலிங்க மடத்தில் உள்ள திருப்புலிப் பகவர் ஆழ்வாருக்கு தக்ஷிணாயணம், உத்தராயணம் சங்கிரமத்துக்கும் ஐப்பசி விஷுவுக்கும், கிரஹணங்களுக்கும், திருமஞ்சனத்துக்கும் கோயில் ஸ்ரீ காரியம் செய்பவர்கள் கொடை அளித்தனர்.

> கொப்பரகெசரி பன்மர்க்கு யாண்டு 10 ஆவது மலாட்டு நாட்டுக் குறுக்கைக் கூற்றத்து பிரம்மதேயம் சிற்றிங்கூர் திருப்புலிப் பகவர் ஆழ்வார்க்கு உத்திர
> அயன ஸங்கிரமத்துக்கும் தக்ஷண அயாஸங்கிரமத்துக்கும் ஐப்பசி விஷுவுக்கும் கிரணங்களுக்கும், உள்ளிட்டனத்துக்கும் திருமஞ்சனத்துக்கும் அமுது செய்தருள்[12]

இக்கல்வெட்டில் குறிப்பிட்ட ஐப்பசி விஷு, தக்ஷிணாயன, உத்திராயண சங்கிரமம், கிரஹணம், திருமஞ்சனம் முதலியவற்றுக்கு 12 செப்புக் குடங்கள், 3 கழஞ்சு நிறையுடைய பொன்னாலாகிய கண்டிகை முதலியனவும் அளிக்கப்பட்டன.

நகரத்தார் ஐப்பசி, சித்திரைத் திங்களில் இறைவனுக்கும் இறைவிக்கும் பொன்னுடைகளை வழங்கினர் என்ற செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கார்த்திகை

கார்த்திகைத் திருநாளில் விளக்குகளை வரிசையாக வைத்துத் தீபத்தை வணங்கினர். சங்க காலத்திலேயே இவ்விழாக் கொண்டாடப் பட்டது. இது முருகனுக்குரிய விழா என்றும், இந்நாளில் சிவன் திருவண்ணாமலையில் தீப்பிழம்பாகக் காட்சி அளித்தமையின் சிவபெருமானுக்குரிய விழா என்றும் கூறுவர். ஒளி வடிவத்தில் இறைவனைக் கண்டனர்.

முதலாம் இராஜேந்திர சோழனின் 9 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1021) கார்த்திகைத் திங்களில் கார்த்திகை விழா நாளில் விளக்கு எரிக்க 16 நாழி நெய்க்காக 16 ஆடுகளைத் திருப்பாற்றுறை மக்கள் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தனர்.

> ஆடு 16 பதிநாறும் நாங்கள் கொண்டு ஆட்டை வட்டம் ஆட்டால் நாழி நெய்யாகி பதினாறு நாழி நெய் கார்த்திகை கார்த்திகை நாற்று திருவிளக்கொன்று எரிக்க அட்டுவோமானோம்

என்று கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.[13]

கரூரில் உள்ள திருவானிலை மகாதேவர் கோயிலில் கார்த்திகை விழாவுக்காக இராஜாதிராஜன் I (10-ஆம் நூற்றாண்டு) கணபதி நல்லூரைத் திருநாமத்துக் காணியாக தன்னுடைய 9ஆம் ஆட்சியாண்டில் கொடுத்தான்.

> பூசைக்கும் திருப்பணிக்கும் நம் பேருல் திரக் கார்த்திகை, திருநாளுக்கும் பல பணி நிமந்தங்களுக்கும் உடலாகக் கொடுத்தோம்[14]

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்தரம் தாணுமாலயப் பெருமாள் கோயிலின் கோயில் ஸ்ரீகாரியம் செய்பவர்கள் சுசீந்தரமுடைய நயினார்க்கு கார்த்திகைத் திங்களில் கார்த்திகை விழா நடத்துவதற்கும் அன்று சொக்கப்பனை எரிப்பதற்கும் கொடை அளித்துள்ளனர். இன்றும் கார்த்திகைத் திருநாளில் கோயிலின் முன்பு சொக்கப்பனை எரிக்கும் வழக்கம் உள்ளதை நாம் அறிவோம்.

> சிவிந்திரமுடைய நயினார்க்கு கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்தியலுக்கு சிறப்பச்சொற் சொற்கப்பனைத் திருநாளும் நடக்கும் வகைக்கு......[15]

இக் கார்த்திகை விழாவை வைணவர்களும் கொண்டாடி மகிழ்ந்தனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றும் இலக்கியச் சான்றும் உள்ளன.

ஸ்ரீரங்கநாதனுக்கு விசய சம்ஸரத்து கார்த்திகை
சுத்த பஞ்சமி

என்பது கல்வெட்டுந் தொடர்.

கார்த்திகை மாதத்து கார்த்திகைத் திருநாளில்
பெரிய பெருமான் புழுகு நெய்க் காப்புச்
சாத்தி அருளவும்

என்பது மற்றொரு கல்வெட்டுப் பகுதி. இத்தகைய பல சான்று களால் கார்த்திகை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பது விளங்குகிறது.

மார்கழி

கீதையில் கண்ணன் நான் மாதங்களில் மார்கழியாக் இருப்பேன் என்று மார்கழி மாதத்தைத் தெரிந்து எடுத்துக் கூறினன்.

திருச்சி மாவட்டத்தில் கோவில் பட்டியைச் சேர்ந்த திருவரங் குறிச்சியில் மார்கழித்திங்களில் நிகழ்ந்த விழாவுக்கு நிலம் கொடை யாக அளிக்கப்பட்டதை மீனுட்சி சுந்தர சுவாமி கோயில் கல்வெட்டு அறிவிக்கிறது.[16]

மார்கழித் திங்கள் திருவாதிரைக்கும், வைகாசித் திங்கள் விசாகத்துக்கும் ஒவ்வொரு ஆண்டும் 600கலம் நெல் முசிறைக்குடி கிராமத்துக்கு அளிக்கப்பட்டது என்பதனைக் கோனேரி ராஜபுரத் தில் உள்ள உமாமகேஸ்வரர் கோயில் கல்வெட்டு விளக்குகிறது.

''மார்கழி திருவாதிரைக்கும்''[17]

திருவாதிரை சிவனுக்குரிய சிறப்பான நாள். அம்பாவாடல், தைந்நீராடுதல் என்ற பெயரில் கன்னியர்கள் கொண்டாடிய விழாவே பின்னர் மார்கழி நீராட்டு விழாவாக மாறியது.

தாயருகா நின்று தவத்தைந் நீராடுதல்
நீ உணர்த்தி வையை நதி

அவ்விழாக்களின்போது பெண்கள் வேண்டிக் கொண்டதை நோக்கும்போது தமிழர்தம் விழாக்களின் பெருமையும் யாம்பெற்ற இன்பம் பெறுக இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயர்ந்த நோக்கும் புலப்படும்.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடுகயலுகள
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்

என்று மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் நேரிழையர் நீராடி இறைவனை வணங்கி வேண்டி நிற்கும் காட்சியைச் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளின் சொல்லோவியமான திருப்பாவை தெரிவிக்கிறது.

மார்கழித் திங்களில் ஏகாதசி விழா சிறப்பாக வைணவர்களால் கொண்டாடப்பட்டது. சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோட்டிலுள்ள புகழியூரைச் சேர்ந்த ஒருவரின் மனைவி காரிசுந்தரி என்பவள் உணவளிக்கக் கொடை கொடுத்துள்ளாள்.[18]

ஸ்வஸ்திஸ்ரீ கொப்பரகெஸரி பன்மற்கு யாண்டு 27ஆவது இவ்வாண்டு திருச்செங்கோட்டுத் துவாதசிக் கணப்பெருமக்களிடை வைத்தாள் புகழியூர் மணவாட்டி காரிசுந்தரி

ஏகாதசி நாளில் மக்கள் ஊன், உறக்கமின்றித் திருமாலை மனதில் எண்ணி நோன்பு இருக்கும் வழக்கம் இன்றும் உள்ளது.

தை

தைத்திங்கள் தமிழர்களின் இனிய திங்கள். உழைத்ததன் பயனை நுகரும் நற்றிங்கள். இத்திங்களில் விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

திருவிடைமருதூரில் உள்ள மகாலிங்கசுவாமி கோயில் கல்வெட்டுத் தைப்பூசத் திருநாளில் கோயிலில் கூத்து (dance) நிகழ்த்துவதற்காக விளங்குடியில் ஒரு வேலி நிலம் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.

தைப்பூசத் திருநாளில் ஒரு கூத்தாடுவதாகவும்[19]

திருத்தைப் பூசத்துக்கும் திருப்பங்குனி திருநாள்

தீர்த்தத்துக்கும் அமுதுபடிப் புறமும் திருநந்தவனப் புறமுமாக விட்டேன்[20]

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 14 ஆவது கற்கடக ஞாயற்று அப்ரபக்ஷத்து பஞ்சமியும் வியாழக்கிழமையும் பெற்ற

> அஸ்வதி நாள் வடகரை ராசராச வளநாட்டுப் பொய்கை நாட்டு உடையார் திருமழபாடி உடையார் நாயனுற்கு விறை நாட்டாரோம் நாட்டு இறையிலி பண்ணிக் குடுத்த பரிசாவது இந்நாயனுற்கு திருத்தைப்பூசத் திருப்பாவாடைக்கு காவெரி ஆற்றில் எழுந்தருளவும் ஆற்றிலே திருமண்டபமும் கட்டி திருக்காவணமும் இட்டு அமுதுபடி சாத்துப்படி வெஞ்சனம் உள்ளிட்ட பலவற்றுக்கும் வேண்டும் பணத்துக்கும் நெல்லுக்கும் நாட்டு இறையிலி[21]

என்று செல்கிறது கல்வெட்டு. தைப்பூசத் திருநாளில் இறைவனுக்கு அபிஷேகம், திருப்பாவாடை, அமுதுபடி, சாத்துப்படி ஆகியன நிகழ்ந்தன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

> அரிசி நாற்கலனென தூணிப்பதக்கும் திருத்தைப்பூசம் திருப்பாவாடை அமுது செய்தருள சிபண்டாரத்திலே அளப்பவும்[22]

என்ற கல்வெட்டு தைப்பூசத் திருவிழாவின் நிகழ்ச்சிகளை விளக்கும்.

மாசி

இராஜேந்திரசோழனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (இ. பி. 1016) ல் நாகப்பட்டினத்தில் உள்ள பட்டினக் கூற்றத்து ஊரார் 6ஆம் நாள் மாசி மகம் விழாவுக்காக நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[23]

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கோவிலில் பணி புரியும் பிராமணர்களுக்கு மாசிமக விழாவின்பொழுது உணவளிக்க பொன் கொடுக்கப்பட்டது.

திருநெல்வேலியில் இருந்து 8 கல் மேற்கே திருநெல்வேலி அம்பாசமுத்திரம் நெடுஞ்சாலையில் அமைந்த சிற்றூர் தருவை என்பது. மாசித்திங்களில் சிவன்ராத்திரி அன்று இறைவன் திருமேனி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. மாசித்திங்கள் சதுர்த்தசி நாளில் வரும் இவ்விழாவில் நோன்பு இருந்து வழிபடும் வழக்கம் இன்றும் வழக்கில் உள்ளது.

மகம் என்ற நட்சத்திரம் கூடிய முழுமதி நாளில் கொண்டாடப் படும் விழா மாசிமகம் எனப்படும்.

பன்னிரண்டு ஆண்டிற்கு ஒருமுறை மகாமகம் அல்லது மாமாங்கம் கும்பகோணத்தில் நீராட்டுவிழாவாகக் கொண்டாடப் படுகிறது. இதைப்போன்று மலபாரில் உள்ள திருநாவயிலினும் ஒவ்வொரு பன்னிரண்டு ஆண்டிலும் மாசித்திங்களில் இவ்விழா

கொண்டாடப்படுகிறது. இவ்விழாக்களைப் பற்றியும் கல்வெட்டுக்களில் சான்றுகள் கிடைக்கின்றன.

பங்குனி

பங்குனித்திங்கள் 12ஆம் நாள் வரும் நவமியன்று இராமநவமி கொண்டாடப்படுகிறது. இது இராமன் பிறந்த திருநட்சத்திரம்.

புதுக்கோட்டையில் திருவேப்பூர் மக்கள் ஸ்ரீகோகர்ணம் கவிர நாட்டு கணபதிக்கு பங்குனி உத்திரத்துக்குக் கொடை அளித்துள்ளனர்.

> கோப்பரகேஸரி பன்மற்கு யாண்டு 13 ஆவது இவ்வாண்டு தென் கவிரநாட்டு ஸ்ரீகோகர்ணத்து பங்குனி திரு உத்திரத்துக்கு கணவதியார் விழாவுக்கு...[24]

என்று பங்குனி உத்திரத்தைக் குறிப்பிடுகிறது.

எலவாணுசூரில் உள்ள ஆளுடை நாச்சியார் பங்குனித் திங்களில் நிகழும் உலாவில், உலாவரும் இறைவனுக்குத் திருக்காப்பு நாண் சாத்தியருள அரைக்கால் பொன் தானமாகக் கொடுக்கப்பட்டது.

கூவம் எனப்படும் தியாக சமுத்திர நல்லூரில் திருவிளக்கோல முடைய நாயனர் கோயிலில் பங்குனி விழாவிற்காக ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கொடை அளித்துள்ளான்.[25]

> திருப்பங்குனித் திருநாள் தீர்த்தம்

என்ற கல்வெட்டுத் தொடர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பேரூரில் ஜெகதீஸ்வரர் கோயிலில் பங்குனி விழாவின் போது தீர்த்த விழாவும் நடைபெற்றது என்பதைக் காட்டுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவகுளத்தில் எழுந்தருளிய நயினர் தெய்வ விநயகப் பிள்ளையார்க்குச் சித்திரைத் திங்கள் முதல் பங்குனித் திங்கள் முடிய திருப்பள்ளி எழுச்சிக்கும் விநாயக சதுர்த்திக்கும் திருக்கார்த்திகைப் பூசைக்கும் ஆகும் செலவுகளுக்கு நிலம் அளிக்கப் பட்டது.

சைவரும் வைணவரும் வேறுபாடு இன்றிக் கொண்டாடிய விழா திருவோண விழா.

விசயாலயன் 15 ஆம் ஆட்சியாண்டில் திருவெள்ளறை பெருமானுக்குத் திருவோணத் திருநாள் அன்று திருவமிர்து செய்யப் பொன் கொடுத்தான்.[26]

கிழப்பழுவூரில் உள்ள கணபதிக்குத் திருவோண விழாவுக்காகக் கொடை அளிக்கப்பட்டது.[27]

மாயோன் மேய வோண நன்னாள்

என்று மதுரைக் காஞ்சியும் திருவோண நாளின் சிறப்பைக் கூறுகிறது.

ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்

என்று சம்பந்தரும்,

நீ பிறந்த திருவோணம்

என்று பெரியாழ்வாரும் போற்றுகின்றனர்.

இவ்வாறு கிடைக்கும் கல்வெட்டு, இலக்கியச் சான்றுகளையும் கொண்டு எல்லாத் திங்களிலும் விழாக்கள் கொண்டாடப் பட்டன என்பது தெளிவாகிறது.

இவை தவிர திங்களில் ஓரிரு நாட்கள் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் கல்வெட்டின் மூலம் தெரிய வருகின்றன.

கோவில்பட்டி மண்ணியங்குறிச்சி என்ற இடத்தில் உள்ள கல்வெட்டு தாண்டவ மூர்த்தி என்பவர் அன்றாட பூசைக்காகவும் நீராட்டு விழாவுக்காகவும் பிரதோஷ காலத்தில் நிகழும் பூசைக்காகவும் நிலம் கொடை அளித்தார்.[21] பிரதோஷம் என்பது நந்திக்குச் சிறப்பாக நடைபெறும் ஒரு வழிபாடாகும். இது திங்கள் இருமுறை திரயோதசி திதி அன்று நடைபெற்றது. பிரதோஷத்தன்று மாலை பிரதோஷ காலம் எனப்படும் $4\frac{1}{2}$ மணியில் இருந்து 6 மணி வரையில் நிகழும் இந்நிகழ்ச்சியில் சிவனுக்கும் எதிரில் உள்ள நந்திக்கும் ஒரே சமயத்தில் தீபாராதனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை இன்றும் பிரதோஷ நாளில் கோயில்களில் நிகழ்வதைக் காணலாம். தீபாராதனைக்குப் பின்னர் உமாசகித சந்திரசேகரர் ரிஷப வாகனத்தில் கோயிலின் உள்சுற்றில் வலமாக எடுத்துச் செல்லப் படுவார்.

பிற விழாக்கள்

இவ்விழாக்களைத் தவிர இறைவனின் திருக்கல்யாண உற்சவம், அடியார்கள் திருநாள், இறைவன் உலா செல்லுதல், தேர்த்திருவிழா முதலிய விழாக்களும் இடம் பெற்றன.

சித்திரை விஷு நாளில் இறைவனின் திருக்கலியாணத்துக்காக 50 பொன் கொடை அளிக்கப்பட்டது.[22]

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1112 யிதின் மேற் செல்லா நின்ற யிக...முடையனுயனுறுக்கு இந்நாட்டு கிராமங்

> களில் அனுவரும் சித்திரை விஷுவுக்கு திருக்கல்யாணத்துக்கு
> உபயம் மண்டப்படி அன்பது பொன்னும் செயிது விச்சோம்

என்று கல்வெட்டு விளக்குகிறது.

மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 21 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1237) திருவாதவூரில் திருவேட்டை விழாவின் சிறப்பைக் கூறுகிறது.[30]

வைகாசித் திங்களில் நிகழும் விழாவில் இறைவனைத் திருமலைக்கு எடுத்துச் செல்லவும் தீர்த்த விழாவுக்கும் விழாக் காலங்களில் விளக்கு எரிக்கவும் ஆகும் செலவுகளுக்கும் அடியார்களின் திருநாளுக்கும் நிலம் கொடையளிக்கப்பட்டதை இரண்டாம் குலோத்துங்கனின் கல்வெட்டு (12ஆம் நூற்றாண்டு) அறிவிக்கிறது.

விசய நகர மன்னனின் பிரதிநிதி ஆனந்த தாண்டவ தொண்டைமான் 1529இல் வீரமங்கலம் என்ற ஊரைத் தேர்த் திருவிழாவுக்குக் கொடையாக அளித்தார்.[32]

மல்லப்ப நாயக்கர் மாங்காடு நாட்டில் உலகளந்த சோழபுரத்தில் உள்ள சிவன் கோயிலுக்குத் தேர்த் திருவிழாவுக்குக் கிராமம் ஒன்றை அளித்துள்ளார்.

திருமலை தேவ மகாராஜா தன்னுடைய பிறந்த நட்சத்திரமான விசாகத்தில் இறைவனின் தேர்த்திருவிழாவுக்காகவும் மற்ற வழிபாடுகளுக்காகவும் 20 கிராமங்களை அளித்துள்ளார்.

காமரசவல்லி சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்கள் திருநல்லூர் பரமேஸ்வர கோயிலில் திருப்பள்ளி எழுச்சிக்காக ஒவ்வொரு அறுவடையின் பொழுதும் ஒவ்வொரு 'மா' நிலத்தில் இருந்தும் தூணி, பதக்கு, குறுணி நெல் கொடுக்க வேண்டும் என்பதை,

> ஸ்ரீ பலியும் திருப்பள்ளி எழுச்சியும் கொள்வதற்கு
> பெருங்குறி மக்களோம் வைத்துக் குடுத்த ஜீவிதமாவது

என்று கல்வெட்டுக் கூறுகிறது.[32]

> உயர்பூரட்டாதி உத்திரட்டாதியில்
> அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்
> இம்பர் வாழ எழுந்தருளுவதற்குத்
> திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து

என்ற விக்கிரம சோழனின் (12 ஆம் நூற்றாண்டு) மெய்க்கீர்த்தியின் மூலம் உத்திரட்டாதி, பூரட்டாதியிலும் விழாக்கள் கொண்டாடப்பட்ட செய்தி விளங்குகிறது.

முடிவுரை

இதுவரை கண்ட சான்றுகளின் மூலம் ஏறக்குறைய ஆண்டின் எல்லா நாட்களிலும் விழாக்கள் கொண்டாடப் பட்டன என்பதை அறியலாம்.

குறிப்புகள்

1 திருத்துறைப் பூண்டிக் கல்வெட்டுக்கள் 77
2 128 of 1964-65
3 296 of 1968—69
4 South Indian Temple Inscriptions, II
5 SII, iii
6 திருத்துறைப் பூண்டிக் கல்வெட்டுக்கள் 29
7 601 of 1893
8 411 of 1961-62
9 534 of 1905
10 215 of 1962—63
11 250 of 1926
12 420 of 1909
13 179 of 1907
14 South Indian Temple Inscriptions
15 கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், ஊர்க்கல்வெட்டு 195
16 296 of 1964—65
17 SII, iii, 151
18 SII, ixx
19 601 of 1893
20 566 of 1893
21 71 of 1895
22 11 of 1894
23 158 of 1956—57
24 805 of 1904
25 ARE 47—48
26 SII, xix
27 244 of 1926
28 172 of 1956—57
29 South Indian Temple Inscriptions
30 ARE 1962—63
31 483 of 1937—38
32 78 of 1914

கல்வெட்டுக்களில் வாகூர்ப் பேரேரி

சு. குப்புசாமி

புதுச்சேரி மாநிலத்திலுள்ள ஊர்களில் பாகூர் என்னும் பெயருடைய சிற்றூர் வரலாற்றுச் சிறப்புடைய ஊராகும். இங்கு முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பெற்று, அவை கி. பி. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று முடிவு செய்யப்பட்டுள்ளன.[1] ஆதலின் இங்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்தமை தெளிவாகும்.

இவ்வூரில் பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின், 8ஆவது ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட செப்பேடுகள் 1879 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டன.[2] அச்செப்பேடுகள் இவ்வூரின் பெயரை வாகூர் என்று குறிப்பிடுகின்றன. வாகூர் என்னும் இப்பெயரை இங்குள்ள கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன. முதலாம் இராசராச சோழனின் காலம் முதல் இவ்வூருக்கு 'அழகிய சோழச் சதுர்வேதிமங்கலம்' என்ற பிறிதொரு பெயரும் இருந்தது.[3]

1742 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் நாளன்று ஆங்கிலப் படையும் பிரஞ்சுப் படையும் இங்குப் போரிட்டன. இது வாகூர்ப் போர் என்றே குறிக்கப்படுகிறது. பிரஞ்சுக்காரர்களுக்குத் தென்னிந்தியாவில் மானியங்களாகக் கிடைத்த ஊர்களில் வாகூரும் ஒன்று.[4] இவ்வாறு கி. பி. 2 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரைத் தென்னிந்திய வரலாற்றில் இவ்வூருக்குத் தனியிடம் உண்டு.

கல்வெட்டுக்கள்

வாகூரில் மூலட்டானேச்சுரம் என்னும் பெயருடன் தொன்மையான சோழர் காலத்துச் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இக் கோயிலில் இராஷ்டிரகூடர், பிற்காலச் சோழர் ஆகியோர் காலத்திய கல்வெட்டுக்கள் வரையப் பெற்றுள்ளன. அவற்றுடன் சிதைந்துபோன பல கல்வெட்டுகள் இவ்வூரின் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. அவற்றில் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டும் உள்ளது. இவை அனைத்தையும் சேர்த்து இங்கு 38 கல்வெட்டுக்கள் உள்ளன. ஆயினும் 17 கல்வெட்டுகளே இதுகாறும் வெளிவந்துள்ளன.[5] வாகூரைப்

பற்றிக் குறிப்பிடும் வேறு சில கல்வெட்டுக்கள் தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன.[6]

புதுச்சேரி மாநிலத்திலுள்ள மிகப்பெரிய ஏரிகளில் வாகூர் ஏரியே, வரலாற்று நோக்கில் முதன்மை பெற்றது. இது ஊருக்கு அணித்தாக வடக்குத் திசையில் அமைந்துள்ளது. 8.3 கி.மீ சுற்றளவும், 49.12 மில்லியன் சதுர மீட்டர் பரப்பளவும் கொண்ட இந்த ஏரி 19 ஊர்களில் 1746 ஹெக்டேர் நன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க வல்லது. 8 பெரிய மதகுகளையும் 16 பெரிய பாசன வாய்க்கால்களையும் கொண்டுள்ளது. இதற்குத் தென் பெண்ணை ஆற்றிலிருந்து 13 கி.மீ. நீளமுடைய வாய்க்காலின் வழியாக நீர் வருகிறது.

செவிவழிச் செய்தி

தென்பெண்ணை ஆற்றிலிருந்த நீர் வரும் வாய்க்காலை 'லங்காரி' என்பவனும், ஏரியைச் 'சிங்காரி' என்பவளும் ஒரே நாள் இரவில் அமைத்தனர் என்றும், எரமடி, என்பவன் இவ்வேரியைக் காத்து வந்தான் என்றும், இப்பகுதியில் செவிவழிச் செய்தியொன்று வழக்கில் உள்ளது. இவற்றை உறுதி செய்ய ஐயனார் கோயிலையும், இரண்டு பெண் தெய்வங்களின் சிற்பங்களையும் இங்குள்ள மக்கள் சான்றுகளாகக் கூறுகின்றனர்.

ஐயனாரும் ஜேஷ்டாதேவியும்

மேற்கூறியவற்றில் வாய்க்காலுக்கு லங்காரி வாய்க்கால் என்னும் பெயர் இன்றும் நிலவுகிறது. ஆனால், சிங்காரி ஏரி என்னும் பெயர் வழக்கில் இல்லை. எரமடி ஐயனார் என்னும் பெயருடன் ஏரியின் வடகிழக்கு மூலையில் கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலும் சிற்பங்களும் பழமையானவை அல்ல. மிதமிஞ்சிய ஏரி நீரை வெளியேற்றப் பயன்படும் கலிங்குப்பகுதி, இக் கோயிலுக்கு அணித்தாக மேற்குத் திசையில் அமைந்துள்ளது. இக் கலிங்குப் பகுதி 1825 ஆம் ஆண்டில் ஒரு முறையும், 1844 (குரோதி வருடம் ஆனி மாதம் 25 ஆம் நாள்) ஆம் ஆண்டில் ஒரு முறையும் பிரஞ்சுக்காரர்களால் செப்பனிடப்பட்டது.[7] அக்காலத்தில் நீர் வழிந்தோடும் இடங்களில் கருங்கற்பலகைகளைப் படிகளாக அமைத்தனர். அவற்றில் ஜேஷ்டாதேவியின் உருவங்கள் செதுக்கப் பட்ட இரண்டு கற்பலகைகள் படிகளாக இடம்பெற்றன. ஏரிக் கரையின் பிறிதோரிடத்தில் இருந்த இச்சிற்பங்கள் பல்லவர் காலத்துக் கலைப்பாணியைக் கொண்டுள்ளன. இக்காலத்தில் இவை வழிபாட்டில் இல்லை. இவற்றையே லங்காரி என்றும் சிங்காரி

என்றும் கூறுகின்றனர். இதே கலைப்பாணியைக் கொண்ட மற்றொரு ஜேஷ்டாதேவியின் சிற்பம், வாகூருக்கு வடகிழக்கே அமைந்துள்ள சப்தமாதர்க் கோயிலில் பரிவாரமாக இடம் பெற்றுள்ளது. இச்சிற்பங்கள் அனைத்தும் புடைப்புச் சிற்பங்களாகும்.

மேற்கூறிய செவிவழிச் செய்திகளுக்கும் சின்னங்களுக்கும் உள்ள தொடர்புகளைத் தெளிவாக அறிந்துகொள்ளப் போதிய சான்றுகள் இல்லை. காலப் போக்கில் இவை வெளிப்படக்கூடும். செவிவழிச் செய்திகளோடு தொடர்புடைய ஓலைச்சுவடியொன்று தனியார் ஒருவரிடம் உள்ளது. அச்சுவடி கிடைப்பின் சில தகவல்கள் தெரியலாம்.

கல்வெட்டுகளில் ஏரி

வாகூர் ஏரியின் பெயரை இங்குள்ள நான்கு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் பழமையானது இராஷ்டிரகூட மன்னன் கன்னரதேவனின் கல்வெட்டாகும்.[8] அதில் இவ் வேரியின் பெயர் 'கடம்பேரி' என்று குறிக்கப்பட்டுள்ளது. கடம்ப மரங்கள் இவ்வேரிக்குள் மிகுந்துள்ள காரணம் பற்றி இவ்வாறு பெயர் பெற்றது. கரைகள் உடையாவண்ணம் அலைகளைக் கட்டுப் படுத்தவும், பெருமளவு நீர் ஆவி ஆகிவிடாமல் தடுக்கும் பொருட்டும் இவ்வாறு வளர்த்தனர் போலும். இன்றளவும் இவ் வேரிக்குள் கடம்ப மரங்கள் மிகுந்துள்ளன.[9]

முதலாம் இராசராச சோழனின் 12 ஆவது ஆட்சி ஆண்டுக் (கி. பி. 997) கல்வெட்டும்[10] 15 ஆவது ஆட்சி ஆண்டுக் (கி. பி. 1000) கல்வெட்டும்[11] கடம்பேரி என்னும் பெயரையே குறிப்பிடுகின்றன. இம் மன்னனின் பிறிதொரு கல்வெட்டு பெரிய ஏரி என்று இதன் அளவைக் கூறுகிறது.[12] ஆதலின், கடம்பேரி என்றே இது அக்காலத்தில் பெயர் பெற்று விளங்கியது.

இவ்வேரியைச் சோழர் காலத்தது என்று கருதுவாரும் உளர்.[13] இங்குள்ள சில வாய்க்கால்கள் சோழ மன்னர்களின் பெயர்களைப் பெற்றிருந்தன. இவ்வூர் அக்காலத்தில் அழகிய சோழச் சதுர்வேதி மங்கலம் என்று குறிக்கப்பட்டது. இவை யாவும் கல்வெட்டு களிலும் இடம் பெற்றுள்ளன. ஆனால் கடம்பேரிக்குச் சோழ மன்னரின் பெயர் எதுவும் இடம்பெறவில்லை. அதற்குக் கல்வெட்டுச் சான்றும் இல்லை.

சிறு சிறு நீர் நிலைகள், வாய்க்கால்கள், வழிகள் ஆகிய வற்றுக்கெல்லாம் சோழ மன்னர்களின் பெயர்களை இட்டு வழங்கும் அக்காலத்தில், இவ்வளவு பெரிய ஏரி ஒன்று சோழ மன்னர்களால் அமைக்கப்பட்டிருக்குமானால், இதற்கு அம்மன்னனின் பெயரைத்

தவறுமல் இட்டு இருப்பர். அவ்வாறு இடப்படாமை ஒன்றே அது சோழர் காலத்து ஏரி அல்ல என்பதைத் தெளிவுபடுத்தும்.

இவ்வூரில் கிடைத்த நிருபதுங்கவர்மனின் செப்பேடுகளில் இவ்வேரியைப் பற்றிய குறிப்பெதுவும் இல்லை. வாகூரிலிருந்த கல்லூரி ஒன்றுக்கு வித்யாறு போகமாக விடப்பட்ட மூன்று சிற்றூர்களைப் பற்றிய செய்திகளை அச் செப்பேடுகள் விவரிக்கின்றன. இங்கு ஏரியைக் குறிப்பிடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சிதைந்துபோன கல்வெட்டுக்களில் இதனைப் பற்றிய செய்திகளும் இருந்திருக்கக்கூடும். இவ்வாறு கருநுவதற்கு இடமுளது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டால், கடம்பேரி சோழர் காலத்துக்கும் முற்பட்ட ஏரி என்பது தெளிவாகும். அவ்வாறுயின், அது பல்லவர் காலத்ததாகவே இருத்தல் வேண்டும்.

ஏரிப் பராமரிப்பு

சோழர் காலத்தில் ஆண்டுதோறும் இந்த ஏரியை ஆழப்படுத்தியும் கரைகளை உயர்த்தியும் பாதுகாத்து வந்தனர். இப்பணிகளுக்காக ஏரி நீர் பாயும் எல்லா நிலங்களுக்கும் 'ஏரி ஆயம்' என்னும் வரி விதிக்கப்பட்டது. முதலாம் இராசராசசோழன் காலத்தில் ஒரு மா அளவுள்ள நிலத்துக்குப் பதக்கு நெல் வீதம் ஏரி ஆயம் வசூலிக்கப்பட்டது.[14] முதலாம் இராசேந்திர சோழனின் 17 ஆவது ஆட்சி ஆண்டில் (கி. பி. 1029) வரையப்பட்ட கல்வெட்டு ஒன்று, இவ்வேரி ஆண்டுதோறும் ஆழப்படுத்தப்பட்ட முறையைத் தெளிவாகவும் விரிவாகவும் கூறுகிறது.[15]

வாகூரில் வாழ்வோரில் தீண்டாதார் ஒழிய எஞ்சியுள்ளவர்களில் 10 வயதுக்கு மேலும் 80 வயதுக்குள்ளும் உள்ள ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் ஒரு குழி அளவுள்ள மண்ணை அப்புறப்படுத்தி ஏரியை ஆழப்படுத்தும் பணியைச் செய்தல் வேண்டும். இதற்கு 8 சாண் நீளமும 8 சாண் அகலமும் 8 சாண் ஆழமும் கொண்டது ஒரு குழி என்று கணக்கிட்டனர். இப்பணியைச் செய்யத் தவறும் ஒவ்வொருவருக்கும் 4 பொன் அபராதம் விதித்து வசூலித்தனர்.

நெல், வரகு, கரும்பு, சுள் முதலானவை விளையும் நிலங்களுக்கு ஒவ்வொரு போகத்துக்கும் ஏரி ஆயம் வசூலிக்கப்பட்டது. ஒரு மா அளவுள்ள நிலத்துக்கு 8 நாழி நெல் அல்லது சங்கை கொண்ட சோழன் என்னும் பெயருடைய மரக்காலால் 2 தூணி நெல் வசூலிக்கப்பட்டது. இதற்கு 12 சாண் கோலால் 256 குழி கொண்டது ஒரு மா என்று கணக்கிட்டனர். இவற்றைச் செயல்

படுத்த ஊர்ச்சபை முடிவெடுத்தது. இக்கூட்டம் 'உய்யக் கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுக் கப்பூர் உடையான் நீலன் வெண்காடனுர்' என்னும் நாடு வகை செய்கின்ற அதிகாரியின் முன்னிலேயில் நடைபெற்றது.

இப்பணிகளே நிறைவேற்ற ஏரிவாரியப் பெருமக்கள் இருந்தனர். ஆண்டுதோறும் இவர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வாரியத்தினரைக் கன்னரதேவன் கல்வெட்டும், சோழர் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன.[16]

ஏரிக் கணக்கன்

முதலாம் இராசேந்திரசோழன் காலத்தில் ஏரி ஆயம் உள்ளிட்ட கணக்குகளேப் பதிவு செய்யவும் ஏரி ஆயம் வசூலிக்கவும் ஏரிக்கணக்கன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நாள்தோறும் பதக்கு நெல் ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. இவ்வூரில் ஊருக்கென்றும் கோயிலுக்கென்றும், ஏரிக்கென்றும் தனித்தனியே கணக்கமார் இருந்துள்ளனர்.[17]

வாய்க்கால்—கண்ணுறு நிலம்

ஏரியிலிருந்து பாசனத்தின் பொருட்டுப் பிரிந்து வருகின்ற, பெரிய வாய்க்கால்கள் பொதுவாக ஏரிக்கால் என்றும், பெருவாய்க்கால் என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.[18] பெருவாய்க்காலிலிருந்து பிரிந்து செல்லும் சிறு சிறு வாய்க்கால்கள் கண்ணுறு என்னும் பெயருடன் விளங்கின. அவை ஐந்தாங்கண்ணுறு, ஆறுங்கண்ணுறு என எண்ணிட்டுக் கூறப்பட்டன. அவற்றுள் ஒன்று கடம்பங்கண்ணுறு என்னும் பெயருடன் விளங்கியது. இப்பெயர்கள் இக்காலத்தில் வழக்கொழிந்தன.

இரண்டு கண்ணுறுகளுக்கு இடையிலுள்ள நிலங்கள் சதுரம்' செறுவு என்னும் பெயர்களேப் பெற்றிருந்தன. இவற்றுள் சதுரம் என்பது கண்ணுறு போல எண்ணிட்டு அடையாளம் கூறப்பட்டது. செறுவுகள் பெரும்பாலும் தனித்தனிப் பெயர்களால் குறிக்கப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாகக் கருத்துச் செறுவு, கழுவெறிமேட்டு உமாபிடாரி செறுவு முதலானவற்றைக் கூறலாம். சில செறுவுகள் கழனி, சுற்று, புலம், கொல்லே, பாட்டம் எனவும் கூறப்பட்டன. குறும்பர்கழனி, வளேவிற்சுற்று, சிறுபுலம், ஒட்டன்கொல்லே, புலிக்கொல்லே, ஓடைப் பாட்டம் ஆகியவை அவற்றுள் சில. ஒரு நிலம் வஞ்சிக்காமாய் மாறுபரணன் என்னும்

பெயருடன் இருந்தது. இப்பெயர்களும் இக்காலத்தில் வழக்கொழிந்தன.

மா, சதுரம், செறுவு முதலானவை எந்த அளவை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளச் சான்றுகள் இல்லை. ஒரு மா என்பது குறிப்பிட்ட சில செறுவுகளை உள்ளடக்கியது என்பதைக் குறிப்பாக அறியலாம். நிலங்கள் அனைத்தும் தரம் கருதிப் பத்து வகையாகப் பிரிக்கப்பட்டன. தரத்திற்கு ஏற்பவே வரிகளும் விதித்தனர்.

இவ்வாறு பன்னூறு ஆண்டுகளின் வரலாற்றைத் தன்னுள் அடக்கி இருக்கின்ற இக்கடம்பேரி, இன்றளவும் குறுங்கடல் போல் காட்சி நல்கி, குன்றா விளைவுக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் நிலைக்களனாய் விளங்குகிறது.

குறிப்புகள்

1 Revue Historique de Pondicherry, Vol. xii, pp. 105—114

2 Epigraphia Indica, xviii, 2.

3 SII, vii, 801 & 803: கல்வெட்டுக்களில் புதுவைப் பகுதிகள், பக். 38—41, சு. குப்புசாமி

4 Selections from Orme Manuscripts, pp 205 & 249.
C.S.Srinivasachariar & A History of modern India
from 1529 A.D. to the present day, p. 193, V.N. Harirao.

5 SII, vii, 798 to 814.

6 வரலாறு கூறும் வாசகர் என்னும் எனது நூலில், இப்பகுதியில் குறிக்கப் பட்ட எல்லாக் கல்வெட்டுக்களின் முழுமையான வாசகங்கள் அடங்கியுள்ளன.

7 இவ்வாண்டுகளைக் குறிப்பிடும் பிரஞ்சுமொழிக் கல்வெட்டுக்கள் இக்கலிங்குப் பகுதியில் உள்ளன.

8 SII, vii, 810.

9 சிறிது காலமாக அரசாங்கத்தால் இம்மரங்கள் அகற்றப்படுகின்றன.

10 SII, vii, 809.

11 வரலாறு கூறும் வாசகர், எண். 15, சு. குப்புசாமி.

12 SII, vii, 805.

13 தமிழ்நாட்டு வரலாறு, ப. 65, மு. ஆரோக்கியசாமி.

14 SII, vii, 805.

15 வரலாறு கூறும் வாசகர், எண். 12, சு. குப்புசாமி.

16 SII, vii, 803, 805. & 809

17 SII, vii, 802.

18 SII, vol, vii, 809, வரலாறு கூறும் வாசகர், எண், 16 & 20, சு.குப்புசாமி.

தகடூரில் வீரத்திற்கு ஒரு செப்பேடு

புலவர் செ. கோவிந்தராசு

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவையின் பெருமுயற்சியால் பாப்பாரப்பட்டிக்கு அருகிலுள்ள மலை மீதுள்ள மலையூரில் மறக் குடியிலே வந்த நாட்டாமை ஏகாம்பரி என்பவரிடம் ஒரு செப்புப் பட்டயம் கண்டுபிடிக்கப்பட்டது. கொச்சைத் தமிழில் எழுதப் பட்டிருந்தாலும் கொள்ளை அழகுடன் மிளிர்கின்றது. அது நீளம் சுமார் $1\frac{1}{2}$ அடியும், அகலம் 1 அடியும் உடையது. வீரத்திற்கு ஓர் சவாலாகக் காணக்கிடைக்கின்றது. பட்டயம் எதற்காகக் கொடுக் கப்பட்டது என்பதையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை யும் சுருக்கமாகக் காணலாம்.

வீரத்திற்கு ஒரு பரிசு

உலகளந்த கவுண்டன் என்பவனும் ஏகாம்பரிக் கவுண்டனும் சிங்கம்பட்டிக் கணவாய் வழியாக வரும்போது நூறு பேர்கள் மறித்துக் கொண்டார்கள். அவர்களிலே பத்துப் பேரைச் சண்டை யிட்டு இருவரும் வெட்டிக் கொன்றார்கள். அதனால் மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். பின்பு இருவரும் ஆலம்பாடியை அடைந்து அங்கே ஆண்டுவந்த இருளப்பநாயக்கனிடம் அந்தச் சண்டையைப் பற்றி விவரித்தார்கள். இருளப்பநாயக்கன் வீரத்தை மெச்சித் தங்க இடமளித்தான்.

அந்த இருளப்பநாயக்கனுக்கும் பென்னாகரம் தருப்புக்குச் சொந்தக்காரனுக்கும் ஏற்கனவே தகராறு. இருளப்ப நாயக்கன் தனியே புறப்பட்டு வரும் போது அதை அறிந்த பொன்னாகரத் தானின் ஆட்கள் வேட்டுவர்கள் பத்துப் பதினைந்து பேர் இருளப்ப நாயக்கனைச் சூழ்ந்து கொண்டார்கள். இதை எப்படியோ அறிந்த ஏகாம்பரிக்கவுண்டன் திடீரென வேட்டுவர்களைத்தாக்கி எழுவரைக் கொன்றான். மற்றவர்கள் ஓடிவிட்டனர். இருளப்பநாயக்கன் அக மகிழ்ந்து என்னுடைய உயிரைக் காப்பாற்றின உனக்கு என்ன வெகுமானம் வேண்டுமென்று கேட்டான். அதற்கு ஏகாம்பரி எனக்குச் சாதி நாட்டாமைப்பட்டம் வேண்டும் என்று கேட்டான். இருளப்ப நாயக்கனும் மகிழ்ந்து உன்னுடைய பந்து ஜனங்களை

அழைத்து வா, அப்படியே செய்கிறேன் என்று சொல்லப் பல ஊர்களில் உள்ள கவுண்டன்மார்களையெல்லாம் அழைத்து வந்து பத்து நாட்கள் தங்க வைத்து வெற்றிலைப் பாக்குடன் உணவு சமைத்துப் போட்டு நாட்டாமைப் பட்டம் பெற்றுன்.

வீரத்திற்கு மற்றுமோர் பரிசு

இப்படி ஏகாம்பரிக் கவுண்டனும் உலகளந்த கவுண்டனும் ஆலம்பாடியில் சுகமாக இருக்கின்றபோது இருளப்பநாயக்கனின் உறவினர் பெரிய நாயக்கன் என்பவனும் மற்றொருவனும் சேர்ந்து கொண்டு ஏகாம்பரியையும், உலகளந்தானையும் வரிப்பணம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் தர மறுத்ததால் அவர்களுடைய ஆநிரைகளைக் கவர்ந்து சென்றுவிட்டார்கள். உலகளந்த கவுண்டனும் ஏகாம்பரிக்கவுண்டனும் அவர்களை அடித்துத் துரத்திவிட்டு, ஆநிரைகளை மீட்டு வந்துவிட்டனர்.

பின்பு இருவரும் ஜெகதேவராயரிடம் சென்று முறையிட்டனர். அவர் இரு கட்சிகளையும் அழைத்து விசாரித்து ஏகாம்பரி செய்தது சரி என்றும், அவனுடைய வீரத்தை மெச்சி உனக்கு என்ன வெகுமானம் வேண்டுமென்றும் கேட்க, அவர்கள் எனக்கு இன்னும் அதிக ஜாதி நாட்டாமை அதிகாரம வேண்டுமென்று கேட்க அவர்களின் பந்து ஜனங்கள் முன்னிலையில் நாட்டாமைப் பட்டயம் வழங்கப்பட்டது.

பட்டயத்தின் சிறப்பு

ஒரு செப்புப் பட்டயத்தில் மூன்று வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நிகழ்ச்சிகளுக்கு மூவருக்குப் பட்டயம் வழங்கப்பட்டுள்ளது. இதில் பல கிராமத்து முக்கிய கவுண்டர்களின் பெயர்கள் அடுக்கடுக்காக வருகின்றன. மேலும் நஞ்சன்கூடு நஞ்சண்டேசுவர் முதல் காஞ்சி ஏகாம்பரநாதர் திருப்பதி வெங்கடேசன் காவிரி (ஒகேனக்கல்) தேசேஸ்வரர் வரை பல கோவிற் கடவுளரையும் சந்திர சூரியர்களையும் சாட்சியாக வைத்து எழுதப்பட்டுள்ளது ஒரு புதுமையாக உள்ளது. ஊர்ப் பொதுமக்கள் தங்கள் வீட்டுத் திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சியில் நாட்டாமைக்குக்கொடுக்க வேண்டிய வரிப்பணம் பற்றிய விவரம் குறிக்கப்பட்டுள்ளது. இதை யாராவது அபகரிக்க நினைப்பவர்களுக்குரிய பரவமும் தண்டனையும் சொல்லப்பட்டுள்ளது. அபகரிக்க நினைப்பவர்கள் மேற்கண்ட கோவிலை இடித்த பாவத்திற்கும், காராம்பசுவைக் கொன்ற பாவத்திற்கும், குரு துரோகம் பண்ணின பாவத்திற்கும் போவார்கள் என்றும், மேலும் அவர்கள் தலைமீது கூடைக்கல் சுமந்து புளிய

மிளாரால் அடிக்க வேண்டும் என்றும், வீட்டுக்கூரையில் மாட்டெலும்பும் வேப்பிலையும் செருகவேண்டும் என்றும் ''சுளி செத்தப் பிளப்பு உன்னதே'' என்ற பழமொழியும் குறிக்கப்பட்டுள்ளது.

இதைக்கொண்டு அன்றைய மக்களின் பழக்க வழக்கங்களை ஓரளவு அறிய முடிகின்றது. வீரத்தை மெச்சி நாட்டாமையை அளித்த வரலாறு புதுமையானதாகவும் சிறப்புடையதாகவும் இருக்கின்றது.ஒரு சாதியார் தங்களுக்கு என்று ஒரு நாட்டாமையை வைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்திருக்கின்றது. இப்பட்டயத்தில் சர்வதாரி வருடம் என்று குறிப்பிட்டுள்ளதாலும், மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்றுள்ளதாலும், எழுத்தமைதியை நோக்குமிடத்தும் இது 17-18ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்பது என்னுடைய கருத்தாகும்.

இதே பட்டயத்தில் காவேரியில் உள்ள தேசேஸ்வரர் கோவிலில் ஆண்டுதோறும் விழாவெடுத்துத் தேர் இழுப்பார்கள் என்றும் அதில் இரு தரப்பினரான வலங்கையாரும், இடங்கையாரும் 32 வாத்தியங்கள் யாருக்கு என்று குழுச்சண்டையிட்ட நிகழ்ச்சியிலிருந்து காவேரியில் (ஒகேனக்கல்) ஒரு பெரிய நகர் இருந்திருக்க வேண்டுமென்றும், தேர்த்திருவிழா நடந்திருக்க வேண்டும் என்றும் அறியமுடிகிறது. ஆனால் தற்போது தேரோ, திருவிழாவோ நடைபெறுவதில்லை. கோவில் மட்டும் உள்ளது. அது ஆராயப்பட வேண்டும்.

இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றபோது பண்டைய மன்னர்கள் கோவில்களுக்கோ, அறநிலையங்களுக்கோ, அறிஞர்களுக்கோ மானியம் கொடுத்துச் செப்பேடுகளில் பதிப்பதோடு மட்டுமின்றி வீரச்செயல் புரிந்தவர்களுக்கும் முக்கியப் பதவிகொடுத்து அவர்களுக்குப் பொதுமக்களே மானியம் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் என்று அறியமுடிகிறது. இதன் அடிப்படையில்தான் தற்போதும் சில கிராமங்கள் சேர்ந்து ஒரு நாட்டாமையை நியமித்துப் பரம்பரைப் பாத்தியமாக அவை செயல்பட்டு வருகின்றது.

இப்பட்டய உரிமைப்படி அந்நாட்டாமை பரம்பரையில் வந்த இன்றைய மலையூர் நாட்டாமையின் பெயரும் ஏகாம்பரிக்கவுண்டன் என்று கேட்கும்போது இப்பட்டயம் ஒரு காலக் கண்ணாடியாகக் காட்சியளிக்கின்றது. இப்பட்டயம் அவர் பொறுப்பில்தான் உள்ளது. தகடூரில் இன்னும் இதைப்போன்று பல மறைந்துள்ளன.

பட்டுக்கோட்டை மாநகரின் பண்டைய வரலாறு

நா. காளிங்கராஜ்

பட்டுக்கோட்டை மாநகரம் தஞ்சை மாவட்டத்தின் தென் கோடியில் உள்ளது. எட்டுத் திக்கு பாலகர்களைப் போல எண் திசைக்கும் எட்டுப் பெருவழிகளைக் கொண்டிருப்பது இந்நகரின் முக்கிய கேந்திரத்தை விளக்கா நிற்கும். இன்று ஒரு வட்டத்தின் தலைநகராக விளங்கும் இவ்வூர் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பட்டுக்கோட்டை மாகாணம் எனப் பதிவுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ்வூரின் மிகப் பழைய வரலாற்றினை நோக்குமிடத்து வரலாற்றுக்கு மிக முந்திய காலத்திலிருந்தே மக்கள் இனம் இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றனர். 1933-க்கு முன்னர் காவிரித்தாயின் கருணைக்கரம் எட்டாத காலத்தில் இவ்வூருக்கு வடக்கிலும் மேற்கிலுமாக ஓடும் நசுவினியாறு, மகாராஜ சமுத்திரம் என்னும் இரண்டு காட்டாறுகளின் கரைகளில் இன்று காணப்படும் முதுமக்கள் தாழிகள் இதனைக் கூறுகின்றன.

முற்காலச் சோழர்கள் காலத்தில் இவ்வூரைப் பற்றிய செய்தி ஏதும் தெரியாவிட்டாலும் இவ்வூருக்கருகில் உள்ள 'ஏனாதி' என்ற கிராமத்தின் பெயர் முற்காலச் சோழர்களின் தானைத் தலைவனின் பட்டப் பெயருக்கு ஒரு சான்றாக விளங்குகிறது. இவ்வூரில் உள்ள 'பட்டவன்' கோவில் ஒரு மாவீரனின் பெயரால் அமைந்தது. மேலும் இவ்வூருக்கருகில் விளங்கும் சோழனின் மாலையான ஆத்தியின் பெயரால் அமைந்த 'ஆத்திக் கோட்டை' என்னும் கிராமமும் உள்ளது. தெள்ளாறு எறிந்த நந்தியின் படைக்கும் பாண்டியர் படைக்கும் இவ்வூருக்கருகில் உள்ள சங்கரநாதர் குடிக்காடு என்னும் கிராமத்தில் சண்டை நடந்துள்ளது. (பண்டாரத்தார், பல்லவர் வரலாறு).

பிற்காலச் சோழர் காலத்தில் இவ்வூர் சிறந்த நிலையில் இருந்தது சான்றுகளோடு தெரிய வருகின்றது. இதற்குச் சான்றாகப் பல சோழர்காலக் கல்வெட்டுக்களை இவ்வூரில் காணலாம்.

இவ்வூருக்குப் பட்டுக்கோட்டை என்ற பெயர் எவ்வாறு வந்தது என்ற கேள்விக்கு இவ்வூர் மக்கள் அனைவரும் ஒரே குரலில் 'பட்டு மழவராயன்' என்னும் இவ்வூரின் குறுநிலத் தலைவனின் பெயரடி

யாக அமைந்தது என்று கூறுவர். அதற்கும் முன்பு இவ்வூர் என்ன பெயரில் அழைக்கப்பட்டிருக்கும் என்ற வினாவிற்கு விடை காண முடியாமலிருந்தது.

சமீபத்தில் பட்டுக்கோட்டையின் பழைய பெயரைத் தாங்கிய மூன்றும் குலோத்துங்கனின் கல்வெட்டின் பகுதியினைக் கண்டு பிடித்தேன்.

இக்கல்வெட்டில் 'திரிபுவன வீரசோழதேவன்' என மூன்றும் குலோத்துங்கன் குறிப்பிடப்பட்டுள்ளான். பட்டுக் கோட்டையின் பழைய வளநாடு ''இராரா வளநாடு'' எனக் குறிப்பிடப்பட்டுள் ளது. 'இராச இராச' எனக் குறிப்பிடப்படவில்லை. 4 கல்வெட்டு களில் ''இராரா'' என்ற சொல்லே உள்ளது. இந்த இராரா வள நாட்டில் விக்கிரமமாணிக்கப்பட்டணம் என்ற பெயரில் இவ்வூர் விளங்கியது. இப்பெயர் விக்கிரமசோழன் காலத்தில் ஏற்பட்ட தாக இருக்கலாம். இவ்வூருக்கருகில் விக்கிரமசோழன் பெயரால் ஏற்பட்ட விக்கிரமம் என்று குறுகிய பெயரை உடைய கிராமம் ஒன்றுள்ளது. அங்கு ஒரு சிதிலமான புத்தர் கோவிலும் சோழர் காலச் சிவ, விஷ்ணு ஆலயங்களும் உள்ளன.

விக்கிரம சோழன் காலத்திற்கு முன்பு இவ்வூர் ''இராரா வள நாட்டுச் செல்லூர்'' என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இத் தொடரில் மூன்று கல்வெட்டுத் துண்டுகள் இன்றைய பெருமாள் கோவிலில் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் இங்கு கட்டப் பட்ட ஒரு கோட்டை புதுக்கோட்டை என வழங்கப்பட்டுள்ளது.

இங்குள்ள கோட்டையின் மையத்தில் ஒரு சிவன் கோவில் உள்ளது. இக்கோவில் சோழர் காலத்தது. மூன்று நிலைக்கோபு ரம் நாயக்கர் காலத்தது உள்ளது. இங்குள்ள சோழர் காலக் கல் வெட்டுக்கள் இக்கோவிலைத் ''திருமாற் கொண்டீசுரமுடைய நாய னார்'' எனக் குறிக்கின்றன. இந்நாயனார்க்குத் திருவிக்கிரம பூசைக் கும் திருமஞ்சனம் அமுதுபடி உள்ளிட்ட காரியங்களுக்கும் நிவந் தங்கள் விடப்பட்ட செய்திகள் உள்ளன. இந்த நிவந்தங்கள் பற்றி மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் ஏதோ வழக்கு எழவே அரசி யல் பேரதிகாரி இராசேந்திர சுந்தரத்தோளுடையான் என்பவன் வந்து வழக்கை முடிவு செய்த விவரம் தெரிகிறது.

இக்கோவில் சோழர் காலத்திற்குப் பின் சிதிலமடையவே தஞ்சை நாயக்கமன்னர்கள் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது அதுபோது கல்வெட்டுக்கள் இடம் மாறியுள்ளன. மேலும் சோழர் காலத்தில் அம்மன் கோவில் இங்கு இல்லை போலும். எனவே

இங்கிருந்த பேரதிகாரி (?) 'இறைவர் நாகுர் குழைக்காதர் புத்திரன் அவதாரம் இராமப்ப நாயக்கர் புண்ணியமாகக் கட்டி வைத்தார். காலம் குறிப்பிடப்படவில்லை.

இன்னொரு கல்வெட்டு மன்மதவருஷம் மாசி மாதத்தில் சென்னப்ப செட்டியார் மகன் திருமலைச் செட்டியார் இங்கு திருமஞ்சன மண்டபமும், திருஊஞ்சல் மண்டபமும் கட்டுவித்து இத்தன்மம் சந்திராதித்தவல் ஆக வேண்டுகிறர். இன்னொரு நீண்ட பெரி நாயக்கர் காலக் கல்வெட்டு மிகவும் உதிர்ந்த நிலையில் உள்ளது.

இச்சிவன் கோவிலின் மேற்கில் கோட்டைக்கு வெளியே ஒரு மேடு உள்ளது. இங்கு ஒரு பெருமாள் கோவில் இருந்து இடிந்து போயுள்ளது. இப்பெருமாள் கோவில் ''இராரா விண்ணகரம்'' (இராச இராச விண்ணகரமோ?) என அழைக்கப்பட்ட விவரம் கல்வெட்டில் உள்ளது. இவ்விடிந்த கோவிலை நாயக்கர்களது ஆட்சியில் பிரித்து எடுத்து அதற்கும் மேற்கே அரை மைல் தூரத்தில் இன்றுள்ள பெருமாள் கோவிலைக் கட்டியுள்ளனர். இக்கோவிலின் கல்வெட்டுக்கள் அங்கு கோபுரத்திலும் தள வரிசையிலுமாக வைத்துக் கட்டப்பட்டுள்ளன.

ஏறக்குறைய சிவன் கோவிலும் பெருமாள் கோவிலும் ஒரே சமயத்திலும் திருப்பணி செய்யப்பட்டிருக்கலாம். ஏனென்றல் திருமால் கோவிலின் கோபுரத்தின் அடியிலும் மன்மத வருஷம் எனத் தொடங்கும் நீண்ட கல்வெட்டு பாதி மண் மூடிய நிலையில் உள்ளது. இச்சோழர் காலக் கல்வெட்டுக்கள் குலோத்துங்க சோழன் பெயரையும் திருபுவனச் சக்கரவர்த்திகள்ஸ்ரீதி என்ற மன்னன் (திரிபுவன வீரசோழன்) பெயரையும் தாங்கியுள்ளன. இவை இவ்வூரை இராரா வளநாட்டுச் செல்லூர் என அழைக்கின்றன. நிலக்கொடைகள் திருமேனிகள் எழுந்தருளிவித்தவை முதலானவற்றைத் தெரிவிக்கின்றன. இவை ஆராயப்படவேண்டும்.

இக்கோவில் இன்று நந்நிலையில் இருப்பினும் முன்புறம் உள்ள பெருங்கோபுரம் சிதிலமாகியுள்ளது. இதனைத் தற்போது இடிக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சோழர்களுக்குப் பின்னர் இவ்வூர்ச் சில காலம் பாண்டியர் ஆட்சியின் கீழ் இருந்திருக்க வேண்டும். இவ்வூரின் கிழக்கில் தூர்ந்து போயுள்ள 'பாண்டியன் ஏரி' இதற்குச்சான்ருக உள்ளது. நாயக்கர் காலத்தில் இவ்வூர் ஒரு மண்டலமாகவும் மண்டாலாதிபதியின் ஆளுகைக்கு கீழும் இருந்திருக்கிறது. நகரில் 5 பாளையங்கள் நிறுவப்பட்டிருந்தன.

பின்னர் நாயக்கரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றிய மராட்டிய மன்னன் வெங்கோஜியின் ஆளுகையின் கீழ் 1676 முதல் இவ்வூர் வந்தது. அதுபோது இவ்வூர் நாயக்க மன்னரின் தானைத் தலைவன் பட்டுமழவராய நாயக்கர் என்பவரது ஆளுகையின் கீழ் இருந்தது. அதன்பின்னர் அவனது பெயராலேயே பட்டுக்கோட்டை என அழைக்கப்பட்டது.

பின்னர் வெங்கோஜியின் மகன் சகாஜி அரசரின் காலத்தில் ஆட்சிப் பொறுப்பை மராட்டியரே மேற்கொண்டனர். வீர சிவாஜியின் அத்தையின் கணவரான ''நாகோஜி காடி கேராவ் சாஹிப்'' என்பவர் கோட்டையின் கில்லேதாராக நியமிக்கப் பட்டார். அதுமுதல் கோட்டை நிர்வாகம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்படும் வரையில் மராட்டியர் வசம் இருந்தது. அவ்வம்சத்தின் 8-வது தலைமுறையினரான ஸ்ரீமந்த் வாஜாரத்மாப் ராஜேஸ் ஸ்ரீநாகோஜி ராமச்சந்திர காடிகேனுவ் சாஹேப் அவர்கள் அரச பரம்பரையின் சின்னமாக இன்று விளங்குகிறார்.

இக்கோட்டையைச் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கில அரசு ஏலத்தில் விட்டது. அதை ஏலம் எடுத்த காளி அன் கம்பெனி அதை இடித்துச் செங்கற்களை விற்றுவிட்டது. அக்கற்களைக் கொண்டு நகரில் பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இக்கோட்டை ஒரு மைல் சுற்றளவு உள்ளது. கோட்டையின் இடிந்த மேடுகளை அகழிப் பள்ளத்தில் சரித்துத் தூர்த்து 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிடங்களைக் கட்டி விட்டனர்.

இவ்வூரில் விளங்கும் நாடியம்மன் என்னும் கிராமதேவதை கோவில் பிரசித்தமானது. பிரதாபசிம்ம மகாராஜா நிலக் கொடையாக ஒரு கிராமத்தை அளித்துள்ளார்.

நாட்டுப் பஞ்சாயத்து

வை. பாலசுப்பிரமணியம்

மணக்கோலம் பூண்டு நின்ற சுந்தரப்பெருமானை, வேதியராய்த் தோன்றி, வழக்கிட்டு, சபைக்கு இழுத்து, சாட்சியம் காட்டி, அடிமை கொண்ட கதை, நம் பண்டைய ஊரவைகள் ஆற்றிய பணிக்கு இலக்கணம் காட்டும் இலக்கியமாகும். தமிழகத்தின் நாட்டுப்புற வாழ்வில் தொன்று தொட்டு வருகின்ற இவ்வூரவை பற்றிய குறிப்புகளைப் பல்லவர், சோழர் கல்வெட்டுக்களும் இடைக்கால இலக்கியங்களும் மிகப் பலவாறுகக் கூறுகின்றன. இவ்வூரவைகளே இந்நூற்றுண்டின் முற்பகுதி வரையிலும் நாட்டுப் பஞ்சாயத்து எனச் செயல் பட்டு வந்தன. பாண்டி நாட்டின் பழம் பிரிவுகளில் ஒன்ருன சட்டிக்குளம் நாட்டுப் பஞ்சாயத்தில் நடைமுறைகள் எவ்வாறு இருந்தன என்று ஈண்டு தனி ஆய்வு செய்வோம்.

ஊரில் ஏற்படும் அனைத்து வழக்குகளையும் தங்களுக்குள் தீர்த்துக் கொள்ளவும், ஊரின் எளிய மக்களுக்கும் எளிதில் நியாயம் கிடைக்க வழி செய்வதற்கும், ஊரின் விவசாய, தொழில் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமாகவும் செயல்படுவதே இதன் நோக்கமாகும்.

ஊர் என்று சொல்லப்பட்டதே நாட்டுப் பஞ்சாயத்து எனப்பட்டது. இது தனி ஒரு ஊருக்கு என்ரே, 5 அல்லது 10 அல்லது அதற்கு மேற்பட்ட ஊர்கள் கொண்ட நாடு என்ற பிரிவுக்கோ ஒரு பகுதியில் வாழும் குறிப்பிட்ட சாதியைச் சார்ந்த மக்களுக்கானதாகவோ மூன்று வகையினதாக அமைந்திருந்தது. 5 பேர் அங்கம் வகிப்பதால் இது பஞ்சாயத்து எனப்பட்டது.

பஞ்சாயத்து ஊர் நாட்டுக்குடிகள் அனைவரையும் கொண்ட பொது அமைப்பு. பஞ்சாயத்தார், வயது முதிர்வும், திறமான அறிவும் சொல்லாற்றலும், பொறுப்பேற்று நடத்தும் வலிமையும் உடையவ ராயிருப்பர் இவர்களில் ஒருவர் தலைவராக இருப்பார். பெரும்பான்மை வழி வழி முறையிலும் சிறுபான்மை தனி மனிதனது செல்வாக்காலும் பஞ்சாயத்தில் அங்கம் பெறுவது வழக்கம். ஊர் தனது செயல்வழி ஒத்துழைப்பின் மூலம் பஞ்சாயத்தின் நிலையை உறுதிப் படுத்தும்.

ஊரின் பொது இடத்தில், அனைவரும் வரும் வகையில் உள்ள இடங்களில் பஞ்சாயத்து கூடும். வேம்பு, ஆல், புளி ஆகிய மரங்கள் நிறைந்த மந்தைகளிலும் கட்டப்பட்ட 'சவுக்கை' எனப்படும் சாவடிகளிலும் கூட்டம் நடக்கும்.

இன்ன நாளில் இன்ன இடத்தில், இன்ன காரியத்துக்காக ஊர் கூடுவதாகவும் அனைவரும் வரவேண்டும் எனவும் 'வெட்டியான்' மூலம் பறை அடித்து அறிவிக்கப்பட்டுப் பஞ்சாயத்து கூடும். பஞ்சாயத்தார் தனியாகப் பாய் அல்லது துணிவிரிப்பின் மேல் அமர்வர். ஊர் அவர்கட்கு முன் அமரும்.

ஊர்க் குடிகளில் ஒருவரோ, பாதிக்கப்பட்ட வேறு எந்த நபரேனும் வழக்குக் கூறலாம். முதலில் அவர் பஞ்சாயத்துக்கு என இருக்கும் ஊர் கணக்குப் பிள்ளை என்பவரிடம் தனது வழக்கு விவரங்களைக் கூறி ஊரில் சொல்லக் கேட்டுக் கொள்வார். கணக்கர் அதைப் பஞ்சாயத்தாரிடம் கூறுவார். பஞ்சாயத்தார் விவரமறிந்து ஊர் கூடும்படி ஊர்காவலிடம் கூறுவர். அவர் வெட்டியானைக் கொண்டு பறை அடித்து ஊர் கூட்டுவார்.

விசாரணை

பஞ்சாயத்து விசாரணை 'கரையேறுதல்' என்றும் பஞ்சாயம் என்றும் வழங்கப்படும். ஊர் கூடிய பின்பு-வழக்குக் கூற விரும்புவோர் தட்டம் ஒன்றில் வெற்றிலையும் பாக்கும் அரைப்பணமும் வைத்து, இடுப்பில் துண்டு கட்டி நிற்பார். பஞ்சாயத்தார், ஐயா என்ன விவகாரம்? என்று கேட்டபின் வழக்கிடுவோர் நிலத்தில் படிந்து ஊருக்கு வணக்கம் சொல்லி, நின்று கொண்டே தனது வழக்கைக் கூறவேண்டும். தனக்குரிய சாட்சிகளையும் பட்டியல் கொடுப்பார். வழக்கை வாய் மொழி மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ விசாரிக்க வேண்டும் என்றும் கூறுவார். எழுத்து மூலமாக விசாரிப்பது 'முச்சலிகா' எனப்படும். வாதி பிரதிவாதிகளுக்குரிய சாட்சிகளைப் பஞ்சாயத்தார் சொற்படி ஊர்க்காவல் அழைத்து வருவார்.

வாதி தனது வழக்கை, பஞ்சாயத்தார்க்கு முன் ஊர்க் காவலால் ஒன்றன் பின் ஒன்றாக இடப்பட்டுள்ள ஏழு கோட்டின் மேல் நின்று கடவுள் பெயரில் உண்மை கூறுவதாகச் சத்தியம் செய்ய வேண்டும். வழக்கில் பங்கு பெறும் எவரும் இவ்வாறே கூற வேண்டும்.

பின்னர் பஞ்சாயத்தார் வாதியை ஊரில் சொல்லுங்கள் என்று சொல்லுவார். வாதி தனது வழக்கையும், சாட்சிகளையும் விவரிப்பார்.

வாதி கூறும் வழக்கை யாரும் குறுக்கிடாது கேட்பர். பின்னர் பஞ்சாயத்தார் மீண்டும் வாதி கூறிய வழக்கை ஊருக்குச் சொல்லி வாதியின் கூற்றுச் சரிதானா என்று உறுதிப்படுத்துவர். பின்னர் வாதிச்சாட்சிகள் விசாரணை நடைபெறும். பஞ்சாயத்தார் பேசாத போது, ஊர் கேட்கட்டும் என்று சொல்லுவர். கூடியிருக்கும் ஊரார் யாரும் கேள்விகள் கேட்கலாம். ஒவ்வொரு நபர் சொல் வதையும் பஞ்சாயத்தார் மீண்டும் அதை ஊருக்கு எடுத்துச் சொல்லி உறுதிப்படுத்துவர்.

இதே போன்று பிரதிவாதியும், அவரது சாட்சிகளும் விசாரிக் சப்படுவர்.

அதன்பின் பஞ்சாயத்தார் 5 பேரும் தனியாகத் தமக்குள் பேசி ஒரு மித்த முடிவுக்கு வருவர். அவர்களில் தலைவர் அம்முடிவை ஊருக்குச் சொல்லுவார். விசாரணை ஒரு நாளோ, சில பல நாட் களோ நடக்கக்கூடும்.

வாதி, பிரதிவாதி இருவரும் பஞ்சாயத்தார் கூறும் தீர்ப்பை ஏற்றுக் கொண்டால், பஞ்சாயத்தார் இருவர் கொணர்ந்த வெற் றிலைத் தட்டையும் எடுத்து, ஒன்றாக்கி, முதலில் வாதி வெற்றிலை எடுத்து பிரதிவாதி கையில் கொடுக்கச் சொல்லுவார். அதே போன்று பிரதிவாதி, வாதி கையில் கொடுக்கச் செய்வர். அதன் பின் ஊர்க்காவல் ஊருக்கு வெற்றிலை கொடுப்பார்.

யாரேனும் ஒருவர் தீர்ப்பை ஒத்துக்கொள்ள மறுத்தால் வெப் றிலைத்தட்டு அவரவர்க்குத் திருப்பப்படும். பின், அவரது விருப்பப் படி வழக்கு அவர் கேட்கும் வேறு ஊர்ப்பஞ்சாயத்துக்கோ, நாட்டுப் பிரிவின் பஞ்சாயத்தான (மண்) 'மன்றுக்கோ அனுப்பப்படும். பஞ்சாயத்தார் வழக்கு விவரமனைத்தையும் எழுதி முத்திரையிட்டு' ஊர்க்காவலிடம் கொடுத்து அனுப்புவர். இது 'ஏறுதல் போடுதல், எனப்படும்.

எத்தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள மறுப்பவர் ஊரின் வாழ்வி லின்று விலக்கி வைக்கப்படுவார். இவர் தனது குற்றிலை நெருக்கடி யால் மீண்டும் ஊரில் சேர விரும்பினால், ஊரில் மன்னிப்புக் கேட்டு, விதிக்கும் அபராதம் கட்டிய பின்பு ஊரில் சேர்த்துக் கொள்ளப் படுவார்.

தண்டனை

பஞ்சாயத்தார் அளிக்கும் தண்டம் பல வகைப்படும். அது தனி நபரின் சக்தி, சமுகநிலை, கொண்டு அளிக்கப்படும். கிராமத் தொழி

லாளிகளுக்கு இழைக்கப்படும் குற்றங்களுக்குக் கடும் தண்டம் விதிக்கப்படும். நிலத் தொடர்பான திருட்டுகளுக்கு 1க்கு 16 என்ற விகிதத்தில் அபராதம் விதிக்கப்படும். அபராதத் தொகை துவக்கத்தில் அதிகமாக இடப்பட்டு, பின்னர் தண்டம் பெறுபவன் மன்னிப்புக் கேட்கக், கேட்கக் குறைக்கப்படும். தவறை ஒத்துக் கொண்டவனுக்கு மன்னிப்பும் எளிய தண்டனையும் இருக்கும்.

ஒழுக்கத்தவறு செய்வோர், மான உணர்வு பெறுகின்ற வகையில், மண் சுமந்து ஊர் சுற்றும்படி செய்யப்படுவர்.

சாட்சி இல்லாத வழக்குகளில் கண்டபத்திரம் போடுதல் என்ற வழக்காறு உண்டு. இதன்படி, வாதி கோரும் கோயிலில் பிரதிவாதி வந்து, சத்தியம் செய்யவேண்டும். இக்கோயில்கள் பெரும்பாலும் காளிகோயில்களாகவே இருக்கும். கொல்லங்குடி, மடப்புரம் கோயில்களில் கண்டபத்திரம் போடுவதுண்டு.

பிரதிவாதி, குளித்து ஈர உடையுடன் கோயிலுக்கு வந்து, அரளிப்பூ மாலை அணிந்து, வெள்ளைச்சேவலை கோயில் முன் அறுத்து அந்த இரத்தத்தால் திலகமிட்டு இக்கோயிலார் ஏற்றி வைக்கும் சூடத்தை, வழக்கை மறுத்துக் கூறிக் கையால் தட்டி அணைக்க வேண்டும். பிரதிவாதியின் செயலைக் கோயிலார் ஊருக்கு 'முறி' எழுதிக் காவல் மூலம் அனுப்பி வைப்பர்.

நாட்டுப் பஞ்சாயத்து, ஊர் வழக்குகளை விசாரித்து, ஒரு மனதான முடிவு கண்டு சமரச உணர்வை வளர்க்கவே உதவி செய்யும். ஊர் முற்றுகக் கலந்து கொள்ளும் சிறப்பு உண்டு.

இத்தகைய நாட்டுப் பஞ்சாயத்துகள் இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் வரையிலும் நன்முறையில் செயல்பட்டன. தற்போது அவை வலுவிழந்து, உருவிழந்து போய்விட்டன.

பகைவனுக்கருளும் பழந்தமிழர் பண்பாடு

இரா. ஹரிப்ரியா

பாண்டி நாட்டில் கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் கொலை வழக்கின் பொருட்டு ஊர்ச்சபையார் எவ்வாறு தீர்ப்பளித்தனர் என்பதற்கு இராமநாதபுரம் மாவட்டம், திருக்கோட்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோயிலில் உள்ள மூன்று கல்வெட்டுகள் சான்றாக அமைந்துள்ளன.

இம்மூன்று கல்வெட்டுகளும், வழக்கின் விவரம், தீர்ப்பு குறித்து அன்று நடந்த நிகழ்ச்சிகளை வரிசைப் படுத்திச் சொல்கின்றன. கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சி எம்மண்டலமுங் கொண்டருளிய சுந்தரபாண்டியன் ஆட்சியில் 11 ஆவது ஆண்டில் நடந்தது.

முதற் கல்வெட்டுச் செய்தி

திருக்கோட்டியூர் மாதவன் கோயில் நிர்வாகிகளில் (ஸ்தானிகர்கள் ஐவரில்) ஒருவரான 'வாமனபட்டர்' ஐப்பசி மாதம் 25 ஆம் நாள் இரவு கோயில் கைங்கர்யம் முடிந்ததும், கோயிலை அடைத்து விட்டு, கிழக்குவீதி வழியாகத் தன் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அதுசமயம் சத்தியநாவன் என்பவன், தெருவின் இருமருங்கிலும் தன் அடியார்களை ஆயுதபாணிகளாக நிறுத்தி வைத்திருந்தான். பட்டர் இருட்டில் அந்த வழியாக வந்து கொண்டிருந்தபோது வழிமறித்து ஆயுதங்களால் தாக்கிப் பாதத்திலும் இரண்டு ஒழுகையிலும் வெட்டிப் பட்டரைக் கொலை செய்து விட்டான். உடனே சத்தியநாவனும் அவனது ஆட்களும் மன்றித்திட்டுக்குத் தப்பிச் சென்றுத் தலைமறைவாகி விட்டனர்.

கொலையாளிகள் தப்பிச் சென்று விட்டமையால் 'மூலபரிஷத்' என்னும் ஊர்ச்சபையார், சத்தியநாவனுக்குச் சொந்தமான 'சிறுவேற்குறிச்சி' கிராமத்தில் இருந்த நிலங்கள், வீடுகள், தோட்டங்கள், ஆண், பெண், பணியாட்கள் அனைத்தையும் பறிமுதல் செய்து, சொக்கநாராயணப் பெருமாள் கோவிலுக்குத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்து விட்டனர்.[1]

கொலை நடந்தது ஐப்பசி 25 ஆம் நாள் இரவு. இவ் வழக்கில் ஊர்ச்சபையார் தீர்ப்பளித்தது கார்த்திகை 4ஆம் நாளன்று. கொலை

நடந்து பத்து நாட்களுக்குள் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு சொத்து பறிமுதல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு, நிறைவேற்றப் பட்டும் உள்ளது நோக்கற்பாலது.

இரண்டாம் கல்வெட்டுச் செய்தி

தேவர்கள் நாயன் என்பவனும் இக்கொலையில் சம்பந்தப்பட்டவனாகக் கருதப்பட்டான். அவனும் அயல்நாட்டிற்குத் தப்பிச் சென்று தலை மறைவாகி விட்டான். எனவே அவனுக்குச் சொந்தமான வாசுதேவமங்கலம் என்ற கிராமத்திலிருந்த நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டுக் கோயிலுக்குக் கொடுக்கப் பட்டன.

பின்னர் வாமனபட்டரின் ஆட்கள் பழிக்குப்பழி வாங்கும் நிலையில் சத்தியநாவனைத் தீர்த்துக் கட்டி விட்டனர். எனவே ஊர்ச்சபையார் தேவர்கள் நாயன் என்பவனுக்குச் சொந்தமான வாசுதேவமங்கலம் கிராமத்தைப் பறிமுதல் செய்வதற்கான ஆணையை ரத்து செய்தனர். இருப்பினும் மேற்படி நிலங்களில் ஒரு மாநிலம் மட்டும் கோவிலுக்காக நிறுத்திக் கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட சில தோட்டம் துறவுகள் மீது வரிகள் விதித்து அதன் மூலம் கிடைக்கும் வருமானம் கோயிலுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது.[2]

இத்தீர்ப்பு கார்த்திகைத் திங்கள் 25 ஆம் நாள் அளிக்கப் பட்டது. முதல் தீர்ப்புக்குப் பின் இருபது நாட்களுக்குள் மறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. தேவர்கள் நாயன் தலைமறைவாக இருந்த போதிலும் அவன் சொத்துக்கள் திருப்பியளிக்கப் பட்டுள்ளன.

மூன்றும் கல்வெட்டுச் செய்தி

மேற் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த நான்கு மாதங்கள் கழித்து அதாவது மாசி மாதத்தில் மற்றுமோர் புதுமையான நிகழ்ச்சி நடைபெற்றது.

சத்திய நாவன் மகனான சேர்மலைப் பெருமாள் என்பவன், கோயில் நம்பிகள், ஸ்தல ஸ்ரீவைஸ்ணவர்கள், கோயிற் கணக்கர், சமயிகள், ஸ்ரீகாரியஞ் செய்வார், கோயில் பணியாளர்கள், கோயிலில் பாசுரம் சேவிப்பவர்கள், தொண்டைமானார் காரியஸ் தராக இருந்த நாராயணதாசர், அகம்மடியர், கைகோளர்கள், திருப்பணி செய்யும் ஜனங்கள், சேவார்த்திகள் யாத்திரிகர்கள் ஆகிய அனைவரையும் கூட்டி, தான் தன் தகப்பனார் செய்த கொலை வழக்கில் எவ்விதத்திலும் பங்கு கொள்ளவில்லை என்றும், தான்

நிரபராதி என்றும், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதால் தான் மிகவும் துன்பப்படுவதாகவும், பறிமுதலான நிலங்களையும், வீடுகள், தோட்டங்கள், பணியாட்கள் அனைத்தையும் தனக்குத் திருப்பி அளிக்க வேண்டுமென்றும், அதற்கு ஈடாகத் தான் கோவிலுக்கு 800 பணம் கொடுத்துவிடுவதாகவும் விண்ணப்பம் செய்து கொண்டான்.

இவன் கோரிக்கையில் நியாயம் இருப்பதை மேற் குறிப்பிட்ட பெரியோர்கள் உணர்ந்தனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து ஊர்ச்சபையாரிடம் சேர்மலைப் பெருமாளின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்தனர்.

ஊர்ப் பெருமக்களின் பரிந்துரை ஒரு நிபந்தனையின் பேரில் சபையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வீரகேரளமளவராயன் சந்தி என்ற கட்டளையைத் தொடர்ந்து நிறைவேற்றி வைக்க வேண்டும் என்னும் நிபந்தனையின் கீழ் சேர்மலைப் பெருமாளுக்குச் சொத்துக்கள் திருப்பி அளிக்கப்பட்டன.[3]

இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் ஐந்து மாதங்களில் நடைபெற்றவை. ஐந்து மாதங்களில் சபையார் மூன்று முறை கூடித் துரிதமாகத் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. இன்றைய நீதி மன்றங்களின் வழக்கு விசாரணைகளோடு இவற்றை ஒப்பிட்டு நோக்கும் போது, ஊர்ச்சபையாரின் அரும் பணியினை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

நீதிமுறை : அன்றும்—இன்றும்

'Justice delayed is justice denied' என்பார்கள். நியாயம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால் நியாயம் மறுக்கப்படுகிறது. ஒரு கொலை நடந்தால் அதனைக் காவல்துறையினர் விசாரித்து, கொலைகாரனைக் கண்டு பிடித்து, குற்றம் சாட்டி, சாட்சிகள் தயார் செய்து, மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணையாகி, மாவட்டநீதிமன்றத்துக்கு அனுப்பி விசாரணை முடித்து தண்டனைத் தீர்ப்பு பெறுவதற்குள் ஆண்டுகள் பலவாகின்றன. அதற்குள் நடந்த நிகழ்ச்சியையே மக்கள் மறந்து விடுகின்றனர்

வழக்கில் சாட்சிகள் தேவை. இன்று சாட்சிகளை விசாரிக்கப் பல வாய்தாக்கள் ஏற்படுவதால் சாட்சிகளின் காலமும், பணமும், வேலையும் வீணாக்கப்படுகின்றது. அவர்களுக்குப் போதிய மதிப்பும் அளிக்கப்படுவதில்லை. எனவே இன்று சாட்சிகள் கிடைப்பது அரிது.

முன் குறிப்பிட்ட கல்வெட்டுச் செய்தியிலிருந்து சேர்மலைப் பெருமாளுக்கு நியாயம் வழங்க ஊரே திரண்டு வந்து பரிந்துரை செய்யும் விந்தையினைக் காண்கிறோம்.

சோழர், பாண்டியர் காலத்துக் குற்றவியல் நீதி நிர்வாகம் தொடர்பான சான்றுகளை நோக்குமிடத்துக் கொலைக் குற்றங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

1 வேண்டுமென்றே திட்டமிட்டுக் கொலைசெய்வது (இன்றைய குற்றவியல் விதி ஐ. பி. சி. 300).

2 மரணம் நேரிடும் என்று தெரிந்தே மரணம் நேரிடும் வகையில் செயல்கள் செய்வது. (இன்றைய குற்றவியல் விதி 299)

3 தற்செயலாக வேட்டையாடும் போதோ, சுடும்போதோ, கவனக் குறைவினாலோ நேரிடக்கூடிய மரணம். (இன்றைய குற்றவியல் விதி 304 ஏ. ஐ. பி. சி.).

இம்மூன்று வகையில் நேரிடும் மரணங்களுக்கு எவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது எனக் கல்வெட்டுகளிலிருந்து அறியலாம்.[4] கொலை செய்தவனுக்கு மரண தண்டனை விதிக்காமல், ரொக்கமாகவோ அல்லது நிலமாகவோ கோயிலுக்கு விளக்கு எரிக்கும் நிவந்தமாகக் கொடுக்க வேண்டுமென்று விதித்துள்ளார்கள். இவ்விதக் குற்றங்களுக்கு மரண தண்டனை நியாயமெனினும் அதனை மாற்றி அபராதங்கள் விதிக்கப்பட்டன. இதனை நோக்குமிடத்து இக்காலத்தில் 299 ஏ. ஐ. பி. சி. யின் கீழ் கருதப்படும் கொலைக் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்க இடமிருந்தும், 302 ஐ. பி. சி. யின் கீழ் ஆயுள் தண்டனையாக விதிப்பதற்கு ஒப்பாகும் இது.

திருக்கோட்டியூரில் நடந்த சம்பவங்களை இதனுடன் இணைத்துப் பார்க்கும்போது வாமனபட்டரை வேண்டுமென்றே திட்டமிட்டு வழிமறித்துக் கொலை செய்துள்ளனர் என்று தெரிகிறது. இதற்குத் தொடர்புடையவர்கள் மீது மரண தண்டனை விதிப்பதே நியாயமாகும். ஆனால் கொலையாளிகள் தப்பி விட்டனர். எனவே அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் கொலை செய்தவன் மீது பழிக்குப் பழி வஞ்சம் தீர்த்துக் கொள்ளப்பட்டதும், அவன் மகன் ஊர்ச் சபையாரிடத்தில் இரக்கம் காட்ட விண்ணப்பித்துக் கொள்கிறான். அவன் சொத்துக்கள் இவனுக்குத் திருப்பித் தரப்படுகின்றன. கொலையில் சம்பந்தப்பட்டவனுடைய மகனுக்குக் கருணைகாட்டிய அதே நிலையில், தேவர்கள் நாயனுக்கும் பழிக்குப்பழி நடந்தேறிய பின்

அனுதாபம் காட்டிச் சொத்துக்கள் திருப்பிக் கொடுக்கப் பட்டுள்ளது.

இதிலிருந்து அபராதமாகப் பெற்ற தொகையும் பறிமுதல் செய்யப்பட்ட நிலமும் அரசைச் சேரா. அவை கோவில் கைங்கர்யம் செய்வதற்கு விடப்பட்டன என்று தெரிகிறது. மனு நீதியிலும் குற்றங்களுக்காக விதிக்கப்படும் அபராதங்களை அரசன் கொள்ளக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.[5]

குற்றவாளிகளுக்குக் கடுந்தண்டனை வழங்காது ஏன் அபராதத் துடன் அல்லது கோயில் விளக்கு எரித்தல், சந்தி கைங்கர்யம் செய்தல் என்ற நிபந்தனையின் பேரில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்று எண்ணிப் பார்க்கும்போது ஓர் உண்மை புலனாகிறது.

மனிதன் சமூகச் சட்டதிட்டங்களை விட மனசாட்சிக்கு அதிக மதிப்புக் கொடுத்து நடப்பவன். கொலை செய்வது மகா பாதகம் என்பதை அறிவான். ஆத்திரத்தில் அறிவிழந்து அத்தகைய கொடிய செயலைச் செய்தாலும் அவனுக்கு அந்தப் பாவத்தைப் போக்கிக் கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டும். கோயிலுக்கு விளக்கு ஏற்றுதல், சந்தி கைங்கரியம் செய்தல் எல்லாவற்றிலும் மேலான பிராயச்சித்தமாகக் கருதப்பட்டது. இதனால் கொலையுண் டவனின் ஆன்மா கொலை செய்தவனை மன்னிக்கவும் கூடும். அவன் திருந்தி வாழவும் வழி ஏற்படுகிறது.

இதுகாறும் குறிப்பிட்ட செய்திகளின் சாரம்

பழந்தமிழ் நாட்டுக் கிராமங்களில் 'மூலபரிஷத்' என்னும் ஊர் சபையாருக்கு ஊர் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதில் முழுஉரிமை அளிக்கப்பட்டிருந்தது. ஊர்ச்சபையாருக்கு ஆலோசனை கூற ஊர்ப் பெருமக்கள் அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது. குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் தண்டிப்பதிலும் உண்மைக்கும், நியாயத்திற்கும் தக்க மதிப்பு அளிக்கப்பட்டது.

கொலைக் குற்றமேயாயினும் மரண தண்டனை விதிப்பதில் தயக்கம் காட்டியது. மனசாட்சிக்கு அதிக மதிப்பு இருந்தது. கோயிலுக்கு அபராதம் செலுத்தி விளக்கேற்றி வந்தால் கொலையாளிக்கு அதுவே தக்க தண்டனை என்று கருதப்பட்டது. கொலையுண்டவன் ஆத்மா சாந்தியடையச் செய்வதே கொலை பாதகனின் கடமை என்று சமூகம் கருதியது.

அன்பும் கருணையும், மனிதன் சீர்திருந்த வேண்டுமெனும் மனப்பான்மையும், நியாயமும், நேர்மையும் நீதி வழங்குவதில்

குறிக்கோள்களாக இருந்தன. அபராதம், பறிமுதல் ஆகிய சொத்துக்கள் அரசனையோ, அரசாங்கத்தையோ சேரக்கூடாது, கோயிலையே சேர வேண்டும் என்ற உன்னத இலட்சியம் கடைப் பிடிக்கப்பட்டது. கோயிலைச் சேர்ந்த சொத்துக்கள் கல்விக் கூடங்கள், பயணிகளுக்கு உணவளித்தல் போன்ற பொதுப் பணி களுக்கும் செலவழிக்கப்பட்டன.

மேற்படி வழிமுறைகளை நோக்கும்போது, இன்று உலகெங்கும் சிந்திக்கப்பட்டு வரும் கொள்கை, அதாவது மரணதண்டனை நீக்கப்பட வேண்டுமென்ற தீவிர யோசனைகளுக்கும், எண்ணங் களுக்கும் ஆதரவாகவே இவை உள்ளன. பழிக்குப்பழி மரணதண்டனை என்பது அநாகரிகம். மனிதனைச் சீர்திருத்து வதற்கு உகந்ததாக இல்லை. குற்றம் இழைத்தவனைச் சீர்திருந்தச் செய்வதே சட்டத்தின் முக்கிய குறிக்கோள். சமூக நலனுக்கும் இதுவே ஏற்றமுடையது. இதிலிருந்து குற்றம் புரிந்த பகைவர் களுக்கும் அருள் செய்யும் பரந்த மனப்பான்மை கொண்ட பழந்தமிழர்தம் பண்பாட்டின் மேன்மை புலனாகிறது.

குறிப்புகள்

1 301 of 1923

2 302 of 1923

3 303 of 1923

4 ARE 1890-1900, part II, p. 9
1906-1907, p. 63
1909-1910, p. 85
1917-1918, p. 148
1918-1919, p. 99

5 Manuneethi, ix, 243

பாண்டி நாட்டுக் கிராமச் சபைகளின் கோயிற் பணிகள்

அ. பாஸ்கர பால்பாண்டியன்

பண்டைய தமிழகத்தில் கிராமச்சபைகள் முக்கிய பங்கு வகித்தன. கிராம மக்களின் வாழ்வியலுக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் செவ்வையுறச் செய்தன. கிராமச்சபைகள் ஆற்றிய பணிகளுள் சிறப்பானது கோயிற் பணியாகும். சோழ நாட்டுக் கிராமச்சபைகள் ஆற்றிய கோயிற் பணிகளைப் போலவே பாண்டியநாட்டுக் கிராமச்சபைகளும் கோயிற் பணிகளைச் சிறப்பாகச் செய்தன என்பது கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது.

சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரிவாரியம், பஞ்சவாரவாரியம், பொன்வாரியம், கழனிவாரியம், கணக்கு வாரியம், கலிங்க வாரியம், குடும்பு வாரியம் என்பன கிராமச் சபைகளில் அடங்கியிருந்த பல வாரியங்கள். சம்வத்சரவாரியம் அறப்பணிகளைச் செய்து வந்தது. நீதி வழங்குவது, கல்விநிலையங் களைக் கவனிப்பது, திருக்கோயிற் பணிகளைச் செய்வது ஆகியன சம்வத்சர வாரியத்தின் பணிகளாகும்.

சம்வத்சரவாரியம் கோயிற் பணிகளைக் கீழ்வரும் குழுக்கள் வாயிலாகச் செயல்படுத்தியது. 1. அகநாழிகை சிவபிராமணர் 2. பதிபாத மூலத்தார் 3. திரு உண்ணாழிகைக் கணப்பெரு மக்கள் 4. திரு உண்ணாழிகை சபை 5. சாத்தகணம் 6. குமாரகணம் 7. கிருஷ்ணகணம் 8. காளிகணம் 9. பேர் இளமையார் 10. சங்கர பாடியார் 11. பஞ்சாசார்யர் 12. சட்டப்பெருமக்கள்.

பாண்டிய நாட்டுக் கிராமச்சபைகள் கீழ்வரும் கோயிற் பணிகளை மேற்கொண்டதாகக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

1 கோயிலுக்காக நிலத்தை விற்பது.

2 கோயில் நிலங்களுக்கு வரிவிலக்கு அளிப்பது.

3 கோயிலைப் புதுப்பித்தலும் அதற்காக வரி வசூல்செய்வதும்.

4 பிறர் கொடுக்கும் பொன்னை முதலாக வைத்துக் கொண்டு வட்டியினால் கோயில் வழிபாட்டைச் செய்வது.

5 கால்நடைகளையோ, பொன்னையோ பெற்றுக்கொண்டு விளக்கெரிக்க நெய் ஊற்றுவதும், அமுது அளிப்பதும்

6 கோயிற் பணிப்பெணிகளைப் பராமரிப்பது.

7 கோயில் வழக்குகளை விசாரிப்பது.

அளற்று நாட்டுக் குளத்தூர் விக்கிரமாமுக பல்லவரையன் சடங்கவிக் குறிச்சிச் சபையாரிடம் நிலம் விலைக்கு வாங்கி அதனை தானமாகப் பெருங்குளம் திருவழுதீச்சுரத்திற்கு வழங்கியதாகப் பெருங்குளத்துக் கல்வெட்டொன்று குறிப்பிட்டுள்ளது.[1]

இராஜராஜப் பாண்டிநாட்டு உத்தமசோழ வளநாட்டு நாஞ்சில் நாட்டுப் பிரமதேயமான சுந்தரசோழச்சருப்பேதி மங்கலத்துச் சபையார் நிலம் ஒன்றினை விற்று அதனால் கிடைத்த பணத்தைக் கொண்டு சுசீந்திரத்து மகாதேவர் கோயிலில் விளக் கெரித்தனர்.[2]

ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன் காலத்தில் திருமலைக் கோயில் நிலங்களுக்கு ஊர்ச்சபையினரால் தண்ணீர் வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டதென்று அறிகிறோம்.[3] கோயில் நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்துக் கோயில் வருமானத்தைக் குறைய விடாமல் பார்த்துக் கொண்ட ஊர்ச்சபையாரின் பணி இதனால் புலனாகிறது.

ஜடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் கோயிலொன்று புதுப் பிக்கப்பட்டதாகவும், புதுப்பிப்பதற்கான செலவுக்காகத் தனி வரிகள் பல ஊர்ச்சபையாரால் வசூலிக்கப் பட்டன என்றும் அறிகிறோம்.[4] துணிப்பொட்டலம் ஒவ்வொன்றுக்கும் துணி வணிகர்களிடம் $\frac{1}{4}$ பணம் வரியும், பாக்கு, மிளகுப் பொதி ஒவ்வொன்றுக்கும் 1 பணம் வரியும் வசூலிக்கப்பட்டன. கோயில் களில் கொண்டாடப்படும் விழாச்செலவுகளுக்காகவும் ஊர்ச் சபையாரால் தனி வரிகள் வசூலிக்கப்பட்டுள்ளன. மாதம்பாக்கம் என்ற ஊரின் கோயில்விழாவுக்காக ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் ஊர்ச்சபையாரால் தனி வரிகள் வசூலிக்கப் பட்டுள்ளன.[5]

திருச்செந்தூர் முருகன் கோயிலிலுள்ள கல்வெட்டொன்று அரிய செய்திகள் பலவற்றைத் தருகின்றது.[6] ஊர்ச்சபைகள் சில முருகன் கோயில் வழிபாட்டினை எவ்வாறு நடத்தின என்பதனை

அக்கல்வெட்டுத் தெளிவாக விளக்கியுள்ளது. இரண்டாம் வரகுண பாண்டியனது ஆட்சிக்காலத்தில் அதிகாரிகளான இருப்பைக்குடி கிழவன், சாத்தம்பெருமாள், அளத்தூர் நாட்டுக்கோன் ஆகியோர் மன்னன் கொடுத்த நிறைகுறையாப் பழங்காசுகளைச் சில ஊர்ச்சபையாரிடம் பகிர்ந்து கொடுத்தனர். அப்பணத்தினை ஊர்ச்சபையார் முதலாகக் கொண்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு செந்தூர் முருகனுக்கு வழிபாடு நிகழ்த்த வேண்டும். ஊர்ச்சபையாருக்குக் கொடுக்கப்பட்ட முதலும், அதுகொண்டு அவர்கள் நடத்தவேண்டிய வழிபாடும், வழிபாடு நடத்தத் தவறினால் அவர்கள் செலுத்தவேண்டிய அபராதமும் கல்வெட்டில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அதனைக் கீழ் வரும் பட்டியல் தெளிவாகக் காட்டும்.

	ஊர்ச்சபை	முதல்	வட்டியினால் வழி பாட்டு முறை	அபராதம்
1	கொற்கை	96 பழங்காசு 8 பொன்	திருவமுது படைக்க வேண்டும் மார்கழி திருவாதிரை, மாசி மகம், வைகாசி விசாகம் ஆகிய திருவிழா நாட்களில் இரு மடங்கு திருவமுது படைத்தல்	25 காசு அபராதம். முதலையும் இரட்டிப்பு பாக்க வேண்டும்
2	நல்லூர்	118 பழங்காசு 6½ பொன்	வாழைப்பழ அமுது, சர்க்கரை அமுது படைக்கவேண்டும்.	50 காசு
3	சாலியம்	24 காசு 5½ பொன்.	பருப்பு, பயறு, வெற்றிலை வாங்கிக் கொடுக்க வேண்டும்.	5 காசு
4	வரகுண : மங்கலம்.	110 காசு	விளக்கெரிக்க வேண்டும்	12½ காசு
5	இறவாணி மங்கலம்	32 காசு	திருமஞ்சனச் செலவு	—
6	கெங்கை மங்கலம் ஆலப்பட்டச் சபை	16 காசு	இளநீர் படைத்தனர்	—
7	மானவீர பட்டினம்	120 காசு	பூ வாங்கிப் படைத்தனர்.	—

ஊர்ச்சபையாரிடமோ அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட அகநாழிகையாரிடமோ சிலர் கால்நடைகளேயோ அல்லது பொன்னேயோ தானமாகக் கொடுத்து நிவந்தங்கள் செய்வதுண்டு. சட்டன் பெரும்பற்றப்புலியூர் வாய்ச்சியன் நாராயணனுதன் அகநாரிகைச் சிவபிராமணர்களிடம் 25 சாவாமூவாப் பேராடு களைக் கொடுத்தான். அதன் மூலம் கிடைக்கும் நெய்யினைக் கொண்டு பெருங்குளத்துச் சிவன் கோயிலில் விளக்கெரிக்க ஏற்பாடு செய்தான் என்று கல்வெட்டொன்று குறிப் பிட்டுள்ளது.[7]

ஈழநாட்டு மழவரையன் சென்னிகண்டன் என்பவன் சுசிந்திரம் கைலாசநாதர் கோயிலில் விளக்கெரிக்க மூலபரடைச் சபையிடம் 50 ஆடுகளைக் கொடுத்தான் என்றும் தென்குணவாய்க் குன்றத்து சூலபாணி சுசிந்திரத்துச் சபையிடம் 50 ஆடுகளைக் கொடுத்தான் என்றும் வெண்புநாட்டு நால்கூர்குடியன் சுசிந்திரத்துக் கோயில் அகநாழிகையாரிடம் விளக்கெரிக்கத் தானம் கொடுத்தான் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

ஊர்ச்சபையார் கோயில் வழிபாட்டிற்கான அமுது படைக்கும் பணியினையும், பிராமணர்களுக்கு அமுது அளிக்கும் பணியினையும் மேற்கொண்டிருந்தனர் என்றும் அறிகிறோம். சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் காலத்தில் நாராயன் ஸ்ரீ மாதவன் என்பவன் மூலபரடைச் சபையாரிடம் நிலம் தானம் கொடுத் தான். இதனைக் கொண்டு சபையார் நாள்தோறும் 12 நாழி அரிசியால் திருவமுது படைத்துச் சுசீந்திரத்துப் பரமஸ்வாமிகட்கு அளித்தனர் என்று கல்வெட்டொன்று செப்புகிறது.[9] பூவந்தி என்பவர் அகநாழியாரிடம் திருவமுது படைப்பதற்காக நிலம் தானம் கொடுத்துள்ளார்.

கி. பி. 1256 இல் வீரபாண்டியன் மனைவியான சொக்கத் தாண்டாள் சுசிந்திரம் சபையாரிடம் 200 பொன் கொடுத்தாள் சபையார் இதனைக் கொண்டு நாள்தோறும் சுசிந்திரநாயனார்க்கு அமுது படைத்தனர். இதனோடு நாள்தோறும் மூன்று பிராமணர் களுக்கு உணவும் அளித்தனர். சொக்கத் தாண்டாள் வள்ளியூர்க் கோயிலிலும் அமுது படைக்கத் தானம் வழங்கினாளென்று வள்ளியூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.[11]

மன்னவன் மனைவியே ஊர்ச்சபையாரிடம் வழங்கினாள் என்பது, அக்காலத்தில் மக்கள் ஊர்ச்சபையாரிடம் கொண்டிருந்த நம்பிக் கையினைக் காட்டுகிறது.

கோயிலில் பணிபுரியும் பெண்களை ஊர்ச்சபை பராமரித்து வந்துள்ளது. வேணாடாண்ட வரகுணன் என்பவன் முருகஞ்சேத்தி என்பவளைக் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் பார்த்திபசேகரபுரம் கோயிலுக்குப் பணிப் பெண்ணாக வழங்கினான். அவளுடைய பராமரிப்புச் செலவுக்காக நிலம் ஒன்றினைப் பார்த்திபசேகர புரத்துச் சபையாரிடம் கொடுத்தான். நிலத்திலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு முருகஞ்சேத்தியை ஊர்ச்சபையார் பராமரித்து வந்தனர். இச்செய்தி கல்வெட்டொன்றால் தெரிய வருகிறது.[12]

கோயில் சம்பந்தமான வழக்குகளைச் சபையினர் திறம்பட விசாரித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளனர். இராமநாதபுரம் கோயிலில் பூசை செய்த வாமனப் பட்டர் என்பவர் சத்தியநாவன் என்பவனால் கொல்லப்பட்டார். சத்தியநாவன் தலைமறைவாகி விட்டான். வழக்கினை விசாரித்த ஊர்ச்சபை சத்தியநாவனின் தோட்டம், வீடு ஆகியவற்றைப் பறிமுதல் செய்து கருவேலங் குறிச்சிச் சொக்கநாராயணர் கோயிலுக்கு உடைமையாக்கியது. ஆண்டுகள் சில சென்றன. சத்தியநாவன் இனந்தெரியாத ஒருவனால் கொல்லப்பட்டுவிட்டான். இச்செய்தியினை ஊர்ச்சபையாரிடம் சத்தியநாவனின் மைந்தன் தெரிவித்துத் தன் தகப்பனின் சொத்துக்களைத் தனக்கு நல்குமாறு வேண்டினான். சபை ஆலோசனை செய்து சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்தது. சொத்துக் களைப் பெற்ற சத்தியநாவனின் மைந்தனிடம் 800 பொற்காசுகளைக் கோயிலுக்குத் தானம் அளிக்குமாறு சபை வேண்டியது. அவனும் அவ்வாறே செய்தான். திருப்பத்தூர்க் கோயிலில் அதிகாரியாக இருந்த ஒருவர் பிராமண விதவையிடம் தவறாக நடந்துகொண்டார். இச்செய்தி ஊர்ச்சபையாருக்குத் தெரியவந்தது. சபை விசாரித்து அதிகாரிக்குத் தண்டனை வழங்கியது. மாறவர்மன் குலபாண்டியன் காலத்தில் நடந்தது இது.[13]

இவ்வாறு பாண்டிய நாட்டில் இருந்த ஊர்ச்சபைகள் பல்வேறு பணிகளைக் கோயிலுக்காக ஆற்றின என்பது கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. கிராமசபைகளிடம் மக்கள் வைத்திருந்த பெருமதிப்பும், மன்னவன் கொடுத்திருந்த அதிகாரமும் தெளிவாகின்றன.

குறிப்புகள்

1 453 of 1929-30

2 கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், தொகுதி 2.

3 15, 16 of 1924

4 88 of 1914

5 323 of 1911

6 திருச்செந்தூரில் கல்வெட்டு, அ. பாஸ்கரபால் பாண்டியன், தினமலர் நாளிதழ், 23.7.72.

7 233 of 1932—33

8 கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், தொகுதி, 2.

9 கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், தொகுதி, 2.

10 394 of 1929-30, 138 of 1929-30.

11 கவிமணியின் உரைமணிகள், தேசிக விநாயகம் பிள்ளை, பக். 145—149.

12 TAS, i, p. 9.

13 125 of 1908

திருநறையூர் நாட்டு நாயகர்கள்

சு. இராசகோபால்

ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்த தனி மனிதர்களைப்பற்றி அறிந்து கொள்ளும் முயற்சியில் திருநறையூர் நாடு என்ற பண்டைய ஒரு நாட்டுப்பிரிவில் உள்ளவூர்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. திருநறையூர் என்பது இன்றைய தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் அருகிலுள்ள நாச்சியார் கோயிலைச் சேர்ந்த ஒரு சிற்றூர். கி. பி. 9 முதல் 13 ஆம் நூற்றுண்டு வரையிலான காலத்தில் தன்னகத்தே சுமார் 50 ஊர்களைக் கொண்டு விளங்கியது. இவ்வூர்களைச் சேர்ந்தவர்களாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், திருநறையூர் நாட்டுப் பகுதியிலிருந்தும் கல்வெட்டுகளில் பலர் குறிக்கப்படுகின்றனர். இவ்வூர்களைச் சேர்ந்தவர்களாகக் கிடைத்துள்ள அரசு ஊழியர்கள், தானைத்தலைவர்கள், கோயில் ஊழியர்கள், மத்யஸ்தர்கள், எழுத்தர், காவல்காரர், மடம் நடத்திக் கோயில் எடுத்துச் சிறப்புறத் திகழ்ந்த பெரியோர், பக்திப் பெருக்கால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வழி பட்டுக் கொடைகள் கொடுத்து விளங்கிய பக்தர்கள் இன்னும் பல்வேறு தனி மனிதர்கள் ஆகியோரைப் பற்றிய செய்திகள் இங்கு தரப்படுகின்றன. மேலும் இந்நாட்டின் பல்வேறு சபைகளிலும், கோயில்களிலும் பணியாற்றியவர்களின் பெயர்களும், பணிகளும் பிற பகுதிகளிலிருந்து இப்பகுதிக்கு வந்து பணியாற்றிக் கொடை கொடுத்து வாழ்ந்தவர்களின் பெயர்களும், செய்திகளும் கிடைத்துள்ள போதிலும் விரிவஞ்சி அவை இங்கு விடப் பட்டுள்ளன.

அரசு ஊழியர்

கடாரத்து அரசன் சூளாமணிவர்மன், நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரம் எடுத்தான். அதற்கு இராஜராஜன் அனுமதி வழங்கியதோடு அதற்குப் பள்ளிச்சந்தமாக ஆனைமங்கலம் என்ற ஊரைத் தானம் வழங்கினன். அந்தத்தானம் அவன் ஆணையிட்ட நாளிலிருந்து சுமார் நான்கு நாட்களுக்குள்ளாக நடத்தி முடிக்கப் பட்டுச் சாசனங்கள் எழுதி முடிக்கப்பட்டன. அவ்வித ஆணையை வரியிலிட்டு எழுதி முடித்த அதிகாரிகளில் ஒருவனுக,

நம்கருமம் ஆராயும் க்ஷத்ரிய சிகாமணி வளநாட்டு
திருநறையூர் நாட்டு கற்குடையான் பிசங்கன்
பாருரான மீனவன் மூவேந்த வேளான்

லெய்டன் செப்பேட்டில் குறிக்கப்படுகின்றான்.[1]

இவ்விதம் வழங்கப்பட்ட ஆனைமங்கலத்தின் எல்லை பெண் யானையைக் கொண்டு எல்லை வழியாக நடத்தி எல்லை குறிக்கப் பட்டது. அப்போது,

இப்பரிசு பட்டாராய் நின்று பிடி நடப்பித்து
அறவோலை செய்வித்தேன் க்ஷத்ரிய சிகாமணி
வளநாட்டு திருநறையூர் நாட்டு ஸ்ரீதுங்கமங்கலமான
அபிமான பூசன சதுர்வேதி மங்கலத்து தூற்பில்
ஸ்ரீதரப்பட்டனேன் இவை என்னெழுத்து

என்று பட்டராய் இருந்து அந்த தானத்தின் எல்லையைக் குறித்து கையெழுத்திட்ட இந்நாட்டு ஸ்ரீதரப்பட்டன் குறிக்கப்படுகின்றார்.[2]

வீரராஜேந்திரன் காலத்தில் (கி. பி. 1063-70) சோழ நாட்டின் உள்ளடங்கிய பாண்டிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பை இவனது மைந்தன் ஏற்றுக்கொண்டு சோழ பாண்டியனாக ஆட்சி செய்தான். அவனது 3ஆவது ஆட்சியாண்டுக் காலத்தில் அவனது தந்தை வீர ராஜேந்திரனிடமிருந்து ஒரு ஓலை பாண்டி நாட்டிற்கு வந்தது. அதன்படி சேரன்மாதேவி (திருநெல்வேலி) இறைவனுக்கு ஒரு குறிப்பிட்ட ஊர் நிலங்களைத் தானமாக வழங்கி அந்நிலங்களுக்கு உள்ள வரியை நீக்கியும். மேலும் அவ்வூரில் கிடைக்கும் பிறவரி வருவாய்களை அக்கோயிலுக்குத் தானமாக கொடுக்கவும்வேண்டும், அவன் சேரன்மாதேவி கோயிலிலிருந்து ஆணையிட அதைத் திருமந் திரவோலை கேட்டுச் சொல்ல அதனை அங்கிருந்த அதிகாரிகள் ஓலையில் எழுதினர். அவ்வதிகாரிகளில் முதலானவனாகத் திருநறை யூர் நாட்டுத் தண்டந்தோட்டத்தைச் சேர்ந்த உதயதிவாகரன் குறிக்கப்படுகின்றான்.

புகுந்த கேழ்வி வரியிலிட்டுக் கொள்க வென்று அதிகாரிகள்
சோழ மண்டலத்து உய்யக் கொண்டார் வளநாட்டுத்
திருநறையூர் நாட்டுத் தண்டந்தோட்டமுடையார்
உதைய திவாகரன் அமலனாகனரான உத்தம சோழ
மூவேந்த வேளாரும்

இக்கொடையில் நிலங்களுக்கு உள்ள வரி நீக்கப்பட்டதால் வரி விதிக்கும் அதிகாரிகளின் கையொப்பமும் இடப்பட்டன. அவ்விதம்.

> புரவுவரி நாயகம் சோழ மண்டலத்து க்ஷத்ரிய சிகாமணி வளநாட்டு திருநறையூர் நாட்டுச்சேற்றூர் கூற்றத்து உழவ சேரி உடையான் அரங்கன் பொற்காரியான ரவி குலராஜ மூவேந்த வேளான்[4]

குறிக்கப்படுகிறான். சோழ நாட்டிலிருந்து நெடுந் தொலைவு சென்று பாண்டி நாட்டில் பணியாற்றிய இவ்விரு திருநறையூர் நாட்டவர் குறிப்பிடத்தக்கவர்.

தானைத் தலைவர்கள்

முதலாம் குலோத்துங்கனது பெரும் வெற்றியின் காரணமாக இன்று தமிழ் இலக்கியங்களில் சிறப்புற விளங்குவது கலிங்கத்துப் பரணி. முதற்குலோத்துங்கனின் கலிங்கத்து வெற்றிக்குக்காரணம் அவனது படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான். இவனுக்குத் துணையாகப் போர்ப்பணிகளில் ஈடுபட்டவன் வாண கோவரையன் என்பவன். இவ்விருவரும் திருநறையூர் நாட்டில் அடங்கிய வண்டாழஞ்சேரி என்ற ஊரைச் சேர்ந்தவர்கள்.[5] கருணா கரத் தொண்டைமான் கலிங்கத்துப் பரணியில் 'வண்டை நகரரசன்' என்றே குறிக்கப்படுகின்றான். கலிங்கத்தின்மீது போர் செய்ய நான் செல்கிறேன் என்று புறப்பட்டுச் சென்று வெற்றிகள் குவித்தான்.[6]

இவனது மனைவி காஞ்சிபுரத்தில் அருளாலப் பெருமாள் கோயிலில் முதலாம் குலோத்துங்கனின் 43ஆவது ஆட்சியாண்டில் நந்தா விளக்குக் கொடுத்துள்ளாள். இதனை,

> சோழமண்டலத்து 'குலோத்துங்க சோழவளநாட்டுத் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி உடையான் வேளான் கருணாகரநாரானதொண்டைமானார் தேவியார் அழகிய மணவாளன் மண்டையாழ்வார் வைத்த திரு நுந்தா விளக்கு

என்று கல்வெட்டுச் சொல்கின்றது.[7]

கருணாகரத் தொண்டைமானுக்கு அடுத்த தானைத் தலைவனான வண்டாழஞ்சேரி உடையான் வேளாளன் வாணகோவரையன் ஸ்ரீரங்கம் கோயிலில் இறைவன் ஏகாதசி அன்று தீர்த்தமாடுவதற் காக நிலம் விலைக்கு வாங்கித் தானம் கொடுத்துள்ளான்.[8]

காவல்காரர்

திருநறையூர் பகுதியில் துக்காச்சி என்று ஓர் ஊர் உள்ளது. இது கல்வெட்டுகளில் விடேல் விடுகு துக்காச்சி சதுர்வேதி மங்கலம் எனப்படும். இங்கு விக்கிரம சோழன் காலத்தில் (கி. பி. 1118-35) கோயில் ஒன்று விக்கிரம சோழீஸ்வரம் என்ற பெயரில் எடுக்கப்பட்டது. ஆனல் ஒரு குறுகிய காலத்திற்குள், அதாவது மூன்றும் இராஜராஜனின் காலத்திற்குள்ளாக (கி. பி. 1218-56) இக்கோயில் தனது சிறப்புகளை இழக்கத் தொடங்கியது. இக்கோயிலுக்கான நிலங்களைப் பெற்றிருந்தவர்கள் கடமை கட்டத் தவறியதால் வருமானம் குறையத் தொடங்கியது. இக்கோயிலில் பணி புரிந்தவர்கள் மேலும் பணியாற்ற இயலாது இக்கோயிலையும் ஊரையும் விட்டு ஓடத் தொடங்கினர். ஊரில் பிராமணர், வேளாளர் ஆகியோருக்குத் துன்பங்கள் விளைய ஆரம்பித்தன.

இந்நிலையில் ஒரு நல்மகன் முன்வந்தான். இவன் இந்த ஊர் நிலங்களைக் கண்காணிப்பவன்; காவல் காணியுடையவன். பெயர் சிராண்டானுன முனையதரயன். இவன் பல பணி நிவந்தக்காரர்கள் ஓடிப்போகாவண்ணம் கோயிலுக்குத் தினமும் சென்று என்னென்ன தேவைப்படுகின்றன என்று ஆராய்ந்து தேவையானவற்றைச் செய்து கொடுத்தான். இறைவனுக்கு வேண்டிய திருப்படிமாற்று, திருமேற்பூச்சு, செங்கழுநீர்ப்பூவால் ஆகிய மாலை ஆகிய நிவந்தங்கள் நடக்கச் செய்தான். நம்பிமாரை அமர்த்தி ஹோமம் நிகழச்செய்தான். பயிர் செய்யாமல் காடாகிப் போன வீளை நிலங்களை மீண்டும் பயிர் செய்ய ஆவன செய்தான். இவனுக்கு இறைவனை எழுந்தருளச் செய்து பார்த்து மகிழவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. மிகுதியாக வந்த தர்மத்தைக் கொண்டு அதனையும் செய்து வைத்தான்.

இவன் நல்ல நேரத்தில் வந்து செய்த பணிகளை அவ்வூர் மக்கள் பெருமையாகக் கொண்டார்கள். இவனுக்குப் பல விதத்திலும் தங்களது நன்றியைத் தெரிவித்தார்கள். இறைவனைச் சுமந்து உலாவரும் போது சுமக்கின்ற இரண்டு உருண்டையான கோல்களுக்கு இடையில் இவன் செல்ல உரிமை வழங்கினர். அதனிடையில் இவன் வில்லுடன் இறைவனை வணங்கவும் உரிமை அளித்தனர். இறைவனது பாதத்தைத் தாங்க உரிமை அளித்தனர்.

இவனுக்குத் திருமடை. விளாகத்தில் ஒரு வரிசையில் முதல் வீட்டைத் தந்து இவனும், இவன் வழியினரும் கொண்டு வசிக்க உரிமை தந்தனர். இவனுக்குக் கோயில் பணியாளருக்கு வரும்பங்

இல் ஒரு பங்கைப் பெற வழி செய்தனர். தண்டந்தோட்டத்தில் தேவரடியார்களுக்கு வழங்கியிருந்த நிலத்தில் ஒரு பங்கு கொடுத்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக இவனுக்குத் ''திருத்தொண்டர் தொகை முனையதரயன்'' என்று பெயருங் கொடுத்து இவனுக்கு இவனது உரிமைகளைக் கையோலையாக வழங்கியும் கல்லிலும் செம்பிலும் வெட்டி என்றென்றும் அழியாவண்ணம் செய்தனர்.[10]

இவ்வுரிமைகளை யாரோ ஒருவர் செய்தார் என்று இல்லா வண்ணம் இவனது செயல்களுடனும், உரிமைகளுடனும் தொடர்புடைய தேவகன்மிகள், ஸ்ரீபாதம் தாங்குபவர்கள், திருப்பள்ளித் தொங்கல் சமுதாயத்தார், திருவேலைக்காரர், திருப்பதியம்பாடுவார், தேவரடியார்கள் இன்னும் அனைவரும் இவனுக்குக் கொடுத்த ஓலையில் கையெழுத்திட்டு வழங்கியுள்ளனர்.[11] இவ்விதம் இந்தக் காவல்காரனாகிய, திருத்தொண்டர் தொகை முனையதரயன் தக்க சமயத்தில் கைகொடுத்த தர்மம் காத்திருந்த போதிலும், அச்சிறப்பை இக்கோயில் பெற்றிருந்த போதிலும். இக்கோயில் மீண்டும் இன்று பொலிவின்றிப் பல பகுதிகளும் சிதைந்து சேரழிந்து காணப்படுகின்றது. இதன் இடிபாடுகளைச் செப்பனிட்டுச் சீர்படுத்த இன்று தமிழக அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை பணிகள் மேற்கொண்டு வருவது பெருமைக்குரியதாகும்.

மடம் நடத்திக் கோயில் எடுத்தவர்கள்

திருநறையூர் நாட்டின் ஒரு ஊராக விளங்கிய கூரூர் இன்று கூகூர் என்ற பெயருடன் விளங்கி வருகின்றது. இங்குள்ள கோயில் முழுதும் கல்லால் ஆனது. இது உத்தம சோழன் காலத்திய கோயில். ஒரு கோயிலைக் கட்டியவர் யார் என்று பெயரைக் கூடப் பல இடங்களில் அறிய முடியாமல் இருக்கின்ற நமக்கு இங்கு ''இத்திருக்கற்றளி எடுப்பிச்ச மடமுடையார் வரகுண தொண்டர் இவர்'' என்று கல்வெட்டும்[12] அதற்கு மேல் அவரது உருவமும் கிடைப்பது பெருமகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.[13] இவர் எந்த மடத்தை உடையவர் என்பது இன்றைய நிலையில் தெளிவில்லாமல் உள்ளது.எனினும் இவ்வூரில் நம்பி ஆரூரருக்கு கோயிலிருந்ததும்,[14] விழா நடந்ததும், செப்புத்திருமேனி இருந்ததும்,[15] அதற்கு நிவந்தம் அளிக்கப்பட்டதும் கல்வெட்டுக்களின் மூலம் அறியக் கிடைப்பதால் இவருக்கு இங்கு மடம் இருந்திருக்கக்கூடும் என எண்ணத் தோன்றுகிறது. இவ்வூர் கல்வெட்டுகளை முற்றும் படித்த பின் செய்திகள் அறியக்கூடும்.

பக்தர்கள்

திருநறையூர் நாட்டின் ஊர்களைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று கொடைகள் நல்கி வழிபட்டுள்ளனர். வண்டாழஞ்சேரியிலிருந்து விக்கிரமசோழனின் காலத்தில்(கி. பி. 1118-35) வேதாரண்யத்திற்கு ஒருவர் சென்று வழிபட்டுள்ளார். இவரது பெயர் அரையன் அளைந்த கோளரியார் என்பது.[16] இவர் அவ்வூர்க்கோயிலின் திருச்சுற்று வீதியில் அமைந்த 'தனிநின்று வென்றான்' மடத்தில் நிகழும் திருவிழாவின்போது சிவனடியார்கள் உண்பதற்காக நிலம் விலைக்கு வாங்கி அவ்வூர்ச் சபையாரிடம் வழங்கினர். வரிகளுக்காக 100 பொன்னும் வழங்கினர். அவர்கள் இவர் வழங்கிய நிலத்திற்கு முன்பிருந்த பெயரை மாற்றி இவரது பெயரால் அளைஞ்சகோளரியான் விளாகம் என்று பெயரிட்டுப் சிறப்புறச் செய்துள்ளான்.

திருநறையூர் நாட்டு ஆனைச்சூர், வண்டாழஞ்சேரி ஆகிய இடங்களிலிருந்து செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காயாறு என்ற ஊருக்கு வந்து வழிபட்டவர்களை இவ்வூர்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கல்வெட்டுகள் முதலாம் ஆதித்தன் காலத்தவையாகக் கருதப்படுகின்றன. ''ஆனைச்சூர் கிழவன் அறிஞ்சோமன்'' என்பான் காயாற்றுச் சபையாரிடம் அவ்வூர் திருமேற்றளி இறைவனுக்கு ஸ்ரீபலிக்காக நிலம் வழங்கியுள்ளான்.[17] இவன் நிலம் கொடுத்தபோது இருந்த கோயில் இன்று உள்ளதோ இல்லையோ ஆனால் இவனது கொடை பற்றிப் பொறித்த கல்வெட்டுள்ள கல் இன்றும் தனியாகக் கிடந்து இவனது பக்தியைப் பறை சாற்றிக் கொண்டுள்ளது. ''வண்டாழஞ்சேரியுடையான் தாழிசேனன்'' இவ்வூர் நடராஜபெருமானுக்கு இரவும், பகலும் திருநந்தாவிளக்கு எரிய வேண்டும் என்பதற்காக பொன் கொடுத்துள்ளான்.[18]

மதுரை கொண்ட கோப்பரகேசரியான பராந்தகன் காலத்தில் தண்டந்தோட்டத்தைச் சேர்ந்த கலிடன் காயன் என்பவன் திருக்கோடிக்காவல் இறைவனுக்கு நந்தாவிளக்கிற்காகப் பொன் கொடுத்துள்ளான்.[19] இவன் காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டு இன்று இல்லையாகிலும் இவனது காலத்திற்குப் பின் ஒருநூற்றாண்டு காலத்தில் பழங்கல்வெட்டை மீண்டும் புதுப்பித்த பழங்கல்வெட்டின் படியாக இன்றும் திகழ்கின்றது.

திருவொற்றியூர் இறைவனுக்கு ஆதித்தன் காலத்தில் வண்டாளஞ்சேரியிலிருந்து செம்பியன் மூவேந்த வேளானுடைய

சாத்தன் உலகன் விளக்கிற்காக தங்கம் கொடுத்துள்ளான். இவன் ஆதித்தனின் ஓர் அதிகாரியாவான்.[20]

மதுரை கொண்ட பரகேசரியான பராந்தகன் காலத்தில் திருநறையூர் நாட்டு அய்யாறு என்ற ஊரைச் சேர்ந்த மைஞ்சன் கவையன் என்பவன் கும்பகோணத்தில் உள்ள நாகேஸ்வர ஸ்வாமி கோயிலுக்கு நந்தாவிளக்கிற்காக ஆடுகள் கொடுத்துள்ளான்.[21]

இதுபோல் திருநறையூர் நாட்டைச் சேர்ந்தவர்கள் பல்வேறு தொலைவிடங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டு, பக்தர்களாய் விளங்கியவர்கள் இன்னும் எத்தனை பேரோ?

எழுத்தன்

முதலாம் இராஜராஜனின் காலத்தில் திருநறையூர் நாட்டு சிவபுரம் என்ற ஊரைச் சேர்ந்த 'வேழக்கோவன் அண்ணுத் தடிகள்காரி' என்பவன் திருநறையூர் நாட்டு நல்லூர்சேரியின் சபையார் பணிக்கத் திருநாகேஸ்வரத்திற்கு வழங்கிய இரு கொடைகளின் ஆவணங்களை எழுதியுள்ளான். இரு வெவ்வேறு ஆவணங்களை [22] இவன் எழுதியுள்ளதால் இவன் அந்த நல்லூர்சேரிச் சபையாரின் நிலையான எழுத்தாளனாகப் பணியாற்றியிருக்கக்கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஊர்த் தலைவன்

முதலாம் இராஜராஜனின் ஆட்சிக் காலத்தில் கூருரில் கர்ணமான (?) 'வயிரிகூட்டறேன் ஆகிய சோழ விச்சாதிர பலன் வரையன்' என்பவன் கூருரில் ஒரு கோயிலை எடுப்பித்து அதற்கான பல நிவந்தங்களும் கொடுத்துள்ளான்.[23]

மத்யஸ்தன்

கூருரில் நாராயணன் என்ற பெயருடையவன் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் மத்யஸ்தனாகத் திகழ்ந்துள்ளான். இவ்வூர் கல்வெட்டுகளில் ஐந்துக்குமேற்பட்டவைகளின் மூலம் இவ்வூர் மத்யஸ்தனாக இவன் செயலாற்றியமை அறியக் கிடைக்கின்றது.[24]

பிற ஊர்களில் காணியுடையவர்கள்

திருநறையூர் நாட்டைச் சேர்ந்த இருவர் திருநறையூர் நாட்டை விட்டுப் பிற இடங்களில் நிலங்களை உடைமையாகக் கொண்டு

விளங்கியுள்ளனர். திருநறையூர் நாட்டு நந்தி நல்லூரைச் சேர்ந்த ஒருவன் திருக்கொடியக் காட்டில் அவ்வூர் கோயில் காணியுடையா னுகக் குறிக்கப்படுகின்முன். கல்வெட்டில் இவனது பெயர் பகுதி சிதைந்து விட்டது.[25]

இன்னும் திருநறையூர்நாட்டில் இருந்த மங்கலங்களில் அமைந்த சபைகளின் உறுப்பினர்களாகப் பல்வேறு கோத்திரத்தையும், சூத் திரத்தையும், குடியையும் சேர்ந்த பட்டர்களும், ஊர்களில் பணி யாற்றியவர்களின் பெயர்களும், கோயில்களில் பணியாற்றியவர் களின் பெயர்களும் கிடைக்கின்றன. இவர்களின் பணிகளையும், பெயர்களையும் தொகுத்து ஆய்ந்தால் இன்னும் பல அரிய சமுதாய அமைப்புகள் தெரிய வரும். பண்டைய சமுதாயத்தில் தனி மனி தர்கள் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பணிபுரியவும், வழிபடவும், குடியிருக்கவும், சிறப்புடன் விளங்கவும், எவ்விதத்தடை களும் இல்லை என்பது சிறப்புறத் தெரியும்.

குறிப்புகள்

1 Epigraphica Indica, xxii.

2 Ibid

3 SII., xiv. 194.

4 Ibid

5 Srirangam temple under Kulottunga I, Dr. R. Nagaswamy, Trichy seminar

6 கலிங்கத்துப்பரணி, காளிக்குக் கூளிகூறியது 29

7 SII., iv, 863

8 210 of 1951-52.

9 279 of 1917

10 'திருத்தொண்டர் தொகை கல்லூர்' என்று ஊரின் பெயர் விளங்கியது கல் வெட்டுகள் மூலம் அறியக் கிடைக்கின்றது.

11 1 of 1918.

12 298 of 1917

13 திருவாடுதுறை கற்கோயிலைக் 'கற்றளிப்பிச்சன்' கட்டியதாகக் கல்வெட்டுச் செய்தி உண்டு,

14 299 of 1917

15 275 of 1917

16 SII., v, 986. (கோளரி என்பதற்குச் 'சிங்கம்' என்று பொருள்)

17 SII., xiii, 96
18 SII., xiii, 302
19 24 of 1930-31
20 176 of 1912
21 250 of 1911
22 SII., vi, 31, 32.
23 304 of 1917
24 ARE 1918, para 33.
25 SII., xvii, 551.

பத்தூர் கல்வெட்டுக்கள்

சி. கோ. தெய்வநாயகம்

தஞ்சையினின்றும் நாகை செல்லும் பேருந்துத் தடத்தில் கொரடாச்சேரி எனும் ஊரிற்கு வடக்கே ஒரு கல் தொலைவில் வெட்டாற்றின் வடகரையில் பழைமையான பத்தூர் எனும் சிற்றூர் அமைந்துள்ளது.

பத்தூர் அமைப்பு

இச்சிற்றூர் அகன்ற நேரான நாற்றிசைப் பெருந்தெருக்களைக் கொண்ட அருமையான அமைப்பினைக் கொண்டுள்ளது. மேலத் தெருவின் வடக்குச் சார்புடைய பகுதியில் உள்ளார்ந்து ஒரு அழகிய கற்றளி இடிந்து விழுந்த நிலையில் காணப்படுகிறது. சிறு முகமண் டபத்தினை அடுத்த கருவறையில், திருவுருக் கடவுள்களைக் காணோம். சற்றேறக் குறைய 4 அடி உயரமுள்ள யோக நரசிம்மர் உருவநிலை-மூலவர் இன்று காணக் கிடைக்கவில்லை.

இரு கோயில்கள்

கோயிலின் முகமண்டபக் கருவறைச் சுவர்களின் வெளிப்புறத் தில் காணப்படும் வைணவச் சின்னங்களையும் நரசிங்கப் பெருமாள், கண்ணன் வராகமூர்த்தி போன்ற சிறு சிற்பக் காட்சிகளையும் மக்க ளின் வழக்கு நிலையினையும் கொண்டும் நரசிங்கப் பெருமாள்கோயில் என விளங்கும் கோயிலுள்ளது. இதன் தென்முக வெளிப்பக்க முக மண்டபச் சுவரின் ஜகதிப்படையில் ஒரு கல்வெட்டிருக்க, அதனை யானும் தந்தையாரும் தனித்தனியாகப் படியெடுத்தோம்.

இக்கோயிலுக்கும் மேற்கே இத்தனையொத்த நிலையில் அழிந்த ஒரு சிவன் கோயில் உள்ளது. இதுவும் இடிபாடுற்ற நிலையில் அழிந்து கிடக்க அதனையும் ஆய்வு செய்யலானோம். அதுபோது ஒரு கல்வெட்டு கோயிலின் ஜகதிப்படையில் இருக்க அப்பகுதி முழுதும் மண்ணில் புதைந்திருந்தது. மாணாக்கர் ம. சுப்பிரமணியனும் அவர் தம் ஊர் இளைஞர் நற்பணி மன்ற நண்பர்களும் ஊர்ப் பெரியோர் சிலரும் அப்பகுதியினை மிக விரைவாகத் தோண்டி எங்கள் ஆய்விற்குப் பேருதவி புரிந்தனர். இக்கல்வெட்டினை இரு

வரும் கைப்படி எடுத்தோம். இச்சிவன் கோயிலின் பெயர் ஸ்ரீவிஸ்வநாதர் கோயில் என்பதாகும்.

அரியும் சிவனும் ஒன்று

படி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இரண்டும், நரசிம்மப் பெருமாள் கோயிலிலுள்ள ஒன்றும் விஸ்வநாதர் கோயிலுள் ஒன்றுமாக இருந்தாலும் இரண்டுமே ஒரே கல்வெட்டின் இருபடிகளாக இருக்கக் கண்டோம். அக்கல்வெட்டுக்கள் நல்ல தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டதாக விளங்குகின்றன.

கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாற பன்மரான திருபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீபராக்ரம பாண்டிய தேவர்க்கு ஆயில்ய....நாயற்று அமரபட்சத்து......ஷ......ல. உத்திரட்டாதி நாள் அகரம்

ஸ்ரீபத்துரான......நல்லபெருமாள் சதுர்வேதி மங்கலத்து உடையார் விஸ்வரர் கோயில் தந்தாரும் நாயனுர் ஆணை காத்த......யில் திருப்பதியாரும் இவ்வூர் மேலே மங்கல

விதியில் வடதுண்டம் கிழ்சிறகில் ஒரு மனையைப்பற்றி வழக்கு உண்டென்று இரண்டு கோயிலிலும் பூசையும் ஸ்மாராயநமும் முட்டிக்கிடந்த......றறை நாள் இந் நாட்டு நிலங்கலந்த மாஹெஸ்வரரும்

உடையார் கோயில் திருப்பணி அம்மையும் காலும் பிட்டாரும் கடது ஸ்வஸ்தி ஸ்ரீ மாஹெஸ்வர நம்பியுமிரண்டு கோயில்......நிகம சபையாரும் விடையாகரும்......பல்லவ ராயரும் சோள சிங்கராயரும்

ஸ்வன உ.........இவ்வூரிலே......ப. இகதுண்டத்து கிழக்கிடத் திட்டு ஆணை காத்த பெருமாள்......ட்ட மனைகோல் பதினாறும்

வடக்கு உடையார் விஸ்வேஸ்வர திரு நாமத்துக்காணி மனை கோல் பதினென்றும் ஆன நடுவெல்லையிலெழு......பு... திருச்சுலே ஸ்தபானமும் பண்ணித் திருவாக்கிலும் முடிவானபடியே இரண்டு கோயிலி

ல் திருக்கட்டளையிலே கல்லு வெட்டிக் கொள்ளவும் சொன்னேம். உ இப்படிக்கு ஸ்ரீமாஹேஸ்வரநம்பி எழுத்து உ சோழ சிங்கராயர் எழுத்து......

நாட்டார் எழுத்து உ. ஸபையார் எழுத்து உ திருப்பணி அம்மை திருக்குறிக்குத் திரண்டார் எழுத்து உ......இன் நாட்டு சிப்பாசிரியம் இராஜ ஹம்பிர ஆசாரியன் நென் இக்கல்லு வெட்டிநென்உ.

சோழநாட்டில் பாண்டியன் கல்வெட்டு

எட்டு வரிகளை உடைய இக்கல்வெட்டு பாண்டியர் கல்வெட்டாக விளங்குகின்றது. சோழ நாட்டில் அதுவும் சோழரின் தலைநகருக்கு மிக அண்மையில் உள்ள சோழநாட்டுப் பத்தூரில் பாண்டியன் கல்வெட்டு உள்ளமை சோழர் வரலாற்றில் ஒரு புதிய சிக்கலைத் தோற்றுவிக்கும் தகைமையதாக விளங்குகின்றது.

வரலாற்று ஆய்வின் முன்னோடி

கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பராக்ரம பாண்டியன் எக்காலத்தைச் சார்ந்தவன் என்பது குறித்து ஆய்ந்து முடிவு காண அடிப்படையாக அமைவது பேராசிரியர் கோவிந்தராசனாரின் ஆய்வுக் கட்டுரையாகத் 'தமிழ்ப்பொழிலில்' வெளியான 'விக்கிரம சோழ விண்ணகரம்' எனுங் கண்டுபிடிப்பாகும். இப்பத்தூரின் நேர் மேற்கில் ஐந்து கல் தொலைவுக்குள் சாலியங்கலத்திற்குத் தெற்கில் அமைந்துள்ள திருபுவனம் என்னும் சிற்றூரில் காணப்படும் வரலாற்றுச் செய்திக்கு இப்பத்தூர் வரலாறும் உடன்பட்டதாகவே உள்ளது.

விக்கிரம சோழ விண்ணகரம் ஆய்வுரையில் கல்வெட்டறிஞர் சி. கோ. அவர்கள் அவ்வூரில் இடிபாடுற்ற பெருமாள் கோயில், சிவன் கோயிற் கல்வெட்டுக்களை ஆய்ந்துரைக்கையில் அவ்வூரில் பாண்டிய மன்னனின் அதிகாரிகள் செய்த குழப்பங்களையும் அட்டூழியங்களையும் பெருமாள் கோயிலை இடித்தொழித்த செயலையும் அமைதிப்படுத்தி சமாதானத்தினை ஊரில் நிலைநாட்டிய செயலையும் கீழ்க்கண்டவாறு விளக்கி உரைத்துள்ளார்கள்.

''மாலிக்கபூரின் தென்னிந்தியப் படையெடுப்பின்போது அழிந்தொழிந்த பாண்டிய நாட்டின் வடபகுதியினை ஆண்டு வந்த பாண்டியர்களில் பராக்ரம பாண்டியன் என்பவன் ஒருவன் காணப்படுகிறான். அவன் காலத்தில் சோழராட்சி குறைந்திருக்கவே, அப் பராக்ரம பாண்டியன் சோழநாட்டின் தென்புலப் பகுதியில் சில பகுதிகளைத் தன்னாட்சிக்கு கொணர்ந்திருக்கிறான். அந்நிலையில் சிற்சில

தன்னரசு அதிகாரிகளை அச்சோணாட்டுப் பகுதிகளுக்கும் அதிகாரிகளாக நியமித்திருக்கிறான். அப்பாண்டி நாட்டாரைச் சோணாட்டு மக்கள் மதியாமல் ''மகமை'' முதலாயினவற்றைத் தராதொழியவே, அவ்வதிகாரிகள் மக்களைத் துன்புறுத்தியதோடு, அவர்தம் வழிபாட்டுக் கோயில்களையும் உடைத்து இடித்திருக்கின்றனர். எனவே ஊர்ப்பெரியோரும், அரசியல் சான்றோரும் அவர்களையும், மக்களையும் சில நீதிகளையும் கட்டுப்பாடுகளையும் உரைத்து அமைதிப்படுத்தியிருக்கின்றனர். எனவே சோணாட்டுப் பாண்டியாட்சிப் பகுதிகளில் அமைதி நிலவியிருக்கிறது. இக்காலம் அப்பராக்ரம பாண்டியனின் ஆட்சிக் காலமாகிய 10 ஆவது ஆட்சி யாண்டில் நிகழ்ந்த நிகழ்ச்சியாம். இப்பராக்ரம பாண்டியன் கி. பி. 1315 ல் அரசேற்றவன். இவனது பத்தாமாட்சியாண்டில் இக்கலகம் எழுந்துளது. எனவே கி. பி. 1325 ல் இக்குழப்பம் நிகழ்ந்திருக்கிறது எனக்கொள்ளலாம்.''

கல்வெட்டின் காலம்

அதே நிலையில் காணக்கூடிய இப்பத்தூர்க் கல்வெட்டுகளும் அதே பராக்ரம பாண்டியன் காலக் கல்வெட்டுக்களாகக் காணப்படுகின்றமையால் அவற்றின் காலம் கி. பி. 1325 எனக் கொள்ளலாம்.

கல்வெட்டு வழக்கு

இக்கல்வெட்டு ஒரு மனையைப் பற்றிய வழக்கினைத் தீர்த்து வைப்பதாக உள்ளது. அகரம் ஸ்ரீ பத்தூரான இவ்வூரின் மேலை மங்கல வீதியில் வடதுண்டம் கிழச் சிறகில் உள்ள ஒரு மனைபற்றி ஆனை காத்த கோயில் திருப்பதியார்க்கும் விஸ்வேஸ்வர கோயிலுடையார்க்கும் ஓர் வழக்கு வர அவ்வழக்கினை முன்னிட்டு நரசிம்மப்பெருமாள் கோயிலிலும், விஸ்வநாதர் கோயிலிலும் வழிபாடுகள் தடைப்பட்டன.

வழக்குத் தீர்வை

இறைவர்களின் வழிபாடு முட்டுப்படாவகையில் இவ்வழக்கினை உடன் தீர்ப்பான் வேண்டி, இந்நாட்டு நிலங்கடந்த மாஹேஸ்வர நம்பி என்பாரும், இவ்விரு கோயிலையும் திருப்பணி செய்த திருப்பணி அம்மையாரும், பிட்டாரும் நிகம சபையாரும், விடையாரும், பல்லவராயரும், சோழ சிங்கராயரும் ஆன பெரியோர் கூடி அந்நிலத்தை அளந்து அம்மனைத் தீண்டத் துண்டத்தின் கீழ்ப்பகுதித்

திடலில் ஆனைகாத்த கோயில் திருப்பதியார்க்குப் பதினாறு மனை கோல் அளவை உடைய நிலத்தையும் பத்தூர் விஸ்வேஸ்வர தேவர்க்குக் காணியாகப் பதினொரு மனைக்கோல் அளவு நிலத்தினை யும் பிரித்துக் கொடுத்து இரண்டற்கும் எல்கை வகுத்து எந்திர ஸ்தாபன சூலக்கல் நட்டு வழக்கினைத் தீர்த்து வைத்துள்ளார்கள். இத்தீர்ப்பினை இரண்டு கோயில்களிலும் கல்லுவெட்டிக்கச் சொல் லிக் கட்டளையிட்டவாறே இக்கல்வெட்டுக்கள் இரண்டு சமயக் கோயில்களிலும் வெட்டி வைத்துக் கொள்ளப்பட்டன.

சைவ வைணவப் பூசல்

எனவே இதன் கண்ட ஆனைகாத்த கோயில் திருப்பதியார் எனக் குறிப்பிடப்படுவோர் இப்பெருமாள் கோயிலின் உரிமையா ளர்களாகவோ அன்றி வழிபாட்டு வைணவர்களாகவோ இருத்தல் வேண்டுமென்பது புலனாகின்றது. ஆகவேதான் இப்பெருமான் கோயிலிற்கும் விஸ்வேஸ்வரர் கோயிலாம் சிவன் கோயிலிற்கும் பொதுவாக உள்ள இம்மனை சைவ, வைணவர்களின் ஆதிக்கத் திற்குள்ளாக வழக்கிலுடன்பட அதனைப் பெரியோர்கள் தீர்த்து வைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டிருந்திருக் கிறது.

திருக்குறிப்புத் திருப்பணி அம்மை

இதன்கண் தீர்ப்பு வழங்கிய பெரியோர்களுள் இருகோயில்களை யும் திருப்பணி செய்த திருப்பணி அம்மை கையெழுத்து இடும் திறம் அற்றவர் ஆதலின் அவர் உம்மைப் பெற்று சில குறியீடிட்டனர் என்பதைத் 'திருப்பணி அம்மை திருக்குறிக்குத் திரண்டார்எழுத்து' எனக் கல்வெட்டுக் குறிக்கும், கல்வெட்டினை இரு கோயில்களிலும் வெட்டி வைத்தவன் ஒரே சிற்பியாவான். அவன் பெயர் இராச கம்பீர சிற்பாசாரியன் என்பதாகும்.

பத்தூர் வேள்விச் சாலை

இவ்வூரில் இரண்டாம் இராசராசன் நோயுற்றிருந்தபோது அவன் உடல்நிலை நன்னிலை எய்துதற்காக இயற்றப்பட்ட ஒரு வேள்விச்சாலை ஒன்றும் வரலாற்று அறிஞர் பேராசிரியர் சி. கோ. அவர்களால் 1961 அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அகரம்

இப்பத்தூர் 'அகரம்' எனும் பெயரால் அழைக்கப்பட்டுள்ளதை அகரம் ஸ்ரீபத்தூர் எனும் கல்வெட்டுத் தொடர் வலியுறுத்து

கின்றது. இப்பத்தூர் நல்ல பெருமான் சதுர்வேதிமங்கலம் எனவும் அழைக்கப்பட்டுள்ளமையினை ஆழ்ந்து நோக்குமிடத்து இவ்வூர் வைணவர்களுக்கு அரசர்களால் இறையிலியாகக் கொடுக்கப்பட்ட ஊராகும் என்பதும் புலனாகின்றது.

இக்கல்வெட்டினால் கி. பி. 1320 அளவில் சோழ நாட்டின் தென்புலங்களில் சில பகுதிகள் பராக்ரம பாண்டியன் எனும் பாண்டியனாட்சிக்கு உட்பட்டிருந்தமை சோழ வரலாற்றோடே, பாண்டிய வரலாற்றினையும் நிறைவு செய்யும் ஒரு அருமையான சான்றாக விளங்குகின்றது. பாண்டியனின் ஆட்சியில் சோணாட்டுப் புலங்களில் நிர்வாகம் சீர்குலைந்திருந்தமையினையும், சைவ-வைணவ மதப்பூசல்கள் பெருமளவில் இருந்ததனையும் இச்கல்வெட்டுத் தெற்றென விளக்கி நிற்பதாகும்.

இருப்பைக்குடிக் கிழவன்

வெ. வேதாசலம்

பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனுக்கு அடங்கி இருஞ்சோனாட்டை ஆண்ட குறுநிலத்தலைவன் இருப்பைக்குடிக் கிழவன். எட்டி என்ற பட்டம் பெற்றவன். இத்துடன் சாத்தன் என்ற இயற்பெயர் கொண்டு எட்டிசாத்தன் என்றும் அழைக்கப் பட்டான். மதுரையிலிருந்து சங்கப்பலகையேறித் தமிழ் வளர்த்த தமிழ்ச் சான்றோர் பரம்பரை வழிவந்தவன் என்று தன்னைக் கூறிக் கொள்கின்றான்.[1] 'குன்னூர் முதல் சிங்களம் வரை கூடாத வயமன்னரை விண்ணூர் புக வெகுண்டு வென்றிகள் பல விளைத்த தென்னவர்கோன், நெடுமாறன்; செந்தனிக்கோல் சிரிவல்லன் இன்னருளால் பல சிறப்போடு இருப்பைக்குடிக்கிழவன் என்று தக்கசிர் நன்நாமம் பெற்ற எட்டிசாத்தன்' என்று தன்னை இருக்கன் குடிக் கல்வெட்டில் அறிமுகப்படுத்திக் கொள்கின்றான்.[2]

இருக்கன்குடியிலும், நென்மேனியிலும் உள்ள இரண்டு வெண்பாக்கள் அகச்சுவைபட இவனைப் புகழ்ந்துரைக்கின்றன. அவற்றில் இருக்கன்குடிப் பாடல்,

> கொங்கார் மலர்க்கடம்பு சூட்டாதி கோல்வளையை
> எங்கோன் இருப்பைக்குடிக்கிழவன் பொங்கார்ந்த
> தோட்டார் கரும்பிரைக்கும் தொன்னீர் வயலிருஞ் சோழ
> நாட்டான் தார்சூட்டு திரனென்று

என்று புகழ்ந்து பேசுகின்றது.[3]

ஸ்ரீமாறன்ஸ்ரீவல்லபன் 'சிரிவல்லமங்கலம்' என்று தன்பெயரில் ஓர் ஊரினை அமைத்தான். அவ்வூர் சென்று அரசன் அளித்த அறக் கொடை ஆணையை நடத்தும் அரசனது ஆணத்தியாக இருப்பைக் குடிக்கிழவன் இருந்திருக்கின்றான்.[4] வ்வூர் திருநெல்வேலி செல்லும் வழியில் அமைந்துள்ள கங்கைகொண்டானாக இருக்கலாம். இக்கங்கைகொண்டானில் உள்ள பழைய கல்வெட்டுகளில்; அவ்வூர் கீழ்க்களக்கூற்றத்துப் பிரமதேயம் ஸ்ரீவல்லவமங்கலம் என்றே அழைக்கப்படுகின்றது.[5] பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளிலும் 'கீழ்க்களக்கூற்றத்து ஸ்ரீவல்லவசதுர்வேதிமங்கலம்' என்று அழைக் கப்பெறுவது இச்செய்தியை உறுதிப்படுத்துகின்றது.[6]

இரண்டாம் வரகுணன் காலத்திலும் இவன் பாண்டியர் அரசியலில் தொடர்ந்து சிறப்பிடம் பெற்று விளங்கினன். வரகுண மகாராஜன் அளித்த ஆயிரத்து நானூறு காசுகளைப் பெற்றுச் சாத்தன்பெருமாள் அளற்றுநாட்டுக்கோன், ஆகிய இருவருடனும் சேர்ந்து திருச்செந்தூர் ஆறுமுகன் கோயிலில் ஆண்டு முழுவதும் நித்திய நிவந்தங்கள் தவறாது நடக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்தான்.[7] இவன் காலத்தில் வாழ்ந்த அரசியல் தலைவருள் சத்துருபயங்கரமுத்தரையன் என்பவனும் ஒருவன். இவன் இருப்பைக்குடிக்கிழவன் ஆண்ட இருஞ்சோணாட்டு ஆலங்குடியைச் சார்ந்தவன்.[8]

இருஞ்சோணாடு

இன்று அர்ச்சுனநதி, வைப்பாறு, கௌசிகமாநதி, உப்போடை பாயும் சாத்தூர் வட்டத்தின் கீழ்ப்பகுதியும், இதை ஒட்டிய முதுகுளத்தூர், கோவில்பட்டி, விளாத்திகுளம் வட்டங்களில் சில பகுதிகளும் முற்காலப் பாண்டியர் காலத்தில் இருஞ்சோணாடு என்று அழைக்கப்பட்டன. 'திருமகளும் நெந்நன்மாலையும் திகழ்ந்திலங்கும் மணிப்பூணும் மருவிய பொன்வரைத் தோள்வன்' 'நிரைத்தெங்கும் வரைக்கமுகோடு கரும்புயரும், கலிக்கழனி கதிர்ச்செந்நெல் கவரிகாட்டும் இருஞ்சோணாட்டவர் தலைவன்' என்று இதன் வளமும் இதன் தலைவன் எட்டிசாத்தன் பெருமையும் இருக்கன்குடிக் கல்வெட்டில் பேசப்படுகின்றது.[9] பெருஞ்சாந்திக் குல மன்னவன்; கூடிற்குடி நகர் தன்னோடு குளத்தூரவர் குலக் குரிசில்;விழாமலியும் வியன்தெருவில் துழாயூரவர் குடித்தோன்றல், பொருப்பைத் திகழ் இருப்பைக்குடி தனக்கு அதிபதி; களியன்னம் புனல் வெளியன்குடி விறலாண்டகை, ஞாலங்களிற் புகழும் சீர் ஆலங்குடி அதற்கிறைவன் என்று இருக்கன்குடிக் கல்வெட்டு இருஞ் சோணாட்டவர் தலைவனைப் பலவாறாகப் புகழ்ந்துரைக்கின்றது.

கூடற்குடி, குளத்தூர், துழாயூர், இருப்பைக்குடி, வெளியன் குடி, ஆலங்குடி, நென்மலி முதலிய ஊர்கள் இருஞ்சோணாட்டில் இருந்த முக்கிய நகரங்களாகும். முதலூர், மாறலூர், கொழுவூர், சிறுபுத்தூர், சாத்தனூர், கும்மணமங்கலம், இளவிருப்பை[10] முதலிய ஊர்கள் இருஞ்சோணாட்டில் இருந்த ஏனைய முக்கிய ஊர்களாகும்.

பணிகள்

ஓர் அரசன் மக்களின் தேவையறிந்து என்னென்ன செய்தல் வேண்டும் என்பதை உணர்ந்து ஆட்சிப் பணியாற்றியவன் இருப்

பைக்குடிக்கிழவன். ஆன்மீக உணர்வு பெருக ஊர் தோறும் கோயில்களை எடுத்தான். ஊராட்சி முறை சிறக்க ஊர்தோறும் அம்பலங்கள், மண்டபங்கள் தோற்றுவித்தான் நீர்வளமும், நிலவளமும் பெருகத் தன்னாட்டு ஊர்தோறும் குளந்தொட்டுவளம் பெருக்கினான். இந்த மூன்று வகையான பணிகளையும் இருக்கன் குடியிலுள்ள நீண்ட அகவல்பாடல் கல்வெட்டும்,[11] இருக்கன்குடிப் பாறைக் கல்வெட்டும்[12] நென்மேனி கண்மாய்க் கல்வெட்டும்[13] அண்மையில் அறியப் பெற்ற சின்னகொல்லபட்டிக் கல்வெட்டும்[14] நன்கு அறியச் செய்கின்றன.

இருப்பைக்குடிக்கிழவன் அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருள்கள் மூன்றில் முதலாகிய அறத்தை தன் சிந்தையில் நன்று என்று கொண்டு கோயில்கள் எடுப்பித்ததாகக் கூறிக்கொள் கின்றான். மேலும் எச்சமயத்தையும் வேறுபாடு கருதாது போற்றியவன் என்று தன்னைக் குறித்துக்கொள்கின்றான்.[15] இதனை வலியுறுத்தும் வண்ணம் இருப்பைச்குடியில் சமணப் பெரும்பள்ளி ஒன்றை எடுத்தான். மூதனூரில் ஈச்சுவரன் மகிழ்ந்துறை கோயில் ஒன்றும் தென்வெளியன்குடி நகரிலும் கறைகண்டன் உறைவதற்குக் கோயில் ஒன்றும் எடுத்தான்.

மன்னார் கோயில் கல்வெட்டு முள்ளிநாட்டுப் பிரமதேயம் ராசராசச்சதுர்வேதிமங்கலத்துச் சபையார் 'அம்பலம் து (ட்ட)டக்கியில் கூட்டம் கூடி' ஊர்க்காரியங்களைக் கவனித்தார்கள் என்று குறிப்பிடுகின்றது.[16] அம்பலம் துட்டக்கி என்றால் அம்பலமண்டபம் என்று பொருள். எட்டி சாத்தனும் இதற்கு முன்பு இதுபோல் இருஞ்சோனாட்டு ஊர்களில் ஊர்ச்சபைகூடி ஊர்க்காரியங்களைக் கவனிப்பதற்கு அம்பலம் ஏற்படுத்தி, அங்கே மண்டபமும் கட்டு வித்தான். 'சொல்மலி சீர் அம்பலமும் மண்டபமும்' என்று இதனை இவன் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. தென்வெளியன்குடியில் கற்றாண் செய்து ஓர் அம்பலத்தை ஏற்படுத்தினான். இதேபோன்று இருப்பைக்குடியில் மண்டபத்தோடு அம்பலத்தையும், நென்மலி கும்மண மங்கலம் முதலிய ஊர்களில் அம்பலத்தையும் எடுத் தான்.[17]

நீர்ப்பாசனப் பணிகள்

இருஞ்சோனாட்டின் பெரும்பகுதி வறட்சி மிக்க மாவட்டமாகிய முகவை மாவட்டத்திலேயே உள்ளது. இப்பகுதியில் கௌசிக மாநதியும், வைப்பாறும், அர்ச்சுனநதியும், உப்போடை என்ற ஓர் ஓடையும் ஓடுகின்றன. கௌசிகமாநதி கோல்வார்பட்டியில் அர்ச்சுன நதியுடன் சேர்ந்து கொள்கிறது. உப்போடை, மழை

பொழியும் காலங்களில் மட்டும் பெருக்கெடுத்து அர்ச்சுனநதியில் இருக்கன்குடிக்குச் சற்று முன்பாகக் கலக்கும். அர்ச்சுனநதி இருக்கன்குடியில் வைப்பாற்றுடன் கலந்து ஒன்றாகி வைப்பாறு என்ற பெயரில் கடலை நோக்கிக் கிழக்கே ஓடுகிறது. மழைக்காலங்களில் மட்டும் இவ்வாறுகளில் நீர் பெருக்கெடுத்து வரும். ஆண்டில் பெரும்பகுதி இவை வரண்டே காணப்படுகின்றன. இதனால் இருஞ்சோணாட்டின் பகுதிகள் இவற்றால் பெரும்பயன் அடைய முடிவதில்லை. இந்நிலையில் இப்பகுதி மக்கள் ஏரிகளிலும், குளங்களிலுமே நீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் நிலையில் இன்றும் உள்ளனர்.

இருப்பைக்குடிக் கிழவனும் இதனை நன்கு உணர்ந்து தன்னாட்டகத்து ஏரிகளையும், குளங்களையும் தொட்டு வளம் கொழிக்கச் செய்திருக்கின்றான். இவன் செய்த பணிகளில் தலையாயது இந்நீர்ப்பாசனப் பணியேயாகும். இதற்கென்று தன்னாட்சியில் பெரும்பகுதியைச் செலவழித்திருக்கின்றான். இவனைப் பற்றிப் பேசும் கல்வெட்டுகள் எல்லாம் இவனது நீர்ப்பாசனப்பணியைப் பற்றியே சிறப்பித்துக் கூறுகின்றன.

இவன் செய்த நீர்ப்பாசனப் பணிகள் பலவகைத்தன.

1 குளங்கள் போன்று பாழாய்க் கிடக்கும் பள்ளப்பகுதிகளில் கரைகட்டிப் புதிதாக ஏரி ஏற்படுத்தல்

2 பழங்குளங்களைப் பள்ளப்படுத்தி கரை உயர்த்தி அவற்றில் மடை வைத்தல்

3 பெரிய குளங்களது பழங்கரையை இழித்து உயர்ந்த நீண்ட கரை வைத்தல்

4 பழைய மடைகளைப் புதுப்பித்தல்.

ஏரி ஏறுவித்தல்

எட்டிசாத்தன் நீர்ப்பாசன வசதிகள் இல்லாத இடங்களில் புதிதாகப் பெரிய ஏரிகளை ஏற்படுத்தியிருக்கின்றான். இவற்றிற்குக் கிழவனேரி என்று தனது பெயரையே சூட்டியிருக்கின்றான். கரைகள் நூலிட்டுப் பிடித்துச் செவ்வனே அமைக்கப்பட்டன. இதனை இவன் கல்வெட்டு ஏர்நூலிட்டு ஏறுவித்தல் என்று குறிப்பிடுகின்றது. இவற்றிலிருந்து பாசனத்திற்கு நீர் வெளியே செல்வதற்கு ஏற்ற மடைகள் வைக்கப்பட்டன. ஏரிக்கு நீர் அதிகமாக வரும் நாளில் நீர் பெருகிக் கரைகள் உடைந்து போகாது காக்க, பெருகி வந்த நீர் வழிந்து ஓடிவிடக் கழுங்குகள்

அமைக்கப்பட்டன. மடையில் ஏரியிலிருந்து தண்ணீர் நுழைந்து வெளிவரும் பாதைகளாகிய நாழிக்கண்ணும், கண்ணும் அமைக்கப் பட்டன. நாழிக்கண் என்பது நீர் ஏரியிலிருந்து அதிகமாக வெளிச் சென்று விடாமல் இருப்பதற்காகக்கிணறு போன்று வட்டவடிவமாக அமைக்கப்பட்ட பகுதியின் உள்ளே அமைக்கப்பட்ட சிறு துளையாகும். கண் என்பது நாழிக்கண்ணில் நுழைந்த நீர் கரைக்கு அடியே வெளியே பாய்ந்து செல்லக் குழாய் வடிவில் அமைக்கப்பட்ட நீண்ட நீர்ப் பாதையாகும். நாழிக் கண்ணை அடைத்துத் திறந்தும் நீர்ப்பாசனத்திற்கு நீர் விடப்படுகின்றது. இதனை இருப்பைக்குடிக் கல்வெட்டு 'குளவாய்' '(இ(ற்) பணம்பு' என்று குறிப்பிடுகின்றது. 'கற்கோதி குமிழி செய்வித்தான்' என்று முற்காலப்பாண்டியர் கல்வெட்டு ஒன்று இதனைக் குறிப்பிடுகின்றது.[18] மடைகள் கருங்கற் கொண்டும், செங்கல் கொண்டும் கட்டப்பட்டன.[19]

தென் வெளியன்குடி, கும்மணமங்கலம் என்ற ஊர்களில் இருப்பைக்குடிக் கிழவன் தன் பெயரால் 'கிழவனேரி' என்று இரண்டு ஏரிகளைத் தோற்றுவித்தான்.[20] இருப்பைக்குடியில் திருமால்ஏரி என்று தெய்வத்தின் பெயரால் ஓர் ஏரியை ஏர் நூலிட்டு ஏறுவித்தான். அதில் குளவாய் வைத்து மடையமைத்தான். கொழுவூரில் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் பெயரில் 'மாறனேரி' என்ற ஒன்றையும், புகழ்நெறி நடைஏரி, புகழ்மலிஏரி என்ற பெயர்களில் இரண்டு ஏரிகளையும் தோற்றுவித்தான். தன் மன்னன் அமைத்த சிரிவல்லமங்கலம் செழிக்கத் 'திருநாராயணன்' என்ற பெயரில் ஏரி ஒன்றை ஏர் நூலிட்டு ஏறுவித்து அதற்குக் குளவாயோடு மடையும் அமைத்தான்.

குளங்கள் சீரமைப்பு

கொழுவூரில் அரசங்குளம், செங்குளம் என்று இரு குளங்களைத் திருத்தினான். அரசங்குளத்தைத் திருத்திக் கிழவனேரி என்று பெயரிட்டான். ஆலங்குடிப் பெருங்குளத்தைத் திருத்தி அதற்குக் குளவாயோடு மடையும் அமைத்தான். இவ்வாலங்குடி இருக்கன் குடிக்கு அருகிலுள்ள நத்தத்துப்பட்டிக்கு மேற்கே மூன்று கல் தொலைவில் ஆலம்பட்டி என்ற பெயரில் இருக்கின்றது. இன்று இவ்வாலம்பட்டிக் கண்மாய் சுமார் 125 ஏக்கர் பரப்புடன் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கருக்குப் பாசனத்தை அளித்துக் கொண்டிருக்கின்றது.

பழங்கரை இழித்துப் புதுக்கரை வைத்தல்

இக்கிழவன் இருஞ்சோணாட்டில் இருந்த பழமையான பெருங் குளங்களை விரிவுபடுத்தி அதற்கு நீண்ட நெடுங்கரைகளை அமைத்

தான். அவற்றில் மடைகளை வைத்தான். நீண்ட புதுக்கரைகள் ஓடிக்கிடந்த அக்குளங்கள் அதன் பிறகு கிழவனேரி என்று பெயர் பெற்று விளங்கின. இருஞ்சோணாட்டு மாறனூரில் இருந்த பெருங் குளம் திருத்திக் கரையேற்றப்பட்டுக் கிழவனேரி என்று பெயரும் பெற்றது.

ஸ்ரீமாறன்ஸ்ரீவல்லபனின் பதினாறும் ஆட்சியாண்டில் இருப்பைக் குடியில் இருந்த வள்ளைக்குளம் திருத்தப் பெற்றது. அதன் பழங்கரை அழிக்சப்பெற்றது. அதனடியில் கருங்கற்கள் பரப்பப் பெற்றன. மனலுமடைக்கு மேற்கேயும், கருங்குளத்திற்குக் கிழக் கேயும் இடைப்பட்டுக் கிடந்த நிலத்தில் கரையேற்றப்பட்டு அதில் மடைகளும் வைக்கப்பெற்றன. புதிதாகக் கரையோடிக்கிடந்த அந்நீர்நிலை, கிழவனேரி என்று பெயர் சூட்டி அழைக்கப்பெற்றது. இன்று இவ்வேரி இருக்கன்குடிக்கு வடக்கே கல்வெட்டில் குறிக்கப் பெறுவது போன்று கிழக்கும் மேற்குமாக ஓடிய கரையுடன் 'மேலமடைப் பெரியகுளம்' என்ற பெயரில் காட்சியளிக்கின்றது. இன்று இதன் கீழ்ப்புறம் கலிங்குமேட்டுப் பட்டியும் மேற்கே மேலமடையும், வடமேற்கே நத்தத்துப்பட்டியும் இதன் எல்லை களாக இருக்கின்றன. இதன் உள்பரப்பு 333 ஏக்கர் ஆகும். இன்று இது நானூற்று முப்பது ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்துக்கு நீர்ப்பாசனம் அளித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வேரி 'ஆயிரங்கோட்டை விதைப் பாட்டுக்கு ஆழாக்குக்குறைய' பாசனம் அளிப்பதாக இவ்வேரி பற்றி ஒரு பழமொழியை இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இவ்வேரியில் இன்று ஐந்து மடைகள் உள்ளன. இராமர்கோயில் மடை, முத்தன்னசாமி கோயில்மடை, திருக்குமடை, புதுமடை, கீழுத்துமடை என்று இவை அழைக்கப் படுகின்றன. எட்டிசாத்தன் இவ்வேரியை ஏறுவித்த போது அதில் அமைத்த மடைகளில் ஒன்றின் பெயராகப் பத்தன்மடை என்ற ஓர் மடையைக் குறிப்பிடுகின்றான். இன்று இவ்வேரியில் மூன்று பழமையான மடைகள் காணப்படுகின்றன. மற்றவை புதுப்பிக்கப்பட்டு விட்டன.

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனின் எட்டாம் ஆட்சியாண்டில் எட்டி சாத்தனால் நென்மலிப் பெருங்குளம் திருத்திக் கரை வைக்கப் பெற்று அதற்குக் கிழவனேரி என்ற பெயரும் சூட்டப்பெற்றிருக் கின்றது. இன்று இவ்வூர் நென்மேனி என்ற பெயரில் இருக்கன் குடிக்கு அருகில் உள்ளது. நென்மலித் தென்மேலூர் வயலுக்கு வடக்கும், நென்மலி நக்கன் கோயிலுக்குத் தெற்கும் இடைப்பட்டுக் கிடந்த பழங்கரையை அழித்துப் புதிதாகக் கரையேற்றி அதில் கருங்கற்களைக் கொண்டு மடைகள் வைக்கப்பெற்றன. கரை

கோடிக் கிடந்த அவ்வேரி கிழவனேரி என்று அது நாள் முதல் அழைக்கப் பெற்றது.[21] இன்று இவ்வேரி சாத்தூர்ப் பகுதியில் அமைந்த பெரிய ஏரிகளில் ஒன்ருக நென்மேனிக்கு மேற்காகக் கல்வெட்டில் கூறப்படுவது போன்று தெற்கும் வடக்குமாக ஓடிய கரைகளுடன் காட்சியளிக்கின்றது. இன்று இதன் ஆயக்கட்டு 491 ஏக்கராகும். இவ்வேரியின் தெற்கே வன்னிமடை, போத்தி ரெட்டிப்பட்டி கலிங்கிப்பட்டியும், மேற்கே கொல்லபட்டியும் எல்லைகளாக இருக்கின்றன. இதன் உள்பரப்பு சுமார் நானூறு ஏக்கராகும். இதன் ஆயக்கட்டு ஐநூறு ஏக்கராகும். இன்று இதில் ஐந்து மடைகள் உள்ளன. அவற்றில் சில கோயில்மடை, பூமடை, தாழமடை என்ற பெயருடன் விளங்குகின்றன.

கிழவனேரி

இருஞ்சோணுட்டிற்கு அப்பாலும் இருப்பைக்குடிக் கிழவனின் நீர்ப்பாசனப் பணிகள் சென்றுள்ளன. முகவை மாவட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள காரியாபட்டிக்கு அருகிலும் முதுகுளத்தூர் வட்டத்திலும் இன்றும் 'கிழவனேரி' என்று அழைக்கப்படும் ஊர்கள் உள்ளன.

கிழவனின் பெருமை

இவ்வுலகில் யாக்கை நீரின்றி இருக்க இயலாது. உணவைத் தந்தோர் உயிரைத் தந்தோர் ஆவர். உணவு என்பது நிலமும் நீருமேயாகும். நிலத்தையும், நீரையும் இணைத்தோர் உடம்பையும் உயிரையும் தந்தவர்கள் ஆவர். அரசனுக்கு வான் நோக்கி நிற்கும் புன்புலங்கள் இவ் அகிலம் முழுமையும் இருந்தாலும் அதனுல் ஆகும் பயன் அவனுக்கு ஒன்றுமில்லை. அதனுல் வேந்தே இவ்வுலகில் நற்புகழோடு நிற்க வேண்டுமெனில்,

> நிலன்நெறி மருங்கில் நீர்நிலை பெருகத்
> தட்டோர் அம்ம இவன் தட்டோரே
> தள்ளாதோர் இவண் தள்ளாதோரே (புறம் 18)

என்பதை உணர்ந்து விரைந்து செயலாற்றுவாயாக என்று பாண்டியன் நெடுஞ் செழியனைப் பார்த்துப் பாடினுர் குடப் புலவியனுர். அச்சங்கப் புலவரது வாக்கை இகழாது ஏற்றுப் போற்றி இருஞ்சோணுடு முழுமையும் நீர்நிலையைப் பெருக்கி நிலவளம் செழிக்கச் செய்தான் இருப்பைக்குடிக் கிழவன் என்ருல் மிகையாகாது. இவனை 'இத்திறத்து ஆள்வினைகள் இன்னிருஞ் சோழ நன்னுட்டு எத்தனையும் திருத்துவித்தோன் இருப்பைக்குடிக்

கிழவன் எனத் தன்பியர் நிற்ப சொல்மிக்க பெரும்புகழோடு மதியமும் ஞாயிறும் போல பதிதோறும் விளங்குக பாரின் மேலோய்' என்று இருக்கன்குடிக் கல்வெட்டு புகழ்ந் தேத்துவதும் பொருத்தமேயாகும்.

குறிப்புகள்

1 SII, xiv, 44
2 SII, xiv, 44
3 SII, xiv, 43
4 SII, xiv, 44
5 SII, v, 724, 728, 729
6 SII, v, 730, 734
7 SII, xiv, 19A.
8 SII, xiv, 77.
9 SII, xiv, 44.
10 SII, xiv, 71.
11 SII, xiv, 44
12 SII, xiv, 43.
13 69 of 1937.
14 'Kalvettu' II, Department of Archaeology
15 SII, xiv, 44
16 SII xiv, 132
17 SII, xiv, 44
18 SII, xiv, 26
19 Kalvettu II, Department of Archaeology
20 SII xiv, 44
21 67 of 1937.

கி. பி. 13ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டுத் தமிழ்க் கல்வெட்டுக்களில் கன்னடம்

சொ. சாந்தலிங்கம்

முதலாம் குலோத்துங்கனுடைய வேளத்தில் பல நாட்டுப் பெண்களும் இருந்தார்கள். அவர்கள் வெளி நாடுகளிலிருந்து வந்தவர்களாதலால் தமிழ் முழுமையாகப் பேசமுடியாதவர்களாக இருந்தனர். இத்தகு பெண்களுள் கர்நாடகத்திலிருந்து வந்த பெண்களும் இருந்தனர். இவர்கள் தமிழை முழுமையாகப் பேசமுடியாதவர்களாய்க்குழறிக் குழறிப் பேசினர். சில தமிழ்ச்சொற் களும் சில தெலுங்குச் சொற்களும் அவர்கள் மழலைப் பேச்சில் இடம் பெற்றன. இதனையே கலிங்கத்துப் பரணி பாடிய ஜெயங்கொண் டார் அழகாக இலக்கிய நயம்பட இசைக்கிறார்.

மழலைத்திரு மொழியிற்சில வடுகும் சில தமிழும்
குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்

என்பது அவரது பாடல். இதன் மூலம் அன்றைய நாளில் மக்கள் பேசிவந்த மொழியில் பிறமொழிக் கலப்புகள் எந்த அளவுக்கு நிலைபெற்றிருந்தன என்பதை அறியமுடிகிறது. இரண்டு மொழிகள் தம்மிடையே நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும்போது அவற்றிடையே கலப்பு ஏற்படுவது இயற்கை. இதற்குப் பல சான்றுகளை இலக்கியம், கல்வெட்டுகள் வாயிலாக நாம்காணலாம்.

தமிழும், சமஸ்கிருதமும் தம்முள் கலந்து மணிப்பிரவாளம் என்ற ஒரு புதிய நடை உருவாகியது. சமஸ்கிருதத்தில் உள்ள பல பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் தமிழ் மொழிக்கு இயைய மாறிக் கலந்தன. இதேபோல் தமிழ்ச் சொற்கள் பலவும் தம்முள் மாறிச் சமஸ்கிருதச் சொற்கள் போல வழங்கின. இவ்விதம் எழுந்ததே மணிப்பிரவாள நடை. இன்னும் தமிழும் மலையாளமும் தமிழும் தெலுங்கும், தமிழும் கன்னடமும், நாட்டின் பல பகுதி களிலும் கலந்து வழங்கின. இன்றைய நாளில் நமது பேச்சுத் தமிழ் மொழியில் ஆங்கிலம் அதிகமாகக் கலந்திருப்பது நாம் அனைவரும் அன்றாடம் காணும் நிகழ்ச்சியே. இத்தகு கலப்புகள் எவ்வித இலக்கண இலக்கிய வரம்புக்கும் உட்பட்டவை அல்ல. இயல்பாய் ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளே.

இந்தப் பின்னணியில் தமிழ் மொழியோடு, கன்னட மொழிக் கலப்பு ஏற்பட்டிருந்த முறையை ஒரு கல்வெட்டின் மூலம் நாம் ஆய்ந்து அறியலாம். இக்கல்வெட்டு கண்ணனூர் (சமயபுரம்) போசளீஸ்வரமுடையார் கோயிலில் உள்ளது. போசளமன்னன் வீரராமநாதனின் பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இது. கல்வெட்டின் பிரஸஸ்தி பகுதி சமஸ்கிருதத்தில் உள்ளது. ஏனைய பகுதிகள் தமிழ் மொழியில் உள்ளன. அது வருமாறு:

1 ....உடையார் ஸ்ரீ வீரராமநாத தேவர் உடையார் போசளீஸ்வரமுடைய

2. நாயனுர் கோயில் தானத்தார்க்கு ராஜராஜவளநாட்டு அன்னுயனுர் தேவதானம் திருநாமத்துக்காணி பணமங்கலம் முன்பு பன்னிரண்டாவது வரையும் தாங்கள் அனுபவித்து வந்தபடியே பதினேழுவாது முதல் இவ்வூரும் தோட்டமும் கடை ஆயமும்உள்பட இன்னுயனுர்க்கு 'பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாகத் தந்தோம் இவ்வூர் தங்கள் கைக்கொண்டு காலப்பிற்படாமல் பயிர் ஏற்றி அனுபவிக்க இப்படிக்கு தேவர் இராயஸம் ''எழுதித்து''

3 உடையார் போசளீஸ்வர முடையார் கோயில் தானத் தார் ராஜ ராஜவளநாட்டு பணமங்கம் பதினேழாவது முதலாகி முன்னின் ஹாங்கே இன்னுயனுர்க்கு தேவதானம் திருநாமத்துக் காணியாகி 'பிடுவிசு கொம்பதக்கு சேசையாகி குடுவ' காசாய பெருமான் கொட்டு இருடி நாயக்கர் குதிரை மாறன் சய சம்வத்ஸரத பிற்பகுதிக்கும் வட்ட மங்காட்டு நாயக்கர் அப்பணேயும் பிரபவ சம்வத்ஸரத முற்பகுதிக்கும் செலவாகி கையிடுகொண்டு எல்லாவழி சம்படம் உளதாகி குடுக்கும் காசாயம் பதினேழாவது·

4. ஆடிமாதம் இருபத்து நாலாந்தியதியான பிராஜாபத்தி சம்வத்சரத ஸ்ராவணசுத்த திரயோதஸி மங்கலவாரம் எழுதின தரவின்படி காசு நாருயிரத்து இருபத்து ஐயாயிரம். இக்காசு நாருயிரத்து இருபத்து ஐயாயிரத்துக்கும் எக்கமதேவர் சேனைபோக ருச்சண்ணன் எழுதி முதல் கணக்கு அழகபி மறைவாள பட்டரும் சிற்றம்பலவரும் வண்டுவரப் பெருமாளும் மாதுயரந்தீத்தாரும் சூரிய தேவரும் மாட்டறிந்து தேவர் ஸ்ரீஹஸ்த ஒப்பம் இட்டது.

இதில் இரண்டாம் வரியின் இறுதியில் இப்படிக்கு தேவர் இராயசம் எழுதித்து என்று எழுதப்பட்டுள்ளது. 'எழுநித்து' என்னும் சொல் கன்னடச் சொல்லாகும். எழுதினுர் என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக அதே பொருளில் எழுதித்து என்னும் கன்னடச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து மூன்ருவது வரியில் முன்னின் ஹாங்கே இன்ஞ யஞர்க்குத் தேவதானம்......என்று தொடர்கிறது. இதில் ஹாங்கே என்னும் கன்னடச்சொல் 'அப்படியே' என்னும் பொருளில் எடுத் தாளப்பட்டுள்ளது.

இன்னும் மூன்ரும் நான்காம் வரிகளில் க்ஷய சம்வதசரத, பிரபவ சம்வத்சரத, பிராஜாபத்தி சம்வத்சரத என்னும் சொற்கள் இடம் பெறுகின்றன. ஆண்டு என்னும் தமிழ்ச்சொல்லுக்குப் பதிலாக சம்வத்சரத என்னும் கன்னடச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மூன்ரும் வரியிலேயே ''திருநாமத்துக்காணியாகி பிடுவிசு கொம்பதக்கு சேஷையாகி குடுவ'' என்னும் கன்னடச் சொற்கள் சில இடம் பெற்றுள்ளன. இதில்,

பிடுவிசு என்னும் சொல் கொடுக்க என்னும் பொருளிலும்
கொம்பதக்கு என்னும் சொல் கொண்டு வந்து என்னும் பொருளிலும்
சேஷையாகி என்னும் சொல் வாழ்த்தி என்னும் பொருளிலும்
குடுவ என்னும் சொல் கொடுத்த என்னும் பொருளிலும்

வழங்கப்பட்டுள்ளன. எனவே இவ்வாக்கியம் திருநாமத்துக் காணி யாகக்கொடுக்கக் கொண்டு வந்து வாழ்த்திக் கொடுத்த என்று அமைகிறது.

இக்கல்வெட்டு பேரசள மன்னன் வீரராமநாதன் கல்வெட்டு என்று முன்னரே குறிப்பிட்டேன். அவன் கர்நாடகத்தைச் சேர்ந் தவன். கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவன். அவன் கண்ணனூரைத் தலைநகராய்க் கொண்டு ஆண்ட காலத்தில் கன்னடமும் தமிழும் வெகுவாகக் கலந்து வழங்கியுள்ள தன்மை இக்கல்வெட்டின் மூலம் உறுதிப்படுகிறது. இக்கலப்பு மக்கள் மத்தியிலேயே, பேச்சு வழக்கிலேயே விரிவாக இருந்திருக்க வேண்டும். எனவே அரசர்களும் கல்வெட்டுகள் வெட்டும்போது, இயல்பாய் வழங்கிய கலப்புச் சொற்களை அப்படியே வடித்தனர் என்று கொள்ளலாம்.

இவ்விதம் கன்னடச் சொற்கள் கல்வெட்டுகளில் இடம் பெற்று பின் வளர்ச்சி அடைந்து முழுக்கல்வெட்டும் கன்னடத்திலேயே எழுதும் அளவிற்கு வளர்ந்துள்ளது. தமிழகத்தின் பல இடங்களில் கன்னட மொழிக் கல்வெட்டுக்கள் இருப்பதைக் காண்கிரேம். காஞ்சி கைலாசநாதர் கோயிலில் ஒரு கன்னடக் கல்வெட்டு

சாளுக்கியன் விக்ரமனுடைய காலத்ததாய் அமைந்துள்ளது. திருவரங்கம் அரங்க நாதர் கோயிலில் முதல் குலோத்துங்கனுடைய இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டின் கன்னடக் கல்வெட்டு ஒன்று உள்ளது. தர்மபுரி மாவட்டம், மைசூரை ஒட்டிய பகுதிகளில் கன்னடக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. காஞ்சிக் அருகிலுள்ள திருப்பருத்திக்குன்றம் சமண ஆலயத்தில் விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் கல்வெட்டு ஒன்று கன்னட மொழிக் கல்வெட்டு தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. திருவானைக்கா கோயிலில் உள்ள போசளர் கல்வெட்டுக்களில் மன்னன் கையொப்பம் கன்னட எழுத்துக்களிலேயே வெட்டப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுகள் கன்னடம், தமிழ்நாட்டில், தமிழ் மொழியில் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டி நிற்கின்றன. இக்கல்வெட்டுக்களில் சில கன்னட மொழியிலும் தமிழ் எழுத்திலும் இருப்பதால் கன்னட மொழி அறியாதவர்களும் கல்வெட்டைப் படிப்பதற்கு முடியும்.

எனவே அன்றைய நிலையில் தமிழ் மொழியில் ஏற்பட்ட பிற மொழிக் கலப்பு என்பது இயற்கையாய் ஏற்பட்டுவிட்ட நிகழ்ச்சியே. மன்னர்களின் தனிப்பட்ட முயற்சியோ, திணிப்போ இன்றி, மக்கள் கலப்பினால் ஏற்பட்ட இயல்பான மொழிக்கலப்பு பெருவாரியாக இருந்திருக்கவேண்டும். எனவேதான் கல்வெட்டுகளிலும் அவை இடம் பெற்று அதன் செல்வாக்கை நிலைநாட்டி நிற்கின்றன.

இந்து இஸ்லாமியர் ஒற்றுமை

எஸ். எஸ். ஆயிஷா பேகம்

இஸ்லாமியர் ஆட்சியின் போது அவர்களால் இந்துமதம் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தது என்ற கருத்து பொதுவாக இன்று நிலவிவருகிறது. இதில் ஓரளவு உண்மை இருந்தது எனினும் அவர்களிடையேயும் நல்ல மனம் படைத்தவர்கள் இருந்தனர் என்பதற்குப் பல கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் சான்று பகர்கின்றன. இரு மதத்தினரின் ஒற்றுமைக்கும் இவை சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். இஸ்லாமியர்கள் இந்துக் கோயில்களுக்கும், இந்துக்கள் இஸ்லாமியர் பள்ளி வாசல்களுக்கும் பல்வேறு அறக் கொடைகள் அளித்தனர் என்ற செய்திகளை அவை எடுத்துரைக்கின்றன.

இந்துக் கோவில்களுக்கு இஸ்லாமியரின் அறக்கொடைகள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் குடந்தைக்கு அருகில் உள்ள கொரநாட்டுக் கருப்பூர் கோயிலுக்கு நிலங்கள் தானமாக அளித்துள்ளனர். இராமநாதபுரம் மாவட்டத்தில் மாணிக்கவாசகப் பெருமானால் பாடல் பெற்ற உத்திர கோசமங்கை கோயிலுக்கு உலோகத்தாலான பெரும் திருவாசியை அளித்துள்ளனர். திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் இன்று வழிபாட்டில் உள்ள உமா மகேசுவரர் சிலையை அன்வருதீன்கான் என்ற இஸ்லாமியர் செய்ததாகவும் செவிவழிச் செய்தியால் அறிகிறோம்.

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டத்தில் பைம்பொழில் என்ற வரலாற்றுப் புகழ்வாய்ந்த ஊர் உள்ளது. இங்குள்ள திருமலை இராமசுவாமி கோயிலில் மூன்று செப்பேடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டாவது செப்பேட்டில் முஸ்லிம்கள் பலர் இக்கோயிலுக்கும் நெல்லை காந்திமதியம்மன் கோயிலுக்கும் நன்கொடைகள் வழங்கிய வரலாறு பேசப்படுகிறது.

இச்செப்பேடு கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது. சக ஆண்டு 1710 என்றும், கொல்லம் ஆண்டு 964 கார்த்

திகை மாதம் 25 ஆம் நாள் என்றும் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆங்கில ஆண்டுக் கணக்குப்படி இது கி.பி. 1788 டிசம்பர் மாதம் 6 ஆம் நாளைக் குறிக்கும். செப்பேட்டின் வரிகள் வருமாறு:

"சாலிவாகன சகாப்தம் 1710 ஆம் வருஷம் செல்லாநின்ற கொல்லம் 964 ஆம் வருஷம் கீலகவருஷம் கார்த்திகை மாதம் 25 ஆம் தேதி சுவாமிக்கு குற்ருல நாத சுவாமி கட்டளைக்கு அசரதுவாலா (சா) சாயபு, அபது பேட்டை மியம் (அஹமது பேட்டை மணியம்) இசுமாலி இஉ (இஸ்மாயில் இராவுத்தர்) முதலான பலரும் பட்டயம் எழுதிக் கொடுத்த படி பட்டையமாவிது, சுவாமிக்கு நித்தியல் விழா பூசையில் கட்டளை வைத்து நடத்தி வரும்படி படித்தரப்படிக்கு நடத்தி வரும் வகைக்கு நாங்கள் எல்லாரும் வகைவைத்துக் கொடுத்து ஏறு சாற்று இறங்கு சாற்று வாகைச்சை ஒன்றுக்கு மறுவுறுட்சட்டை யொன்றுக்கு மாகாணிப்பண வீதமும் இன்னென்றுக்கு அரைமாகாணி விதமும் இந்தப் படிக்கு திருநெல்வேலி காந்திமதியம்மன் சிறுகால மகமை சந்தி மகமைப் படிக்கு தென்காசி ஆமதுபேட்டையிலுள்ள வணிதசேகர செங்கோட்டை, புளியரை, பண்புளி, கடைய நல்லூர், சிவருமப் பேட்டை, சுரண்டைசந்தை முதலான துறையிலும் மகமை வைத்து கொடுத்த படியினலே மாசம் மாசம் உள்ள பணந்துறை வாரியம் கணக்குப் பார்த்து வாங்கிக் கொண்டு சுவாமிக்குக் கட்டளை என்றென்றைக்கும் நடத்தி வருவோமாகவும் இப்படி நடத்தி வருகிற கட்டளை தர்மத்துக்கு யாதொரு விக்கினஞ் செய்தால் பழமையாயுள்ள பட்டையப் படிக்கு பஞ்சாட்சரத்துக்குட்பட்டவன் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலும், இசிலாமான மொமாகத்திலும் (இஸ்லாமான முஹமதிய மதத்திலும்) தாய்க்கு விக்கினஞ் செய்த தோஷத்திலும் போவாரகவும். இந்தப் படி சம்மதித்து விளாபூசைக் கட்டளைக்குப் பட்டயம் எழுதிக் கொடுத்தோம். பேட்டை மியு (மணியம்) இசுமாலி இஉ (இஸ்மாயில் இராவுத்தர்) முதலான பலரும். இந்தப் பட்டையம் எழுதினன் மாடன் செட்டியார் தாளுதிபதி அம்மைநாதன் எழுத்து. இந்தப்படிக்கு இசுமாலி இஉ (இஸ்மாயில் இராவுத்தர்) பலர். கா (ரு பாறு) கோவி(ல்) சந்திர குமாருப் பிள்ளை. இந்த செப்புப் பட்டையம் செய்து எழுதி வைத்தது 73ஆம் எண் தென்காசி சேகர மயறும் சுடலை முத்துப்பிள்ளை. திரு கூடாசலப்பதி சகாயம்."

செப்பேட்டில் மன்னன் பெயர் குறிக்கப்படவில்லை. தொடக்கத்தில் மங்கலச் சொல்லும் இடம் பெறவில்லை. ''சாலிவாகன சகாப்தம்'' என்றே தொடங்குகிறது. கொடைக்காக விட்டுக் கொடுக்கப்பட்ட ஊர்கள் செங்கோட்டை, புளியறை, பண்புளி, கடைய நல்லூர்,சிவராமப்பேட்டை, சுரண்டைச் சந்தை முதலியன. இவ்வூர்கள் அனைத்தும் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவை. இவ் வூர்களில் ஏற்றுமதி, இறக்குமதி மூலம் ஒவ்வொரு மாதமும் கிடைக்கின்ற வருவாயின் ஒரு பகுதியைக் கொண்டு இறைவனுக்குக் கட்டளை நடத்திவர வேண்டும். பல்லவர் சோழர் ஆட்சியின் போது இருந்த 'ஆயிரத்து ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார்' என்ற வணிகர்களைப் பற்றிப் பல கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன. இவர்களைப் போன்றே கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியர்கள் வாணிகத்தைப் பரவலாகச் செய்யத் தொடங்கிவிட்டனர் என்பதற்கு இச்செப்பேடு ஒரு சான்று.

வியாபாரத்தில் சிறந்து முன்னேறிய இஸ்லாமியர்கள் பல நிலங்களுக்கும் உரிமையாளராகவும் இருந்தனர். அதனால் குறிப்பிட்ட சில ஊர்களிலுள்ள நிலத்தைக் கோயிலுக்கு அளித்தனர். வணிகத் துறையிலும் நல்ல வருவாய் ஈட்டினர் என்பதால் ஏற்றுமதி இறக்குமதி வரிகளைக் கோயிலுக்கு அளித்தனர் எனத் தெரிகிறது.

சிறப்பாகச் சோழர்காலத்தில் இதே போன்ற முறையில், குறிப்பிட்ட ஒரு கோயிலுக்கு அக்கோயிலுள்ள ஊரிலிருந்து வருகின்ற வரிகளை அரசர்கள் தானமாக அளித்த செய்திகளைக் கல்வெட்டுக்களில் நாம் காண்கிறோம். அதே வழக்கம்தான் கி.பி. 18 ஆம் நூற்றாண்டிலும் பின்பற்றப்பட்டுள்ளது. இஸ்லாமியர் என்றாலும் தாங்கள் செலுத்தும் வரிகளை மட்டும் செலுத்துவதோடு நின்றுவிடாது, நிலக்கிழார்களாக இருந்ததால், அப்பகுதியிலுள்ள இந்துக் கோயில்களுக்கு ஏராளமான நிலங்களையும் அளித்துப் பொதுப் பணித்துறைக்கு உதவினர் என்ற சுவையான செய்தியும் தெரிய வருகிறது.

இந்தப் பட்டயம் எழுதியவர் மாடன் செட்டியார் என்பவர். சாட்சி சந்திரகுமாருபிள்ளை. பின்னர் செப்புப் பட்டயத்தைச் செய்து எழுதிவைத்தவர் தென்காசி சேகரமயலும் சுடலைமுத்துப் பிள்ளை. இறுதியில் 'திரிகூடாசலபதி சகாயம்' (குற்றாலம்) என்று செப்பேடு முடிகிறது.

செப்பேட்டில் இரு மதத்தவர்கள் பெயர்களும் விரவி வருவதைக் காண்கிறோம். இது அவர்களிடையே நிலவியிருந்த சமய ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும். மேலும் பல்வேறு

இடங்களைச் சார்ந்த முஹமதியர்களும் இச்செப்பேட்டில் குறிப்பிடப் பட்டுள்ளதால், அவர்களிடையே நிலவியிருந்த இன ஒற்றுமைக்கும் இது ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இதேபோன்ற மற்றுமொரு செப்பேடு குற்றாலத்திலுள்ள திருக்குற்றாலநாதர் கோயிலிலும் உள்ளது.

பள்ளி வாசல்களுக்கு இந்துக்களின் கொடைகள்

இஸ்லாமியர்களைப் போன்று இந்துக்களும் முஸ்லிம் பள்ளி வாசல்களுக்குப் பல்வேறு கொடைகள் வழங்கியுள்ளனர். சிறப்பாக நாயக்கர்களின் கொடைகள் குறிப்பிடத்தக்கவை.

பெரும் புகழ் பெற்று விளங்கிய திருமலைநாயக்கரின் பேரனாகிய சொக்கநாதரின் மனைவியாகிய மங்கம்மாள், தன் கணவனின் சார்பாக கி. பி. 1689 முதல் கி. பி. 1706 வரையிலும் மதுரையை மாண்புற ஆட்சி புரிந்தாள்.

மங்கம்மாள் தனது ஆட்சியின் போது செய்த சமயத் தொண்டு களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது அவ்வம்மையார் முஸ்லிம்களுடைய பள்ளிவாசல்களுக்கும், தர்க்காவுக்கும் அளித்த நிலக்கொடை. கி. பி. 1692 ஆம் ஆண்டு செப்புச் சாசனம் ஒன்று, பள்ளிவாசலின் பாதுகாப்புக்காக விஜயரங்க சொக்கநாதர் பெயரால் அவர் நிலங்கொடுத்ததைக் கூறுகிறது.[1] கி. பி. 1701 ஆம் ஆண்டுத் தெலுங்குச் சாசனம் ஒன்று முஸ்லிம் தர்க்காவுக் காகத் திருச்சிக்கருகிலிருக்கும் சில கிராமங்களை மங்கம்மாள் விட்டுக் கொடுத்ததைக் குறிக்கிறது.[2] மேலும் மங்கம்மாளின் சமயக் கொள்கை மிகவும் முற்போக்கு வாய்ந்ததாயிருந்தது. சிலர் அரிசிச் சோற்றை உண்கின்றனர். ''சிலர் இறைச்சியை உண்கின் றனர். அது அவரவர் விருப்பம். அது போலவே ஒவ்வொருவரும் தம் விருப்பம் போல் சமயக் கொள்கைகளைப் பின் பற்றுவதே முறையாகும்'' என்று மங்கம்மாள் கூறியதாக மனுச்சி (Manucci III 1907) என்பவர் குறிப்பிட்டுள்ளார்.[3]

விஜயரங்க சொக்கநாதரின் மறைவுக்குப் பின் அவரது மனைவி மீனாட்சி அரசி ஆட்சிக்கு வந்தாள். கி. பி. 1732 முதல் கி. பி. 1736 வரை இவளது ஆட்சி நடைபெற்றது. மீனாட்சி அரசி தன் ஆட்சியின் போது திருச்சிராப்பள்ளிக் கருகிலுள்ள சில நிலங்களை ஒரு பள்ளி வாசலுக்கு நன்கொடை அளித்ததாக ஒரு குறிப்புக் காணப்படுகிறது.[4]

தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்கரால் போர்க்களத்தில் வைத்து விஜயநகர மன்னனாக முடி சூட்டப்பட்டவன் ராமராயன்.

இந்த ராமராயனது ஆட்சியின்போதும் பிற சமயத்தினருக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. மன்னன் மட்டுமன்றிப் பிறரும் அத்தகைய பணிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ராணி மீனாட்சி (நாயக்கர்) என்பவரால், ஒரு முஸ்லிம் மதகுருவுக்கு நிலம் கொடுக்கப்பட்டதாகத் திருச்சிராப்பள்ளியிலுள்ள குறிப்பு ஒன்று கூறுகிறது.[5] அந்நிலங்கள் ஒரு பள்ளி வாசலினைப் புதுப்பிப்பதற்காகக் கொடுக்கப்பட்டதாகவும் அக்குறிப்புக் கூறுகிறது. முஸ்லிம் போர் வீரர்கள் தம்மை வணங்கும் பொழுது குர்ஆனைத் தமக்கு முன் வைத்திருக்கும் பழக்கத்தை இரண்டாம் தேவராயரும் இராமராயரும் பின்பற்றினர். விசயநகரத்தில் முகம்மதியர் தமது முஸ்லிம் மதச் சடங்கு முறைப்படி பசுக்களைக் கொல்வதை இராம ராயர் தடுக்கவில்லை. அவருடைய உடன் பிறந்தாரான திருமலை அச்செயலை எதிர்த்த போதிலும், இராமராயர் முகமதியரின் மதச் சடங்குகளில் தலையிடக் கூடாது என்று கூறிவிட்டார்.[6]

இந்தக் குறிப்புக்களையெல்லாம் கொண்டு நோக்கும்போது நாயக்கர்களின் மதச்சார்பற்ற ஆட்சி நன்கு புலப்படுகிறது.

பொதுவாகக் கூறுமிடத்து மேற்கூறிய செய்திகள் அனைத்தும் இருமதத்தவரின் ஒற்றுமையையும், முற்போக்கு எண்ணங்களையும், சமயச் சார்பற்ற மனநிலையையும் நன்கு புலப்படுத்துகின்றன.

குறிப்புகள்

1 மதுரை நாயக்கர் வரலாறு, ப. 342

2 10 of 1911

3 சத்தியநாதய்யர், இந்திய வரலாறு, பகுதி 2, ப. 516.

4. Sewell, R., Lists of Antiquities part i, p. 268.

5 Sewell's Collection of Copper Plates in his List of Antiquities No. 43.

6 சத்தியநாதய்யர், இந்திய வரலாறு, பகுதி 2, ப. 368.

பெரியபட்டினம்

முகவை எஸ். எம். கமால்

கடந்த ஐந்து நூற்றுண்டுகளுக்கு முன் வரை தமிழர்கள், கடல் வழி வாணிபத்தில் உயர்ந்து நின்ற பாங்கினை வரலாறும் இலக்கியங்களும எடுத்து இயம்புகின்றன. தமிழகத்தின் நீண்ட நெடுங் கரையை மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே, நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து நம்மருள் வேண்டிநின்ற பட்டினங்கள் காலத்தின் கோர விளையாட்டில் சிற்றில் போல சிதைந்த செய்திகள் பல உண்டு. பிற நாட்டுப் பயணிகளின் குறிப்புகளில் பெருமையுடன் பேசப்பட்ட அந்தப் பட்டினங்கள் இன்று சுட்டிக் காட்ட இயலாத நிலையில், சுவடு இல்லாமல் மறைந்து விட்டன. கடற் கோளுக்கும், அடற்புயலுக்கும் இலக்காகிக் காலத்தின் கரங்களாற் கவரப்பட்ட பிறகும், மறைந்த அந்த மாநகரங்களை, மனத்திரையில் நினைவுபடுத்த, பெயரளவில் எஞ்சி நிற்கும் சில பட்டினங்களும் இன்றும் உள்ளன.[1] குறிப்பாக காவேரிப்பூம்பட்டினம், தொண்டிப் பட்டினம், காயல் பட்டினம் ஆகியவைகளுடன் இணைத்து எண்ணத் தக்கதுதான் பாண்டிய நாட்டு பராக்கிரமப் பட்டினமுமாகும்.

இந்த பராக்கிரமப் பட்டினம், இராமநாதபுரம் நகருக்கு தென் கிழக்கே பத்து மைல் தொலைவில் மன்னுர் வளைகுடாவில் அமைந்துள்ளது. பராக்கிரமப்பட்டினம் காலப்போக்கில் பௌத்திர மாணிக்கப்பட்டினமாகி, இன்று பெரிய பட்டினம் என வழக்கில் இருந்து வருகிறது. பாண்டிய மன்னர்களில் ஒருவரான பராக் கிரமன் என்பாரது நினைவாக எழுந்த ஊரே இந்தப் பட்டினம். பாண்டியர் வரலாற்றிலே பல ''பராக்கிரம பாண்டியர்கள்'' குறிப் பிடப்படுகின்றனர். ''பாண்டியன் சடாவர்மன் என்ற பராக்கிரம பாண்டிய தேவர்''[2] ''திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண் டிய தேவன்''[3] ''பராக்கிரம பாண்டியன் கல்லணை......''[4] ''பராக்கிரம பாண்டியன் கட்டளை......''[5] ''தென்னன் பராக்கிரம பாண்டிய தேவனது ஒன்பதாவது ஆண்டு''[6] ''பரராசர் நாளும் பணியும் பராக்கிரம பாண்டியனே''[7] என்ற தொடர்களுடன் அடைவு படுத்திப் பார்க்கும் இந்த ஊர் எந்த பராக்கிரம பாண்டியனது பெயரில் எப்பொழுது எழுந்தது என்பதை அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை.

வரலாற்றில்

வரலாற்றின் குறிப்புகளை வகைப்படுத்தி நுணுகி நோக்கும் பொழுது, முதன் முறையாகத் தமிழகத்தில் பாண்டியன் உரிமைப் போரில் சடையவர்மன் குலசேகரப் பாண்டியனுக்கு[8] எதிராக பராக்கிரம பாண்டியன் பக்கலில் போரிட ஈழப்படைகள் இலங்கைத் தண்டநாயகன் தலைமையில் கி. பி. 1170ல் நுழைந்தன. கடல் வழியாக இராமேசுவரத் தீவைக் கைப்பற்றி எதிர்க்கரையில் கரை இறங்கிய பொழுது, இந்தப் பட்டினம் மூன்று சுற்றுக்கோட்டை மதில்களையும் பன்னிரெண்டு வாயில்களையும் பெற்ற பெருநகராக விளங்கியதாகவும் அதைக் கைப்பற்றிப் பலப்படுத்தியதாகவும், இலங்கை நாட்டு வரலாறு விவரிக்கிறது.[9] அடுத்து சீனத்திலிருந்து ஈழம் வழியாக கி. பி. 1293ல் இந்தியா போந்த உலகப் பயணி மார்க்கோபோலோவும், இபுன் பதூதாவும் இந்தக் கடற்கரையில் தான் கரை இறங்கினர் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன.[10]

ஆனால் தமிழகத்தின் வரலாற்றில், இந்தப்பெருநகரம் அரேபிய நாட்டுப் பயணியான திமிஷ்கி, பாரசீக நாட்டு வஸ்ஸப், தூனிஷிய நாட்டு இபுன்பதூதா போன்ற உலகப் பயணிகளாலும், இந்திய வரலாற்று ஆசிரியர்களான அமீர்குஸ்ரு, பரிஷ்கா ஆகியவர்களாலும் ''பத்தன்,'' ''பத்னி'' எனவும் அரபி வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.[11] பட்டினம் என்ற தமிழ்ச் சொல்லின் மாற்று வடிவம் பத்தன் ஆகும். அதே சொல் விகாரமடைந்து விரிந்து தமிழில் பெரியபட்டினமாகியுள்ளது. இங்ஙனம், பராக்கிரம பட்டினமாகவும், பௌத்திர மாணிக்க பட்டினமாகவும், பத்தனாகவும் குறிக்கப் பட்டுள்ள பெருநகரம், இன்றைய சிற்றூரான பெரியபட்டினம் தானா என்ற வியப்பூட்டும் வினாவிற்கு விளக்கம் பெறுவதுதான் இந்த ஆய்வு.

ஆதாரங்கள்

''தென்னகமும் முஸ்லீம் ஆட்சியாளர்களும்'' என்ற ஆங்கில நூலில், இலங்கைத் தண்டநாயகன் ஜகத்விஜயன் தலைமையில் ஈழத்துப் பெரும்படையொன்று மாந்தோட்டம் என்ற ஊரின் கண் அணி சேர்க்கப்பட்டு, கி. பி. 1170ல் இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே இரண்டு கல் தொலைவில் கரை இறங்கியதாகவும், அங்கிருந்து பாம்பன், குந்துகால் ஆகிய ஊர்களைக் கைப்பற்றி எதிர்க்கரையில் உள்ள பராக்கிரமப்பட்டினக்கோட்டையைப் பலப்படுத்தியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[12] மீண்டும் அந்தக் கோட்டையைக் கைப் பற்ற முயன்ற பாண்டியன் குலசேகரனது தளபதி அழகன் பெருமாள் போரில் கொல்லப்பட்டதாகவும், தொடர்ந்து நில நீர் மார்க்கமாக

பாண்டியன் குலசேகரனது தலைமையில் வந்த பெரும் படை படு தோல்வியுற, பாண்டியன் புறமுதுகிட்டு ஓடியதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தப் போர் பராக்கிரம பட்டினத்திற்கு அண்மை யில் வேதாளை என்ற இடத்தில் நடைபெற்றதாகவும் ஈழப்படைகள் தொடர்ந்து முன்னேறி, தேவிபட்டினம், சிறுவயல், தொண்டி ஆகிய ஊர்களையும் கைப்பற்றியதாகவும் இலங்கை வரலாற்றை மேற்கோளாகச் சுட்டி வரையப்பட்டுள்ளது.

இந்த வட்டாரத்தில் உள்ள ஈழக்காடு, இலங்காமணி, இலங் கையர் மேடு, ஈழம்படல், ஈழவனூர், ஈழவன் கோட்டை ஆகிய சிற் றூர்கள் அந்த ஈழப்படையெடுப்பை இன்னும் நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன. பெரியபட்டினத்தின் தென்மேற்குப் பகுதியில் இன்னும் கோட்டைச் சுவரின் அழிமானம் தென்படுகிறது. வேறு கோட்டைகள் இந்தப் பகுதியில் இருந்ததாக வரலாறு இல்லையாத லின் ''மூன்று சுற்று மதிலுடன் அமைந்த நகரம்'' என இலங்கை மகாவம்சம் குறிப்பிடுவது இந்தப் பட்டினத்தையேயாகும்.

பன்னிரெண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வலிவும் பொலிவுமிழந்த பாண்டிய நாடு ஐந்து பகுதிகளாகப் பாண்டிய இள வல்களால் ஆட்சி செலுத்தப்பட்டது.[13] அவர்கள் பேரரசர்களைப் போலத் தங்கள் பெயரால் கல்வெட்டுகளும், மெய்க்கீர்த்திகளும் வரைந்துள்ளனர்.[14] ''விட்ட தண்டெழ மீனவர் ஐவருங் கெட்ட கேட்டினை கேட்டிலை போலுநீ'' என்று பரணி பாடுவதும் இவர்களைத் தான்.[15] இன்றைய திருநெல்வேலிச் சீமையில் ஒருவரும், மதுரை, தஞ்சைப் பகுதியில் இருவரும், கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் ஒருவருமாக இந்தப் பஞ்ச பாண்டியர்கள் இருந்திருக்க வேண்டும். இ. பி. 1188ல் மதினத்திலிருந்து (அரேபியா) காயல்பட்டினம் வந்து சேர்ந்த சுல்தான் சையது இபுருகிம் அவர்களது வரலாறும் மார்க்கோ போலோ, வஸ்ஸாப் பயணக் குறிப்புகளும் பாண்டிய நாட்டில் ஒருவருக்கு மேற்பட்ட பாண்டியர்களது ஆட்சியை உறுதிப் படுத்துகின்றன. சமயப் பணிக்காகத் தமிழகம் வந்த சுல்தான் சையது இபுருகிம் காயலில் இருந்த பாண்டியன் குலசேகரனுடன் நட்புரிமை பாராட்டியதையும் அவனது கோருதலின்படி மதுரை யில் அப்பொழுது அரியணையிலிருந்த திருப்பாண்டியனையும், பவுத் திர மாணிக்கப் பட்டினத்தை ஆண்ட விக்கிரம பாண்டியனைத் தோல்வியுறச் செய்ததையும் வரலாறு கூறுகிறது. சுல்தானின் ஆட்சி கி. பி. 1199 வரை பவுத்திர மாணிக்கப் பட்டினத்தில் நீடித்ததாக வும் தெரிகிறது.[16]

சுல்தான் சையது இபுருகிம் வாழ்க்கையை இலக்கியமாகத் தமிழ்க் காப்பியத்தில் வடித்த மீகல் வண்ணக் களஞ்சியப் புலவர்

பௌத்திர மாணிக்கப்பட்டினம் மதுரை மூதூரையும் விஞ்சிய வளமுடையதாக விளங்கியதாக பாடியுள்ளார்.[17] அதனை கோநகராகக் கொண்டிருந்த் விக்கிரமபாண்டியன் பெயரில் விக்கிரமபாண்டியபுரம் என்ற தனிக்கிராமம் உள்ளது (முதுகுளத்தூர் வட்டம்). விக்கிரமபாண்டியன் பெருந்தெரு என்ற தொடர் ஒன்று அருப்புக்கோட்டைக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.[18] (விக்கிரமபாண்டியனை அடுத்து அரியணையேறிய சுந்தரபாண்டியனது கி பி. 1216வது வருடத்திய கல்வெட்டு) இதைப்போலவே பௌத்திரமாணிக்கப்பட்டினம் பற்றிய தொடர்கள் உள்ள ஒரு கல்வெட்டும் உள்ளது. திருநெல்வேலி மாவட்ட மாறமங்கலம் சந்திரசேகர ஈஸ்வரசுவாமி கோவிலில் இருந்து படியெடுக்கப்பட்டுள்ளது.[19] பாண்டியன் முடித்தலைக் கொண்ட மூன்றும் குலோத்துங்க சோழ தேவரது இருபத்து எட்டாவது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது. அங்கு சென்று இருந்த பவித்திர மாணிக்கப்பட்டின வியாபாரிகளது கொடை சம்பந்தப்பட்டது இது.

தஞ்சை மாவட்ட திட்டைகுடி சுகாஷன பெருமாள் கோவிலுக்குக் கீரனூர் கிராமத்தை திருவிடையாட்டக் காணியாக காமன் சொக்கன் என்ற பவுத்திர மாணிக்க வேளாளன் என்பவன், குலோத்துங்க சோழ தேவரது முப்பதாவது ஆண்டு ஆட்சிக் காலத்தில் நீர்வார்த்து கொடுத்து அதனைப் பவித்திரமாணிக்க நல்லூர் எனப் பேரிட்டு[20] வழங்கிய செய்தியைப் படிக்கும் பொழுது ''பவுத்திரமாணிக்க நல்லூர்'' என்ற பெயர்கள் அதே காலத்தில் வழக்கில் இருந்தமையும் தெரிய வருகிறது. பவித்திரமாணிக்கம் என்பது சிலப்பதிகாரம் சொல்லுகின்ற[21]

காக பேதமும் களங்கமும் விந்துவும்
ஏகையும் நீங்கி இயல்பு குன்றாத......

பன்னிரு குணமும் பெற்று பதினாறு குற்றமுந் நீங்கிய மாணிக்கம் என்பதும்,

தூயநலத் துகில் விரித்துத் தெய்வமாணிக்கம்
நடுவே வைத்து......

என்று பரஞ்சோதி முனிவர் குறிப்பிட்டுள்ள பவித்திரமான தெய்விகமான மாணிக்கம் என்பதே பொருள்.[22] இத்தகைய மாணிக்கம் நிறைந்த வளமைமிக்க பட்டினம் என்பதுதான் இந்த ஊரின் பெயருக்கான காரணமாக இருக்கலாம். மேலும் இந்த ஊரின் தென்பகுதியில் மேற்கே உள்ள தரவை இன்றும் பவளக்கால்தாவை என்றே வழங்கப்பட்டு வருகிறது. முன்பு இந்தப் பகுதியில் பவளம் மிகுதி

யாக விளைந்ததாக வரலாறு கூறுகிறது. பவளமும் ஒருவகையான மாணிக்கம் என ''உத்பலபரிமளம்'' என்ற நூலிலும் ''அக்கினி புராணத்திலும்'' வரையறுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இதே கடற்கரையில் சில கல் தொலைவில் அமைந்துள்ள கோவில் மாரியூரில் (கோனேரின்மை கொண்டான் திருபுவனச் சக்கரவர்த்தியான சுந்தர பாண்டிய தேவனது பெருங்கொடை பெற்ற பழமையான கோவிலாகும்) எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு ''பவளநிறவல்லி'' என்ற பெயர் சூட்டப்பட்டிருப்பதுவும், இந்தப் பகுதியுடன் பவள விளைவையும் இணைத்துச் சிந்திப்பதற்குப் பொருத்தமுடையதாக உள்ளது.

மேலும், ''பவித்திரம்'' என்ற சொல்லுக்குத் தமிழ் லெக்சிகன் பேரகராதி (பக்கம் 2543) யில் தருப்பை என்ற பொருள் சூட்டப்பட்டு சீவக சிந்தாமணியும், சூடாமணி நிகண்டும் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது. இராமாயணக் காலந்தொட்டு இந்தப் பகுதியில் தருப்பைப் புல் நிறைந்து இருந்ததை ''புல்லாரண்யம்'' ''திருப்புல்லணை'' என்ற பெயரும், இந்தத் திருப்புல்லணைத் தலத்தில் பள்ளி கொண்டுள்ள பெருமானது ''தருப்பாசன அழகியார்'' என்ற திருப்பெயரும் இன்றளவும் நினைவூட்டுவனவாக உள்ளன. அத்துடன் திருப்புல்லணைக்குப் பக்கத்தில் உள்ள ''கோரைக் (தருப்பை) குட்டம்'' என்ற சிற்றூரும் இதற்குச் சான்று வழங்குவதாக அ மந்துள்ளது.

> பொருள் நயந்து நன்னூல் நெறியடுக்கிய புல்லில்
> கருணையங் கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி......[23]
>
> தருப்பை மீதினிலுவந்து திருக்கண் மேவிய தேவை
> நினைவீரே[24]

என்ற இலக்கியத் தொடர்களும்,

> பார் தந்த பாதம் பரல் உறைப்புன்ன
> வெம்பாலையெல்லாம்
> பேர்தந்து புல்லைப் பரப்பிக் கிடந்த பெருந்தகைக்கு
> தேர் தந்தனன்......

என்ற முசவை மகாவித்வான் ரா. ராகவனுரது தனிப்பாடலும் இதே உண்மையினை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன.

மற்றும், வீரமாமுனிவரது சதுர் அகராதியில் மௌத்திகம் என்ற சொல்லுக்கு ''முத்து,'' ''நித்திலம்'' எனப் பொருள் விவரிக்கப்பட்டுள்ளது. திருப்புல்லணையிலிருந்து இராமேசுவரம் வரையான கடற்கரையில் பவளம் மட்டுமின்றி முத்தும் சங்கும் வளங்கொழித்து விளங்கியதை இலக்கியச் சான்றுகளும் எடுத்து இயம்பு

இன்றன. திருப்புல்லணையை மங்களாசாஸனம் செய்து மனம் மகிழ்ந்த திருமங்கை ஆழ்வார்,

'பொருது முந்நீர்க்கரைக்கே மணி உந்து புல்லாணியே'[25]
புணரி ஓதம் பணிலம் மணி உத்து புல்லாணியே,......[26]

என்றும்,

இலங்கு முத்தும், பவளக் கொழுந்தும், எழில் தாமரைப்
புலங்கள் முற்றும்பொழில் சூழ்ந்து அழகாய புல்லாணி''

எனவும் வாய்நிறைய வர்ணித்துள்ளார். அவரையடுத்து வந்த கம்பநாடர் இதே கடற்கரையில் நவரத்தினங்களில் சிறந்த முத்தும் பவளமும் மிக்கு இருந்ததைத் தனது இராம காதையில் கடல்கான்ன படலத்திலும், விபீடணன் அடைக்கலப் படலத்திலும் பல இடங் களில் குறிப்பிட்டுள்ளார்.

தூய மலர்போல நுரைத்தொகையும் முத்தும் சிந்தி
புடைசுருட்டி
பாயல் உதறிப் படுப்பதே ஒத்த திரையின் பரப்புஅம்மா[27]
தரளமும் பவளமும் தரங்கமும் ஈட்டிய திரன்மணிக்
குப்பையும்
கனக திரமும் புரள நெடுந்திரைகளும் புரிந்து
நோக்கினன்[28]

என்ற தொடர்களும், இந்தப் பகுதியின் ஏக சக்கரவர்த்தியாக விளங்கிய ரகுநாத சேதுபதியை ஏற்றிப் போற்றிய அழகிய சிற்றம் பலக் கவிராயர் வாக்கில்,

முந்நீர் சொரிமுத்த மாணிக்க ராசி முகந்தருளி
நன்னீர் சொரி கந்தமாதனத்தான் ரகுநாதன்......

திரை வந்த முத்தும் வரைவந்த பொன்னும்
தெவ்வேந்தர் தந்து
நிரை வந்து போற்றும் ரகுநாதன்......[29]

எனப் பாராட்டியிருப்பதிலிருந்தும், சேதுபதிகளுக்குரிய விருதாவளி யில் ''சொரிமுத்து வன்னியன்'' என்ற தொடர் பயன்படுத்தப் பட்டதிலிருந்தும், இந்தப் பகுதியில் முத்து மிகுந்து இருந்தது புலப் படுகிறது. அத்துடன் முத்து மாணிக்கப்பட்டினமான, மௌத்திக மாணிக்கம் மருவி பௌத்திர மாணிக்கப்பட்டினமாக வழங்கி இருந் திருக்கலாம் எனத் துணியவும் இடமுளது.

இராமநாதபுரத்திற்கு அண்மையில் உள்ள திருப்புல்லாணித் திருக்கோயில் கல்வெட்டு ஒன்று[30] இந்த பவித்திரமாணிக்கப் பட்டினம் எங்கு உள்ளது என்பதைச் சற்று விளக்கமாகச் சுட்டுகிறது. கி.பி. 1251 முதல் 1271 வரை மதுரையை ஆண்ட "கோனேரின்மை கொண்டான் திரிபுவனச் சக்கரவர்த்தி முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியத் தேவன்" பவித்திர மாணிக்கப்பட்டினத்தில் உள்ள சோனக சாமந்தப் பள்ளிக்கு இறையிலியாக மருதூர், ஆம்புத்தூர் என்ற கிராமங்களை வழங்கி உத்திரவிடுவதாகும். அந்தக் கல்வெட்டில் "கீழ்ச்செம்பி நாட்டு பவித்திரமாணிக்கப் பட்டின கீழ்பால்... " என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதிலிருந்தும் திருப்புல்லாணி கோவில் கீழ்ச்செம்பி நாட்டில் இருப்பதாலும் இன்றைய பெரியபட்டினம் அந்தக் கோவிலிலிருந்து கிழக்கே நான்கு மைல் தொலைவில் இருப்பதாலும் பவித்திர மாணிக்கப்பட்டினம் திருப்புல்லாணிக்கு வெகு அண்மையில் அமைந்து இருத்தல் வேண்டும் என்பதும் உறுதியாகிறது.

அடுத்து, மார்க்கோபோலோவின் குறிப்புகளில்[31] தாம் இலங்கைத் தீவிலிருந்து மேற்குத் திசையில் அறுபது மைலுக்கு மேல் கடற்பயணம் செய்து மாபார் (பாண்டிய நாட்டுக்கான)மாநிலத்தை அடைந்ததாகவும் இதனை ஐந்து அரசர்கள் (சகோதரர்கள்) ஆட்சி புரிந்து வந்தனர் என்றும், இந்த மாநிலம் உலகிலேயே மிகவும் சிறந்ததும் பெருமையுடையதுமாகும் எனவும் குறிப்பிடுகிறார். மேலும், "இந்த மாநிலத்தின் கடைசிப் பகுதியை ஐந்து சகோதரர்களில் ஒருவரான சுந்தரபாண்டியதேவர் ஆட்சி புரிந்தார். இந்த அரசரது பகுதியில் மிகவும் நேர்த்தியான பெரிய முத்துக்கள் கிடைக்கின்றன. இலங்கைத் தீவிற்கும், இந்த நாட்டிற்கும் இடையில் வளைகுடா ஒன்று உள்ளது. ஆழமற்ற அந்தக் குடாவில் 10 அல்லது 12 பாதம்ஸ் (கஜங்கள்) மேலே ஆழம் இல்லை. முத்துக் குளிப்பவர்கள், பெரிதும் சிறிதுமான கப்பல்களில் இந்தக் குடாப் பகுதிக்குச் சென்று ஏப்ரல் துவக்கத்திலிருந்து மே மாத முதற்பகுதி வரை தாமதித்து முத்துக் குளிக்கின்றனர்........."

முத்துக் குளிக்கச் செல்லும் படகுகள் முதலில் பத்தலாறு (Battalar) என்ற இடத்தில் ஒரு சேரக் கூடி, அங்கிருந்து 60 மைல் தொலைவு வரை கடலில் முத்துக் குளிக்கின்றன. அன்றைய நாளில் முத்துக் குளித்தலைப் பற்றி மிகவும் விவரமாக மார்க்கோபோலோ குறித்துள்ளார். நமது ஆய்வுக்குரிய பொருளுக்கு வரும் பொழுது மார்க்கோ போலோ கரையிறங்கிய இடம் பாண்டி மண்டலத்தின் (மாபாரில்) கீழ்க்கோடி என்பதும், இலங்கைக்கு மேற்கே அறுபது மைல் தொலைவில் உள்ள பாண்டிய நாட்டுக் கரையென்பதும்

அமைதியான வளைகுடாப் பகுதியென்பதும் புலனாகிறது. மார்க்கோ போலோ, காயலைப் பற்றியும் அதனை ஆட்சி புரிந்த பாண்டிய சகோதரர்களில் மூத்தவரான குலசேகர பாண்டியனையும் தனது குறிப்புகளில் தனியாகக் குறிப்பிடுவதால் அவர் கரையிறங்கியது காயல்பட்டினம் பகுதியல்ல என்பது நிரூபணம். மற்றும் அவர் குறிப்பிட்டுள்ள பத்தலாற் என்ற இடம் இன்றும் பெரியபட்டினம் கிராமத்தின் தென்கிழக்கே கடற்கரையொட்டிய நீண்ட கழிப்பகுதி யாக உள்ளது. அதனை ''கப்பலாற்'' (கப்பலாறு) என மக்கள் வழங்கி வருகின்றனர். அத்துடன் மன்னார் வளைகுடாவில் பாம்பனுக்குத் தெற்கே பெரிய பட்டினத்திற்கு வடகிழக்கு வரை கடல் ஆழமற்று இருப்பதைக் காணலாம். இதற்கெல்லாம் மேலாக மன்னார் வளைகுடாவில் இலங்கைக் கரையிலும், பாண்டிய நாட்டுக் கரையிலும்தான் பன்னூற்றாண்டு காலமாக முத்துக் குளித்தல் நடைப்பெற்றது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

குறிப்பாக, மார்க்கோபோலோ விவரிக்கின்ற முத்துக் குளித்தல் மன்னார் வளைகுடாவில் இலங்கைக் கரையில் அல்லாமல் பாண்டிய நாட்டுக் கரையில் பத்தன் பகுதியில்தான் நடைபெற்றது என்பதற்கு முக்கியமான ஆதாரம் மார்க்கோபோலோவிற்கு மூந்தைய நூற்றாண்டில் வந்த ஆல்பருனி என்பவரது பயணக் குறிப்புகள்தான்.[32] இலங்கைக் கரையில் முத்துக் குளிப்பது இலாப கரமாக இல்லையாதலால் அங்கு முத்துக் குளித்தல் நிறுத்தப்பட்டு, பாண்டிய நாட்டுக்கரையில் முத்துக்கள் எடுக்கப்பட்டதாக அவர் குறித்துள்ளார். மார்கோபோலோவின் காலத்திற்குப் பிந்தைய நாளில் இந்த முத்துக்குளிப்பில் இராமேசுவரம், திருப்புல்லணை திருக்கோயில்களுக்கும் முதலுரிமை இருந்து வந்துள்ள செய்திகள் பட்டயங்களில் உள்ளன. சேதுபதிகளுக்கும் நாயக்க மன்னர் களுக்கும், சேதுபதிகளுக்கும் டச்சுக்காரர்களுக்கும் இடையில் நிறைவேறிய உடன்படிக்கைகள் இந்தப் பகுதியில் தொடர்ந்து முத்துக் குளிக்கப்பட்ட உண்மைகளை உணர்த்துகின்றன.[33]

இராமேசுவரத்தில் இன்றும் முத்துச்சாவடி என்ற பகுதி இருந்து வருவதும், பெரியபட்டினத்தின் ஒரு பகுதியாக முத்துப் பேட்டை என்ற ஊர் இன்றளவும் இருந்து வருவதும், மன்னார் வளைகுடாவில் குளிக்கப்பட்ட முத்துக்களின் விற்பனை நிலையம் அங்கு அமைந்து இருந்ததை நினைவூட்டுகின்றன. கள்ளிக்கோட்டை துறைமுகத்தில் இருந்து மேனாடுகளுக்குக் கப்பலில் அனுப்பப்பட்ட பலவகையான பொருள்களின் பட்டியலில் இராமேசுவரம் நன் முத்துக்கள் இடம் பெற்றிருந்ததை ஆசிரியர் கெர்ர் என்பவர் சுட்டிக் காட்டியுள்ளார்.[34] இந்தக் கடற்கரை ஊர்களில் வாழும் முஸ்லிம்

முதியவர்களை "முத்துவாப்பா" என்று (பாட்டனார் என்ற பொருளில்) செல்லமாக அழைத்து வருவதிலிருந்து இந்தப் பகுதி முஸ்லிம்கள், முத்து வணிகத்தில் ஈடுபட்டிருந்ததையும் அறியலாம். தமிழகத்தில் வேறு எந்த ஊரிலும் இல்லாத அளவில் பெரியபட்டினம் கிராமத்தில் முத்து, சங்கு குளிக்கும் முஸ்லிம் தொழிலாளிகள் தொகுதியாக வாழ்ந்துவருவதும் மார்க் கோபோலோவின் குறிப்புகளை உறுதிப்படுத்துகின்றன.

மார்க்கோபோலோவின் காலத்திலேயே பாண்டிய நாட்டிற்கு வருகை தந்த வஸ்ஸாப[35] என்ற பாரசிக வரலாற்றாசிரியர், "இந்தத் துறைகளில் வந்து இறங்கிய அரபிக் குதிரை வணிகத்தை மேற்பார்வையிட தனியான அமைப்பு ஒன்று சுல்தான் ஜாக்கியுத் தீன் தலைமையில் இயங்கியதாக வரைந்துள்ளார்." கி. பி. 1318ல் தென்னாட்டில் படையெடுத்து வந்த டில்லி சுல்தான் தளபதி குஸ்ருகான் பத்தன் நகரில் இருந்த அரபி தனவந்தர் சுல்தான் ஸிராஜுத்தீனைக் கைது செய்து, அவரது உடமைகளைக் கொள்ளை யிட்டு அவரையும் கொன்றதாகத் தெரிய வருகிறது.[36] மேலும் அந்தப் பெரும் வணிகரது பேரழகியான மகளைத் திருமணம் செய்து வைக்குமாறு பலவந்தப் படுத்தியதாகவும் அதனால் மனமுடைந்த அந்தத் தனவந்தர் விஷமருந்தித் தற்கொலை செய்து கொண்டதாக வும் கவிதை பாடியுள்ளார், உருதுக் கவிஞர் இஷாமி.[37]

இதே பத்தனைப் பற்றி கி. பி. 1344ல், உலகப் பயணி இபுன் பதூதா, மதுரை மன்னன் சுல்தான் அஹ்ஸன் ஷாவின் அதிதியாக மூன்று மாதங்கள் "பத்தனில்" தங்கி இருந்ததாகவும், அங்கிருந்து ஏமன் நாட்டுக்குப் புறப்பட்ட கப்பல் ஒன்றில் கொல்லம் சென்ற தாகவும் பயணக் குறிப்புகளில் வரைந்துள்ளார்.[38] பட்டினம் என்ற தமிழ்ச் சொல்லுக்குரிய இந்த பத்தன் அவருடைய குறிப்புகளில் இருந்து மதுரையிலிருந்து எளிதாகச் சென்று அடையக் கூடிய தொலைவில் இருந்து இருப்பதால், இந்தத் துறைமுகம் சோழநாட்டுக் கடற்கரையில் உள்ளது அல்ல என்பதை உறுதிப்படுத்துகிறது. அப் படியானால் அப்பொழுது பிரபலமாகி இருந்த தேவிபட்டினமாகவோ (மாவிபத்தன்) அல்லது ராமேஸ்வர பட்டினமாகவோ இந்த பத்தன் இருக்கலாமோ என்ற ஐயத்திற்கு இல்லையென்ற விடைதான் உள் ளது. இப்னு பதூதா வர்ணனை செய்யும் அளவிற்கு அந்தத் துறைமுகங்கள் பதினான்காம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கி யதற்கான செய்திகள் எதுவும் இல்லை. இந்தக் காரணத்தினால் தான் இன்றைய கிழக்கரையும் அன்றைய பத்தன் இல்லையென உறுதியாகச் சொல்ல முடிகிறது.[39] மேலும் மார்க்கோபோலோவின் பயணக் குறிப்புகளை பதிப்பித்துள்ள ஆசிரியர் யூல், பத்தன் இராம நாதபுரத்திற்கு மிக அண்மையில் இருந்து இருக்க வேண்டுமென்ற

முடிவிற்கு வந்துள்ளார். ஆசிரியர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், வஸ்ஸப், இஷன்பதூதா ஆகியோர்களது குறிப்புகளைத் தொடர்பு படுத்திப் படித்தால், பத்தன் மதுரை அரசின் துறைமுகம் என்பதும் மதுரைச் சீமைக்குள் நுழைபவர்களோ அல்லது அங்கிருந்து வெளி யேறுபவர்களோ, இந்தத் துறைமுகம் வழியாகத்தான் செல்ல வேண்டும் என்பது புலனுவதாகவும், மார்க்கோபோலோவும் இங்கு தான் கரையிறங்கி இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை என்றும் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.[40] மேலும் அவர் பத்தன், இன்றைய வேதாளை, மரக்காயர் பட்டினம், பெரியபட்டினம் ஆகிய ஊர்களில் ஒன்ருக இருக்க வேண்டும் என 1928ல் ஊகித்துள்ளார். அவரது ஊகம் மார்க்கோபோலோ, இபுனு பதூதா ஆகியோர்களின் பயணக் குறிப்புகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டது. அவை களுடன் பிற உண்மைகளையும் அகழ்வாராய்வுத் தடயங்களையும் ஒருங்கிணைத்துச் சிந்திக்கும் பொழுதுதான் பெரிய பட்டினத்தின் தொன்மையும் வரலாற்றுத் தொடர்பும் உறுதிப்படுகிறது.

இன்றைய பெரியபட்டினம் கிராமம் மன்னர் வளைகுடாவில் கடற்கரையிலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. கடற்கரையை யும் கிராமத்தையும், தென் பகுதியில் கப்பலாறு இணைக் கிறது. மழைக் காலங்களில் மட்டும் கடலுடன் இணைந்து காட்சி யளிக்கிறது. பத்தனின் பெருமைக்கு நிலைக்களனுக இருந்த இந்தப் பகுதியைக் கற்பனையில்தான் சித்தரித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. பட்டினப் பாலையைப் படித்துவிட்டுப் பூம்புகாரை நினைவில் கொள்வதுபோல, உலகப் பயணி இபின் பதூதாவின் குறிப்புகளைப் படித்துவிட்டுக் கப்பலாறைப் பற்றிய கற்பனையில் ஈடு படலாம்.

''கடற்கரையில் அமைந்துள்ள அழகிய பெரிய நகரம். புகழத் தக்க துறைமுகம். அங்கே முழுவதும் மரத்திலான அரங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. உறுதியான தூண்களினுல் தாங்கி நின்ற இந்த அரங்கத்திற்குச் செல்வதற்கு மூடு வழி ஒன்று இருந்தது. அதுவும் மரத்தினுலானது. எதிரி நுழைந்தால், துறைமுகத்தில் உள்ள கப்பல்கள் அனைத்தும் இந்த அரங்கத்துடன் பிணைக்கப்பட்டு விடும். வில்லேந்திய வீரர்கள் இந்த அரங்கத்தின் மேல் நின்று தாக்குதலுக்குத் தயாராகி விடுவர். எதிரியினுல், இந்த வீரர்களைத் தாக்கி எவ்விதக் காயமும் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பே இல்லை. ஏமன்நாட்டுக்குச் செல்லக்கூடிய எட்டுக் கப்பல்களும் நின்று கொண் டிருந்தன.''

அடுத்து இந்த ஊரில் உள்ள கல்லாலான பள்ளி ஒன்று உள்ளது. இதனைப் பற்றி இபன்தூதா குறிப்பிடுகிருர், ''இந்த ஊரில்

அழகிய தொழுகைப் பள்ளி ஒன்று உள்ளது. முழுவதும் கல்லா லானது. இங்கே பூஜ்யர், ஷேக் முகம்மது மஜ்தூபி என்ற புனிதரைச் சந்தித்தேன். அவருடன் முப்பது இறையடியார்களும் இருந்தனர். அவர்களில் மோன நிலையில் இருந்த ஒருவர் தன்னுடன் சிங்கம் ஒன்றை வைத்திருந்தார். மற்றொருவர் புள்ளிமான் ஒன்றும் வைத்து இருந்தார். இவை இரண்டும் ஒரே இடத்தில் இருந்தன. எவ்வித முரண்பாடும் இல்லாமல்.''[41] தற்பொழுது முகப்பு மட்டும் மாற்றம் பெற்று அப்படியே இருக்கிறது, இந்தப் பள்ளிவாசல்.

இந்தப் பள்ளியின் முகப்பில் இரண்டு கபுருஸ்தானிகள் (புதைகுழிகள்) உள்ளன. இவைகளில் தலைப்புக் கற்களில் (மீஸான்) ஒன்றில் குடையும் பிறிதில் நான்கு இதழ்கள் கொண்ட மலரின் வடிவும் பொறிக்கப்பட்டு அரபி எழுத்துக்களுடன் காணப்படுகின் றன.கி.பி. 1921ல் இவைகளை ஆராய்ந்த அரபி ஆராய்ச்சியாளர் ஒரு வர், திருக்குர் ஆனின் திருவசனங்களுடன் (55:26) ஒரு பெண்ணின் தியாகத்தையும் குறிப்பிடுவதாகவும் வரைந்துள்ளார்.[12]

அடுத்து இந்தப் பள்ளியிலிருந்து கடற்கரை செல்லும் வழியில் புஞ்சை ஒன்றில் இரண்டு நீண்ட கற்றூண்கள் பூமியில் புதையுண்டு இருக்கின்றன. இந்த இடத்தை ''கோட்டைவாசல்'' என இந்த ஊர் மக்கள் வழங்குகின்றனர். அவைகளுக்கு அண்மையில் மற்றும் மூன்று கற்கள் ஆய்தப் புள்ளி போல நடப்பட்டு உள்ளன. மார்க் கோபோலோ, கரை இறங்கிய பட்டினத்தில் ஒரு ஸ்தூபி நாட்டப்பட்டு இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[43] மற்றும் கி. பி. 1340ல் ஹொய்சாள மன்னனுன வீரபல்லாள தேவர், மதுரை சுல்தான்களை வெற்றி கொண்ட நினைவாக ''சேது மூலத்தில்'' வெற்றித்தூண் ஒன்றை எழுப்பியதாக வரலாற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது. (இங்கிருந்து சேது அணை இரண்டு கல் தொலைவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது) இந்த இரண்டு ஜயஸ்தம் பங்களின் சிதைவாக இந்தக் கல்தூண்கள் இருக்கலாம் என்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. முழுமையான அகழ்வு ஒன்றினுல்தான் இதனை நிருபிக்க முடியும்.

மேலும், இந்தக் கிராமத்தின் தெற்கு தென்மேற்குப் பகுதிகள் மேடாக உள்ளன. கிராமத்திற்கும், கிராமத்தை யொட்டியும் அறுபதுக்கு மேற்பட்ட குளங்கள் உள்ளன. வேறு எந்தக் கிராமத் திலும் இந்த அளவில் குளங்கள் இருப்பதில்லை. காலப் போக்கில் மண் மேடிட்டு நிலை குலைந்த பேரூரின் தாழ்வான பகுதிகள் இவ்வனம் குளங்களாக அமைந்து விட்டன போலும். பொதுவாக

இந்த ஊரில் பெரும்பாலான இடங்களில், தோப்பு, கிணறு அமைப்பதற்கு நிலத்தைத் தோண்டும் பொழுது, நல்ல கற்களினு லான கட்டுமானம் தென்படுகிறது. அவைகளை உடைத்துக் கற்களை வீடுகள் கட்டுவதற்கு இன்றளவும் இந்த ஊர் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் அவ்வப்பொழுது பழங்கால நாணயங்களும் கிடைக்கின்றன.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் கிராமத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்ட பல வகையான நாணயங்களைப் பற்றிய விவரங்கள் ஈண்டு கொடுக்கப்பட்டுள்ளன. அந்த நாணயங்களை வகைப்படுத்தி ஆய்வு செய்ததில் மிகவும் பழமையான சங்ககாலச் செப்பு நாணயம் ஒன்றும், எந்த ஆட்சியாளர்களால் வழங்கப்பட்டது என இனம் கண்டுகொள்ள இயலாத மூன்று சிறிய தங்கக் காசுகளும் கிடைத்துள்ளன. சங்க காலச் செப்புக் காசு நீண்ட சதுர வடிவில் ஒரு புறம் மட்டும் யானை இலச்சினையுட னும் திரிசூலத்துடனும் சந்திரனுடனும் காணப்படுகிறது.[15] தங்கக் காசுகளில் ஒரு புறம் மூன்று வரிசையில் பதினேரு புள்ளிகளைத் தாங்கிய இரண்டு வளைந்த கோடுகளும் மறுபுறத்தில் ஒன்பது புள்ளிகள் தொகுதியாகவும், அதற்கு மேல் ஆரம் போன்ற கோடும் அதற்குள்ளாக அழுத்தமான தனிப்புள்ளியொன்றும் அதனையடுத்த வளை கோடும் புள்ளியொன்றுமாகக் காட்சியளிக்கிறது.

பல்லவர் காசு

இங்கு கிடைத்துள்ள ஒரே ஒரு காசு பல்லவர் ஆட்சியைக் குறிப்பது. ஒரு புறம் எழுத்தும், சந்திரனும் பொறிக்கப்பட்டது.

சோழர் காலக் காசுகள்

இங்கு கிடைத்துள்ள காசுகள் அனைத்தும் செப்புக்காசுகள். இவை பெரும்பாலும் நின்ற நிலையில் மனிதன் ஒருவன் நிற்பது போன்றும், அருகில் திரிசூலம், தண்டம் ஆகியவை ஒருபுறமும், மறுபுறத்தில் அமர்ந்த நிலையில்உள்ள மனிதனது உருவமும் உடைய தாக இருக்கின்றன. இந்தக் காசுகளை ''காலக் காசு'' என இங் குள்ள மக்கள் சொல்லுகின்றனர். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டைப் பராமரித்த இலங்கைத் தண்டநாயகன் கொற்கையிலிருந்து வெளியிட்ட ''ஈழக்காசுகள்'' தான் அவை. மீண்டும் பாண்டிய நாடு சோழர் பிடியில் வந்த பொழுது இதே காசுகளை சிறு மாற்றங்களுடன் வெளியிட்டதாகத் தெரிய வருகிறது. ''ராஜ'' ''ராஜ'' ''ஸ்ரீ'' என்ற சொற்கள் தேவநாகரி லிபியுடன் காணப்படுகின்றன. அவைகளில் ராஜராஜ

சோழனது மீன்களும் புலியும் ஒரு சேரப் பொறிக்கப்பட்ட செப்புக் காசு ஒன்றும் கிடைத்துள்ளது.

பாண்டியர் காசுகள்

இந்தக் காசுகள் அனைத்தும் பன்னிரெண்டாம் பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்தவை. சோழர்களது காசுகளைவிடச் சிறிய தாகவும் நிறையில் குறைவாகவும் உள்ளன. இற்றில் சுந்தர பாண்டியனது செப்புக்காசுகள் நிறைய உள்ளன. அவனது ''எல்லாந்த தலையானுன'' ''பூதல'' ''கச்சி வழங்கிய பெருமான்'' ''சுப'' என்ற தொடர்களுடன் வெளியிடப்பட்டவை. இவைகளைத் தவிர பிற்காலப் பாண்டியர்களது,''புவனேக வீரன்''''சமரகோலா கலன்'' ஆகியோர்களது காசுகளும் இங்கே கிடைத்துள்ளன. இவை அனைத்திலும் இரண்டு மீன்களும் அமர்ந்த நிலையில் உள்ள மனித உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. சில காசுகளில் மட்டும் சிறு சிறு மாற்றங்கள் உள்ளன.

மதுரை சுல்தானிகள்

டில்லிப் பேரரசிலிருந்து தன்னுரிமை பெற்று 1333 முதல் 1378 வரை மதுரையைக் கோநகராகக் கொண்டு மதுரை இராமநாத புரம் சீமைகளையும் தஞ்சை திருச்சி மாவட்டப் பகுதிகளையும் ஆண்ட மதுரை சுல்தான்கள் அறுவரில் மூவருடைய காசுகள் கிடைத்துள்ளன. முகம்மது அஹ்ஷன் ஷா, சுல்தான் முபாரக்ஷா, பக்ருதீன் அஹமது ஆகியோர் வெளியிட்டவை. இவை தவிர இவர்களது காலத்தில் டில்லியில் ஆட்சி புரிந்த முகம்மது பின் துக்ளக்கின் வெள்ளிக் காசு ஒன்றும், செப்புக்காசுகளும் பதினாறும் நூற்றுண்டைச் சேர்ந்த அக்பர் சக்கரவர்த்தியின் சமசதுர வடிவத்தி லான வெள்ளிக்காசு ஒன்றும் (வேலைப்பாடு மிக்கவை) கிடைத் துள்ளன.

பிற மன்னர் காசுகள்

இந்தக் காசுகளைத் தவிர பிற்கால விஜயநகர மன்னர்கள், தளவாய்களது 16 வது 17 வது நூற்றுண்டைச் சேர்ந்தவையும், வடிவில் மிகவும் சிறியவையுமான செப்புக்காசுகள் பலவும் இங்கு அகழ்ந்து எடுக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளில் கிருஷ்ணன், அனுமன் ஆகிய கடவுள் வடிவங்களும் ஸ்ரீசக்கரம் போன்ற பிற சின்னங்களும் உள்ளன. மற்றும், இந்தப் பகுதியை ஆண்ட சேது மன்னர்களது செப்புக் காசுகளும் கிடைத்துள்ளன. இவைகளில் ஒரு புறம் ''சேதுபதி'' என்ற எழுத்துக்களும், மறுபுறத்தில் கண

பதியின் வடிவும் பொறிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இந்தப் பகுதியில் 16வது நூற்றுண்டின் இறுதியில் வியாபாரச் செல்வாக்குடன் விளங்கிய டச்சுக்காரர்கள் தங்கள் அரச இலச்சினையுடன் கி.பி. 1704, 1750, 1760 வருடங்களில் வெளியிட்ட செப்புக் காசுகளும் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியில் தராசுச் சின்னத்துடன் அரபி, ஆங்கிலச் சொற்களுடனும் வெளியிட்ட செப்புக் காசுகள் சிலவும் அகழ்ந்து எடுக்கப்பட்டு இருக்கின்றன.

மேலும், இந்த சிற்றூரை, கடந்து விட்ட பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் தொடர்பு படுத்தி நினைவு படுத்தும் ராஜபாட்டையும், அதில் அமைந்துள்ள பழமையான வட்டக் கிணறும் உள்ளன. இந்தக் கிணறு ''சோழ வளநாட்டு புலியூர்க் கூற்றத்தைச் சேர்ந்த சிறுத் தொண்டன்'' என்பவரால் அமைக்கப்பட்ட தர்மம் என்பதை அந்தக் கிணற்றின் உட்புறத்தில் உள்ள சிதைந்த கல்வெட்டு சுட்டுகிறது. கல்வெட்டில் கையாளப்பட்டுள்ள எழுத்துக்களின் வடிவத்திலிருந்து இந்தக் கல்வெட்டுக் கிணறு பன்னிரெண்டாவது நூற்றுண்டைச் சேர்ந்தது என்பதை அறுதியிட முடிகிறது. வலுவிழந்த பாண்டிய நாடு பத்து, பதினென்று, பன்னிரெண்டாவது நூற்றுண்டுகளில் சோழர்களது நேரடியான ஆட்சியிலும், பிடிப்பிலும் இருந்துவந்தக் காலை, சோழர் நாட்டு பிரதிநிதியான சிறுத் தொண்டன் என்பவர் இந்தக் கிணற்றையும், இந்தக் கிணற்றையொட்டிய இடத்தில் இருந்து அழிந்து விட்ட அன்ன சத்திரத்தையும், இராமேசுவர தலயாத்திரை செல்லும் யாத்ரீகர்களது பயனுக்காக அமைத்திருந்தார் எனக் கொள்வது பொருத்தமுடையதாக இருக்கிறது. இதனைத் தொடர்ந்து கோவில் ஒன்று அமைந்து இருந்து அழிந்து விட்டதாகவும் அதனை ஈஸ்வரன் கோவில் என இன்றும் மக்களால் வழங்கப்பட்டு வருகிறது. இன்றும் சற்று தொலைவில் உள்ள ஊரின் வடகிழக்கின் பகுதியில் டச்சுக்காரர்களால் அமைக்கப்பட்ட ''சர்வேஸ்வரன் தேவாலயம், ''முத்துப் பேட்டை'' என்ற பகுதியில் உள்ளது. சேது மன்னரது தன்னறியில் வளர்ந்த அந்த ஆலயம் இன்று நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. முந்தைய நாளங்காடியாக விளங்கிய இந்தப் பகுதியில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இங்ஙனம் தொன்மையை தொடர்பு படுத்திச் சொல்லும் நூல்களுக்கு ஆதாரமாக நாணயங்களும், கல்வெட்டு போன்ற தடயங்களும் மன்னர் வளைகுடாவில் உள்ள தொண்டி, தேவிப் பட்டினம், வேலானை, மரைக்காயர் பட்டினம், கீழ்க்கரை ஆகிய பழம்பதிகளில் இதுவரை அகழ்ந்து எடுக்கப்படவில்லை. பிற ஆதாரங்களும் வெளிப் படுத்தப்படவில்லை. ஆதலின், மேலே சுட்டிக் காட்டப்பட்ட

சான்றுகளை பொருத்தமுடைய, சரியான ஆதாரங்களாகக் கொள்ளும் பொழுது, பன்னிரெண்டாம் நூற்றுண்டில் ''பராக்கிரம பட்டினமாகவும்'', ''பவித்திர மாணிக்கப்பட்டின மாகவும்'' பதின்மூன்று, பதினான்காம் நூற்றுண்டுகளில் ''பத்தன்'', ''பத்னி'' எனவும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ள பெரு நகர் இன்றைய பெரியபட்டினம் என்று தீர்க்கமான முடிவிற்கு வருவது எளிதாகியுள்ளது.

குறிப்புகள்

1 1 நாகப்பட்டினம் 2 ஜயங்கொண்ட சோழபட்டினம் 3 வீரசோழன் பட்டினம் 4 அறிவீரராமபட்டினம் 5 சாளுவநாயக்கன் பட்டினம் 6 பாசிப்பட்டினம் 7 சுந்தரபாண்டியன் பட்டினம் 8 கண்கொள்ளான் பட்டினம் 9 தொண்டிப் பட்டினம் 10 தேவிபட்டினம் 11 முடிவீரன் பட்டினம் 12 மரைக்காயர் பட்டினம் 13 இராமேஸ்வர பட்டினம் 14 பெரியபட்டினம் 15 காயல்பட்டினம் 16 சோனுடு கொண்டான் பட்டினம் 17 குலசேகர பட்டினம்

2 பிரான்மலை விஸ்வநாதர் கோயில் கல்வெட்டு

3 திருப்பத்தூர், திருத்தளீஸ்வரநாதர் திருக்கோயில் கல்வெட்டு

4 குருவித்துறை, சித்திரரத வல்லப பெருமாள் கோயில் கல்வெட்டு

5 Ibid

6 Ibid

7 மதுரைத் திருப்பணி மாலை

8 "பூதல மடந்தை" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

9 Mabravamsa, Turmour and Wijesimha

10 Travels of Marco Polo Bie, iii Ch. xiv-xv, Madras Journal of Literature and Science (1888), p. 37.

11 Elliot and Dowson, History of India as told by its Historians.

12 Dr. s. Krishnasamy Ayyangar, South India and Her Muhammadian Invadars, pp. 3-4.

13 சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு

14 சதாசிவ பண்டாரததார், பாண்டியர் வரலாறு ப, 106.

15 ஜயங்கொண்டார், கலிங்கத்துப் பரணி 368

16 Madras University Islamic Series, No. ii vol. v, p. 157; Dr. S. A. Q Hussaini, History of Pandia Kingdom p. 49

17 மிசுல் வண்ணக் காஞ்சியப்புலவர், நீன்நெறி விளக்கம்.

18 417 of 1914

19 157 of 1903

20 27 of 1903

21 இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், ஊர்காண் காதை 180-181

22 பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற்புராணம், மாணிக்கம் விற்றபடலம் 51

23 கம்பராமாயணம், கடல்சீறிய படலம் 2

24 புல்லை அந்தாதி பாடல்

25 திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி

26 Ibid

27 கம்பராமாயணம், கடல்காண் படலம் 3

28 வீடணன் அடைக்கலப் படலம் 26

29 அழகிய சிற்றம்பலக் கவிராயர், ஒருதுறைக் கோவை

30 402 of 1903

31 Marco Polo, Yula and Cordixer

32 Edwar Sachaw, Alburnis India

33 Dr. S. Arunachalam, History of Pearl Fishery of Tamil Coast: Treaties. and Plates of Sethupathis

34 Dr. Appadurai, Economic conditions of South India (in 1000 A.D. 1500 A.D.)

35 History, Eliiot

36 பரிஷ்தாரின் குறிப்புகள், தொகுதி I, ப. 126
N. Venkataramaniya, Early Muslim Expansion in S. India

37 Futuhus Salatin (Madras), pp. 369-70

38 Voyages D' IBN Batoutch, Vol.14

39 டாக்டர். ஹுஸைன் நயினார், வள்ளல் சீதக்காதி

40 Dr. S. Krishnasamy Ayyangar, South India and Her Muhammadian Invadars, p. 192

41 Voyages W' INB Batouch vol. iv (Edited by C. Deframery and Dr., B. R. Sanguinetti)

42 Dr. Horovitz, Aligarh University (1921)

43 D. Cordier, New Light of Sir Marco Pola A.D. 114

44 Dr. Krishnasamy Ayyangar, South India and Her Muhammedian Invandars, p. 184.

45 Parameswar Lal Gupta, The Coins 1969.

தன்னிறைவு பெற்ற ஊர்களின் தோற்றம்

டாக்டர் மே. து. ராசுகுமார்

தமிழ் நாட்டின் முதுகெலும்பாக இன்று கிராமப்புறங்களே இருந்து வருகின்றன. நாட்டின் உற்பத்தியை உருவாக்கித் தருகின்ற பெரும் பணியைக் கிராமப் புறங்களே நிறைவேற்றி வருவதால் கிராமப்புறங்களின் செல்வாக்கும் சிறப்பும் முன்னிடம் பெறு கின்றன.

பண்டைக் காலத்தில், கிராமங்கள் தமது தேவைகளைத் தாமே நிறைவு செய்து கொள்ளும் தன்மை கொண்ட தனிப் பகுதிகளாக விளங்கிய பாங்கினை வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

ஒரு கிராமத்துக்குத் தேவையான உணவு, உடை ஆகிய அனைத்தும் அக்கிராமத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டு, கிராம மக்களின் பயனுக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்த நிலையைக் காண்கிறோம். இதேபோன்று உணவுக்கு அடிப்படையான வேளாண் தொழிலோடு தொடர்புடைய பல சிறு தொழில்கள் யாவும் கிராம எல்லைக்குள்ளேயே அமைந்திருந்தன. தச்சர், கொல்லர், குயவர் போன்ற சிறு தொழிலாளர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்து பணியாற்றினர்.

இயற்கையில் உற்பத்தியாகிக் கிடந்த பொருள்களை உண்டு, உயிர் வாழ்ந்து வந்த மனிதர்கள் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிலைக்கு வளர்ச்சி பெற்றுச் சிறுகச் சிறுக வேளாண் தொழிலைக் கைக்கொண்ட தொடக்க காலத்தில் இத்தகைய கிராமங்களும் கிராமங்களின் தேவைகளை நிறைவேற்றும் சிறு தொழிலாளார்கள் ஒருங்கிணைந்தும் இருக்கவில்லை.

இவர்கள் எந்தக் கட்டத்தில் கிராமங்களின் வாழ்க்கையோடு இயைந்து ஒன்றிணைக்கப்பட்டார்கள் என்பது ஆராய வேண்டிய தொன்றாகும்.

சங்க இலக்கியங்கள் வேளாண் தொழிலைப் பற்றிக் கூறுகின்றன. மருத நிலத்தின் சிறப்பை எடுத்துக் கூறும் பாடல்கள் வேளாண் தொழில் வேரூன்றி வளர்ந்து வலுப்பெற்று வரும் நிலையினை எடுத் துக்காட்டுகின்றன. இனக்குழு மக்கள் வாழ்க்கையின் ஒரு பகுதி

யாக வேளாண் தொழில் இருந்து வந்தது. நீர்ப்பாசனமும் நிலவுடைமை முறையும் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. பரந்த அளவில் வேளாண் உற்பத்தியும், வேளாண் உற்பத்திப் பொருள்களின் பங்கீடும் இருந்ததற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கவில்லை. ஆகவே சங்க இலக்கியத்தில் உழவுக் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் தச்சர்களைப் பற்றியோ, கருமான்களைப் பற்றியோ விரிவான செய்திகள் கூறப்படவில்லை. 'வைகல் எண்தேர் செய்யும் தச்சன்' ஒருவனது பெருமையினை உரைத்த ஔவையார் உழவுத் தொழிலுக்கு அடிப்படையான கருவிகளை உருவாக்கித் தரும் தச்சர்களின் சிறப்பினை எடுத்துக் கூறுதது கவனிக்கத் தக்கதாகும்.[1]

பின்னர் நீர்ப்பாசனமும் நில உற்பத்தியும் விரிவாக்கப்பட்ட போது வேளாண் தொழிலோடு இயைந்த கைவினைஞர்களின் பணியும் பங்கும் மிகுந்தது. கி. பி. 6 ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு இந்த வளர்ச்சிப் போக்கைக் காண இயலும். புதிய ஏரிகளை வெட்டி, குளங்களை அமைத்து வாய்க்கால்களை ஏற்படுத்தி நீர்பாசன வாய்ப்புகளை விரிவாக்கிய விவரங்களைப் பல்லவர் காலக் கல்வெட்டுகள் பதிந்திருக்கின்றன. இக்காலகட்டத்தில் விரிவான அளவில் காடுகள் அழிக்கப்பட்டு, பண்படுத்தப்பட்டு நிலங்களாயின. நீர்ப்பாசன வளம் கண்டு வயல்கள் உற்பத்தியைக் குவித்தன. நில உற்பத்தி விரிவாக்கப்பட்ட சூழ்நிலையில் நில உற்பத்திக்கு இன்றியமையாத வேளாண் கருவிகள் தேவைப்பட்டன. கலப்பையும் கொழுவும் இன்றிப் பரந்த அளவில் விவசாயத்தினை மேற்கொள்ள இயலாது. தொடக்க காலத்தில் சிறு அளவு நிலங்களில் பயிரிடப் பயன்பட்ட சிறு சிறு கருவிகள் இப்பொழுது காலத்துக்கு ஒவ்வாதவையாகிவிட்டன. கலப்பை பரந்த அளவு விவசாயத்துக்கு மிகுதியாகத் தேவைப்பட்டது.

இந்தக் கட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வோரு கிராமத்திலும் புதிய விளை நிலங்கள் தோன்றின. பரவலான நில உற்பத்திக்கு வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே உழவுக்கருவிகளின் தேவையும் இவற்றை உருவாக்கித் தருவோரின் பணியும் மிகுதிப்பட்டன. மேலும் ஆண்டுதோறும் இவர்கள் புதிதாக உழவுக் கருவிகளை உருவாக்கித் தரவேண்டியிருந்தது. ஆகவே தான் ஒவ்வொரு கிராமத்திலும் தச்சர், கொல்லர் போன்ற சிறு தொழிலார்கள் குடியமர்த்தப்பட்டார்கள்.

தொழில் தெரிந்திருந்த உழைப்பாளிகளாக இருந்தமையால் தச்சர்களுக்கும், கொல்லர்களுக்கும் செல்லுகின்ற இடங்களில் எல்லாம் பணி கிடைக்க வாய்ப்பிருந்தது. தொடக்கத்தில்

தேவைக்கேற்ற கைவினைஞர்கள் இல்லாமையால் இவர்கள் ஓரிடம் விட்டு வேறு இடத்துக்கு மிகுந்த ஊதியத்தை எதிர்பார்த்து இடம் பெயர்ந்தார்கள். இப்படி இடம் பெயர்வதைத் தடுப்பதற்காகக் கைவினைஞர்களுக்கு ஊதியமாகக் காசுகளோ. உணவுப் பொருள்களோ தருவதற்கு மாற்றாக மானிய நிலம் தரும் முறையை ஏற்படுத்தினர். கைவினைஞர்கள் செய்கின்ற கருவிகளுக்கு ஊதியமாக இத்தகைய நிலங்களிலிருந்து கிடைக்கின்ற விளைச்சல் இருந்ததால் அவர்களைக் கிராமத்தை விட்டுச் செல்லாமல் நிலைத்து இருக்கச் செய்தனர். நிலத்தின் மீது உரிமை இல்லாவிட்டாலும் பிடிப்பு ஏற்படுத்தவும் இம்முறை வழிவகுத்தது.

கி.பி. 1113 ஆம் ஆண்டு பதியப்பட்ட முதல் குலோத்துங்கனின் 43 ஆம் ஆட்சியாண்டுப் புதுவைக் கல்வெட்டு இங்கு ஆய்வுக்குரியதாகும்.[2] ஊர்ச்சபை செய்த முடிவுகளை எடுத்துக் கூறும் இக்கல்வெட்டு கிராமத்தில் வாழும் பட்டர், ஆசிரியர், கணக்கர். தச்சர், கொல்லர் போன்றோர் அந்த ஊரிலேயே தமது பணிகளைச் செய்ய வேண்டும் என்றும் பிற ஊர்களுக்குச் சென்று தொழில் செய்தல் கூடாது என்றும் வரையறை வகுத்திருப்பதை அறியலாம். அப்படி வெளியூர் சென்று தொழில் செய்வோர் விதிகளை மீறியவர்களாகவும் சபைக்குக் குற்றம் புரிந்தவர்களாகவும் கிராமத்தை அழித்த துரோகிகளாகவும் கொள்ளப்படுவார்கள் என்று கடுமையான தண்டனைக்குரிய தவறாக இது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சட்டத்தின் வழியாகவும், கிராமத்தில் நிலவுடைமைத் தேவைகள் நிறைவு செய்து கொள்ளப்பட்டதையே இக்கல்வெட்டு உறுதி செய்கிறது. விதிகளையும், வரையறைகளையும் ஒரு புறம் வகுத்துக் கொண்டாலும், கைவினைஞர்கள் உற்பத்திக்கு அவசியமான கருவிகளை உருவாக்கிக் கொடுத்ததால் சில உரிமைகளும் வழங்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.

> ''நன்மை திமைகளுக்கு இரட்டைச் சங்கும் பேரிகை உள்ளிட்டவை கொட்டுவித்துக் கொள்ளவும் தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்கு பாதரட்சை கொத்துக் கொள்ளவும் தங்கள் வீடுகளுக்கு சாந்து இட்டுக் கொள்ளவும்''

கன்மாளர்கள் உரிமைகள் பெற்றதை செங்கற்பட்டு மாவட்டம் உக்கல் கல்வெட்டு பதிந்திருக்கிறது.[3] இதே செய்தியினைக் கோவை மாவட்டம் பேரூர்க் கல்வெட்டு உறுதி செய்கிறது.[4]

"வாசல் மதியமும் வைத்துச் சாந்துமிட்டுக் கொள்...... நன்மைக்குத் தண்டெறப்பெறுவர் களாகவும், தீமைக்குப் பொடை கட்டிக் கொல்லப் பெறுவர்களாகவும்... நன்மை தீமைக்கு உவச்சுக் கொட்டப்பெறுவர்களாகவும்"

என்று மதுரை மாவட்டம் கிரனூர் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[5]

கைவினைஞர்களின் உழைப்பைச் சுரண்ட நில உடைமையாளர்கள் சில சமூக உரிமைகளையும் வழங்கத் தயங்க வில்லை என்பதையே இக்கல்வெட்டுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அதே போன்று, புதிதாக ஏற்பட்ட வேளாண் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாத அளவு தொடக்க கட்டத்தில் கைவினைஞர்களுக்குப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்க வேண்டும்.

வடாற்காடு மாவட்டம் புங்கனூரில் பதியப்பட்ட குலோத்துங்கனின் பதினாறும் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.[6] புங்கனூரிலும் சுற்றுப்புற ஊர்களிலும் கொல்லர்கள் இல்லாததால் ஊர் மக்கள் அனைவரும் கூடி அரசு அதிகாரியிடம் முறையிட்டார்கள். இதனை அடுத்து விக்கிரம சோழ சம்புவராயன் என்ற அதிகாரி புங்கனூர்ப் பகுதியில் பணி புரியச் செம்பை என்ற ஊரைச் சார்ந்த தேத்தான் என்ற கொல்லனை அனுப்பினான். வேளாண் பணி தடையின்றி நடைபெற வேற்றூர்களில் இருந்து கைவினைஞர்கள் கொண்டு வரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டார்கள் என்பதனையும் இதனால் தெளியலாம்.

நில உற்பத்தி விரிவாக்கப்பட்ட நிலையில், நிலவுடைமையின் தேவைகளை நிறைவேற்ற, நிலவுடைமை அமைப்புக்கு உட்பட்டுப் பணிபுரிகின்ற வகையில் கைவினைஞர்கள் வைக்கப்பட்டார்கள். நிலவுடைமைக்கு அடிப்படையான உற்பத்திக் கருவிகளை உருவாக்கித் தருகின்ற பணி தடைப்படுவதின் வழியாக உற்பத்தி குறைந்து விடக்கூடாது என்பதற்காக வேண்டுமளவு கட்டுப்பாடுகளுடனும் நிலவுடைமையின் அடிப்படையைத் தகர்க்க இயலாத அளவுக்கான உரிமைகளுடனும் கூடிய வழிமுறைகள் கைவினைஞர்களுக்கு வகுக்கப்பட்டன.

இவ்வாறு ஒவ்வொரு ஊரின் நிலவுடைமைத் தேவைகளும் எளிதில் நிறைவேற வழிசெய்யும் வகையில் தம் தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொள்ளும் தன்னிறைவு பெற்ற ஊர்கள் உருவாக்கப்பட்டன என்று கொள்ளலாம்.

குறிப்புகள்

1 புறநானூறு 87
2 205 of 1919
3 SII iii, 25
4 SII, V, 238
5 SII, V, 283
6 7 of 1940–41